T. I. R. 2419
30 - III - 1891.

Q22: 4196
M91
119903

ஸ்ரீ.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ கூரத்தாழ்வானது ப்ரபாவம்

என்கிற

# ஸ்ரீ கூரேசவிஜயம்.

## மூலமும் உரையும்.

இவை,

ஸ்ரீமுடும்பைநம்பி வம்சஜராகிய,

திருவஹீந்த்ரபுரம்,

வீரராகவாசார்யரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

மை. ராமாநுஜாசார்யரவர்களது,

ராமப்ரஸாதோதய அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

---

காபிரைட்.

[Registered Copyright.]

V,22:4,196
M9
11903



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# கூரத்தாழ்வான் வைபவம்.

ஸ்ரிய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸ்ரீ வைகுண்ட நிகேதனாய், ஸ்ரீமதநந்தமுக நித்யஸூரிபரிஷந்நிஷேவ்யமாணனாய், அகில மங்கள குணஸ்வரூபனான ஸர்வேச்வரன் "క్షయంతమస్యరజసఃపరాకే" என்றும், "త్రిపాదస్యామృతందివి" என்றும், "తదక్షరేపరమేవ్యోమన్" என்றும், "యోఅస్యాధ్యక్షఃపరమేవ్యోమన్" என்றும், "తద్విష్ణోఃపరమంపదంసదాపశ్యంతిసూరయః" என்றும், "ఉభాభ్యాంభూమినీళాభ్యాం సేవితఃపరమేశ్వరః" என்றும், "అప్యర్ణవజలస్థంతత్ స్థానంవిష్ణోర్మహాత్మనః - స్వయైవప్రభయారాజన్ దుష్ప్రేక్ష్యందేవదానవైః" என்றும், "ఆక్రీడావివిహారార్థం పతిస్సర్వాన్మహోదరాః - ఏతేవైనిరయాస్తాత స్థానస్యపరమాత్మనః" என்றும், "కాలంసపచతేయత్ర నకాలస్తత్రవైప్రభుః" என்றும், "కలాముహూర్తాదిమయశ్చకాలోనయద్విభూతేఃపరిణామహేతుః" என்றும், "అండకోశాత్సావరణాత్ అముష్మాత్పరతఃప్రభో - స్థితోహంపరమేవ్యోమన్యస్య ప్రాకృతశరీరవాన్" என்றும், "యత్తత్పురాణమాకాశం సర్వస్మాత్సమనుత్తమం-యత్పదంప్రాప్యతత్వజ్ఞాః ముచ్యంతేసర్వకిల్బిషైః" என்றும், "అండస్యపరతోనిత్యం త్రిపాదేనవిరాజతే - ఇతరేణతుపాదేన ప్రాకృతేనైవరాజతే" என்று மித்யாதியாலே யோக யாஜ்ஞவல்க்ய பஞ்சம வேத புராண ரத்நஸமுத்குசிதப்ராமாண்ய பாஞ்சராத்ராதி வசநங்களிலும் "நலமந்தமில்லதோர் நாடு" என்றும், "சுடரொளியாய்நின்ற தன்னுடைச் சோதி" என்றும், "தெளிவிசும்பு திருநாடு" என்றும், "மாகவைகுந்தம்" என்றும், "தெளிந்தாகிய சேண்விசும்பு" என்றும், இத்யாதி வாக்ய ஸமூஹங்களாலே, "மயர்வறமதிநல மருளப்பெற்ற" ஆழ்வார்களாலே அருளிடப்பட்டுள்ள அந்த வேற்றுமையுடைத்தாய், "గుణాఃప్రధానం పురుషః పరంపదంపరాత్పరం బ్రహ్మచతేవిభూతయః" என்றும், "పరమయోగివాఙ్మన

సాపరిచ్ఛేద్యస్వరూపస్వభావ" என்று தொடங்கி, "నిరతిశయ దైవంశ్యసాక్ష" என்றும்,
"కాలాతిగాత్మపరమమహావిభూతిః" என்றும், "యద్దూరేమనసో యదేవతమసఃపారే
యదత్యద్భుతం" என்றும், இப்படி சர்வஜ்ஞ தேசிகஸ்தோம ப்ரஶஸ்தமாய்,
வேதாந்தங்களாலும், மஹர்ஷிகளாலும், ஆழ்வார்களாலும் ஏககண்டமாக ப்ர
திபாதிக்கப்பட்ட ப்ரபாவாதிசயத்தையுடைய பரமபதத்தில், இலையும் மரமும்
தெரியாதபடி பஹுவிதமான நிறத்தையும், கந்தத்தையுமுடைய அப்ராக்ருத
புஷ்பங்களாலே நெருங்கித் தேன் வெள்ளமிடுகிற கற்பகச் சோலைகளாலும்,
நாநாவிதமான பூக்களாலும், ரத்நங்களாலும் சமைந்த லீலாமண்டபங்களாலும்
அபூர்வ வத்விஸ்மய ஜநகங்களான க்ரீடாசைலங்களாலும், செவிகளுடைய
மயிர்க்குச்செறியும்படி இனிய பேச்சுகளையுடைய ஶுகஶாரிகமயூர கோகிலாதிக
ளாலும் ஆகுலங்களாய், மாணிக்யம் முத்தம் ப்ரவாளம் தொடக்கமானவற்
றாலே சமைந்தபடிகளை யுடைத்தாய், குளிர்ந்து தெளிந்த அம்ருதரஸங்களான
திவ்ய ஜலங்களாலே நிறைந்து, நாநாவித பக்ஷிஸங்கஸமாகீர்ணமாய்த்
திரும்பி, எங்கும் சொரிகிற தேன் வெள்ளத்தையுடைத்தாயிருக்கும் தாமரை
செங்கழுநீர் தொடக்கமான அப்ராக்ருத புஷ்பங்களையுடைய ஓத நெடுந்தடங்
களாலும், நாநாவிதமான பூம்படுக்கைகளாலும், பரிமளம்போலே பூக்களிலே
படிந்து மதுவெள்ளத்திலே மூழ்கி பாட்டுக்களாலே அநுமேயங்களான தைவ
வண்டுகளினுடைய திவ்ய காந்தர்வத்தாலும், கிட்டினாரைப் பிச்சேற்றுகிற
திவ்யோத்யாந ஶதஸஹஸ்ரங்களாலும் சூழப்பட்டு, நாநா ரத்நங்களாலே
சமைந்த ஸ்தம்பங்களையுடைத்தாய், அநேகமாயிரம் ரத்நஸ்தம்பங்களாலே
அலங்க்ருதமாய், உபய விபூதியிலுள்ளாரும் ஒரு மூலையிலே அடங்கும்படி இட
முடைத்தாய், தாமரை செங்கழுநீர், சந்தநம், அகில், கர்ப்பூரம் தொடக்க
மானவற்றை யளைந்துவருகிற மந்தமாருதத்தினாலே ஸேவ்யமானமாய், நிரதிஶ
யாநந்த மயமான திருமாமணி மண்டபத்திலே பேரோலக்கத்தின் நடுவே தந்
தாம் திருமுடிகளிலே திவ்யாயுதங்களை தரித்துக்கொண்டு கூப்பின கைகளும்
தாங்களுமாயிருக்கிற அஸ்த்ர ஶஸ்த்ராக்யரான திவ்ய புருஷர்களும், தம்
முடைய ஸங்கல்பத்தாலே ஸகல ஜகத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப்
பண்ணக் கடவரான ஸேனைமுதலியார் தொடக்கமான திவ்ய புருஷர்களும்
அடைவே ஸேவித்திருக்க, உபய விபூதியுந் தொழிலாக வருப்புண்டு ஸர்வாஶ்
சர்ய மயமான தேசையுடைய சீரிய ஸிம்ஹாஸநத்திலே, பன்னிரண்டிதழை
யுடைய நாநாஶ்சர்யமான திவ்ய கமலத்தில், திவ்ய கர்ணிகையில், புஷ்பஸஞ்
சய வைசித்ர்யமான திவ்யயோக பர்யங்கத்தில், அநேகமாயிரம் ஆதித்யர்கள்
சேர வுதித்தாற்போலே இருக்கிற பணா மணிகளையும், அநேகமாயிரம் சந்த்ரர்
களை யுருக்கிவார்த்தாற்போலே குளிர்ந்த புகரையும், ஶைத்ய மார்தவ ஸௌ
ரப்யாதி குணங்களையுமுடைய திருவநந்தாழ்வான் மீது மூன்று மின்கொடிக
ளோடே கூடி தாமரை பூத்ததொரு காளமேகம் வெள்ளிமலையிலே படிந்
திருக்குமாபோலே ஸ்ரீ பூநீளைகளோடே வீற்றிருக்கிற ஸ்ரீ வைகுண்ட நாத
னுடைய அகிலஹேயப்ரத்ய நீகாநந்த ஜ்ஞாநாநந்த மயமான திவ்யாத்ம ஸ்வ
ரூபத்தையும், ததாஶ்ரயமான ஜ்ஞாந ஶக்தி பலைஶ்வர்ய வீர்ய தேஜஸ் ஸௌ



ஶீல்ய மார்தவ வார்ஜவ ஸௌஹார்த ஸௌம்ய காருண்ய மாதுர்யகாம்பீர்
யௌதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய ஶௌர்ய பராக்ரம ஸத்ய காம
ஸத்ய ஸங்கல்பாத்ய ஸங்க்யேய கல்யாண குணங்களையும், அந்த திவ்யாத்ம
குணப்ரகாஶகமாய், ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய
யௌவநாத்ய பரிமித குணநிதியான திவ்ய மங்கள விக்ரஹத்தையும், ததா
தாரகமான கிரீடாதி நூபுராந்தமான திவ்ய பூஷணங்களையும், அவற்றோடு
விகல்பிக்கலாம்படியான ஶங்க சக்ராதி திவ்யாயுதங்களையும், இதுடங்கக் காட்
டிலெரித்த நிலாவாகாமே இரண்டிடத்திலுமிருந் தநுபவிக்கிற லக்ஷ்மீப்ரப்ருதி
திவ்ய மஹிஷீவர்க்கத்தையும், அச்சேர்த்தியிலடிமை செய்கையே தங்களுக்கு
தாரகாதிகளாகவுடைய நித்யமுக்தவர்க்கங்களையும், பரிபூர்ண பரப்ரஹ்மாநுபவ
கைங்கர்யங்களுக்கு வர்த்தகமாய் நிரதிஶயாநந்த மயமாயிருக்கும் "நலமந்த
மில்லதோர் நாடான" பரம பதத்தையும் அநுபவித்து நிரதிஶயாநந்த பரி
தாளாவதற்கு பத்தாத்மாக்களுக்கும் ப்ராப்தி யுண்டாயிருக்க, இவர்களித்தை
யிழந்து சிறகொடிந்த பக்ஷிகளைப்போலே இருக்கிற படியைக்கண்டு "பல்லு
யிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்த கோனே" என்று சொல்லுகிறபடியே,
அசிதாத்மாக்களுக்கும் கரணகளே பரப்ரதாநம் பண்ணியருள, "విచిత్రా దేహ
సంపత్తి, రీశ్వరాయనివేదితుం, పూర్వమేవకృతా బ్రహ్మన్, హస్తపాదాదిసంయుతా"
என்றும், "மாயவன் தன்னை வணங்கவைத்த கரணமிவை" என்றும்
சொல்லுகிறபடியே, ஸ்வசரண கமல ஸமாஶ்ரயணத்துக்கு உறுப்பாகக்
கொடுத்த கரசரணாத்யவயவ ஸங்காதாத்மகமான ஶரீரத்தைக்கொண்டு அப்
படி செய்யாதே ஶப்தாதி விஷயப்ராவண்யத்துக்கு உறுப்பாக்கி, கர்மவஶ
த்தாலே பிறவி என்னும் பெருங்கடலிலே புக்கு, அனர்த்தப்படுகிறபடியைக்
கண்டு, நல்வழி கண்டு நடக்கைக்குடலாக, "హర్తుంతమస్సదసతీచవివేక్తుమీశో మా
నం ప్రదీపమివకారుణికో దదాతి" என்றும், "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்ப
மும் சொற்பொருள்தானும் மற்ற நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினா
லருள் செய்து" என்றும் சொல்லுகிறபடியே, தன் க்ருபையாலே, அநிக்ருதா
திகாரமான வேதங்களுக்கும் வ்யாஸாதி பரமர்ஷிகளுக் கந்தர்யாமியாயிருந்து
வெளியிட்ட வேதோப ப்ரஹ்மணங்களான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுக்
கும், புகவர்ணக்ரமாவதாரமோ, வ்யாஸாதி வதாவேஶமோ, மூதுவர் ஸநகன்
டோர் சீரியரிலே யொருவரோ, முன்னம் நோற்ற அனந்தன்மேல் புண்ணியங்
கள் பலித்தவரோவென்று பேரளவுடையாரும் ஶங்கிக்கும்படியான ப்ரபா
வாதிஶயத்தையுடைய ஆழ்வார் திருப்பவளத்தினும், அவ்வாழ்வாருக்கு அவ
யவ பூதரான மற்ற ஆழ்வார்களிடத்திலிருந்து வெளிப்படுத்திய ஸர்வாதிகார
மான த்ராவிட வேதத்தங்கோபாங்கங்களுக்கும், பாஷ்யக்ருத்ருஷ்டிகள் இடை
யில் அவற்றுக்கபார்த்தங்களைப்பண்ணி அவற்றை நிரஸித்து அநாதிஸித்தமான
ப்ராமாணிக ஸம்ப்ரதாய ப்ராப்தார்த்தங்களை வெளியிட்டு அசிதாத்மாக்களை
யும் இருத்தி தாஸ பூதர்களாய்ச் செய்வதற்கு தம்முடைய ஹ்ருதய ஸ்வரூபர்க
ளாய் நித்ய ஸூரிவர்க்கப்ரதாநர்களான அநந்த, வைநதேய, ஸுதர்ஶந, பாஞ்ச

ஐயாயிரவருக்கு நியமிக்க, அவர்கள் ஸ்ரீராமாநுஜமுநி எம்பார் கூரத்தாழ்வான் முதலியாண்டான் முதலானவர்களாகத் திருவவதரித்தார்கள், அப்படி திருவவதரித்தவர்களில் ஸ்ரீஅநந்தாம்ஸரான ஸ்ரீராமாநுஜமுநிக்குக் காரணபூதர்களான மற்றவர்களில் ப்ரதாநராய், தை மாஸத்தில், ஹஸ்த நக்ஷத்ரத்தில், ஹாரீத குல திலகராகத் திருவவதரித்த, சக்ராம்ஸரான திருமறுமார்பன் என்கிற திருநாமத்தையுடைய கூரத்தாழ்வான், ஸகல ஶாஸ்த்ரங்களையும் அதிகரித்து ஸ்ரீராமாநுஜமுநியை ஸேவித்து அவர் திருவடிகளை ஆஶ்ரயித்து பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் வஹித்துக்கொண்டு "అక్షేపమంత్రమాచార్యం పూజయేద్దీక్షితో ద్విజః, ఆచార్యాధీనవృత్తిస్స్యాద్యావజ్జీవసమాశ్రయేత్" என்கிறபடியே ஸ்வாசார்யரான ஸ்ரீராமாநுஜமுநியைப் பிரியாமல் தத்கைங்கர்ய ரஸராய் வாழ்ந்துகொண்டிருந்த ஶிஷ்யர்களில் "అగ్రణ్యం యతీంద్రశిష్యాణాం ఆద్యం వేదాంతవేదినాం" என்கிறபடி, அக்ரகண்யராய் வேதாந்த வேதிகளில் தலைவராயிருப்பதைக்கண்டு ஸர்வேஶ்வரன் ஸகல லோகோஜ்ஜீவநார்த்தமாக ப்ரவர்த்திப்பித்த வேதவேதாந்தங்களுக்கும் பகவத் கீதைக்கும் ப்ரஹ்மஸூத்ரங்களுக்கும் பாஹ்ய குத்ருஷ்டிகள் இடையில் கற்பித்த அபார்த்தங்களை நிரஸித்து அநாதிஸித்தமான ப்ராமாணிக ஸத்ஸம்ப்ரதாய ப்ராப்தார்த்தங்களை வெளியிடத் திருவுள்ளம்பற்றி, உடையவரும் ஆழ்வானைப் பார்த்து, நான் சொல்லுகிற பாஷ்ய வாக்யம் உம் திருவுள்ளத்துக்கு ஒத்திருந்தாலொழிய நீர் திருவெழுத்துச் சாத்த வேண்டாமென்று நியமித்தருளி, வேதார்த்த ஸங்க்ரஹ தீபாஷ்ய ஸ்ரீபாஷ்யாதிகளை அருளிச் செய்ய, பட்டோலைகொண்டவராய், வாசாமகோசர வைபவமுடையவராய், ஸ்ரீ உடையவர் பாஷ்யார்த்தம் ப்ரஸாதியாநின்று கொண்டு சுகமே வாழ்ந்தருளுகிற காலத்தில், சோழமண்டலத்திலே, ராஜ்யம் பண்ணிக்கொண்டிருக்கிற சோழ ராஜா தும்பைவளைகையாலே வேதவிருத்தமான கள்ளப் பொய்நூல் என்கிற சைவாகமத்தையே மெய் நூலென்று த்ருடதரப்ரமாணமாக அத்யவஸித்து, தானும் தன் புரோஹிதனுமாகக் கூட இருந்து, தன்னுடைய நாட்டிலுள்ள வித்வான்களையுந் திரட்டி "శివాత్పరతరంనాస్తి" என்று ஓலைக் கெழுத்திடச்சொல்லி தண்டிக்க, சிலர் அவனுடைய ஆஜ்ஞைக்கஞ்சி எழுத்திட்டார்கள், சிலர் அபேக்ஷிதமான அர்த்த க்ஷேத்ராதிகளை ஆசைப்பட்டு எழுத்திட்டார்கள், இத்தைக் கண்டு, நாலூரான் அந்த ஆபாஸிட்டத்தைச்சொல்லி இவர்களிட்டத்தாலென்ன ப்ரயோஜநமுண்டு, ராமாநுஜமுநியும் கூரத்தாழ்வானுமிட்டாலன்றோ இட்டதாமென்ன, சோழனும் அப்பொழுதே சில மநுஷ்யரைப் பார்த்து, ராமாநுஜமுநியை அழைத்துக்கொண்டு வாருங்கோளென்று கோயிலுக்கு அனுப்பினான். அந்த மநுஷ்யரும் ஸ்ரீ உடையவருடைய மடத்து வாசலிலே வந்து, ராமாநுஜமுநி எங்கேயென்று கேட்க, இச்செய்தியை ஸ்ரீ உடையவருக்கு நீராடத் திருமஞ்சநம் முகந்து கொடுக்கிற கூரத்தாழ்வான் திருச்செவியிலே ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் வந்து ரஹஸ்யமாக விண்ணப்பம் செய்ய, ஆழ்வானும் ஸ்ரீ உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளை



தரித்துக்கொண்டு, ஸ்ரீ உடையவருக்கும் விண்ணப்பம் செய்யாதே புறப்பட்டு, வந்த ராஜ மநுஷ்யருடன் போகத்தேட, அவ்விசேஷங்கேட்டு, ஆழ்வானுடனே பெரிய நம்பியும் புறப்பட்டெழுந்தருள, இவர்களை அழைத்துக் கொண்டு போனார்கள். ராஜமநுஷ்யர் அழைத்துக்கொண்டுபோய் சோழன் முன்னேவிட, அவனும் இவர்களைப்பார்த்து "శివాత్పరతరంనాస్తి" என்று ஓலைக் கெழுத்திடச் சொல்ல, கூரத்தாழ்வானும் பஹுப்ரகாரேண அநேகம் ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளாலே, "ఏకో హవై నారాయణ ఆసీన్న బ్రహ్మా నేశానః నేమే ద్యావాపృథివీ, న నక్షత్రాణి నాపో నాగ్ని ర్న సూర్య ఇత్యాదికం" "ఏకో హవై నారాయణ ఆసీన్న బ్రహ్మా న చ శంకరః" "యః పృథివ్యామంతరే సంచరన్ యస్య పృథివీ శరీరం, యం పృథివీ న వేద, ఏష సర్వభూతాంతరాత్మా అపహతపాప్మా దివ్యో దేవ ఏకో నారాయణః" "తేనాసౌ జితో విష్ణుస్సత్వగుణప్రవర్తితా, అథ తస్య నాభేరబ్జాత్ స్వయంభూః అథ తస్య శిరోభ్రూరంతరాత్ తస్మాద్రుద్రః ప్రాదుర్భవత్, బ్రహ్మణో జ్యేష్ఠాయ శ్రేష్ఠాయ పుత్రాయ విద్రావయేతి, సోఽరోదీత్ యదరోదీత్ తద్రుద్రస్య రుద్రత్వం" "అగ్నిరవమో దేవతానాం విష్ణుః పరమః" "విష్ణోర్నుకం వీర్యాణి ప్రవోచం యః పార్థివాని విమమే రజాంసి" "యత్ర హృదయే ... చతుర్ముఖస్య సర్వకారణం విష్ణురేవేత్య ... ఏకో హవై నారాయణ ఆసీన్న బ్రహ్మా నేశానః స ముని ర్భూత్వా సమచింతయత్, తత ఏవ ... నాం చ విశ్వో హిరణ్యగర్భోఽగ్ని యమవరుణేంద్రాః, దివ్యే బ్రహ్మపురే హ్యేష ... సర్వాత్మా ప్రతిష్ఠితః" "అహం కృత్స్నస్య జగతః ప్రభవః ప్రలయస్తథా । మత్తః పరతరం నాన్యత్ కించిదస్తి ధనంజయ । మయి సర్వమిదం ప్రోతం సూత్రే మణిగణా ఇవ । బీజం మాం సర్వభూతానాం విద్ధి పార్థ సనాతనం । త్రిభిర్గుణమయైర్భావైరేభిస్సర్వమిదం జగత్ । మోహితం నాభిజానాతి మామేభ్యః పరమవ్యయం । దైవీ హ్యేషా గుణమయీ మమ మాయా దురత్యయా । మామేవ యే ప్రపద్యంతే మాయామేతాం తరంతి తే" என்கிறபடியே ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன், ஜகத்காரணபூதன், த்யேயனானவனும் இவனே, ஸர்க்கஸ்திதி ஸம்ஹார கர்த்தாவுமிவனே, ப்ரஹ்ம ருத்ராதிகள் இவனுடைய புத்ர பௌத்ரர்களாய், இவன் நியமநத்திலே யிருக்குமவர்கள், இவ்வளவு மன்றியே, "ఏకశ్రాంసి సరత్పదమస్య ... శ్రాంశియాంస్తదా । అపేకోదిగ్దరనాత్రాన్నోదకస్తు కృత్యతాం" என்று திருவடிகளை நீட்டினவன் ஒருவன், கமண்டலோதகத்தாலே பக்தி புரஸ்ஸரமாகத் திருவடிகளை விளக்கினவனொருவன், தத்தீர்த்த ஜலத்தை மிகவும் ப்ரீதியோடே பாவநார்த்தம் ஶிரஸாவஹித்தவனொருவன், இவர்களில் பெரியவன் யாரென்று நீயே விசாரித்துக் காணென்ன, அவனும் இவரும் இம்மாத்ரமேயோ, த்ரிவிக்ரமபாத ஜல ஸம்பந்திசையாயிருக்க, இவரும் இம்மாத்ரமேயோ, ஸ்ரீ கத்தாலே கபாலித்வ பவத்வங்கள் போய் ஶிவத்வமுண்டானவனிறே, ஸ்ரீபாகவதம், "యచ్ఛౌచనిస్సృతసరిత్ప్రవరోదకేన తీర్థేన మూర్ధ్న్యధికృతేన శివశ్శివోఽభూత్" என்று அருளிச்செய்ய, சோழனும் இது கேட்டு அதிருத்த

னாய், நீ பெரிய வித்வானுகையாலே, உனக்கு வேண்டினபடி யெல்லாம் சொல்லவல்லை, அங்ஙனன்று, நான் சொன்னபடியே, "ஶிவாத்பரதரம் நாஸ்தி" என்று ஓலைக் கெழுத்திடவென்று ஓலையைக் கையிலே கொடுத்து அதி நிர்ப் பந்திக்க, கூரத்தாழ்வானும் "த்ரோணமஸ்தி தத:பரம்" என்று ஓலைக் கெழுத்திட் டருளினர்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# கூரேசவிஜயம்.

## பாயிரம்.

### ஸ்வாசார்யஸ்துதி.

கங்கைசேர்பதக்கார்முகில்வண்ணமால்
செங்கைநான்குந்திருமறுவும்மறைத்
திங்குவந்தெமக்கின்பருளத்தங்கி
வெங்கடாரியர்மெய்ப்பதம்போற்றுவாம். (க)

(இ-ள்.) கங்கைசேர் - கங்கைதங்கிய, பதம் - திருவடியையுடைய, கார் முகில் வண்ணம் - நீலமேக வர்ணமுள்ள, மால் - திருமாலே, செய்கை நான்கும் - செந்தாமரை மலர் போன்ற நான்கு திருக்கரங்களையும், திருமறுவும் - லக்ஷ்மீ ஸ்ரீ வத்ஸங்களையும், மறைத்து - ஒளித்து, இங்கு அத்தங்கி வெங்கடாரியர் வந்து - இவ்விடத்து அத்தங்கி வெங்கடாசாரியராய் எழுந்தருளி, எமக்கு - அடியோங்களுக்கு, இன்பு அருள் - நித்யாநந்தத்தை யருள்செய்தமையால், (அவரது) மெய்ப்பதம் - உண்மை நிலையை யருளின்ற திருவடிகளை, போற்றுவாம் - துதித்து வணங்குவோம், (யாம்) எ-று.

கங்கைசேர்பதம் என்றமையால் கங்கைக்கு உத்பத்திஸ்தானம் திருவடி யென்றதாயிற்று. செய்யுளாதலால் வேங்கடாரியர் என்பது வெங்கடாரியர் எனக் குறுகி நின்றது. திருமேனி வண்ணத்துக்கு வேறு வண்ணமான மேகங்கள் ஒவ்வாமையால், கார் முகில் வண்ணம் என்றார். கார் முகில் - கார் காலத்து மேகம் என் றுரைத்தலும் கூடும். மால் - ஆஸ்ரிதவ்யாமோஹன். இதற்கு, ஆஸ்ரிதரிடத்துத்தான் வ்யாமோஹமுள்ளவன் என்றும், தன் விடத்து ஆஸ்ரிதர்க்கு வ்யாமோஹமுண்டாகும்படி செய்பவன் என்றும் இருபொருள் உண்டு. மால் - பெரியோன் என்றும் பொருள்படும். திரு -

புருஷகார பூதையான பெரிய பிராட்டி. ஸ்ரீவத்ஸம் - உத்தம லக்ஷணமாய் திரு மார்பில் விளங்குவதோர் மறு. சேதநோஜ்ஜீவநார்த்தமாய் லீலா விபூதிக் கெழுந்தருளும்போது நித்ய விபூதியிலுள்ள சின்னங்களை மறைத் தெழுந்தருளுதல் முறைமை யாதலால், செங்கை நான்குந் திருமறுவும் மறைத்து இங்கு வந்து என்றார். எமக்கு என்றது - தம்மை யொத்தாரையு முளப்படுத்தி. தாயின் அவயவங்களெல்லா மிருக்கச் செய்தே, ப்ரஜையானது தனக்குத் தாரகமான ஸ்தநத்தைப்பற்று மாறுபோல, இவரும் தமக்குத் தாரகமான திருவடியை உறுதியாகப் பற்றுவாராயினர். போற்றுதல் - வாயார வாழ்த்தலும் மெய்யார வணங்கலும். இவ்விரண்டுங் கூறுதலானே இனமாகிய மனமாரச் சிந்தித்தலுங் கொள்ளப்படும், படவே, த்ரிகரணங்களாலும் வழிபடுவோ மென்றதாயிற்று. திருமாலே ஆசார்யனாய் எழுந்தருளினா னென்பது கருத்து.

இதுவுமது.

கங்கைசேர்பதக்கார்முகில்வண்ணக்கடவுண்மாமணிதிருமறுக்கமலச்
செங்கைநான்கினைம்படைகளு மறைத்துச்சிற்குணாநந்தத்தேசிகவுருவா
இங்குவந்தெமதுளத்திருட்கொளியாமெட்டெழுத்தருள்செயலினைத் [ய்
[தங்கி
வெங்கடாரியரெனுந்தயாநிதி தன்விரைமலர்ச் செழும்பதஞ்சிரத்தணி
[வாம். (உ)

(இ-ள்.) கங்கைசேர் பதம் - கங்கை தங்கிய திருவடியையும், கார்முகில் வண்ணம் - நீலமேகச்யாமளவர்ணத்தையுமுடைய, கடவுள் - சர்வேச்வரனே, மாமணி - அழகிய கௌஸ்துபரத்நத்தையும், திரு - (அகலகில்லேனிறையும் என்னும்) பெரிய பிராட்டியையும், மறு - ஸ்ரீவத்ஸத்தையும், கமலச் செங்கை நான்கின் - தாமரைமலர் போன்ற செவ்விய திருக்கரங்கள் நான்கினோடு, ஐம்படைகளும் - அவற்றிலுள்ள பஞ்சாயுதங்களையும், மறைத்து - ஒளித்து, சிற்குணாநந்தம் - ஞான குணாநந்தங்களைத் தருகின்ற, தேசிக வுருவாய் - ஆசார்ய ரூபமாய், இங்கு வந்து - இவ்விடத் தெழுந்தருளி, எமது உள்ளத்து இருள்கு - எமது மனத்திலுள்ள அஜ்ஞாநாந்தகார நீக்கத்துக்கு, ஒளி ஆம் - தேஜோராசியாய் விளங்குகின்ற, எட்டு எழுத்து - திருவஷ்டாக்ஷரத்தை, அருள்செயலின் - எமக்கு அருள்செய்தமையால், அத்தங்கி வெங்கடாரியர் என்னும் - (அந்த) அத்தங்கி திருவேங்கடாசாரியர் என்கிற தயாநிதிதன் - க்ருபாநிக்ஷேபத்தினது, செழு - செழுமையாகிய, பதம் - திருவடிகளென்கிற, விரை - வாசனை வீசுகின்ற, மலர் - தாமரை மலரை, சிரத்து அணிவாம் - எமது சிரசின்கண் சூடிக்கொள்வோம், (யாம்) எ-று.

பஞ்சாயுதங்களாவன—சங்கம், சக்ரம், கட்கம், தநுசு, கதை, என்பன.

மலராதலால் சிரத்தணிதற்குரியதாயிற்று.



## பரமாசார்யஸ் துதி.

பொருவிலுபயவேதாந்தப்பொருளின்முடிவைத்தெளிந்துணர்ந்து
மருவுதாதாரியர்சீநிவாசாரியர்வேதாந்தாரியர்
தெருள்சேர்வேங்கடாரியர்நற்சிங்காசாரியர்க்குவந்தே
யருளும்வேங்கடாரியருக்காசானரசிங்கனைப்பணிவாம். (௩)

(இ-ள்.) பொருவு இல் - ஒப்பில்லாத, உபய வேதாந்தப் பொருளின் முடிவை - உபய வேதாந்தார்த்தத்தின் முடிவை, தெளிந்துணர்ந்து - தெளிந்தறிந்து, மருவு - பொருந்திய, தாதாரியர் - தாதாசாரியர், சீநிவாசாரியர் - ஸ்ரீநிவாஸாசாரியர், வேதாந்தாரியர் - வேதாந்தாசாரியர், தெருள்சேர் - தெளிவடைந்த, வேங்கடாரியர் - வேங்கடாசாரியர், நல் - விலக்ஷணராகிய, சிங்காசாரியர்க்கு - சிங்காசாரியர் என்னு மிவர்களுக்கு, உவந்து அருளும் - மனக்களிப்போடு கிருபைசெய்தருளிய, வேங்கடாரியருக்கு - வேங்கடாசாரியருக்கு, ஆசான் - ஆசாரியராகிய, நரசிங்கனைப்பணிவாம் - நரசிங்காசாரியரை வணங்குவோம், (யாம்) எ-று.

## மணவாள மாமுனிகள் துதி.

வேறு.

பணவாளராப்பளியிற்பங்கயக்கட்டுயிலவனி
யுணவாளற்கீடளித்தானுத்தமநம்பிக்கருண்மெய்க்
குணவாளன்விளக்குமறைகூறாமற்றமிழ்விளக்கும்
மணவாளமாமுனிவன்மலரடிசந்ததம்பணிவாம். (௪)

(இ-ள்.) பணம் - படத்தையும், வாள் - ஒளியையுமுடைய, அரா - திருவனந்தாழ்வானாகிய, பள்ளியில் - சயநத்தில், பங்கயம் - தாமரைமலர் போன்ற, கண் துயில் - திருக்கண்வளர்கின்ற, அவனி உணவாளற்கு - பூமி பாரணனாகிய நம்பெருமாளுக்கு, ஈடு அளித்தான் - திருவாய்மொழியின் ஈட்டை யருளினவனும், உத்தம நம்பிக்கு - உத்தம நம்பிகளுக்கு, அருள் - அருளோடு கூடிய, மெய் குணவாளன் - உண்மையாகிய குணவந்தனான பராங்குச பகவான், விளக்கும் - திருவாய்மலர்ந்தருளின, மறை - தமிழ்வேதத்தை, கூறாமல் - கிருபைசெய்யாமல், தமிழ் - அத்தமிழ் வேதத்தை, விளக்கும் - ப்ரகாசிக்கச் செய்த, மணவாள மாமுனிவன் - ஸ்ரீமணவாள மாமுனிகளுடைய, மலர் அடி - தாமரைமலர்போன்ற திருவடிகளை, சந்ததம் - சதாகாலமும், பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## பிள்ளைலோகாசார்யர் துதி.

வெள்ளைவளையாழியினன்மெய்யருளையனைவருக்கும்
உள்ளபடியுய்ந்திடுமுபாயமெனுமூவுறுசொல்
வள்ளலெனமகிழ்ந்துதிருவாய்மொழிப்பிள்ளைக்கருளும்
பிள்ளைலோகாரியர்செம்பிரசமலரடிபணிவாம். (ரு)

(இ-ள்.) வெள்ளைவளை - வெள்ளிய சங்கத்தையும், ஆழியினன் - சக்ரத்தையுமுடைய லக்ஷ்மீ நாதனது, மெய் அருளை - உண்மையாகிய க்ருபையே, அனைவருக்கும் - எல்லாருக்கும், உள்ளபடி - யதார்த்தமாய், உய்ந்திடும் - உஜ்ஜீவித்தற்குரிய, உபாயம் என்னும் - உபாயமென்று சொல்லுகிற, மூவுறு சொல் - அஷ்டாதசரஹஸ்யங்களையும், வள்ளல் என - ஔதார்யகுணமுள்ளவராய், மகிழ்ந்து - சந்தோஷித்து, திருவாய்மொழிப் பிள்ளைக்குஅருளும் - திருவாய்மொழிப் பிள்ளைக்கு அருளிச்செய்த, பிள்ளைலோகாரியர் - பிள்ளைலோகாசாரியரது, பிரசம் - தேனொழுகாநின்ற, செம்மலர் - செந்தாமரைமலர் போன்ற, அடி - ஸ்ரீபாதங்களை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

### பெரிய வாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, நம்பிள்ளை, நஞ்சீயர், எம்பார், பட்டர் துதி.

சிட்டர்பணிந்திடஞானச்சீலமருளிருகண்ணர்
இட்டமுறுநம்பிள்ளைக்கினிதருளுநஞ்சீயர்
துட்டநெறிநீக்கியெம்பார்துணைமலர்த்தாளடைந்துய்ந்த
பட்டர்திருப்பொற்பாதபங்கயமென்சிரத்தணிவாம். (சா)

(இ-ள்.) சிட்டர் - சிஷ்டர்கள், பணிந்திட - வணங்க, ஞானச்சீலம் - ஞானவொழுக்கத்தை, அருள் - அருளிச்செய்த, இருகண்ணர் - பெரிய வாச்சான் பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளையென்னும் இவ்விருவரும், இட்டம் உறும் - அன்பு செய்தற்குரிய, நம்பிள்ளைக்கு இனிதருளும் - நம்பிள்ளைக்கு நன்றாக வருளிச்செய்த, நஞ்சீயர் - நஞ்சீயரும், துட்ட நெறி நீக்கி - துர்மார்க்கத்தை விலக்கி, எம்பார் - எம்பாருடைய, மலர் - தாமரைமலர்போன்ற, துணைத்தாள் - இரண்டு திருவடிகளை, அடைந்து உய்ந்த - ஆச்ரயித்து உஜ்ஜீவித்த, பட்டர் - ஸ்ரீபராசர பட்டரும் ஆகிய இவர்களுடைய, பொன் - அழகிய, திருப்பாத பங்கயம் - ஸ்ரீபாதாரவிந்தங்களை, என்சிரத்து அணிவாம் - எமது சிரத்தில் அணிந்துகொள்வோம், (யாம்) எ-று.

பெரிய வாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் திருக்கலிகன்றிதாஸராகிய நம்பிள்ளைக்கு நயநத்வயம்போல்பவராதலால் அவ்விருவரும் இருகண்ணர் எனப்பட்டார்.

## உடையவர் துதி.

கராமலைவைத்தொடர்துன்பந்தீர்த்ததிருமாற்கணையாம்
அராமானிடவுருவாயடியர்வயிணைவமோங்க
விராமாயாவாதியரைவெல்பெரும்பூதூர்மணியை
இராமாநுசாயநமவென்றுநிரந்தரந்துதிப்பாம். (எ)

(இ-ள்.) கரா - முதலையானது, மாவை - கஜேந்த்ராழ்வானை, தொடர் - தொடர்ந்து பற்றினதனாலுண்டாகிய, துன்பம் - துக்கத்தினின்றும் நீக்கி - காத்த - காத்தருளின, திருமாற்கு - ஸ்ரீயஃபதிக்கு, அணை ஆம் - சயநமாகிய, அரா - ஆதிசேஷனை, மானிட உருவு ஆய் - மநுஷ்ய ரூபங்கொண்டு, அடியர் - தொண்டரும், வைணவம் - (அவர்களுக்கு உத்தேச்யமான) வைஷ்ணவமும், ஓங்க - வ்ருத்தியடையும்படி, விராம் - கூடியெதிர்ந்த, மாயாவாதியரை - மாயாவாதிகளை, வெல் - வென்றடக்கினமையால், பெரும்பூதூர் - ஸ்ரீபெரும்பூதூரில் எழுந்தருளியிருக்கிற, மணியை - (அந்த) மாணிக்கத்தை, இராமாநுசாயநம என்று - ஸ்ரீமதே ராமாநுஜாயநம வென்று, நிரந்தரம் - சதாகாலமும், துதிப்பாம் - ஸ்துதி பண்ணுவோம், (யாம்) எ-று.



### பெரியநம்பி, ஸ்ரீயாளவந்தார், மணக்கால்நம்பி, உய்யக்கொண்டார் துதி.

அலகில்புகழ்ப்பெரியநம்பிக்கருளுபயவேதாந்தப்
புலனுரைக்குமாளவந்தார்புண்டரிகப்பதம்போற்றி
இலகுமணக்கால்நம்பிக்கிசைந்தருளெட்டெழுத்தொளியுள்
உலவுய்யக்கொண்டார்சீருபயமலரடிபணிவாம். (அ)

(இ-ள்.) அலகு இல் - அளவற்ற, புகழ் - கீர்த்தியையுடைய, பெரியநம்பிக்கு - பெரிய நம்பிகளுக்கு, அருள் - அருள் செய்த, உபய வேதாந்தப்புலன் உரைக்கும் - உபய வேதாந்தங்களின் உள்ளுறைச்சொல்லியருளின, ஆளவந்தார் - ஸ்ரீயாளவந்தாருடைய, புண்டரிகப் பதம்போற்றி - தாமரைமலர் போன்ற திருவடிகளை வணங்கி, இலகும் - விளங்குகின்ற, மணக்கால் நம்பிக்கு - மணக்கால் நம்பிகளுக்கு, இசைந்து அருள் - அவரது வேண்டுகோளுக்கிணங்கி அருளிச்செய்த, எட்டு எழுத்து ஒளி - திருவஷ்டாக்ஷரத்தின் பிரகாசம், உள் உலவு - தம்மனத்தில் தங்கி விளங்காநின்ற, உய்யக்கொண்டார் - உய்யக்கொண்டாருடைய, சீர் - சிறப்பு வாய்ந்த, மலர் - தாமரைப் பூவைபொத்த, உபயம் அடி - இரண்டு திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## ஸ்ரீமந் நாதமுநிகள் துதி.

ஓதரியயோகமதின்மிகநீங்கிச்சோழனுக்கும்
நீதியினைவருத்தருளிக்கிளர்கணிகண்ணன்றிறத்தாம்பால்
ஏதமிலாயிரமின்மொழிமாறன்றரவளித்த
நாதமுனிவரனுபயமலரடிபணிவாம். (௯)

(இ-ள்.) ஓது அரிய - சொல்லுதற்கரிய, யோகமதின் - யோகமார்க்கத்தினின்றும், உற நீங்கி - மிகவும் விலகி, சோழனுக்கு - சோழராஜனுக்கு,

கீதத்தினைவகுத்து அருளி - தேவகாநம் மநுஷ்யகாநம் என்னும் கீதங்களின் பூர்ணஸ்வரூபத்தை விசதீகரித்தருளி, ஒளிர் - பிரகாசிக்கிற, கண்ணிநுண் சிறுத்தாம்பால் - கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் முதற்குறிப்பையுடைய பிரபந்தாநுசந்தாநத்தால், ஏதம் இல் - குற்றம் இல்லாத, நால் ஆயிரம் - தமிழ்வேதம் நாலாயிரம் பாசுரங்களையும், இங்கு - இவ்வுலகத்திற்கு, எழில் - அழகிய, மாறன் - நம்மாழ்வார், தர - அருளிச் செய்ய, அளித்த - கிருபை செய்த, நாதமுனிவரன் - ஸ்ரீமந் நாதமுனிகளுடைய, நளிநமலர் - தாமரைமலர்போன்ற, உபய அடி - இரண்டு திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

யோகமார்க்கத்தை விட்டு நீங்குதற்குக் காரணம் குருபரம் பராப்ரபாவத்தில் பரக்கக் காணலாம்.

## நம்மாழ்வார் துதி.

இருக்குமுதற்கடல்கடைந்தவின்பொருணல்லமுதடியார்
வருக்கமுணமதுரகவியிதயநளினமுகைக்
கருக்கனெனமலர்ந்தருளெம்மண்ணலெதிபதிபரவும்
திருக்குருகைச்சடகோபன்செஞ்சரணஞ்சிரத்தணிவாம். (௧௦)

(இ-ள்.) இருக்குமுதல் - ருக்வேதம் முதலாகிய, கடல் கடைந்த - வேதக் கடலைக் கடைந்தெடுத்த, இன்பொருள் - இனியபொருளாகிய, நல் அமுது - விலக்ஷணமாகிய அம்ருதத்தை, அடியார் வருக்கம் உண்ண - தொண்டர் குழுவுண்ண, மதுரகவியரன் - ஸ்ரீமதுர கவிகளுடைய, இதயம் - ஹ்ருதயமாகிய, நளினமுகைக்கு - தாமரையரும்பு விகஸிப்பதற்கு, அருக்கன் என - சூரியன்போல, மலர்ந்தருள் - கிருபையாகிய கிரணங்களை விரித்தருளிய, அண்ணல் - பெருமை வாய்ந்தவரும், எதிபதிபரவும் - யதிராஜர் வழிபடுகின்ற, திருக்குருகை - திருக்குருகூரில் அவதரித்தருளிய, சடகோபன் - நம்மாழ்வாரும் ஆகிய அவரது, செம் சரணம் - செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை, சிரத்து அணிவாம் - எமது சிரத்தில் தரித்துக்கொள்வோம், (யாம்) எ-று.

## சேனைமுதலியார் துதி.

உடலையுயிரினையுலகையுளவாக்கும்பிரமர்
உருத்திரரிந்திரரமரர்முனிவரர்மாதவத்தோர்
ஏனையருமஞ்சலிசெய்தரிகரியென்றிசைப்ப
இடைவிடாமுன்றிலிற்கைப்பிரம்பதனால்விலக்குங்
கோனைமலராளருளான்மாறனுக்காய்ந்தருளுங்
குரவனைவெள்ளரவணைமானித்தியசூரியர்கள்
சேனைமுதலியைமனத்திருளையகற்றுஞ்
செம்மணியைக்கண்மணியைத்திருவடிகள்பணிவாம். (௧௧)



(இ-ள்.) உடலை - உடலையும், உயிரினை - உயிரையும், உலகை - பிரபஞ்சத்தையும், உளஆக்கும் - படைக்கின்ற, பிரமர் - பிரமர்களும், உருத்திரர் - ருத்ரர்களும், இந்திரர் - இந்திரர்களும், அமரர் - தேவர்களும், முனிவரர் - முனிசிரேஷ்டர்களும், மாதவத்தோர் - பெரிய தபோதநர்களும், ஏனையரும் - மற்றையோரும், அஞ்சலி செய்து - அஞ்சலி பண்ணி, அரி அரி என்று இசைப்பது - ஹரி ஹரி யென்று சொல்லுதலாகிய முழக்கம், இடைவிடா - நீங்காதிருக்கிற, முன்றிலில் - சந்நிதி முற்றத்தில், கைப்பிரம்பதனால் விலக்கும் - தமது கையிலுள்ள வேத்திரப்படையினால் (சந்தடி) விலகப் பண்ணுகிற, கோனை - அரசனை, மலராள் அருளால் - பெரிய பிராட்டியாரது கிருபையால், மாறனுக்கு - நம்மாழ்வாருக்கு, ஆய்ந்தருளும் - ரஹஸ்யார்த்தங்களை ஆராய்ந்தருளிச் செய்த, குரவனை - ஆசாரியனை, வெள் அரவு அணைமால் - ஆதிசேஷனாகிய சயநத்தையுடைய திருமாலினது, நித்திய சூரியர்கள் சேனைமுதலியை - நித்திய சூரிகளுடைய சேனைக்குத் தலைவனை, எமது மனத்து இருளை அகற்றும் - எங்களுடைய மனத்தின் கண்ணதாகிய அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குகின்ற, செம்மணியை - மாணிக்கத்தை, கண்மணியை - கண்மணியினை, திருவடிகள் பணிவாம் - ஸ்ரீ பாதங்களை வணங்குவோம், (யாம்) எ-று.

## பெரிய பிராட்டியார் துதி.

### வேறு.

திரைசெறிதண்பாற்கடனற்றெள்ளமுதிற்பிறந்தசெழுந்தேனைவானோர்க்
கரைசனையனரனெனுமாலுங்கடைக்கணருணோக்கமதிற்றவ்வண்ணம்
புரையறத்தன்றொழிலியற்றிடவதுகண்டுளமகிழும்பொன்னையையைந்
துரைசெய்பொருளருளரங்கநாயகியைநிரந்தரமெம்முளத்தில்வைப்பா
ம். (௧௨)

(இ-ள்.) திரைசெறி - அலைகள் நெருங்கிய, தண் - குளிர்ந்த, பால் கடல் - க்ஷீராப்தியில், நல் - மேலாகிய, தெள் அமுதின் - தெளிவாகிய அமுதத்துடன், பிறந்த - அவதரித்தருளிய, செழு தேனை - செழுமையாகிய தேனை, வானோர்க்கு அரைசன் - தேவர்களுக்கரசனாகிய இந்திரன், அயன் - பிரமன், அரன் - ருத்ரன், எனும் - என்று பல ரூபங்களாக விகசிக்கப் படுகிற, மாலும் - திருமாலும், கடைக்கண் - தன் கடாக்ஷத்தினுள்ள, அருள் நோக்கம் அதில் - கிருபாதிருஷ்டியின் இங்கிதத்தை யறிந்துகொண்டு, அவ்வண்ணம் - அவ்வாறே, புரை அற - குற்றமில்லாமல், தன் தொழில் இயற்றிட - தன்னுடைய முத்தொழிலைச் செய்யாநிற்க, அதுகண்டு - அதைப் பார்த்து, உள்ளம் மகிழும் - மனங்களிக்கிற, பொன்னை - ஸ்வர்ணத்தை, ஐந்து ஐந்து உரை செய்பொருள் - இருபத்தைந்து அக்ஷரரூபமாகிய த்வயார்த்தத்தைத், அருள் - பெருமாளால் ப்ரஸாதிக்கப் பெற்ற, அரங்க நாயகியை - ஸ்ரீரங்க நாய்ச்சியாரை, நிரந்தரம் - சதாகாலமும், எம் உள்ளத்தில் வைப்பாம் - எங்கள் மனத்தில் இருத்துவோம், (யாம்) எ-று.

## பெரிய பெருமாள் துதி.

பரத்துவமாய்வியூகமதாய்ப்பயில்விபவாந்தரியாமியர்ச்சைரூப [டாத்
வரத்துளனாய்த்திகழுபயவேதாந்தப்பொருண்முடிவாய் மனவாக்கெட்
டிரத்துளனாய்முத்தொழிலுக்காதியுமாயுயிர்க்குயிராய்த்திருவுக்கெட்டக்
கரத்துபதேசிகனாகுமரவணையெம்மரங்கர்பதங்கருத்துள்வைப்பாம் (கரு).

(இ-ள்.) பரத்துவம் ஆய் - பரத்துவமாகியும், வியூகமதாய் - வியூகமாகியும், பயில் - பயின்று வந்த, விபவம் அந்தரியாமி அர்ச்சை - விபவம் அந்தர்யாமி அர்ச்சை என்கிற, ரூபம் - உருவங்களின், வரத்து உளனாய் - வரவையுடையவனாகியும், திகழ் - விளங்குகின்ற, உபய வேதாந்தப்பொருள் முடிவு ஆய் - உபய வேதாந்தார்த்தங்களின் முடிவாகியும், மனவாக்கு எட்டா - மனோவாக்குகளுக்கு அணுக வொண்ணாத, திரத்து உளனாய் - உறுதி நிலையுள்ளவனாகியும், முத்தொழிலுக்கு - த்ரிவிதக்ருத்யங்களுக்கு, ஆதியும் ஆய் - முதல்வனுமாகியும், உயிர்க்கு உயிர் ஆய் - உயிர்க்குயிராகியும், திருவுக்கு - பெரிய பிராட்டிக்கு, எட்டு அக்கரத்து உபதேசிகன் ஆகும் - திருவஷ்டாக்ஷரத்தை யுபதேசித்தவனாகியும் இராநின்ற, அரவணை - சர்ப்ப சயனத்தையுடைய, எம் அரங்கர் - எமக்குத் தேசிகரான ரங்கநாதருடைய, பதம் - திருவடியை, கருத்துள் வைப்பாம் - மனத்தில் இருத்துவோம், (யாம்) எ-று.

இதுவுமது.

திருமகளுமண்மகளுஞ்செய்யவிடைத்தாய்மகளுஞ்செழுந்தார்சூடித்
தருமகளும்புடைவிளங்கவநந்தகருடன்சேனைத்தலைவர்போற்ற
வருமறைதேர்பதின்மர்தமிழாலரையர்திருவரங்கத்தமுதரேத்த
மருமலர்தூயமரருமன்பருமபணியுமரங்கர்பதம்வணங்குவோமே. (கசு)

(இ-ள்.) திருமகளும் - பெரிய பிராட்டியும், மண்மகளும் - பூமி பிராட்டியும், செய்ய - செவ்விய, இடைத்தாய்மகளும் - நப்பின்னைப் பிராட்டியும், செழு - செழுமையாகிய, தார் - பூமாலையை, சூடித்தருமகளும் - சூடிக்கொடுத்த நாய்ச்சியாரும், புடைவிளங்க - பக்கங்களில்பிரகாசிக்கவும், அநந்த கருடன் சேனைத்தலைவர் - ஸ்ரீமத நந்தகருட விஷ்வக்ஸேநர்கள், போற்ற - வணங்கவும், அரு - அருமையாகிய, மறை - வேதங்களை, தேர் - ஆராய்ந்தறிந்த, பதின்மர் - பதின்மராழ்வார்கள் அருளிச்செய்த, தமிழால் - தமிழ்ப்பாசுரங்களைக் கொண்டு, அரையர் - அரையரும், திருவரங்கத்தமுதர் - திருவரங்கத் தமுதனாரும், ஏத்த - துதிசெய்யவும், மரு - பரிமளமுள்ள, மலர் தூய் - புஷ்பங்களைச் சொரிந்து, அமரரும் - தேவர்களும், அன்பரும் - அடியார்களும், பணியும் - வணங்குகின்ற, அரங்கர் - ரங்கநாயகருடைய, பதம் - திருவடியை, வணங்குவோம் - தொழுவோம், (யாம்) எ-று.

## திருவநந்தாழ்வான் துதி.

வேறு.

தரங்கநெடுங்கடற்புவியைமணிப்பணைமேற்சுமந்தும்
தண்பதுமத்திருமாற்குத்திருச்சயனமாயும்
பெருங்கருணையிலக்குவனாய்ப்பலராமனாயும்
பெரும்பூதூர்விளங்கிடவெம்பெருமானாராயும்



உரங்குலவுமணவாளமாமுனியாகியுமிவ்
வுலகர்வினைத்திமிரமறமுண்மைபலவிரித்தோன்
பரங்குலவுநித்தியசூரியர்களுடன்வாழ்வோன்
பன்னுதிருவநந்தாழ்வான்பதயுகளம்பணிவாம். (௰௭)

(இ-ள்.) தரங்கம் - அலைகளோடுகூடிய, நெடு கடல் - நெடிய கடலாற் சூழப்பட்ட, புவியை - பூமியை, மணி - மாணிக்கத்தையுடைய, பணம் மேல் - படத்தின்மேல், சுமந்தும் - தாங்கியும், தண் - குளிர்ச்சியாகிய, பதுமம் - தாமரைமலரில் வாசஞ்செய்வளாகிற, திரு - லக்ஷ்மீ சமேதனான, மாற்கு - ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு, திருசயநம் ஆயும் - திவ்யபர்யங்கமாகியும், பெருகருணை - பெரிய தயையுள்ள, இலக்குவன் ஆய் - இளைய பெருமாளாகி, பலராமன் ஆயும் - நம்பிமூத்தபிரானாகியும், பெரும்பூதூர் விளங்கிட - ஸ்ரீபூதபுரியானது பிரகாசிக்கும்படி, எம்பெருமானார் ஆயும் - ஸ்ரீ பாஷ்யகாரராகியும், உரம் குலவும் - ஊக்கம் விளங்குதற்கிடமான, மணவாளமாமுனி ஆகியும் - ஸ்ரீமத் வரவர முனிகளாகியும், இ உலகர் - இந்த லோகத்தாருடைய, வினை திமிரம் அறும் - பாபமாகிய அந்தகாரம் அறுதற் கேதுவாகிய, பல உண்மை - அநேக மெய்ப்பொருள்களை, விரித்தோன் - விஸ்தாரமாக அருளிச்செய்தவன், பரம் குலவும் - மேன்மையோடு கூடி விளங்குகிற, நித்திய சூரியர்களுடன் வாழ்வோன் - நித்திய சூரிகளோடு கூடி வாழ்பவனாகிய, பன்னு - யாவரும் புகழ்தற்குரிய, திருவநந்தாழ்வான் - திருவநந்தாழ்வானுடைய, பதயுகளம் - ஸ்ரீபாதத்வந்த்வத்தை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## பெரியதிருவடி துதி.

சங்கருடணமிசமாய்விநதைவயிற்றுதித்தோன்
சதிர்மாறன்விழியறுத்தோனெம்பாருமானோன்
மங்கையுருத்திரைசுகீர்த்திமணந்தோன்பஞ்ச
மருத்துவருக்கிட்டதேவதையானோனமுதம்
தங்குகடங்கொணர்ந்திடவிந்திரன்பொருதுகுலிசத்
தழும்பிருந்தபெருந்தோளான்மங்காகணியாள்
மன்னரக்கர்விடுநாகபாசமறுத்தெழின்மால்
மகிழ்கருடனும்பெரியதிருவடிதாள்பணிவாம். (௰௮)

(இ-ள்.) சங்கருடணமிசமாய் - சங்கர்ஷணாம்சமாய், விநதை வயிற்று உதித்தோன் - விநதையின் கர்ப்பத்தில் அவதரித்தவனும், சதிர்மாறன் விழி அறுத்தோன் - சதுரப்பாட்டையுடைய பாண்டியனது சக்கத்தையறுத்து விழுத்தினவனும், எம்பாரும் ஆனோன் - ஸ்ரீஎம்பாருமானவனும், மங்கை - மங்கைப் பருவத்தையுடைய, உருத்திரை - உருத்திரையையும், சுகீர்த்தியை - சுகீர்த்தியையும், மணந்தோன் - மணம் புணர்ந்தவனும், பஞ்ச

மருத்துவருக்கு - பஞ்ச மருத்துவர்களுக்கு, இட்ட தேவதை ஆனோன் - இஷ்ட தேவதை யானவனும், அமுதம் தங்குடம் - அமிர்த கலசத்தைக், கொணர்ந்திட - கொண்டுவரும் பொருட்டாக, இந்திரன் பொருது - இந்திரன் போர்செய் தண்டாக்கிப், குலிசந் தழும்பு இருந்த - வஜ்ராயுதத்தின் சுவடு தங்கிய, பெருந்தோளான் - பெரிய புஜங்களையுடையவனும், தக்க நாக அணியான் - தகுதியாகிய சர்ப்பாபரணத்தையுடையவனும், மங்கு - அழியு மியற்கையுள்ள, அரக்கர் - ராக்ஷஸர், விடு - விட்ட, நாகபாசம் அறுத்து - நாகபாசத்தைச் சேதித்து, எழில் மால் - (அதனால்) அழகிய திருமாலானவர், மகிழ் - மகிழச்செய்த, கருடன் ஆம் - கருடன் என்கிற, பெரிய திருவடி - பெரிய திருவடியின், தாள் - ஸ்ரீபாதங்களை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## சிறிய திருவடி துதி.

அலைகடலைக்கடந்திலங்கணியையுதைத்துச்சீர்
ஆழிசானகிக்களித்தசோகவனமழித்தும்
கொலையரக்கரட்சயனைக்கொன்றுராவணனைக்
குறுகிநெடுவாலனலாலிலங்கையெலாஞ்சுட்டும்
விலையருஞ்சூடாமணிகைக்கொண்டிராகவன்பால்
மேவியுயிர்ச்சஞ்சீவிமலைகொணர்ந்தும்பரதன்
நிலையறிந்துசொலமகிழ்ந்தென்றுடனுனைவாவென்றே
நெடியோன்சொற்சிறுவடிமாருதிபதங்கள்பணிவாம். (௰எ)

(இ-ள்.) அலை - அசைகின்ற, கடலை - சமுத்திரத்தை, கடந்தும் - தாண்டியும், இலங்கணியை உதைத்தும் - இலங்கணியைக் கொன்றும், சீர் - சிறப்பமைந்த, ஆழி - மோதிரத்தை, சானகிக்கு அளித்து - ஜாநகிக்குக் கொடுத்து, அசோகவனம் அழித்தும் - அசோகவனத்தை நிர்மூலமாக்கியும், கொலை - கொலைத்தொழிலையுடைய, அரக்கர் - ராக்ஷஸரையும், அட்சயனை - அக்ஷகுமாரனையும், கொன்றும் - வதைத்தும், இராவணனை - ராவணனை, குறுகி - சேர்ந்து, நெடுவால் அனலால் - நெடியவால் நெருப்பினால், இலங்கையெலாம் சுட்டும் - இலங்கை முழுமையும் எரித்தும், விலை அரு - விலை மதித்தற்கரிய, சூடாமணி - சிகாமணியை, கைக்கொண்டு - வாங்கி, இராகவன்பால் மேவி - ஸ்ரீராமபிரானிடத்திற் சேர்ந்து, உயிர்ச் சஞ்சீவி மலை கொணர்ந்தும் - உயிரைக் கொடுக்கிற சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வந்தும், பரதன் நிலை அறிந்து - ஸ்ரீபரதாழ்வானது நிலைமையை யுணர்ந்து, சொல்ல - சொல்லுகையால், நெடியோன் - ஸ்ரீராமபிரான், மகிழ்ந்து - சந்தோஷித்து, என்றுடன் - என்றேனும் உன்னைவா என்றுசொல் - உன்னை வருவாயென்று சொல்லப்பெற்ற, சிறு அடி - சிறிய திருவடியென்று சொல்லப்படுகிற, மாருதி - வாயுகுமாரராகிய ஆஞ்சநேயருடைய, பதங்கள் - திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.



## பொய்கைபூதன்பேயார் துதி.

மெய்யனரங்கன்கரத்திற்சங்குகதைவாளே
வியன்கச்சிமல்லைமயிலையிற்றடங்காவாவி
தூய்யசெந்தாமரைகுருந்தஞ்செங்குமுதமலரிற்
றுவாபரத்தெண்ணூற்றுப்பதாயிரத்தொண்டதிறா
றெய்துசித்தார்த்தியிற்றுலாமாதமதிலோண
மெழிற்குசனட்டமிநாண்மூன்றேமுறையுதித்தே
வையமன்புதிருமூன்றாலிடைகழியிற்பாடி
மகிழ்பொய்கைபூதன்பேயார்பதங்கள்பணிவாம். (௰அ)

(இ-ள்.) மெய்யன் அரங்கன் - மெய்ப்பொருளாகிய திருவரங்கனது, கரத்தில் - திருக்கையிலுள்ள, சங்கு கதை வாளே - சங்கமும் தண்டமும் நாந்தகமும் ஆகிய இவைகளே, வியன் - பெருமையமைந்த, கச்சி - திருக்கச்சியிலும், மல்லை - திருக்கடன்மல்லையிலும், மயிலையில் - திருமயிலையிலும் (உள்ள). தடம் - தடத்திலும், கா - சோலையிலும், வாவி - கிணற்றிலும், (உள்ள) தூய்ய செந்தாமரை (மலரில்) - பரிசுத்தமாகிய செந்தாமரைப் பூவினிடத்தும், குருந்த (மலரில்) - குருந்த மலரினிடத்தும், செங்குமுதமலரில் - செவ்வல்லி மலரினிடத்தும், துவாபரம் - துவாபரயுகத்தில், எண்ணூற்றுப்பதாயிரத்து ஒன்பதினாறு - எட்டுலக்ஷத்துத்தொண்ணூறாயிரத்துத் தொளாயிரமாக, எய்து - பொருந்திய, சித்தார்த்தியில் - சித்தார்த்தி வருடத்தில், துலாமாதமதில் - ஐப்பசி மாதத்தில், ஓணம் - திருவோணநக்ஷத்திரம், எழில்குசன் - அழகிய மங்கள வாரம், அட்டமி - சுக்லபக்ஷத்து அஷ்டமி திதி, நாள் மூன்று ஏ முறை உதித்து - மூன்றுநாள் கழிய முறையே அவதரித்து, வையம் அன்பு திருமூன்றால் - வையம், அன்பு, திரு, என்பவற்றை முதற்குறிப்பாகவுடைய முந்நூறு பாசுரங்களையும், இடைகழியில்பாடி - இடைகழியிற் சேர்ந்துபாடி, மகிழ் - மகிழ்ந்த, பொய்கை பூதன் பேயார் பதங்கள் - பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்னு மூவருடைய திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

வையம் என்றாரம்பிக்கப்பட்டது முதற்றிருவந்தாதி, அன்பு என்றாரம்பிக்கப்பட்டது இரண்டாந்திருவந்தாதி, திருஎன்றாரம்பிக்கப்பட்டது மூன்றாந் திருவந்தாதி * எட்டுலக்ஷத்து அறுபத்தீராயிரத்துத் தொளாயிரத் தொன்று என்று குருபரம்பராப்ரபாவ வசநத்திற்காணப்படுகின்றது.

## திருமழிசைப்பிரான் துதி.

பொன்னரங்கன்றிகிரியதாம்மழிசையிற்பார்க்கவர்க்குப்
புத்திரராய்த்துவாபரத்தைமகந்தலர்த்துதித்து
புன்னிலைச்சன்மதநீத்துப்பெயராசொற்சேர்ந்து
பூவிலாயனான்முகனென்றிருநாற்றாட்டதிறு

நன்றுதமிழ்ப்பரந்தாமனேபரமென்றோதி
யுயர்சேனைமன்னடிதாழ்ந்தியோகமதுசெய்தருஞ்
சொன்னவண்ணஞ்செய்தபிரான்றனையாராதிக்குந்
தொன்மழிசையாழ்வாரைத்தொழுதுவினைகளைவாம். (௧௯)

(இ-ள்.) பொன்னரங்கன் றிகிரியதாய் - பொன்னரங்கனது திருவாழி யமிசமாய், மழிசையில் - திருமழிசையில், பார்க்கவர்க்கு - பார்க்கவ முனிவர்க்கு, புத்திரனாய் - புதல்வராகி, துவாபரம் - துவாபரயுகத்தில், தைமகம் - தைமாதம் மக நக்ஷத்திரம், துலாத்து - துலாலக்கினத்தில், உதித்து - அவதரித்து, புல்லிலை - அற்ப நிலைகளையுடைய, சன்மதம் நீத்து - அறுசமயக்கொள்கையும் விட்டு, பெயரா - நிலைபெயராதனவாகிய, சொல்தேர்ந்து - சொற்களையாராய்ந்து தெளிந்து, பூநிலாய் நான்முகன் என்று - பூநிலாய் என்றும் நான்முகன் என்றும் ஆரம்பித்து, இருநூற்றுப்பதினறு - இருநூற்றுப்பதினாறு பாடலாக, உன்னும் - யாவரும் நினைத்தற்குரிய, தமிழ் - (திருச்சந்தவிருத்தம் நான்முகன் திருவந்தாதி என்னும்) தமிழ்ப் பிரபந்தங்களை, பரந்தாமனே பரம் என்று ஓதி - பரந்தாமனே பரம்பொருளென்று நிருபித்துச்சொல்லி, உயர் - உயர்ந்த, சேனைமன் அடிதாழ்ந்து - சேனைத்தலைவரது திருவடியை வணங்கி, யோகமதுசெய்து - யோகம்பண்ணி, சொன்னவண்ணம் செய்த பிரான் தன்னை ஆராதிக்கும் - யதோக்தகாரியைத் திருவாராதனஞ் செய்கின்ற, தொல் - அநாதியாகிய, மழிசையாழ்வாரை - திரு மழிசைப்பிரானை, தொழுது - வணங்கி, வினை - எமது வினைகளை, களைவாம் - நிர்மூலமாக்குவோம், (யாம்) எ-று.

## நம்மாழ்வார் துதி.

திருவரங்கன்சேனைமன்னனவதாரமாய்க்குருகூர்த்
திகழ்காரிமாறனில்லாளுடையநங்கையுதரம்
மருவிநிகழ்கலியுகநாற்பத்துமூன்றாநாள்
வைகாசிவிசாகவெள்ளிகடகமிதிலுதித்தே
பொருவிலுயர்பிரபந்தம்நான்குமறைநான்காய்ப்
பொய்கின்றசெக்கர்முயற்றுயர்வறவென்றிதிற்பாப்
பெருகுசுவைபன்னிருநூற்றுத்தொண்ணூற்றாறும்
பேசுதிருவாய்மொழிப்பராங்குசனைத்தொழுவாம். (௨௰)

(இ-ள்.) திருவரங்கன் சேனைமன்னன் அவதாரமாய் - திருவரங்கன் சேனைத்தலைவரது அவதாரமாகி, குருகூர் - திருக்குருகூரில், திகழ் - விளங்குகின்ற, காரிமாறன் - காரிமாறனுக்கு, இல்லாள் - மனைவியாகிய, உடைய நங்கை - உடைய நங்கையின், உதரம் மருவி - கர்ப்பத்திற் பொருந்தி, நிகழ் - நிகழாநின்ற, கலியுகம் - கலியுகத்தொடக்கத்தி, நாற்பத்துமூன்றாம் நாள் - நாற்பத்துமூன்றாம் தினமாகிய, வைகாசி விசாக வெள்ளி - வைகாசி மாச விசாக நக்ஷத்திரமாகிய சுக்கிரவாரம், கடகம் - கடகலக்கினம் என்கிற,



இதில் - இந்தச் சுபதினத்தில், உதித்து - அவதரித்து, பொருவுஇல் - ஒப்பில்லாத, உயர் - உயர்ந்த, பிரபந்தம் நான்கும் - நான்கு பிரபந்தங்களும், மறை நான்கு ஆய் - நான்கு வேதங்களாக, பொய்கின்ற செக்கர் முயற்று உயர்வற என்ற இதின்பா - பொய்கின்ற செக்கர் முயற்று உயர்வற என்னும் இச்சொற்களாலாரம்பிக்கப்பட்ட பாசுரங்கள், பெருகு சுவை - மிக்க சுவையுள்ள, பன்னிருநூற்றுத் தொண்ணூற்றாறும், - ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றாறையும், பேசு - சொல்லியருளிய, திருவாய்மொழி - திருவாய்மொழியையுடைய, பராங்குசனைத் தொழுவாம் - நம்மாழ்வாரைப் பணிவோம், (யாம்) எ-று.

## குலசேகராழ்வார் துதி.

சீதரனார்மணிக்கலையாய்த்திருவஞ்சிக்களத்தி
லிடவிரதவரையன்மகவாய்க்கலியின்முதற்கான்
மாதகும்பப்புனர்பூசத்துதித்தரங்கமணித்தூண்
வடமலையிற்படியானேன்சேனையர்கோனடியோன்
சீதிருவாராதனஞ்சீராமர்தனோட்புரிவோன்
செந்தமிழ்ப்பாவிருளிரியச்சுடர்மணிநூற்றைந்தோ
டுதனடியவர்க்காகப்பணிக்குடங்கையிட்ட
நங்கள்குலசேகரன்றாட்பங்கயமேபணிவாம். (௨௧)

(இ-ள்.) சீதரனார் மணிக்கலை ஆய் - திருமாலினது கௌஸ்துபாம்சமாய், திரு வஞ்சிக்களத்தில் - திரு வஞ்சிக்களம் என்னு மூரில், இடவிரத அரையன் மகவு ஆய் - இடவிரதன் என்னும் வேந்தனுக்குப்புத்திரனாகி, கலியின் முதற்கால் - கலியுகத்தின் முதற்பாதத்தில், மாதகும்பப் புனர்பூசத்து உதித்து - மாசிமாதப் புனர்பூசத்தில் அவதரித்து, அரங்கம் - திருவரங்கத்தில், மணித்தூண் - மணித்தூணும், வடமலையில் - திருவேங்கட மலையின்மேல், படி - படியும், ஆனேன் - ஆனவனும், சேனையர்கோன் அடியோன் - சேனைத்தலைவரது அடியவனும், சீராமர்தனை - ஸ்ரீராமபிரானை, சீதிருவாராதனம் புரிவோன் - ஸ்ரீதிருவாராதனஞ் செய்வோனும், இருளிரியச் சுடர்மணி - இருளிரியச் சுடர்மணி என்னுந் தொடக்கத்தையுடைய, செந்தமிழ்பா நூற்றைந்தோடு - செந்தமிழ்ப் பாடல்கள் நூற்றைந்தினையும் அருளிச்செய்தவனும், நாதன் அடியவர்க்காக - சர்வேசுவரனுடைய அடியார்களுக்காக, பணிக்குடம் - பாம்புக்குடத்தில், கையிட்ட - கைவைத்த, நங்கள் - எமக்குத்தலைவரான, குலசேகரன் - குலசேகராழ்வாருடைய, தாள் பங்கயம் பணிவாம் - திருவடித் தாமரைகளை வணங்குவோம் (யாம்) எ-று.

## பெரியாழ்வார் துதி.

வயிநதேயன் கலையாய்த் திருவில்லிபுத்தூர்
மறையுணர்ந்த வேயர்குலம் விளங்க விளக்கொளி போற்
பயில்கலி முற்பாத மிதுனச் சோதி யுதித்தான்
பரன் சேனை மன்னடி தாழ்ந்து இலக்குமி நாரணனைச்
செயுந் திருவாராதனத்தா னந்தவனமாலைத்
திருப்பணியான் கிழியறுக்க மால்பரம் பல்லாண்டு
மியம்பு வண்ணமாடமுமா நானூற்றெழுபத் தொருமூன்
றேற்று விண்டுசித்தன் மலரிணையடிகள் தொழுவாம். (உஉ)

(இ-ள்.) வயிநதேயன்கலை ஆய் - கருடாம்சமாகி, திருவில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூரில், மறை உணர்ந்த - வேதங்களையறிந்த, வேயர்குலம் விளங்க - வேயர்குலம் பிரகாசிக்க, விளக்கொளிபோல் - விளக்கொளியையொத்து, பயில்கலி - நிகழ்கின்ற கலியுகத்தில், முற்பாதம் - முதற்பாதத்தில், மிது னச்சோதி உதித்தான் - ஆனிமாதம் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் அவதரித்தவனும், பரன் சேனைமன் அடிதாழ்ந்து - பரமனது சேநா நாதனுடைய திருவடிகளை வணங்கி, இலக்குமி நாரணனை - லக்ஷ்மீ நாராயணனை, செய்யும் திருவாராதநத்தான் - திருவாராதநம் பண்ணுவோனும், நந்தவநம்மாலை திருப்பணியான் - நந்தவநத் திருமாலைக் கைங்கரியத்தையுடையவனும், கிழி அறுக்க - கிழியறுக்கும்பொருட்டு, மால்பரம் - திரு மால்பரம் என்று, பல்லாண்டும் - திருப்பல்லாண்டும், இயம்பு வண்ணமாடமும் - சொல்லப்படுகிற வண்ணமாடமும் ஆகிய, நானூற்றெழுபத் தொருமூன்று - நானூற்றெழுபத்து மூன்று பாடல்களையும், ஏற்று - பிரசித்திக்குக் கொண்டுவந்த, விண்டுசித்தன் - பெரியாழ்வாருடைய, மலர் - தாமரைமலர்போன்ற, இணை அடிகள் - இரண்டு திருவடிகளையும், தொழுவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## தொண்டரடிப் பொடியாழ்வார் துதி.

அரங்கனணிவனமாலாம்சமாய்ச்சோணாட்டி
லணிமண்டங்குடிமறையோன்வேதவிசாரதன்செய்
பெருந்தவத்திற்கலிமுதற்கார்த்தனுக்கேட்டையுதித்தோன்
பிரமசரியாய்ச்சேனைமுதலியையாசரித்தோன்
பரங்கருணைத்திருமாலேதிரந்தெளிமினென்று
பாடுகதிரவன்காவற்பாவைம்பத்தைந்தோன்
துரங்கமாலரங்கனிதிக்கின்னமைதப்பெற்ற
தொண்டரடிப்பொடியார்தந்தொண்டரடிபணிவாம். (உங)



(இ-ள்.) அரங்கன் - திருவரங்கன், அணி - தரிக்கிற, வனமாலாம்சமாய் - வநமாலாம்சமாய், சோணாட்டில் - சோழதேசத்தில், அணி மண்டங்குடி - திரு மண்டங்குடியில் வாழ்கின்ற, மறையோன் - வேதியனாகிய, வேத விசாரதன்செய் - வேத விசாரதன் செய்த, பெரு தவத்தில் - மஹா தபஸ்ஸினால், கலிமுதற்கால் - கலியுகத்தின் முதற்பாதத்தில், தநுகேட்டை - தநுர்மாசம் கேட்டை நக்ஷத்திரத்தில், உதித்தோன் - அவதரித்தவனும், பிரமசரியாய் - பிரமசரிய விரதத்தை மேற்கொண்டவனாய், சேனைமுதலியை ஆசரித்தோன் - சேனைத்தலைவனை ஆச்ரயித்தவனும், கருணைத் திருமாலே - கருணையையுடைய திருமாலே, பரம் - பரம்பொருள், திரம் - இது திரமாம், தெளிமின் - (இதில் ஐயப்படாமல்) தெளியுங்கள், என்று - என்றுரைத்துச் சொல்லி, பாடு - பாடிய, கதிரவன் காவல் - கதிரவன் காவல் என்பவைகளை முதல்மொழிகளாகவுடைய, பா - பாசுரங்கள், ஐம்பத்தைந்தோன் - ஐம்பத்தைந்தையுஞ் செய்தருளினவனும், துரங்கமால் - ஹயக்ரீவாவதாரஞ்செய்தருளிய திருமாலாகிய, அரங்கன் - திருவரங்கனது, நிதிக்கின்னமைதப் பெற்ற - பொன்வட்டிலைக் கவர்ந்த, தொண்டரடிப் பொடியார்தம் - தொண்டரடிப் பொடியாழ்வாருடைய, தொண்டர் - அடியார்களுடைய, அடி - திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## திருப்பாணாழ்வார் துதி.

கமலமறுவமிசமதாய்க்கலிமுதற்கார்த்தி
கைமிலுரோகணிசோணாட்டுறையூர்த்தண்வயலில்
விமலசெந்நெற்கதிரிலுதித்தரங்கனைத்தியாக
மேவியவன்விடுமுனிவன்றோண்மிசைச்சென்றுருபத்
தமலனாதிப்பிரானென்றெடுத்தரங்கனைவ
அமுதனைக்கண்டகண்கண்மற்றொன்றினைக்காணா
விமையுமெனப்பாடியமுன்னரங்கர்செழுங்கனிபோ
லெடுத்தருந்துந்திருப்பாணரடித்துணையேபணிவாம். (உச)

(இ-ள்.) கமலமறு அமிசமதாய் - ஸ்ரீவத்ஸாம்சமாய், கலிமுதற்கால் - கலியுகத்தின் முதற்பாதத்தில், கார்த்திகையில் - கார்த்திகை மாசத்தில், உரோகணி - ரோஹிணீ நக்ஷத்ரத்தில், சோணாட்டு - சோழதேசத்தில், உறையூர் - திருவுறந்தையில், தண் வயலில் - குளிர்ச்சிபொருந்திய வயலில், விமலம் - பரிசுத்தமான, செந்நெற்கதிரில் உதித்து - செந்நெற்கதிரில் அவதரித்து, அரங்கனைத் தியானம் மேவி - திரு வரங்கனைத் தியானித்தற்றொழிலில் பொருந்தி, அவன் விடு - அவனேவப்பின, முனிவன் - லோகசாரங்க மஹா முனிவனது, தோண்மிசைச் சென்று - தோளின் மீதேறிப்போய், அமலனாதிப்பிரான் என்று எடுத்து - அமலனாதிப்பிரான் என்று தொடங்கி, ஒருபத்து - ஒருபது பாசுரம், அமுதனைக்கண்டகண்கள் மற்றொன்

திருக்காணு - அழகினைச்சேவித்த கண்கள் வேறொருபொருளைப் பாரா, இமையுமன்ன - இமையளவுமன்று, பாடிய - பாடியருளின, முன், முற்காலத்தில், அரங்கர் - திருவரங்கர், செழுங்கனிபோல் - செழுமையாகியபழம்போல, எடுத்த அருந்தும் - எடுத்துவிழுங்கின, திருப்பாணர் - திருப்பாணாழ்வாருடைய, அடித்துணையே - திருவடியிரண்டையுமே, பணிவாம் - வணங்குவோம் (யாம்) எ-று.

## ஆண்டாள் அதி.

நிலமடந்தைகலையாகவில்லிபுத்தூராழ்வார்
நெடியநந்தவனந்தனிற்பைந்துளவினடிதனிலே
கலிமுதல்காலவருமாடிப்பூரமதிலுதித்தாள்
கண்ணனையேதிருவாராதனம்புரிவாளன்றேன்
உலவுதிருப்பதிநூற்றெட்டிலுமுடனிருப்பாள்
ஒண்டமிழ்மார்கழிதைநூற்றெழுபதின்மூன்றுரைத்தாள்
குலவுமலர்மாலையரங்கருக்குமுன்சூடிக்
கொடுத்தாளெந்தமைத்தடுத்தாள்கோதைபதம்பணிவாம் (உரு)

(இ-ள்.) நிலமகள் தன்கலையாக - பூதேவியின் அம்சமாக, வில்லிபுத்தூர் ஆழ்வார், பெரியாழ்வாரது, நெடிய நந்தவனம் தனில் - பெரிய நந்தவனத்தின் கண், பைந்துளவின் அடிதனிலே - பசிய துழாயின் மூலத்தில், கலிமுதற்கால் - கலியுகத்தின் முதற்பாதத்தில், வரும் - உண்டாகிய, ஆடிப்பூரமதில் உதித்தாள் - திருவாடிப்பூரத்தில் அவதரித்தவளும், கண்ணனையே திருவாராதனம் புரிவாள் - கண்ணபிரானையே திருவாராதனம்செய்பவளும், அன்றேன், அந்தக்கண்ணபிரான், உலவு - நித்யவாசம்பண்ணுகிற, திருப்பதிநூற்றெட்டிலும் - நூற்றெட்டுத் திருப்பதிகளிலும், அங்கு உடன் இருப்பாள் - அவ்வோவிடங்களிற் சேர்ந்திருப்பவளும், ஒண் தமிழ் - ஒட்பமாகிய தமிழ்ப்பாசுரங்கள், மார்கழிதை - மார்கழி தை என்று தொடங்கி, நூற்றெழுபதின் மூன்று உரைத்தாள் - நூற்றெழுபத்துமூன்றையும் அருளிச்செய்தவளும், குலவும், விளங்குகின்ற, மலர்மாலை - பூமாலையை, தான்முன்சூடி - தான் முன்னே தரித்து, (பிறகு களைந்து) அரங்கருக்கு கொடுத்தாள் - ரங்கநாதருக்குக் கொடுத்தவளும் ஆகி, எந்தமை - எம்மை, தடுத்து ஆள் - தடுத்தாண்டருள்கிற, கோதை - ஆண்டாளுடைய, பதம் - திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## திருமங்கைமன்னன் அதி.

சாரங்கவம்சமதாய்க்குறையல்கலிமுதற்கால்
தருந்துலாக்கார்த்திகைநாட்சதுர்வருணத்துதித்தே
நீரின்கனிழலின்கண்மறையமைச்சரெட்டோ
னீள்குமுதவல்லிகொண்கனரங்கர்திருப்பணியோன்



வாரங்கொள்மனக்கினியார்மந்திரமளிப்ப
வாடிநிதியின்னொருகார்மன்னெனவாறங்கஞ்
சேருந்தண்டமிட்பதின்மூன்னூற்றறுபத்தொன்றோன்
திருமங்கைமன்னவன்சேவடிபணிந்துவாழ்வாம் (உசு)

(இ-ள்.) சாரங்க அம்சமதாய் - சார்ங்கத்தின் அம்சமாய், குறையல் - திருக்குறையலூரில், கலிமுதற்கால் - கலியுகத்தின் முதற்பாதத்தில், தரும் - தக்க, தேளில் - விருச்சிகமாசத்தில், கார்த்திகைநாள் - கார்த்திகை நக்ஷத்ரத்தில், சதுர்வருணத்து - நான்காம் வருணத்தில், உதித்தோன் - அவதரித்தவனும், நீரின்கண் நிழலின்கண் மறை - நீரினிடத்தும் நிழலினிடத்தும் மறைகின்ற, அமைச்சர் நால்வோன் - நான்கு மந்திரிகளையுடையவனும், நீள் குமுதவல்லி, கொண்கன் - பெரிய குமுதவல்லியுடையானும், அரங்கர் - திருவரங்கரது, திருப்பணியோன் - கைங்கர்யத்தையுடையவனும், வாரம் கொள் - அன்பு கொண்ட, மனக்கினியார் - மனதுக்கினியாராகிய ஸ்ரீயப்பதியானவர், மந்திரம் அளிப்ப - திருமந்திரத்தைப்ரஸாதிக்க, வாடிநிதியின்ஒருகார்மன் என - வாடி, நிதி, மின், ஒரு, கார், மன், என்று தொடங்கப்பெற்ற, ஆறு அங்கம் சேரும் - ஆறு அங்கங்களும் சேர்ந்த, தண் தமிழ் - தண்டமிழ்வேதத்தை, பதின்மூன்னூற்றறுபத்தொன்றோன் - ஆயிரத்துமுந்நூற்றறுபத்தொருபாசுரங்களாயருளிச்செய்தவனுமாகிய, திருமங்கைமன்னவன் - திருமங்கை மன்னனது, சேவடி - திருவடிகளை, பணிந்து - வணங்கி, வாழ்வாம் - வாழ்வோம் (யாம்) எ-று.

## மதுரகவியாழ்வார் அதி.

மாயவன்கருடாம்சமாய்த்தாமிரவர்ணியிலே
வண்கோளூர்ப்பின்குடிமிமறையோர்தம்மரபில்
மேயதுவாபரமேடச்சித்திரைநாளுதித்தோன்
மெய்க்குருநாராயணராம்பதரிகாச்சிரமத்தில்
தூயயோகஞ்செயுநாட்டென்றிசையிலுதித்துத்
தோன்றுசுடர்வழியாகக்குருகையின்மாறனைக்கண்
டாயிரஞ்செந்தமிட்பன்னொன்றாய்க்கணிநுண்சிறுத்தாம
பருண்மதுரகவிப்பெருமான்றிருவடிகள்பணிவாம். [உஎ]

(இ-ள்.) மாயவன் கருடாம்சம் ஆய் - திருமாலின் குமுதகணேசாம்சமாய், தாமிரவர்ணியிலே - தாம்ரபர்ணிதீரத்திலே, வண்கோளூர் - வளப்பமுள்ள திருக்கோளூரிலே, பின் குடுமி மறையோர் தம்மரபில் - பின் குடுமியுள்ள வேதியர் மரபிலே, மேய - பொருந்திய, துவாபரம் - துவாபரயுகத்தில், மேட சித்திரைநாள் - சித்திரைமாசச் சித்திரை நக்ஷத்ரத்திலே, உதித்தோன் -

அவதரித்தவனும், மெய்க்குரு - உண்மை யாசாரியராகிய, நாராயணரால் - நாராயணராலே, பதரியாச்சிரமத்தில் - ஸ்ரீபதரிகாஸ்ரமத்திலே, தூயயோகம் செய்யும் நாள் - பரிசுத்தமான யோகஞ்செய்யுங்காலத்தில், தென்திசையில் உதித்து தோன்று - தென்றிசையின்கண் உதயமாகிக்காணப்பட்ட, கடர்வழியாக - சோதியின் மூலமாக வந்து, குருகையில் - திருக்குருகூரில், மாறனைக் கண்டு - நம்மாழ்வாரைக்கண்டு, ஆயிரம் செந்தமிழ் - ஆயிரஞ்செந்தமிழ்ப் பாசுரங்களோடு, பன்னொன்று ஆய் - பதினொன்றாக, கண்ணிநுண் சிறுத்தாம்பு - கண்ணிநுண் சிறுத்தாம்பை, அருள் - அருளிச்செய்த, மதுரகவிப்பெருமான் - ஸ்ரீமதுர கவியாழ்வாருடைய, திருவடிகள் பணிவாம் - திருவடிகளைத் தொழுவோம், (யாம்) எ-று.

## ஸ்ரீமந்நாதமுநிகள் துதி.

வீறுயர்சேனையர்கோன்மந்திரக்கயாமிசமாய்
வியன்கலிமுற்காலானியனுடஞ்சோணாட்டில்
கூறரியவீரநாரணபுரத்திற்சொட்டைக்
குலம்புகழீசரபட்டர்குழவியதாயுதித்து
மாறனைத்தேர்ந்திடுமூன்றிரகசியங்களளித்தோன்
மதுரகவியாற்குருகைமன்னனையாராதித்
தாறிருவர்பிரபந்தமறுநான்கிற்றமிழ்நா
லாயிரமிங்கருணாதமுனிகளடிபணிவாம் (உஎ)

(இ-ள்.) வீறு உயர் - மேன்மையாலுயர்ந்த, சேனையர்கோன் - சேனைத் தலைவரது, மந்திரக்கயாமிசமாய் - திருவுளப்படிகஜாநநாம்சமாய், வியன் - பெரிய, கலிமுற்கால் - கலியுகத்தின் முதற்பாதத்தில், ஆனி அநுடம் - ஆனிமாசம் அநுஷ நக்ஷத்திரத்தில், சோணாட்டில் - சோழதேசத்தில், கூறு அரிய - பெருமைசொல்லுத லருமையாகிய, வீரநாரணபுரத்தில் - வீரநாராயணபுரத்தில், சொட்டைக்குலம் - சொட்டைக்குலத்தில், புகழ் - புகழ்பெற்ற, ஈசரபட்டர் குழவியதாய் உதித்து - ஈசுரபட்டர்க்குப் புத்திரராயவதரித்து, மால்தனைத்தேர்ந்திடும், - திருமாலையாராய்ந்தறிதற்குரிய, மூன்று ரகசியங்கள் அளித்தோன் - ரஹஸ்யத்ரயத்தை யருளிச்செய்தவனும், மதுரகவியால் - ஸ்ரீமதுரகவிகளருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பைக்கொண்டு, குருகை மன்னனை ஆராதித்து - நம்மாழ்வாரைத் திருவாராதநம்பண்ணி, ஆறு இருவர் - ஆழ்வார்கள் பன்னிருவருடைய, பிரபந்தம் - பிரபந்தங்களாகிய, அறு நான்கில் - இருபத்துநான்கனுள், தமிழ் நாலாயிரம் - நாலாயிரந் தமிழ்ப் பாசுரங்களையும், இங்கு - இவ்வுலகத்தார்பொருட்டு, அருள் - அருளிச்செய்த, நாதமுநிகள் - ஸ்ரீமந் நாதமுநிகளுடைய, அடி - திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம் (யாம்) எ-று.



## கூரத்தாழ்வான் துதி.

### வேறு.

சீரத்தாழிசெலத்திகிரியுவமைவெளியிடுகெம்
பீரத்தானூரன்பிழைபொறுத்தாளநந்தனவ
தாரத்தான்மாறனடிசமயாரியெதிபதியாள்
கூரத்தாழ்வானுபயகோகநகப்பதம்பணிவாம். [உ௯)

(இ-ள்.) சீரத்தாழி செல் - திருப்பாற்கடலுக்குப் போய்வந்த, அத்திகிரி வளமை - பெருமாள் கோயிலில் அவதரித்த வளமைப்பிள்ளையால், வெளியிடு - வெளியிடப்பட்ட, கெம்பீரத்தான் - மஹிமையையுடையவனும், நாளூரன் - நாளூரானது, பிழை - குற்றத்தை, பொறுத்து ஆள் - பொறுத்தாண்டருளிய, அநந்தன் அவதாரத்தான் - திருவநந்தாழ்வானுடைய அவதாரத்தையுடையவனும், மாறன் அடி - நம்மாழ்வாரது பாதுகாஸ்த்தாநமாயிருப்பவனும், சமயர் அரி - பரசமயக்கோளரியும் ஆகிய, எதிபதி ஆள் - யதிராஜரால் ஆளப்பட்ட, கூரத்தாழ்வான் - திருக்கூரத்தாழ்வானுடைய, உபயம் - இரண்டாகிய, கோகநகம் - தாமரைமலர் போன்ற, பதம் - திருவடிகளை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

## குருபரம்பரைகள், நித்தியசூரிகள், பன்னிருவராழ்வார்கள், பாகவதர்கள் துதி.

### வேறு.

இன்னகுருபரம்பரைகளடிபோற்றிநித்தியசூரிகடாள் போற்றி
பன்னிருவராழ்வார்களுபயபதபங்கயங்கள்பணிந்து போற்றி
இந்நிலத்திற்பரமபாகவதரடியார்க்கடியாரிணைத்தாள் போற்றி
துன்னிதயவிருளறுக்குங் கூரேசவிஜயமிதைச் சொல்லுகேனே [௩௰)

(இ-ள்.) இன்ன - இத்தன்மைத்தாகிய, குரு பரம்பரைகள் - குரு பரம்பரைகளுடைய, அடிபோற்றி - திருவடிகளை வணங்கி, நித்திய சூரிகள் தாள் போற்றி - நித்ய சூரிகளுடைய திருவடிகளைப்பணிந்து, பன்னிருவர் ஆழ்வார்கள் - ஆழ்வார்கள் பன்னிருவருடைய, உபயபத பங்கயங்கள் - இரண்டு பாத தாமரைகளை, பணிந்துபோற்றி - தொழுது அஞ்சலிபண்ணி, இந்நிலத்தில் - இவ்வுலகத்திலுள்ள, பரம பாகவதர் - பரம பாகவதருடைய, அடியார்க்கு

அடியார் - அடியார்க்கடியார்களு, இணைத்தாள்போற்றி - திருவடியிணைகளை வணங்கி, நான் இதயஇருள் அறுக்கும் - மிக்க (எல்லாருடைய) மனத்தின் கண்ணதாகிய அஞ்ஞானாந்தகாரத்தை யழிக்கின்ற, கூரேசவிஜயம் இதை - கூரேசவிஜயமாகிய இந்த நூலை, சொல்லுகேன் - சொல்லாநின்றேன், எ-று.

பொதுப்பாயிரம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். (௯௰)

சிறப்புப்பாயிரம்.

## சேனைமுதலியார் துதி.

ஆனைமுன்வந்தருள்பரனேபர
மேனையோர்பரமன்றென்றியம்பிய
தேனையொத்தவிச்செம்பொருளோதமால்
சேனைமன்னன்திருவடிபோற்றுவாம் (க)

(இ-ள்.) ஆனைமுன்வந்து - கஜேந்த்ராழ்வானுக்கு முன்னே யெழுந்தருளி, அருள் - அவனுக்கு அருள்புரிந்த, பரனே - பரமனே, பரம் - பரம்பொருள், ஏனையோர் - அவனை யொழிந்த மற்றதேவர்கள், பரம் அன்று என்று - பரம்பொருட்டன்மை யுடையரல்லரென்று, இயம்பிய - சொல்லிய, தேனைஒத்த - தேன்போன்ற, இச்செம் பொருள்ஓத - இந்தச்செம்மையாகிய விஷயத்தைக் கூறுதற்கு, மால் - திருமாலின், சேனைமன்னன் - சேநாநாயகராகிய விஷ்வக்ஸேநரது, திருவடி போற்றுவாம் - திருவடிகளை வணங்குவோம் (யாம்) எ-று.

## பஞ்சாயுதங்கள்.

பொங்குசக்கரப்பூபதிசெந்தழல்
தங்குகண்ணரன்றற்பரமென்னமா
லங்குசக்கரத்தால்வெல்பொருட்டரண்
சங்குசக்கரந்தண்டுவில்வாளுமே (உ)

(இ-ள்.) சங்கு சக்கரம் தண்டு வில் வாளுமே - சங்கசக்ரகதாசார்ங்கநந்தகங்களை, பொங்கு - விளங்குகின்ற, சக்கரப்பூபதி - ஆஞ்ஞாசக்ரத்தையுடைய க்ருமிகண்டச் சோழராஜன், செந்தழல்தங்கு அக்கு - செவந்த நெருப்புதங்கிய கண்ணையுடைய, அரன் - சிவபெருமானை, தற்பரம் என்ன - மேலான பரம்பொருளென்று வாதிக்க, மால் - (சபையிலுள்ளார்கேட்டு) மயங்கிய, அங்கு - அவ்விடத்தில், சக்கு - ஞானக்கண்ணென்கிற, அரத்தால் - கருவியைக்கொண்டு, வெல் - (கூரத்தாழ்வான்) வென்றருளின, பொருட்கு - வாத விஷயமாகிய பொருளமைந்த இந்தநூலுக்கு, அரண் - ரக்ஷகங்களாகக் கடவன, எ-று.

## ஸ்ரீ ஹயக்ரீவர்.

சயக்கிரீசனைத்தற்பரஞ்சாற்றுவோர்
மயக்கிரீஇயவெல்வாதிதையோதவே
யுயக்கிரீடிக்குணர்வருள்ஞானமெய்
யயக்கிரீவனடிபணிந்தேத்துவாம். (௩)

(இ-ள்.) சயக்கிரீசனை - வெற்றியையுடைய கைலாயபதியை, தற்பரம் சாற்றுவோர் - தற்பரம்பொருளென்று சொல்லுவோரது, மயக்கு - மயக்கத்தை, இரீஇயவெல் - ஓட்டி வென்று, வாது இதை - வாதரூபமாகிய இதனை, ஓத - சொல்லி முடித்தற்பொருட்டு, கிரீடிக்கு - அர்ஜுனனுக்கு, உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாக, உணர்வுஅருள் - ஞானத்தை யறிவுறுத்தருளின, மெய்ஞ்ஞானம் - உண்மை ஞானத்தையுடைய, அயக்கிரீவன் - ஸ்ரீஹயக்ரீவரது, அடி - திருவடியை, பணிந்து - வணங்கி, ஏத்துவாம் - துதிசெய்வோம், (யாம்) எ-று.

## ஸ்வாசாரியர்.

வேறு.

மத்தங்கொள்வேணியானைவன்பரமென்றுஞ்சோழன்
சித்தங்கொண்மயலொழிக்கிச்சீதரன்பரத்தைநாட்டும்
முத்தன்கூரேசன்செய்தமுன்மொழிதமிழினாலே
யத்தங்கிவேங்கடாரியரடிபணிந்தியான்சொல்வேனே (௪)

(இ-ள்.) மத்தங்கொள் வேணியானை - ஊமத்தை மலரை யணிந்த சடையையுடையருத்ரனை, வன்பரம்என்னும் சோழன் - வலிய பரம்பொருளென்று சொல்லாநின்ற சோழனது, சித்தங்கொள் - மனங்கொண்டிருந்த, மயல்ஒழிக்கி - மயக்கத்தையொழித்து, சீதரன்பரத்தை நாட்டும் - திருமாலின் பரத்துவத்தைச்சாதித்த, முத்தன் - முக்தாத்மாவாகிய, கூரேசன் - கூரத்தாழ்வான், செய்த - வடமொழியிற் செய்தருளிய, முன்மொழி - முதனூலை, தமிழினாலே - தமிழ்மொழியால், அத்தங்கிவேங்கடாரியர் - அத்தங்கிவேங்கடாசாரியரது, அடிபணிந்து - திருவடியை வணங்கி, யான் சொல்வேன் - நான் கூறுவேன், எ-று.

## அவையடக்கம்.

வேறு.

ஒருநான்மறையோதரும்பொருளையூமனுரைப்பதெனக்கதிரார்
பருதியொளிமுன்மின்மினிவிண்பறக்கும்வணனுடன்மசகம்
மருவுநதிகளார்கடலின்வாய்க்காலெதிர்க்கும்வளமையொக்கும்
பெருகுமறிஞர்செந்தமிழ்முன்பித்தனென்சொற்றமிழ்ப்புலனே. [௫]

(இ-ள்.) பெருகும் அறிஞர் - ஞானம் மிகுந்த அறிஞரது, செந்தமிழ் முன் - செந்தமிழ்ப் பாசுரங்களுக்கு முன்னே, பித்தன் - பித்தனுகிய, என் சொல் - என்சொற்களாற் செய்யப்பட்ட, தமிழ்ப்புலன் - தமிழ்ப்பாசுரங்களின் ஞானம், ஒருநான்மறை - ஒப்பற்றநான்கு வேதங்களாலும், ஓது அருபொருளை - சொல்லுதற்கருமையான அர்த்தத்தை, ஊமன் உரைப்பதென - ஊமையானவன் சொல்வது போலவும், பருதி ஒளிமுன் - சூரியனது ஒளிக்குமுன்னே, மின்மினி - மின்மினிப்பூச்சியும், விண்பறக்கும் - ஆகாயத்திற் பறக்கின்ற, உவணனுடன் - கருடனோடு, மசகம் - கொசுகும், மருவும் நதிகள் ஆர்கடலின் - பொருந்திய நதிகள் சேர்கின்ற கடலோடு, வாய்க்கால் - வாய்க்காலும், எதிர்க்கும் வளமை ஒக்கும் - எதிர்த்தலையொத்திருக்கும் எ-று.

## நூலியற்றற்குக்காரணம்.

வேறு.

என்மதியெனக்கேநகைதருமென்றாலிவ்வரும்பொருட்டமிழ்க்கிசைத்து
வின்மதிமுகத்துச்செந்தமிழ்ப்புலவீர்விளம்புமாறென்னெனிற்சேண்மின்
பொன்மதிலரங்கனுளத்தெதிராஜன்பொன்னடிக்கூரம்வாழிறைவன்
றன்மதிப்பில்லாப்பதமலர்த்தேனென்றன்மைமாற்றிடுதலாமன்றே. [௬]

(இ-ள்.) வில் - ஒளிபொருந்திய, மதிமுகத்து - சந்திரன் போன்ற முகத்தினை யுடைய, செந்தமிழ்ப்புலவீர் - செந்தமிழ்ப்புலவர்களே, என்மதி - என்னறிவானது, எனக்கே நகை தரும் என்றால் - எனக்கே நகைப்பை யுண்டாக்குமாயின், இ அரும்பொருள் - இந்த அருமையாகிய பொருளை, தமிழ்க்கு இசைத்து - தமிழ்மொழியிற் பொருத்தி, விளம்பும் ஆறு என் எனின் - சொல்லுகைக் கூடியென் னென்றால், சேண்மின் - கேளுங்கள், பொன்மதில் - பொன்மதில் சூழ்ந்த, அரங்கன் - பெரியபெருமாளை, உள்ளத்து - மனத்திற் கொண்டிருக்கிற, எதிராஜன் பொன்னடி - ஶ்ரீமாநுஜன் பொன்னடியாகிய, கூரம்வாழ் இறைவன் தன் - கூரத்தாழ்வானுடைய, மதிப்பு இல்லா - மதித்தற்கரிதாகிய, பதமலர்த்தேன் - ஸ்ரீபாதாரவிந்தமகரந்தமானது, என் தன்மை - என்னியற்கையறிவை, மாற்றிடுதலாம் - மாறுபடுத்தலேயாம், எ-று.

## புலவர்வணக்கம்.

வேறு.

மைந்தர்கையிற்றிகழ்கனகவள்ளநாயின்
வயப்படுமோர்முழுநாளிகேரமொக்கு
மெந்தையெழிற்கூரேசவிசயமென்னு
மிப்பொருள்யான்றமிழ்க்குணர்த்துபகருமாறு
பைந்தமிழீருங்களைப்போற்பருப்பிலாதேன்
பாலனுழறியமழலைக்கன்புகூருந்
தந்தையன்னையெனநமக்காங்கருளுமால்போற்
றமியேன்புன்றமிழ்கொளவுங்கடனதாமே (௭)

(இ-ள்.) பைந்தமிழீர் - பைந்தமிழ்ப்பாவலிரே, முந்தை - பழையதாகிய எழில் - அழகுள்ள, கூரேசவிசயம் என்னும் - கூரேசவிஜயமென்கிற, இப்பொருள் - இந்த அர்த்தத்தை, யான் - நான், உணர்ந்து - அறிந்து, தமிழ்க்கு - தமிழ் மொழியில், பகருமாறு - சொல்லும்விதம், மைந்தர் கையில் - பாலகர் கையி லகப்பட்ட, திகழ் - பிரகாசிக்கிற, கனகவள்ளம் - பொன்வட்டிலையும், நாயின்வாய்ப்படும் - நாயினிடத் தகப்பட்ட, ஓர்முழுநாளிகேரம் - ஒருமுழுத் தேங்காயையும், ஒக்கும் - ஒத்திருக்கும், (ஆதலால்) உந்தமைப்போல் - உங்களைப்போல, பருப்பு இல்லாதேன் - பகுத்தறிவில்லாதேன், பாலன் உழறிய - சிறுவன் குழறிய, மழலைக்கு - குதலைச்சொற்களுக்கு, அன்புகூரும் - அன்புசெய்கின்ற, தந்தை அன்னையென - தந்தை தாயர்போல, நமக்கு - உங்களுக்கு, அருள்மால் என்ன - அருள் செய்கிற திருமால்போல, தமியேன் புல்தமிழ் கொளவும் - தமியேனுடைய அற்பமாகியதமிழ்ப்பாடலையுங்கொண்டு மகிழவும், கடனதாம் - கடனாகும், எ-று.

## நூற்பயன்.

வேறு.

பாரேசற்கமைந்தவுடற்பற்றறுத்துமுத்தியெய்தற்
கியாரேசற்குருவினருளியல்படையாதவர்களுளார்
நேரேசத்துவகுணத்தினிறையமுதபாத்திரமாங்
கூரேசவிசயமிதைக்கூறுவர்கேட்பவர்மாதோ (௮)

(இ-ள்.) நேரேசத்துவகுணத்தின் - நேர்மையாகிய சாத்விக குணத்தினால், நிறை - நிறைக்கப்பட்ட, அமுதபாத்திரம் ஆம் - அமிர்தபாத்திரமாகிய, கூரேசர் - கூரத்தாழ்வாரது, விசயம் - வெற்றிச்சரிதமாகிய, இதை - இதனை, கூறுவர் கேட்பவர் - சொல்லுவோர் கேட்பவர் என்னுமிருதிறத்தாருள், பாரேசற்கு அமைந்த - உலகத்தார் நிந்தித்தற்கமைந்த, உடல் - சரீரத்தின்,

பற்று அறுத்து - தொடர்பைச் சேதித்து, முத்திஎய்தற்கு - முத்தியை யடைதற்கு, சற்குருவின் - சதாசாரியனது, அருள் இயல்பு அடையாதவர்கள் - அருளியற் கையையடையாதவர்கள், யாரே உள்ளார் - யாவர் தாமிருக்கிறார்கள், எ-று.

## இதுவுமது.

கலந்தவிருவினைக்கடலைக்கடந்திடற்கோரோடமுமாம்
நிலந்தனிலேபிறந்திறந்துநீக்கருநோய்க்கொருமருந்தாம்
மலந்திகழுமிருள்செறிந்தமனதினுக்கோரொளியாகும்
புலந்திகழ்ந்துண்ணுந்தப்புனிதவமுதிதுவாமே. [௬]

(இ-ள்.) இது - இந்தச் சூடோசவிஜயமென்னும் பிரபந்தம், கலந்த - ஆன்மாக்களைச்சேர்ந்த, இருவினைக் கடலை - இருவினையென்கிற கடலை, கடந்திடற்கு - தாண்டிச்செல்லுதற்கு, ஓர் ஓடமும் ஆம் - ஒருமரக்கலமுமாகும், நிலந்தனிலே - பூமியில், பிறந்து இறந்து - தோன்றியொடுங்கி, நீக்கு அரு - நீக்குதற்கரிதாகிய, நோய்க்கு - பிறவிப்பிணிக்கு, ஒருமருந்து ஆம் - ஒருதிவ்யௌஷதமாகும், மலம்திகழும் - களங்கத்தால் விளங்குகின்ற, இருள்செறிந்த - அஞ்ஞானாந்தகாரம்மிகுந்த, மனதினுக்கு - மனத்துக்கு, ஓர்ஒளி ஆகும் - ஒப்பற்றபிரகாசமாகும், புலம்திகழ்ந்து உண் - அறிவாகிய வாயினால் விளக்கமடைந்து பருகுதற்குரிய, புனிதம் - பரிசுத்தமான, அமுது ஆம் - அமுதமாகும், எ-று.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் (௯௬)

# சோழன்திக்குவிஜயம்.

பின்னுவெண்டரங்கக்கருங்கடன்முகட்டிற்
பிறங்கொளியிளவெயிலென்ன
மின்னுசெம்மணிச்சூட்டனந்தன்மேற்கிடந்த
விரிநிலந்தனில்வளஞ்செறிந்த
பொன்னிசூழ்சோணாட்டொருகுடைநிழற்றும்
புரவலர்மரபினிலுதித்த
மன்னவன்கிருமிகண்டசோழன்றான்
மருவிமண்புரந்திடுநாளில் (௧)

(இ-ள்.) பின்னு - ஒன்றோடொன்று பின்னலிடுகின்ற, வெண்தரங்கம் - வெள்ளிய அலைகளையுடைய, கருங்கடல்முகட்டில் - கரியகடலினது உச்சியில், பிறங்கு - விளங்குகின்ற, ஒளி - காந்தியையுடைய, இளவெயில் என்ன - கூட்டமாகிய கிரணங்களைப்போல, மின்னு - மின்னுகின்ற, செம்மணி - மாணிக்கம்பொருந்திய, சூட்டு - உச்சியையுடைய, அனந்தன்மேல் கிடந்த - ஆதிசேஷன்மீது தங்கிய, விரிநிலந்தனில் - விரிந்த நிலவுலகத்தில், வளம்செறிந்த - வளமிகுந்த, பொன்னிசூழ்சோணாட்டு - காவேரி நதியினால் சூழப்பட்ட சோழநாட்டில், ஒருகுடைநிழற்றும் - தனது ஒருகுடையினால் அந்நாடு முழுதும் நிழலைச்செய்கின்ற, புரவலர் மரபினில் உதித்த - ராஜவமிசத்திற் பிறந்த, மன்னவன் - வேந்தனாகிய, கிருமிகண்ட சோழன் - கிருமிகண்ட சோழன் என்பவன், மருவி - (ராஜரீகத்துக்குரிய நற்குணங்கள் எல்லாவற்றையும்) பொருந்தி, மண்புரந்திடும் நாளில் - பூமியைப் பரிபாலித்து வருங்காலத்தில், எ-று.

ஆரணநான்கும்புராணமூவாறுமவற்றொடுசைவசித்தாந்தம்
பூரணமாகத்தெளிந்துணர்ந்தவராம்புலவரெண்ணிலருடன்றானுந்
தாரணிதிசைநாலிரண்டினுஞ்சிவனேதற்பரமெனச்செய்நினைந்து
தேரணிகயம்வெந்துரகபதாதிசேனைவாரிதியுடனெழுந்தான். (௨)

(இ-ள்.) ஆரணம் நான்கும் - நான்கு வேதங்களையும், புராணம் மூவாறும் - பதினெண் புராணங்களையும், அவற்றொடு - அவைகளுடன், சைவசித்தாந்தம் - சைவசித்தாந்த சாத்திரங்களையும், பூரணமாக - நிறைவாக, தெளிந்து உணர்ந்தவர் ஆம் - தெளிந்தறிந்தவர் ஆகிய, புலவர் எண்ணிலருடன் - கணக்கற்ற புலவர்களோடு, தானும் - தானுமாக, தாரணி - உலகத்தில், திசைநாலிரண்டினும் - அஷ்டதிக்குகளினும், சிவனே - சிவபெருமானே, தற்பரம் எனச்செய்ய - தற்பரவஸ்துவென் றுறுதிகொள்ளும்படி செய்ய, நினைந்து - கருதி, தேர் அணி - ரதவரிசை, கயம் - யானைகள், வெம் துரகம் - வேகத்தையுடைய குதிரைகள், பதாதி - காலாட்கள், (என்கிற) சேனைவாரிதியுடன் - சேனாசமுத்திரத்துடன், எழுந்தான் - புறப்பட்டான், எ-று.

இவ்வணமரசன்கவிஞரோடெழுந்தே
யிசைந்தொருசெப்பிலேட்டதனிற்
றிவ்வியநதியுமதியுடர்வேணிச்
சிவாத்பரதெய்வநாஸ்தியெனச்
செவ்விதாய்வரைந்துகைப்பிடித்ததனிற்
றிகழ்திரிவயினவர்தமையும்
வவ்விமேவலிதிதுவுண்மையெனக்கீழ்
வரைந்திடவிரைந்துசெய்தனனால். (௩)

(இ-ள்.) இவ்வண்ணம் - இவ்விதமாக, அரசன் - வேந்தன், கவிஞரோடு எழுந்து - புலவர்களோடு புறப்பட்டு, இசைந்து - ஒருசேரக்கூடி, ஒரு செப்பின் ஏடு அதனில் - ஒரு செப்பேட்டில், திவ்விய நதியும் - தெய்விகமானகங்காநதியும், மதியும் - சந்திரனும், உடர் - சிறந்து விளங்குகின்ற, வேணி - சடாபாரத்தை யுடைய, சிவாத்பர தெய்வம் நாஸ்தியென - சிவபெருமானுக்கு மேலான தெய்வ மில்லை யென்று, செவ்விதாய்வரைந்து - செவ்வையாயெழுதி, கைபிடித்து - கையிற் பிடித்துக்கொண்டு, அதனில் - அந்தச்செப்பேட்டில், திகழ் - விளங்குகின்ற, திரிவயினவர்தமையும் - த்ரிவிதவைஷ்ணவர்களையும், வலிதின்வவ்வி - வலாத்காரமாகப்பிடித்து, ஈது உண்மையென - இதுவேமெய்யென்று, கீழ் வரைந்திட - கீழே கையெழுத்திடும்படி, விரைந்து செய்தனன் - விரைந்து செய்தான், எ-று.

திக்கெலாமிவ்வாறரசனால்விசயஞ்செய்தனருய்தவமறியாச்
சக்கிரிநிகிரியெனச்சுழலமனத்துத்தாமதர்நடந்தனரப்பா
லக்கரமைம்பத்தொன்றுமாய்க்கலைகளனைத்துமாயிலங்குமையைந்து
தத்துவமாயமலமாயெங்குந்தங்கியகருணைவாரிதியாய். (௪)

(இ-ள்.) திக்கு எல்லாம் - திக்குகளிலுள்ளாரெல்லாரும், இவ்வாறு - இவ்வண்ணம், அரசனால் - வேந்தனால், விசயம் செய்தனர் - வெல்லப்பட்டவராய், உய்தவம் அறியா - பிழைக்கத்தக்கதபோ மார்க்கத்தையறியாமல், சக்கிரிநிகிரியென - குலால சக்ரம்போல, சுழல்மனத்துத் தாமதர் நடந்தனர் - சுழலாநின்ற மனத்தினையுடைய தாமசகுணத்தினர் சென்றார்கள், அப்பால் - அதற்குமேல், அக்கரம் ஐம்பத்தொன்றும் ஆய் - ஐம்பத்தோரக்ஷரங்களாயும், கலைகள் அனைத்தும் ஆய் - எல்லாக்கலைகளுமாயும், இலங்கும் - விளங்குகின்ற, ஐயைந்து தத்துவம் ஆய் - இருபத்தைந்தென்று சொல்லுதற்குரிய தத்துவங்களாயும், அமலம் ஆய் - மலரஹிதமாயும், எங்கும் தங்கிய - எவ்விடத்தும் வியாபித்திருந்த, கருணை வாரிதி ஆய் - கருணைக்கடலாகியும், எ-று.

அருவமாயுருவாயருவுருவுமாயாணுமாய்ப்பெண்ணுமாயலியாய்ப்
பெருகுமெய்ஞ்ஞானாநந்தவாரிதியாய்ப்பிரமமாயரியயனரனாய்க்
கருதுவார்கருதுமுருவமாயெவர்க்குங்காரணப்பொருளுமாயெங்கு
மருவுமாமுளரியிலையினீரதுபோன்மருவியுமருவிலாதவனாய். (௫)



(இ-ள்.) அருவமாய் - அரூபமாகியும், உருவாய் - ரூபமாகியும், அருவுருவுமாய் - அருவுருவங்களாகியும், ஆணும் ஆய் - ஆணாகியும், பெண்ணும் ஆய் - பெண்ணாகியும், அலியாய் - பேடாகியும், பெருகும் - பெருகுகின்ற, மெய்ஞ்ஞான ஆநந்தவாரிதியாய் - மெய்ஞ்ஞானாநந்த சாகரமாகியும், பிரமமாய் - பிரமமாகியும், அரி அயன் அரனாய் - அரிஅயன் அரன் என்னு மூன்று மூர்த்திகளாகியும், கருதுவார் - நினைப்பவர், கருதும் - நினைக்கின்ற, உருவம் ஆய் - உருவாகியும், எவர்க்கும் - எல்லார்க்கும், காரணப்பொருளும் ஆய் - காரணவஸ்துவாகியும், எங்கும் - எவ்விடத்தும், மருவுமாம் - மணந்தங்கிய, முளரியிலையில் நீரதுபோல் - தாமரையிலையின் மேலுள்ள தண்ணீர்போல, மருவியும் மருவிலாதவனாய் - பொருந்தியும் பொருந்தாதவனாகியும், எ-று.

பன்னிரண்டெழுத்தாய்ப்பன்னிருவிமானம்
பங்கயன்றவத்தின்மாலளிப்பப்
பின்னவன்விகவாவசுவினுக்களிக்கப்
பெருந்தவன்மனுவினுக்களிப்ப
வன்னதையிக்குவாகுவயோத்திக்
கருள்பரம்பரைத்தசரதன்சே
யென்னிராகவன்பெற்றதைத்திருவரங்க
மிலங்கிடவீடணர்க்களித்தான். (௬)

(இ-ள்.) பன்னிரண்டு எழுத்தாய் - பன்னிரண்டக்ஷரரூபமாய், பன் - சொல்லப்பட்ட, ஒருவிமானம் - ஒப்பற்றவிமானத்தை, பங்கயன் தவத்தின் - பிரமனது தவங்காரணமாக, மால்அளிப்ப - திருமால்கொடுக்க, பின் - பிறகு, அவன் - அந்தப்பிரமன், விகவாவசுவினுக்கு அளிக்க - விகவாவசுவுக்குக் கொடுக்க, பெருந்தவன் - அந்தப்பெருந்தவத்தினையுடையோன், மனுவினுக்கு அளிப்ப - மநுவுக்குக்கொடுக்க, அன்னதை - அதை, இக்குவாகு - இக்ஷ்வாகு, அயோத்திக்கு - திருவயோத்திக்கு, அருள் - அருள்செய்த, பரம்பரை - பரம்பரையாகிய, தசரதன்சேயன் - தசரதகுமாரரென்கிற, இராகவன்பெற்று - ஸ்ரீராமபிரான்பெற்று, அதை - அதனை, திருவரங்கம் இலங்கிட - திருவரங்கம்விளங்கும்படி, வீடணர்க்கு அளித்தான் - ஸ்ரீவிபீஷணாழ்வாருக்குப்ரஸாதித்தார், எ-று.

பாரதின்கீழாய்ப்பரந்தவான்மேலாய்ப்பாதங்களியாகங்களிருபாற்
சீர்செயவிசையார்கணபதிதுர்க்கைசிரங்கலைமகளயன்வேத
மார்பிடமாருருத்திரர்நாள்சோளாதித்தகிருடிகன்பாலர்
சேர்பரவாசுதேவர்வாழ்முசமூர்த்திசம்பிரணவவிமானத்தில். (௭)

(இ-ள்.) பாரதின் கீழாய் - பூமியின் கீழாகி, பரந்தவான் மேலாய் - படர்ந்த ஆகாயத்தின்மேலாகி, பாதங்கள் - திருவடிகள், யாகங்கள் - யாகங்கள், (இவைகள்) இருபால் - இரண்டுபக்கங்களிலும், சீர்செய - சிறப்பைச்செய்ய,

இசைசூர் - புகழ்நிறைந்த, கணபதி - கணபதியும், துர்க்கை - துர்க்கையும், சிரம் - தலையாக, கலைமகள் - சரஸ்வதியும், அயன் - பிரமனும், வேதம் - வேதமாக, ஆர்கலிஅமரர் - நிரம்பியகடலையன்ன தேவர்கள், உருத்திரர் - உருத்திரர்கள், நாள் - நாள்கள், கோள் - கிரகங்கள், ஆதித்தர் - சூரியர்கள், இருடிகள் - ருஷிகள், பாலர் - திக்குப்பாலகர், சேர் - சேர்ந்த, பரவாசதேவன்வாழ்முகமும் - பரவாசுதேவன்வாழ்கின்ற முகமும், திகழ் - விளங்குகின்ற, பிரணவவிமானத்தில் - பிரணவாகாரவிமானத்தின்கண், எ-று.

ஆயிரஞ்சிகரப்பளிங்குமாமலைநேரநந்தன்
மேலனந்தம்பயங்கள்
மேயகார்முகில்போல்விழிமலர்பரப்பி
வியன்றிருமகளுமண்மகளுந்
தூயபொன்னடிகள்வருடயாழ்முனிவன்
றுரிசறமறைப்பொருட்கிறைஞ்சுங்
காயமும்வாக்குமனமுமொன்றாகக்
கனிந்துரைசெயுமுழுமுதலாய். (௮)

(இ-ள்.) ஆயிரஞ்சிகரம் - ஆயிரஞ்சிகரங்களையுடைய, பளிங்குமாமலைநேர் - பெரியபளிங்குக்கல்லினாலாகிய மலையையொத்த, அநந்தன்மேல் - திருவநந்தாழ்வான்மீது, அநந்தம்அம்புயங்கள்மேய - அநேகம் தாமரைமலர்கள்பொருந்திய, கார்முகில்போல் - கரியமேகம்போல, விழிமலர்பரப்பி - கண்மலர்களைப்பரப்பிக்கொண்டு, வியன் - பெருமை பொருந்திய, திருமகளும் - ஸ்ரீதேவியும், மண்மகளும் - பூதேவியும், தூயபொன்னடிகள்வருட - பரிசுத்தமானதிருவடிகளை வருடிக்கொண்டிருக்க, யாழ்முனிவன் - நாரதமுனிவன், துரிசுஅற - களங்கமற, மறைப்பொருட்கு - வேதப்பொருளுக்கு, இவறான் - உலோபியாதவனாய், காயமும் - உடலும், வாக்கும் - வாயும், மனமும் - மனதும், ஒன்றுஆக - ஒன்றேயாக, கனிந்து உரைசெய்யும் - உருகிப் புகழாநின்ற, முழுமுதல்ஆய் - முழுமுதற்பொருளாகி, எ-று.

விளங்குமெம்பெருமான்பரம்பரஞ்சோதிவிராட்டுருவாகியவொருவ
னுளங்களித்தமர்ந்தவுறையுளாய்க்கலைதேருலப்பிலாச்சீயர்மெய்யடியார்
துளங்கிலாமனத்தெழுபதினால்வர்தூயசிங்காதனக்குரவர்
வளங்கொளீராறாயிரவரேகாங்கமாதவரிவர்களுக்கிருப்பாய் (௯)

(இ-ள்.) விளங்கும் - விளங்குகின்ற, எம்பெருமான் - எம்மிறைவன், பரம் - மேலாகிய, பரஞ்சோதி - பரந்தாமம், விராட்டுருவாகிய - விராட்புருஷரூபமாகிய, ஒருவன் - ஒப்பற்றவன், உளங்களித்து அமர்ந்த - மனங்களித்தமர்ந்த, உறையுளாய் - இருப்பிடமாய், கலைதேர் - கலைகளையாராய்கின்ற, உலப்பில்லா - கெடாத, சீயர் - சீயர்களாகிய, மெய்யடியார் - மெய்யன்பர்களும், துளங்குஇலாமனத்தர் - சலித்தலில்லாத மனத்தையுடையவர்களாகிய, எழுபதின்நால்வர் - எழுபத்துநால்வரென்கிற, தூய - பரிசுத்தமாகிய, சிங்காதனக்குரவர் - சிம்மா



ஸநாதிபர்களும், வளங்கொள் - வளமையைக்கொண்ட, ஈர்ஆறுஆயிரவர் - பன்னீராயிரவராகிய, ஏகாங்கமாதவர் - ஏகாங்கியென்கிறபெரியதவத்தினையுடையாருமாகிய, இவர்களுக்கு இருப்புஆய் - இவர்களுக்குவாஸஸ்தானமாகி, எ-று.

மதிபுகர்சிவனிந்திரன்குகன்றீயோன்
மறையவன்வசிட்டனென்றிசையிற்
றுதிபெறுபுன்னைவில்வநாவரசு
தூய்பலாசொடுபுனைவகுளங்
கதிதருங்கடம்புமாமிரத்தருவுங்
கலந்திதன்பேர்கொடீர்த்தத்தில்
விதிநிரைநிரையாய்த்தவம்புரிந்தின்னோர்
வினையகன்றிடும்பெருந்தலமாய். (௰)

(இ-ள்.) மதி - சந்திரனும், புகர் - சுக்கிரனும், சிவன் - சிவனும், இந்திரன் - இந்திரனும், குகன் - முருகனும், தீயோன் - அக்கினிதேவனும், மறையவன் - பிரமனும், வசிட்டன் - வசிஷ்டமுனியும், என்று - என்று சொல்லப்பட்டு, இசையின்துதிபெறு - புகழினால் தோத்திரத்தைப்பெற்ற, புன்னை - புன்னைமரமும், வில்வம் - வில்வமரமும், நாவு - நாவல்மரமும், அரசு - அரசமரமும், தூய்பலாசொடு - பரிசுத்தமாகிய முருக்கமரத்தோடு, புனைவகுளம் - அலங்கரிக்கப்பட்ட மகிழமரமும், கதிதரும் - நற்கதியைத்தருகின்ற, கடம்பும் - கடப்பமரமும், ஆமிரத்தருவும் - மாமரமும், கலந்து - சேர்ந்து, இதன்பேர் கொள்தீர்த்தத்தில் - இதன்பேர்களைக் கொண்டதீர்த்தங்களில், விதி - சாத்திரவிதிப்படி, நிரை நிரையாய் - வரிசைவரிசையாய், தவம்புரிந்து - தவஞ்செய்து, இன்னோர் - இவர்போல்வாரெல்லாரும், வினைஅகன்றிடும் - தம்வினைகளை நீக்கப்பெற்ற - பெருந்தலம்ஆய் - பெரியஸ்தலமாகி, எ-று.

பொன்மதிலேழுமேருவைநிகர்கோபுரங்களுமேழுமாயிரங்கான்
மன்மதிதவழுமண்டபங்கருடமண்டபஞ்சித்திரமண்டபங்க
ணன்மதியருளப்பாட்டுமண்டபங்களுநான்மறையுருத்திரமணித்தூண்
முன்மதித்தயனுந்தருமவன்மாவுமுத்திபெற்றிடும்பெருந்தலமாய். (௰௧)

(இ-ள்.) பொன் மதில் ஏழும் - பொன்னினாற் செய்த மதில்களேழும், மேருவைநிகர் - மேருமலையைநிகர்க்கின்ற, கோபுரங்கள் ஏழும் - கோபுரங்களிருபத்தொன்றும், ஆயிரங்கால்மன் - ஆயிரங்கால்களில்நிலைபெற்ற, மதிதவழும் மண்டபம் - சந்திரன் தவழ்கின்றமண்டபமும், கருடமண்டபம் - கருடமண்டபமும், சித்திரமண்டபங்கள் - சித்திரமண்டபங்களும், நன்மதி அருளப்பாட்டு மண்டபங்கள் - நல்லறிவைக்கொடுக்கின்ற அருளப்பாட்டுமண்டபங்களும், நான்மறை - நான்குவேதங்களும், உருத்திரம் - உருத்திரமந்திரமும், மணித்தூண் - அழகியதூண்களாலமைக்கப்பட்ட, முன் - முற்காலத்தில், அயனும் - பிரமனும், தருமவன்மாவும் - தர்மவன்மனும், மதித்து - நினைத்து, முத்திபெற்றிடும் - மோக்ஷமடைந்த, பெருந்தலமாய் - மஹாஸ்தலமாகி, எ-று.

காண்பவருளத்தைக்கவர்வதாய்ப்புலனைக்
  கடிந்தவருள்ளமெனத்தெளிந்து
மாண்புடனொருகால்மூழ்குவார்வினையை
  வன்னியிலிட்டபஞ்செனச்செய்
சேண்படுமமரர்வந்துவந்தாடுஞ்
  சீதளசந்த்ரபுட்கரணிக்
கேண்புகலுவதார்வண்மலர்ப்புன்னா
  கத்திசையெவரெடுத்திசைப்பார். (௫௨)

(இ-ள்) காண்பவர் உள்ளத்தைக்கவர்வது ஆய் - சேவிப்போர்களுடைய மனத்தைக்ரஹிப்பதாகி, புலனைக்கடிந்தவர் - ஐம்புலவாசைகளை நீக்கினவர்களுடைய, உள்ளம்என - மனம்போல, தெளிந்து - தெளிவடைந்து, மாண்புடன் - (மூழ்கவேண்டிய) முறைமையுடன், ஒருகால் மூழ்குவார் - ஒருதரம் மூழ்குவோருடைய, வினையை - வினைகளை, வன்னியில் இட்ட - நெருப்பிலிட்ட, பஞ்சு எனச் செய் - பஞ்சைப்போலநீறும்படிசெய்கின்ற, சேண்படும் - விண்ணுலகத்துள்ள, அமரர் - தேவர்கள், வந்து வந்து ஆடும் - வந்துவந்து மூழ்குகின்ற, சீதளம் - குளிர்ச்சிபொருந்திய, சந்திரபுட்கரணிக்கு - சந்த்ரபுஷ்கரணி தீர்த்தத்தின், ஏண் - மஹிமையை, புகலுவது ஆர் - சொல்வதுயார், வண்மலர் - வளம்பொருந்திய மலர்களையுடைய, புன்னாகத்திசை - புன்னாகமரத்தினதுப்ரபாவத்தை, எவர் எடுத்து இசைப்பார் - யாவரெடுத்துச் சொல்லவல்லார், எ-று.

வேறு.

நாதமுனிகடிருக்கச்சிநம்பியாண்டாரெதிராசர்
ஆதவனைநேர்திருவாழியாழ்வான்பதின்மராழ்வார்க
ளோதுமுலகாசிரியர்வேதாந்தாசாரியர்கூரத்தாழ்வா
னேதில்கருடன்மணவாளமுனிவரெழிற்சந்நிதிக்கிடமாய். (௫௩)

(இ-ள்.) நாதமுனிகள் - ஸ்ரீமந்நாதமுனிகளும், திருக்கச்சிநம்பியாண்டார் - திருக்கச்சிநம்பி யாண்டாரும், எதிராஜர் - ஸ்ரீ உடையவரும், ஆதவனை நேர் - சூரியனை நிகர்க்கின்ற, திருவாழியாழ்வான் - திருவாழியாழ்வானும், பதின்மர் ஆழ்வார்கள் - ஆழ்வார்கள் பதின்மரும், ஓதும் - புகழ்தற்குரிய, உலகாரியர் - பிள்ளை லோகாசாரியரும், வேதாந்தாசாரியர் - வேதாந்த தேசிகரும், கூரத்தாழ்வான் - ஸ்ரீ கூரத்தாழ்வானும், ஏதில் - குற்றமற்ற, கருடன் - பெரிய திருவடியும், மணவாள முனிவர் - ஸ்ரீ மணவாள மாமுனிகளும் ஆகிய இவர்களுடைய, எழில் - அழகையுடைய, சந்நிதிக்கு இடம் ஆய் - சந்நிதிகளமைதற்கு இடமாகி, எ-று.

வேதியர்கள்வேள்வியினோசைமெய்யாழ்வார்கடமிழோசை
தீதிலடியார்துதியோசைதேவர்பணிந்தார்த்திடுமோசை



வீதிதொறும்வாச்சியவோசைமிளிர்மாளிகைமேலியாழோசை
போதின்மதுவுண்வண்டோசைபொன்னியோசையெனவுளதாய் (௫௪)

(இ-ள்.) வேதியர்கள் வேள்வியின் ஓசை - மறையோர்கள் செய்கின்ற யாக முழக்கமும், மெய் ஆழ்வார்கள் - உண்மையையுடைய ஆழ்வார்கள் அருளிச்செய்த, தமிழ் ஓசை - தமிழ் வேதத்தின் முழக்கமும், தீது இல் அடியார் - தீங்கற்ற அடியார்கள், துதி ஓசை - ஸ்தோத்ரம்பண்ணுகிற ஒலியும், தேவர் பணிந்து - தேவர்கள் வணங்கி, ஆர்த்திடும் ஓசை - ஆரவாரிக்கும் ஒலியும், வீதி தொறும் - தெருக்கள் தோறும், வாச்சிய ஓசை - பலவகைப் பட்ட வாத்ய கோஷங்களும், மிளிர் - விளங்காநின்ற, மாளிகை மேல் - மாளிகைகளின் மீது, யாழ் ஓசை - வீணையோசையும், போதில் - புஷ்பங்களில், மது உண் - தேனை யுண்ணுகின்ற, வண்டு ஓசை - வண்டின் முழக்கமும், பொன்னி ஓசை என - காவேரி நதியின் முழக்கமென்னும்படி, உளது ஆய் - தன்னிடத்துள்ளதாகி, எ-று.

இன்னபலமெய்ப்புகழோங்கியெழிற்காவிரியேவிரசையதாய்
மன்னுமரங்கநாதர்பரவாசுதேவராய்த்திகழ்ந்து
பொன்னினெயில்சூழ்ந்தொளிர்கோயிற்புகலுந்திருவைகுந்தமதா
யுன்னியமரர்பணிந்தேத்துமுயர்பேரின்பப்பெருந்தலமால். (௫௫)

(இ-ள்.) இன்ன - இத்தன்மையவாகிய, பல மெய்ப்புகழ் ஓங்கி - பல வுண்மைப்புகழ்கள் ஓங்கப்பெற்று, எழில் - அழகையுடைய, காவிரியே - காவிரி நதியே, விரசையதாய் - விரஜா நதியாகவும், மன்னும் - நிலைபெற்ற, அரங்கநாதர் - ஸ்ரீ ரங்கநாயகர், பரவாசுதேவராய்த் திகழ்ந்து - பரவாசுதேவராகவும் பிரகாசித்து, பொன்னின் எயில் சூழ்ந்து - பொன்மதில்கள் சூழப்பெற்று, ஒளிர் - விளங்குகின்ற, கோயில் - கோயிலே, திருவைகுந்தமதாய் - ஸ்ரீ பரமபதமாக, உன்னி - நினைத்து, அமரர் - தேவர்கள், பணிந்து ஏத்தும் - தொழுது துதிக்கின்ற, உயர் - உயர்ந்த, பேரின்பம் - பேராநந்தத்தைத் தருகின்ற, பெருந்தலம் - மஹா ஸ்தலம் ஒன்றுளது, எ-று.

வேறு.

இத்தகையரங்கநகரெய்தினர்களெய்தி
மெய்த்தகவிவாணரெவரென்றுவினவச்சீர்
மொய்த்தவெதிராசரெனவேமொழிதல்கேளா
வத்தகையின்மன்னனுடைமைச்சர்புலவோரும். (௫௬)

(இ-ள.) இத்தகை - இவ்வகை யழகுவாய்ந்த, அரங்க நகர் - அரங்க நகரத்தை, எய்தினர்கள் - அடைந்தார்கள், எய்தி - அடைந்து, மெய்த்த - மெச்சப்பட்ட, கவி வாணர் - (இவ்விடத்துள்ள) வித்வான்கள், எவர் என்று வினவ - யாவரென்று வினவுதலும், சீர் மொய்த்த - சிறப்பு மிகுந்த, எதிராஜர்

என மொழிதல் கேளா - ஸ்ரீ பாஷ்யகாரர் என்று (அருளினார்) சொல்லக் கேட்டு, அத்தகைமையின் மன்னனொடு - அத்தன்மையையுடைய அரசனுடன், அமைச்சர் புலவோரும் - மந்திரிமார்களும் புலவர்களும், எ-று.

ஆழியைநிகர்த்தசதுரங்கபலசேனை
சூழிடநிறுத்திவலதூதரைவிடுத்தார்
வேழமெனவீறுசமயக்குடிலருக்கோர்
வாழுமரியேறெதிவரன்றனையழைத்தே. (௰௭)

(இ-ள்.) ஆழியை நிகர்த்த - சமுத்ரத்தையொத்த, சதுரங்கபல சேனை - சதுரங்க பலங்களோடுகூடிய சேனை, சூழிட நிறுத்தி - சூழ நிறுத்தி, வல்ல - பேசவல்ல, தூதரை விடுத்தார் - தூதரையனுப்பினார், வேழம் என - யானைகள் போல, வீறு - செருக்குகின்ற, சமயக்குடிலருக்கு - சமயக்கொடியார்க்கு, ஓர் - ஒப்பற்ற, வாழும் - வாழ்கின்ற, அரியேறு - ஆண்சிங்கம்போல்பவராகிய, எதிவரன் தன்னை அழைத்து - யதிஸ்ரேஷ்டரை யழைத்து, எ-று.

வந்தனர்கடூதவர்வழங்குமுரைதன்னைச்
சிந்தைதனில்வைத்திலர்சிறந்தபுகழ்கூரம்
வந்தவதரித்தெதிவரன்றிருவடிக்காள்
முந்துமவனுய்ந்ததிருமுன்னடிபணிந்து. (௰௮)

(இ-ள்.) வந்தனர்கள் தூதவர் - வந்தவர்களாகிய தூதர்கள், வழங்கும் உரைதன்னை - சொல்லிய சொல்லை, சிந்தைதனில் வைத்திலர் - மனதில் வையாமல், சிறந்த புகழ் - சிறந்த புகழையுடைய, கூரம் வந்து அவதரித்து - திருக்கூரத்தில் வந்து அவதரித்தருளி, எதிவரன் திருவடிக்கு - யதிராஜரது திருவடிக்கு, ஆள் - ஆளாகி, முந்தை யவன் - முந்தை யவனாகிய ஸ்ரீ கூரத்தாழ்வானது, உய்ந்த - உஜ்ஜீவித்தற்கேதுவாகிய, திரு முன் - சந்நிதி முன்பு, அடி பணிந்து - திருவடி தொழுது, எ-று.

மெய்க்கருணைவாரிதியின்மேவவருள்கோவே
அக்கொடியர்பக்கலடியேனைவிடுகென்றா
ரக்கணமருட்குரவனைக்கடிதின்மேனாட்
டுக்கெழுகவென்றடி துதித்துவிடைகொண்டான். (௰௯)

(இ-ள்.) மெய் - உண்மையாகிய, கருணை வாரிதியில் மேவ - கருணா சமுத்ரத்திற் பொருந்தும்படி, அருள் - அடியேனுக் கருள்புரிந்த, கோவே - இறைவனே, அக்கொடியர் பக்கல் - அந்தத் துராத்மாக்களிடத்திற்கு, அடியேனை விடுக என்றார் - அடியேனை யனுப்புகவென்று விண்ணப்பஞ்செய்து, அக்கணம் - அந்தக்ஷணமே, அருட்குரவனை - தமக்குக் கிருபை செய்த ஆசாரியனை, கடிதில் - விரைவில், மேல் நாட்டுக்கு எழுக என்று - மேனாட்டுக் கெழுந்தருள்கவென்று, அடி துதித்து - திருவடியைப் புகழ்ந்து, விடை கொண்டான் - விடைபெற்றுக்கொண்டனர், எ-று.



மைப்பரவையென்னநிறைமன்னனுறுசேனை
யிற்பனிமதிக்குநிகரென்னமுகமின்ன
வெப்புலனுமேயறிதலென்னும்வகையாற்பைங்
கற்பூரமெடுத்துமடிகட்டினர்நடந்தார். (௨௰)

(இ-ள்.) மைப்பரவை யென்ன நிறை - கருங்கடல்போல நிறைந்த, மன்னன் உறு சேனையில் - வேந்தனது மிக்க சேனையில், பனிமதிக்கு நிகர் என்ன - குளிர்ச்சி பொருந்திய சந்திரனுக்கு நிகரொன்னும்படி, முகம் மின்ன - முகமானது விளங்க, எப்புலனுமே அறிதல் என்னும் வகையால் - எவ்வகைப்பட்ட அறிவுநூல்களையும் அறிய மியற்கையுள்ளவரென்னும் வகையை யாவரு மறியும்படி, பைகற்பூரம் எடுத்து - பசிய கற்பூரத்தை யெடுத்து, மடிகட்டினர் நடந்தார் - மடியிற் கட்டிக்கொண்டு நடந்தனர், எ-று.

வேந்தனுறுசூழலின்விரைந்தணுகலோடுஞ்
சூழ்ந்துபுலவோரெதிர்துவன்றிமுறையாலே
பூந்தவிசளித்துமிகுபூசனைபுரிந்தார்
வாய்ந்தவெதிராசர்பதமன்னுமுளனுக்கே. (௨௧)

(இ-ள்.) வேந்தன் உறு சூழலின் - அரசன் பொருந்தியிருக்கு மிடத்தின், விரைந்து அணுகலோடும் - விரைந்து சேர்ந்த அளவில், வாய்ந்த - கிடைத்த, எதிராசர் பதம் - யதிராஜரது திருவடிகள், மன்னும் - நிலைபெற்றிருக்கிற, உளனுக்கு - மனத்தையுடைய கூரத்தாழ்வானுக்கு, சூழ்ந்த புலவோர் - அவ்விடத்துச் சூழ்ந்திருந்த புலவர்கள், எதிர் துவன்றி - எதிரில் வந்து நெருங்கி, முறையாலே - கிரமமாக, பூந்தவிசு அளித்து - அழகிய ஆசனங்கொடுத்து, மிகு பூசனை புரிந்தார் - மிகுந்த பூசைகளைச் செய்தார்கள், எ-று.

இன்பமுடனிவ்வணமிருப்பவெழினூலா
ரன்பழியிலெதிதலைவரன்றிவரெனச்சொற்
பின்பிரதமத்தகளிறச்சவபெலன்கண்
முன்பிரளயக்கடலின்மொய்த்திடவிடுத்தார். (௨௨)

(இ-ள்.) இன்பமுடன் இவ்வண்ணம் இருப்ப - இன்பத்துடன் இவ்வாறிருக்க, எழில் நாலூரன் - அழகிய நாலூரான், பழியில் எதிதலைவர் இவர் அன்று - நிந்தையில்லாத யதிராஜர் இவரல்லர், எனச் சொற் பின்பு - என்று சொன்ன பிறகு, இரதம் - தேர், மத்தகளிறு - மதயானை, அச்சுவபெலன்கள் - குதிரை கால் பலங்கள் ஆகிய இவைகளை, முன் - முன்னே, பிரளயக்கடலின் மொய்த்திட - பிரளய கால சமுத்திரம்போல மூடி நெருங்கும்படி, விடுத்தார் - அனுப்பினார்கள், எ-று.

ஓடினெதிர்த்தலைவருந்தவிடமெங்குந்
தேடினர்மேனாட்டுநெறிசென்றிடுமவ்வேலை
நாடினர்வெள்ளாடையுடனாலுவரிவரென்றே
யாடியகறங்கெனவடர்ந்துதொடர்காலை. (௨௩)

(இ-ள்.) ஓடினர் - ஓடி, எதித்தலைவர் உற்ற இடம் எங்கும் - யதிராஜர் போனவிடமெல்லாம், தேடினர் - தேடி, மேல் நாட்டு நெறி - மேல் நாட்டு வழியே, சென்றிடும் அவ்வேலை - செல்லுகின்ற அந்தக்காலத்தில், நாடினர் - ஆராய்ந்து, வெள் ஆடை புனை நால்வர் இவர் என்று - வெள்ளை வஸ்திரந் தரித்த இவர் நால்வரே யென்று நிச்சயித்து, ஆடிய கறங்கு என - அசையாநின்ற காற்றாடிபோல, அடர்ந்து தொடர்காலை - நெருங்கித்தொடரும் சமயத்தில், எ-று.

## வேறு.

தொடரவருந்துரகச்சேனைகண்டனர்தூமனத்தா
லிடரறச்சீரங்கமேனாட்டடியர்க்கிசைந்துனது
மடலவிழம்புயத்தாட்புகழோதமகிழ்ந்தருள்வாய்
தடவரைத்தோட்சக்கரபாணிசார்ங்கவிற்சேவகனே. (உச)

(இ-ள்.) தொடரவரும் - தொடர்ந்து வருகின்ற, துரகச்சேனை கண்டனர் - குதிரைப்படையைக்கண்டு, தூமனத்தால் - பரிசுத்தமாகிய மனத்தினால், இடர் அற - துன்பமொழிய, சீரங்க - ஸ்ரீ ரங்கநாயகனே, மேனாட்டு அடியர்க்கு இசைந்து - மேனாட் டடியார்க் கிணங்கி, உனது - உன்னுடைய, மடல் அவிழ் - இதழ்விரிந்த, அம்புயத்தாள் - தாமரைமலர்போன்ற திருவடிகளின், புகழ் ஓத - ப்ரபாவத்தை யெடுத்துச் சொல்லும்படி, மகிழ்ந்தருள்வாய் - (எங்களுக்கு) திருவுள்ள மகிழ்ந்தருள்வாயாக, தடவரைத்தோள் - பெரிய மலைபோன்ற தோள்களையும், சக்கரபாணி - திருவாழியை யேந்திய கையினையும், சார்ங்கவில் - சார்ங்கமென்னும் வில்லையுமுடைய, சேவகனே - மஹா வீரனே, எ-று.

என்றங்ஙனம்புவிமெல்வனைந்தேகினரெண்ணில்குழாஞ்
சென்றங்ஙனந்தொடரத்தேவதேவன்சிலைவளைத்துப்
பொன்றும்படியெய்தனனதுகண்டுபுரவலனுக்
கொன்றும்படியுரைத்தாரதுகேட்டனனுள்ளயர்ந்தான். (உரு)

(இ-ள்.) என்று - என்று சொல்லி, அங்ஙனம் - அவ்விடத்து, புவி - பூமியை, மெல்வனைந்து ஏகினர் - மெல்ல விட்டுச் சென்றார்கள், எண் இல் குழாம் சென்று - கணக்கற்ற கூட்டங்கள் சென்று, அங்ஙனம் தொடர - அவ்விடத்துத் தொடர, தேவதேவன் - தேவாதி தேவனாகிய ஸ்ரீ ரங்கநாயகர், சிலை வளைத்து - வில்லைவளைத்து, பொன்றும்படி - (தொடர்ந்து வந்தவர்) இறக்கும்படி, எய்தனன் - பாணங்களைப் பிரயோகித்தார், அதுகண்டு - (அங்குள்ளார்) அதனைக்கண்டு, புரவலனுக்கு - அரசனுக்கு, ஒன்றும்படி உரைத்தார் - பொருந்தும்படி சொன்னார்கள், அது கேட்டனன் - (அரசன்) அதைக்கேட்டு, உள் அயர்ந்தான் - மனந்தளர்ந்தான், எ-று.

அங்கிருந்தேகினர்பல்லடியாருடனன்புமிகுங்
கொங்குப்பிராட்டியிடத்தவள்கொண்கன்குணந்திருத்திச்
சங்கொடுசக்கரஞ்சாத்தியருள்புரிந்தாரவண்வி
டிங்கிதமாம்பருத்திக்கொல்லையம்மனிடத்தடைந்தார். (உசா)



(இ-ள்.) அங்கு இருந்து ஏகினர் - அவ்விடத்துநின்றும் போய், பல்அடியாருடன் - பலஅடியார்களோடு, அன்புமிகும் - அன்புமிகுந்த, கொங்குப்பிராட்டியிடத்து - கொங்குப்பிராட்டியி னிடத்தில், அவள் கொண்கன் - அவள்கணவனது, குணம்திருத்தி - குணத்தைத்திருத்தி, சங்கொடுசக்கரஞ் சாத்தி - சங்கசக்ரலாஞ்சனங்களைத்தரிக்கப்பண்ணி, அருள்புரிந்தார் - அருள் செய்தார், அவண்விட்டு - அவ்விடம்விட்டு, இங்கிதம் ஆம் - குறிப்பாகிய, பருத்திக்கொல்லை அம்மன் இடத்தடைந்தார் - பருத்திக்கொல்லை யம்மனிடத்தையடைந்தனர், எ-று.

கற்பினுயருமப்பூந்திருவன்னவள்கண்டளவில்
புற்பனியின்பத்துறையுடலெட்டிக்குப்பூரணமாய்
விற்பனைசெய்தடியாரனைவோருக்கும்வேண்டியன
நற்பயன்கொள்பவடானளித்தேசரணண்ணினளே. (உஎ)

(இ-ள்.) கற்பில் உயரும் - கற்பினில் உயர்ந்திட்ட, அப்பூந்திரு அன்னவள் - அந்த அழகிய திருமகளை யொத்தவள், கண்ட அளவில் - பார்த்தஅளவில், புல்பனி இன்பத்துறையுடல் - புல்லின் நுனியிலுள்ள சிறிய பனித்துளி போன்ற சிற்றின்பத்துறையாகிய தன்சரீரத்தை, எட்டிக்கு - தன்மீது ஆசை வைத்திருந்த ஒருவணிகனுக்கு, பூரணமாய் - பூர்த்தியாய், விற்பனைசெய்து - விற்று, அடியார் அனைவோருக்கும் - அடியாரெல்லாருக்கும், வேண்டியன - வேண்டியவற்றை, நல்பயன்கொள்பவள் - நல்ல பயன்கொள்பவளாகிய பருத்திக்கொல்லை யம்மன், அளித்து - கொடுத்து, சரண் நண்ணினள் - திருவடியை ஆசிரயித்தாள், எ-று.

அன்னவட்காரருள்செய்தங்ககன்றனரண்டர்களு
மின்னிசையாழ்கந்திருவர்முனிவரிறைஞ்சிப்பனி
துன்னியயாதவவெற்புந்திரையிற்சுடர்மணியார்
பொன்னியுஞ்சூழ்ந்தொளிர்மேலரங்கந்தனிற்போயங்ஙனே. (உஅ)

(இ-ள்.) அன்னவட்கு - அந்தக்கொங்குப்பிராட்டிக்கு, ஆர் அருள்செய்து - அரிய அருள்செய்து, அங்கு - அவ்விடத்து நின்றும், அகன்றனர் - நீங்கினவராய், அண்டர்களும் - தேவர்களும், இன்இசை - இனிதாகிய இசைபாடுதற்குரிய, யாழ் - யாழையுடைய, கந்திருவர் - கந்தருவரும், முனிவர் - முனிவரும், இறைஞ்சி - வணங்கி, பனி துன்னிய - குளிர்ச்சி பொருந்திய, யாதவவெற்பும் - யதுகிரியும், திரையில் - அலைகளில், சுடர்மணி ஆர் - காந்தியுள்ள ரத்நங்கள்நிறைந்த, பொன்னியும் - காவேரிநதியும், சூழ்ந்து ஒளிர் - சூழப்பெற்று விளங்காநின்ற, மேல்அரங்கம்தனில்போய் - மேலைத்திருவரங்கத்துக்குப்போய், அங்ஙன் - அவ்விடத்தில், எ-று.

வண்டினந்தேனுண்டிசைபாடியமலர்க்காவினிற்றன்
றொண்டரெல்லாம்புடைசூழவிருந்துயர்தூயநெறிப்
பண்டைப்பொருள்விரித்தோதியஞான்றப்பதிக்கரசந்
தொண்டொடிக்கன்னிகைவெங்குட்டநோயினுழன்றுபன்னாள். (உகூ)

(இ-ள்.) வண்டினம் - வண்டுக்கூட்டங்கள், தேன் உண்டு - மதுவைப் பருகி, இசைபாடிய - இராகங்களைப்பாடாநின்ற, மலர்க்காவினில் - பூஞ்சோலையில், தன்தொண்டர் எல்லாம் - தன்னடியாரெல்லாரும், புடைசூழ இருந்து - பக்கத்தில் சூழும்படி வீற்றிருந்து, உய்யும் - உஜ்ஜீவிக்கதற்குரிய, தூயநெறி - பரிசுத்தமாகிய மார்க்கத்தின், பண்டைப்பொருள் - பழமையாகிய அர்த்தவிசேஷத்தை, விரித்துஓதியஞான்று - விசதீகரித்துச்சொல்லியகாலத்தில், அப்பதிக்கருத்தன் - அந்தவூர்க்கதிகாரியின், ஒண்டொடிக்கன்னிகை - ஒள்ளியவளையலையணிந்த பெண்ணானவள், வெங்குட்டநோயின் - வெவ்விய குஷ்டநோயினால், பல்நாள் உழன்று - பல நாள் வருந்தி, எ-று.

அந்நோய்க்கருமருந்தாமெதிராசரடியிணையின்
முன்னாகவன்னவளன்னைவந்தெய்தியென்மொய்குழலா
டன்னாகத்துற்றிடுநோய்தவிர்த்தாளுன்சரணமெனப்
பன்னாகந்தெந்தைநற்றீர்த்தப்பிரசாதம்பகிர்ந்தனனே. (௫௰)

(இ-ள்.) அந்நோய்க்கு - அந்த வியாதிக்கு, அருமருந்து ஆம் - அரியமருந்தாகிய, எதிராசர் - எதிராஜரது, அடியிணையின் முன்னாக - திருவடியிணைக்கெதிராக, அன்னவள் அன்னைவந்துஎய்தி - அவள் தாயானவள் வந்தடைந்து, என்மொய் குழலாள்தன் - என் பெண்ணானவளுடைய, ஆகத்து - சரீரத்தில், உற்றிடும் - அடைந்திருக்கிற, நோய்தவிர்த்து - நோயைநீக்கி, ஆள் - ஆள்வாயாக, உன்சரணம் என - உன்னடைக்கலமென்று சொல்ல, பன் - துதித்தற்குரிய, நாகத்துஎந்தை - ஆதிசேஷாவதாரமாகிய ஸ்ரீபாஷ்யகாரர், நல் - விலக்ஷணமான, தீர்த்தப்ரசாதம் - தீர்த்தப்ரஸாதங்களை, பகிர்ந்தனன் - (அவளுக்கு) ப்ரஸாதித்தருளினர், எ-று.

அன்பிட்டதீர்த்தப்பிரசாதத்தையுட்கொண்டவன்னவளே
யென்பட்டதென்னிலொளிபட்டகாரிருளேர்ப்பரிதி
முன்பட்டபுன்பனிதீப்பட்டபஞ்செனமோதலைநீ
ரின்பட்டநஞ்சன்னநோயகன்றேகியதென்சொல்வனே. (௫௧)

(இ-ள்.) அன்பு இட்ட - அன்போடுப்ரஸாதித்த, தீர்த்தப்ரசாதம் - தீர்த்தப்ரஸாதங்களை, கொள்ளப்பட்ட - ஸ்வீகரிக்கப்பெற்ற, அன்னவள்நோய் - அவளதுவியாதியானது, என்பட்டது என்னின் - என்னபாடுபட்டதென்றால், ஒளிபட்ட காரிருள் - ஒளிக்கெதிர்ப்பட்ட கரிய இருளும், ஏர்பரிதி முன்பட்ட - அழகிய சூரியனுக்கெதிர்ப்பட்ட, புன்பனி - புல்லியபனியும், தீப்பட்டபஞ்சு - நெருப்புக்கெதிர்ப்பட்டபஞ்சும், என - போல, மோது - மோதுகின்ற, அலை - அலைகளையுடைய, நீரின் - சமுத்ர நீரினிடத்து, பட்ட - உண்டாகிய, நஞ்சு அன்ன - நஞ்சையொத்த, நோய் அகலப்பட்டது - வியாதிநீங்கப்பெற்ற தன்மையை, என்சொல்வன் - என்னென்றெடுத்துச்சொல்வேன், எ-று.

வெங்குட்டநோயிந்தவாறகன்றின்புற்றமெல்லியலை
யங்குற்றவன்னையும்யாவருங்கண்டுள்ளதிசயித்தார்
இங்குற்றமாதவர்செய்செயலீதென்றிறைக்குரைத்தார்
எங்கத்தனுமவனென்றென்றரசனிறைஞ்சியங்கே. (௫௨)



(இ-ள்.) வெங்குட்டநோய் - வெவ்வியகுட்டநோயானது, இந்தவாறு அகன்று - இவ்வாறுநீங்கி, இன்புஉற்ற - சுகமடைந்த, மெல்லியலை - பெண்ணை, அங்குஉற்ற அன்னையும் - அவ்விடத்துப்பொருந்திய தாயும், யாவரும் - மற்றெல்லாரும், கண்டு - பார்த்து, உள்அதிசயித்தார் - மனத்தில் அதிசயப்பட்டார்கள், இங்குஉற்ற - இவ்விடத்திலெழுந்தருளிய, மாதவர்செய்செயல் ஈதுஎன்று - தபோதநர் செய்யுஞ் செய்கையிதுவென்று, இறைக்கு உரைத்தார் - (அவ்விடத்துள்ளார்) அரசனுக்குச்சொன்னார்கள், அத்தன் ஆம் அவன் எங்கு என்று என்று - தெய்வமாகிய அவன் எங்கேயென்று பலமுறைகேட்டு, அரசன் - வேந்தனானவன், இறைஞ்சி - பணிந்து, அங்கே - அவ்விடத்திலே, எ-று.

மன்னியபேரிருண்மாண்டின்பமெய்தும்வழியதனைத்
துன்னியவேந்தன்சுடர்மணிவேய்ந்தசிவிகையுடன்
றன்னுணர்வன்னவமைச்சனையேவியச்சாத்துவிக
முன்னவனைத்தொழுதேகொணர்கென்னமொழிந்தனனே. (௫௩)

(இ-ள்.) மன்னிய - நிலைபெற்ற, பேர் இருள் - பெரிய அஞ்ஞானவிருளானது, மாண்டு - நசிக்கப்பெற்று, இன்பம் எய்தும் வழியதனை - சுகமடையும் நெறியை, துன்னிய வேந்தன் - பொருந்திய அரசன், சுடர்மணி வேய்ந்த - ஒளியையுடைய மணிகளிழைத்த, சிவிகையுடன் - சிவிகையோடு, தன் உணர்வு அன்ன - தன்னறிவுக்குச் சமானமான அறிவையுடைய, அமைச்சனை ஏவி - அமைச்சனையனுப்பி, அ - அந்த, சாத்துவிக முன்னவனை - சாத்துவிக குணத்தால் முற்பட்டவனை, தொழுது - வணங்கி, கொணர்க என்ன - அழைத்து வாருங்களென்று, மொழிந்தனன் - சொன்னான், எ-று.

மொழிந்தபடியங்ஙனேகுதல்கண்டனர்முக்குறும்பா
லழிந்தவறிவினர்மையொத்தநெஞ்சரனல்விழிய
ரிழிந்தகுணமென்னுந்தாமதத்தெய்வங்களேபரமென்
றொழிந்தொழிந்திப்புவியிற்பிறந்தெய்த்திடுமூணர்களே. (௫௪)

(இ-ள்.) மொழிந்தபடி - சொல்லியபடியே, அங்ஙன் - அவ்விடத்து, ஏகுதல் - போவதை, முக்குறும்பால் - முக்குற்றத்தால், அழிந்த அறிவினர் - நசித்த அறிவினையுடையவரும், மை ஒத்த நெஞ்சர் - இருளை யொத்த மனத்தினையுடைய வரும், அனல் விழியர் - நெருப்பையொத்த கண்களையுடையவரும், இழிந்த குணம் என்னும் - தாழ்ந்த குணமென்கிற, தாமதத் தெய்வங்களே - தாமஸ தேவதைகளே, பரம் என்று - பரம்பொருளென்று, ஒழிந்து ஒழிந்து - பரம்பொருளை விட்டு விட்டு, இப்புவியில் - இந்தப் பூமியின்மேல், பிறந்து - ஜநிமித்து, எய்த்திடும் - இளைக்கின்ற, ஊணர்கள் - மிலேச்சர்களுமாகிய பேர்கள், கண்டனர் - பார்த்தார்கள், எ-று.

எண்ணிலர்வீரசைவத்தோர்கற்பூண்டவிதயத்தினோர்
நண்ணினரங்குமதித்தனர்பித்தன்கொளம்மரசன்
பண்ணியதென்னிதுவென்றிகழ்ந்தார்வரும்பண்பழியாக்
கண்ணியநெஞ்சினோர்வேந்தன்முன்சேர்ந்துரைக்குழுவரே. (௫௫)

(இ-ள்.) எண் இலர் - கணக்கற்றவர்களாகிய, வீர சைவத்தோர் - வீர சைவத்தை யுடையவரும், கல் பூண்ட இதயத்தினோர் - லிங்கத்தைத் தாங்கிய மார்பையுடையவரும், நண்ணினர் - வந்து, அங்கு - அவ்விடத்து, மறித்தனர் - தடுத்து, நம் அரசன் - நமது வேந்தன், பித்தன்கொல் - பித்தனோ, பண்ணியது இது என் என்று இகழ்ந்தார் - (இவன்) செய்ததாகிய இந்தக்காரியம் என்னையென்று பரிஹஸித்து, வரும் பண்பு அறியா - இனி வரப்போகிற காரியத்தை யறியாமல், கன்னிய நெஞ்சினர் - புழுங்கிய நெஞ்சத்தையுடையவர்களாகி, வேந்தன் முன் ஓடி - அரசனுக்கு எதிரில் ஓடி, கழறுவர் - சொல்வாராயினர், எ-று.

எந்திரந்தந்திரமியாதோவவன்செயலெண்ணினையோ
நந்தமையெண்ணிலையோவிதுநன்றுநன்றென்னநக்கார்
சிந்தைசெய்தாங்கொருசூளுரைத்தாரெங்கள்சீர்த்திறலும்
வந்தங்கிருப்பவன்றன்றிறல்காண்டிவெல்வாதிலென்றார். (௩௬)

(இ-ள்.) எந்திரம் தந்திரம் யாதோ - யந்த்ரதந்த்ரங்களில் யாதோ ஒன்றை, அவன் செயல் - அவன் செய்வதை, எண்ணினையோ - ஒருபொருளாகக் கருதினையோ, நந்தமை எண்ணிலையோ - எங்களை மதித்திலையோ, இது நன்று நன்று - இது அழகிது அழகிது, என்று நக்கார் - என்று சிரித்தார்கள், (சிரித்து) சிந்தை செய்து - ஆலோசித்து, ஆங்கு - அப்பொழுதே, ஒரு சூள் உரைத்தார் - ஒரு ஏற்பாட்டைச் சொன்னார்கள், (அதாவது) எங்கள் சீர்திறலும் - எங்களுடைய சிறப்பாகிய கல்வித்திறத்தையும், அங்கு வந்திருப்பவன் தன் திறல் - அங்கு வந்திருப்பவனது கல்வித்திறத்தையும், வெல்வாதில் காண்டி என்றார் - (ஒருவரையொருவர்) வெல்லுதற்குரிய தர்க்க சாஸ்த்ராதி வாதத்தில் பார்க்கக் கடவை யென்றார்கள், எ-று.

என்றலுந்தோற்றவர்யாரேனுங்கற்செக்கிலிட்டரைப்ப
தொன்றுமலாற்செயன்மற்றிலையென்றுமன்னோதலுமே
நன்றுநன்றென்றனரெம்மெதிராசருநற்சிவிகை
யொன்றிவந்தங்கணிதுபோதுமென்றனருண்மகிழ்ந்தே. (௩௭)

(இ-ள்.) என்றலும் - என்றுசொல்லுதலும், தோற்றவர்யாரேனும் - தோற்றவர்கள் யாராயிருந்தாலும், (அவரை) கல்செக்கில் இட்டு அரைப்பது - கற்செக்கில் இட்டு அரைப்பதாகிய, ஒன்றும் அல்லால் - ஒருகாரியமே யல்லது, செயல்மற்று இல்லையென்று, செய்யவேண்டிய காரியம் வேறில்லை யென்று, மன் ஓதலும் - அரசன் சொன்ன அளவில், நன்று நன்று என்றனர் - (இந்த ஏற்பாடு) அழகிது அழகிது என்றார்கள், எம் எதிராசரும் - எங்கள் எதிராஜரும், நல்சிவிகை ஒன்றிவந்து - நல்ல சிவிகையேறிவந்து, அங்கண் - அவ்விடத்து, உள்மகிழ்ந்து இதுபோதும் என்றனர் - மனமகிழ்ந்து இதுவே போதும் என்றார், எ-று.



இன்னணஞ்சூளுரைவைத்தபின்சைவரெனுங்கயங்க
ளின்னியகாட்டிடையோர்கோளரியெனத்தூயவையின்
மன்னியவெம்பெருமானார்புடைதொறும்வைகியங்கே
பன்னியவாதகளுன்னிமுன்னாகப்பகர்ந்தனரே. (௩௮)

(இ-ள்.) இன்னணம் - இவ்வாறு, சூள்உரைவைத்தபின் - நியதியான சொல் ஏற்படுத்தப்பட்ட பிறகு, சைவர் என்னும் கயங்கள் - சைவர்கள் என்கிற யானைகள், துன்னியகாட்டிடை - நெருங்கியவனத்தில், ஓர்கோளரிஎன - ஒரு ஆண்சிங்கம் போல, தூயஅவையில் - பரிசுத்தமாகிய சபையில், மன்னிய - நிலைபெற்றிருந்த, எம்பெருமானார் புடைதொறும்வைகி - எம்பெருமானார் பக்கங்களிலெல்லாம் தங்கி, அங்கே - அவ்விடத்தே, பன்னிய வாதுகள் உன்னி - (தர்க்கநூல் முதலியவைகளில்) எடுத்துச் சொல்லப்பட்டுள்ள வாதங்களை நினைத்து, முன்னாகப்பகர்ந்தனர் - முன்னதாகச்சொல்லி வியவகரித்தார்கள், எ-று.

காரெனமொய்த்தங்குகத்தியமூர்க்கரைக்கஞ்சத்திரு
நாரணன்றாண்மனமார்எதிராசனென்னாதன்சண்ட
மாருதமென்னக்கலக்கிவெலக்கண்டமன்மகிழ்ந்தாங்
கோரெழுகற்செக்கிலிட்டரைத்தான்றொண்டனூர்தனிலே. (௩௯)

(இ-ள்.) அங்கு - அவ்விடத்தில், காரெனமொய்த்து - மேகம்போல வளைந்துகொண்டு, கத்திய மூர்க்கரை - இரைச்சலிட்ட மூர்க்கர்களை, கஞ்சத்திரு - தாமரைமலரில் வீற்றிருக்கிற பெரியபிராட்டியாரையுடைய, நாரணன்தாள் - ஸ்ரீமந் நாராயணனது திருவடிகள், மனம் ஆர் - தன்மனத்தில்பொருந்திய, எதிராசன் - யதிராஜனாகிய, என்நாதன் - என்னிறைவன், சண்டமாருதம் என்னகலக்கி - சண்டமாருதம்போல அவர்களைக்கலங்கப்பண்ணி, வெல்லக் கண்ட - வெல்லப்பார்த்து, மன் - வேந்தன், மகிழ்ந்து - சந்தோஷித்து, ஆங்கு - அப்பொழுதே - ஓர்எழுகல்செக்கில் இட்டு அரைத்தான் - எழுகற்செக்குகளில் அவர்களை இட்டு அரைப்பித்தான், தொண்டனூர் தன்னில் - தொண்டனூரில், எ-று.

தர்க்கச்சமணருஞ்சாக்கியப்பேய்களுந்தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பருஞ்சூனியவாதருநான்மறையு
நிற்கக்குறும்புசெய்நீசருமாண்டனர்நீணிலத்தே
பொற்கற்பகமெம்பிராமானுசமுனிபோந்தபின்னே. (௪௰)

(இ-ள்.) நீள்நிலத்தே - நெடியவுலகத்தில், பொன்கற்பகம் - அழகிய கற்பகவிருக்ஷம் போல்பவராகிய, எம் இராமானுச முனிபோந்தபின் - எம்பிராமானுஜமுநிவர் அவதரித்த பிறகு, தர்க்கச்சமணரும் - தர்க்கஞ்செய்வதில் வலியராகிய சமணர்களும், சாக்கியப்பேய்களும் - சாக்கியரென்கிற பிசாசங்களும், தாழ்சடையோன் சொல்கற்ற - நீண்டசடாபாரத்தையுடைய சிவபெருமானால் சொல்லப்பட்ட சிவாகமங்களைக்கற்ற, சோம்பரும் - சோம்பலுடையாரும், சூனியவாதரும் - சூன்யவாதிகளும், நான்மறையும் நிற்க - நான்கு வேதப்ரமாணங்களா

யெ சதுர்வேதங்களும் இருக்கச்செய்தே, குறும்புசெய் - அவைகளுக்கு அபார்த்தங்களைக்கற்பிக்கிற, நீசரும் - நீசர்களும், மாண்டனர் - நசித்தார்கள், எ-று.

கங்குலிரவிமுன்காணுதுபோல்வென்றநகரிலையவ்வூர்
தங்குமற்றோருடன்வேந்தனுமுய்ந்துன்சரணடைந்தோ
மெங்கட்கருளென்னச்சங்காழியொற்றியெழிற்றிருமண்
அங்கவர்சாத்திடமந்திரகன்மமளித்தபின்னே. (௪௧)

(இ-ள்.) கங்குல் இரவிமுன் காணுதுபோல் - இருளானது சூரியனுக்கெதிரில் காணப்படாமல் நசிக்கு மாறுபோல, வென்றநகரிலே - (நசிக்கும்படி ப்ரதி பக்ஷத்தாரை) ஜெயித்தகாலத்தில், அவ்வூர்தங்குமற்றோருடன் - அவ்வூரில் தங்கியிருக்கிற மற்றையருடன், வேந்தனும் உய்ந்து - அரசனும் உஜ்ஜீவித்து, உன்சரண் அடைந்தோம் - உன்திருவடியை ஆச்ரயித்தோம், எங்கட்கு அருள்என்ன - எங்களுக்கு அருள்புரியவேண்டும் என்று பிரார்த்திக்க, (அப்படியே உடையவரும்) சங்கு ஆழி ஒற்றி - சங்கசக்ரலாஞ்சநங்களை ப்ரஸாதித்து, எழில் - அழகையுடைய, திருமண் - திருமண்ணை, அங்கு - அப்பொழுதே, அவர்சாத்திட - அவர்கள்தரித்துக்கொள்ள, மந்திரம் கன்மம் - (வேண்டிய) மந்த்ரகார்யங்களை, அளித்தபின் - அருள்செய்தபிறகு, எ-று.

என்னைப்புவியிலொருபொருளாக்கிமருள்சுரந்த
முன்னைப்பழவினைவேரறுத்தாழிமுதல்வனையே
பன்னப்பணித்தவிராமானுசன்பரன்பாதமுமென்
சென்னித்தரிக்கவைத்தானெனக்கேதுஞ்சிதையில்லையே. (௪௨)

(இ-ள்.) என்னை - அடியேனை, புவியில் - பூமியில், ஒருபொருள் ஆக்கி - ஒருபொருளாக மதித்து, மருள்சுரந்த - அஜ்ஞாந மயக்கத்தினால் உண்டாகிய, முன்னை பழவினை - முன்னையதாகிய பூர்வகர்மங்களை, வேர்அறுத்து - வேரோடறுத்து, ஆழிமுதல்வனையேபன்ன - ஆழிமுதல்வனாகிய ஸ்ரீயஃபதியையே துதிக்கும்படி, பணித்த - நியமித்த, இராமாநுசன் - ஸ்ரீபாஷ்யகாரராகிய, பரன்பாதமும் - மேலானவர் தன்னுடையதிருவடிகளையும், என்சென்னி தரிக்கவைத்தான் - என்சிரசின்மீது தரித்திடும்படி வைத்தருளினார், எனக்கு ஏதும் சிதைவு இல்லை - (இனி) எனக்குச்சிறிதும் கெடுதியில்லை, எ-று.

என்றரசேத்திப்பலகாற்பணிந்தனனின்பநெறி
துன்றினனெம்பெருமானாரடியார்தொகுதியுட
னன்றந்தவூர்ப்பெயர்மேனாடெனனிச்சயமெனவே
நின்றதுபேரின்பமெங்குமெவர்க்குநிறைந்ததுவே. (௪௩)

(இ-ள்.) என்று அரசு ஏத்தி - என்று அரசன் துதித்து, பலகால்பணிந்தனன் - பலமுறைவணங்கி, இன்பநெறி - சுகத்துக்கேதுவாகிய மார்க்கத்தை, துன்றினன் - பொருந்தினவனாய் - எம்பெருமானார் அடியார் தொகுதியுடன் - ஸ்ரீபாஷ்யகாரருடைய அடியவர் கூட்டத்தோடு, அன்று - அப்பொழுது, அந்தவூர்ப்பெயர் - அந்தவூரின்பெயர், மேல்நாடெனல் - மேநாடென்று சொல்லுதல், நிச்சயம் என - நிச்சயமென்று சொல்ல, எங்கும் - (அந்நாட்டின்) எவ்விடத்திலும், எவர்க்கும் - யாவருக்கும், பேரின்பம் - பேரானந்தம், நின்றது - நிலைபெற்றதாகி, நிறைந்தது - பூர்ணமாயிற்று, எ-று.



வேறு.

இப்படியங்கனைவோருமிலங்கிடுங்காலியாதவவெற்
பங்கற்புதமாந்திருநாராயணப்பெருமானங்கிலதாற்
செப்பியநற்றீபமிலாத்திருமனையாஞ்செய்கைகண்டா
ரப்பதிநின்றடியருடனருளுடையவருமெழுந்தே. (௪௪)

(இ-ள்.) இப்படி - இவ்வாறு, அங்கு - அவ்விடத்தில், அனைவோரும் - எல்லாரும், இலங்கிடுங்கால் - விளங்குமிடத்து, யாதவவெற்பு - யதுகிரியாகிய, அங்கு - அவ்விடத்தில், அற்புதம் ஆம் - ஆச்சர்யகரமான, திருநாராயணப் பெருமான் - திருநாராயணப்பெருமான், இலதால் - இல்லாமையால், செப்பிய நல் தீபம் இல்லா - சொல்லப்பட்ட நல்ல தீபமில்லாத, திருமனை ஆம் செய்கைகண்டார் - திருமாளிகையை யொத்திருக்குஞ் செய்தியைப்பார்த்து, அப்பதிநின்று - அவ்வூரினின்றும், அடியருடன் - அடியார்களோடு, அருள் - பெருமாளது திருவருளுக்கிலக்காகிய, உடையவரும் எழுந்து - ஸ்ரீபாஷ்யகாரரும் எழுந்து, எ-று.

திறல்வேந்தர்கப்பமிட்டுச்சென்னிவணங்கிடுந்தில்லிக்
கிறையின்றநகன்னிகரத்திருந்தாவிளையாடுதல்கேட்
டுறையாநின்றனரவ்வூருறைமுருந்தபரிப்பாகர்
முறையாற்கண்டுய்யவெதிராசனைக்கண்டார். (௪௫)

(இ-ள்.) திறல் வேந்தர் - வெற்றியையுடைய அரசர்கள், கப்பம் இட்டு - திறையிட்டு, சென்னி வணங்கிடும் - சிரசினால் வணங்குகின்ற, தில்லிக்கு இறை - டில்லி நகர்க்கரசனானவன் பெற்றசெல்வியின், கரத்து இருந்து - ன்றகன்னி - கையிலிருந்து கொண்டு, விளையாடுதல் கேட்டு - விளையாடுவதைக் கேள்வியுற்று, உறையாநின்றனர் அவ்வூர்உறைமுருந்தபரிபாகர் - அவ்வூரில் வாசம் பண்ணுவோராயிருந்த பரிபாகர், முறைபால் கண்டு - க்ரமமாகத் தம்மைச் சேவித்து, உய்ய - உஜ்ஜீவிக்கும்படி, எதிராசர் - யதிராஜர், அரசனைக்கண்டார் - அவ்வேந்தனைக்கண்டனர், எ-று.

அங்கவனுந்தொழுதுதவிசளித்ததற்பின்னாசிசொல்
யிங்குறையுந்திருநாராயணனையளித்திடுதியென
வெங்கண்மனைச்சரக்கறையிலிருந்திடுவிக்கிரகமதி
லங்களிறைபுரிப்பொடியுனாத்திடுமெனவுரைத்தான். (௪௬)

(இ-ள்.) அங்கு - அப்பொழுது, அவனும் - அவ்வரசனும், தொழுது - பணிந்து, தவிசு அளித்த அதன்பின் - ஆசனங்கொடுத்ததின்பிறகு, ஆசிசொலி - மங்களாசாஸநம்பண்ணி, இங்கு - இவ்விடத்தில், உறை - வாசம் பண்ணுகிற, எம் திருநாராயணனை - எமது திருநாராயணப்பெருமானை, அளித்திடுதி என -

கொடுக்கவேண்டும் என்று கேட்க, (அவ்வரசன்) எங்கள் மனை - எங்கள் அரண்மனையின், சரக்கு அறையில் - பண்டசாலையில், இருந்திடு விக்கிரகமதில் - இருக்கிற விக்ரஹங்களில், உங்கள் இறை - உங்கள் திருநாராயணப்பெருமாள், உறின் - இருப்பாராயின், தேடி உரைத்திடுமின் - தேடிச் சொல்லுங்கள், என உரைத்தான் - என்று சொன்னான், எ-று.

உரைத்தளவிலன்னவன்றன்சரக்கறையினுட்டேடி
விரைத்துளவன்றனைக்காணார்மெய்சோர்ந்துதுயில்காலை
திரைத்துயின்மால்கனவில்வந்துசெப்பினனிவ்வரசனது
விரைக்குழற்கன்னிகையிடத்தின்மேவினாமெனவதற்பின். (சஎ)

(இ-ள்.) உரைத்தளவில் - சொன்ன அளவில், அன்னவன்தன் - அவனது, சரக்கு அறையினுள் தேடி - பண்டசாலையினுள்ளே தேடி, விரைத்துளவன் தன்னை - பரிமளமுள்ள துழாய்மாலையை யணிந்த திருநாராயணப்பெருமாளை, காணார் - காணாதவர்களாய், மெய்சோர்ந்து - உடம்பு மறந்து, துயில் காலை - நித்திரைசெய்யுங்காலத்தில், திரை - பாற்கடலில், துயில் - யோகநித்திரைசெய்கிற, மால் - பெருமாள், கனவில்வந்து - ஸ்வப்நத்தில் எழுந்தருளி, இவ்வரசனது - இந்த வேந்தனது, விரைகுழல் - பூமணமமைந்த கூந்தலையுடைய, கன்னிகையிடத்தில் - செல்வப்புதல்வியினிடத்தில், நாம் மேவினம் - நாம் பொருந்தியிருக்கிறோம், எனச் செப்பினன் - என்று சொல்லினர், அதன்பின் - அதின்பிறகு, எ-று.

எந்தையெதிபதியவ்வாறிசைந்தரசுக்குரைப்பவென்றன்
கந்தமலர்க்குழலாட்டன்னையாரத்தந்திலளா
லுந்தமிறைபெனிற்றுதியாலுரைத்தழைத்துக்கொடுபோமென்
றந்தவுரைபுகன்றளவிலங்ககன்றோர்காவினுற்றே. (சஅ)

(இ-ள்.) எந்தை - எமது தந்தையாகிய, எதிபதி - யதிராஜர், அவ்வாறு இசைந்து - அவ்வண்ணமே மனமிசைந்து, அரசுக்குரைப்ப - வேந்தனுக்குச் சொல்ல, (அவன்) என்தன் - எனது, கந்தமலர் குழலாள் - வாசனை பொருந்திய மலரையணிந்த கூந்தலையுடையாளாகிய பெண்ணானவள், தன்னையாரத்தந்திலள் - தன்னையாரக்கொடாள், உம் தம் இறை எனின் - உமது பெருமாளாயின், துதியால் உரைத்து - ஸ்தோத்ரங்களாற் புகழ்ந்து கூறி, அழைத்துக்கொடுபோம் என்று - அழைத்துக்கொண்டு போங்கள் என்று, அந்த உரை புகன்ற அளவில் - அந்தச்சொல்லைச் சொன்ன அளவில், அங்கு அகன்று - அவ்விடத்தை விட்டு நீங்கி, ஓர்காவின் உற்று - ஒருசோலையையடைந்து, எ-று.

என்னுயிரோவின்னமுதேயெனப்பலவாய்த்துதித்திடுங்கா
லிந்நிலத்திலனைவருக்குமிவர்பெருமைவெளியிடுவான்
மன்னுமறைதேடரியான்மடியதனிற்குதித்ததற்பின்
பின்னமறநஞ்செல்வப்பிள்ளையோவெனவணைத்தார். (சகூ)



(இ-ள்.) என் உயிரோ - எனதுயிரோ, இன் அமுதே - இனிய அம்ருதமே, என - என்று, பல ஆய்த்துதித்திடுங்கால் - பலவகையாகத் துதிக்குமிடத்தில், இந்நிலத்தில் அனைவருக்கும் - இவ்வுலகத்திலுள்ள எல்லாருக்கும், இவர் பெருமைவெளியிடுவான் - இவரது மஹிமையை வெளிப்படுத்தும் பொருட்டு, மன்னும் - நிலைபெற்ற, மறைதேட அரியான் - வேதங்களாலும் தேடுதற்கரியவனாகிய திருநாராயணப்பெருமாள், மடியதனில் - மடியின்மீது, குதித்ததற்பின் - குதித்தபிறகு, பின்னம் அற - பேதமில்லாமல், நம் செல்வப்பிள்ளையோ என அணைத்தார் - நமது செல்வப்பிள்ளையோ வென்று சொல்லி அணைத்துக்கொண்டார் (ஸ்ரீபாஷ்யகாரர்), எ-று.

மன்னவன்கண்டதிசயித்தான்மன்னனருள்கன்னிகைதன்
னின்னுயிர்கொண்டேகலெனவெதிராசனெழுந்துசெலத்
தன்னுடலைமறந்தழுதத்தையதொடர்ந்திடும்போது
பின்னரந்தம்பரிசேனைப்பிடிபிடியென்றமைச்சர்விட. (ருய)

(இ-ள்.) மன்னவன்கண்டு அதிசயித்தான் - (இந்தச்செய்கையை) அரசன் பார்த்து அதிசயப்பட்டான், மன்னன் அருள் கன்னிகை - அவ்வரசன் பெற்ற கன்னிகையானவள், தன் இன் உயிர் கொண்டு ஏகல் என - தனது இனியவுயிரை யொருவர்கவர்ந்து கொண்டு போதல் போல, எதிராஜர் எழுந்து செல்ல - எதிராஜர் எழுந்துபோக, அத்தையல் - அந்தக் கன்னிகையானவள், தன் உடலை மறந்து அழுது - தன்னுடம்பை மறந்து அழுது, தொடர்ந்திடும்போது - (எதிராஜரைப்பின்) தொடர்ந்து செல்லும்போது, அமைச்சர் - மந்திரிமார்கள், பிடிபிடியென்று - பிடிபிடியென்று, பின் - அவர்க்குப்பின்னே, அநந்தம் பரிசேனைவிட - அளவற்ற பரிஜநங்களையனுப்ப, எ-று.

அக்கணமேசென்றனர்முன்னடிபணிந்தபரிப்பாகர்
மிக்கிருக்குமிடத்தவர்கள்விறற்சேனைவரக்கண்டு
புக்கனர்களெதிர்பொருதப்புரவலன்றன்றிருமகளுந்
தக்கவெதிராசருமியாதவகிரிநற்றலம்புகுந்தார். (ருக)

(இ-ள்.) அக்கணமே - அந்தக்ஷணமே, முன் அடிபணிந்த - முன்னே அடிவணங்கின, பரிப்பாகர் - குதிரைச்சேவகர்கள், சென்றனர் - வந்து, மிக்கிருக்குமிடத்து - மிகுதியாக விருக்குமிடத்தில், அவர்கள் - அவர்களுடைய, விறல்சேனைவரக்கண்டு - வலியமைந்த சேனைகள் வரப்பார்த்து, எதிர்பொருது புக்கனர்கள் - எதிரில் தடுத்துச் சண்டைசெய்ய வென்றோட்டப் போனார்கள், அப்புரவலன் தன் திருமகளும் - அந்தராஜகுமாரியும், தக்க - தகுதியுள்ள, எதிராஜரும் - எதிராஜரும், யாதவகிரி - யதுகிரியென்கிற, நற்றலம்புகுந்தார் - நல்ல ஸ்தலத்திற் பிரவேசித்தார்கள், எ-று.

அத்தலத்திற்றிருப்பணிகளனைத்தையுநன்குறப்புரிந்திப்
பைத்துளவநாரணற்குப்பரிவிற்பிரதிட்டையும்புரிந்து
மெய்த்தவடியார்களுடனிட்டிருந்திருக்கவெதிராசன்
வைத்தமனங்கருள்புரிந்தேயுவட்டுடனிற்றிருந்திடுகான். (ருஉ)

(இ-ள்.) அத்தலத்தில் - அந்தக்ஷேத்ரத்தில், திருப்பணிகள் அனைத்தையும் - திருப்பணிகளெல்லாவற்றையும், நன்றாய்த்திருத்தி - நன்றாகத்திருத்தப்பண்ணி, பைத்துளவம் - பசுமையாகிய துளவத்தையணிந்த, நாரணர்க்கு - திருநாராயணப்பெருமாளுக்கு, பயில்பிரதிட்டையும் புரிந்து - மிகுதியாகிய பிரதிஷ்டையும் செய்வித்து, மெய்த்த அடியார்களுடன் - உண்மையாகிய பாகவதர்களுடன், விட்டுணு சித்தாந்தம் பெருக - ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தம் ஓங்கும்படி, உத்தமன் - உத்தமராகிய ஸ்ரீபாஷ்யகாரர், அங்கு - அவ்விடத்தில், அருள்புரிந்து - அருள்செய்து, உவப்புடன் - திருவுள்ளக்களிப்போடு, வீற்றிருந்திடும் நாள் - வீற்றிருக்குங்காலத்தில், எ-று.

செம்பதுமத்திருவிளங்குந்திருவடிநாரணர்கோயி
லன்பினுடன்வலமாய்வந்தடிதொழுதங்கயிக்கியமாம்
பொன்புரைமெய்க்கன்னிதனைப்புகலருக்காச்சியே
எம்பெருமான்செயலிதுவோவெனமகிழ்ந்தாரெதிராசர். (௫௩)

(இ-ள்.) செம்பதுமத்திருவிளங்கும் - செந்தாமரை மலரினழகு விளங்குகின்ற, திருவடி - திருவடியையுடைய, நாரணர்கோயில் - திருநாராயணர் கோயிலை, அன்பினுடன் - அன்போடு, வலமாய்வந்து - ப்ரதக்ஷிணமாய்வந்து, அடிதொழுது - திருவடிபணிந்து, அங்கு - அவ்விடத்தில், அயிக்கியம் ஆம் - ஐக்யமாய்விட்ட, பொன்புரைமெய் - பொன்போலு முடம்பையுடைய, கன்னிதனை - கன்னியை, புகல் - சொல்லப்பட்ட, அருக்காச்சியே - அருக்காச்சியாரே, எம்பெருமான் - எமது திருநாராயணப்பெருமாளது, செயல் இதுவோ - செய்கையிதுவோ, என - என்று சொல்லி, எதிராஜர் - ஸ்ரீபாஷ்யகாரர், மகிழ்ந்தார் - சந்தோஷித்தார், எ-று.

வேறு.

எப்படியுமுய்யவருமெந்தையெதிராச
னிப்படியனைத்துவிதவின்புடனிருந்தார்
மைப்படிமுகிற்குலவியன்றுபொழில்கூர
மெய்ப்புனிதனப்பதியர்மேவுமவைதன்னில். (௫௪)

(இ-ள்.) எப்படியும் - எந்தவுலகத்தாரும், உய்யவரும் - உஜ்ஜீவிக்கும்படி அவதரித்தருளிய, எந்தை எதிராஜர் - எமது தந்தையாகிய எதிராஜர், இப்படி - இந்தவுலகத்தில், அனைத்துவித இன்புடன் இருந்தார் - எல்லாவித மானசுகங்களோடுங்கூடியிருந்தார், (இவர் இப்படியிருக்க) மைப்படிம் - கருமை பொருந்திய, முகிற்குலவியன்று - மேகங்கள் தவழ்ந்து நிலைபெற்ற, பொழில் - சோலைசூழ்ந்த, கூரம் - திருக்கூரத்திலவதரித்தருளிய, மெய் - உண்மையையுடைய, புனிதன் - பரிசுத்தனுகிய கூரத்தாழ்வான், அப்பதியர்மேவும் அவைதன்னில் - அந்தப்பாதகர் பொருந்திய சபையில், எ-று.



வைகியுறைபோதரசன்வாதில்வெலவென்றே
செய்துவவைபட்டயமெடுத்திவர்திருக்கை
யெய்திடவளித்தனரிதென்னெனவுமன்னோர்
மெய்யிதுசிவப்பரம்விரைந்தெழுதுமென்றார். (௫௫)

(இ-ள்.) வைகி உறைபோது - தங்கி வசிக்கும்போது, அரசன் - சோழராஜன், வாதில்வெல்ல என்று - வாதில் ஜெயிக்கவென்று, செய்துவவைபட்டயம் எடுத்து - நிர்மாணஞ்செய்து எழுதிய செப்புப்பட்டயத்தை யெடுத்து, இவர் திருக்கை எய்திட அளித்தனர் - இவரது திருக்கரத்திற் பொருந்தும்படி கொடுத்தார் (அவ்விடத்துள்ளார்சிலர்), இது என் எனவும் - (அதைக்கண்ட கூரத்தாழ்வான்) இதென்னென்று வினவின அளவில், அன்னோர் - அவர்கள், மெய் இது - உண்மையிது, சிவப்பரம் - சிவனுக்குப்பரத்வ முண்டென்பதை, விரைந்து எழுதும் என்றார் - சீக்ரத்தில் எழுதுவீராயென்று சொன்னார்கள், எ-று.

தவப்பயனிதென்றறிவிலாதபலசைவ
ரவைக்குடருபட்டயமதைத்திரணமென்னாச்
சிவப்பரமெனத்திகழ்துரோணமுளதென்றே
புவப்புடனதற்கடியிலுத்தமன்வரைந்தான். (௫௬)

(இ-ள்.) அறிவிலாத பலசைவர் - (அறியவேண்டியவற்றை) அறியாத பல சைவர்கள், தவப்பயன் இது என்று - மிகவும் பயனைத்தருவது இதுவென்று நிச்சயித்து, அவைக்குள் - சபையில், தரு - தந்த, பட்டயமதை - செப்பேட்டை, திரணம் என்னா - த்ருணப்ராயமாக மதித்து, சிவப்பரம் என - சிவபாரம்யம் சொல்லுதற்கு, (அதற்குமேல்) திகழ் - விளங்குகின்ற, துரோணம் உளது என்று - துரோணம் உண்டென்று, உவப்புடன் - மனக்களிப்போடு, அதற்கு அடியில் - அதின்கீழ், உத்தமன் - உத்தமனுகிய கூரத்தாழ்வான், வரைந்தான் - எழுதினுர், எ-று.

இவ்வணம்வரைந்தரசனேந்துகையிலீய
வவ்வுரையுணர்ந்திலனதைப்புலவர்கையிற்
செவ்விதினளித்தனனிதென்னைதெரிவிப்பீர்
பவ்வநிகர்கேள்வியுளபாவலரேயென்ன. (௫௭)

(இ-ள்.) இவ்வண்ணம் வரைந்து - இந்தப்ரகாரம் எழுதி, அரசன் - அரசனது, ஏந்துகையில் ஈய - ஏந்திக்கொண்டிருக்கிற கையில்கொடுக்க, அவ்வுரை உணர்ந்திலன் - (அவன்) அந்தச்சொற்பொருளை யறியாதவனாய், அதை - அந்தச்செப்பேட்டை, புலவர் கையில் - வித்வான்கள்கையில், செவ்விதின் அளித்தனன் - நேரேகொடுத்து, பவ்வம் நிகர் - சமுத்ரத்தையொத்த, கேள்வி உள்ள - கேள்வியையுடைய, பாவலரே - புலவர்களே, இது என்னை தெரிவிப்பீர் என்ன - இதின் அர்த்தம்யாது தெரியச்சொல்வீர் என்று கேட்க, எ-று.

அங்கதுகொடுக்கவிஞரானவர்கடுன்னி
மங்களமும்வண்குறுணியுஞ்சிவமெனும்பேர்
தங்குமதினற்குறுணிதன்னினுயர்வாகு
மிங்கொருதுரோணமுளதென்றதிறுவென்றார். (௫௮)

(இ-ள்.) அங்கு - அப்பொழுது, அதுகொடு - அந்தச் செப்புப்பட்டயத்தைக்கைக்கொண்டு, அக்கவிஞர் ஆனவர்கள் துன்னி - அந்தப் புலவர்கள் நெருங்கி, மங்களமும் - மங்களம் என்பதும், வண் குறுணியும் - வளமாகிய குறுணி யென்பதும், சிவம் என்னும் பேர்தங்கும் - சிவம் என்னும் பேர்பெற்றிருக்கும், அதினால் - அதனால், குறுணிதன்னின் - குறுணியினும், உயர்வாகும் - உயர்வடைந்த, இங்கு ஒரு துரோணம் உளது என்றது - இவ்விடத்தொரு துரோணமுளதென்பதே, இது என்றார் - இதின் தாத்பர்யமென்றார்கள், எ-று.

என்னலும்வெகுண்டரசனிப்படியுமுண்டோ
துன்னுகுறுணிக்குயர்துரோணமுளதென்றால்
மன்னுசிவனிற்பரமவருந்ததிருமாலோ
வுன்னுதிரெனக்கனலுருத்தெழவுரைத்தான். (௫௯)

(இ-ள்.) என்னலும் - என்று வித்வான்கள் சொல்லுதலும், அரசன் வெகுண்டு - அரசன் கோபித்து, இப்படியும் உண்டோ - இப்படியுமுளதோ, துன்னு குறுணிக்கு - பொருந்திய குறுணியினும், உயர் - உயர்ந்த, துரோணம் உளது என்றால் - துரோணம் என்பதொன்றுண்டாயிருக்குமாயின், மன்னுசிவனின் - நிலைபெற்ற சிவனினும், திருமாலோ - விஷ்ணுவையோ, பரம்வருத்தல் - பரம்பொருளாக வருத்துவைப்பது, உன்னுதிர் என - ஆலோசித்துப்பாருங்கள் என்று, கனல் உருத்தெழ - நெருப்புருவாய் வெளிப்பட, உரைத்தான் - (அந்தப்புலவரைநோக்கிச்) சிலசொற்களைச் சொன்னான், எ-று.

வெஞ்சினமடங்கலெனவேந்தனிதுரைத்தற்
கஞ்சிலனகன்றிலனகத்திலதையெண்ணான்
வஞ்சரவையிற்பரமெம்மன்னுதிருமாலே
யெஞ்சலிலையெஞ்சலிலையுண்மையிதுவென்றான். (௬௰)

(இ-ள்.) வெஞ்சினம் - கொடுங்கோபத்தையுடைய, மடங்கல் என - சிங்கத்தைப்போல, வேந்தன் - அரசன், இது உரைத்தற்கு - இதைச்சொன்னதற்கு, (கூரத்தாழ்வான்) அஞ்சிலன் - அஞ்சுதலில்லாதவனாயும், அகன்றிலன் - அவ்விடத்தைவிட்டு நீங்காதவனாயும், அகத்தில் - தன்மனத்தில், அதை எண்ணான் - அவன்சொன்னதை மதியாதவனாயும், வஞ்சர் அவையில் - வஞ்சகர் நிறைந்த சபையில், எம் - எமக்குத்தெய்வமாய், மன்னு - நிலைபெற்ற, திருமாலே - திருமாலொருவனுமே, பரம் - பரவஸ்து, எஞ்சல் இல்லை எஞ்சல் இல்லை - குறைவில்லை குறைவில்லை, இது உண்மை என்றான் - இது யதார்த்தமென்று சொன்னான், எ-று.



## வேறு.

உண்மைப்பரமெந்திருமாலென்றுரைத்தவெழிற்கூரத்தாழ்வான்
வண்மையறிந்தமன்னவனுன்மாயன்பரமெவ்வாறெனவே
திண்மையுடனங்கதைமறுத்துன்சிவனெவ்வாறுபரமெனலுந்
தண்மையினிலவ்வேந்தொடுபல்சைவசித்தாந்திகளுரைப்பார். (௬௧)

(இ-ள்,) உண்மைப்பரம் - உண்மையாகியபரம்பொருள், எம் திருமால் என்று உரைத்த - எம் திருமாலே யென்று சொன்ன, எழில் - அழகையுடைய, கூரத்தாழ்வான் - கூரத்தாழ்வானது, வண்மை அறிந்த மன்னவன் - ஔதாரியத்தையுணர்ந்த அரசன், உன்மாயன் பரம் எவ்வாறு என - உன்திருமால் பரம்பொருளென்பது எந்தப்பிரகாரத்தால் என்று கேட்க, (கூரத்தாழ்வான்) திண்மையுடன் - வலிமையோடு, அங்கு அதைமறுத்து - அவ்விடத்து அதனைத்தடுத்து, உன் சிவன் - உன் சிவனானவன், எவ்வாறு பரம் எனலும் - எந்தப்பிரகாரத்தால் பரம்பொருளென்று கேட்ட அளவில், தண்மையினில் - பணிவாக, அவ்வேந்தொடு - அவ்வரசனுடன், பல் - பலராகிய, சைவசித்தாந்திகள் - சைவசித்தாந்திகள், உரைப்பார் - சொல்வாராயினர், எ-று.

காயத்திரியானமகசமகத்தாலிராமலிங்கமதை
நேயத்தருச்சித்திடலான்மாநெடியகயிலையாத்திரையா
லேயமலர்க்கணிடந்தாழியெய்தலாலனங்கனுருவந்
தீயச்செயலால்விடபாகஞ்செயலால்யமனையடக்குதலால். (௬௨)

(இ-ள்.) காயத்திரியால் - காயத்திரிப்பொருளாயிருத்தலாலும், நமக சமகத்தால் - நமகசமகத்தாலும், இராமன் - இராமமூர்த்தி, இலிங்கமதை - சிவலிங்கத்தை, நேயத்து - அன்பினால், அருச்சித்திடலால் - அருச்சித்தலாலும், மால் - திருமால், நெடிய கயிலையாத்திரையால் - பெரிய கைலாய யாத்திரைசெய்கையாலும், மலர் ஏய - தாமரைமலரையொத்திருக்க, கண் இடந்து - கண்ணைத்தோண்டி யர்ச்சித்து, ஆழி எய்தலால் - சிவனிடத்திற் சக்கரம்பெறுகையாலும், அங்கசன் உருவம் - மன்மதனுடம்பை, தீயச்செயலால் - எரிந்து போகச்செய்தலாலும், விடபாகம் செயலால் - விஷபானம் செய்கையாலும், யமனை அடக்குதலால் - யமனை யடக்கினதனாலும், எ-று.

தருக்கும்புரமூன்றெரித்ததனாற்றக்கனியாகவிஜயத்தா
லருச்சுனனுக்குப்பாசுபதமளித்ததனால்வெஞ்சிம்மதா
யிருக்குமிளையச்சரபவுருவெடுத்திட்டலினான்மோகினியா
முருக்கண்டிணங்கிச்சாத்தாவையுமையாள்கேள்வனளித்தலால். ()

(இ-ள்.) தருக்கும் - செருக்கித்திரிந்த, புரம் மூன்று எரித்ததனால் - திரிபுரங்களைத் தகனம் செய்தமையாலும், தக்கன் யாகவிஜயத்தால் - தக்கனது யாகத்தை யழித்தமையாலும், அருச்சுனனுக்கு - அர்ஜுனனுக்கு, பாசுபதம் அளித்ததால் - பாசுபதாஸ்திரத்தைக் கிருபைசெய்தமையாலும், வெஞ்சிம்மதாய்

இருக்கும்அரியை - கொடிய நரசிங்கமாயிருந்த திருமாலை, சரபவுரு எடுத்து ஈர்ந்தனிறல் - சரபரூபங்கொண்டு பிளந்தலாலும், மோகினி ஆம் - மோஹினியாகிய, உருக்கண்டு - வேஷத்தைப்பார்த்து, இணங்கி - புணர்ந்து, சாத்தாவை - சாத்தாவை, உமையாள் கேள்வன் அளித்ததினால், உமாநாயகன் பெற்றதனாலும், எ-று.

கடல்சூழ்புவியிற்பல்லோர்கள்கனிந்துதொழலாற்றொழுவோர்க்குத்
தடமாச்செல்வமளித்திடலாற்றசரூபனுமர்ச்சித்திடலா
றிடமாயடியுமுடிதேடுந்திறத்தாற்பிறப்போடிறப்பிலதால்
வடபால்வியாதன்காசியிற்றன்வல்லுபுயந்தம்பித்திடலால். (கச)

(இ-ள்.) கடல்சூழ் புவியில் - கடல்சூழ்ந்த வுலகத்தில், பல்லோர்கள் - அநேகர்கள், கனிந்து தொழலால் - மனமுருகி வணங்குதலாலும், தொழுவோர்க்கு - வணங்குவோர்க்கு, தடம் மாசெல்வம் அளித்திடலால் - பெரிய ஐசுவரியத்தைக் கொடுத்தலாலும், தசரூபனும் அர்ச்சித்திடலால் - தசாவதாரங்கொண்ட திருமாலும் அர்ச்சிக்கையாலும், திடமாய் - உறுதியாய், அடியும் முடிதேடும் திறத்தால் - அடிமுடிகளைத் (திருமாலும் பிரமனும்) தேடிய திறத்தாலும், பிறப்போடு இறப்பு இலதால் - ஜநநமரணங்களில்லாமையாலும், வியாதன் வலது புயம் - வியாச முனிவனது வல்துபுஜமானது, வடபால் காசியில் - வடதிசையிலுள்ள பெரிய காசிக்ஷேத்ரத்தில், தம்பித்திடலால் - ஸ்தம்பித்துப்போயினமையாலும், எ-று.

என்னும்புரமூன்றுறுவிசயத்திடபமாகித்தாங்கியதா
றன்னம்பதுமர்சிரமாலைதரித்தலால்ஞானமும்வீடு
நன்னித்தரலாலிலிங்கத்தினற்பீடமதாய்மாலுறலால்
பன்னுமுருச்சங்கரநாராயணரிற்பாதியாதலினால். (கரு)

(இ-ள்.) என்னும் புரம் மூன்று - மதிக்கத்தகுந்த திரிபுரங்களின், உறுவிசயத்து - திக்குவிஜயத்தில், இடபமாகித் தாங்கியதால் - இடபமாகிச் சுமந்ததனாலும், தன் - குளிர்ச்சிபொருந்திய, அம் - அழகிய, பதுமர் - தாமரைமலரிலிருப்பவர்களாகிய பிரமர்களுடைய, சிரமாலைதரித்தலால் - தலைமாலைகளைத் தரித்திருத்தலாலும், ஞானமும் வீடும் நன்னித்தரலால் - (அன்பர்கட்கு) ஞானத்தையும் மோக்ஷத்தையும் உதவுதலாலும், இலிங்கத்தின் நல் பீடமதாய் - லிங்கத்தின் நல்லபீடமாகி, மால் உறலால் - திருமால் இருத்தலாலும், பன்னும் உருச்சங்கர நாராயணரில் - செய்த சங்கரநாராயண ரூபத்தில், பாதி ஆதலினால் - பாதியாதலாலும், எ-று.

மருவுமுருச்சங்கரநாராயணரின்மாலுக்கிசையிலதா
லிருபத்தைந்தாய்கட்சியின்கணீசன்பரமென்றுரைத்தசைவர்க்
கொருகட்சிக்கீரிரண்டைந்தாறெனுமறுத்துமறைமுறையே
திருமால்பரமென்றிடத்தொடர்ந்தான்றிருக்கூரத்தெம்பெருமானே.



(இ-ள்.) மருவும் உருச்சங்கர நாராயணரில் - பொருந்திய சங்கரநாராயணரூபத்தில், மாலுக்கு இசை இலதால் - திருமாலுக்குக் கீர்த்தியில்லாமையாலும், இருபத்தைந்து ஆம் கட்சியின்கண் - இருபத்தைந்து [illegible] கட்சியில், ஈசன் பரம் என்று உரைத்த சைவர்க்கு - சிவன் பரவஸ்து [illegible] சொல்லிய சைவர்களுக்கு, ஒரு கட்சிக்கு - ஒவ்வொருகட்சிக்கு, ஈரிரண்டு - நான்கு, ஐந்து - ஐந்து, ஆறு - ஆறுகட்சிகள் விழுக்காடு, ஓதி - சொல்லி, மறுத்து - (அவர்கள் சொன்ன கக்ஷிகளைத்) தடுத்து, மறை முறையே - வேதமுறைப்படியே, திருமால் - திருமாலே, பரம் என்றிடத்தொடர்ந்தான் - பரவஸ்துவென்று சொல்லத்தொடங்கினான், திருக்கூரத்து எம்பெருமான் - திருக்கூரத்தெம்பிரைவன், எ-று.

சோழன் திக்குவிஜயம் முற்றிற்று.

திருவிருத்தம், ௯௫.

முதலாவது

# காயத்திரிகட்சி.

கார்மேகமனந்தமெழிற்கஞ்சமலர்ந்தொளிர்வதெனச்
சீர்மேவுமரவணையிற்றிகழரங்கன்பரம்பொருளென்
றோர்மேன்மைச்சடகோபரொண்பதமாம்பெரும்பூத
வூர்மேயவெதிவரன்றாளோதுமன்பரடிபணிவாம். (க)

(இ-ள்.) கார்மேகம் - ஒருகரியமேகமானது, அனந்தம் - முடிவற்ற, எழில் - அழகுள்ள, கஞ்சம் - தாமரை மலர்களை, மலர்ந்து ஒளிர்வது என - விகசித்துப் பிரகாசிப்பதுபோல, சீர்மேவும் அரவணையில் - சிறப்புப்பொருந்திய சர்ப்பசயநத்தில், திகழ் - விளங்குகின்ற, அரங்கன் - திருவரங்கன், பரம்பொருள் என்று - பரவஸ்து வென்று, ஓர் மேன்மை - ஒப்பற்றமேன்மையையுடைய, சடகோபர் ஒண்பதம் ஆம் - ஸ்ரீசடகோபன் பொன்னடியாகிய, பெரும்பூதவூர்மேய - ஸ்ரீபெரும்பூதூரி லெழுந்தருளி யிருக்கிற, எதிவரன்தாள் - யதிசிரேஷ்டரது திருவடியை, ஓதும் - துதிக்கின்ற, அன்பர் - அன்பரது, அடி - திருவடியை, பணிவாம் - வணங்குவோம், (யாம்) எ-று.

முருகுலவுமலர்ச்சோலைமுகிலுலவுமணிமாடந்
திருவுலவுஞ்செழுந்தடங்கள்செந்நெல்வளர்ந்தோங்குவய
லிருபுடையுஞ்செறிந்திலங்குமெழிற்கூரத்தாழ்வானென்
றொருவனிருஞ்சைவருடனோதுதர்க்கமதிற்றொடர்ந்தான். (உ)

(இ-ள்.) முருகு உலவும் மலர்ச்சோலை - பரிமளம் வீசுகின்ற பூஞ்சோலைகளும், முகில் உலவும் மணிமாடம் - மேகங்கள் தவழ்கின்ற ரதகசிதமான மாளிகைகளும், திருவுலவும் செழுந்தடங்கள் - அழகு வசிக்கின்ற செழியதடாகங்களும், செந்நெல் வளர்ந்து ஓங்குவயல் - செந்நெற்பயிர்கள் வளர்ந்தோங்குகின்ற கழனிகளும், இருபுடையும் செறிந்து இலங்கும் - இருபக்கத்திலும் நெருங்கிவிளங்காநின்ற, எழில் கூரத்தாழ்வான் என்ற ஒருவன் - அழகோடு கூடிய கூரத்திலவதரித் தருளினமையால் கூரத்தாழ்வான் என்று அறிஞரால் சொல்லப்பட்ட ஒருவன், இரும் சைவருடன் - பெரிய சைவ சமயிகளோடு, ஓது தர்க்கமதில் தொடர்ந்தான் - சொல்லப்பட்ட தர்க்கவாதம் பண்ணுவதில் தொடர்புடையவனானான், எ-று.

ஒன்றாகியிரண்டாகியொருமூன்றாய்நான்மறையாய்க்
குன்றாவைம்பூதமுமாய்க்குலவுமறுசாத்திரமாய்
நின்றோதுமேழிசையாய்நிகரிலெழுத்தெட்டாகித்
துன்றாதிநாரணனேதொல்பரமென்றோதினனால். (ங)



(இ-ள்.) ஒன்றாகி - ஒருபொருளாகி, இரண்டாகி - இருபொருளாகி, ஒரு மூன்றாய் - ஒரு முப்பொருளாகி, நான்மறையாய் - நான்குவேதங்களாகி, குன்றா ஐம்பூதமும் ஆய் - அழியாத பஞ்ச பூதங்களுமாகி, குலவும் அறுசாத்திரமாய் - விளங்காநின்ற ஆறு சாஸ்த்ரங்களாகி, நின்று ஓதும் ஏழ் இசை ஆய் - நின்று ஓதுதற்குரிய ஸப்தஸ்வரங்களாகி, நிகர் இல் - நிகரற்ற, எழுத்து எட்டு ஆகி - திருவஷ்டாக்ஷரமாகி, துன்று - பொருந்தியிராநின்ற, ஆதிநாரணனே - ஆதிநாராயணனே, தொல் - பழமையாகிய, பரம் என்று ஓதினன் - பரவஸ்து வென்று சொல்லியருளினான், எ-று.

ஓதரியசதுமறையுமுளங்கையிற்கனியெனவே
பேதமறத்தெளிந்துணர்ந்தபெரும்பூதூரிறைவனிரு
பாதமலர்க்கன்பனிதுபரிந்துரைத்தங்கவையிலுறும்
போதததற்குமறுமாற்றம்பொருவாதமெடுத்துரைப்பார். (ச)

(இ-ள்.) ஓது அரிய சதுமறையும் - மேன்மை சொல்வதற்கரிய நான்குவேதங்களும், உளங்கையில் கனியென - கரதலாமலகம்போல, பேதம் அற - வேறுபாடற, தெளிந்து உணர்ந்த - தெளிந்தறிந்த, பெரும்பூதூர் இறைவன் - ஸ்ரீ பூதபுரிக்கு நிர்வாஹகனாகிய யதிவரனது, இருபாதமலர்க்கு - இரண்டு பாதாரவிந்தங்களில், அன்பன் - அன்புசெய்பவனாகிய ஸ்ரீ கூரத்தாழ்வான், இது பரிந்து உரைத்து - இதனை அன்போடு சொல்லி, அங்கு - அவ்விடத்து, அவையின் உறும்போது - சபையிலெழுந்தருளியிருக்கும்பொழுது, (அங்குள்ள சைவர்கள்) அதற்கு மறுமாற்றம் - அதற்கு மறுமொழியாக, பொருவாதம் எடுத்து உரைப்பார் - போர்க்குரிய தர்க்கசாஸ்த்ர வாதங்களைத் தெரிந்தெடுத்துச் சொல்வார்கள், எ-று.

தர்க்கமதின்வந்தெதிர்த்ததார்வேந்தனெனுஞ்சோழன்
நற்கவிஞர்புடைசெறியநாலறுகாயத்திரியில்
பர்க்கவெனுமொழியாலெம்படர்சடையோன்பரமெனவே
நிற்கவதுமறுத்துரைப்பார்நிகரில்புகழ்க்கூரேசர். (ரு)

(இ-ள்.) தர்க்கமதின் வந்து எதிர்த்த - தர்க்க சாஸ்த்ர வாதத்தினால் வந்து எதிர்த்த, தார் வேந்தன் எனும் சோழன் - பூமாலையை யணிந்த சோழராஜன், நல்கவிஞர் புடை செறிய - நல்ல கவிஞர்கள் பக்கங்களில் நெருங்க, நாலறுகாயத்திரியில் - இருபத்துநான்கக்ஷர ரூபமாகிய காயத்ரியில், பர்க்க என்னும்மொழியால் - பர்க்க என்கிற சொல்லால், எம் - எமது, படர்சடையோன் - பரந்த சடாபாரத்தையுடைய சிவபெருமான், பரம் என நிற்க - பரவஸ்துவென்று சொல்லிச் சாதித்துநிற்க, நிகர் இல் - சமானரஹிதமாகிய, புகழ் - புகழையுடைய, கூரேசர் - ஸ்ரீ கூரத்தாழ்வான், அது மறுத்து உரைப்பார் - அதனை மறுத்துக்கூறுவாராயினர், எ-று.

வே று.

காயத்திரியிற்பார்க்கவெனல்கருதினு மதுவும்பிரமபரம்
சேயத்ததிலந்தணர்புரியுநித்தியவிதிவைதிககருமம்
ஆயப்படின்வேதவியாதனருளருஞ்சுருதிமனுஞானந்
தோயப்படுமெய்ப்பொருள்கேளீர்சொல்லுகேனென்றெடுத்துரைப்பார்.

(இ-ள்.) காயத்திரியில் - காயத்திரி மந்த்ரத்தில், பார்க்கவெனல் - பார்க்க வென்றலை, கருதின் - நினைக்குமிடத்து, அதுவும் - அதுதானும், பிரமபரம் - ப்ரஹ்மபரமான அர்த்தமுள்ளதே, அதில் - அதனில், சேயத்து - விசுவாசமுள்ள, அந்தணர் புரியும் - வேதியர் செய்கிற, நித்திய விதி - நித்திய கர்மாநுஷ்டானங்களும், வைதிக கருமம் - வைதிக க்ரியைகளும், ஆயப்படின் - ஆராயப்படின், வேதவியாதன் - ஸ்ரீ வேதவ்யாஸபகவான், அருளும் - அருளிய, சுருதி - சுருதி வாக்யத்திலும், மநுஞானம் - மநுவின்ஞானத்திலும், தோயப்படும் - பொருந்திய, மெய்ப்பொருள் கேளீர் - யதார்த்தமான அர்த்தத்தைக் கேட்பீராக, சொல்லுகேன் - சொல்லாநின்றேன், என்று எடுத்து உரைப்பார் - என்றெடுத்துச் சொல்லுவார், எ-று.

வே று.

வேதநாலுணர்ந்தவந்தணர்தருமம
மென்றுயிலொழிந்துகண்விழிக்கும்
போதுவைகறையினெதற்குமுன்பாகப்
புகன்றிடப்படுவதியாதென்னி
லோதருதாரணைந்தவாரிதியா
மொருபரம்புருடனையன்பாற்
காதலாலேழுதரமரியரியே
காத்தருளெனக்கருதுவதாம். (௭)

(இ-ள்.) வேதம் நால் உணர்ந்த - சதுர்வேதங்களையு மறிந்த, அந்தணர் தருமம் - வேதியர்களுக்குத் தர்மமாவது, மென் துயில் ஒழிந்து - மெல்லிய நித்திரை நீங்கி, கண்விழிக்கும்போது - கண்விழிக்கும் பொழுதாகிய, வைகறையின் - அருணோதயகாலத்தில், எதற்கும் முன்பாக - எந்த மந்திரங்களுக்கும் முன்பு, புகன்றிடப்படுவது - உச்சரிக்கப்படுவது, யாது என்னில் - யாதென்று வினவினால், ஓது அரு - சொல்லற்கரிய, ஞானாநந்தவாரிதி ஆம் - ஞானாநந்த சமுத்ரமாகிய, ஒரு பரம்புருடனை - அத்விதீயமான பரமபுருஷனை, அன்பால் காதலால் - அன்போடும் ச்ரத்தையோடும், எழுதரம் - ஏழு ஆவர்த்தி, அரி அரியே - ஹரி: ஹரி:, காத்தருள் என - காத்தருள்கவென்று, கருதுவது ஆம் - நினைப்பதாம், எ-று.

குளிர்புனல்படியும்போதினும்புகல்வார்
கோவிந்தகோவிந்தவென்றே
யளிபெறுமாசமனஞ்செயும்போது
மச்சுதாநந்தகோவிந்த



தெளிதருநாமத்திரயமந்திரத்தைச்
செப்பிடவேண்டுமங்கதற்பி
னளிர்புனலேந்திப்புரோக்கணஞ்செய்ய
நவிற்றுவதியாதெனிற்கேண்மோ (௮)

(இ-ள்.) குளிர் புனல் படியும்போதினும் - குளிர்ந்த நீரில் மூழ்கும்போதும், கோவிந்த கோவிந்த என்று புகல்வார் - கோவிந்த கோவிந்த வென்று சொல்வார்கள், அளிபெறும் ஆசமனம் செய்யும்போதும் - அன்புகொண்ட ஆசமநம் பண்ணுங்காலத்திலும், அச்சுதாநந்த கோவிந்த - அச்சுதா நந்த கோவிந்த என்கிற, தெளிதரும் - (அநுஸந்திப்பவர்க்குத்) தெளிவையுண்டாக்குகிற, நாமத்திரய மந்திரத்தை - மூன்று திருநாமங்களோடு கூடிய மந்திரத்தை, செப்பிடவேண்டும் - உச்சரிக்கவேண்டும், அங்கு அதன்பின் - அதின் பிறகு, நளிர் புனல் ஏந்தி - குளிர்ந்த நீரையள்ளி, புரோக்கணம் செய்ய - ப்ரோக்ஷணம் பண்ணும்பொருட்டு, நவிற்றுவது யாது எனின் - சொல்லப்படுவது யாதெனின், கேள் - (சொல்லக்) கேட்பாய், எ-று.

தகைபெறுஞ்சருவதீர்த்தஸமுத்பூ
தாவெனப்பாபநாசவென்
றிகலறவெவரும்புரோக்கணித்திடுவ
ரெழில்பெறுசந்தியாவந்தனத்தி
லகமகிழ்ந்தங்கநியாசமுங்கரநி
யாசமுங்கேசவனாதி
புகலுமீராறுநாமமந்திரத்தைப்
புரையறத்துதித்திடல்வேண்டும். (௯)

(இ-ள்.) தகைபெறும் - பெருமை பெற்ற, சருவ தீர்த்த ஸமுத்பூதா என - ஸர்வதீர்த்த ஸமுத்பூதா எனவும், பாபநாசந என்று - பாபநாசந எனவும், இகல் அற - சர்வவிரோதங்களுமற்றொழிய, எவரும் புரோக்கணித்திடுவர் - யாவரும் ப்ரோக்ஷணம் பண்ணுவார்கள், எழில் பெறு சந்தியாவந்தனத்தில் - அழகுபெற்ற சந்த்யாவந்தன காலங்களில், அகம் மகிழ்ந்து - மனமகிழ்ந்து, அங்கநியாசத்தில் - அங்கந்யாஸத்திலும், கரநியாசத்தில் - கரந்யாஸத்திலும், கேசவன் ஆதி புகலும் - கேசவன் முதலாகச் சொல்லப்பட்ட, ஈராறு நாம மந்திரத்தை - த்வாதச நாமமாகிய மந்திரத்தை, புரை அற - குற்றங்கள் ஒழியும்படி, துதித்திடல் வேண்டும் - உச்சரிக்கவேண்டும், எ-று.

சந்தியாவந்தனந்தனிற்புகல்வர்
சங்கருடணப்பெயராதி
யைந்துடனெழுந்தருகுருஜபார்ச்சனைநல்
லாறுமேலொழும்புரிவான்
மந்திரகாயத்திரிசெபஞ்செய்ய
மருவிடம்புனிதமாக்குதற்கும்
புந்திமிலைபவித்திரபவித்ரோவ
புண்டரீகாட்சவென்றுரைப்பார். (௰)

(இ-ள்.) சந்திபாவந்தநந்தன்னில் - சந்திபாவந்தக காலத்தில், சங்கருடணப்பெயர் ஆதி-சங்கர்ஷணன் என்னுந் திருநாமமுதலாகிய பன்னிரண்டையும், புகல்வர் - உச்சரிப்பார்கள், ஐந்துடன் எழுந்த - பஞ்ச ஸம்ஸ்காரத்துடன் எழுந்தருளிய, குரு - ஆசார்ய விஷயத்திலும், ஜபம் - ஜபவிஷயத்திலும், அர்ச்சனை - அர்ச்சனை விஷயத்திலும், நல் - சிறந்த, ஆர் - அரிய, அழல் - அக்கி கார்யமாகிய, ஓமமும் புரிவான் - ஹோமத்தைச் செய்யும்பொருட்டும், மந்திர காயத்திரி ஜபம் செய்ய - காயத்ரி மந்திரத்தை ஜபிக்கும்பொருட்டும், மருவு இடம் புனிதம் ஆக்குதற்கும் - பொருந்திய ஸ்த்தலசுத்தி செய்யும்பொருட்டும், புத்தியில் - அறிவினால், அபவித்திரபவித்ரோவ - அபவித்ர பவித்ரோவ, புண்டரீகாக்ஷ - புண்டரீகாக்ஷ, என்று உரைப்பர் - என்று உச்சரிப்பார்கள், எ-று.

வே று.

இதனான்மறையோரெவருந் துதிசெய்
ததனாலவர்கன்மமெலாமுடியும்
விதனாலவர்விண்முகிலேர்திருமால்
பதமார்வரினம்பகர்வன்னுணர்மின் (௰௧)

(இ-ள்.) இதனால் - இதினாலும், மறையோர் எவரும் - வேதிய ரெல்லாரும், துதிசெய்ததனால் - துதிசெய்ததனாலும், அவர் கன்மம் எல்லாம் முடியும் விதனால் - அவர்களுடைய கர்மங்களெல்லாம் முடியும் விதத்தாலும், அவர் - அவர்கள், விண் - ஆகாயத்திலுள்ள, முகில் நேர் - மேகத்தையொத்த, திருமால் பதம் ஆர்வர் - திருமால்பதத்தை யடைவார்கள், இன்னம் - இன்னமும், பகர்வன் - சொல்வேன், உணர்மின் - தெரிந்துகொள்ளுங்கள், எ-று.

காயத்திரியக்கரநாலாறு
நேயத்துடனித்தியனெந்திருமான்
மாயப்பெருமான்மயமாதலினாற்
றூயப்பரமென்றுதுணிந்திடுமால். (௰௨)

(இ-ள்.) காயத்திரி அக்கரம் நாலாறும் - காயத்ரியின் அக்ஷரங்கள் இருபத்துநான்கும், நேயத்துடன் - அன்போடு, நித்தியன் - நித்யனாகிய, எந்திருமால் - எமது திருமாலாகிய, மாயப்பெருமான் மயம் ஆதலினால் - மாயப்பெருமானது மயமாயிருத்தலால், தூயபரம் என்று - பரிசுத்தமாகிய பரம்பொருள் என்று, துணிந்திடும் - (அவைகளே) நிச்சயிக்கும், எ-று.

நங்கார்முகிலென்றுரைநற்பிரமப்
பங்காகியபர்க்கவெனுஞ்சொலினாற்
றங்காதுயர்தற்பரமுஞ்சிவனுக்
கிங்கோதினெவற்றினுமால்பரமே. (௰௩)

(இ-ள்) நம் - நமது, கார்முகில் என்று உரை - கார்காலத்து மேகமென்றுசொல்லப்பட்ட, நற்பிரமம் - நல்ல ப்ரஹ்மவஸ்து, பங்கு ஆகிய - பாகமாகிய, பர்க்கவெனுஞ் சொலினால் - பர்க்க வென்கிற சொல்லால், தங்காது - நிலைபெறாது, தற்பரமும் - தற்பரமென்பதையும், சிவனுக்கு - சிவனுக்கு, இங்கு



ஓதின் - இவ்விடத்துச்சொன்னால், எவற்றினும் - எவைகளினும், மால் - திருமாலே, பரம் - பரம்பொருளாகும், எ-று.

வே று.

வாட்டடங்கண்மலர்மகன்மார்பன்வெண்
கோட்டடங்கக்குவலயந்தந்தவ
னட்டடந்தருநாண்மலர்ப்பாதமே
வீட்டடங்கற்குமெய்ப்பொருளாமென்றான். (௰௪)

(இ-ள்.) வாள் - வாள்போன்ற, தடம்கண் - பெரிய கண்களையுடைய, மலர்மகள் மார்பன் - திருமகளைத் திருமார்பிலுடையவன், வெண்கோடு அடங்க - (தனது) வெள்ளிய கொம்பின்கண் அடங்கும்படி, குவலயம் தந்தவன் - பூமியை யேந்திக்கொண்டு வந்தவன், (அவனது) நாள் - புதிய, தடம் தரும் - தடாகத்திலலர்ந்த, நல் - விலக்ஷணமாகிய, மலர் - தாமரைமலர்போன்ற, பாதமே - திருவடியே, வீடு அடங்கற்கு - (உயிர்கள்) வீட்டிற்சென்றடங்குதற்குரிய, மெய்ப்பொருள் ஆம் என்றான் - உண்மைப்பொருளாமென்று சொல்லினான், எ-று.

குன்றமேந்திக்குளிர்மழைகாத்தவ
னன்றுஞாலமளந்தபிரான்பர
னென்றுசைவரிருந்தவரியாவரையும்
வென்றுவாளரியென்னவிளங்கினான். (௰௫)

(இ-ள்.) குன்றம் ஏந்தி - கோவர்த்தனகிரியைத் தாங்கி நின்று, குளிர் - குளிர்ந்த, மழை - சிலாவர்ஷத்தை, காத்தவன் - தடுத்துக்கோ கோபால ஸம்ரக்ஷணம் பண்ணினவனும், அன்று - அக்காலத்தில், ஞாலம் அளந்தபிரான்-பூமியையளந்த மஹோபகாரகனுமாகிய திருமாலே, பரன் என்று - பரவஸ்துவானவன் என்று, சைவர் இருந்தவர் யாவரையும் - சைவராயிருந்தவர் எல்லாரையும், வென்று - ஜெயித்து, வாள் - ஒளிபொருந்திய, அரி என்ன விளங்கினான் - சிங்கம்போலப் பிரகாசித்தான், எ-று.

கண்ணனாகுமிக்காயத்திரிப்பொருள்
மண்ணுளோரெவரேனுமகிழ்வுட
னண்ணுவார்நவில்வாரிதைக்கேட்டோ
ரெண்ணிலின்பவிகபரஞ்சேர்வரே. (௰௬)

(இ-ள்.) இக்காயத்திரிப்பொருள் - இந்தக்காயத்ரியின் பொருள், கண்ணன் ஆகும் - திருமாலேயாகும், (இதனை) மண்ணுளோர் எவரேனும் - மண்ணுலகத்தார் யாவராயினும், மகிழ்வுடன் - மகிழ்ச்சியோடு, நண்ணுவார் - (மனம்) பொருந்துவாராகி, நவில்வார் - சொல்வோரும், இதைக்கேட்டோர் - இதைக்கேட்டோரும், எண் இல் - அளவற்ற, இன்பம் - சுகரூபமாகிய, இகபரம் சேர்வர் - இகபரங்களை யடைவார்கள், எ-று.

முதலாவது காயத்ரிகட்சி முற்றிற்று.

ஆ. திருவிருத்தம், ௩௨௪.

முதலாவது

# பர்க்கசப்தம்.

காயத்ரியிலே சொல்லப்பட்ட பர்க்க சப்தத்துக்குச் சூரிய மண்டலத்தில் வசிக்கும் ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்வர்ண மயமான திருமேனியின் தேஜஸ்ஸைச் சொல்லுகிறதென்று வசிஷ்டரும் விசுவாமித்திரரும் வியாகரண சூத்திரங்களினாலே வியாக்யானஞ் செய்தருளினார்கள்— இதற்குப் பிரமாணம்.

முதலாவது—சாந்தோக்கிய உபநிஷத்தில் (ధ్యేయస్సదా సవితృమండలమధ్యవర్తీ - నారాయణస్సరసిజాసనసన్నివిష్టః। కేయూరవాన్ మకరకుండలవాన్ - కిరీటీ హారీ - హిరణ్మయవపుః - ధృతశంఖచక్రః - తస్య యథా కప్యాసం పుండరీకమేవాక్షిణీ) என்றதில் சூரியமண்டலத்தில் வசிக்குமவன் நாராயணனென்றும், அவன் தாமரைக் கமலத்தை ஆசநமாக உடையவனென்றும் - கேயூரமகர குண்டல கிரீட ஹாரங்களையும், ஸ்வர்ணமயமான திருமேனியையும், சங்கு சக்கரங்களையும் உடையவனென்றும், அவன் கபியென்கிற சூரியனாலே விகாசம்பண்ணப்பட்ட தாமரைக்கமலம்போன்ற கண்களை யுடையவனென்றும் சொல்லியிருக்கையால் ஸ்வர்ணமயமான திருமேனியின் தேஜஸ்ஸென்று - பர்க்க சப்தத்துக்கு அர்த்தம்பண்ணி யிருக்கிறார்கள்.

இரண்டாவது—காயத்ரி அநுசந்திக்கப்பட்ட பிராமணர்களுக்கு நித்திய கருமாநுஷ்டானங்கள் விதித்திருக்கின்ற வியாசஸ்ம்ருதியிலேயும் மநு விஞ்ஞாநத்திலேயும் சொல்லுகிறதாவது, பிராமணன் நித்திரையில் நின்றெழுந்திருக்கும்போது பிரதமத்தில் ஹரிரோ ஹரி ஹரிரோ ஹரி யென்று எழுதரம் உச்சரிக்க வேண்டுமென்றும், ஸ்நாநஞ் செய்கையில் கோவிந்த கோவிந்த வென்று மூன்றுதரம் உச்சரிக்கவேண்டுமென்றும், ஆசமநம் பண்ணும்போதும் அங்கந்யாசம் கரந்யாசங் களிலேயும் அச்சுதாநந்த கோவிந்த வென்கிற மந்திரத்தையும் கேசவாதி பன்னிரண்டு நாமங்களையும் உச்சரிக்கும்படியாயும், சந்த்யா வந்தநங்களிலே சங்கர்ஷணாதி பன்னிரு நாமங்களையும் உச்சரிக்கும்படியாயும், ஜபம்பண்ணுகிற விடத்தில் ஸ்தலசுத்தி பண்ணும்போது அபவித்ரபவித்ரோவ என்றும் புண்டரீகாக்ஷாயநம: என்றும், விஷ்ணுவின் மந்திரத்தை உச்சரிக்கும்படியாயும், காயத்ரிமந்திரம் இருபத்து நான்கும் விஷ்ணு பரமாயே யிருக்கையாலும், பர்க்க சப்தத்துக்குச் சப்தச் சலத்தாலே சிவபரமாக அர்த்தஞ்சொல்வது வேதவிரோதம்.

மூன்றாவது—மயித்ராவருண உபநிஷத்திலும், தயித்திரியோப நிஷத்திலும் இப்படியே காயத்ரிக்குப் பொருள் ஸ்ரீமந் நாராயணனே என்பதாய்ச் சதாசிவா நிக்கிறேனென்று சொல்லியிருக்கையால் சுருதிஸ்ம்ருதி புராணங்களில் பிரமாணங்கள் சொல்லி உத்தரித்திடாமலும், ஒரு வாக்கியத்துக்கு நாலு அர்த்தங்களுண்டென்கிற ஞானமில்லாமலும், பிரகாணத்துக்கு விரோதமாய் ஸ்ரீமந் நாராயணருடைய தேஜஸ்ஸென்று அர்த்தஞ் சொல்லாமலும் சுருதிவிரோதமாய்ச் சொல்வது அவைதிகமென்று கண்டிக்கப்பட்டது.

இரண்டாவது

# நமகசமகம்.

மன்னுந்திருமான்மலரம்புயனே
னென்னும்பதமாயிசைமாறனையே
பன்னுஞ்சொலெதிபதிசேவடியே
துன்னன்பினொடுந்துதிசெய்குவமால். (க)

(இ-ள்.) மன்னும் - நிலைபெற்ற, திருமால் - திருமாலுக்கும், மலர் அம்புயன் - தாமரைமலரி லிருப்பவனாகிய பிரமனுக்கும்; நேர் என்னும்பதமாய் - நிகர் என்னும் வழியாக, இசை - அறிஞரால் சொல்லப்படுகிற, மாறனையே - நம்மாழ்வாரையே, பன்னும்சொல் - துதிக்கிற பெரும்புகழையுடைய, எதிபதி சேவடியே - யதிராஜரது திருவடியையே, துன் அன்பினொடும் - மிக்க அன்புடன், துதிசெய்குவம் - துதிபண்ணுவோம், (யாம்) எ-று.

மதிமாமணிமாளிகைமேல்வருகா
னிதியோனெனவேநிகழாடவர்கள்
சதிநின்முகமேதருமென்றுரைசெய்
பதிகூரமுறும்பழையோனருள்வான். (உ)

(இ-ள்.) மா - அழகிய, மணி - ரத்நங்கள் இழைத்த, மாளிகைமேல் - மாளிகைகளின் உபரிபாகத்தில், மதிவருகால் - பூர்ணசந்திரன் வருகிறகாலத்தில், நிதியோன் என நிகழ் ஆடவர்கள் - குபேரனைப்போலச் சம்பத்தினால் விளங்குகின்ற புருஷர்கள், (தம்மனைவியரை நோக்கி) சதி - ஸ்திரீயே, (இந்தச் சந்திரன்) நின்முகமே தரும் என்று - உன் முகத்துக்கு ஒப்பாகுமா வென்று, உரை செய் - சொல்லுதற்குரிய, பதி - ஊராகிய, கூரம் உறும் பழையோன் - கூரத்தில் அவதரித்தருளிய பெரியோன், அருள்வான் - கூறுவான், எ-று.

பார்நீரனல்கால்பயிலம்பரமா
யார்நீர்மையெலாமமருந்திருமா
லோர்நீதனுமேயுண்மைப்பரமென்
றேர்நீடவையினிவையோதினனால். (ங)

(இ-ள்.) பார் - பூமியும், நீர் - ஜலமும், அனல் - அக்நியும், கால் - காற்றும், பயில் - (இவைகள்) சஞ்சரித்தற்கிடமாகிய, அம்பரம் - ஆகாசமும், ஆய் - ஆகி, ஆர் - பொருந்துகின்ற, நீர்மையெல்லாம் - நற்குணமெல்லாம், அமரும் - அமைந்த, திருமால் - திருமாலாகிய, ஓர் - அறிஞரால் ஆராயப்படுகிற, நீதனுமே - நீதிமானொருவனுமே, உண்மைப்பரம் - மெய்யாகிய பரவஸ்து, என்று இவை - என்று இவைகளை, ஏர் நீடு அவையின் ஓதினன் - அழகுமிக்க சபையில் சொல்லினான், எ-று.

ஓதுஞ்சதுர்வேதமுணர்ந்தபிரான்
மாதங்கியமார்பிறையேபரமென்
றேதங்கெடவிவ்வணமோதலுமே
வாதங்குரைசெய்வர்கள்சைவர்களே. (௪)

(இ-ள்.) ஓதும் - (அத்யாவசியகமாய்) ஓதத்தகுரிய, சதுர்வேதம் - நான்கு வேதங்களையும், உணர்ந்தபிரான் - அறிந்த கூரத்தாழ்வான், மாதங்கிய - பெரிய பிராட்டியார் வாஸஸ்தானமாகத் தங்கியிருக்கிற, மார்பு - வக்ஷஸ்தலத்தையுடைய, இறையே - இறைவனே, பரம் என்று - பரவஸ்துவென்று, ஏதம் கெட - கேட்போரது மநோமாலிந்யம் நீங்கும்படி, இவ்வண்ணம் ஓதலும் - இவ்வாறு கூறுதலும், (கேட்ட) சைவர்கள் - சைவஸித்தாந்திகள், அங்கு - அவ்விடத்து, வாது உரை செய்வர்கள் - வாதுசெய்யத் தொடங்கினார்கள், எ-று.

இன்றிங்ஙனிசைத்திடுவோயிதுகே
ளென்றங்ஙனிசைப்பர்நமச்சமமெம்
பொன்றங்குபுனற்சடையன்பரமென்
றொன்றும்படியோதினரோதலுமே. (௫)

(இ-ள்.) இன்று - இப்பொழுது, இங்ஙன் - இந்தப்பிரகாரம், இசைத்திடுவோய் - சொல்லுகின்ற ஓ வைஷ்ணவ ஸித்தாந்தியே, இது கேள் என்று - இதனைக்கேட்பாயாக என்று, அங்ஙன் இசைப்பர் - அவ்விடத்துச் சொல்லுவார்கள், (என்னெனின்) நமச்சமம் - நமகசமகத்தால், எம் - எம்முடைய, பொன்தங்குபுனல் - அழகுபொருந்திய கங்கையைத் தரித்த, சடையன் - சடையையுடைய சிவபெருமான், பரம் என்று - பரவஸ்துவென்று, ஒன்றும்படி - மனதுக்குப் பொருந்தும்படி, ஓதினர் - சொன்னார்கள், ஓதலும் - சொன்ன அளவில், எ-று.

கானுறுமுழையின்கணமானதிலோர்
கோளுறுகோளரியுற்றிடல்போ
லானுமறையாலுயர்நாரணனை
வானாடர்சிரோமணியைப்புகல்வான். (௬)

(இ-ள்.) (கேட்ட கூரத்தாழ்வான்) கான் ஊர் - காட்டில் வசிக்கின்ற, உழையின் கணம் ஆனதில் - மான் கூட்டத்தினிடையே, ஓர் கோளுறு - ஒப்பற்ற மிருகேந்த்ரனாகிய, கோளரி உற்றிடல்போல் - சிங்கம் ப்ரவேசித்திருந்தாற்போல (இருந்துகொண்டு) நானுமறையால் - அநேக வேதவாக்யங்களைக் கொண்டு, உயர் நாரணனை - (தேவ ஸமூஹத்தில்) உயர்ந்தோனாகிய ஸ்ரீமந்நாராயணனை, வானாடர் சிரோமணியை - தேவசூடாமணியை, புகல்வான் - (பரவஸ்து வென்று) கூறத்தொடங்கினான், எ-று.

மின்பெற்றுவிளங்குமுகிற்கிணையாய்ப்
பொன்பெற்றபுயத்தவனெந்திருமா
லைம்பத்தொருவக்கரமானதில்பே
ரின்பத்துருவென்னவிசைத்தனனால். (௭)



(இ-ள்.) மின்பெற்று விளங்கும் முகிற்கு இணை ஆய் - மின்னற்கொடியொன்றைத் தன்னிடத்துக்கொண்டு விளங்குகின்ற நீலமேகத்துக்குச் சமானமாய், பொன் பெற்ற புயத்தவன் - அழகுபெற்ற தோள்களையுடையவனாகிய, எம் திருமால் - எமது திருமால், ஐம்பத்தொரு அக்கரமானதில் - ஐம்பத்தோரக்ஷரங்களுக்குள், பேரின்பத்துரு என்ன இசைத்தனன் - பேரானந்த ரூபமாயிருப்பவனென்று கூறினான், எ-று.

எண்பத்துடனான்கிலிலக்கமெனப்
பண்புற்றவுயிர்க்கொருதற்பரனே
யெண்பெற்றகலைக்ககரம்மிதுவுந்
தண்பொற்றுகிலன்றனிவாச்சியமே. (௮)

(இ-ள்.) எண் பெற்ற கலைக்கு அகரம் - இலக்கம்பெற்ற கலைகளுக்குள் அகரமானது, எண்பத்துடன் நான்கின் இலக்கம் என - எண்பத்துநான்கு லக்ஷமென்று சொல்லப்பட்டு, பண்பு உற்ற உயிர்க்கு - (அவ்வவற்றின் குணங்களைப் பொருந்திய) ஜீவராசிகளுக்கு, ஒரு தற்பரன் போல் - ஒரு தத்பரவஸ்துவானது தலைமையாயிருப்பதுபோலத் தலைமையாயிருக்கும், இதுவும் - இந்த அகரமும், தண் பொன் துகிலன் - தண்ணிய பீதாம்பரதாரியாகிய திருமாலின், தனி வாச்சியமே - ஒப்பற்ற வாச்சியத்தான், எ-று.

வேறு.

அகாரமாம்பரமாத்துமன்றன்மையு
முகாரமாந்திருமாமகளுண்மையு
மகாரமன்னுயிருங்கொள்பிரணவ
விகாரந்தீரோமுந்தோமிதும்விட்ணுவே. (௯)

(இ-ள்.) அகாரம் ஆம் - அகாரவாச்யனாகிய, பரமாத்துமன் தன்மை - பரமாத்மனது தன்மையும், உகாரம் ஆம் - உகார வாச்யையாகிய, திருமாமகள் உண்மையும் - பெரிய பிராட்டியாரது யதார்த்தமும், மகாரம் - மகார வாச்யர்களாகிய, மன் உயிரும் - நிலைபெற்ற உயிர்களும், (ஆகிய இவற்றின் தன்மைகளை யெல்லாம்) கொள் - (தன்னிடத்துக்) கொண்டிருக்கிற, விகாரம் தீர் - வேறுபாடற்ற, பிரணவ எழுத்து - ப்ரணவாக்ஷரம், ஓம் என்பது, இதும் விட்ணுவே - இதுவும் திருமாலினுருவமே, எ-று.

இந்தவாறிதிகாசஞ்சுருதிமூ
வைந்துமூன்றுபுராணமித்தாந்தத்துந்
செந்திருப்பெருமான்பரந்தேறுக
தந்திடும்பொருட்சைவர்க்குரைத்தனன். (௰)

(இ-ள்.) இந்தவாறு - இந்தப்ரகாரமாக, இதிகாசம் - இதிஹாஸங்களுள்ளும், சுருதி - வேதங்களுள்ளும், மூவைந்து மூன்று புராண ஸித்தாந்தங்களுள்ளும், தந்திடும்பொருள் - தத்துவம் - பதினென்புராண ஸித்தாந்தங்களுள்ளும்,

சொல்லப்படும் பொருளாவது, செந்திருப் பெருமான் - ஸ்ரீமந் நாராயணனது, பரம் - பரத்துவமே, தேறுக - தெளிகவென்று, சைவர்க்கு உரைத்தனன் - சைவசித்தாந்திகளுக்குச் சொன்னான், எ-று.

ஆதலாற்பரமன்றும்பசுபதி
யாதவன்பரந்தாமன்பரமென
வாதில்வென்றனன்வாழ்வெதிராசர்தாட்
போதில்வண்டெனத்தேனுண்புனிதனே. (௰௧)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், உம் பசுபதி - உம்முடைய பசுபதியானவன், பரம் அன்று - பரவஸ்து வல்ல, யாதவன் - லக்ஷ்மீநாதனே, பரந்தாமன் - பரஞ்ஜோதியானவன், என - என்று, வாதில் வென்றனன் - வாதத்தில் ஜெயித்தனன், (யாரெனின்) வாழ்வு - நித்திய வாழ்வை யுடைய, எதிராசர் தாள்போதில் - யதிராஜரது பாததாமரையில், வண்டு என - வண்டுபோல, தேன் உண் - (போக்யதையாகிய) தேனைப் பருகுகின்ற, புனிதன் - பரிசுத்தனாகிய கூரத்தாழ்வான், எ-று.

புனிதவுந்தியிற்புண்டரிகப்பிரான்
நினைவிலங்கசனெற்றியிற்சங்கரன்
றனையிலங்கத்தருஞ்சச்சிதாநந்த
வனகன்றன்மையறைகுவர்யாவரே. (௰௨)

(இ-ள்.) புனிதம் - பரிசுத்தமாகிய, உந்தியில் - திருநாபி கமலத்தில், புண்டரிகப்பிரான் - பிரமனையும், நினைவில் - மனத்தில், அங்கசன் - மந்மதனையும், நெற்றியில் - லலாடத்தில், சங்கரன் தன்னை - சங்கரனையும், இலங்க - விளங்க, தரும் - தந்த, சச்சிதாநந்த அநகன் - சச்சிதாநந்த ரூபியும் பரிசுத்தனுமாகிய திருமாலின், தன்மை - ப்ரபாவத்தை, அறைகுவர் யாவர் - சொல்ல வல்லவர் யாவர், எ-று.

பெருகுமிப்பொருளின்பத்தைப்பெறுவா
ரிருவினைப்பயன்யாவுமகன்றுபின்
றிருவினுற்றுத்திகழ்வரிங்கப்புற
மருவுபேரின்பவானுற்றுவாழ்வரே. (௰௩)

(இ-ள்.) பெருகும் - பெருகாநின்ற, இப்பொருள் இன்பத்தை - இந்தப் பொருளின் இன்பத்தை, பெறுவார் - விரும்புவோர், இருவினைப்பயன் யாவும் அகன்று - இருவினைப்பயன்களெல்லாவற்றையும் நீங்கி, பின் - பிறகு, இங்கு திருவின் உற்றுத் திகழ்வர் - இம்மையில் திருவோடு பொருந்தி ப்ரகாசிப்பார்கள், அப்புறம் - அப்பால், மருவு - பொருந்திய, பேரின்பம் - பேரானந்தத்தைத் தருகிற, வான் - பரமபதத்தை, உற்று வாழ்வர் - அடைந்து வாழ்வார்கள், எ-று.

இரண்டாவது நமகசமகம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம், ௱௩.

# இரண்டாவது

# நமகசமகம்.

நமக சமகத்தின் சங்கதி யென்னவெனில், இராவணன் வேதத்தைச் சிக்கறுத்துப் பத - க்ரம - ஜடை - பாதம் - ப்ரசனம் - முதலிய அலங்காரங்களை ஏற்படுத்தும்போது, சிவனிடத்தில் அபிமானத்தாலே ருத்திரனை நமஸ்கரிக்கிறேனென்று சொன்னதொன்றாகையாலே, அதனாலே ருத்திரனுக்குப் பரத்துவமுண்டென்று சொன்னால், கல்பங்கள் தோறும் விஷ்ணுவினிடத்தில் பிரம்ம ருத்திரேந்திராதிகள் ஜனித்ததாய்ச் சொல்லுகிற சுருதிகளுக்கு விருத்தமாகையாலே நமக சமகத்தால் சிவனுக்குப் பரத்வஞ் சொல்லவொண்ணாது.

முதலாவது—(புராணத்தில்) (యన్నాభిపద్మాద్బ్రహ్మా చ - తథాన్యాన్యాదయస్సంభవంతి - యోఽసౌ చయసంతో విష్ణుస్సత్త్వగుణప్రణేతో భవత్ - తస్యనాభేరజో బ్రహ్మా యస్యధాతా - తథా తస్య భ్రూమధ్యాత్ రుద్రస్తమోగుణేన ప్రాదురభవత్) என்றதில் (యన్నాభిపద్మాద్బ్రహ్మా చ - తథాన్యాన్యాదయస్సంభవంతి) என்பது ஊர்ணநாபியென்ற சிலந்திப்பூச்சியானது நூலை எப்படி இருக்கடித்து மறுபடியுங் க்ரஹிக்கின்றதோ அப்படியே பிரபஞ்சத்தையும் ஆதிதேவனையும் ஜனிப்பித்தான் (యోఽసౌ చయసంతో విష్ణుస్సత్త్వగుణప్రణేతో భవత్) அவன் சாத்விக குண முடையவனென்று யாவராலும் பிரசித்தமாய்ச் சொல்லிக்கொள்ளப்படும் ஸ்ரீ மஹாவிஷ்ணு. (తస్యనాభేరజో బ్రహ్మా యస్యధాతా) அவனுடைய நாபி கமலத்தில் இராஜஸனான பிரம்மா பிறந்தான். (తథా తస్య భ్రూమధ్యాత్ రుద్రస్తమోగుణేన ప్రాదురభవత్) அப்படியே அந்தப் பிரம்மாவின் புருவங்களின் மத்தியில் தாமஸனான ருத்திரன் பிறந்தானென்று சொல்லப்படுகின்றது.

ருத்திரன் என்று சொன்ன பதத்துக்கு ஏகாதச ருத்திரர்கள் பிறந்தார்களென்றும், பிரம்மாவின் புருவங்களின் மத்தியில் சிவன் பிறந்தானென்று சொன்னதற்குப் பிரம்மா தியானஞ்செய்த தியானஸ்தானமான புருவங்களின் மத்தியிலிருந்து சிவன் தோன்றினனென்றும், சைவர்கள் சொன்ன ஸாக்ஷிகளுக்குப் பிரம்மாவினிடத்திலே ருத்திரனும் ஏகாதச ருத்ரர்களும் பிறந்தார்களென்றும், மற்றொரு கற்பத்தில் விஷ்ணுவினிடத்தில் ருத்ரனாகிய சிவனும் ஏகாதச ருத்ரர்களும் பிறந்தார்களென்றும் ருத்ரன் என்கிற நாமமும் சிவனுக்குப் பிரம்மாவினால் கொடுக்கப்பட்ட ஏழு நாமங்களில் பிரதானமான நாமமென்றும் சுருதி பிரதிபாதிக்கின்றன.

பிரம்மாவினிடத்தில் ருத்திரனுகிய சிவனும் ஏகாதச ருத்திரர்களும் பிறந்தார்களென்று சொன்னதற்குச் சுருதி.

இரண்டாவது—(స ప్రజాపతిరేకః పుష్కరపర్ణే సమభవత్ లలాటాత్ క్రోధజో రుద్రస్త్రిశూలీ ఖండపరశుః - పర్జన్యత్ సంవత్సరో జాయత - ఇంద్రో వరుణః సోమో రుద్రః పర్జన్యో యమః - బ్రహ్మణః పుత్రాయ - జ్యేష్ఠాయ శ్రేష్ఠాయ - పుత్రాయ రుద్రాయ) அச்சதுர்முக னொருவனே தாமரைக் கமலத்திலிருந்து பிறந்தான், அவனிடத்தில் ருத்திரனுகிய சிவன் பிறந்தான், வருஷாதி தேவதைகளும் இந்திரன், வருணன், சோமன், ஏகாதச ருத்ரர்கள் பர்ஜந்ய தேவதைகள் இயமன் முதலானோர் பிறந்தார்கள்.

மற்றொரு கற்பத்தில் விஷ்ணுவினிடத்தில் ருத்ரனும் ஏகாதசருத்ரர்களும் பிறந்ததற்குச் சுருதி.

மூன்றாவது—(అథ పురుషో హ వై నారాయణో ऽకామయత ప్రజాః సృజేయేతి - అసృజత్ - నారాయణాద్బ్రహ్మా జాయతే - నారాయణాద్రుద్రో జాయతే - నారాయణాదింద్రో జాయతే - నారాయణాద్ద్వాదశాదిత్యాః రుద్రా వసవః ఋషయః - ప్రజాపతయశ్చ పూర్వే దేవాస్సముత్పద్యంతే) என்று நாராயணனிடத்தில் பிரம்மா உருத்திரன் இந்திரன் துவாதசாதித்தர்கள் ஏகாதச ருத்ரர்கள் அஷ்டவசுக்கள் ஸப்த ருஷிகள் நவப்பிரஜாபதி முதலான தேவர்கள் பிறந்தார்களென்றும், பிரம்மாவினிடத்திலும் விஷ்ணுவினிடத்திலும் ருத்ரனுகிய சிவனும் ஏகாதச ருத்ரர்களும் பிறந்தார்களென்றும் சொல்லியிருக்கையால், ருத்ரனென்கிற பதத்துக்கு ஏகாதச ருத்ரர்களென்று சொல்லும் பக்ஷம் நிரஸ்தமாய்விட்டது.

நான்காவது—சதபதபிராமணம் என்ற சுருதியில் (శతపథే అభూద్వా ఇదం ప్రతిష్ఠిత్యా రస్య భూతానాం పతిః - సంవత్సరాయ దీక్షితః - భూతానాం పతిః - గృహపతిరాసీత్ - ఉషాః పత్నీ త్యాదికముక్త్వా - భూతానాం ప్రతిసంవత్సర ఉషసి రేతో ऽసించత్ - సంవత్సరే కుమారో ऽజాయత। సో ऽరోదీత్ తం ప్రజాపతిరబ్రవీత్। కుమార కిం రోదిషి యచ్ఛ్రమాత్తపసో ऽధిజాతో ऽసీతి సో ऽబ్రవీత్। అనపహతపాప్మా వా అస్మి। అనభిహిత నామా నామ మే దేహి। పాప్మనో ऽపహత్యా ఇతి తమబ్రవీత్ అపహతపాప్మా ఘపాప్మాసి। రుద్రభవశర్వ ఈశానపశుపతిభీమోగ్ర ఇతి సప్తనామాని) என்றதில் பிரம்மா ஒரு வருஷகாலம் தீக்ஷிதனாயிருந்து உஷஸ்ஸினிடத்தில் கர்ப்பாதானம் பண்ணினார் ஸம்வத்ஸரத்தில் ஒரு பிள்ளை பிறந்தான், அவன் பிறக்கும்போது அழுதான், நீ ஏன் அழுகிறாயென்றும் நீ சிரமத்தினாலே தபஞ்செய்து பிறந்தையேயென்றும் பிரம்மா கேட்டான், அப்போது நான் பாபியாயிருக்கின்றேனே யென்றும் என்னுடைய பாப விமோசனத்துக்காக நல்ல நாமங் கொடுக்கவேண்டுமென்றுங் கேட்க, நீ பரிசுத்தனுகக் கடவாய், உனக்கு ருத்ரன், பவன், சர்வன், ஈசானன், பதி, பீமன், உக்ரன் என்கிற ஏழு திருநாமங் சாற்றினேன் என்று



பிரம்மா சொன்னுர். இதில் சிவனைக்குறித்துக் குமாரனேயென்றும் தபசைப் பண்ணிப் பிறந்தாயென்றுஞ் சொல்லிய இவை முதலான சங்கதிகளினாலே பிரம்மா தியானஞ் செய்ததற்குத் தியானஸ்தானமான புருவங்களின் மத்தியில் ஆவிர்ப்பவித்தானென்று சைவர்கள் சொல்லுகிற யுக்தி நிரசிக்கப்பட்டது. பின்னும் ருத்ரனென்கிற பெயர் பிரம்மாவினால் கொடுக்கப்பட்ட ஏழு நாமங்களில் முதல் நாமமென்றும் சொல்லப்பட்டது.

மேலும் பிரம்ம ருத்திரர்கள் இறந்து நாராயணனொருவனே முடிவிலிருக்கின்றானென்றும், மறுபடியும் இறந்தயாவரும் அந்த ஸ்ரீமந் நாராயணனாலே சிருஷ்டிக்கப் படுகிறார்களென்றும் சொல்லியிருக்கையால், நமகசமகத்தாலே சிவனுக்குப் பரத்வமென்று சொல்லுகை சுருதிவிரோதம்-ஆதாவது.

ஐந்தாவது—ஆங்கிரஸ உபநிஷத்தில் (ఏకో హ వై నారాయణ ఆసీత్ - న బ్రహ్మా నేశానః - స మునిర్భూత్వా సమచింతయత్ - తత ఏతే వ్యజాయంతే - విశ్వో హిరణ్యగర్భో ऽగ్నిర్యమవరుణరుద్రేంద్రాః -) என்று பிரம்மா உருத்திரன் முதலியவர்களிறந்து நாராயணன் ஒருவனே முடிவிலிருக்கின்றானென்றும், பின்பு இறந்த யாவரும் விஷ்ணுவின் நினைப்பினுலுண்டானார்களென்றுஞ் சொன்னதைச் சடகோபர் திராவிடவேதத்தில் [ஒன்றுந் தேவுமுலகு முயிருமற்றும் யாதுமில்லா அன்று நான்முகன் றன்னொடு தேவருலகோடுயிர் படைத்தான்] என்றதில் என்றைக்கும் பிரம்ம ருத்திரர்களும் மற்றவர்களும் இறந்தனர்களோ அன்றைக்கே இறந்தவர்களைப் படைத்தானென்று சொல்லியிருக்கையால் இந்தச் சுருதிகளுக்குச் சான்றோராட்சியும் உண்டாயிருக்கின்றது.

இதன்றி உ-வது கட்சி க-வது தொடரில் சொன்ன (యస్యోర్ధ్వనాభిస్స్వజే.) என்ற சுருதியை ஸ்ரீ கண்ணன் (మన్నాభిపంకజాజ్జాతో - పద్మయోనిః పితామహః - తల్లలాటోద్భవో రుద్ర స్సహజా అష్టదానవః.) என்னுடைய நாபிகமலத்தில் பங்கஜன் பிறந்தான், அவனுடைய நெற்றியிலிருந்து சிவன் பிறந்தான், அவனிடத்திலிருந்து அறுமுகன் பிறந்தானென்றும், ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் (భృకుటీకుటిలాత్తస్య లలాటాత్ క్రోధదీపితః - సముత్పన్నస్తదా రుద్రో - మధ్యాహ్నార్కసమప్రభః -) பிரம்மா ஸநகாதிகளைச் சிருஷ்டித்து உலகத்தைப் படையென்று நியமிக்க அவர்கள் இவருடைய வாக்கியத்தைப் பரிபாலனம் பண்ணுமற் போனதின்பேரி லுண்டான கோபத்தினாலே கண்கள் செவந்து மத்தியான சூரியனைப்போன்ற காந்தியுடனே பிரம்மாவின் நெற்றியிலிருந்து சிவன் பிறந்தானென்றும், ஸ்ரீ பாகவதத்தில் (ధియా నిగృహ్యమాణో ऽపి భ్రువోర్మధ్యాత్ప్రజాపతేః - సద్యో ऽజాయత తన్మన్యుః - కుమారో నీలలోహితః -) ஞானத்தினாலே நிக்ரஹத்துக்கு அர்ஹனுயிருந்தபோதிலும் பிரம்மாவின் புருவத்தின் மத்தியத்திலிருந்தும் நீலலோஹிதனென்றபேரையுடைய சிவன் பிறந்தானென்றும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. உ-வது கட்சி

௩-வது ஸ்தொடரில், (నారాయణాద్బ్రహ్మా జాయతే.) என்ற சுருதிக்கு ஹரிவம்சத்தில் (కేతి బ్రహ్మణో నామ ఈశో హం సర్వదేహినాం - ఆవాంతవాంగసంభూతౌ - తస్మాత్ కేశవనామవాన్-) என்று கண்ணனைப் பார்த்து சிவன் - க - என்ற அக்ஷரத்துக்குப் பொருளான பிரம்மாவும் நானும் ஆக நாங்களிருவரும் உம்முடைய திருமேனியி லுண்டானவர்கள் ஆதலால் உமக்குக் கேசவனென்ற திருநாமம் உண்டாயிற்றென்றும் சொல்லி யிருக்கின்றது. இவ்வித பிரமாணங்களாலே விஷ்ணுவினிடத்தில் பிரம்ம ருத்திரர்கள் கற்பங்கள்தோறும் ஜநித்தார்களென்றும் பின்னும் சிவனுடைய வாக்காலே விஷ்ணுவே காரணவஸ்துவென்றும் அத்தாலே மோக்ஷத்தைக் கொடுக்குமவன் விஷ்ணுவென்றும் சொல்லப்பட்டிருக்கையால் நீங்கள் சொல்லுகிற நமக சமகத்தாலே சிவனுக்குப் பரத்வஞ் சொல்லக்கூடாதென்று கண்டித்தார்.

பதினைந்தாவது

# சிவபூசைமகிமை யுரைத்தகட்சி.

மாறனையுளத்திடைவதிந்தசெந்தமிழ்
மாறனைத்துதியெதிவரன்பொற்றாண்மலர்
மாறனைக்கொடுமருள்வாதர்சொற்பொருண்
மாறனைக்கூரம்வாழ்மணியைப்போற்றுவாம். (௧)

(இ-ள்.) மால் தன்னை - திருமாலை, உள்ளத்து இடை - மனத்தின்கண், வதிந்த - பொருந்திய, செந்தமிழ் மாறனை - செந்தமிழ்ப் பாசுரங்களாகிய திருவாய்மொழியைச் செய்தருளின சடகோபனை, துதி - ஸ்தோத்ரம் பண்ணுகிற, எதிவரன் - யதிஸ்ரேஷ்டராகிய ஸ்ரீ பாஷ்யகாரரது, பொன் தாள் மலர் - அழகிய திருவடித் தாமரைமலரின் மீது, மால் தன்னை கொடு - ஆசை கொண்டு, மருள் வாதர் - மருளுகின்ற சைவவாதியர்கள், சொல் - சொல்லாகின்ற, பொருள் - அர்த்தத்துக்கு, மாறனை - விரோதியாயிருந்து அவர்களை வென்றவனை, கூரம் வாழ் மணியை - திருக் கூரத்தில் வாழ்கின்ற மாணிக்கம் போல்பவராகிய கூரேசனை, போற்றுவாம் - புகழ்வோம் (யாம்), எ-று.

ஆரத்தாழ்வாரிதயத்தின்வல்லிருள்
சேரத்தாழ்வாரிடர்தீர்க்கும்சீர்நிறை
நீரத்தாழ்வாரியிற்கேசவன்பரங்
கூரத்தாழ்வாரினங்கூறன்மேயினார். (௨)

(இ-ள்.) ஆர - மிகுதியாகிய, தாழ்வு ஆர் - இழிவு பொருந்திய, இதயத்தின் வல் இருள் சேர - மனத்தின் வலிய இருளானது கூடுதலால், தாழ்வார் - (அதனால் வருந்தித் தன்னைப்) பணிவோர்களுடைய, இடர் தீர்க்கும் - துன்பத்தை நீக்குகின்ற, சீர் நிறை - சிறப்புமிக்க, ஆழ் - ஆழ்ந்த, நீரத்து வாரியில் - க்ஷீராப்தியில் (யோக நித்ரை செய்கின்ற), கேசவன் - திருமாலின், பரம் - பரத்வத்தை, இன்னம் - இன்னமும், கூரத்தாழ்வார் - கூராதிபரானவர், கூறல் மேயினார் - சொல்வாராயினர், எ-று.

மூலமூடுடைமோர்முடிவுமெய்த்திரு
மாலெனவோதிராமாநுஜன்சுரர்
சீலனைநோக்கியேசெறிந்தசைவர்பூ
பாலனும்பாலரிற்பகராநிற்றனர். (௩)

(இ-ள்.) மூலமும் - ஆதியும், நடுவும் - மத்யமும், ஓர் முடிவும் - ஒப்பற்ற அந்தமும் ஆய் விளங்குமேவான், எம் திருமால் என ஓது - எமக்கு உத்தேஸ்ய னாகிய திருமாலே யென்று சொல்லிய, இராமாநுசன் கழல் சீலனைநோக்கி - ராமாநுஜர்க்குத் திருவடிஸ் தாநமாயிருக்கிற ஒழுக்கமுள்ள கூரத்தாழ்வாரைப் பார்த்து, செறிந்த சைவர் - அந்தச் சபையில் நெருங்கியிருந்த சைவ வித் வான்களும், பூபாலனும் - அரசனும், பாவரின் - இளைஞர் குழறுவதுபோல, பகரல் உற்றனர் - பேசத் தொடங்கினார்கள், எ-று.

தம்மிருபதந்தொழுந்தகையினோர்க்கெலா
மிம்மையுமறுமையுமினியசெல்வமே
செம்மையினநுபவஞ்செயவளித்தலா
லெம்மிறையரன்பரமென்றுகூறினர். (அ)

(இ-ள்.) தம் இருபதம் தொழும் தகையினோர்க்கு எல்லாம் - தம்முடைய இரண்டு திருவடிகளை வணங்குந் தன்மையை யுடையவர்களுக் கெல்லாம், இம்மையும் மறுமையும் - இகத்திலும் பரத்திலும், இனிய செல்வம் - இனி தாகிய பாக்யத்தை, செம்மையின் அநுபவம் செய்ய - செவ்வையாக அநு பவிக்கும்படி, அளித்தலால் - க்ருபை செய்தலால், எம் இறை அரன் - எம் மிறைவனாகிய சிவனே, பரம் என்று கூறினர் - பரவஸ்துவென்று சொன் னார்கள், எ-று.

கூறியசைவர்முன்கூரத்தெம்பிரான்
மாறியவகையிதுமறுத்துக்கூறுவா
ராறணிசடையனையடைந்துபூசனை
யீறிலுபுரிந்துளோர்விரவுமுண்மைகேள். (௫)

(இ-ள்.) கூறிய - (இப்படி) சொல்லிய, சைவர் முன் - சைவர்களுக் கெதிரில், கூரத்து எம்பிரான் - திருக்கூரத் தெம்பெருமான், மாறியவகை இது - மாறுபட்டவகையாகிய இந்தக் கட்சியை, மறுத்துக் கூறுவான் - தடுத்துச் சொல்லுவார், (என்னெனின்) ஆறு அணி - கங்கா நதியைத் தரித்த, சடையனை - சடையை யுடையவனாகிய சிவனை, அடைந்து - ஆஸ்ர யித்து, வீறுடு - மேன்மையோடு, பூசனை புரிந்துளோர் - பூஜைசெய்த வர்கள், விரவும் - அடைகின்ற, உண்மை - யதார்த்தத்தை, கேள் - கேளுங் கள், எ-று.

மண்டலந்தனிலொருவருமதிக்கொணா
வெண்டிகழ்பெருஞ்செல்வமிம்மையார்ந்துபின்
வண்டர்கடுதிசெயவமைந்துதோன்றிய
வொண்டனச்சுவர்க்கமுமறுமையுப்பரால். (௯)

(இ-ள்.) மண்டலந்தனில் - பூமியில், ஒருவரும் மதிக்க ஒண்ணா - ஒருவ ராலும் மதிக்கக் கூடாத, எண் திகழ் - தொகையினால் விளங்குகிற, பெருஞ்



செல்வம் - மஹைஸ்வர்யத்தை, இம்மை ஆர்ந்து - இகத்தில் அநுபவித்து, பின் - பிறகு, மறுமை - பரத்தில், அண்டர்கள் துதி செய்ய அமைந்து - தேவர்கள் ஸ்தோத்ரம் பண்ணும்படி யமைந்த, தோன்றிய - உண்டாகிய, ஒள் தனம் சுவர்க்கமும் - அழகிய பொன்னுலகாகிய சுவர்க்கத்தையும், உப்பர் - செலுத்தப்படுவார்கள், எ-று.

எந்தைமாதவனடியெண்ணியன்பொடு
சிந்தையிற்பூசனைசெய்துளோரெலாம்
வெந்துயர்விருப்பறமேவியிங்கவ
ணந்தலில்பேரின்பநாட்டைநண்ணுவார். (௧)

(இ-ள்.) எந்தை - எமது தந்தையாகிய, மாதவன் - திருமாலின், அடி - திருவடிகளை, சிந்தையின் அன்பொடு எண்ணி - மனத்தினால் அன்போடு நினைத்து, பூசனை செய்துளோர் எல்லாம் - பூஜை செய்தவர்களெல்லாம், இங்கு - இம்மையில், வெந்துயர் - கொடிய துன்பங்களும், விருப்பு - ஆசை யும், அற - ஒழிய, மேவி - பொருந்தியிருந்து, அவண் - (மறுமையாகிய) அவ்விடத்தில், அந்தல் இல் - (எக்காலத்திலும்) கெடுதலில்லாத, பேர் இன் பம் - பேரானந்தத்தைத் தருகிற, நாட்டை - பரமபதமாகிய நாட்டையும், நண்ணுவார் - பொருந்துவார்கள், எ-று.

தகாவரலீலைவிபூதித்தன்மைமகா
மகாசலப்பிரளயந்தன்னிலின்மாயத்திட
விகாரமிலாநித்தியவிபூதிமால்பதம்
யுகாயுதந்தளைவைநீந்துறைதலுண்மையே (௨)

(இ-ள்.) தகா - தகுதியற்ற, அலீலை விபூதித் தன்மைகள் - கொடுமையுடைய லீலைகளும் செல்வப் பெருக்கின் தன்மைகளும், மகா சலப் பிரளயம் தன்னில் மாய்ந்திடும் - மஹா ஜலப்ரளய காலத்தில் அழிந்துபோம், விகாரம் இல் - வேறுபடுதலில்லாத, நித்திய விபூதி - நித்ய விபூதியாகிய, மால்பதம் - திரு மாலின் பதவியாகிய பரமபதம், யுகா யுகத்து அளவை நீத்து - யுகா யுகங்க ளின் அளவைக் கடந்து, உறைதல் - நிலைபெற்றிருத்தல், உண்மை - சத்தியம், எ-று.

மன்னொறுவிண்ணுலாமகாசலந்தனிற்
றன்னொளிமாலயர்சதுமுகன்கிளர்
விண்ணவர்க்கிறைமுதலோருமேவிலா
தென்னமுமுலதமுமிறுநியெய்துமால். (௩)

(இ-ள்.) மண்ணொறு விண் உலாம் - பூமியாகாசங்களில் வ்யாபித்துப் பெருகுகிற, மகாசலந்தனில் - மஹாஜல ப்ரளயகாலத்தில், தன் - ப்ரகாசி

பொருந்திய, நளிநம் ஆலயம் - தாமரை மலரை யிடமாகவுடைய, சதுமுகன் - நான்கு முகங்களையுடையவனாகிய ப்ரஹ்மாவும், சிவன் - ருத்ரனும், விண்ணவர்க்கு இறை - தேவர்களுக் கரசனாகிய இந்திரனும், முதலோரும் - முதலானோரும், மேவி வாழ் - பொருந்தி வாழ்கின்ற, எண்ணமும் - மதிப்பும், உலகமும் - (அவர்களுடைய) லோகங்களும், இறுதி எய்தும் - முடிவையடையும், எ-று.

அகிலவண்டம்பிரமாண்டத்தப்புறம்
பகரும்வைகுந்தமாம்பரம்பதந்தனிற்
புகலுமோக்காதிகாரத்திற்போந்துள
விகலின்மாலடியவரிவைகண்டங்ஙனே. (௰)

(இ-ள்.) அகில அண்டம் - எல்லா அண்டங்களும், பிரம அண்டத்து - ப்ரஹ்மாண்டமும் ஆகிய எல்லாவற்றுக்கும், அப்புறம் - அப்பாலுளதாக, பகரும் - அறிவுடையோரால் சொல்லப்பட்ட, வைகுந்தம் ஆம் - வைகுந்தமாகிய, பரம் பதந்தனில் - பரமபதத்தில், புகலும் - எடுத்துப் புகழ்தற்குரிய, மோக்காதிகாரத்தில் - மோக்ஷாதிகாரத்தில், போந்து உள்ள - சொல்லப்பட்டுள்ள, இகல் இல் - சமானமில்லாத, மால் அடியவர் - திருமாலின் அடியார்கள், இவை கண்டு - இவைகளைப்பார்த்து, அங்ஙனே - அப்பொழுதே, எ-று.

முளரியின்மேவுநான்முகவன்றண்கதி
ரிளநிலாவேணியனிந்திராதியர்
களிபெறுலீலைவிபூதிகண்டிவர்
விளைவுமிவ்வளவெனமிகநகைப்பரால் (௰௧)

(இ-ள்.) முளரியில் மேவும் - தாமரை மலரிற் பொருந்தி வாழ்கின்ற, நான் முகவன் - நான்கு முகங்களை யுடையவனாகிய ப்ரஹ்மதேவன், தண் கதிர் - குளிர்ச்சியாகிய கிரணங்களையுடைய, இள நிலா - இளஞ் சந்திரனை, வேணியன் - சடாபாரத்தி லணிந்த சிவனும், இந்திராதியர் - இந்த்ரன் முதலானோரும், களிபெறு லீலை விபூதி கண்டு - மகிழ்ச்சியடைதற் கேதுவாகிய லீலைகளும் ஐச்வர்யங்களுமாகிய இவைகளைப் பார்த்து, இவர் விளைவும் - இவர்களுடைய பல ப்ராப்திகளும், இவ்வளவு என - இவ்வளவேயாமென்று இகழ்ந்து, மிக நகைப்பர் - மிகவும் சிரிப்பார்கள், எ-று.

வேறு.

இன்னணமரனயன்சீரிந்திரனமரர்வாணா
ளின்னியசெல்வங்கற்பந்தொறுந்தொறும்வேறுவேறாய்ப்
பின்னமுற்றழிதலாலும்பிஞ்ஞகன்றன்னைநோக்கி
யுன்னையோதினருக்கின்பமுதவெனுமால்சொல்லாலும். (௰௨)



(இ-ள்.) இன்னணம் - இந்தப்ரகாரமாக, அரன் - சிவன், அயன் - ப்ரஹ்மா, சீர் இந்திரன் - சிறப்பமைந்த இந்த்ரன், அமரர் - தேவர்கள், (ஆகிய இவர்களுடைய) வாணாள் - ஆயுஸ்ஸும், துன்னிய செல்வம் - மிகுந்த செல்வமும், கற்பந்தொறும் - கல்பங்கள்தோறும், வேறு வேறு ஆய் - வெவ்வேறாகி, பின்னம் உற்று அழிதலாலும் - வேற்றுமையை யடைந்து அழிகையாலும், பிஞ்ஞகன் தன்னை நோக்கி - சிவனைப்பார்த்து, உன்னை ஓதினருக்கு - உன்னைப் புகழ்ந்தவர்களுக்கு, இன்பம் உதவு என்னும் - சுகத்தைக் கொடு என்று சொல்லிய, மால் சொல்லாலும் - திருமாலின் சொல்லினாலும், எ-று.

அவனியிற்றிருமால்பூசையாற்றியதுருவன்மிக்கு
நவில்புகழ்விடணன்சீர்நண்ணியபலிமன்னாதி
யிவர்முதலநந்தம்பேருக்கீறிலாச்செல்வந்துய்க்கத்
தவறிலாதளிக்குந்தேவத்தன்மையனாகையாலும். (௰௩)

(இ-ள்.) அவனியில் - உலகத்தில், திருமால் பூசை ஆற்றிய - திருமால் பூஜையைச் செய்த, துருவன் - த்ருவன், மிக்கு நவில் புகழ் விடணன் - மிகுதியா யெடுத்துச் சொல்லத் தகுந்த புகழையுடைய விபீஷணன், சீர் நண்ணிய பலிமன் - சிறப்புப் பொருந்திய பலிச்சக்ரவர்த்தி, ஆதி - முதல்வராகிய, இவர் முதல் - இவர்கள் முதலாகிய, அநந்தம் பேருக்கு - முடிவற்ற பேர்களுக்கு, ஈறு இல்லா - முடிவில்லாத, செல்வம் - செல்வத்தை, துய்க்க - அநுபவிக்கும் பொருட்டு, தவறு இல்லாது - பிழைத்தலின்றி, அளிக்கும் - கொடுத்தருள்கின்ற, தேவத்தன்மையன் ஆதலாலும் - தெய்வத்தன்மையுள்ளவன் ஆகையாலும், எ-று.

அயனரனிந்திராதியண்டரும்பண்டைநாளிற்
புயனிறக்கடவுளாராதநம்புரிபலத்தினாலே
சயம்பெறுசுவர்க்கபோகந்தனையநுபவிப்பதாலு
மயங்கிநீர்விளித்துக்கூறும்வாதெலாய்கோறுடைத்தே. (௰௪)

(இ-ள்.) அயன் அரன் இந்திராதி அண்டரும் - ப்ரஹ்மா சிவன் இந்த்ரன் முதலான தேவரும், பண்டை நாளில் - பூர்வகாலத்தில், புயல் நிறம் கடவுள் - நீலமேக வர்ணத்தையுடைய கடவுளாகிய திருமாலின், ஆராதநம் புரி - திருவாராதநம் செய்த, பலத்தினாலே - பலத்தால், சயம்பெறு - வெற்றியைப் பெறுதற் கேதுவாகிய, சுவர்க்க போகந்தனை - ஸ்வர்க்காநுபவத்தை, அநுபவிப்பதாலும் - அநுபவித்தலாலும், நீர் - நீங்கள், மயங்கி - மயக்கமடைந்து, விளித்துக் கூறும் - வரவழைத்துப் பேசுகிற, வாது எல்லாம் - வாதுகளெல்லாம், கோறு - குற்றமுடையனவேயாம், எ-று.

என்றிவையுரைத்துப்பின்னுமென்றனக்குயிர்களியாவும்
வென்றிமாயவனேநமாதலிற்றனாட்விண்டு
நன்றபிராமவான்மாதமென்றோதியோத
துன்றியபொருளெடுத்துச்சொல்லினர்கூசத்தெய்வதை. (௰௫)

(இ-ள்.) என்றிவை உரைத்து - என்று இவைகளைச்சொல்லி, பின்னும் - மேலும், எண் - எண்ணுதற்குரிய, உலகு உயிர்கள் யாவும் - உலகங்களும் அவற்றுளடங்கிய சராசர ஜீவராசிகளும் ஆகிய எல்லாம், வென்றி - வெற்றியையுடைய, மாயவன் - திருமாலின், அங்கம் ஆதலினாலும் - அங்கங்களாகையாலும், விண்டு - திருமாலே, நன்று அறி - யாவரும் நன்கு புணர்தற்குரிய, பரம ஆன்ம நாதன் - பரமாத்மாவாகிய இறைவனாவான், என்று ஓதி - என்று சொல்லி, துன்றிய - மிகுதியாகிய, வேதப்பொருள் - வேதார்த்தத்தை, கூரத்து எந்தை - திருக்கூரத்தெந்தையாகிய கூராழியர், எடுத்துச் சொல்லினர் - எடுத்துச் சொன்னார், எ-று.

வெய்யவன்கதிரினின்றுவிழும்பனித்திவலைமீட்டு
மெய்யவன்கதிரொடுங்கும்வீறுபோல்யாவரேனு
முய்யவன்பொடுசெய்பூசையுளவெலாங்கருணைமாயன்
செய்யவம்புயத்தாட்கன்றிச்சேர்தன்மற்றெங்ஙனம்மா. (௰௬)

(இ-ள்.) வெய்யவன் கதிரில் நின்று - சூரியனது கிரணத்திலிருந்து, விழும் - வீழ்கின்ற, பனி திவலை - குளிர்ச்சியாகிய நீர்த்துளிகள், மீட்டும் - மறுபடியும், மெய் - உண்மையாக, அவன் கதிர் - அவனது கிரணத்திற்றானே, ஒடுங்கும் - அடங்குகின்ற, வீறுபோல் - மேன்மைபோல, யாவர் ஏனும் - எவர்களாயினும், உய்ய - நாங்கள் உஜ்ஜீவித்தற்பொருட்டு, அன்பொடு செய் - ப்ரீதியுடன் செய்கின்ற, பூசை உள்ள எல்லாம் - பூஜையென்று சொல்லப்பட்டுள்ளனவெல்லாம், கருணை மாயன் - க்ருபையையுடைய திருமாலின், செய்ய அம்புயம் - செந்தாமரை மலர்போன்ற, தாட்கு அன்றி - திருவடிக்கேயன்றி, சேர்தல் எங்ஙன் - வேறிடத்திற் சேர்வது எப்படி, எ-று.

வேதசாத்திரபுராணமெய்ப்பொருள்விரித்துரைத்தே
யாதவன்மறையோர்சந்தியாற்றுநீர்க்கணைகளாலே
தீதுசெய்திடுமரக்கர்சேனையைவெல்லுமாபோல்
வாதுசெய்சைவர்தம்மைமறுத்தனன்வென்றனன்றே. (௰௭)

(இ-ள்.) வேத சாத்திர புராணம் - வேத சாஸ்த்ர புராணங்களின், மெய் பொருள் - உண்மையாகிய அர்த்தத்தை, விரித்து உரைத்து - விஸ்தரித்துச் சொல்லி, மறையோர் - ப்ராஹ்மணர்கள், சந்தி ஆற்றும் - சந்த்யாவந்தநம் செய்கிற, நீர் கணைகளால் - நீராகிய அஸ்த்ரங்களால், ஆதவன் - சூரியன், தீது செய்திடும் - (தன்தேர் செல்லவொட்டாமல் தடுத்துத்) தீமை செய்கிற, அரக்கர் சேனையை - அரக்கர்களுடைய சேனைகளை, வெல்லுமா போல் - ஜயிக்கும்விதம்போல, வாதுசெய் - தர்க்கவாதஞ் செய்கிற, சைவர் தம்மை - சைவர்களை, மறுத்தனன் வென்றனன் - தடுத்து வென்றார் (கூராழியர்) எ-று.

சூரியன் தேரைத் தடை செய்வோர் மந்தேஹர் என்னும் அரக்கர்.



சொல்லரும்பரமாநந்தச்சோதியாய்வேதமின்ன
மெல்லைகண்டறியாவொன்றாயிரண்டுமூன்றுருவாய்நின்ற
தொல்லையொண்பொருளைத்தேருந்துறைவிரித்தளவில்லின்ப
நல்லமுதெனவுரைத்தானளிதிருக்கூரத்தெம்மான். (௰௮)

(இ-ள்.) சொல் அரு - சொல்லுதற்கரிதாகிய, பரம ஆநந்தச் சோதி ஆய் - மேலான இன்பத்தைக் கொடுக்கிற தேஜோராசியாய், வேதம் - வேதங்களும், இன்னம் - இன்னமும், எல்லைகண்டறியா ஒன்று ஆய் - வரம்புகண்டுணராத ஒரு பொருளாய், இரண்டு மூன்று உருவு ஆய் - இரண்டு மூன்றுருவங்களாய், நின்ற - நிலைபெற்ற, தொல்லை - பழமையாகிய, ஒள் பொருளை - அழகாகிய பொருளை, தேரும் - ஆராய்தற்குரிய, துறைகளை - மார்க்கங்களை, அளவு இல் இன்பம் - அளவற்ற ஆநந்தத்தைத் தருகிற, நல் அமுது என - நன்மையாகிய அம்ருதம்போல, விரித்தான் - (கேட்போர் செவிகளுக்கு இனிதாயிருக்கும்படி) விஸ்தரித்துச் சொன்னார், (யாவர் எனின்) அளி - பெருமைபொருந்திய, திருக்கூரத்து எம்மான் - திருக்கூரத்திலெழுந்தருளிய எம்மேலோராகிய கூராழியர், எ-று.

இப்பொருளமுதந்தன்னையெழிற்செவிமுழையினூடு
மெய்ப்பொருட்சுவையின்பத்தைவிரவியவுளத்தோரெல்லாஞ்
செப்பதுமத்தோனாதிதேவர்களுலகின்மேலா
மொப்பில்பேரின்பந்துய்த்தலுண்மையீதுண்மைதானே. (௰௯)

(இ-ள்.) இப்பொருள் அமுதம் தன்னை - இந்த அர்த்தமாகிய அம்ருதத்தை, எழில் - அழகாகிய, செவி முழையினூடு - காதுகளென்கிற பிலத்தின் வழியாய், மெய்ப்பொருள் சுவை இன்பத்தை - உண்மைப் பொருளாகிய சுவையின் சுகத்தை, விரவிய - பொருந்திய, உளத்தோர் எல்லாம் - மனத்தையுடையவர் எல்லாரும், செப்பதுமத்தோன் ஆதி - செந்தாமரை மலரை யிடமாகவுடையவனாகிய ப்ரஹ்மா முதலாகிய, தேவர்கள் உலகின் மேல் ஆம் - தேவர்களுடைய உலகங்களுக்கும் மேலிடமாகிய பரமபதத்தையுடையவராய், ஒப்பு இல் - சமானரஹிதமான, பேர் இன்பம் துய்த்தல் - பேராநந்தத்தை அநுபவித்தல் ஆகிய, ஈது - இது, உண்மை உண்மை - சத்யம் சத்யம், எ-று.

பதினைந்தாவது,

**சிவபூசை மகிமை யுரைத்தகட்சி, முற்றிற்று.**

ஆக திருவிருத்தம், ௪௮௨.

—

## பதினைந்தாவது

# சிவபூசைமகிமை யுரைத்தகட்சி.

ப்ரதம்ஹரிவம்சத்தில் சிவனுக்குக் கண்டாகர்ண னென்னப்பட்ட அசுரன் பணி விருந்திட்டபோது, ஒருநாள் சிவன் சந்தோஷித்து உனக்கு வேண்டிய வரம் கேட்டுக்கொள்ளென்றார். மேற்படி அசுரன் நீர் ஹிரணியன், ஹிரணிய கசிபு, இராவணன், கும்பகர்ணன், பௌண்ட்ரீக வாசுதேவன், வாணாசுரன் முதலான பேர்களுக்குக் கொடுத்த ஐசுவரியங்களை விஷ்ணு அழித்து நாசஞ் செய்தமையால், அந்த ஐசுவரியத்தில் எனக்கு ஆசையில்லை. ஒருநாளும் அழிவில்லாமல் ஶாஸ்வதமாய் எல்லா அதிசயங்களும் நிறைந்திருக்கின்ற முக்தி யென்றும், மோக்ஷமென்றும், மஹாநந்தமென்றும் சொல்லும்படியான அந்த மோக்ஷவீட்டை, எனக்குப் பிரசாதிப்பீரென்று கேட்டதற்கு அவர் சொன்னதாவது.

கிருஷ்ணன் கைலாசத்துக்கு நாளை எழுந்தருளுகிறான், அவன் வரும் மார்க்கமாகிய இன்னவிடத்தில், அவனைக்கண்டு ஸேவித்து, உனக்கு வேண்டிய மோக்ஷத்தைக் கேட்டால் அவன் கொடுப்பானென்று சொல்ல, அப்பிரகாரமே மறுநாள் அசுரன் ஒரு பிராமணனைக்கொன்று கிருஷ்ணனுக்கு அர்ப்பணஞ் செய்யும்போது, கிருஷ்ணன் நீ யாரென்று கேட்க, அசுரன் சொன்னதாவது.

முதலாவது—(ము క్తింపా్ర్థయమానంమాంపునరాహత్రిలోచనః - ముక్తిప్రదాతాసర్వేషాం - విష్ణురేవసనాతనః) என்றதில் முக்தியைப் பிரார்த்தித்த வென்னைக் குறித்து முக்கண்மூர்த்தி சொன்னதாவது, யாவருக்கும் முக்தியைக் கொடுக்கப் பட்டவன் ஸநாதந ப்ரஹ்மமாகிய விஷ்ணுவேயென்று சொன்னபடியால், நான் தேவரீரிடத்திற்கு வந்தேனென்று சொன்னான்.

இரண்டாவது—அதற்குக் கண்ணன் சந்தோஷித்து சுருதியில் (యన్నదేవాన్నమునయోన్నచాహన్నచశంకరః - జానంతిపరమేశస్య - తద్విష్ణోఃపరమంపదం) என்றதில் ப்ரஹ்மாவானவர் யாதொரு தேவர்களாலும் ஸநகஸநந்தநாதி ரிஷியீஸ்வரராலும், சிருஷ்டி கர்த்தாவாகிய என்னாலும், சங்கரனாலும் அறிய வொண்ணாதது, பரமேஸ்வரனாய் விளங்காநின்றுள்ள அந்த விஷ்ணுவின் பரம பதமென்று சொல்லும்படியான அப்படிப்பட்ட மஹா ஐஸ்வர்யத்தைக் கண்டாகர்ணனுக்குக் கண்ணன் கொடுத்ததாய்ச் சொல்லியிருக்கையால், இந்த ஐஸ்வரியத்துக்கு முன்னே சிவன் வேண்டிய வரங்களைக் கொடுத்தானென்பது, பரிஹா ஸாஸ்பதமென்று கண்டித்தார்.



மூன்றாவது—ருக்வேதத்தில் ௮-ம் அஷ்டகம், ௭-ம் அத்தியாயம், ௰-ம் வர்க்கத்தில், ஸ்ரீமஹாலட்சுமியானவள் தவஞ்செய்த சேதனர்களுக்கு சதுர்தசபுவன சிருஷ்டி கர்த்தாவாகிய ப்ரஹ்மாவாகவும், ஸம்ஹார கர்த்தாவாகிய சிவனாகவும், திரிலோகாதிபத்தியமுடைய இந்திரனாகவும், அஷ்டவசுக்களாகவும் ஆகும்படி வரங் கொடுக்கிறாளென்று சொல்லியிருக்க அந்த சுருதி வசனங்களை அறியாமல், சிவன் வேண்டிய வரங்களைக் கொடுக்கிறானென்று லஜ்ஜையில்லாமல் சொன்னீர்களென்றும்.

நான்காவது—விஷ்ணுவினாலே கொடுக்கப்பட்ட இஹலோக சம்பத் தானது ஶாஸ்வதமாயிருக்கத்தக்கதென்றும், ஒருவராலும் அழிக்கப்படாத தென்றும், சிலரையெடுத்து உதாரணமாயருளிச்செய்கிறார்.

அவர்களாவார்—ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான், மஹாபலிச்சக்ரவர்த்தி, ஸ்ரீ விபீஷணாழ்வான், க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீகுசேலர், இவர்களுக்குக் கொடுத்த ஐஶ்வரியம் - ஶாஸ்வதமாயும், ப்ரஹ்மகல்ப பரியந்தம் அனுபவிக்கும்படி யிருப்பதென்றும், அல்லாமலும், சிறுவனாகிய த்ருவச்சக்ரவர்த்திக்கு இஹ லோகத்தில் சக்ரவர்த்தித்வமான ஐசுவரியங்கொடுத்து, அவன் காலஞ்செய்த பின்பு, முன்பில்லாத ஒரு பதத்தை மஹா மேருவின் உச்சியில் ஏற்படுத்தி, அதற்குத் த்ருவபதமென்று பேரிட்டு, நவக்கிரஹங்களை நியமிக்கும்படியான அதிகாரமுங் கொடுத்தபடியால், இவர்களுக்குமுன்னே சிவன் ஐசுவரியங் கொடுக்கப்பட்டவரென்று சொல்வது அசங்கதம்.

ஐந்தாவது—இவருக்கு ஐசுவரியங் கொடுக்கும்படியான வரம் விஷ்ணு கொடுத்தாரென்று, பாத்மோத்தரத்தில் மோஹன சாஸ்திர உற்பத்தியைக் குறித்த கதையைச் சொல்லிக் கண்டிக்கிறார். அதாவது, பாத்மோத்தரத்தில் பார்வதியுடனே சிவன் வைஷ்ணவர்களுக்குத் திருமண் காப்பு விதியைச் சொல்லும் பிரகரணத்தில், பார்வதியானவள் உலகத்தாருக்கு ஊர்த்வபுண்ட்ர விதியை விதிக்கிற நீர், பஸ்மந்தரிக்கிறதற் கென்னகாரணமென்று ப்ரஸ்நம் பண்ண, அதற்குச் சிவன் (శృణుదేవిప్రవక్ష్యామి ... ) என்றுஞ் சொல்லப்பட்ட அர்த்தம் (వృంతేవ్యాఖ్యత్ - ఇశేషుగచితంమతా) அற்புதமாயும் தேவரஹஸ்யமாயும் இருப்பதொன்றானையால், நீயொருவருக்கும் சொல்லக்கூடாதென்று சொல்லி.

ஆறாவது—பின்னும் (నముచాద్యామహాదైత్యాః - పురాస్వాయంభువాంతరే - సురాచలపతీహారా - మహాసేర్వతపాతాలస) முற்காலத்தில் ஸ்வாயம்புவ மன்வந் தரத்தில் மஹத்தான பலங்களையும் வீரங்களையும் தேஜசுக்களையும் விஷ்ணுவி னிடத்தில் பக்தியினாலே அடையப்பட்டவர்களாய் (సర్వేకర్మదశాశ్వదాః - సర్వపాప వివర్జితాః - శ్రియాపరయయాతాస్సర్వే - ధర్మపర్యత్తే సమన్వయాః)

சாத்விக கர்மத்தில் நிரதர்களாயும், அத்தால் பரிசுத்தர்களாயும், சர்வ பாபங் களில் நின்றும் விடப்பட்டவர்களாயும், வேதத்திற் சொன்ன தர்மங்களுடனே கூடினவர்களாயும், (నిర్జిత్య సకలాన్ దేవా - న్సర్వ సంతపరాక్రమాన్ - పదాని తేషాం సంజగృ్హు - బలవీర్య స్వసంస్థితాన్.) ஒருவராலேயுஞ் செயிக்க வரிதாயிருக் கின்ற பராக்கிரமங்களுடைய தேவர்களின் பதங்கள் முன் சொன்ன வசுரர்க ளாலே கிரஹிக்கப்பட்டது. (తతో దేవగణాస్సర్వే - భగ్నా ఇంద్రపురోగమాః - విష్ణుస్సమీప మగమ్య - భయం తాన్స్వర మంగతాః) பின்பு தேவக்கூட்டங்கள் யாவ ரும் இந்திரனை முன்னிட்டவர்களாய்க் கொண்டு விஷ்ணுவின் சமீபத்திலே போய் பயந்தாளாய் சரணாகதி பண்ணினார்கள்.

ஏழாவது—(ఇత్యాకర్ణ్య మహావిష్ణుర్వాక్యం దేవతానాం తయా త్రినాం తానపద్యాన్. విధి త్వాధ ఉవాచ పురుషోత్తమః) இவ்விதமாகப்பார்த்திகளான தேவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டு, அவ்வசுரர்களை நான் வதிக்கிறேனென்று புருஷோத்த மன் சொல்லி, (త్వం చ రుద్ర మహాబాహో - మోహనార్థం సురద్విషాం దర్శయిత్వాల్ప మాయాం సం ఫలంతీమ్ప్రకల్పయ) ஓய் ருத்ரனே நீர் அசுரராக்ஷஸர்கள் மோஹிக் கும்படி மோஹசாஸ்த்ரத்தைப் பண்ணக்கடவது மல்லாமல், அவர்கள் கோரின கோரிக்கைகளைச் சீக்கிரத்தில் கொடுக்கக்கடவீரென்று, விஷ்ணுவினாலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வரத்தினாலே, தன்னை யடைந்தவர்களுக்கு வரங்கள் கொடுக்கிறபடியால், அத்தால் சிவனுக்கு மஹாத்மியஞ் சொல்லக்கூடாதென்று கண்டித்தார்.

## பதினொருவது

# தசாவதாரக்கட்சி.

——(*)——

பேசுமால்பரம்பிரபந்தநான்குசெய்தருளு
மாசிலாச்சடகோபர்தாமரைமலரடியாந்
தேசிகன்றவாசூரிகேசரியன்செல்வ
னாசிலாப்பதவமுதுணுங்கூரம்வாழமலனே. (௧)

(இ-ள்.) மால் பரம் பேசும் - திருமாலின் பரத்வத்தைப் பேசுகிற, நான்கு பிரபந்தம் செய்தருளும் - நான்கு ப்ரபந்தங்களைச் செய்தருளிய, மாசு இலா - குற்றமற்ற, சடகோபர் - நம்மாழ்வாருடைய, தாமரை மலர் - தாமரை மலர்போன்ற, அடி ஆம் - திருவடி ஸ்தாநமாகிய, தேசிகன் - ஆசாரியனும், தவம் - தவத்தைச் செய்த, ஆசூரிகேசாரியன் செல்வன் - ஆசூரி கேசவாசார்யருக்குப் புத்ரனுமாகிய ஸ்ரீ பாஷ்யகாருடைய, ஆசு இல்லா - களங்கமில்லாத, பதம் அமுது உண்ணும் - ஸ்ரீ பாதாம்ருதத்தைப் பாநம்பண்ணுகிற, கூரம் வாழ் அமலன் - திருக் கூரநகரத்தில் வாழ்கின்ற பரிசுத்தன், எ-று.

நான்கு ப்ரபந்தங்களாவன. திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திரு வந்தாதி, திருவாய் மொழி என்பன.

ஆதியந்தமுமறிவருமம்புயக்கண்ணெந்
சோதிமூர்த்தியேயாவருமெவையுமாய்த்துவன்றிக்
கோதிலாவிளையாடல்செய்தவைபின்னுங்குறுகும்
போதினுந்தனதகல்வயிற்றொருபுடையொளிந்து. (௨)

(இ-ள்.) ஆதி அந்தமும் அறிவு அரும் - அடிமுடிகளுங் கண்டறிதற் கருமையாகிய, அம்புயக்கண் - தாமரைக்கண்களையுடைய, எம்சோதி மூர்த் தியே - எம்முடைய தேஜோரூபியாகிய திருமாலே, யாவரும் எவையும் ஆய் துவன்றி - எவரும் எவைகளுமாகி நிறைந்து, கோது இல்லாவிளை யாடல் செய்து - குற்றமில்லாத லீலைகளைச் செய்து, அவை - அவைகள், பின்னும் குறுகும்போதினும் - பிற்காலத்து நசிக்கும்போதும், தனது அகல் வயிற்று - தனது விசாலமாகிய திருவுதரத்தின், ஒரு புடை - ஒரு பக்கத்தில், பொதிந்து - ஒளித்துவைத்து, எ-று.

எவரும் எவைகளும் என்றது, உயர்திணைப் பொருள்களும் அஃறிணைப் பொருள்களுமாகிய இரண்டினை.

உலகமாயையேயுருவெனுமாலிளந்தளிர்மே
லிலகுமோர்சிறுகுழவிபோலெங்குமாய்ப்பரந்த
சலமகார்ணவந்தன்னிலேசருவமும்விண்டு
குலவுமாயையென்பதுவெனவறிதுயில்கொள்வான் (௩)

(இ-ள்.) உலகமாயையே உரு எனும் - லோகமாயையே இந்த ரூபமென்பதற்குரிய, ஆல் - வடவ்ருக்ஷத்தின், இளந்தளிர்மேல் - இளந்தளிரின் மீது, இலகும் - ப்ரகாசியாநின்ற, ஓர் - ஒரு, சிறுகுழவிபோல் - சிறு குழந்தை போல, எங்கும் ஆய் பரந்த - எவ்விடத்தும் நிறைந்து வ்யாபித்த, சலமகார்ணவம் தன்னிலே - ஜல ரூபமாகிய மஹா சமுத்ரத்தில், சருவமும் - எல்லாப் பொருள்களும், குலவும் - விளங்குகின்ற, விண்டு மாயை என்பது என - விஷ்ணுமாயையென்பது என்று யாவரும் சொல்லும்படி, அறிதுயில் கொள்வான் - அறிதுயில் கொண்டிருப்பான், எ-று.

அறிதுயில் - உணர்ச்சியோடு கூடிய நித்ரை.

ஆதலாலகிலாண்டகோடிகட்குமெம்மிறைவன்
மாதவன்பரமாமெனவகுத்துரைத்திடலும்
பூதமும்பலகூளியும்புடையுறவவற்றின்
நாதனாகநின்றாடியோன்சமயிகணவில்வார். (௪)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், அகிலாண்ட கோடிகட்கும் - எல்லா வுலகங்களுக்கும், எம் இறைவன் - எம் தலைவனாகிய, மாதவன் - லக்ஷ்மீ நாதனே, பரம் ஆம் என - பரவஸ்துவானவனென்று, வகுத்து உரைத்திடலும் - வகுத்துச் சொல்லுதலும், பூதமும் - பூதங்களும், பல கூளியும் - பல பிசாசங்களும், புடை உற - பக்கத்திற் பொருந்தியிருக்க, அவற்றின் நாதன் ஆக நின்று - அவைகளுக்குத் தலைவனாக நின்று, ஆடியோன் - நடனஞ் செய்தவனாகிய சிவனது, சமயிகள் - சமயிகளாகிய சைவர்கள், நவில்வார் - சொல்வார்கள், எ-று.

தசாவதாரமுந்தகையொடுசெய்தநின்மாயன்
புசாபலங்களொடுங்கியும்பூசனைபுரிந்தும்
நிசாகரன்றிகழ்நெடுஞ்சடையெம்மிறையருளின்
விசாலமுற்றுயலாற்சிவன்மெய்ப்பரமென்றார். (௫)

(இ-ள்.) தகையொடு - பெருமையுடன், தசாவதாரமும் செய்த - பத்தவதாரங்களையுஞ் செய்த, நின் மாயன் - உனக்கு உத்தேஸ்யனாகிய திருமால், புசாபலங்கள் ஒடுங்கியும் - தோள்வலி குன்றியும், பூசனை புரிந்தும் - பூஜை செய்தும், நிசாகரன் திகழ் - சந்திரன் விளங்குகின்ற, நெடுஞ்சடை - நீண்ட சடாபாரத்தையுடைய, எம் இறை - எம்மிறைவனது, அருளின் விசாலம் உற்று - க்ருபாவிசேஷத்தை யடைந்து, உய்யலால் - உஜ்ஜீவித்தலால்,



சிவன் - எமது சிவபெருமானே, மெய்ப்பரம் என்றார் - உண்மையாகிய பரவஸ்துவென்று சொன்னார்கள், எ-று.

என்றுகூறியவரசனோடமைச்சர்கள்புலவோர்
நின்றபேரவைதனின்முனநிரையினங்காக்கக்
குன்றமேந்தியகொண்டலையாகுலக்கொழுந்தைத்
துன்றுளத்தனங்கூரம்வாழிறையவன்சொல்வான். (௬)

(இ-ள்.) என்று கூறிய - என்று சொன்ன, அரசனோடு - அரசனுடன், அமைச்சர்கள் - மந்த்ரிகளும், புலவோர் - வித்வான்களும், நின்ற - நிலைபெற்றிருந்த, பேர் அவைதனில் - மஹாசபையில், முன்னம் - முற்காலத்தில், நிரை இனம் காக்க - பசுக்கூட்டத்தை ரக்ஷிக்கும்பொருட்டு, குன்றம் ஏந்திய - மலையைக் குடையாகத் தாங்கிய, கொண்டலை - மேகவண்ணனை, ஆகுலக் கொழுந்தை - ஆயர் குலக்கொழுந்தை, துன்று - பொருந்திய, உளத்தன் - மனத்தையுடையவராய், எம் - எமக்கு உத்தேஸ்யரான, கூரம் வாழ் இறைவன் - திருக்கூரத்தில் வாழ்கின்ற கூரேசர், சொல்வான் - சொல்வார், எ-று.

பண்டைநாளயனுருத்திரன்பரமவிருடியர்
அண்டரியாவருங்குழுமிநின்றஞ்சலிகூப்பித்
தெண்டிரைத்திருப்பாற்கடல்விழிவளர்திருமால்
புண்டரீகபொற்பதந்தனக்கபயமேபுகல்வார். (௭)

(இ-ள்.) பண்டை நாள் - பூர்வகாலத்தில், அயன் - ப்ரஹ்மா, உருத்திரன் - சிவன், பரமம் இருடியர் - மேலான ருஷிகள், அண்டர் - தேவர்கள் ஆகிய, யாவரும் - எல்லாரும், குழுமி நின்று - கூடி நின்று, அஞ்சலி கூப்பி - (தம்கைகளை) அஞ்சலியாகக் குவித்து, தெள் திரை - தெளிவாகிய அலைகளையுடைய, திருப்பாற்கடல் - க்ஷீராப்தியில், விழிவளர் - திருக்கண் வளர்கின்ற, திருமால் - திருமாலினது, புண்டரீகம் - தாமரை மலரை நிகர்த்த, பொன் - அழகாகிய, பதம் தனக்கு - திருவடிக்கு, அபயம் புகல்வார் - அபயமென்று முறையிடுவாராகி, எ-று.

தங்களைப்புரந்தருளவுந்தகையிலாத்துட்டர்
மங்கநிக்கிரகஞ்செயவுநற்சிட்டர்மகிழவு
மெங்குநல்லறம்விளங்கவுமியைந்தவதாரந்
துங்கமாதவசெய்தருள்வீரெனத்துதித்தார். (௮)

(இ-ள்.) துங்கம் மாதவ - பரிசுத்தையாகிய திருமகளுக்கு நாயகனே, தங்களைப் புரந்தருளவும் - தம்மை ரக்ஷித்தருளும்பொருட்டும், தகை இல்லா - நற்குணமில்லாத, துட்டர் - துஷ்டர்கள், மங்க - அழியும்படி, நிக்கிரகம் செயவும் - (அவர்களை) சிக்ஷிக்கும் பொருட்டும், நல் சிட்டர் மகிழவும் - விலக்ஷணமாகிய சிஷ்டர்கள் சந்தோஷிக்கும் பொருட்டும், எங்கும் நல்லறம்

விளங்கவும் - எவ்விடத்தும் நன்மையாகிய தர்மம் ப்ரகாசிக்கவும், இயைந்த அவதாரம் செய்தருள்வீர் என - ஏற்ற அவதாரங்களைச் செய்தருள வேண்டுமென்று, துதித்தார் - ஸ்தோத்ரம் பண்ணினார்கள், எ-று.

சொல்லியாவருமுறையிடற்குவந்தூதுாயமுத
வல்லிதான்படர்கற்பகநிகர்திருமாலும்
நல்லதென்றிவணவிறசவுருவுடனநந்த
மெல்லையில்லவதாரங்கள்புரிந்தனனியைந்தே. (௪௯)

(இ-ள்.) சொல்லி - இப்படி துதித்து, யாவரும் - எல்லாரும், முறையிடற்கு - முறையிட்டுக் கொள்வதற்கு, தூய - பரிசுத்தமாகிய, அமுத வல்லி படர் - அம்ருதவல்லி படரப்பெற்ற, கற்பகம் நிகர் - கல்பக வ்ருக்ஷத்தை யொத்த, திருமாலும் - லக்ஷ்மீநாதனும், உவந்து - சந்தோஷித்து, நல்லது என்று - ஆகட்டுமென்றுசொல்லி, இயைந்து (அவர்களுடைய) ப்ரார்த்தனைக்குச் சம்மதித்து, இவண் - இவ்வுலகத்தில், நவில் - சொல்லப்பட்ட, தச உருவுடன் - பத்து ரூபங்களோடு கூடி, எல்லை இல் - அளவு கடந்த, அநந்தம் அவதாரங்கள் புரிந்தனன் - முடிவற்ற அவதாரங்களைச் செய்தான், எ-று.

கற்பக மரத்திற் படர்ந்திருக்குங் கொடிக்குப் பெயர் காமவல்லி. அமுதம் - பால். பாற்கடலிற் பிறந்த பெரிய பிராட்டியை இங்கே அமுதவல்லி யென்றது.

நச்சராவணைத்துயிறுறந்தமரர்க்குநலத்தை
யிச்சையாற்செயவெழுந்தருளெந்தைமாதவன்செய்
மச்சகூர்மமாவரிகுறளிராமர்மால்கற்கி
இச்சைகூரவதாரத்தில்விளம்புவன்கேண்மின். (௰)

(இ-ள்.) நச்சு அரா அணை - விஷத்தையுடைய சர்ப்ப சயநத்தின் மீது, துயில் - திருக்கண் வளர்தலை, துறந்து - நீக்கி, இச்சையால் - தமது சுத்த சங்கல்பத்தால், அமரர்க்கு - தேவர்களுக்கு, நலத்தைச் செய்ய - நன்மையைச் செய்யும் பொருட்டு, எழுந்தருள் - எழுந்தருளிய, எந்தை - எமது தந்தையாகிய, மாதவன் செய் - லக்ஷ்மீநாதன் செய்தருளின, மச்ச கூர்மமா அரி குறள் இராமர் மால் கற்கி - மச்சம் கூர்மம் வராகம் ந்ருஸிம்ஹம் வாமநம் பரசுராமர் ஸ்ரீராமர் பலராமர் பௌத்தர் கல்கி என்கிற, இச்சை கூர் - வியப்பு மிகுதற்குரிய, அவதாரத்தில் - அவதாரங்களுள், விளம்புவன் கேண்மின் - சொல்லுகிறேன் கேளுங்கள், எ-று.

சிவனையம்புவியோர்தொழச்செய்தருள்புரியும்
புவனமுண்டமால்பூசனைபுரிந்ததேயில்லை
இவையல்வேறவதாரங்களிற்சிலவுளவே
லவையுமோகநசாத்திரமுண்மையாக்குதற்கே. (௰௧)



(இ-ள்.) சிவனை - ருத்ரனை, அம்புவியோர் தொழ - உலகத்தார் வணங்கும்படி, செய்து அருள் புரியும் - பண்ணிக்ருபை செய்த, புவனம் உண்ட மால் - உலகங்களை விழுங்கின திருமாலானவர், பூசனை புரிந்ததே இல்லை - பூஜைசெய்ததேயில்லை, இவை அல் - இவைகளல்லாத, வேறு அவதாரங்களில் - மற்றைய அவதாரங்களில், சில உளவேல் - (பூஜை செய்ததாகச்) சில கதைகள் உளவாயிருப்பின், அவையும் - அந்தக்கதைகளும், மோகந சாத்திரம் - மோஹந சாஸ்த்ரங்களை, உண்மை ஆக்குதற்கே - மெய்யாக்குதற்கு உண்டாயினவே, எ-று.

தெய்வமாமறையோர்தமைப்புரந்தருள்செயற்காய்ச்
செய்வதாந்தசவுருப்பரமாத்துமன்சிவன்பா
லுய்வதற்கடைந்தனனெனுமுரையெவற்றெனின்
பொய்விளங்கியமோகநசாத்திரப்பொருளே. (௰௨)

(இ-ள்.) தெய்வம் - தைவிகமாகிய, மா - பெரிய, மறையோர் தமை - வேதங்களை யுணர்ந்த ப்ராஹ்மணர்களை, புரந்தருள் செயற்காய் - ரக்ஷித்தருள் செய்யும் பொருட்டு, செய்வது ஆம் - செய்வதாகிய, தச உரு - தசாவதாரங்களையுடைய, பரமாத்துமன் - பரமாத்மாவாகிய திருமால், சிவன் பால் - சிவனிடத்தில், உய்வதற்கு - உஜ்ஜீவிப்பதற்காக, அடைந்தனன் என்னும் உரை - ஆஸ்ரயித்தானென்று சொல்லுஞ் சொல், எவற்று எனின் - எவைகளில் உள்ள தென்றால், பொய் விளங்கிய - பொய் பிரகாசிக்கிற, மோகந சாத்திரப் பொருளே - மோஹந சாஸ்த்ரார்த்தமே, எ-று.

மோகசாத்திரமாயவனாணையால்முன்னே
யாகமங்களேழுடனறுசமயங்கள்
தோகைபாகனுமுரைத்தனனங்கவைதூய
வாகமால்கலையாகியவேதவியாதன். (௰௩)

(இ-ள்.) மோக சாத்திரம் - மோஹந சாஸ்த்ரத்தை, மாயவன் ஆணையால் - திருமாலின் ஆஜ்ஞையினால், முன்னே - முற்காலத்தில், ஆகமங்கள் நால் எழுடன் - இருபத்தெட்டு ஆகமங்களோடு, அறு சமயங்கள் - ஆறு சமய சாஸ்த்ரங்களாக, தோகை பாகனும் - உமாதேவியை ஒரு பாகத்தி லுடையவனாகிய சிவனும், உரைத்தனன் - சொன்னான், அங்கு அவை - அவைகள், தூய ஆக - பரிசுத்தமானவை யாகும்படி, மால் கலை ஆகிய - திருமாலின் அம்ஸத்தை யுடையவனாகிய, வேதவியாதன் - வேதவ்யாஸபகவான், எ-று.

சொன்னநாமதகுணபுராணங்களிற்றெருக்தே
யன்னவாறுளதாளநெனக்காந்தமோயாதி
யென்றுஞ்சைவபுராணத்தினிசைத்தனரிதுதான்
மன்னுவேதவைதிகசாத்திரமொவ்வாவழுவே. (௰௪)

(இ-ள்.) சொன்ன - சொல்லிய, தாமத குண புராணங்களில், தமோ குண புராணங்களுள், தொகுத்து - தொகுத்துச் சொல்லி, அன்ன ஆறு - அந்தப்ரகாரமாக, உளது உளது என - உள்ளது உள்ளது என்று, காந்தமே ஆதி - ஸ்காந்தமுதல், என்னும் - என்றுசொல்லப்பட்ட, சைவ புராணத்தின் - சைவபுராணங்களுள், இசைத்தனர் - சொன்னார், இது - இது, மன்னு - நிலைபெற்ற, வேதவைதிக சாத்திரம் - வேத சம்பந்தமாகிய வைதிகசாஸ்த்ரங்களுக்கு, ஒவ்வா - ஒத்திராத, வழுவே - குற்றமுள்ளதேயாம், எ-று.

இந்தவாறெவற்றெனினதையிசைக்குதுங்கேண்மின்
அந்தவேதவியாதன்மால்சத்துவகுணத்திற்
றந்தவைட்ணவம்பதுமவராகபாகவத
மெந்தைமாலரிவங்கிடத்தினுமிவையியலும். (௰௫)

(இ-ள்.) இந்த ஆறு - இந்தப்ரகாரம் சொல்லுவது, எவற்று எனின் - எவைகளிலென்றால், அதை - அதனை, இசைக்குதும் - சொல்லுவோம், கேண்மின் - கேளுங்கள், அந்த வேத வியாதன் - அந்த வேதவ்யாஸ பகவானவர், மால் - திருமாலின், சத்துவகுணத்தின் - சாத்விக குணத்தினால், தந்த - சொன்ன, வைட்ணவம் - ஸ்ரீ வைஷ்ணவ புராணம், பதும வராக பாகவதம் - பத்மபுராணம் வராஹபுராணம் பாகவத புராணம் என்பவற்றினும், எந்தை மால் - எமது தந்தையாகிய திருமாலின் சம்பந்தமான, அரிவங்கிடத்தினும் - ஹரிவம்சத்தினும், இவை - இவ்விஷயங்கள், இயலும் - அமைந்திருக்கும், எ-று.

ஆதலாலிவையுண்மையென்றரன்பரமன்றென்
றோதியங்குறுஞ்சைவரைமறுத்தனனுயர்பூம்
போதுலாம்பொழில்சூழ்திருக்கூரம்வாழ்புனிதன்
சோதிநாரணன்றனைப்பரதத்துவஞ்சொன்னான். (௰௬)

(இ-ள்.) உயர் - உயர்ந்த, பூ - அழகிய, போது உலாம் - புஷ்பங்கள் நிறைந்த, பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, திருக்கூரம் வாழ் - திருக்கூரத்தில் வாழ்கின்ற, புனிதன் - பரிசுத்தராகிய கூராதிபர், ஆதலால் - ஆனையால், இவை - இந்த விஷயங்கள், உண்மை என்று - மெய்யென்றும், அரன் பரம் அன்று என்று - சிவன் பரவஸ்து அல்லவென்றும், ஓதி - சொல்லி, அங்கு உறும் - அந்தச் சபையிலிருந்த, சைவரை மறுத்தனன் - சைவர்களைத் தடுத்து, சோதி நாரணன் தனை - தேஜஸ்வியாகிய நாராயணனை, பரதத்துவம் சொன்னான் - பரவஸ்துவாகச் சாதித்தார், எ-று.

வெற்றிமாயவன்புரியவதாரமெய்ப்பொருளைக்
கற்றுளோரிதைக்கேட்டுளோர்களித்துளோர்புவியின்
முற்றுமின்பமார்முத்தராய்ப்பரம்பதமுத்தி
பற்றுவார்திருமாலடியவருடன்படர்ந்தே. (௰௭)



(இ-ள்.) வெற்றி - வெற்றியையுடைய, மாயவன் - திருமால், புரி - செய்த, அவதாரம் - அவதாரங்களின், மெய்ப்பொருளை - உண்மையாகிய அர்த்தத்தை, கற்றுளோர் - கற்றிருப்பவரும், இதை - இதனை, கேட்டுளோர் - கேட்டிருப்பவரும், களித்துளோர் - (கேட்டு) சந்தோஷித் திருப்பவரும், புவியில் - இம்மையில், முற்றும் இன்பம் ஆர் - முழுதும் ஆநந்தத்தை யநுபவிக்கிற, முத்தர் ஆய் - முக்தாத்மாக்களாகி, திருமால் அடியவருடன் படர்ந்து - (மறுமையில்) திருமாலின் அடியாரோடு கூடிச்சென்று, பரம் பதம் முத்திபற்றுவார் - பரமபதமாகிய முத்தியுலகத்தை யடைவார்கள், எ-று.

பதினறாவது, தசாவதாரக்கட்சி முற்றிற்று.

ஆக திருவிருத்தம், ௪௬௬.

# பதினாறாவது

# தசாவதாரக்கட்சி.

முதலாவது—௧௭-வது கட்சி ௯-வது தொடரில் ருக்வேதத்தில் ௮-ம அஷ்டகத்தில், ௭-ம் அத்தியாயம், ௰-ம் வர்க்கத்தில், தபஸ்ஸூபன்னை சேதனை மகிழ்ச்சிபெற்ற சதுர்முகனாகவும், சங்கரனாகவும், இந்திரனாகவும், அஷ்ட[illegible]களாகவும், அனுக்கிரஹிக்க, அந்தாலே ப்ரஹ்ம ருத்ராதிகள் சிருஷ்டி சம்ஹாரமுதலான தொழில்களை அவரவர்கள் செய்கிறார்களென்று சொல்லியிருக்கையாலும்.

இரண்டாவது—ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதி தேவர்கள் மஹாமேருவின் உச்சியில் நின்று துஷ்ட நிக்கிரஹம் சிஷ்ட பரிபாலனம் பண்ணவேண்டுமென்றும், அதற்காகத் தேவரீர் பூமியில் திருவவதாரஞ் செய்ய வேண்டுமென்றும் க்ஷீராப்தி நாதனைப் பிரார்த்திக்க, இவர்கள் முறையைக் கேட்டு ஸ்ரீஸ்வாமி பிரத்தியக்ஷமாய், அப்படியே அவதாரஞ் செய்கிறேமென்றும், அதில் நாம் இராமாவதாரஞ் செய்யும்போது, ப்ரஹ்மாவை ஜாம்புவானாயும், ருத்ரனை அனுமானாயும், இந்திரனை வாலியாயும், சூரியனை சுக்கிரீவனாயும், மற்றுமுள்ள தேவர்களை வானரங்களாயும், அவதரிக்கும்படியாய்க் கட்டளையிட்ட சரித்திரம் இதிஹாசமான வால்மீகத்திலும், மற்றுமுள்ள புராணங்களிலுஞ் சொல்லியிருக்கையாலும்.

மூன்றாவது—௯-வது கட்சி ௨-வது தொடரில் சிவனுக்கு இராமதாரக மந்திரத்தை உபதேசித்து, காசியில் இறக்கப்பட்டவர்களுக்கு அதை உபதேசிக்கும்படியாகவும், அம் மந்திரத்தைச் சொல்லி யார் தன்னை அர்ச்சிக்கிறார்களோ அவர்களுடைய ப்ரஹ்மஹத்தியாதிபாபங்களைப் போக்கி இரட்சிக்கிறேன், ஓய் சிவனே, பயப்படாதே யென்று சொன்னது இராமோபநிஷத்திலும், அந்த சுருதியில் சொன்னபிரகாரம் பாத்மோத்தரத்திலும், பாகவதத்திலும், சிவன் இராமதாரக மந்திரத்தை வாயினால் உச்சரித்தும் ஹிருதயத்தில் தியானித்தும் காயத்தால் ஜபம் பண்ணிக்கொண்டும் இருக்கின்றதாய் ௯-வது கட்சி ௰-வது தொடரில் சொல்லியிருக்கையாலும்.

நான்காவது—கைலாசத்திற்கு கிருஷ்ணன் எழுந்தருளும்போது, சிவன் தன்னுடைய சிம்ஹாசனத்தில் கண்ணனை யெழுந்தருளப்பண்ணி, கிருஷ்ணன் திருவடிகளில் தம்முடைய சிரசு படும்படியாய் தெண்டன் சமர்ப்பித்து, (అద్య మే సఫలం జన్మ త్వత్పాదాబ్జయుగం హరే) என்று இப்போது என்னுடைய சிரசின்பேரில் தேவரீருடைய இரண்டு திருவடித்தாமரைகளையும் தரித்தருள



வேண்டுமென்று பிரார்த்தித்த கதை, ஸ்ரீ பாகவதத்தில் சொல்லியிருக்கையாலும்.

ஐந்தாவது—௮-வது கட்சி ௮-வது தொடரில் நரசிம்ஹாவதாரத்தில், சிவன் சரப ரூபியாய் நரசிம்ஹனைச் கொல்ல வந்தபோது, இரணிய கசிபுவை எப்படி இரண்டு பிளவாய்க் கிழித்தெறிந்தாரோ, அப்படியே சிவனை வாடிய கோரையைக் கிழித்தாற்போலச் சரபத்தைக் கிழித்தெறிந்தாரென்ற கதை தைத்திரிய வேதத்திலும் காருடம் முதலான புராணங்களிலும் சொல்லியிருக்கையாலும்.

ஆறாவது—முடிவில் ௨-வது கட்சி ௧-வது தொடரில் கற்பங்கள்தோறும், ப்ரஹ்ம ருத்ராதிகள் விஷ்ணுவினிடத்தில் பிறந்து, விஷ்ணுவினிடத்திலேயே லயிக்கின்றதாயுஞ் சொல்லியிருக்கையாலும், இந்தச் சுருதிகளுக்கெல்லாம் விரோதிக்கும்படியாய் தசாவதாரத்திலும் விஷ்ணு சிவனைப் பூஜித்தானென்பது, சர்வாபத்தமென்று வேதங்களைப் படித்தவர்களுக்கு விசதமாகாமற் போகாதென்று கண்டித்தார்.

## பதினேழாவது

# அடிமுடிதேடினகட்சி.

புறவிருட்சமயப்பற்றுநீத்தரங்கன்
பொன்னடிதஞ்சமேபற்றிப்
பெறுபயன்றவிராதெனத்துணிந்தப்
பேற்றையேகருதிவாழ்நாளுக்
கிறுதிசேரளவுந்திருவரங்கத்தி
லிருந்தவன்குணமநுபவித்துச்
செறிபொழுதகற்றுமெதிபதிதிருத்தாள்
சேர்ந்துய்யுங்கூரம்வாழ்பவனே. (க)

(இ-ள்.) இருள் - அஜ்ஞாநாந்தகாரத்தையுடைய, புறச்சமயப் பற்று நீத்து - வேத பாஹ்யமாகிய சமய சம்பந்தத்தை நீக்கி, அரங்கனது, பொன் அடி - திருவடியாகிய, தஞ்சமே பற்றி - ஆதாரத்தையே பற்றிக்கொண்டு, பெறுபயன் தவிராது எனத்துணிந்து - நாம் பெறுதற்குரிய பலம் தப்பாதென்று நிச்சயித்து, அந்தப் பேற்றையே கருதி - அந்தப் பலத்தையே யடைய விரும்பி, வாழ்நாளுக்கு - தமது ஆயுஸ்ஸுக்கு, இறுதி சேர் அளவும் - அந்தம் சம்பவிக்குமளவும், திருவரங்கத்தில் இருந்து - திருவரங்கத்தின் கண்ணே தங்கி, அவன் குணம் அநுபவித்து - அந்தத் திருவரங்கனது மங்கள குணங்களையே அநுபவித்து, செறி - பொருந்திய, பொழுது அகற்றும் - காலக்ஷேபம் பண்ணுகின்ற, எதிபதி - யதிராஜரது, திருத்தாள் சேர்ந்து - திருவடியை ஆஶ்ரயித்து, உய்யும் - உஜ்ஜீவித்த, கூரம் வாழ்பவன் - திருக்கூரத்தார், எ-று.

காருலாம்பொழில்மாளிகைதிகழ்கூரக்
கடறருவயிட்ணவமணியாஞ்
சீருலாமெந்தைபுடைசெறிந்திருந்த
செந்தமிழோருடனமைச்சர்
பாருலாந்திகிரியொன்றினிற்செலுத்தப்
படும்புகழ்ச்சோழனைநோக்கி
நீருலாங்கமலநேர்ந்துலாங்கழன்மா
னெடியமால்புகழ்விளக்கிடுவான். (உ)

(இ-ள்.) கார் உலாம் - மேகங்கள் தவழ்கின்ற, பொழில் - சோலைகளும், மாளிகை - திருமாளிகைகளும், திகழ் - ப்ரகாசியாநின்ற, கூரம் - திருக்கூரநகர் என்கிற, கடல் தரு - கடலால் தரப்பட்ட, வயிட்ணவ மணி ஆம் - வைஷ்ணவ ரத்நமாகிய, சீர் உலாம் எந்தை - மேன்மை பொருந்திய எமது



தந்தையாகிய கூராழ்வார், புடை செறிந்திருந்த - தமது பக்கத்தில் நெருங்கியிருந்த, செந்தமிழோருடன் - செந்தமிழ்ப் புலவருடன், அமைச்சர் - மந்த்ரிகளும், பார் உலாம் திகிரி ஒன்றினிற் செலுத்தப்படும் - லோகவ்யவஹாரமானது ஏக சக்ரத்திலும் செலுத்தப்படுகின்ற, புகழ் - கீர்த்தியையுடைய, சோழனை நோக்கி - சோழராஜனைப்பார்த்து, நீர் உலாம் - அழகு பொருந்திய, கமலம் நேர்ந்து உலாம் - தாமரை மலரையொத்து விளங்குகின்ற, கழல் - திருவடியையுடைய, மால் - பெருமை யமைந்த, நெடியமால் புகழ் - நெடுமாலின் கீர்த்தியை, விளக்கிடுவான் - ப்ரகாசிக்கப்பண்ணுவோன், எ-று.

உயர்வறவுயருநலமுடையவனு
யுளத்திருளகற்றுமெய்யொளியா
யயர்வறுமமரர்தமக்கதிபதியா
யனைத்துமாமொருபெருஞ்சுடரா
யியலுமெம்பெருமான்றிருவரங்கத்தி
லிருந்தவணிருந்தவரியாரும்
பயிலுமெம்பெருமானார்திருவுளத்திற்
பதிந்திடும்பரன்பரமென்றான். (ங)

(இ-ள்.) உயர்வற உயரும் நலம் உடையவனாய் - இதரதேவதைகளுடைய உத்கர்ஷம் அற்றொழியும்படி உயர்ந்த இன்பம் உடையவனாய், உள்ளத்து இருள் அகற்றும் மெய் ஒளியாய் - மனத்திருளை நீக்குகின்ற பெரிய தேஜஸ்ஸாய், அயர்வு அறும் அமரர் தமக்கு அதிபதி ஆய் - தளர்வு நீங்கிய நித்ய ஸூரிகளுக்குத் தலைவனாய், அனைத்தும் ஆம் ஒரு பெருஞ்சுடர் ஆய் - எல்லாப்பொருள்களிலும் வ்யாபித்து நின்ற ஒப்பற்ற தேஜோராசியாய், இயலும் - எழுந்தருளியிருக்கிற, எம்பெருமான் - எம் இறைவரது, திருவரங்கத்தில் இருந்து - திருவரங்கத்தின்கண்ணே தங்கியிருந்து, அவண் இருந்தவர் யாரும் - அவ்விடத்தில் இருந்தவரெல்லாரும், பயிலும் - ஆஶ்ரயித்த, எம்பெருமானார் திருவுளத்தில் - ஸ்ரீ பாஷ்யகாரரது திருவுளத்தில், பதிந்திடும் - பொருந்தி யிருக்கிற, பரன் - பரமனே, பரம் என்றான் - பரம்பொருளென்று சொன்னார், எ-று.

என்றிவைகூரத்திறைபுகன்றோனியம்ப
வெறிதிரைக்கடலெனச்சூழ்ந்து
நின்றமர்சேனையிடையுழுவலிரூர்
தோன்றலாந்தைசையர்களிசைப்பா
ரன்றுவன்மாலயனுஞ்சினத்துவராக
மன்னமாயம்புவிவானிற்
சென்றடிமுடியைக்காணகிலாமலியாஞ்
சிவன்பரதெய்வமென்றுரைத்தார். (ச)

(இ-ள்.) என்றிவை - என்று இந்த விஷயங்களை, கூரத்து இறைபுகன்றோன் இயம்ப - திருக்கூரத்தில் வாழ்பவராகிய கூரேசர் சொல்ல, எதிரிலாக்

கடல் எனச் சூழ்ந்து - வீசுகின்ற அலைகளையுடைய கடல்போல வளைந்து, துன்றும் - நெருங்கிய, மாசேனையிடை உறும் - பெரிய சபையினிடையேயிருந்த, கவிஞர் - வித்வான்களும், தோன்றல் ஆம் - அரசனும் ஆகிய, சைவர்கள் - சைவசமயிகள், இசைப்பார் - சொல்வார்கள், அன்று - அந்நாளில், உன்மால் அயனும் - உனக்கு உத்தேஸ்யராகிய திருமாலும் ப்ரஹ்மாவும், சினந்து - ஒருவரோடொருவர் பிணங்கி, வராகம் அன்னம் ஆய் - வராகமும் அன்னமுமாகி, அம்புவி வானில் சென்று - பூமியினும் ஆகாயத்தினும் போய், அடிமுடியைக் காண்கிலா - அடியையும் முடியையுங் காணவொண்ணாத, மலை ஆம் - மலையுருவாகிய, சிவன் - சிவபெருமானே, பர தெய்வம் என்று உரைத்தார் - மேலான தெய்வமென்று சொன்னார்கள், எ-று.

இன்னணமுரைத்தசைவரைநோக்கி
 யெழிற்றிருக்கூரம்வாழ்புனிதன்
மன்னியவேதமுறைவருத்துரையால்
 மலையெலாம்பூமியினளவே
துன்னிவேறோமன்றியேயதல
 சுதலலோகங்களிலிறங்கா
வந்நிலையேயத்திருவணுமலையு
 மாதலாற்பூதலத்தடங்கும். (௫)

(இ-ள்.) இன்னணம் உரைத்த - இந்தப்ரகாரமாகச் சொன்ன, சைவரை நோக்கி - சைவர்களைப்பார்த்து, எழில் - அழகாகிய, திருக்கூரம் வாழ் புனிதன் - திருக்கூர நகரில் வாழும் பரிசுத்தராகிய கூரேசர், மன்னிய வேதம் - நிலைபெற்ற வேதங்கள், முறை வருத்துரையால் - க்ரமமாக வருத்துச் சொன்ன வாக்யத்தால், மலையெல்லாம் - மலைகளெல்லாம், பூமியின் அளவே - பூமியினளவாகவே, துன்னிவேறோம் அன்றியே - பொருந்தி வேறோதலன்றிக்கே, அதல சுதல லோகங்களில் இறங்கா - அதல சுதல லோகங்களினளவில் இறங்கா, அத்திருவணுமலையும் அந்நிலையே ஆதலால் - அந்தத் திருவண்ணு மலையும் அந்த நிலைமையுள்ளதேயாகையால், பூதலத்து அடங்கும் - (அதுவும்) - பூமியில் அடங்கும், எ-று.

அவ்வணமன்றியதலமேமுதற்பா
 தாளமேழ்பரியந்தமாக
வொவ்வொன்றுவாதினுரைக்குமவ்வெற்புக்
 குறுதிவேரோடினுங்கேளீர்
செவ்விதாயதற்கப்பாலுமாலாதி
 சேடனாயிருந்துலகனைத்துந்
திவ்வியபணங்கண்மிசையுறச்சுமந்து
 திகழ்பவரறிவதற்கரிதோ. (௬)

(இ-ள்.) அவ்வண்ணம் அன்றி - அந்தப்ரகாரமன்றிக்கே, அதலமே முதல் - அதலலோகமே முதலாக, பாதாளம் ஏழ் பரியந்தம் ஆக - பாதாள



லோகங்கள் ஏழுவரைக்குமாக, ஒவ்வொன்று - பொருந்ாத, வாதின் உரைக்கும் - உமது தர்க்கவாதத்திற் சொல்லப்பட்ட, அவ்வெற்புக்கு - அந்த மலையினது, உறுதி வேர் ஓடினும் - த்ருடமாகிய வேர் (நீங்கள் சொன்னவண்ணமே) ஓடினாலும், கேளீர் - கேளுங்கள், செவ்விதாய் - செவ்வையுடையதாக, அதற்கு அப்பாலும் - அதற்கப்புறத்தும், மால் - திருமாலானவர், ஆதிசேடன் ஆய் இருந்து - ஆதிசேஷ ரூபமாயிருந்து, உலகு அனைத்தும் - லோகங்களையெல்லாம், திவ்விய பணங்கள் மிசை உற சுமந்து திகழ்பவர் - அழகிய தம் படங்களின்மேல் பொருந்தத் தாங்கி விளங்குகின்றவர், அறிவதற்கு அரிதோ - அறிதற்கரிதாகுமோ, எ-று.

ஆயிரம்பரிதியனையசெம்மணிக
 ளாயிரம்பணந்தொறுமிலங்கு
மாயவனருமனந்தனுமறியா
 வகையுரைப்பீர்களேற்கேளீ
ரேயபற்பலவுமனந்தனோடேந்தி
 யிறுதியாம்பாதலத்தமர்ந்த
தூயமாலாதிகூர்மமாய்ச்சுமக்குஞ்
 சுந்தரனறிவதற்கரிதோ. (௭)

(இ-ள்.) ஆயிரம் பரிதி அனைய - ஆயிரம் சூரியர்களையொத்த, செம்மணிகள் - மாணிக்கங்கள், ஆயிரம் பணந்தொறும் இலங்கும் - ஆயிரம் படங்கள் தோறும் ப்ரகாசிக்கப்பெற்ற, ஆயவன் ஆரும் - அத்தன்மையன் ஆகிய, அநந்தனும் - ஆதிசேஷனும், அறியாவகை உரைப்பீர்களேல் - அறியாதவிதமாகச் சொல்வீர்களேயாயின், கேளீர் - கேளுங்கள், ஏயபற்பலவும் - பொருந்திய பற்பல பொருள்களையும், அநந்தனோடு ஏந்தி - ஆதிசேஷனுடன் தாங்கி, இறுதி ஆம் - முடிவெல்லையாகிய, பாதலத்து அமர்ந்த - பாதாளத்திற் றங்கிய, தூயமால் - பரிசுத்தமாகிய பெரிய, ஆதி கூர்மம் ஆய் சுமக்கும் - ஆதி கூர்மமாய்த் தாங்குகின்ற, சுந்தரன் - அழகராகிய திருமால், அறிவதற்கு அரிதோ - அறிதற்கு அரிதாகுமோ, எ-று.

அங்கவனறியானெனுமுரைமுடியா
 தாயினுங்கேண்மினேபுகல்வேன்
றங்கிலாண்டகோடிகளுடனே
 சகலலோகங்களுமுருவாந்
செங்கண்மால்விசுவரூபனாதலினாற்
 றெரிபொருடெரிபவனவனே
யிங்கிவைசருவம்விட்டுனுமயமென்
 றிசைப்பதுந்தெளிந்துணர்வீரே. (௮)

(இ-ள்.) அங்கு அவன் அறியான் என்னும் உரை முடியாது - அந்தத் திருமால் அறிந்திலன் என்னுஞ் சொல் முடிவு பெறாது, ஆயினும் - ஆனாலும், புகல்வேன் - சொல்வேன், கேண்மின் - கேளுங்கள், தங்கு - நிலைபெற்ற,

அகிலாண்டகோடிகளுடனே - அகிலாண்டகோடிகளுடன், சகல லோகங்களும் - எல்லாவுலகங்களும், உருவு ஆம் - தன்னுருவாகப்பெற்ற, செங்கண்மால் - செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய திருமால், விசுவரூபன் ஆதலினால் - விஸ்வரூபத்தையுடையவ னாதலால், தெரிபொருள் - அறியப்படும் பொருளும், தெரிபவன் - அறிவோனும், அவனே - அந்தத் திருமாலே, இங்கு இவை - இந்த விஷயங்களை, சருவம் விட்டுணுமயம் என்று இசைப்பது - சர்வம் விஷ்ணுமயமென்று (சாஸ்த்ர வேத்தாக்கள்) சொல்வதை, தெளிந்து உணர்வீர் - தெளிந்தறிந்துகொள்ளுங்கள், எ-று.

யாவையுந்திருமாலுடலெனலாலு
மிந்திரனயனரனாதி
தேவர்கடமக்குமாதுருத்தானந்
செங்கண்மாலெனுமுரையாலும்
பாவியசருவாந்தரியெனலாலும்
பழமறையறிவருமுகுந்தன்
மேவினநாமம்விட்டுணுவெனவிம்
மெய்ப்பொருளுணர்கிலீர்மாதோ. (௯)

(இ-ள்.) யாவையும் - எல்லாப்பொருள்களும், திருமால் உடல் எனலாலும் - திருமாலின்சரீர மென்பதனாலும், இந்திரன் அயன் அரன் ஆதி தேவர்கள் தமக்கும் - இந்த்ரன் ப்ரஹ்மா சிவன் முதலாகிய தேவர்களுக்கும், செங்கண் மால் - திருமால், மாதுருத்தானம் என்னும் உரையாலும் - மாத்ருஸ்த்தானம் என்கிற வாக்யத்தாலும், பரவிய - எங்கும் வ்யாபித்த, சருவாந்தரி யெனலாலும் - சர்வாந்தர்யாமி யென்கையாலும், பழமறை - பழமையாகிய வேதங்களும், அறிவு அரு முகுந்தன் - அறிதற்கரிய முகுந்தனது, மேவின நாமம் - பொருந்தின திருநாமம், விட்டுணு என - விஷ்ணுவென்று, இம் மெய்ப் பொருள் உணர்கிலீர் - இந்த வுண்மைப்பொருளை யறிந்கிலீர், எ-று.

இத்தகைமாயனறிவருமுலகோ
டிவனலாவுயிர்களுமிலையான்
மைத்தமாணிக்கவண்ணமான்மகிமை
வண்ணமிவ்வளவெனவறியேன்
கத்தனுமவன்றன்மாயையின்னதெனக்
கணிதமுமறிகிலேனியானும்
புத்தமுதனையவன்புகழுணரே
னெனமறைப்புகன்முறையிடுமால். (௰)

(இ-ள்.) இத்தகை மாயன் - இந்த விதமாகிய பெருமையையுடைய திருமால், அறிவு அரும் உலகோடு - அறிதற்கரிய வுலகங்களுடன், இவன் அல்லா உயிர்களும் இல்லை - இவன் அந்தராத்மாவாய் வ்யாபித்திராத ஜீவ ராசிகளுமில்லை, ஆல் - ஆதலால், மைத்த மாணிக்கவண்ணம் - கருமாணிக்க



நிறத்தையுடைய, மால்மகிமை வண்ணம் - திருமாலின் மஹிமையின் தன்மை, இவ்வளவு என அறியேன் - இவ்வளவினையுடையதென்று உணரேன், கத்தன் ஆம் - சர்வ கர்த்தாவாகிய, அவன் தன் மாயை - அவனது மாயையை, இன்னது என - இன்னதென்றுசொல்ல, கணிதமும் அறிகிலேன் - ஒரு கணக்கு நியதியையும் அறிந்திலேன், யானும் - (அவனைப்போல நித்ய நிர்த்தோஷாதி குணங்களையுடைய) நானும், புது அமுது அனைய - புதிய அம்ருதத்தை யொத்த, அவன் புகழ் உணரேன் - அவனது கீர்த்தியை அறியேன், என - என்று, மறைப்புகல் - வேத வாக்யங்கள், முறையிடும் - உத்கோஷிக்கும், எ-று.

ஆதலாற்புவனகோடிகளண்ட
பகிரண்டமனைத்துமோருருவா
மேதமில்விசுவரூபமேதானா
யிவைவிராட்புருடனுமெந்தை
பூதமோடமைத்தாடியவரற்குப்
புகல்சருவாந்தரியாமி
நாதனுமந்தராத்துமனுமே
னவின்மலைகாண்பதோரரிதோ. (௰௧)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், புவனகோடிகள் - புவனகோடிகளும், அண்ட பகிரண்டம் - அண்டபஹிரண்டங்களும் ஆகிய, அனைத்தும் - எல்லாம், ஓர் உருவு ஆம் - ஒருருவமாகிய, ஏதம் இல் - குற்றமில்லாத, விசுவ ரூபமே தான் ஆய் இவை - விஸ்வரூபமே தானாயிசைந்திருக்கிற, விராட் புருடன் ஆம் - விராட் புருஷனாகிய, எந்தை - எமது தந்தையாகிய திருமால், பூதமோடு - பூதகணங்களோடு கூடி, சமைத்து ஆடிய - ஸம்ஹாரநர்த்தனமாடிய, அரற்கு - சிவனுக்கு, புகல் - சொல்லப்பட்ட, சருவாந்தரியாமி நாதன் ஆகி, சர்வாந்தர்யாமி நாதனாகி, அந்தராத்துமன் ஆனோன் - அந்தராத்மாவா யிருப்பவன், (அவன்) நவில் - (உம்மால்) சொல்லப்பட்ட, மலை - சோண சைலத்தை, காண்பது ஓர் அரிதோ - காண்பது ஒரு அருமையாகிய காரியமோ, எ-று.

இரணியக்கண்ணன்றரணியைப்புற்பா
யெனச்சுருட்டிக்கொடுபொருவில்
பரனெனுமாதிகூர்மமானுரையுள்
பரியங்கன்சென்றெளித்திடநாட்
பிரமனேமுதலோர்திகைப்பவாராகப்
பேருருவாகியவ்வரக்க
னாரணிதக்கவனிதனையிலங்கிமாற்று
முந்தமற்கெதுவறிவரிதே. (௰௨)

(இ-ள்.) இரணியக்கண்ணன் - ஹிரண்யாக்ஷன், தரணியை - பூமியை, புல் பாய் எனச் சுருட்டிக்கொடு - புல்லினாற் செய்த பாயைப்போலச் சுருட்

டிக்கொண்டு, பொருவு இல் - ஒப்பில்லாத, பரன் என்னும் - மேலோன் என்று சொல்லப்படுகிற, ஆதி கூர்மம் - ஆதி கூர்மமாகிய மால் - திருமாலின், உறையுள் பரியர்தம் - வாசஸ்த்தானம்வரைக்கும், சென்று ஒளித்திடும் நாள் - போயொளித்துக்கொண்ட காலத்தில், பிரமனே முதலோர் - ப்ரஹ்மாமுதலானவர்கள், திகைப்ப - மயங்க, வராகப்பேர் உருவு ஆகி - பெரிய வராஹரூபமாகி, அவ்வரக்கன் - அந்த அரக்கனது, உரம் கிழித்து - மார்பைப்பிளந்து, அவனிதனை நிலை நிறுத்தும் - பூமியைக் (கொண்டுவந்து முன்போலவே) நிலை நிறுத்திய, உத்தமற்கு - புருஷோத்தமனுக்கு, அறிவு அரிது எது - அறிதற்கரியது யாது, எ-று.

உலகெலாமொடுங்குந்தனதெழினாபி
 யுயர்பதுமத்தினின்றயனை
யிலகிடப்படைத்தங்கவற்கவனுருவ
 மிசைந்தெதிர்தோன்றலுந்துதிப்பப்
பலகலைப்பொருளாஞ்சதுமறையவற்குப்
 பயின்றனன்பயிலுமம்மறையா
லுலகசிட்டிக்குந்தனக்குமோரிறுதி
 யுண்டெனவன்றயனுணர்ந்து. (௬௩)

(இ-ள்.) உலகு எல்லாம் ஒடுக்கும் - உலகங்கள்யாவும் அடங்குகின்ற, தனது எழில் நாபி - தனது அழகிய திருநாபியாகிய, உயர் பதுமத்தில் நின்று - உயர்ந்த கமலத்திலிருந்து, அயனை - ப்ரஹ்மாவை, இலகிடப்படைத்து - ப்ரகாசிக்கும்படி ஸ்ருஷ்டித்து, அங்கு அவற்கு - அவன்பொருட்டு, அன்னரூபம் இசைந்து - அன்னவுருவத்தைக் கொண்டு, எதிர் தோன்றலும் - எதிரே காணப்படுதலும், துதிப்ப - (ப்ரஹ்மா) துதிக்க, பலகலைப்பொருள் ஆம் - பல சாஸ்த்ரார்த்தங்களுமாயிருக்கிற, சதுமறை - நான்குவேதங்களையும், அவற்கு - அந்தப்ரஹ்மாவுக்கு, பயின்றனன் - போதித்தான், பயிலும் அம்மறையால் - போதிக்கப்பெற்ற அந்த வேதங்களைக்கொண்டு, உலக சிட்டிக்கும் - லோக ஸ்ருஷ்டிக்கும், தனக்கும் - தனக்கும், ஓர் இறுதி உண்டு எனல் - ஒரு முடிவு உண்டு என்பதை, அன்று அயன் உணர்ந்து - அப்பொழுது ப்ரஹ்மா அறிந்து, எ-று.

புன்னுனியீரத்தளவையிப்போகம்
 பொருந்தினமெனமனம்வெறுத்துத்
தன்னையும்வேதந்தனையுமின்றளித்த
 சச்சிதானந்தமெய்வெளியாய்ப்
பின்னல்வெண்டிரைப்பாற்கடலறிதுயில்வோன்
 பிரசன்னமாயிடும்பொருட்டு
மன்னியவநந்தமுயர்தவநெடுநாண்
 மலரவன்புரிந்தனன்மாதோ. (௬௪)



(இ-ள்.) புல் நுனி ஈரத்து அளவை - புல்லினது நுனியிலிருக்கிற பனித்துளியின் ஈரத்தளவினதாகிய, இப்போகம் பொருந்தினம் என - இந்த அல்பபோகத்தைப் பெற்றோமென்று, மனம் வெறுத்து - மனம் வெறுத்துக்கொண்டு, தன்னையும் வேதம் தன்னையும் - தன்னையும் வேதத்தையும், ஈன்று அளித்த - ஸ்ருஷ்டித்து ரக்ஷித்த, சச்சிதாநந்த மெய் வெளியாய் - சத்து சித்து ஆநந்தம் என்கிற உண்மை யொளியாய், பின்னல் - ஒன்றோடொன்று பின்னலிடுகின்ற, வெள்திரை - வெண்மையாகிய அலைகளையுடைய, பால் கடல் - திருப்பாற்கடலில், கண்வளர்வதுபோல் - திருக்கண் வளர்வதுபோல, பிரசந்நம் ஆயிடும் பொருட்டு - ப்ரஸந்நமாகும் பொருட்டு, மன்னிய - நிலைபெற்ற, அநந்தம் - முடிவற்ற, உயர் தவம் - உயர்ந்த தவத்தை, நெடுநாள் - அநேக காலம், மலரவன் புரிந்தனன் - ப்ரஹ்மா செய்தான், எ-று.

உந்தியங்கமலன்புரியுமாதவத்துக்
 குவந்தனன்வந்தனனெதிரே
சிந்தையிற்றவநீசெய்தமையறிந்தேன்
 றிகழ்வரமளித்துமியாமினியென்
றந்தமாறிருப்பாற்கடல்வளர்வதுபோ
 லரங்கநற்பிரணவாகாரந்
தந்தவிமானஞ்சிருட்டிசெய்தளித்துச்
 சதுமுகற்கிதுபுகன்றருள்வார் (௬௫)

(இ-ள்.) உந்தி அம் கமலன் - தனது திருநாபியாகிய அழகிய தாமரை மலரில் பிறந்தவனாகிய ப்ரஹ்மா, புரியும் - செய்கின்ற, தவத்துக்கு - தபஸுக்கு, உவந்தனன் - சந்தோஷித்தவனாய், எதிரே வந்தனன் - எதிரில் வந்து, நீ தவம் செய்தமை - நீ தபஸு செய்ததை, சிந்தையின் அறிந்தேன் - என் மனத்தினால் உணர்ந்தேன், இனியாம் திகழ்வரம் அளித்தும் என்று - இனி நாம் ப்ரகாசிக்கத்தக்க வரத்தை உனக்குக் கொடுப்போமென்று சொல்லி, அந்த மால் - அந்தத் திருமாலானவர், திருப்பாற்கடல் வளர்வது போல் - க்ஷீராப்தியில் யோகநித்ரை செய்வதுபோல, அரங்கம் - திருவரங்கத்திலுள்ள, நல் - விலக்ஷணமான, பிரணவாகாரம் தந்த விமானம் - ப்ரணவாகாரவிமானத்தை, சிருட்டி செய்து அளித்து - ஸ்ருஷ்டிசெய்து கொடுத்து, சதுமுகற்கு - ப்ரஹ்மாவுக்கு, இது - இதை, புகன்றருள்வார் - சொல்லியருள்வாராயினர், எ-று.

நறைவிரிகமலயோநிசம்பவனே
 நவிலுமிப்பிரணவப்பொருளை
முறையொடுதிருவாராதனம்புரியு
 மூன்றுகாலமுந்துதித்துலகு
நிறைதருசிருட்டிசெய்துநின்வாழ
 ணீங்குநாளித்தியாநந்தங்
குறைநிறைவில்லாவெழிற்பரமபதங்
 குலவுவாயெனவுரைத்ததற்பின். (௬௬)

(இ-ள்.) நறை விரி - மணம் விரிகின்ற, கமலயோநி சம்பவனே - ப்ரஹ்மாவே, நவிலும் - சொல்லப்பட்ட, இ பிரணவப் பொருளை - இந்தப்ரணவார்த்தத்தை, முறையொடு - க்ரமத்துடன், திருவாராதநம் புரியும் - திருவாராதநம் செய்தற்குரிய, மூன்றுகாலமும் - த்ரிகாலத்திலும், துதித்து - ஸ்தோத்ரம்பண்ணி, உலகம் நிறை தரு சிருட்டிசெய்து - உலகம் நிறையத் தருந்த ஸ்ருஷ்டியைப்பண்ணி, நின் வாழ்நாள் நீங்கும்நாள் - உன் ஆயுஸ்ஸு முடியுங்காலத்தில், நித்திய ஆநந்தம் - சாஸ்வதமாகிய இன்பமானது, குறை நிறைவு இல்லா - குறைதல் நிறைதல் இல்லாத, எழில் - அழகாகிய, பரம பதம் - பரமபதத்தை, குல்வுவாய் என உரைத்து - அடையக்கடவையென்று சொல்லி, அதற்பின் - அதின்பிறகு, எ-று.

சதுமறைமுடிவாய்நித்தியாநந்தந்
 தருங்கடலமுதநற்சுவையாய்
விதுவணிசடிலனிந்திரன்விரிஞ்சன்
 விண்ணுளோரியாவருமுணரா
வதுவிதுவுதுவென்றகண்டமாய்விரிந்தங்
 கவ்வணமொடுங்கியேயெவரு
மெதுவுமாந்திருவெட்டெழுத்துமந்திரத்தை
 யியைந்தயன்செவிக்குணர்த்தினனால். (௰௭)

(இ-ள்.) சது மறை முடிவு ஆய் - நான்கு வேதங்களின் முடிவாகி, நித்திய ஆநந்தம் தரும் - சாஸ்வதமாகிய இன்பத்தைக் கொடுக்கிற, கடல் அமுதம் நல்சுவையாய் - க்ஷீராப்தியிலுண்டாகிய விலக்ஷணமாகிய அம்ருதரசமாகி, விது அணி சடிலன் - சந்திரனைத் தரித்த சடையையுடையவனாகிய சிவனும், இந்திரன் - இந்த்ரனும், விரிஞ்சன் - ப்ரஹ்மாவும், விண் உள்ளோர் - மற்றைய விண்ணுலகத்தாரும் ஆகிய, யாவரும் - எல்லாரும், உணரா - அறியாத, அது இது உது என்று - அது இது உது என்று சொல்லப்பட்டு, அகண்டமாய் விரிந்து - அகண்டமாகப் பரவி, அங்கு அவ்வண்ணம் ஒடுங்கி - அவ்வாறே லயித்து, எவரும் எதுவும் ஆம் - யாவரும் எதுவுமாகிய, திரு எட்டு எழுத்து மந்திரத்தை - திருவஷ்டாக்ஷரமாகிய திவ்ய மந்த்ரத்தை, இயைந்து - மனம்பொருந்தி, அயன் செவிக்கு உணர்த்தினன் - ப்ரஹ்மாவின் செவியில் உபதேசித்தான், எ-று.

சாற்றுமிவ்வணமால்புரிதலாலயற்குத்
 தந்தையாய்த்தாயுமாய்க்குருவாய்ப்
போற்றுதற்பரமாங்கடவுளாய்ப்பெறலாற்
 புந்தியிலநுதிநநினைந்து
மேற்றியாநமுஞ்செய்திருத்தலாலெதிர்க்கான்
 விட்டுணுவின்மாயையாருலகின்
மாற்றுவார்தனாற்பரனெனவுணரா
 மமதையாலயனெதிர்த்திடினும். (௰௮)



(இ-ள்.) சாற்றும் இவ்வண்ணம் - சொல்லப்பட்ட இந்தப்ரகாரமாக, மால் புரிதலால் - திருமால் செய்ததனால், அயற்கு - ப்ரஹ்மாவுக்கு, தந்தை ஆய் - பிதாவாகி, தாயும் ஆய் - மாதாவுமாகி, குரு ஆய் - ஆசார்யனாகி, போற்று - வணங்குதற்குரிய, தற்பரம் ஆம் கடவுள் ஆய் - தத்பரவஸ்துவாகிய தெய்வமாகி, பெறலால் - அடையப்படுதலாலும், புந்தியில் அநுதிநம் நினைந்து - மனத்தில் நாடோறும் நினைத்து, மேல் - அதன்மேலும், தியாநமும் செய்து இருத்தலால் - த்யாநம் பண்ணிக்கொண்டிருத்தலாலும், எதிர்க்கான் - (திருமாலுடன்) எதிர்க்கமாட்டான், (ஆனால்) உலகில் - உலகத்தில், விட்டுணுவின் மாயை - விஷ்ணுமாயையை, மாற்றுவார் யார் - நீக்குவோர் யாவர், (ஒருவருமில்லை) அதனால் - அந்த ஹேதுவால், பரன் என உணரா மமதையால் - (திருமால்) பரவஸ்துவென்று அறியாத மமகாரத்தால், அயன் எதிர்த்திடினும் - ப்ரஹ்மாவானவன் எதிர்த்தாலும், எ-று.

அவனுளமமதையடக்குதற்கிவர்தா
 மறிகிலரென்னின்முன்னாளி
னவிலுமிவ்வயனைச்சிருட்டிசெய்துடனே
 நாரணனருவமாய்த்தோன்றிச்
செவியினிற்பிரணவமந்திரந்தன்னைச்
 செறிந்துபதேசமுஞ்செயலா
லவையோரீஇப்பகவனாணையென்னுமை
 லகிலமுஞ்சிருட்டிசெய்திடுநாள். (௰௯)

(இ-ள்.) அவன் - அந்தப்ரஹ்மாவின், உள்ளமமதை - மனத்திலுள்ள மமகாரத்தை, அடக்குதற்கு - சிக்ஷிப்பதற்கு, இவர் தாம் அறிகிலர் என்னின் - இவர் அறிந்திலரென்றால், முன்னாளில் - முற்காலத்தில், நவிலும் இவ்வயனை - சொல்லப்பட்ட இந்த ப்ரஹ்மாவை, சிருட்டிசெய்து - ஸ்ருஷ்டி பண்ணி, உடனே - தக்ஷணமே, நாரணன் - திருமாலானவர், அருவமாய் தோன்றி - அசரீரியாய்வந்து, செவியினில் - இந்தப்ரஹ்மாவின் காதில், பிரணவ மந்திரந் தன்னை - ப்ரணவ மந்த்ரத்தை, செறிந்து உபதேசமும் செயலால் - மிகவும் உபதேசம் செய்தலால், அவை ஓரீஇ - அவற்றை நீங்கி, பகவன் ஆணை என்னுமல் - திருமாலினது ஆஜ்ஞையை மறவாமல், அகிலமும் - எல்லாப் பொருள்களையும், சிருட்டி செய்திடும் நாள் - ஸ்ருஷ்டிசெய்யுங்காலத்தில், எ-று.

நாரணன்றுனமையனுளமமதை
 நண்ணியவண்ணமக்கற்றுங்
காரணமாதமதுசுமிடவனைக்
 களித்தளித்தவர்தனாய்மமதை

யாரணனொடுங்கும்படி விளையாடி
மம்புயம்பூத்தகார்முகில்போல்
வாரணந்தனிற்கண்வளர் திருமாலின்
வண்ணமிவ்வண்ணமாதலினால். (௨௰)

(இ-ள்.) நாரணன் தானும் - திருமாலும், அயன் உள்ளம் மமதை நண்ணிய வண்ணம் - ப்ரஹ்மாவானவன் மனத்தில் மமகார மடைந்த தன்மையை, அங்கு அகற்றும் காரணம் ஆக - அப்பொழுதே நீக்கும்பொருட்டு, மது கயிடவரை - மது கைடபர்களை, களித்து அளித்து - சந்தோஷித்து ஸ்ருஷ்டிபண்ணி, அவர்களால் - அவர்களைக்கொண்டு, ஆரணன் - வேதாதி காரியாகிய ப்ரஹ்மாவின், மமதை ஒடுங்கும்படி - மமகாரம் அடங்கும்படி, விளையாடும் - விளையாடின, அம்புயம் பூத்த - தாமரைமலர்களைப்பூத்த, கார் முகில்போல் - கருமையாகிய மேகம்போல, வாரணம் தனில் - திருப்பாற் கடலில், கண்வளர் - திருக்கண் வளர்கின்ற, திருமாலின் - ஸ்ரீமந் நாராயண னது, வண்ணம் - மஹிமையானது, இவ்வண்ணம் ஆதலினால் - இந்தப்ரகார மாகையால், எ-று.

அனந்தன்மாமுடிமட்டளவியதன்றே
யப்புறமாதிகூர்மத்தை
வனைந்திட லுரைத்தேன்விசுவரூபத்தின்
வகையினையுரைத்திடக்கேளீர்
புனைந்தமாமறையிற்சங்கரனதற்குப்
பொருளலனெனுமுரைபொருந்துங்
கனைந்துவண்டியிருந்துளவணிபரனக்
கல்லடிகாண்கிலானெனுஞ்சொல். (௨௧)

(இ-ள்.) அனந்தன் - ஆதிசேஷனது, மா - பெரிய, முடிமட்டு அளவி யது அன்றே - முடியளவும் சென்றதுமாத்ர மல்லவே, அப்புறம் - அப்பாலும், ஆதி கூர்மத்தை - ஆதி கூர்ம ரூபத்தை, வனைந்திடல் உரைத்தேன் - பரிக் ரஹித்த விஷயத்தைச் சொன்னேன், விசுவரூபத்தின் வகையினை உரைத் திடக் கேளீர் - விஸ்வரூபத்தின் வகையைச் சொல்லக்கேளுங்கள், மாமறை யில் - பெருமை பொருந்திய வேதங்களில், புனைந்த - அலங்கரித்துச் சொல் லப்பட்ட, சங்கரன் - சிவன், அதற்கு - அந்த விஸ்வரூபமென்னுஞ் சொல் லுக்கு, பொருள் அல்லன் என்னும் உரை பொருந்தும் - அர்த்தம் ஆகமாட் டான் என்னுஞ் சொல்லானது பொருத்தமா யிருக்கும், வண்டு - வண்டுகள், கனைந்து இயிரும் - ஆரவாரித்து முழங்குகின்ற, துளவு அணி பரன் - துளசி மாலையை யணிந்த பரம் பொருளாயுள்ள திருமால், அக்கல் அடி - அந்த மலையினடியை, காண்கிலான் என்னுஞ் சொல் - காணும் ஆற்றல் இல்லாத வன் என்கிற சொல்லானது, எ-று.



வேதவைதிகசாத்திரத்துணர்க்கும்
விதிமுறைநெறிவழுவாகு
மாதலாலினுமோர்பொருளுரைப்பதுங்கேட்
டறிந்துணர்ந்தாயினுமுய்மின்
முதலர்மதலைமதிநதிபொதியுஞ்
சடையனுஞ்சதுமறையவனும்
போதவுமமதையடைந்திடலுணர்ந்தான்
புயங்கமேற்றுயில்பழம்பொருளே. (௨௨)

(இ-ள்.) வேத வைதிக சாத்திரத்து உணர்க்கும் - வேதவைதிக சாத்தி ரங்களில் சொல்லப்படுகிற, விதிமுறை நெறிவழு ஆகும் - விதிகளின் க்ரம மாகிய மார்க்கங்களுக்கு விரோதமாகும், ஆதலால் - ஆகையால், இன்னும் - இன்னமும், ஓர் பொருள் உரைப்பதும் - நான்சொல்வதாகிய ஒரு அர்த்த விசேஷத்தையும், கேட்டறிந்து - கேட்டுணர்ந்து, உணர்ந்து ஆயினும் - யூகித் தாயினும், உய்மின் - உஜ்ஜீவியுங்கள், தாது அலர் - மகரந்தத்தோடு மலர் கின்ற, மதலை - கொன்றைமலரையும், மதி - சந்திரனையும், நதி - கங்கையை யும், பொதியும் - அணிந்த, சடையனும் - சடையை யுடையவனாகிய சிவனும், சது மறையவனும் - நான்கு வேதங்களையு முடையவனாகிய ப்ரஹ்மாவும், போதவும் - மிகவும், மமதை அடைந்திடல் - மமதை யடைந்திருப்பதை, புயங்கமேல் - ஆதிசேஷன்மீது, துயில் - நித்ரை செய்கிற, பழம்பொருள் - அநாதிவஸ்துவாகிய திருமாலானவர், உணர்ந்தான் - அறிந்தார், எ-று.

அங்கவர்மமதையடக்கவோதன்னை
யாவரும்பரந்தெளிந்திடற்கோ
பொங்கியசீற்றமிருவருமனதிற்
பொருந்திடச்செய்தனன்செயவே
பங்கயனரனாலொருசிரமிழந்து
படிந்தனன்சிவனயன்முடியைச்
செங்கையிற்செறிந்துமமதையையொழிந்தான
சித்தசன்றந்தைதான்களிக்க. (௨௩)

(இ-ள்.) அங்கு அவர் மமதை அடக்கவோ - அப்பொழுது அவர்க ளுடைய மமகாரத்தையடக்கும்பொருட்டோ, தன்னை யாவரும் பரம் தெளிந் திடற்கோ - தன்னை எல்லாரும் பரமென்று தெளிந்திடும் பொருட்டோ, இருவரும் - அவ்விருவரும், பொங்கிய சீற்றம் - அதிகரித்த கோபத்தை, உள்ளத்தில் பொருந்திடச் செய்தனன் - மனத்தில் பொருந்தும்படி செய்தார், செயவே - அப்படி செய்த மாத்ரத்தில், பங்கயன் - ப்ரஹ்மாவானவன், அரனால் - சிவனால், ஒரு சிரம் இழந்து - ஒரு சிரசை யிழந்து, படிந்தனன் - கோபந் தணிந்தான், சிவன் - சிவனும், அயன்முடியை - ப்ரஹ்மாவின் தலையை, செங்கையில் செறிந்து - தன் செவந்த கையிற் கவ்வப்பெற்று, சித்தசன் தந்தை - மன்மதனுக்குத் தந்தையாகிய திருமாலானவர், கண் களிக்க - கண் களிக்கும்படி, மமதையை ஒழிந்தான் - மமதையை நீங்கினான் எ-று.

இத்திருவிளையாட்ட துபுரிந்தனன்பின்
னீரிருமுகனிடுஞ்சாப
வத்தியுங்கெடுநாட் சிவனநுபவித்தங்
கரங்கனேயிரங்கிடாயென்னப்
பித்தனுக்கயனுக்கிரங்கருள்புரிந்தார்
பின்னையார்பின்னைகேள்வனலா
லித்தகையுளதென்றருமறையோல
மிடும்பராபரற்கெதுவரிதே. (உச)

(இ-ள்.) இத்திருவிளையாட்டது புரிந்தனன் - இந்த லீலையைச் செய்தான், பின் - பிறகு, ஈர் இருமுகன் - நான்கு முகங்களையுடையவனாகிய ப்ரஹ்மா, இடும் - கொடுத்த, சாபம் அத்தியும் - சாபத்தின் காரியமாகிய ப்ரஹ்மஹத்தையையும், அரன் - சிவன், கெடுநாள் அநுபவித்து - நெடுநாள் அநுபவஞ்செய்து, அங்கு - (அநுபவித்தொழிந்த) அப்பொழுது, அரங்கனே - திருவரங்கா, இரங்கிடாய் என்ன - என்மீது இரக்கஞ்செய்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, பித்தனுக்கு அயனுக்கு - சிவனுக்கும் ப்ரஹ்மாவுக்கும், இரங்கு அருள் புரிந்தார் - மனமிசைந்து அருள்செய்தான், பின்னை கேள்வன் அல்லால் - நம்.பின்னைப்பிராட்டிக்கு நாயகனாகிய திருமாலன்றி, பின்னையார் - (இவரை ரக்ஷிப்பதற்கு) வேறு யாவர் உளர், இத்தகை உளது என்று - இந்த மஹிமை திருமாலுக்குளதென்று, அருமறை ஓலம் இடும் - அருமையாகிய வேதங்கள் முறையிடும், (ஆதலால்) பராபரற்கு - பராத்பரனாகிய திருமாலுக்கு, எது அரிது - அரிய பொருள் யாது, எ-று.

இவையுணராமலவைதனிலுரைக்கு
மேந்தலேயமைச்சரோபுலவீர்
நவையிதுமெய்ந்நூற்பொருளுணர்ந்தோர்க
ணகைத்திடற்குரியபேரிழுக்காங்
குவையளிமிழற்றுங்கமலனன்னமதாய்க்
குலவியவாறுமப்படியே
சுவைமறைப்பொருள்முற்றுணரயனசித்தாந்
தோட்டலர்தாழையைக்கண்டே. (உரு)

(இ-ள்.) இவை உணராமல் - இவைகளை யறியாமல், அவைதனில் - சபையில் வந்து, உரைக்கும் - (பொருத்தமில்லாதவைகளைப்) பேசுகின்ற, ஏந்தலே - அரசனே, அமைச்சரோ - மந்த்ரிகளே, புலவீர் - வித்வான்களே, நவை இது - குற்றமாகிய இந்தக் கட்சி, மெய்நூல் பொருள் உணர்ந்தோர்கள் - உண்மையாகிய சாஸ்த்ரார்த்தங்களை யறிந்தவர்கள், நகைத்திடற்கு உரிய - பரிஹஸிப்பதற்குரிய, பேர் இழுக்கு ஆம் - பெருங் குற்றமாகும், குவை அளி மிழற்றும் - கூட்டமாகிய வண்டுகள் (மொய்த்து) முழங்குகின்ற, கமலன் - தாமரைமலரி லிருப்பவனாகிய ப்ரஹ்மா, அன்னமது ஆய் - ஹம்ஸ ரூபமாகி, குலவிய ஆறும் - விளங்கினப்ரகாரமும், அப்படியே - அப்படி குற்றமேயாம்,



(எப்படியெனின்) சுவை மறைப்பொருள் - ரசத்தையுடைய வேதார்த்தத்தை, முற்று உணர் - முழுது மறிந்த, அயன் - ப்ரஹ்மாவானவன், அசித்து ஆம் - அசித்வஸ்துவாகிய, தோடு அலர் - மடலவிழ்ந்த, தாழையைக் கண்டு - (ஒரு) தாழம்பூவைப் பார்த்து, எ-று.

எங்கிருந்தடைந்தாய்தாழையம்பூவே
யெனவயன்வினவினனெனவு
மங்கயனிவனென்றறிகிலாததுவு
மயனுமாலறியொணதெழுந்த
துங்கமால்வரையின்முடியினின்றிழிந்து
தோன்றினேனெனவசித்தாகத்
தங்கியதாழையுரைத்திடும்பொய்யுஞ்
சாற்றுவீரறிவுமாபெரிதே. (உசா)

(இ-ள்.) தாழை அம்பூவே - அழகாகிய தாழம்பூவே, எங்கு இருந்து அடைந்தாய் - எவ்விடத்திலிருந்து வந்தாய், என - என்று, அயன் வினவினன் எனவும் - ப்ரஹ்மா கேட்டானென்றும், அங்கு - அப்பொழுது, அதுவும் - அந்தத் தாழம்பூவும், இவன் அயன் என்று அறிகிலாது - இவன் ப்ரஹ்மாவென்று தெரிந்துகொள்ளாமல், அயனும் மால் அறியொணாது எழுந்த - ப்ரஹ்மாவும் திருமாலும் அறியவொண்ணாதபடி கிளர்ந்த, துங்கம் - உயர்வாகிய, மா - பெருமைபொருந்திய, வரையின் - திருவண்ணாமலையினது, முடியில் நின்று இழிந்து - சிகரத்தி னின்றிறங்கி, தோன்றினேன் என - வந்தேனென்று, அசித்து ஆக தங்கிய தாழை - அசித்வஸ்துவாகப் பொருந்திய தாழம்பூ, உரைத்திடும் பொய்யும் - பேசுகின்ற பொய்யையும், சாற்றுவீர் - சொல்லுகின்றவர்களாகிய உங்களுடைய, அறிவு - ஞானமானது, பெரிது - பெருமையை யுடையது, எ-று.

பொய்யுரைத்திடினும்பொருந்திடவுரையாப்
பொருளிதுமருண்முதற்பாத
மையுறவிலையோரசித்தெனுந்தாழை
யறிவுடன்பேசினதெனலே
மெய்யெனமறையோனுணர்ந்தனனெனலாம்
வேறிதுகூறுவதென்னென்
றுய்யவிவ்வுலகோர்க்குறுதிதோற்றிடவாந்
துதித்தசூரத்திறையுரைப்பான். (உஎ)

(இ-ள்.) பொய் உரைத்திடினும் - பொய்யைச் சொன்னாலும், பொருந்திட உரையா - கேட்போரது மனத்துக்குப் பொருந்தும்படி சொல்லாத, பொருள் இது - பொருளாகிய இது, மருள் முதற்பாதம் - மயக்கத்துக்கு முதற்பாதமாகும், ஐயுறவு இலை - சந்தேகமில்லை, ஓர் அசித்து எனும் தாழை - ஓர் அசித்வஸ்துவாகிய தாழம்பூவானது, அறிவுடன் பேசினது எனலே -

அறிவோடு பேசினதென்பதை, மெய்யென - உண்மையென்று, மறையோன் - ப்ரஹ்மாவானவன், உணர்ந்தனன் எனலால் - அறிந்தானென்று சொல்லுதலால், வேறு இது கூறுவது என் என்று - இதனை வேறெடுத்துச் சொல்லுவது என்னவென்று, உய்ய - உஜ்ஜீவிக்கும்படி, இவ்வுலகோர்க்கு - இந்த வுலகத்தார்க்கு, உறுதி தோற்றிட - உறுதிப்பொருள் தோன்றும்பொருட்டு, வந்து உதித்த - வந்து அவதரித்த, சூதர் இறை உரைப்பான் - சூதாதியர் சொல்லுவார், எ-று.

இப்பொருளனைத்துமோகநூலுக்
கிசைவரும்படிமறைமுனிவன்
செப்புதாமதமாங்குணநிகழ்காலைச்
செய்ததாமதபுராணமெனு
மொப்பருங்காந்தத்துருத்திரசங்கி
தையிலுரைத்திடுவதேயன்றி
மெய்ப்பொருட்கியையாதிதுவொன்றுமெய்யேல்
வேதவைதிகம்பொய்யாமால். (உ௮)

(இ-ள்.) இப்பொருள் அனைத்தும் - இந்த அர்த்தங்களெல்லாம், மோகநூலுக்கு - மோஹந சாஸ்த்ரங்களுக்கு, இசை வரும்படி - கீர்த்தி யுண்டாகும் பொருட்டு, மறை முனிவன் - வேத வ்யாஸமுனிவன், செப்பு - சொல்லப்பட்ட, தாமதம் ஆம் குணம் நிகழ்காலை - தாமஸம் என்கிற குணம் அதிகரித்த காலத்தில், செய்த தாமதபுராணம் என்னும் - செய்த தாமஸபுராணமென்கிற, ஒப்பு அருகாந்தத்து - ஒப்பு இல்லாத ஸ்காந்தத்தில், உருத்திர சங்கிதையில் - ருத்ரஸம்ஹிதையில், உரைத்திடுவதே அன்றி - சொல்லப்படுவதே யன்றி, மெய்ப்பொருட்கு இயை யாது - உண்மையாகிய அர்த்தத்துக்குப் பொருந்தாது, இது ஒன்றும் மெய்யேல் - இது ஒன்றுமே உண்மையானால், வேத வைதிகம் பொய் ஆம் - வேத வைதிகங்கள் யாவும் பொய்யாய்விடும், எ-று.

இங்குநீருரைக்குமலையுடனந்த
மெழின்மலைகளும்பலபொருளுந்
தங்கியபுவியைமேருவுமணுவாந்
தன்மைகொளாதிவராகச்
செங்கண்மால்கொணர்ந்தசெய்தியுமாதி
சேடன்மேலதுசெறிந்திடலுந்
துங்கமாயதின்கீழுலகெலாமேந்தித்
துவன்றியகூர்மமால்புகழும். (உ௯)

(இ-ள்.) இங்கு - இவ்விடத்தில், நீர் உரைக்கும் மலையுடன் - நீங்கள் சொல்லுகின்ற மலையோடு, அந்தம் - முடிவற்ற, எழில் மலைகளும் - அழகாகிய மலைகளும், பல பொருளும் - வேறு பல பொருள்களும், தங்கிய புவியை - தங்கியிருக்கும் இடமாகிய பூமியை, மேருவும் அணு ஆம் தன்மை கொள் - மேருமலையும் அணு ரூபமாய்த் தோற்றும்படியான உருவத்தைக்கொண்ட, ஆதிவராகம் - ஆதிவராஹ ரூபமாகிய, செங்கண்மால் - செந்தாமரைமலர் போலும் கண்களையுடைய திருமால், கொணர்ந்த செய்தியும் - பாதாளத்திலிருந்து தூக்கிக்கொண்டுவந்த சங்கதியும், ஆதிசேடன்மேல் - ஆதிசேஷன் மீது, அது செறிந்திடலும் - அந்தப் பூமி பொருந்தியிருப்பதும், துங்கம் ஆய் - உயர்வாகி, அதின் கீழ் - அதன் கீழே, உலகு எல்லாம் ஏந்தி - உலகங்களையெல்லாந் தாங்கிக்கொண்டு, துவன்றிய - நெருங்கி யிருக்கிற, கூர்மம் - ஆதி கூர்ம ரூபமாகிய, மால் - திருமாலின், புகழும் - கீர்த்தியும், எ-று.



பருதியினொளியுற்றுலகுறுமுயிர்கள்
பற்பலபொருள்களுந்தத்த
முருவபேதத்தாலறிவுபேதத்தா
லுடற்பலபலவிகாரங்கண்
மருவுதல்போலுமெந்தைமால்பரமான்
மாவுயர்வானெனச்செறிவான்
கருதியவளவேயவரவர்போகக்
காட்சியென்றிடும்பரநிலையும். (௩௰)

(இ-ள்.) பருதியின் ஒளி உற்று - சூரிய ப்ரகாசத்தை யடைந்து, உலகு உறும் உயிர்கள் - உலகத்திலுள்ள வுயிர்களும், பற்பல பொருள்களும் - பற்பல த்ரவ்யங்களும், தத்தம் - தத்தமது, உருவ பேதத்தால் - ரூப பேதத்தாலும், அறிவு பேதத்தால் - ஜ்ஞாநபேதத்தாலும், உடல் - சரீரங்கள், பல பல விகாரங்கள் - பல பல விகாரங்களை, மருவுதல்போலும் - பொருந்துதல் போலவும், எந்தை - எமது தந்தையாகிய, மால் - திருமால், பரம ஆன்மா - பரமாத்மா, உயர்வான் என செறிவான் - உயர்ந்த ஆகாயத்தைப்போல எவ்விடத்தும் நிறைந்திருப்பவன், கருதிய அளவே - நினைத்தமாத்ரத்திலே, அவர் அவர் - அவரவர்களுடைய, போகக்காட்சி என்றிடும் - அநுபவக் காட்சியென்று சொல்லப்பட்ட, பர நிலையும் - பரவஸ்துவின் நிலையும், எ-று.

காட்டியவுண்மையெவற்றெனிற்கேண்மோ
நான்மறைப்பொருளினுமெய்ம்மை
காட்டியபரமபாகவதத்துங்
கருதியசுருதிகளிருதி
யீட்டுசாத்துவமாம்பலபுராணத்து
மிசைத்திடல்கண்டுணர்ந்திடுமின்
வாட்டுறலரசேபுலவரேயென்று
மறுத்தரன்றனைப்பரமதுத்தான். (௩௧)

(இ-ள்.) காட்டிய உண்மை - நான் சொல்லி நிலைநிறுத்தின இந்த உண்மைகள், எவற்று எனின் - எவைகளில் உள்ளனவென்றால், கேண்மின் -

சேருங்கள், நான்மறைப்பொருளினும் - சதுர்வேதார்த்தத்தினும், மெய்மை காட்டிய பரம பாகவதத்தும் - உண்மையைத் தெரிவித்த மேலான ஸ்ரீ பாகவதத்தினும், சருதிய - (எல்லாரும்) மதிக்கிற, சுருதி - ஶ்ருதி, சுமிருதி - ஸ்ம்ருதி, ஈட்டு சத்துவம் ஆம்பல புராணத்தும் - சேகரிக்கப்பட்ட சத்வ குணப்ராசுர்யங்களாகிய பல புராணங்களிலும், இசைத்திடும் - சொல்லப்படும், கண்டு உணர்ந்திடுமின் - கண்டறியுங்கள், வாள் திறல் அரசே - வாளாண்மையுள்ள அரசனே, புலவரோ - வித்வான்களே, என்று - என்று சொல்லி, மறுத்து - (அவர்கள் சொன்ன கட்சிகளைத் தடுத்து,) அரன்தனை - சிவனது, பரம் - பரத்வத்தை, அறுத்தான் - கண்டித்தார், எ-று.

சண்டமாருதத்தினரம்பையின்சோலை
 தயங்கியதெனச்சிவசமயர்
வண்டிறலழிந்துவிண்டிடுங்காலை
 மலர்மகடிருமறுமார்பப்
புண்டரீகக்கட்புராதனமாலைப்
 போற்றினன்பரமெனவேத்தி
யெண்டிசாமுகத்தின்வயிட்ணவமெனுங்கா
 விமையவருலகளாயோங்க. (௩௨)

(இ-ள்.) சண்டமாருதத்தின் - பெருங் காற்றினால், அரம்பையின் சோலை - வாழைச் சோலையானது, தயங்கியது என - அசைந்ததுபோல, சிவசமயர் - சைவசமயிகள், வள் திறல் அழிந்து - வலிய ஆண்மை கெட்டு, விண்டிடும் காலை - வேறுபடுங்காலத்தில், மலர்மகள் - மலர்மகளாகிய, திரு - பெரிய பிராட்டியும், மறு - ஸ்ரீவத்ஸமுமுள்ள, மார்பம் - திரு மார்பையும், புண்டரீகக் கண் - தாமரைமலர்போலுங் கண்களையுமுடைய, புராதன மாலை - பழையோனாகிய திருமாலை, எண் திசாமுகத்தின் - அஷ்ட திக்கினிடத்திலும், வயிட்ணவம் என்னும் - வைஷ்ணவமென்கிற, கா - சோலையானது, இமையவர் உலகு - தேவலோகத்தை, அளாய் ஓங்க - அளாவி உயராநிற்க, பரம் என ஏத்தி - பரவஸ்துவென்று புகழ்ந்து, போற்றினன் - வணங்கினான், எ-று.

பன்னகஞ்சுமந்தபடியுளோர்பிறப்பிற்
 படும்பெரும்பிணிதொலைத்துய்ய
வின்னமுதனையபொருண்மருந்தளித்த
 வெழிற்றிருக்கூரம்வாழ்புனிதன்
சொன்னவிப்பொருளைத்தேர்ந்துளோர்புவியிற்
 றோன்றுமெய்யின்பெலாந்துய்த்து
மன்னுசெங்கதிரோனூடுபோய்த்திருமா
 மணிமண்டபத்தில்வாழ்குவரே. (௩௩)

(இ-ள்.) பன்னகம் சுமந்த - ஆதிசேஷனால் சுமக்கப்பட்ட, படி உள்ளோர் - பூமியிலுள்ளோர், பிறப்பின் - பிறவியுருவாக, படும் - உண்டாகிற,



பெரும் பிணி - பெரிய நோயை, தொலைத்து உய்ய - நீக்கி உஜ்ஜீவிக்கும் பொருட்டு, இன் அமுது அனைய - இனிய அம்ருதத்தை யொத்த, பொருள் - அர்த்தமாகிய, மருந்து அளித்த - ஔஷதத்தைக் கொடுத்த, எழில் - அழகாகிய, திருக்கூரம் வாழ் புனிதன் - திருக்கூர நகரில் வாழ்கின்ற பரிசுத்தராகிய கூராதிபர், சொன்ன இப்பொருளை - சொல்லிய இந்த அர்த்தத்தை, தேர்ந்துளோர் - தெளிந்திருப்பவர்கள், புவியில் தோன்றும் - பூமியில் உண்டாகிற, மெய் இன்பு எல்லாம் துய்த்து - உண்மையாகிய இன்பங்களையெல்லாம் அநுபவித்து, மன்னு - நிலைபெற்ற, செங்கதிரோன் ஊடு போய் - சூரியனுக்கிடையே சென்று, திருமாணி மண்டபத்தில் - (பரமபதத்திலுள்ள) திருமாமணி மண்டபத்தில், வாழ்குவர் - நிலைபெற்று வாழ்வார்கள், எ-று.

பதினேழாவது அடிமுடிதேடினகட்சி முற்றிற்று.

ஆ. திருவிருத்தம், ௩௩௨.

## பதினேழாவது

# அடிமுடிதேடினகட்சி.

முதலாவது—சுருதியில் (యస్య బ్రహ్మచ క్షత్రంచోభే భవత ఓదనం) என்றதில் ப்ரஹ்மாவையும் சிவனையும் ஓதனமென்கிற ஒரு கவளம் சாதத்தைப் புஜிக்குமாபோலே புஜிக்கின்றானென்றும், மற்றொரு சுருதியில் (మృత్యుర్యస్యోపసేచనం) என்று யாவனொருநாராயணனுக்குப் பிரளயகால ருத்திரன் ஊறுகாய் ஸ்தானமாகிறானென்றும் சொல்லியிருக்கையால், இந்தச் சிவனையும், இவனைப்பெற்ற ப்ரஹ்மனையும், அவனால் படைக்கப்பட்ட தேவ மனுஷ்ய திரியக்குஸ்தாவரங்களையும், சிவனால் வசிக்கப்பட்ட கைலை முதலிய அஷ்டகுல பர்வதங்களையும், தன்னுடைய குக்ஷியில் தரித்திருக்க, இந்தச்சிவன் விஷ்ணுவினுடைய குக்ஷியைவிட்டு நழுவியிருந்தானோ; இவ்விரண்டு சுருதிகளுக்கு விவரணங்களாய், வேதத்தில் ஆதியிலும் அந்தத்திலுஞ் சொல்லப்படுகின்ற ஹரி சப்தத்துக்கு வியாசர் விஷ்ணுவின் ஸஹஸ்ரநாம வ்யாக்யானத்தில் (బ్రహ్మాణమింద్రం రుద్రంచ - యమం వరుణమేవచ - నిగృహ్య హరతే యస్మాత్తస్మాద్ధరి రిహోచ్యతే) என்றதில் ப்ரஹ்மாவையும், இந்த்ரனையும், ருத்ரனையும் இயமனையும், வருணனையும் நிக்ரஹித்து ஹரிக்கிற காரணத்தாலே ஹரியென்று சொல்லப்படுமென்று அருளிச்செய்திருக்கிறார்.

இரண்டாவது—இதற்குச் சங்கராசாரியர் செய்த அத்வைத பாஷ்யத்திலும், மத்வாசாரியர் செய்தமத்வ பாஷ்யத்திலும், இராமாநுஜாசாரியர் செய்தருளிய ராமாநுஜ பாஷ்யத்திலும், இப்படியே வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள்.

இப்படியிருக்கையில் விஷ்ணு வராஹாவதாரம்பண்ணி சேதநனான சிவனுடைய பாதத்தைத் தேடினானென்பது வேதவிருத்தம்.

மூன்றாவது—திரு வண்ணாமலையின் ப்ரபாவத்தைக் கேளுங்கோள். அதற்கு சுதர்சநகிரியென்று திருநாமம். அதனுடைய சரித்திரமாவது, ஜைமுனி பாரதத்தில் ஆரண்ய பர்வத்தில், தர்மநந்தனுக்கு லோமசரிஷி திவ்ய தேசங்களின் ப்ரபாவங்களில், திருக்கோவலூர் திவ்ய தேசத்தின் சரித்திரஞ் சொன்னவுடனே சுதர்சநகிரி மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறார்.

நான்காவது—அதாவது ஜகத் ஸ்ருஷ்டியின் ஆதியில் திருவாழி யாழ்வானை லோகஸ்ருஷ்டி பண்ணச்சொல்லி அனுப்ப, அவரப்படி செய்யாம லிருந்ததின்பேரில் ப்ரஹ்மாவைச் சிருஷ்டித்து ஜகத் சிருஷ்டி பண்ணச்



சொல்லி நியமிக்க, அவருமப்படியே வெகுகாலம் கழித்ததின்பேரில், சிவனைச் சிருஷ்டித்து சிருஷ்டிபண்ணும்படி அநுப்புவிக்கையில், அவருமப்படியே ஆலசியமாயிருந்ததின்பேரில் ஒருவராஹத்தை ஸ்ருஷ்டித்து ஜகத் ஸ்ருஷ்டி பண்ணும்படியா யனுப்பினார். அந்த வராஹத்தைக் கண்ட ப்ரஹ்மா நீரார் எதுக்கு வந்தீர் என்று ப்ரஸ்நம்பண்ண, நான் ஸ்ருஷ்டி பண்ணும்படி ஸ்ரீமஹா விஷ்ணுவினாலே அனுப்ப வந்தேனென்ன, அதற்குப் ப்ரஹ்மா கோபித்து, என்னைச் சிருஷ்டிக்கும்படி அனுப்பியிருக்கிறாரே யென்று வராஹத்துடனே வாதம்செய்கையில், சுதர்சநாழ்வான் ஒருவருக்கொருவர் சம்வாதம் நேரிட்டால், மத்யஸ்தர்களானவர்கள் இருவரையும் சமாதாநம் பண்ணாமல் பார்த்துக்கொண் டிருப்பார்களாகில், அவர்களுக்கு நரகமுண்டென்றுவேதத்திற் சொல்லுகையால், தான் மத்யஸ்தராய் வந்து, ஓய் வராஹ மூர்த்தியே; நீர் லோக ஸ்ருஷ்டி பண்ணவந்தேனென்று சொல்லுகிறீர், உம்முடைய வ்யாபாரம் மிகப் பெரிதாயிருக்கையால், இதோ நான் பர்வத ரூபமாயிருக்கிறேன், என்னை நீர் கெல்லுவீராயாகில், நீர் ஸ்ருஷ்டிக்க சாமர்த்திய முடையவரென்று நம்புகிறேனென்று சொன்னார்.

ஐந்தாவது—வராஹமூர்த்தியும் அப்படியே அந்த சுதர்சன கிரியை தம்முடைய கோர தந்தங்களினாலே பேர்த்தெறிந்து மல்லாமல், விச்வ ரூபந் தரித்து, மஹத்தான உக்ரத்துடனே மலையை சாதிக்கையில், திருவாழியாழ்வானும் ப்ரஹ்ம ருத்ரர்களும் வேத வாக்கியங்களினாலே தோத்திரஞ் செய்து, கோபத்தைச் சாந்தம் பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்கையில், அப்படியே ஸ்ரீ ஸ்வாமியானவர் திருவுள்ளத்தில் சந்தோஷமுண்டாய், ப்ரஹ்மாவை அழைத்து நீர் லோக சிருஷ்டியைப் பண்ணக்கடவீரென்றும், ருத்ரனை யழைத்து நீர் சம்ஹாரத்தொழிலைப் பண்ணக்கடவீரென்றும் நியமிக்க, அப்போது சிவன் ஸ்வாமியை மிகவும் ஸ்தோத்திரஞ்செய்து, இந்தக் கொடிய வியாபாரம் அடியேனுக்கு நியமிக்க வேண்டாமென்று கண்ணுங் கண்ணீருமாய் அழுதத்தின்பேரில், ஸ்வாமி க்ருபைகூர்ந்து, ஆகில் நீர் சூரியனைப் பார்க்கக்கடவீர், அவனிடத்தில் நின்றும் வைவஸ்வதமனுவென்கிற இயமன் உண்டாவான், அவனைக் கொண்டு நித்யஸம்ஹாரங்களைபண்ணுவிக்கக்கடவீர், முடிவில் நீர் சுதாவாய் ப்ரளயகால ருத்ரரூபத்தைத் தரித்து ஸர்வசம்ஹாரம்பண்ணக் கடவீரென்று நியமித்தார்.

(சிவனுக்கு அந்த சுதர்சநகிரியின் அடிவாரத்தில் ஒரு ஆலயம் ப்ரதிஷ்டை பண்ணும்படியாகவும், தம்மையும் அவ்விடத்தில் விஷ்ணுஸ்தலமாய் ப்ரதிஷ்டைபண்ணும்படியாகவும் நியமித்து, உற்சவங்கள் நடந்தேறி வருகிறதாய், மேற்படி ஜையமுனி பாரதத்தில் ஏழத்யாயங்களில் இந்த சரித்திரஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.)

ஆறாவது—இப்படியிருக்க மேற்படி திவ்யதேசம் இப்போது சிவஸ்தலமாய்ப்போனதற்குக் காரணமென்னவெனில், முன் வல்லாளராஜனென்னப்

பட்டவன் சிவபக்தனாயிருக்கையில், அந்தப் பர்வதத்தினருகே அடி அண்ணா மலையென்று சொல்லும்படியான ஆலயத்திலிருந்த சிவனுக்கு, அநேகந் திவட்டி பாணம், மத்தாப்பு, புருசுகளுடனே மஹா வியவமாய் உற்சவஞ் செய்கிறதை, மேற்படி அக்ரஹாரத்திலிருக்கிற வைஷ்ணவர்கள் கண்டு சஹிக்கமாட்டாமல், ரிஷபவாஹனத்தையுஞ் சிவனையுஞ் சின்னாபின்னம் பண்ணினதின் பேரில், மேற்படி வல்லாளராஜன் அதிக கோபங்கொண்டு மேற்படி வைஷ்ணவர்களுடைய அக்ரஹாரங்களை இடித்துக் குளம்பறித்து ஏரியாக்கி விட்டான்.

ஏழாவது—மேற்படி விஷ்ணு ஸ்தலத்திலிருந்த அர்ச்சக பரிசாரகர்களை யழைத்து, மேற்படி விஷ்ணுவை நோகாமல் மேற்படி சிவஸ்தலத்தில் ஒரு மூலையில் எழுந்தருளப் பண்ணிவைக்கவேண்டுமென்றும், நீங்கள் பஸ்மந் தரித்துக் கொண்டால்மாத்திரம் உங்கள் மானியங்கள் சிறப்பாய் நடக்குமென்றும், அல்லது இழந்தே போகவேண்டுமென்றும் சொன்னதின்பேரில், பஸ்மந் தரிக்க சம்மதியில்லாதவர்கள் இழந்தே வந்துவிட்டார்கள்.

எட்டாவது—அதுமுதல் அது சிவஸ்தலமென்று பேருண்டாகி, அதற்கு மஹாத்மியம் பண்டாரங்கள் சால அவர்களைப் புகழ்ந்து, அங்கொரு லிங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணி, அதற்கொரு மஹாத்மியம் கற்பிப்பாரைப்போல், இந்த சதுர்முகிக்கும் சிவனுக்கும் பாட்டனை விஷ்ணுவானவர் வராஹ ரூபமெடுத்துப் பேரனுடைய பாதத்தைத் தேடினாரென்றும், சிவனுக்குப் பிதாவாகிய ப்ரஹ்மாவானவன் குமாரனுடைய சிரஸைத் தேடினனென்றும், இந்தப் பொய்களுக்குத் தகுதியாய், தாழம்பூ பொய்ச்சாட்சி சொன்னதாயும், அதற்காகத்தாழம்பூ தேவார்ஹமல்லாதே போகக்கடவதென்று சபித்ததாயும், இந்தக்கதை ஸ்காந்தபுராணத்தின் பூர்வபாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதென்றும் சொல்வது, வேதங்களுக்கும், இதிஹாசமாகிய பாரதத்துக்கும், புராணங்களுக்கும் விருத்திக்கிறதுமல்லாமல், பௌத்ரன் காலை பாட்டன் தேடுகிறதும், புத்ரன் சிரசை பிதா தேடுகிறதுமாகச் சொல்லுகிறது யுக்தி விரோதமும் பரிஹாஸாஸ்பதமுமா யிருக்கின்றது.

ஒன்பதாவது—விஷ்ணுவானவர் பாதாளத்தின் கீழே ஆதி கூர்மமாயும், அதற்குமேல் ஆதிசேஷனாயும், அவதரித்திருக்கச் சிவனுடைய காலைத் தேடிக் காணாதே போய்விட்டாரென்று சொல்வது, புராணவிரோதமென்று கண்டித்தார்.

## பதினெட்டாவது

# பிறப்பிறப்பின்மைக்கட்சி.

கண்ணகன்புவிவானுலாங்கண்ணன்
கழலிணைப்பெரும்பொருட்சிறுகவிதைத்
திண்ணனாரணமென்பதுதேற்றித்
திறல்கொள்செந்தமிழ்ச்சங்கமேலெதிர்த்த
வண்ணமாயிரந்தமிழ்ப்பிரபந்த
மறையினுட்பொருள்வடித்தெடுத்துரைக்கும்
அண்ணன்மாறனதடியெனுமெதிகட்
கரசனைத்தொழுமரசனெம்மரசே. (க)

(இ-ள்.) கண் அகன் புவிவான் உலாம் - இடம் விசாலித்த பூமியிலும் ஆகாயத்திலும் உலாவிய, கண்ணன் கழலிணை - கண்ணன் கழலிணையென்கிற, பெரும்பொருள் - பெரிய பொருள், சிறுகவிதை - சிறிய கவியாகிய, திண்ணனாரணம் என்பது தேற்றி - திண்ணனாரணமென்பதைத் தெளிவித்து, திறல் கொள் - வெற்றியைத் தம்மிடத்துக்கொண்ட, செந்தமிழ் - செந்தமிழ் வல்லாராகிய, சங்கமேல் எதிர்த்த - சங்கத்தாரோ டெதிர்த்த, வண்ணம் - அழகிய, ஆயிரம் - ஆயிரம் பாசுரங்களமைந்த, தமிழ் பிரபந்தம் - தமிழ்ப்ரபந்தத்தில், மறையினுட் பொருள் - வேதத்தினுட்பொருளை, வடித்து எடுத்து உரைக்கும் - தெளிவித்தெடுத்துச் சொல்லிய, அண்ணல் - பெரியோனாகிய, மாறனது அடி என்னும் - நம்மாழ்வாரது திருவடிஸ்தானம் என்று சொல்லப்படுகிற, எதிகட்கு அரசனை - யதிராஜனை, தொழும் - வணங்குகின்ற, அரசன் - கூராதிபர், எம் அரசு - எமக்கரசராவார், எ-று.

பழுதில்கற்புடைமனையுடனரங்கப்
பதிசெல்போதுநும்மணியிசைகேட்டே
கொழுநனெம்பிரானிவண்டசித்திருப்பக்
குலாவிநீரவணமுதுசெய்தருள
வழுதிநாமுமக்கெனநினைத்தவனை
யாய்மலர்ச்சசர்ச்சுனைத்தமுதனுப்பக்
குழைபொருங்கணுயாதபசாரங்
குறித்திநீயெனுங்கூரம்வாழிறையே. (உ)

(இ-ள்.) பழுது இல் கற்பு உடை - குற்றமில்லாத பாதிவ்ரத்யத்தை யுடைய, மனையுடன் - தனது தேவியாரோடு, அரங்கப்பதி செல்போது - திருவரங்க க்ஷேத்ரத்துக்குப் போகும்போது, நும் மணி இசை கேட்டு - உமது மணியோசையைக் கேட்டு, கொழுநன் எம்பிரான் - எமக்கு நாயக

னாகிய எம்மிறைவன், இவண் பசித்திருப்ப - இவ்விடத்துப் பசித்திருக்க, நீர் - தேவரீர், அவண் - அவ்விடத்தில், குலாவி - (உம்மடியாருடன்) கூடிக்கொண்டு, அமுது செய்தருளல் - அமுது செய்தருளுதல், உமக்கு அழகிது ஆம் என - உமக்கு அழகாயிருப்பதாமென்று, நினைத்ததனை - நினைத்ததை, (அறிந்து) அரங்கன் - திருவரங்கன், அர்ச்சகர்க்கு - அர்ச்சகருக்குச் சொல்லி, அமுது அனுப்ப - அமுது அனுப்ப, (அதைக்கண்டு தம் தேவியாரை நோக்கி) குழைபொரும் கண்ணாய் - காதணியைச்சென்று தாக்குகின்ற கண்களையுடையாளே, நீ யாது அபசாரம் குறித்தி - நீ யென்ன அபசாரத்தை நினைக்கிறாய், என்னும் - என்று சொல்லிய, கூரம் வாழ் இறை - திருக்கூரத்தில் வாழ்கின்ற எம்மிறைவராகிய கூரேசர், எ-று.

பொருவிலாவுபநிடதவேதாந்தப்
   பொருட்குமப்புறத்தப்புறமநந்தம்
பருதிபேரொளியெனச்சுடர்விரிக்கும்
   பரம்பரஞ்சுடர்ப்பொருளதோருருவா
யருவமாயருவுருவமாய்த்திகழு
   மற்புதாநந்தனெனும்பரந்தாம
னொருவனேபரமியாவருமெவையு
   முற்றொடுங்குமன்னவனுளுண்மையைக்கேள். (௫)

(இ-ள்.) பொருவு இலாத - ஒப்பில்லாத, உபநிடத வேதாந்தப்பொருட்கும் - உபநிஷத வேதாந்தார்த்தத்துக்கும், அப்புறத்து அப்புறம் - அப்பாலைக்கப்பாலில், அநந்தம் - அளவினால் முடிவில்லாத, பருதி - சூரியர்களுடைய, பேர் ஒளி என - பெரிய ஒளியைப்போல, சுடர் விரிக்கும் - காந்தியைப் பரப்புகின்ற, பரம் பரம் சுடர் - மிக்க தேஜஸ்ஸையுடைய, பொருளது - பொருளானது, ஓர் உரு ஆய் - ஒப்பற்ற ரூபமாகி, அருவம் ஆகி - அரூபமாகி, உரு அருவு ஆய் - ரூபாரூபங்களாகி, திகழும் - விளங்குகின்ற, அற்புத ஆநந்தன் என்னும் - ஆச்சரியகரமாகிய ஆநந்தத்தையுடையவனென்று சொல்லப்படுகிற, பரந்தாமன் ஒருவனே - மேலாகிய ஒளியையுடையவனாகிய ஒருவனே, பரம் - பரவஸ்துவாவன், யாவரும் எவையும் - எவர்களும் எவைகளும், அன்னவன் உள் - அவனுக்குள்ளே, உற்று ஒடுங்கும் - உத்பத்தியாகி லயிக்கும், உண்மையைக்கேள் - யதார்த்தத்தை (நான் சொல்லக்) கேளுங்கள், எ-று.

ஆலின்மேற்சிறுகுழவியாயண்ட
   மனைத்துமுண்டகட்டொடுக்கியேயிறுதிக்
காலமாயபின்னவையெலாமுறையாற்
   களித்துமிழ்ந்துமவ்வாடற்கட்களிக்கு
மூலமாயவன்பரமெனுங்கூர
   முதல்வன்சீர்முகநோக்கியசைவர்
சூலபாணியெஞ்சிவன்பிறப்பிறப்பிற்
   றோன்றிலாமையாற்பரமெனச்சொன்னார். (௬)



(இ-ள்.) ஆலின் மேல் - ஆலிலையின் மீது, சிறு குழவி ஆய் - சிறிய குழந்தை யுருவாகி, அண்டம் அனைத்தும் உண்டு - உலகங்களெல்லாவற்றையும் விழுங்கி, அகட்டு ஒடுக்கி - திருவுதரத்தி லடக்கிக்கொண்டிருந்து, இறுதிக் காலம் ஆயபின் - யுகாந்தகாலங் கழிந்த பிறகு, அவை யெலாம் - அவ்வண்டங்களை யெல்லாம், முறையால் - க்ரமமாக, களித்து உமிழ்ந்தும் - மகிழ்ந்து (வெளி நாடுகொண) உமிழ்ந்தும், அ ஆடல் கண் களிக்கும் - அந்தத் திருவிளையாடலைச் செய்வதில் மகிழ்ச்சியடைகின்ற, மூலம் ஆயவன் - ஜகத் காரண வஸ்துவானவன், பரம் என்னும் - பரவஸ்துவென்று சொல்லிய, கூர முதல்வன் - கூராதிபருடைய, சீர் முகம் நோக்கிய - திருமுகத்தைப்பார்த்த, சைவர் - சைவசமயிகள், சூலபாணி - சூலத்தைக் கையிலேந்திய, எம் சிவன் - எமது சிவபெருமான், பிறப்பு இறப்பில் - ஜநநமரணங்களில், தோன்றிலாமையால் - அகப்படாமையால், (அவனே) பரம் எனச் சொன்னார் - பரவஸ்துவென்று சொன்னார்கள், எ-று.

வே று.

என்றவுரைபுகலுமாயாவாதனையேறநோக்கி
நன்றுநன்றிதுவென்றோதிநகைபுரிந்துரைக்கலுற்றார்
வென்றிகொள்பூதங்கஞ்சன்விறற்சிசுபாலனோடு
துன்றுதந்தவக்கிரன்சீர்தொலைத்தகார்முகிலையாரோ. (௭)

(இ-ள்.) என்ற உரை புகலும் - என்ற சொல்லைச் சொன்ன, மாயாவாதனை - மாயாவாதியினை, ஏற நோக்கி - உற்றுப்பார்த்து, இது - இந்த வார்த்தை, நன்று நன்று என்று ஓதி - அழகிது அழகிது என்று சொல்லி, நகை புரிந்து - சிரித்து, உரைக்கல் உற்றார் - சொல்லத் தொடங்கினார், வென்றி கொள் - வெற்றியைக் கொண்ட, பூதம் - பூதனையும், கஞ்சன் - கம்ஸனும், விறல் சிசு பாலனோடு - வலியமைந்த சிசுபாலனுடன், துன்று - நெருங்கிய, தந்தவக்கிரன் - தந்த வக்ரனும் ஆகிய இவர்களுடைய, சீர் தொலைத்த - மேன்மையை அழித்த, கார் முகில் ஐ - நீலமேக வண்ணனாகிய கடவுள், எ-று.

முருகளைந்துண்டுதேக்கிமூரிவண்டிசைக்குஞ்செய்ய
மருமலர்ப்பதுமநாபன்வயின்வருஞ்சதுமுகனெனன்
புருவகாளத்தின்கண்ணேபுகலுருத்திரன்பிறந்தங்
குருகியேயழுதவாற்றாலுடன்பெயரிட்டவாறும். (௮)

(இ-ள்.) முருகு அளைந்து உண்டு தேக்கி - கள்ளை அளைந்து குடித்து ஏப்பமிட்டு, மூரி வண்டு - வலியமைந்த வண்டுகள், இசைக்கும் - ஒலித்தற்குரிய, செய்ய - செம்மையாகிய, மரு - மணம்பொருந்திய, மலர் பதுமநாபன் வயின் - திருநாபீ கமலத்தையுடைய திருமாலினிடத்தில், வரும் - தோன்றிய,

சதுமுகன் தன் - நான்கு முகங்களையுடைய ப்ரஹ்மாவின், புருவ நாளத்தின் கண் - புருவ நாளத்தில், புகல் - (உங்களால் புகழ்ந்து) சொல்லப்பட்ட, உருத்திரன் பிறந்து - ருத்ரன் ஜநித்து, அங்கு - அப்பொழுது, உருகி அழுத ஆற்றால் - மனமுருகியழுத ப்ரகாரத்தால், உடன் - உடனே, பெயர் இட்ட ஆறும் - (அவனுக்குப்) பெயரிட்ட ப்ரகாரமும், எ-று.

நாளம் - உட்டுளை.

வெண்டிரைபுரட்டும்வாரிமிகுசுவையமுதின்வந்த
புண்டரீகப்பொருட்டிற்பொருந்தியதிருவும்வெய்யோன்
மண்டலக்கதிர்வில்வீசுமணியும்பைந்துளவுமார்பார்
கொண்டலுட்சினத்தின்முன்னாட்கொன்றையான்பிறந்தவாறும்.

(இ-ள்.) வெள் திரை - வெண்மையாகிய அலைகளை, புரட்டும் - புரள்விக்கிற, வாரி - திருப்பாற் கடலின்கண், மிகு சுவை - மிகுந்த சுவையுள்ள, அமுதின் வந்த - அம்ருதத்துடன் பிறந்த, புண்டரீகப் பொருட்டில் பொருந்திய - தாமரைப் பொருட்டில் வீற்றிருக்கிற, திருவும் - பெரிய பிராட்டியும், வெய்யோன் மண்டலக் கதிர் - சூரிய மண்டலத்தின் காந்திபோல, வில்வீசும் - காந்தியை வீசுகின்ற, மணியும் - கௌஸ்துப ரத்நமும், பைந்துளவும் - பசிய துளசிமாலையும், மார்பு ஆர் - திருமார்பிற் பொருந்திய, கொண்டல் - நீலமேக வண்ணனாகிய திருமாலின், உள் சினத்தில் - திருவுளத்தின் கண்ணதாகிய கோபத்தில், முன் நாள் - முற்காலத்தில், கொன்றையான் - கொன்றைமலர் மாலையைத் தரித்தவனாகிய சிவன், பிறந்த ஆறும் - ஜநித்த ப்ரகாரமும், எ-று.

பொருட்டு - கர்ணிகை.

பெருகுகற்பங்கடோறும்பின்னைகண்களிக்கவென்றே
வருவிளையாடல்கூருமணிநிறவளத்தண்ணல்
திருமுகமண்டலத்திற்சிரமமோர்வெயர்வுதோன்ற
மருவுசுவேதவிந்திலவனைந்தரன்பிறந்தவாறும். (அ)

(இ-ள்.) பெருகு கற்பங்கள்தோறும் - அதிகரித்த கல்பங்கள் தோறும், பின்னை கண்களிக்க என்றே - திருமகள் கண்களித்தற் கென்றுதானே, அரு விளையாடல் கூரும் - அருமையாகிய லீலையைச் செய்கின்ற, மணி நிறம் - நீலமணிபோன்ற நிறத்தையும், வள்நத்து - வளமாகிய சங்கத்தையுமுடைய, அண்ணல் - பெரியோனாகிய திருமாலின், திருமுக மண்டலத்தில் - திருமுக மண்டலத்தின்கண், சிரமம் ஓர் வெயர்வு தோன்ற - ச்ரமத்தினால் ஒரு வெயர்வை யுண்டாக, மருவு - பொருந்திய, சுவேதவிந்தில் - (அந்த) வேர்வையாகிய பிந்துவினால், வனைந்து - உண்டாக்கப் பட்டு, அரன் பிறந்த ஆறும் - சிவன் ஜநித்த ப்ரகாரமும், எ-று.



இன்னணந்திருட்டிதோறுமெந்தைமாலருளினாலே
பன்னகாபரணன்வந்துற்பவித்திடுமுறைமைதன்னைச்
சொன்னநாலெவையோவென்னிற்சொல்லுகேன்கேண்மினென்று
மன்னுமெம்பெருமானார்சேவடிமலர்க்கன்பன்சொல்வான். (௯)

(இ-ள்.) இன்னணம் - இந்தப்ரகாரமாக, திருட்டிதோறும் - ஸ்ருஷ்டிகள்தோறும், எந்தை மால் அருளினால் - எமது தந்தையாகிய திருமாலின் அருளால்; பன்னக ஆபரணன் - நாகபூஷணனாகிய சிவன், வந்து உற்பவித்திடும் முறைமை தன்னை - வந்து ஜநிக்கிற க்ரமத்தை, சொன்ன - சொல்லிய, நால் - நூல்கள், எவையோ என்னின் - எவைகளோவென்றால், சொல்லுகேன் - சொல்லுகிறேன், கேண்மின் என்று - கேளுங்களென்று, மன்னும் - நிலைபெற்ற, எம்பெருமானார் - ஸ்ரீ பாஷ்யகாரரது, சேவடி மலர்க்கு - திருவடித் தாமரைகளில், அன்பன் - அன்பையுடைய கூராதிபர், சொல்வான் - சொல்வாராயினர், எ-று.

சுருதியிலாரணத்திற்சொன்மகாவுபநிடத்திற்
பெருகவேயுரைக்குமற்றைப்பெயர்ச்சுருதிகளிலேயும்
வருபிதாவாரணத்தும்வருத்துரைத்திடுதல்காண்மின்
கருமிடற்றரன்பிறப்பைக்காட்டுநூலின்னுங்கேண்மின். (௰)

(இ-ள்.) சுருதியில் - ச்ருதியிலும், ஆரணத்தில் - ஆரணத்திலும், சொல் - சொல்லப்பட்ட, மகா உபநிடத்தில் - மஹோபநிஷத்திலும், பெருகவே உரைக்கும் - விருத்தியாகவே சொல்லும், மற்றைப் பெயர் சுருதிகளிலேயும் - வேறு பெயர்களுள்ள ச்ருதிகளிலும், வருபிதா ஆரணத்தும் - வருத்தியடையாநின்ற பிதா ஆரணத்திலும், வருத்து உரைத்திடுதல் காண்மின் - வருத்துச் சொல்வதைக் காணுங்கள்; கருமிடறு - நீல கண்டத்தையுடைய, அரன் பிறப்பை - சிவனது ஜந்மத்தை, காட்டும் நூல் - காட்டுகின்ற நூல்களை இன்னம் கேண்மின் - இன்னமும் நான்சொல்லக் கேளுங்கள், எ-று.

ஆரணநான்கினோடுமைந்தெனப்புகலுகின்ற
பாரதத்தநுசாசநிகமோக்ஷதன்மத்தின்பாலுஞ்
காரிவங்கிடத்திற்சுருதியபதுமந்தன்னிற்
சீருள்வீட்டிற்கேதுசெப்புபாகவதந்தன்னில். (௰௧)

(இ-ள்.) ஆரணம் நான்கினோடும் - நான்கு வேதங்களோடும், ஐந்து எனப் புகலுகின்ற - ஐந்தென்று சொல்லப்படுகிற, பாரதத்து - ஸ்ரீமஹாபாரதத்தில், அநுசாசநிக மோக்ஷதன்மத்தின்பாலும் - அநுசாஸநிக பர்வத்தில் மோக்ஷதர்மத்திலும், கார் அரி வங்கிடத்தில் - பெரிய ஹரி வம்சத்திலும், சுருதிய பதுமம் தன்னில் - யாவரும் மதித்தற்குரிய பாத்மத்திலும், சீர் - அருள் சிறப்பைத் தருகின்ற, வீட்டிற்கு ஏது - மோக்ஷத்துக் கேதுவாக, செப்பு பாகவதந் தன்னில் - சொல்லப்பட்ட ஸ்ரீ பாகவதத்திலும், எ-று.

நண்ணியபவுடிகத்தினவில்பிரமாண்டந்தன்னி
லெண்ணுசுமிருதிசங்கிரகத்திலுமெசுருவேதம்
பண்ணியபராயுதத்துப்பயிலிரண்டட்டகத்தில்
அண்ணிரண்டாம்பிரசினத்தறுபதாமநுவகத்தில். (௰௨)

(இ-ள்.) நண்ணிய பவுடிகத்தில் - பொருந்திய பவிஷ்யத் புராணத்திலும், நவில் - சொல்லப்பட்ட, பிரமாண்டந் தன்னில் - ப்ரஹ்மாண்ட புராணத்திலும், எண்ணு - யாவரு மதிக்கின்ற, சுமிருதி சங்கிரகத்திலும் - ஸ்ம்ருதி ஸங்க்ரஹத்திலும், எசுருவேதம் - யஜுர்வேதத்தில், பண்ணிய பராயுதத்து - செய்யப்பட்ட பராயுதத்தில், பயில் - பொருந்திய, இரண்டு அட்டகத்தில் அண் - இரண்டாம் அஷ்டகத்திலுள்ள, இரண்டாம் பிரசினத்து - இரண்டாம் ப்ரஶ்நத்தில், அறுபதாம் அநுவாகத்தில் - அறுபதாம் அநுவாகத்தில், எ-று.

எசுருவேதநமகத்திலிப்படியநந்தமான
வசையிலாவேதமோதுவாக்கியமுணர்ந்துகாண்மின்
விரைமலர்ப்பதுமம்பூத்தவிசயமாயவன்றன்னுந்தி
பசியமென்குழவிக்குப்பேர்பதுமனென்றுரைத்தல்போல. (௰௩)

(இ-ள்.) எசுரு வேத நமகத்தில் - யஜுர்வேத நமகத்திலும், இப்படி அநந்தமான - இவ்வாறு முடிவில்லாதனவாகிய, வசைஇலா - பழிப்பு இல்லாத, வேதம் ஓது - வேதங்கள் சொல்லுகிற, வாக்கியம் - வாக்யங்களை, உணர்ந்து காண்மின் - அறிந்து காணுங்கள், விசயம் - வெற்றியுள்ள, மாயவன் தன் - திருமாலின், உந்தி - திருநாபியாகிய, விரைமலர்ப் பதுமம் பூத்த - வாசனை பொருந்திய தாமரை மலரிலுண்டாகிய, பசிய மென் குழவிக்கு - பசுமையாகிய மெல்லிய குழந்தைக்கு, பேர் - பெயர், பதுமன் - பத்மன், என்று உரைத்தல் போல - என்று சொல்லுதல்போல, எ-று.

பதுமன்றன்சேயனாகப்பயிலரன்றனக்குமுன்னாள்
விதியுருத்திரன்பவன்சீர்விரிசருவேசானன்
துதிபசுபதியேபீமன்சொல்லுமுக்கிரனென்றேழ்பேர்
நதியணிவேணியாற்குநாமகரணஞ்செய்தானே. (௰௪)

(இ-ள்.) பதுமன் தன் சேயன் ஆக - ப்ரஹ்மாவின் குழந்தையாக, பயில் - தோன்றிய, அரன் தனக்கு - சிவனுக்கு, முன் நாள் - முற்காலத்தில், விதி - ப்ரஹ்மாவானவன், உருத்திரன் - ருத்ரன், பவன் - பவன், சீர் விரி சருவேசானன் - சிறப்பமிருந்த சர்வேசானன், துதி பசுபதி - யாவரும் ஸ்தோத்ரம் பண்ணுதற்குரிய பசுபதி, பீமன் - பீமன், சொல்லும் உக்கிரன் - சொல்லப்பட்ட உக்ரன், என்ற ஏழ்பேர் - என்ற ஏழு திருநாமங்களை, நதி அணி வேணியாற்கு - கங்காநதியைத் தரித்த சடையை யுடையவராகிய சிவனுக்கு, நாமகரணம் செய்தான் - நாமகரணம் பண்ணினான், எ-று.



மொழிந்திடுமிவைவேதத்தின்முறையிடும்பொருளிற்காண்மின்
கொழுந்திளம்பிறைசூடிக்குக்கூறுசத்தியோசாதப்பேர்
வழங்குதற்புருவகாளம்வதிந்தயன்றாலாலென்று
செழும்பொருடருவராகத்தின்பொருள்செப்புமாமே. (௰௫)

(இ-ள்.) மொழிந்திடும் இவை - சொல்லப்பட்ட இவைகள், வேதத்தில் முறையிடும் பொருளில் காண்மின் - வேதங்களில் முறையிடுகின்ற அர்த்த விசேஷத்திற் காணுங்கள், கொழுந்து இளம்பிறை சூடிக்கு - கொழுந்தாகிய இளம்பிறையை யணிந்த சிவனுக்கு, கூறு சத்தியோ சாதப்பேர் - சொல்லப்பட்ட ஸத்யோஜாதம் என்னும் பெயரை, வழங்கு - இட்டு வழங்குகின்ற, தன் புருவகாளம் வதிந்து - தன் புருவகாளத்தில் பொருந்தி, அயன் தாலால் - ப்ரஹ்மதேவன் உண்டாக்குதலால், என்று - என்று, செழும் பொருள் தரு வராகத்தின் பொருள் செப்பும் - செழுமையாகிய அர்த்தத்தைத் தருகிற வராஹ புராணத்தின் அர்த்தம் சொல்லும், எ-று.

மற்றொருகற்பந்தன்னின்மாயவனிடத்தினின்றும்
குற்றமில்சிவன்பிறப்புக்கூறலாலைங்குநாமம்
வெற்றியைம்படையோனெங்கும்விளங்கிடப்புரிந்தானென்று
சொற்றவப்பொருளுங்காண்மின்சுருதிமெய்ப்பொருளினென்றான்.

(இ-ள்.) மற்றொரு கற்பந்தன்னில் - வேறொரு கல்பத்தில், மாயவன் இடத்தில் நின்றும் - திருமாலிடத்தினின்றும், குற்றம் இல் - தீமையில்லாத, சிவன் பிறப்பு - சிவன் ஜன்மித்ததை, கூறலால் - நூல்கள் சொல்லுதலால், அவற்கு - அந்தச் சிவனுக்கு, வெற்றி - ஜயத்தைத் தருகிற, ஐம்படையோன் - பஞ்சாயுதங்களையுடைய திருமால், எங்கும் விளங்கிட - எவ்விடத்தும் ப்ரகாசிக்கும்படி, நாமம் புரிந்தான் என்று - நாமகரணம் செய்தானென்று, சொற்ற அப்பொருளும் - சொன்ன அந்த அர்த்தத்தையும், சுருதி மெய்ப்பொருளின் காண்மின் என்றான் - ஶ்ருதியின் உண்மையாகிய அர்த்தத்திலே கண்டு கொள்ளுங்கள் என்றார், எ-று.

தன்பிதாவெனுமாலுக்குத்தகைசருவேசநாம
முன்பிருந்திடலாற்றன்சேய்முக்கணற்கீசனும
மன்பொடுபுகன்றானவ்வாறரனுந்தன்சேய்க்குத்தந்தை
தன்பெயர்பிரமனென்னச்சுப்பிரயணியனென்றான். (௰௭)

(இ-ள்.) தன் பிதா என்னும் மாலுக்கு - தன் பிதாவென்கிற திருமாலுக்கு, தகை - பெருமைபொருந்திய, சருவேச நாமம் - ஸர்வேச்வரனென்கிற பெயரானது, முன்பு இருந்திடலால் - முன்னமே யிருந்ததனால், தன் சேய் - தன் புதல்வனாகிய, முக்கணற்கு - சிவனுக்கு, ஈசன் நாமம் - ஈசனென்னும் பெயரை, அன்பொடு புகன்றான் - ப்ரீதியுடன் புகன்றான், அவ்வாறு - அந்தப்ரகாரமே, அரனும் - சிவனும், தன் சேய்க்கு - தன் புதல்வனுக்கு, தந்தை - தனது தந்தையின், தன் பெயர் - சிறந்த பெயரானது

பிரமன் என்ன - ப்ரஹ்மா என்று சொல்லுதற்கு, எப்பிரமணியன என்றான் - ஸுப்ரஹ்மண்யன் என்றழைத்தான், எ-று.

வருத்தவிவ்வணமாற்குமகனென்றும்பேரனென்றுந்
தொகுத்திடுநாமகர்ணஞ்சொன்னவாறனைத்துமுங்க
ளகத்தினிற்பிறப்பிறப்பொன்றடைகிலானெனுமரற்குப்
பகுத்துரைபுகலுமெய்நூற்பதுமபுராணத்தென்றான். (௧௮)

(இ-ள்.) வருத்த - நான் வகுத்துச் சொன்ன, இவ்வண்ணம் - இந்தப்ரகாரம், மால்கு - திருமாலுக்கு, மகன் என்றும் - புத்ரனென்றும், பேரன் என்றும் - பௌத்ரன் என்றும், தொகுத்திடும் - தொகுக்கப்பட்ட, நாமகர்ணம் - நாமகரணத்தை, சொன்ன ஆறு அனைத்தும் - சொன்னப்ரகாரமெல்லாம், உங்கள் அகத்தினில் - உங்கள் மனத்தில், பிறப்பு இறப்பு ஒன்று - ஜநநமரணங்களில் ஒன்றையாயினும், அடைகிலான் என்னும் - அடைந்திலனென்று நினைக்கிற, அரற்கு - சிவனைக்குறித்து, மெய்நூல்பதும புராணத்து - மெய்நூலாகிய பாத்மபுராணத்தில், பகுத்து உரை புகலும் - பகுத்துச் சொல்லாநின்றது, என்றான் - என்றுசொன்னார், எ-று.

அன்றியும்வேதந்தன்னிலயசிருட்டியுபாக்கியாநத்
தொன்றியநாரசிங்கத்துயர்ந்தவிட்டுணுபுராணத்
தென்றிவையுரைத்துப்பின்னுமிவைபலபலபுராணம்
துன்றியபொருளுஞ்சொல்லுந்துறைகளுமுணர்மினென்றான். ()

(இ-ள்.) அன்றியும் - அல்லாமலும், வேதந்தன்னில் - வேதத்தில், அய சிருட்டியு பாக்கியாநத்து - அஜஸ்ருஷ்ட்யு பாக்யாநத்திலும், ஒன்றிய - பொருந்திய, நாரசிங்கத்து - நாரஸிம்ஹத்திலும், உயர்ந்த விட்டுணுபுராணத்து - உயர்வாகிய ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும், என்ற இவை உரைத்து - என்ற இவைகளைச்சொல்லி, பின்னும் - மேலும், இவை பல பல புராணம் - இவைகள் பல பல புராணங்களிலும், துன்றிய - பொருந்திய, பொருளும் - பொருள்களையும், சொல்லும் துறைகளும் - சொல்லுகின்ற வழிகளையும், உணர்மின் என்றான் - அறியுங்களென்று சொன்னார், எ-று.

பிறந்திடும்வகையோர்வண்ணம்பேசினஞ்சிவன்பல்காலி
னிறந்திடும்வகையுங்கேண்மினென்றெடுத்துரைக்கலுற்றான்
மறந்திகழ்குலிசன்செய்தவயிட்ணவயாகந்தன்னி
லறந்தருபரவைதிகயாகத்துமறிமின்சொல்வேன். (௨௰)

(இ-ள்.) சிவன் - ருத்ரன், பிறந்திடும் வகை - ஜந்மிக்கும் விதத்தை, ஓர் வண்ணம் பேசினம் - ஒரு ப்ரகாரமாகச் சொன்னோம், பல்கால் - பலதரம், இங்கு - இவ்வுலகத்தில், இறந்திடும் வகையும் - இறக்கும் விதத்தையும், கேண்மின் - (யான் சொல்லக்) கேளுங்கள், என்று எடுத்து உரைக்கல் உற்றான் - என்றெடுத்துச் சொல்லலாயினர், (என்னெனின்) மறம் திகழ் -



வலிமையோடு விளங்குகின்ற, குலிசன் செய்த - வஜ்ராயுதத்தை யுடையவனாகிய இந்த்ரன் செய்த, வயிட்ணவ யாகந்தன்னில் - வைஷ்ணவ யாகத்திலும், அறம் தருபர வைதிக யாகத்தும் - புண்யத்தைக்கொடுக்கின்ற பரம வைதிக யாகத்திலும், சொல்வேன் அறிமின் - (நடந்த விஷயங்களைச்) சொல்லுகிறேன் அறிந்துகொள்ளுங்கள், எ-று.

வில்லினாற்சக்கரத்தால்வீந்தனனதுவுமன்றித்
தொல்லைமாநரசிங்கத்தைத்தொடர்ந்தொருசரபமாகி
வல்லையின்வீந்தானிந்தவகையவாமரணந்தோறு
நல்லருள்பொழியுமெங்கணாரணனுயிர்தந்தானே. (௨௧)

(இ-ள்.) வில்லினால் - வில்லினாலும், சக்கரத்தால் - சக்கரத்தாலும், வீந்தனன் - இறந்தான், அதுவும் அன்றி - அதுவுமல்லாமல், தொல்லை - பழமையாகிய, மா - பெரிய, நரசிங்கத்தை - ந்ருஸிம்ஹத்தை, ஒரு சரபம் ஆகி தொடர்ந்து - ஒரு சரபரூபமாகித் தொடர்ந்து, வல்லையின் வீந்தான் - விரைவில் இறந்தான், இந்த வகைய ஆம் மரணம் தோறும் - இவ்வகையையுடையனவாகிய மரணங்கள்தோறும், நல் அருள் பொழியும் - (உயிர்களின் மீது) நன்மையாகிய கருணாவர்ஷத்தைச் சொரிகின்ற, எங்கள் நாரணன் - எமக்கு உத்தேஸ்யராகிய ஸ்ரீமந் நாராயணர், உயிர் தந்தான் - உயிரைக் கொடுத்தருளினார், எ-று.

இப்பொருளெவற்றென்றேறிலெசுருவேதாரணத்துச்
செப்புமுப்பிரசிநத்திற்றிகழ்முதலெட்டுபன்னொந்
தொப்பிலாவறுவாகத்திலுரைத்திடும்பொருளிதொன்றும்
தப்பிலாதுணர்ந்துகொண்மின்சாற்றுகேனின்னுங்கேண்மின். ()

(இ-ள்.) இப்பொருள் - இந்த அர்த்தம், எவற்று என்று ஏறின் - எந்த நூல்களில் உள்ளதென்று நீர் கேட்டால், எசுருவேத ஆரணத்து - யஜுர் வேதாரணத்தில், செப்பும் - சொல்லப்பட்ட, முப்பிரசிநத்தில் - மூன்றாம் ப்ரஸ்நத்தில், திகழ் - ப்ரகாசிக்கிற, முதல் எட்டு பன்னொந்து - முதலாவதும் எட்டாவதும் பதினொந்தாவதுமாகிய, ஒப்பு இல்லா அறுவாகத்தில் - ஒப்பற்ற அநுவாகங்களில், இது ஒன்றும் - இந்த ஒரு விஷயமே, உரைத்திடும் பொருள் - சொல்லப்பட்ட பொருளாம், (இதனை) தப்பிலாது - தவறாமல், உணர்ந்து கொண்மின் - அறிந்துகொள்ளுங்கள், இன்னும் சாற்றுகேன் - இன்னமும் சொல்லுவேன், கேண்மின் - கேளுங்கள், எ-று.

பதுமநற்கூர்மமச்சம்பகர்ந்தகாருடம்பிரமந்
திகமுறுவராககாரதியமெய்ப்பிரமாண்டமுந்தீர்
முதுமறைவிளக்குஞ்செய்யுமுக்கியம்பகிடத்தின்
விதுவணிசடிலன்வீதல்விரித்திடுங்காண்மினென்றான். (௨௩)

(இ-ள்.) பதுமம் - பத்ம புராணத்திலும், நல் கூர்மம் - நன்மையாகிய கூர்மபுராணத்திலும், மச்சம் - மச்சபுராணத்திலும், பகர்ந்த காருடம் -

சொல்லப்பட்ட கருடபுராணத்தினும், பிரமம் - ப்ரஹ்மபுராணத்தினும், நிதம் உறுவராகம் நாரதியம் - ஸ்த்திரத்வத்தையுடைய வராஹ புராணத்தினும் நாரதியபுராணத்தினும், மெய் பிரமாண்டம் - உண்மை யாகிய ப்ரஹ்மாண்ட புராணத்தினும், சீர் - சிறப்பமைந்த, முது - பழமையாகிய, மறை - வேதங்களை, விளக்கம் செய்யும் - ப்ரகாசிக்கச்செய்கிற, முக்கிய உபநிடத்தில் - முதன்மைபெற்ற உபநிஷதங்களிலும், விது அணி சடிலன் - சந்த்ரனை யணிந்த சடையையுடைய சிவன், வீதல் - இறத்தலை, விரித்திடும் - விஸ்தரித்துச் சொல்லும், காண்மின் என்றான் - கண்டறியுங்களென்று சொன்னார், எ-று.

மச்சகூர்மவராகஞ்சீர்மடங்கல்வாமநமிராமர்
விச்சையர்மூவர்கண்ணன்வெண்ணிறக்கற்கியென்னப்
பச்சைமாலவதாரங்கள்பத்துடனநந்தமாதி
யிச்சையாற்பிறந்துவிண்ணோர்க்கிடர்தொலைத்தருளல்கண்டே.

(இ-ள்.) பச்சை மால் - பச்சை நிறமுள்ள திருமாலானவர், மச்சம் என்ன - மச்சமென்றும், கூர்மவராகம் என்ன - கூர்மவராகங்களென்றும், சீர்மடங்கல் என்ன - சிறப்பையுடைய ந்ருஸிம்ஹமென்றும், வாமநம் என்ன - வாமநமென்றும், ராமர் விச்சையர் மூவர் என்ன - ராமர்களென்கிற மேன்மையுள்ள மூவரென்றும், கண்ணன் - க்ருஷ்ணன் என்றும், வெண்ணிறம் கற்கி என்ன - வெண்மையாகிய கல்கியென்றும் சொல்லப்பட்ட, அவதாரங்கள் பத்துடன் - பத்தவதாரங்களிற் பிறந்ததோடு, அநந்தம் - முடிவற்ற அவதாரங்களில், ஆதி இச்சையால் பிறந்து - தமது ஆதிசங்கல்பத்தாற் பிறந்து, விண்ணோர்க்கு - தேவர்களுக்கு, இடர் தொலைத்தருளல் கண்டு - துன்பத்தை நீக்கியருள்வதைப் பார்த்து, எ-று.

நஞ்சிவன்றானுஞ்செய்தநுவலின்வேயீன்றமுத்தர்
செஞ்சவுந்தரபாண்டிப்பேர்செறிந்துமுன்விறகுவிற்றும்
விஞ்சையன்பாணனுமிளிர்மணிவணிகனும்
நஞ்செனும்வாதவூரன்றனக்கொருகுரவனாயும். (௨௫)

(இ-ள்.) நம் சிவன் தானும் செய்த - உமது சிவனுஞ் செய்தவற்றை, நுவலின் - சொல்லுமிடத்து, வேயீன்ற முத்தன் - வேயீன்ற முத்தனாய், செஞ் சவுந்தரபாண்டிப் பேர் செறிந்தும் - செவ்விய சவுந்தரபாண்டியன் என்னும் பெயரைப் பொருந்தியும், முன் விறகு விற்றும் - முன்காலத்தில் விறகை விற்றும், விஞ்சையன் பாணனும் - கான வித்தையையுடைய பாணனாகியும், மிளிர் மணிவணிகன் ஆயும் - ப்ரகாசியாகின்ற ரத்ந வ்யாபாரியாகியும், நஞ்சம் என்னும் - அடைக்கலமென்ற, வாதவூரன்றனக்கு - திருவாதவூரருக்கு, ஒரு குரவன் ஆயும் - ஒரு ஆசார்யனாகியும், எ-று.



அன்றொருபன்றிக்குட்டிக்கன்னையாம்பன்றியாயும்
வன்றிறலநுமான்றோன்றமர்க்கடமாயுந்தன்சேய்
முன்றருகணபதிக்குமும்மதயானையாயுங்
கன்றியசாபமாயுங்கலந்திடுமவதாரங்கள். (௨௬)

(இ-ள்.) அன்று - அந்நாளில், ஒரு பன்றிக்குட்டிக்கு - ஒரு பன்றிக் குட்டியின்பொருட்டு, அன்னை ஆம் பன்றி ஆயும் - தாயாகிய பன்றியாகியும், வல்திறல் அநுமான்தோன்ற - வலிய வெற்றியையுடைய அநுமான் உண்டாகும்படி, மர்க்கடம் ஆயும் - மர்க்கடமாகியும், தன் சேய் - தன் புத்ரனாக, முன்தரு - முன்னே யீன்ற, கணபதிக்கு - விநாயகனுக்கு, மும்மதம் யானை ஆயும் - மும்மதங்களையுடைய யானையாகியும், கன்றிய சாபம் ஆயும் - கோபித்த சாபமாகியும், கலந்திடும் - பொருந்திய, அவதாரங்கள் - அவதாரங்களை, எ-று.

அனந்தமதாகநுங்களரனுஞ்செய்தனனதைக்கே
ணினைந்திடீற்றனக்குத்தானேநெஞ்சகங்களித்தற்கன்றி
வினைந்திடுமமரர்துன்பமாற்றுவானன்றென்றுண்மை
புனைந்துரைசெய்தான்பூதபுரிப்பிரான்மகிழுங்கோமான். (௨எ)

(இ-ள்.) அனந்தமது ஆக - முடிவில்லாதவைகளாக, நுங்கள் அரனும் செய்தனன் - உங்கள் சிவனுஞ் செய்தான், அதைக் கேள் - அதனைக் கேளுங்கள், நினைந்திடின் - நினைத்துப் பார்க்குமிடத்து, தனக்குத்தானே நெஞ்சகம் களித்தற்கு அன்றி - தனக்குத்தானே மனங் களிப்பதற்கே யல்லது, வினைந்திடும் - (அரக்கரால்) செய்யப்படுகிற, அமரர் துன்பம் - தேவர்களுடைய துக்கத்தை, மாற்றுவான் அன்று என்று - நீக்கும்பொருட்டல்லவென்று, உண்மை - யதார்த்தத்தை, புனைந்து உரை செய்தான் - அலங்கரித்துச் சொன்னார், (யாரெனின்) பூதபுரிப் பிரான்மகிழும் கோமான் - ஸ்ரீ பூதபுரிக்கு நிர்வாஹகனாகிய யதித்தலைவன் மகிழ்தற்குரியராகிய கூராதிபர், எ-று.

யுகப்பிரளயகாலத்திலோரெழுவகைச்சங்கார
முகித்தபின்றிருமாறானேமுடிக்குமெட்டெனுஞ்சங்காரம்
பொகுட்டயனரன்சில்விண்ணோர்பொருந்துதன்கலையைவாங்கித்
தகித்தரித்திடலான்மாற்குத்தருமரிநாமந்தானே. (௨அ)

(இ-ள்.) யுகப்பிரளய காலத்தில் - யுகாந்த காலத்தில், ஓர் எழுவகைச் சங்காரம் - ஒப்பற்ற எழுவகையாகிய ஸம்ஹாரங்களையும், முகித்தபின் - (செய்து) முடித்தபிறகு, திருமால்தானே - திருமாலே, எட்டு என்னும் சங்காரம் - எட்டாவதென்னும் ஸம்ஹாரத்தை, முடிக்கும் - முடிப்பார், பொகுட்டு அயன் - தாமரைப்பூம் பொகுட்டிலிருக்கிற ப்ரஹ்மா, அரன் - சிவன், சில் விண்ணோர் - சில தேவர்கள், பொருந்து தன் கலையை வாங்கி - உண்டாகிய தன் கலையைப் பெற்று, தகித்து அரித்திடலால் - தஹநம்பண்ணி ஸம்ஹரித்தலால், மாற்கு - திருமாலுக்கு, அரிநாமம் தரும் - ஹரியென்னும் பெயர் தருந்ததாயிருக்கின்றது, எ-று.

முளரிவானவனுமுக்கண்முக்கணனென்றுமெங்க
ளளவணிமுகுந்தனுந்திசகவேதத்துந்தோன்றலாலே
கிளரொளிமாயனுக்குக்கேசவனெனும்பேர்கூறு
முளதிதுபதுமந்தன்னிலுயர்சகத்திரநாமத்தில். (உ௯)

(இ-ள்.) முளரிவானவனும் - தாமரைப்பூவில் வாழ்கின்ற தேவனாகிய ப்ரஹ்மாவும், உங்கள் முக்கணன்தானும் - உங்கள் மூன்று கண்களையுடையவனாகிய சிவனும், எங்கள் - எமக்கு உத்தேஸ்யனான, துளவு அணி முகுந்தன் - துளசிமாலையை யணிந்த திருமாலின், உந்தி சவேதத்தும் தோன்றலால் - திருநாபீ கமலத்திலும் வேர்வையிலும் உண்டாகையால், கிளர் ஒளி மாயனுக்கு - ப்ரகாசியாநின்ற ஒளியையுடைய திருமாலுக்கு, கேசவன் என்னும் பேர் கூறும் - கேசவனென்கிற திருநாமத்தைச் சொல்லும், இது - இந்தச் செய்தி, பதுமந்தன்னில் - பத்ம புராணத்திலும், உயர் சகத்திர நாமத்தில் - உயர்ந்த ஸஹஸ்ர நாமத்திலும், உளது - உண்டு, எ-று.

ஆதலாற்பிறப்பிறப்புண்டரன்றனக்கென்றுபின்னு
மாதவனுனோன்சிட்டிமருவியகாலந்தன்னி
லோதுமோரிடத்திலேநின்றுதித்தனன்பிரளயத்தில்
வீதலுற்றனனென்றோதல்வேதவாக்கியத்தினின்றே. (௩௰)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், அரன் தனக்கு - சிவனுக்கு, பிறப்பு இறப்பு உண்டு என்று - ஜநந மரணங்களுண்டென்று சொல்லி, பின் - பிறகு, உமாதவன் ஆனோன் - உமாநாயகனாகிய சிவன், சிட்டி மருவிய காலந்தன்னில் - ஸ்ருஷ்டித்தொழில் நிகழுங்காலத்தில், ஓதும் - சொல்லப்பட்ட, ஓர் இடத்திலே நின்று - ஒரு இடத்திநின்று, உதித்தனன் - உண்டானான், பிரளயத்தில் - மஹா ப்ரளயகாலத்தில், வீதல் உற்றனன் - மரணத்தை யடைந்தான், என்று ஓதல் - என்று சொல்லுதல், வேதவாக்கியத்தில் நின்றே - வேதவாக்யங்களைக்கொண்டல்லவா, எ-று.

அந்தணரோதுவேதத்தற்புதாநந்தமாகி
நந்திலபேரின்பத்தெந்தைநாரணனுபனிடத்திற்
றந்திடும்பொருளுங்கேளீர்சாற்றுவேனென்றுபின்னுஞ்
செந்திருவாழுங்கூரத்திருநகர்ப்புநிதன்சொல்வான். (௩௧)

(இ-ள்.) அந்தணர் ஓது - வேதியர்கள் அத்யயநம்பண்ணுகிற, வேதத்து - வேதத்தில், அற்புத ஆநந்தம் ஆகி - ஆஸ்சர்யகரமாகிய ஆநந்தமாய், நந்து இல் - கெடுதலில்லாத, பேர் இன்பத்து - பேராநந்தத்தையுடைய, எந்தை - எமது தந்தையாகிய, நாரணன் உபநிடத்தில் - நாராயணோபநிஷத்தில், தந்திடும் பொருளும் கேளீர் - சொல்லப்பட்ட அர்த்தத்தையும் கேளுங்கள், சாற்றுவேன் என்று - சொல்வேனென்று, பின்னும் - மேலும், செந்திரு வாழும் - திருமகள் வாழ்கின்ற, கூரம் திருநகர் - கூரமாகிய அழகிய நகரத்தையுடைய, புநிதன் - பரிசுத்தராகிய கூராதிபர், சொல்வான் - சொல்வார், எ-று.



நாரணனிடத்துநின்றுநான்முகனைம்முகன்வெள்
வாரணனாதிதேவர்மருவுசீவான்மகோடித்
தாரணிககனம்யாவுந்தாமுதித்தங்கவ்வண்ண
மோரணுவின்றியாவுமொடுங்கிடும்பிரளயத்தில். (௩௨)

(இ-ள்.) நாரணனிடத்து நின்று - ஸ்ரீமந் நாராயணனிடத்திலிருந்து, நான் முகன் - நான்கு முகங்களையுடையவனாகிய ப்ரஹ்மாவும், ஐம்முகன் - ஐந்து முகங்களை யுடையவனாகிய சிவனும், வெள் வாரணன் ஆதி தேவர் - வெள்ளையானையை யுடையவனாகிய இந்திரன் முதலான தேவர்களுமாக, மருவு சீவான்மகோடி - பொருந்திய ஜீவாத்மாக்களுடைய ஸமூஹங்களும், தாரணி ககநம் யாவும் - பூமி ஆகாசம் என்கிற மற்றெல்லாப் பொருள்களும், தாம் உதித்து - தாம் தோன்றி, அங்கு அவ்வண்ணம் - அந்தப்ரகாரமாகவே, ஓர் அணு இன்றி - ஒரு அணுவாயினும் இல்லாமல், யாவும் - எல்லாம், பிரளயத்தில் - ப்ரளய காலத்தில், ஒடுங்கிடும் - (அவனிடத்திற்றானே) அடங்கிப் போகும், எ-று.

சராசரவுயிரோடியாவுந்தன்வயினடக்கித்தானே
பராபரமாத்துமாவாய்ப்பகரொப்புமுயர்வுமின்றி
விராவிரவிகள்பல்கோடிவிளங்குபேரொளியாயொன்றாய்த்
தராதரமாயையாலந்தளிர்விழிவளருமாயோன். (௩௩)

(இ-ள்) சராசர உயிரோடு யாவும் - சரம் அசரம் என்கிற ஜீவராசிகளோடு மற்றெல்லாப் பொருள்களையும், தன்வயின் அடக்கி - தன்னிடத்தடக்கிக்கொண்டு, தானே - தானே, பராபர மாத்துமா ஆய் - மேலான பரமாத்மாவாகி, பகர் ஒப்பும் உயர்வும் இன்றி - சொல்லப்பட்ட சமாநாதிகங்களில்லாமல், விராவு - பொருந்திய, இரவிகள் பல்கோடி - அநேக கோடி சூரியர்களின், விளங்கு - ப்ரகாசியாநின்ற, பேர் ஒளியாய் - பெரிய தேஜஸ்ஸாகி, ஒன்று ஆய் - அத்விதீயமாகி, தராதரம் மாயை - பாரம்பர்யமாகிய தனது மாயா விசேஷத்தால், ஆலந் தளிர் - ஆலந் தளிரின் மீது, விழிவளரும் மாயோன் - திருக்கண் வளர்கின்ற மாயவனது, எ-று.

பெருமையிவ்வாறென்றோதும்பின்னுமொன்றுரைப்பன்கேளீர்
திருமறுமார்பன்றானேசிருட்டிநற்றிதிசங்காரம்
கருதுமுத்தொழில்களுக்குங்கருத்தன்மற்றில்லையென்றே
யருமறைசாத்திரஞ்சத்தியமெனவறைதல்காண்மின். (௩௪)

(இ-ள்) பெருமை - பெருமையானது, இவ்வாறு என்று ஓதும் - இந்தப்ரகாரமென்று சொல்லும், பின்னும் ஒன்று உரைப்பன் கேளீர் - பின்னுமொன்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள், திரு மறுமார்பன் தானே - லக்ஷ்மீ ஸ்ரீவத்ஸங்களை அணிந்த திருமார்பையுடைய திருமாலே, சிருட்டி - ஸ்ருஷ்டியும், நல் திதி - நன்மையாகிய ஸ்திதியும், சங்காரம் - ஸம்ஹாரமும் ஆகி,

கருதும் - நினைக்கப்படுகிற, முத்தொழில்களுக்கும்-மூன்று தொழில்களுக்கும், கருத்தன் - கர்த்தாவாவன், மற்று இல்லை யென்று - வேறொருவர் இல்லை யென்று, அருமறை - அருமையாகிய வேதங்களும், சாத்திரம் - சாஸ்த்ரங் களும், சத்தியம் என - யதார்த்த மென்று, அறைதல் - சொல்வதை, காண் மின் - கண்டறியுங்கள், எ-று.

காட்டுமிவ்வண்ணமாயன்கலையெனுமவதாரங்க
ளூட்டியபிறப்பிறப்புநாரணற்கவையொன்றில்லை
தோட்டலர்கமலப்புத்தேடுண்டவெண்பிறைசேர்வேணிக்
காட்டினுன்ருனுமாயன்கழலிணைக்கடியராமால். (௫௫)

(இ-ள்) காட்டும் இவ்வண்ணம் - நான் எடுத்துக் காட்டியஇந்த ப்ரகா ரம், மாயன் கலை என்னும் - திருமாலின் அம்ஸமென்கிற, அவதாரங்கள் - அவதாரங்களே, காட்டிய - நீங்கள் நிலை நிறுத்தின, பிறப்பு இறப்பு - ஜநந மரணங்களாம், நாரணற்கு - ஸ்ரீமந் நாராயணனுக்கு, அவை ஒன்று இல்லை - அந்தப் பிறப்பிறப்புக்கள் சிறிது மில்லை, தோட்டு - இதழ்களையுடைய, அலர்-மலர்ந்த, கமலம் - தாமரை மலரில் வாழ்கின்ற, புத்தேள் - ப்ரஹ்மதேவனும், துண்டம் - கண்டமாகிய, வெள் பிறை சேர் - வெண்மையாகிய சந்திரன் பொருந்திய, வேணிக்காட்டினுன் - சடைக்காட்டையுடைய சிவனும் ஆகிய, இன்னோர் - இவர்கள், மாயன் கழல் இணைக்கு - திருமாலின் திருவடி யிணைக்கு, அடியர் ஆம் - அடியாராவர், எ-று.

கால்செயும்வண்ணத்தாடுங்கறங்குகைக்கயிற்றின்வண்ணத்
தாற்சுழல்பம்பரங்கையட்சுழற்றிகிரியூசல்
போற்சராசரங்கடோறும்பொருந்தியும்பொருந்தாதாடல்
மாற்செய்திங்காட்டுவிக்கும்வகையெலாமாடுமன்றே. (௫௬)

(இ-ள்.) கால் செய்யும் வண்ணத்து ஆடும் - காற்று அசைப்பிக்கும் வண்ணமாக அசைகின்ற, கறங்கு - காற்றாடியும், கைக்கயிற்றின் வண்ணத் தால் - ஆட்டுவோனுடைய கையிலுள்ள சாட்டைக் கயிற்றின் வழியாகவே, சுழல் பம்பரம் - சுழல்கின்ற பம்பரமும், கை அட சுழல் திகிரி - கையினால் சுழற்ற அவ்வண்ணமே சுழலுகின்ற குலால சக்ரமும், ஊசல் - ஆடுவோர் ஆட்ட ஆடுகின்ற ஊசலும், போல் - போல, சராசரங்கள் தோறும் - சராசர ஜீவராசிகள்தோறும், பொருந்தியும் - கூடி நின்றும், பொருந்தாது - அவற் றுடன் கூடா திருத்தலாகிய, ஆடல் - திருவிளையாடலை, மால் செய்து - திருமாலானவர் செய்து, இங்கு ஆட்டுவிக்கும் வகை - இவ்விடத்தில் அசைப் பிக்கும் வண்ணம், எல்லாம் - எல்லாப் பொருள்களும், ஆடும் - அசையா நிற்கும், எ-று.

நாலுயோனியினின்றேழுகவில்வகைத்தோற்றமாக
வேலுமெண்பத்துநான்கினிலக்கமாமுயிர்ப்பேதங்கள்
பாலுமெப்பொருள்கடோறும்பரஞ்சுடர்த்திருமாலுள்ள
தாலுமத்தன்மைவண்ணமமைக்குமிங்கவன்றன்மாயை. (௫௭)



(இ-ள்.) நாலு யோனியில் நின்று - நான்கு வகையாகிய யோநிகளி லிருந்து, நவில் - சொல்லப்பட்ட, எழுவகை தோற்றம் ஆக - எழுவகைப் பிறப்பாக, ஏலும் - பொருந்திய, எண்பத்து நான்கின் இலக்கம் ஆம் - எண் பத்துநான்கு லக்ஷமாகிய, உயிர் பேதங்கள் பாலும் - ஜீவ பேதங்களிலும் உள்ள, எப்பொருள்கள்தோறும் - எல்லாவகைப்பட்ட பொருள்கள்தோறும், பரஞ்சுடர் - பரஞ்சோதியாகிய, திருமால் - திருமாலானவர், உள்ளதாலும் - வ்யாபித்திருத்தலாலும், அவன்றன் மாயை - அவனது மாயையானது, இங்கு - இவ்விடத்து, அத்தன்மை வண்ணம் அமைக்கும் - அத்தப்ரகாரமாய் ப்ரபஞ் சத்தை யுண்டாக்கும், எ-று.

ஆதலாற்சிவனயன்ருனாதிபல்லுயிர்களந்தஞ்
சாதலும்பிறப்புமுண்டுசச்சிதாநந்தரூபன்
மாதவனாதிமூர்த்திமருவிலன்பிறப்பிறப்பு
ஓதவன்கலைக்குச்சன்மமுளவுளவநந்தகோடி. (௫௮)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், சிவன் அயன் தான் ஆதி - சிவன் ப்ரஹ்மா முதலாகிய, பல் உயிர்கள் - பலவுயிர்கள், அந்தம் - முடிவில், சாத லும் - இறத்தலும், பிறப்பும் - பிறத்தலும், உண்டு - உள்ளது, சச்சிதாநந்த ரூபன் - சச்சிதாநந்த ஸ்வரூபனாகிய, மாதவன் - திருமால், ஆதிமூர்த்தி - பூர்வ மூர்த்தியாயிருப்பவன், (ஆதலால் அவன்) பிறப்பு இறப்பு - ஜநந மரணங் களை, மருவிலன் - பொருந்திலன், ஓது - சொல்லப்பட்ட, அவன் கலைக்கு - அவனது அம்ஸத்துக்கு, அநந்தகோடி சந்மம் உள உள - முடிவில்லாத கோடி ஜந்மங்கள் உள்ளன உள்ளன, எ-று.

இவ்வண்ணமறையின்மெய்நூலினிற்புராணங்கடம்மிற்
கைநவண்ணநெல்லியஞ்செங்கனியெனப்பொருளைக்காட்டி
மைவண்ணன்கங்கைபூத்தமலர்ப்பதன்பரமென்றோதிச்
செவ்வண்ணச்சிவனன்றென்றுசெப்பினன்மறுத்தான்மன்றே. ()

(இ-ள்.) இவ்வண்ணம் — இந்தப்ரகாரம், மறையில் - வேதங்களிலும், மெய் நூலினில் - உண்மையாகிய சாஸ்த்ரங்களிலும், புராணங்கள் தம்மில் - புராணங்களிலும், கை - உள்ளங்கையிலுள்ள, வண்ணம் - அழகிய, நெல்லி அம் செம்கனி என - செவந்த நெல்லிக்கனிபோல, பொருளை காட்டி - அர்த்தங்களை யெடுத்துக்காட்டி, மை வண்ணன் - நீலமேகம்போலும் நிறத் தையுடையவன், கங்கை பூத்த மலர்ப்பதன் - கங்கையைத் தோற்றுவித்த தாமரை மலர்போலுந் திருவடியை யுடையவன், (அவன்) பரம் என்று ஓதி - பரவஸ்து வென்றுசொல்லி, செவ்வண்ணச் சிவன் அன்று என்று - செந்நிற முள்ள சிவன் பரவஸ்து அல்லனென்று, செப்பினன் மறுத்தான் - சொல்லி (சைவர்கள் சொன்ன சட்சிகளை) மறுத்துவிட்டார் சூராதிபர், எ-று.

அம்புயத்தடங்கள்சூழ்ந்தவணிதிருக்கூரத்தாழ்வா
னெம்பிரானுரைத்தமெய்ப்பேரின்பமிப்பொருளைத்தேர்ந்தோர்
பைம்புயற்றிருமாலையார்க்கும்பரமெனத்தெளிவரப்பா
லும்பர்களேவல்செய்யவுயர்பரந்தாமஞ்சேர்வார். (௬௰)

(இ-ள்.) அம்புயத் தடங்கள் சூழ்ந்த - தாமரைத் தடாகங்கள் சூழ்ந்த, அணி - அழகாகிய, திருக்கூரத்து - திருக்கூரத்தில் வாழ்கின்ற, ஆழ்வான் எம்பிரான் - ஆழ்வானாகிய எம்மிறைவர், உரைத்த - சொல்லிய, மெய்ப்பேர் இன்பம் - உண்மையாகிய பேரானந்தத்தைத் தருகிற, இப்பொருளைத் தேர்ந்தோர் - இந்த அர்த்தத்தைத் தெளிந்தவர்கள், பைம்புயல் திருமால் - பசிய மேகம்போன்ற திருமாலே, யார்க்கும் - எல்லார்க்கும், பரம் என - மேலான வஸ்துவென்று, தெளிவர் - தெளிவார்கள், அப்பால் - அதின் பிறகு, உம்பர்கள் ஏவல் செய்ய - தேவர்கள் எதிர்கொண்டு ஏவல்செய்யும்படி, உயர் - உயர்ந்த, பரந்தாமம் சேர்வார் - பரமபதத்தை ப்ராபிப்பார்கள், எ-று.

பதினெட்டாவது பிறப்பிறப்பின்மைக்கட்சி, முற்றிற்று.

ஆக திருவிருத்தம், ௩௯௨.

பதினெட்டாவது

# பிறப்பிறப்பின்மைக் கட்சி.

முதலாவது—௨-வது கட்சி க-வது தொடரில் கற்பங்கள்தோறும் ப்ரஹ்ம ருத்ரர்கள் விஷ்ணுவினிடத்திற் பிறக்கின்றார்களென்றும், அதில் ஒரு கற்பத்தில் (అథపురుషోహవై నారాయణస్సోస్వయం కామమనసాధ్యాయాత్ తస్యధ్యానమాసీత్ - తస్యలలాటాత్ స్వేదమభవత్ - స్వేదాత్ బుద్బుదమభవత్ - బుద్బుదాత్ త్ర్యక్షశ్శూలపాణిః పురుషోజాయత ఇతి కృతం పద్మ కల్పే) என்றபடி, விஷ்ணுவினுடைய நெற்றியில் வேர்வைத்துளி பிறந்து அதினின்றும் ஒரு குமிழி உண்டாகி அக்குமிழியினின்றும் சிவன் பிறந்தானென்றும், மற்றொரு கற்பத்தில், ௨-வது கட்சி, ௩-வது தொடரில், நாராயணனிடத்தினின்றும், ப்ரஹ்மாவும், ருத்ரனும், ஏகாதச ருத்ரர்களும் பிறந்தனர்களென்றும், பின்னுஞ் சில கற்பங்களில், ௨-வது கட்சி, ௪-வது தொடரில் (ஶதபத) ப்ராஹ்மணமென்கிற சுருதியில் ப்ரஹ்மா உஷஸியென்னும் ஸ்த்ரீயினிடத்தில் ரேதஸ்விட்டு கர்ப்பாதானம் பண்ணி, ஒரு வருஷத்தில் சிவன் பிறந்தானென்றும், பிறந்தவுடனே அழுதானென்றும், அவனைப் பார்த்து ப்ரஹ்மாவானவன் குமாரனே தபசைப் பண்ணிப் பிறந்தையே, ஏன் அழுகிறாயென்று கேட்க, நான் மஹா பாபியாயிருக்கின்றேன், எனக்கொரு பெயரில்லாத நாமதேயங் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அதற்கு ப்ரஹ்மா உன்னுடைய பாபம் போகக்கடவதென்றும், ருத்ரனென்றும், பவனென்றும், சர்வனென்றும், ஈசானனென்றும், பதியென்றும், பீமனென்றும், உக்ரனென்றும், இப்படி ஏழுநாமங்கள் கொடுத்ததாயும்.

இரண்டாவது—௨-வது கட்சி, ௫-வது தொடரில், ப்ரஹ்மாவும், ஈசானனும் இறந்துபோய், நாராயணனொருவனே முடிவிலிருக்கின்றானென்றும், இப்படி சுருதிகளிற் சொன்னதுமல்லாமல், அவாந்தர மரணமாய், அ-வது கட்சி, ௬-வது தொடரில், தேவர்களுக்கு சிவன் யாக பாகங்கொடாமல், யாகபலமாய் வந்த வில்லை வளைத்து சிவன் தேவர்களை அதர்மமாய் அடித்துத் துரத்தினபோது, அவ் விஷ்ணுவுடன் வந்த தேஜஸ் சிவனைவிட்டு நீங்கினபோது, சிவன் வ்யஸநாக்ராந்தனாய் தேஜஸிருந்தபோது வளைத்த வில்லைப் பின்பு மழுத்தி நாணியைத் தளர்த்தச் சக்தியற்றவனாய், அவ் வில்லை முகவாய்க் கட்டையின் கீழே ஊன்றிக்கொண்டு நிற்கும்போது, இந்த்ரன் பெருங்கறையானாய் வடிவெடுத்து அவ் வில்லின் நாணியை அறுக்க அதின் நிமிர்ச்சியினாலே சிவன் தலை யறுந்துபோய்விட, அப்போது பார்வதியின் ப்ரார்த்தனையினாலே சிவனுக்கு மறுபடியுஞ் சிரங்கொடுத்த கதை, யசுர்வேதத்தில் சொல்லியிருக்கின்றதுமல்லாமல், இப்படி சுருதிகளிற் சொன்ன அர்த்தங்களை பாரதக் கதையிலும், ஸ்ரீ விஷ்ணுபுராணம், ஸ்ரீ பாகவதம், பாத்மோத்தரம், வாமனபுராணம் முதலான புராணங்களில், சிவனுக்குப் பிறப்பும் இறப்பும் உண்டென்று கோஷித்திருக்கையால், அதையறியாமல் சிவனுக்குப் பிறப்பு இறப்பு இல்லையென்று சொல்லுவது வேத பாஹ்யமென்று கண்டித்தார்.

பத்தொன்பதாவது

# வியாசர் புயத்தம்பக் கட்சி.

பருதிவானவன்கதிரினின்றெழுந்த
பனிப்புனற்கலைமதிக்குறுவதென
மருவுதென்றிசையுதித்தசூரியன்போன்
மன்னுமாநந்தம்பெருகொளிச்சுடரைத்
தெருளும்யோகவெண்சந்திரன்வடபாற்
செறிந்ததோற்றமதுரகவிப்பெருமான்
கருதுளக்கணிற்செறிந்திடவிரிக்குங்
கடவுண்மாறன்மெய்யடிக்கடிபணிவாம். (௧)

(இ-ள்.) பருதிவானவன் - சூரிய தேவனது, கதிரில் நின்று எழுந்த - கிரணத்தினின் றுண்டாகிய, பனிபுனல் கலை - குளிர்ச்சியாகிய நீர்க்கலைகள், மதிக்கு உறுவது என - சந்திரனிடத்துப் பொருந்துவதுபோல, மருவு தென் திசை உதித்த - பொருந்திய தென்றிசையில் உதயஞ்செய்த, சூரியன் போல் - சூரியன்போல, மன்னும் - நிலைபெற்ற, ஆநந்தம் பெருகு - இன்பம் அதிகரிக்கிற, ஒளிச்சுடரை - ஒளிப்பிழம்பை, தெருளும் - தெளிகின்ற, யோக வெண்சந்திரன் - யோகத்தையுடைய வெண்மையாகிய சந்த்ரன், வடபால் செறிந்ததோற்றம் - வடதிசையிற் பொருந்தினதுபோன்ற, மதுர கவிப் பெருமான், ஸ்ரீமதுரகவிகளாகிய எம்பிறைவரது, கருது - நினைக்கின்ற, உள்ளக் கண்ணில் - மனக்கண்ணில், செறிந்திட - நெருங்க, விரிக்கும் - பரப்புகின்ற, கடவுள் மாறன் - தெய்வத்தன்மை யமைந்த நம்மாழ்வாருடைய, மெய் அடிக்கு - உண்மையாகிய திருவடிஸ்த்தாநமாகிய ஸ்ரீ பாஷ்யகாரருக்கு, அடி - திருவடிஸ்த்தாநமாகிய கூரேசனை, பணிவாம் - வணங்குவோம் (யாம்), எ-று.

உலகமாயையைக்கடந்தவதரித்த
வுத்தமன்சடகோபன்பொன்னடியா
யிலகுமேலரங்கந்தனிற்சமைய
ரிடும்புகண்டுகற்செக்கிலிட்டரைத்தோன்
குலமறைக்கொழுந்தெனும்பலகலைகள்
கூறிமண்டலத்தவர்மனஞ்செறிந்த
மலமறுத்தருளெதிபதிதிருத்தாள்
மருவுகூரம்வாழ்வள்ளலங்குரைப்பான். (௨)

(இ-ள்.) உலக மாயையைக் கடந்து - லோக மாயையை ஜெயித்து, அவதரித்த - திருவவதாரஞ் செய்தருளின, உத்தமன் சடகோபன் - உத்தமனாகிய



சடகோபரது, பொன் அடி ஆய் - திருவடிஸ்த்தாநமாகி, இலகும் - விளங்கின்ற, மேல் அரங்கம் தன்னில் - மேன்மையாகிய திருவரங்கத்தில், சமயர் - பிறசமயவாதிகளுடைய, இடும்பு கண்டு - அவமதிப்பை நோக்கி, (அவர்களைவென்று) கல்செக்கில் இட்டு அரைத்தோன் - கற்செக்கிற்போட்டு அரைப்பித்தவனாய், குலம் - மேன்மையாகிய, மறைக்கொழுந்து என்னும் - வேதாந்த மென்கிற, பல கலைகள் கூறி - பல அம்சங்களை யெடுத்துச் சொல்லி, மண்டலத்தவர் மனம் செறிந்த - பூமியி லுள்ளோருடைய மனத்திற் பதிந்திருக்கிற, மலம் அறுத்து அருள் - கல்மஷத்தைச் சேதித்தருள்கின்ற, எதிபதி - யதிராஜரது, திருத்தாள் மருவு - திருவடியை ஆச்ரயித்த, கூரம்வாழ் வள்ளல் - திருக்கூரத்தில் வாழ்கின்ற பரமோதாரராகிய கூராதிபர், அங்கு உரைப்பான் - அந்தச் (சைவர்கள் நெருங்கின) சபையில் (கீழ்வரும் விஷயத்தைச்) சொல்லுவாராயினர், எ-று.

பவமிறப்பவாவுவமைசெய்வினைகள்
பகருங்கோத்திரநாமமொன்றில்லா
தவன்குறைந்திடாப்பேரறிவினனென்
றட்டமெய்க்குணத்தமலனெம்பெருமான்
புவகநீரொளிவளிவெளியாகிப்
பூவினாற்றமொத்துறைந்துறையாம
லெவருமியாவையுமாகியமாயோ
னெந்தைநாரணன்பரமெனவிசைத்தான். (௩)

(இ-ள்.) பவம் - ஜந்மமும், இறப்பு - மரணமும், அவா - ஆசையும், உவமை - ஒப்பும், செய்வினைகள் - செய் தொழில்களும், பகரும் கோத்திரம் - சொல்லப்பட்ட கோத்திரமும், நாமம் - பெயரும், ஒன்று இல்லாதவன் - சிறிது மில்லாதவன், குறைந்திடா - குறைவுபடாத, பெரு அறிவினன் - சர்வஜ்ஞன், என்ற - என்று சொல்லப்பட்ட, மெய் - உண்மையாகிய, அட்ட குணத்து அமலன் - எட்டுக் குணங்களையுடைய நிர்மலனும், எம் பெருமான் - எம்பிரானும், புவகம் - பூமி, நீர் - ஜலம், ஒளி - அக்நி, வளி - வாயு, வெளி ஆகி - ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களுமாகி, பூவில் நாற்றம் ஒத்து - மலரில் மணத்தையொத்து, உறைந்து - (சர்வஜீவராசிகளிலும்) வ்யாபித்து, உறையாமல் - வ்யாபியாதிருந்து, எவரும் யாவையும் ஆகிய மாயோன் - எவரும் எவையும் ஆகியிருக்கிற மாயோனும், எந்தை - எமது தந்தையும் ஆகிய, நாரணன் - ஸ்ரீமந் நாராயணனே, பரம் என இசைத்தான் - பரவஸ்துவென்று சொன்னார், எ-று.

எந்தைநாரணனொருவனேபரமெனும்
திசைத்திடுந்திருக்கூரம்வாழமலன்
சுந்தமார்முகச்சந்திரன்முன்னே
தாரகைக்குழாஞ்சைவர்மற்றுரைப்பார்

முந்தைநாரணன்பரமெனவேத
முனிவன்காசியிற்கங்கைமாநதியில்
வந்தூக்கியவலதுகைதம்ப
மானதாற்சிவன்பரமெனவகுத்தார். (௪)

(இ-ள்.) எந்தை நாரணன் ஒருவனே - எமது தந்தையாகிய ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே, பரம் என்று - பரவஸ்துவென்று, இசைத்திடும் - சொல்லாநின்ற, திருக்கூரம் வாழ் அமலன் - திருக்கூர நகரில் வாழ்கின்ற பரிசுத்தராகிய கூராதிபருடைய, சந்தம் ஆர் - அழகுபொருந்திய, முகச்சந்திரன் முன்னே - முகமாகிய சந்திரனுக் கெதிரே, தாரகைக் குழாம் - நக்ஷத்ர சமூகம்போன்ற, சைவர் - சைவர்கள், உரைப்பர் - சொல்வார்கள், முந்தை நாரணன் - பழமையாகிய நாராயணன், பரம் என - பரவஸ்துவென்று, வேத முனிவன் - வேதவ்யாஸ முனிவன், காசியில் - காசிக்ஷேத்ரத்தில் உள்ள, கங்கைமாநதியில் வந்து - கங்காநதியில் வந்து, ஊக்கிய - உயரவெடுத்த, வலதுகை - வலக்கையானது, தம்பம் ஆனதால் - ஸ்தம்பித்துப் போனதினால், சிவன் - சிவபெருமானே, பரம் என - பரவஸ்துவென்று, வகுத்தார் - வகுத்துச் சொன்னார்கள், எ-று.

வேறு.

இவ்வாறுபுகன்றசைவர்க்கெதிர்வேறுமறுத்துரைப்பா
னெவ்வாறிங்குரைத்தவையுண்மையுரைப்பதுங்கேளீர்
செவ்வாய்வெண்ணகைக்கருங்கட்டேவியிடப்பாகமுறு
மவ்வாலமிடற்றரனையறைவீர்களெனச்சொல்வான். [௫]

(இ-ள்.) இவ்வாறு புகன்ற - இந்தப்ரகாரமாகச் சொன்ன, சைவர்க்கு எதிர் - சைவர்களுக் கெதிரில், வேறு மறுத்து உரைப்பான் - வேறாக மறுத்துச் சொல்வார், (என்னெனின்) இங்கு உரைத்தவை - இப்பொழுது நீங்கள் சொன்னவைகளை, எவ்வாறு - (வேத சாஸ்த்ரார்த்தங்களுக்கு) இணங்கியிராது, உண்மை உரைப்பதும் கேளீர் - நான் யதார்த்தமாகச் சொல்வதையும் கேளுங்கள், செவ்வாய் - செவந்த வாயையும், வெண் நகை - வெண்மையாகிய பற்களையும், கருங்கண் - கருமையாகிய கண்களையுமுடைய, தேவி - உமாதேவியானவள், இடப்பாகம் உறும் - இடதுபாகத்திற் பொருந்திய, அ - அந்த, ஆலம்மிடறு - விஷகண்டத்தையுடைய, அரனை - சிவனை, அறைவீர்கள் - (பரவஸ்துவென்று) சொல்வோரே, என அறைவான் - என்று சொல்வார், (கூரேசர்) எ-று.

வேதவியாதன்முன்னாள்விட்டுணுபரதெய்வமெனும்
போதுதிரிவிக்கிரமன்பொன்னடியையயன்விளக்குஞ்
சீதளகங்கையைச்சடையிற்சிவன்றரிப்பத்தெறித்ததுளி
யோதுகங்கைசேர்பதியிலுயர்கரந்தம்பித்ததெனின். [௬]



(இ-ள்.) வேதவியாதன் - வேதவ்யாஸ பகவான், முன்னாள் - முற்காலத்தில், விட்டுணு - திருமாலே, பரதெய்வம் என்னும்போது - மேலான தெய்வமென்று சொல்லும்போது, திரிவிக்கிரமன் - த்ரிவிக்ரமனுடைய, பொன் அடியை - திருவடியை, அயன் விளக்கும் - ப்ரஹ்மா திருமஞ்சனம் செய்த, சீதள கங்கையை - குளிர்ச்சியாகிய கங்கையை, சிவன் - சிவனானவன், சடையில் தரிக்க - சடாபாரத்தில் தாங்க, தெறித்த துளி ஓது - தெறித்த நீர்த்துளி யென்று சொல்லப்பட்ட, கங்கை - கங்காநதி, சேர் - பொருந்தியிருக்கிற, பதியில் - காசி க்ஷேத்ரத்தில், (வேதவ்யாஸ முனிவர்) உயர் - உயரவெடுத்த, கரம் - கையானது, தம்பித்தது எனின் - ஸ்தம்பித்ததென்று (நீங்கள்) சொன்னால், எ-று.

நான்மறையுமுபநிடத்துநவில்சுமிருதிசங்கிதைக
டான்மதிக்குமிதிகாசஞ்சத்துவபுராணமுதன்
மான்மியமாமெய்ப்பொருட்கண்மாதவனேபரமெ
னூனமிலைசத்தியமென்றுரைத்திடும்பொருளிரு (௭)

(இ-ள்.) நான் மறையும் - நான்கு வேதங்களிலும், [illegible] - உபநிஷத்துக்களிலும், நவில் - சொல்லப்பட்ட, சுமிருதி சங்கிதைகள் - ஸ்ம்ருதிகளும் ஸம்ஹிதைகளும், மதிக்கும் - யாரும் மதிக்கின்ற, இதிகாசம் - இதிஹாஸங்களும், சத்துவபுராணம் - ஸாத்விக புராணங்களும், முதல் - முதலானவற்றின், மான்மியம் ஆம் - மஹிமையாகிய, மெய்ப்பொருட்கண் - உண்மையாகிய அர்த்தங்களிலும், மாதவனே பரம் எனற்கு - திருமாலே பரவஸ்துவென்று சொல்வதற்கு, இங்கு ஊனம் இல்லை - இவ்விடத்தில் யாதொரு பழுதில்லை, சத்தியம் - இது சத்யம், என்று உரைத்திடும் - என்று சொல்லுகின்ற, அப்பொருள் இருப்ப - அந்த அர்த்த மிருக்கவும், எ-று.

சத்தியலோகந்தனின்முன்சதுமுகனார்நாரதற்குச்
சத்தியமெய்ப்பரமுகுந்தன்றானெனச்சொல்லியதிருப்ப
ருத்திரன்காசியிற்றேவிக்குயர்நாரணன்பரமா
முத்தமதாரகப்பிரமமுபதேசித்ததுமிருப்ப. (௮)

(இ-ள்.) சத்திய லோகந்தனில் - சத்யலோகத்தில், முன் - பூர்வகாலத்தில், சதுமுகனார் - ப்ரஹ்மதேவர், நாரதற்கு - நாரதமுனிவனுக்கு, சத்தியம் - உண்மையாக, மெய்ப்பரம் - மெய்யாகிய பரவஸ்து, முகுந்தன் தான் என - திருமாலே யென்று, சொல்லியது இருப்ப - சொன்னது இருக்கவும், ருத்திரன் - ருத்ரனானவன், காசியில் - காசிக்ஷேத்ரத்தில், தேவிக்கு - உமாதேவிக்கு, உயர் நாரணன் - உயர்ந்த நாராயணனே, பரம் ஆம் - மேலாகிய, உத்தம தாரகப் பிரமம் - உத்தமமாகிய தாரக ப்ரஹ்மமென்று, உபதேசித்ததும் இருப்ப - உபதேசித்ததும் இருக்கவும், எ-று.

துள்ளிமயிலேறுமொருசுப்பிரமணியனுக்குக்
கள்ளவிழுங்கொன்றைமதிகங்கையணிசிவன்மகிழ்ந்து
வெள்ளிவரையெனுங்கயிலைவெற்பிலிருந்திவைபரமென்
றுள்ளியவட்டாக்கரத்தையுபதேசித்ததுமிருப்ப. (௯)

(இ-ள்.) துள்ளி - குதித்து, மயில் ஏறும் - மயிலின்மீ தேறுகின்ற, ஒரு - ஒப்பற்ற, சுப்பிரமண்ணியனுக்கு [illegible] பெரிய ஸுப்ரஹ்மண்யனுக்கு, கள் அவிழும் [illegible] - தேனொழுகி விரிகின்ற கொன்றைமலர் மாலையையும், மதி - பாலசந்த்ரனையும், கங்கை - கங்கையையும், அணி - தரித்த, சிவன் - ருத்ரன், மகிழ்ந்து - சந்தோஷித்து, வெள்ளிவரை என்னும் - வெள்ளிமலையென்கிற, கயிலை வெற்பில் இருந்து - கைலாச மலையிலிருந்துகொண்டு, இவை [illegible] என்று - இவை மேலானவையென்று, உள்ளிய - மேலோர் மதித் [illegible] த்தை - திருவஷ்டாக்ஷரத்தை, உபதேசித்ததும் இருப்ப - உபதே [illegible] க்கவும், எ-று.

[illegible]ரமபதமாமரங்கமகத்துவத்தில்
[illegible]மையுண்மைநான்மறைமெய்ப்பொருள்வடித்த
[illegible]யாழ்முனியேயெனநாரதற்குமுன்னாட்
பம்புமதிச்சடையுடையான்பகர்ந்திடுமுண்மையுங்கேளீர். (௰)

(இ-ள்.) அம்புவியில் பரமபதம் ஆம் அரங்கம் - பூலோக வைகுண்டமாகிய திருவரங்கத்தின், மகத்துவத்தில் - மாஹாத்மியத்தில், நம்பும் - நம்புவீர், இது உண்மை உண்மை - இந்த விஷயம் சத்யம் சத்யம், நான்மறை - நான்கு வேதங்களின், மெய்ப்பொருள் - உண்மையாகிய அர்த்தத்தை, வடித்த - தெளிவித்த, இன்பம் - சுகத்தைத் தருகின்ற, இசை - பண்ணமைந்த, யாழ் முனியே - நாரத முநிவரே, என - என்று, நாரதற்கு - நாரத முநிவருக்கு, முன் நாள் - முற்காலத்தில், பம்பும் [illegible] சடையான் - சந்த்ரனைத் தரித்த நெருங்கிய சடையையுடைய சிவன், பகர்ந்திடும் - சொல்லிய, உண்மையும் கேளீர் - யதார்த்தத்தையும் கேட்பீர், எ-று.

மறைகளுக்குப்பிரணவமேவாய்மைமுதலெனல்போல
நிறைதவத்திருடிகளின்முன்னின்மலவியாதனைப்போல
முறைமையிற்செந்திருமாலின்முளரியடிக்கடியவரி
லிறைமைமுதலடியனியானெனும்வாய்மையுரைத்திருப்ப. (௰௧)

(இ-ள்.) மறைகளுக்கு - வேதங்களுக்கு, பிரணவமே - ப்ரணவமே, வாய்மை முதல் எனல்போல - உண்மையாகிய முதன்மையானதென்று சொல்லப்படுதல் போலவும், நிறைதவத்து - நிறைந்த தபஸ்ஸையுடைய, இருடிகளில் - ருஷிகளில், முன் - முதல்வனாகிய, நின்மல வியாதனைப்போல - பரிசுத்தத் தன்மை யமைந்த வேதவ்யாஸ முநிவன்போலவும், முறைமை



யின் - க்ரமத்தினால், செந்திருமாலின் - திருமாலினுடைய, முளரி அடிக்கு - தாமரைமலர்போன்ற திருவடிக்கு, அடியவரில் - அடியாராயிருப்பவர்களில், இறைமை - தலைமை பூண்ட, முதல் அடியவன் யான் - முதலடியான் நானாயிருக்கிறேன், என்னும் வாய்மை - என்கிற சொல்லை, உரைத்து இருப்ப - சொல்லியிருக்கவும், எ-று.

ஆதிமுதன்மனுவானவருட்சுயம்புமனுவின்நாள்
சாதனமாகியதீர்க்கசத்திரயாகம்புரிபோ
தோதியமும்மூர்த்திகளிலுயர்பரமிங்காரெனவே
பேதமறவுணர்ந்துவரப்பிருகுமுனிவனைவிடுத்தார். (௰௨)

(இ-ள்.) ஆதி - பூர்வகாலத்தில், முதல் மநு ஆன - முதல்மநுவாகிய, அருள் - க்ருபையுள்ள, சுயம்பு மநுவின் நாள் - ஸ்வாயம்புவ மந்வந்தரத்தில், சாதநம் ஆகிய - (சர்வசித்திகளுக்கும்) காரணமாகிய, தீர்க்க சத்திர யாகம் புரிபோது - தீர்க்க ஸத்ரயாகஞ் செய்யும்போது, ஓதிய - சொல்லப்பட்ட, மும்மூர்த்திகளில் - மும்மூர்த்திகளுக்குள், உயர் - உயர்ந்த, பரம் - பரவஸ்து ஆவார், இங்கு ஆர் என - இவ்விடத்தில் யாவரென்று, பேதம் அற - வேறுபாடில்லாமல், உணர்ந்துவர - அறிந்து வரும்பொருட்டு, பிருகு முநிவனை விடுத்தார் - ப்ருகுமுநிவனை அநுப்பினார்கள், எ-று.

அப்படியேபிருகுமுனியங்ககன்றுகயிலையென்னும்
வெற்பரனைக்காணவவன்வெகுளவவணகன்றயன்பால்
பொற்பொடுசென்றிடச்சிறிதுபோற்றவவன்றனைநீங்கி
யற்புதவைகுந்தநகர்க்கம்முனிசென்றடைந்தனனால். (௰௩)

(இ-ள்.) அப்படியே - அந்தப்ரகாரமே, பிருகு முனி - ப்ருகு முநிவன், அங்கு அகன்று - அவ்விடத்தைவிட்டு நீங்கி, கயிலை என்னும் வெற்பு - கைலாசம் என்கிற மலையிலிருக்கிற, அரனை - சிவனை, காண - சோதித்துப் பார்க்க, அவன் வெகுள - அவன் கோபித்ததனால், அவண் அகன்று - அவ்விடத்தைவிட்டு நீங்கி, அயன் பால் - ப்ரஹ்மாவினிடத்தில், பொற்பொடு சென்றிட - அழகாகப்போக, சிறிது போற்ற - (அவன்) சிறிது வணங்கினதனால், அவன் தன்னை நீங்கி - அவனை விட்டு நீங்கி, அற்புத வைகுந்த நகர்க்கு - அத்புதமாகிய வைகுண்ட நகரத்தில், அம்முனி சென்று அடைந்தனன் - அந்த முநிவன் போய்ச் சேர்ந்தான், எ-று.

கண்டிடுமுன்னவனிதயங்களித்திநல்லுபசாரங்
கொண்டுபுகழ்ந்திடுதலினற்குணங்குறியொன்றறிவரிய
புண்டரிகவிழியினருள்பொழியுமொழியொழுகுமுக
மண்டலமார்திருமாலேவண்பரமென்றறிந்துணர்ந்து. (௰௪)

(இ-ள்.) கண்டிடு முன் - (தன்னைக்) காண்பதற்கு முன்னமே, அவன் - அந்தத் திருமால், இதயம் களித்து - ஹ்ருதயம் சந்தோஷித்து, இடும் - செய்தற்குரிய, நல் உபசாரம் கொண்டு - நல்ல உபசாரங்களைச் செய்து, புகழ்ந்திடுதலினால் - கீர்த்தித்தலால், குணம் குறி ஒன்று அறிவு அரிய - குணம் குறிகள் சிறிதும் அறிதற் கருமையாகிய, புண்டரிக விழியின் - தாமரை மலர் போன்ற கண்களால், அருள் பொழியும் - கருணை மழை சொரிகின்ற, எழில் ஒழுகும் - அழகொழுகாநின்ற, முகமண்டலம் ஆர் - திருமுகமண்டலத்தை யுடைய், திருமாலே - லக்ஷ்மீநாதனே, வள்பரம் என்று - வளவிய பரவஸ்து என்று, அறிந்து உணர்ந்து - நன்றாயறிந்து, எ-று.

செறிந்திருடிகணங்கள்பலதிகம்யாகசாலையிற்சென்
றறிந்துணர்மினறிந்துணர்மினரன்கோவிதாமதனு
முறைந்தவிராசதனயனுமோங்காரப்பொருளொளியாய்
நிறைந்திடுசத்துவத்திருமாலின்மலனேபரமென்றான். (௰௫)

(இ-ள்.) செறிந்து - நெருங்கி, இருடிகணங்கள் பல - ருஷி ஸமூஹங்கள் அநேகம், திகழ் - ப்ரகாசிக்கிற, யாக சாலையில் சென்று - யாக சாலையிற் போய், அறிந்து உணர்மின் அறிந்து உணர்மின் - நன்றா யறியுங்கள் நன்றா யறியுங்கள், அரன் - சிவன், கோவிதாமதன் ஆம் - கோபியும் தாமஸ குணத்தையுடையவனுமாவன், அயன் உறைந்த இராசதன் ஆம் - ப்ரஹ்மா ராஜஸ குணம் தன்னிடத்தில் தங்கப்பெற்றவனவன், ஓங்காரப் பொருள் - ஓங்காரார்த்தமாகியும், ஒளி ஆய் - தேஜஸ்வியாகியும், நிறைந்திடு - வ்யாபித்திருக்கிற, சத்துவத் திருமால் - சாத்விக குணத்தையுடைய திருமாலென்று சொல்லப்பட்ட, நின்மலனே - நிர்மலனே, பரம் என்றான் - பரவஸ்துவென்று சொன்னான், எ-று.

இவ்வண்ணம்பிருகுமுனியிருடிகணங்களினடுவே
மெய்வண்ணஞ்சத்தியமாய்விரித்துரைத்தபொருளிருப்பத்
திவ்வியமெய்ச்சுகமுனிவன்றீவளர்த்துநடுவிலிருந்
தவ்வண்ணஞ்சனமேயவரசுதந்தைக்கெழுநாளில். (௰௬)

(இ-ள்.) இவ்வண்ணம் - இந்தப்ரகாரமாக, பிருகுமுனி - ப்ருகு முநிவன், இருடி கணங்களின் நடுவே - ருஷிசமூஹத்தின் நடுவில், மெய் வண்ணம் - உண்மைநிலையை, சத்தியமாய் - யதார்த்தமாக, விரித்து உரைத்த - விஸ்தரித்துச் சொல்லிய, பொருள் இருப்ப - அர்த்த மிருக்கவும், திவ்வியம் - அத்புதமான, மெய் - உண்மை நிலையையுடைய, சுகமுனிவன் - சுகப்ரஹ்ம ருஷியானவர், தீவளர்த்து - நெருப்பை வளர்த்து, நடுவில் இருந்து - அதின் நடுவேயிருந்து, அவ்வண்ணம் - அந்தப்ரகாரம், ஜநமேய அரசு - ஜநமேஜய வரசனது, தந்தைக்கு எழுநாளில் - பிதாவின் பொருட்டு ஏழுநாளில், எ-று



பகர்சீவன்முத்தியதாய்ப்பரலோகந்தனையடையச்
சுகப்பிரமமுனிமாயன்றூயவனேபரமென்று
தகைப்பரமபாகவதஞ்சத்தியஞ்சொல்லியதிருப்ப
மிகுத்திருளினுலுரைக்கும்வீறிதென்சொல்கூறுமினே. (௰௭)

(இ-ள்.) பகர் - சொல்லப்பட்ட, சீவன் முத்தியதாய் - ஜீவந் முக்தியை யுடையவனாகி, பரலோகம் தன்னை அடைய - பரலோகத்தைச் சேரும்படி, சுகப்பிரம முனி - சுகப்ரஹ்ம ருஷியானவர், மாயன் - திருமாலாகிய, தூயவனே - பரிசுத்தனே, பரம் என்று - பரவஸ்துவென்று, தகை - பெருமையுள்ள, பரமம் - மேலான, பாகவதம் - பாகவதத்தை, சத்தியம் - உண்மையாக, சொல்லியது இருப்ப - சொன்னது இருக்கவும், மிகுத்திருளினால் உரைக்கும் - மிகுந்த அஜ்ஞாநாந்த காரத்தினால் நீங்கள் சொல்லுகின்ற, வீறு இது என்கொல் - சிவ பரத்வமாகிய இம்மேம்பாடு யாதோ, கூறுமின் - சொல்லுங்கள், எ-று.

அனந்தமிருடிகளமரரவ்வண்ணமுரைத்திருப்ப
வனைந்தவர்கடம்முடைநாவண்கரந்தம்பிக்காமை
நினைந்திடுமினவ்வண்ணநிகழ்த்தியசொன்மறைமுனிவன்
புனைந்துரைக்கிற்கையுநாவும்போவதுண்டோதம்பித்தே. (௰௮)

(இ-ள்.) அனந்தம் இருடிகள் - முடிவில்லாத ருஷிகளும், அமரர் - தேவர்களும், அவ்வண்ணம் உரைத்திருப்ப - அந்தப்ரகாரமே சொல்லியிருக்க, வனைந்தவர்கள் தம்முடை நாவண்கரம் தம்பிக்காமை - சொன்ன அவர்களுடைய நாவும் வளமாகிய கைகளும் ஸ்தம்பித்துப் போகாமையை, நினைந்திடுமின் - ஆலோசியுங்கள், அவ்வண்ணம் நிகழ்த்திய சொல் - அந்தப்ரகாரமாகவே சொல்லிய சொல்லையுடைய, மறை முனிவன் - வேதவ்யாஸ முநிவன், புனைந்து உரைக்கின் - (திருமாலின் பரத்வத்தை) அலங்கரித்துச் சொன்னால், கையும் நாவும் தம்பித்துப்போவது உண்டோ - அவனது கையும் நாவும் ஸ்தம்பித்துப் போதலுண்டோ, எ-று.

ஒவ்வாதிதொவ்வாதிங்குயர்வேதவைதிகத்துக்
கிவ்வாறுமோகனசாத்திரப்பொருளென்றறிந்துணர்மி
னெவ்வாறுசிவன்பரமென்றிருக்கவரிபரமெனும்பொய்
யவ்வாறுவேதமுனியறைந்திடலாங்கவன்றன்னை. (௰௯)

(இ-ள்.) இங்கு - இவ்விடத்தில், உயர் வேத வைதிகத்துக்கு - உயர்ந்த வேத வைதிக சாஸ்த்ரங்களுக்கு, இவ்வாறு - இந்தப்ரகாரமான, மோகந சாத்திரப் பொருள் - மோஹந சாஸ்த்ரார்த்தமாகிய, ஈது - இது, ஒவ்வாது ஒவ்வாது என்று - இணங்காது இணங்காது என்று, அறிந்து உணர்மின் - நன்றாயறியுங்கள், சிவன் பரம் என்று இருக்க - சிவன் பரவஸ்துவென் றிருக்க,

அரிபரம் என்னும் பொய் - திருமால் பரவஸ்துவென்கிற பொய்யை, அவ்வாறு வேத முநி அறைந்திடல் எவ்வாறு - அப்படி வேதவ்யாஸ முநிவன் சொல்லுதல் எப்படி பொருந்தும், ஆங்கு அவன் தன்னை - அந்த வேதவ்யாஸ முனிவனை, எ-று.

மும்மலத்தைக்கடிந்தொளிருமுனிவரிருடியர்தொகையிற்
செம்மையுளரிவரென்னச்செப்புவதென்னவருரைத்த
மெய்ம்மையருமறைநூலின்விதிப்படியேநடப்பதென்கொ
லம்மவிதற்கெதையுரைப்பீரரிபரஞ்சத்தியமாமே. (௨௰)

(இ-ள்.) மும்மலத்தைக் கடிந்து ஒளிரும் - மும்மலங்களை நீக்கி விளங்குகின்ற, முநிவர் - முநிவரும், இருடியர் - ருஷிகளும் ஆகிய அவர்களுடைய, தொகையில் - சமூஹத்தில், இவர் செம்மை உளர் என்ன - இந்த வேதவ்யாஸ முநிவர் செவ்விய குணத்தையுடையவர் என்று, செப்புவது என் - சொல்வதென்ன, அவர் உரைத்த - அவர் சொன்ன, மெய்ம்மை - உண்மையாகிய, அருமறை நூலின் விதிப்படியே - அரிய வேதசாஸ்த்ர விதிப்ரகாரம், நடப்பது என் கொல் - எல்லாரும் நடப்பதென்ன, அம்ம - கேளுங்கள், இதற்கு - இந்த வினாவுக்கு, எதை உரைப்பீர் - எதை மறுமொழியாகச் சொல்வீர்கள், (சொல்லமாட்டீர்கள் ஆதலால்) அரிபரம் சத்தியம் ஆம் - திருமாலின் பரத்வமே உண்மையாம், எ-று.

இன்னணமிங்குரைத்தவைகளெந்நூலிலுளவென்னின்
முன்னமறைவிரித்தமறைமுனிவரன்சத்துவகுணமே
மன்னியுரைத்திடும்பொருளாம்வயிட்டணவபுராணமதிற்
சொன்னபொருளாதலினாற்றூயபரநாரணனே. (௨௧)

(இ-ள்.) இன்னணம் - இந்தப்ரகாரம், இங்கு உரைத்தவைகள் - இவ்விடத்தில் நான் சொன்னவைகள், எந்நூலில் உள என்னின் - எந்த நூலில் உள்ளனவென்றால், முன்னம் - பூர்வகாலத்தில், மறை விரித்த - வேதங்களை விரித்தருளிய, மறை முநிவரன் - வேதவ்யாஸ முநிவரன், சத்துவகுணமே மன்னி - சாத்விக குணத்தைப் பொருந்தி, உரைத்திடும் பொருள் ஆம் - சொன்ன அர்த்தமாகிய, வயிட்டணவ புராணமதில் - ஸ்ரீ விஷ்ணு புராணத்தில், சொன்ன பொருள் ஆதலினால் - சொல்லிய அர்த்தமாகையால், தூய பரம் நாரணனே - பரிசுத்தமாகிய பரவஸ்து ஸ்ரீமந் நாராயணனே யாவன், எ-று.

தோற்றியதோர்கிருமிகண்டசோழனவன்கவியமைச்சர்
நாற்றிசையுஞ்செறிந்துறையுநடுச்சவையிற்பலயுகங்கள்
சாற்றியபல்கலைவேதசாத்திரத்தின்முறைமையதா
மாற்றரியபொருளுரைத்துவாதுமறுத்தனனுரைப்பான். (௨௨)



(இ-ள்.) தோற்றிய - எதிரே காணப்பட்ட, ஓர் கிருமிகண்ட சோழன் - ஒப்பற்ற க்ருமிகண்டச் சோழராஜனும், அவன் கவி - அவனைச் சார்ந்த சைவ வித்வான்களும், அமைச்சர் - மந்த்ரிமார்களும், நாற்றிசையும் - நான்கு பக்கங்களிலும், செறிந்து உறையும் - நெருங்கியிருக்கிற, நடுச்சவையில் - சபையின் நடுவே, பல யுகங்கள் சாற்றிய - அநேக யுகங்களினுஞ் சொன்ன, பல்கலை வேத சாத்திரத்தின் முறைமையது ஆம் - பலகலைகளும் வேத சாஸ்த்ரங்களும் ஆகிய இவற்றின் முறைமையை யுடையதாகிய, மாற்று அரிய - யாவராலும் தடைசெய்தற் கரிதாகிய, பொருள் உரைத்து - அர்த்த விசேஷத்தைச் சொல்லி, வாது மறுத்தனன் உரைப்பான் - (சைவர்களுடைய) வீண் வாதுகளை மறுத்துச் சொல்வார் கூரேசர், எ-று.

பூதகணத்துடனாடும்புலிச்சடையன்மோகநூல்
சீதரனாணையிற்புரிந்தசெய்தியினாலவையுண்மை
யாதல்பொருட்டவதரித்தாங்கவன்கலையாமறைமுனிவ
னோதுதமநூற்குறுதியுரைத்திடும்பொய்யுரையிவையே. (௨௩)

(இ-ள்.) பூத கணத்துடன் ஆடு - பூதகணங்களுடன் கூடியாடிய, அம்புலிச் சடையன் - சந்த்ரகண்டத்தை யணிந்த சடாபாரத்தை யுடையவனாகிய சிவன், மோகநூல் - மோஹந சாஸ்த்ரங்களை, சீதரன் ஆணையின் - திருமாலின் நியமநத்தால், புரிந்த செய்தியினால் - செய்த விஷயத்தினால், அவை - அவைகள், உண்மை ஆதல் பொருட்டு - மெய்யாகும் பொருட்டு, அவதரித்து - அவதரித்தருளி, ஆங்கு அவன் கலை ஆம் - அவனது அம்சமாகிய, மறை முனிவன் - வேதவ்யாஸ முநிவன், ஓது - சொன்ன, தமநூற்கு - தமோகுண நூல்களுக்கு, உறுதி உரைத்திடும் - உறுதியாகச் சொல்லுகின்ற, பொய்யுரை - பொய் வார்த்தைகள், இவையே - இவைகளே, எ-று.

கூறியவிவ்வாதெவர்தாம்கொள்வரெனின்மோகநூ
லாறிசைக்கும்பொருட்கிசைந்தாரற்புதந்தற்பரனரனே
வேறிலையென்பாரதன்றிமெய்யுணர்ந்தோர்சதுமறையி
னீறிடம்புரிதிருமாலெந்தைபரமென்பர்களால். (௨௪)

(இ-ள்.) கூறிய - நீங்கள் சொன்ன, இவ்வாது - இந்த வாதத்தை, எவர் தாம் கொள்வர் எனின் - யாவர் தாம் கொள்வார்களென்றால், மோகநூல் ஆறு இசைக்கும் பொருட்கு - மோஹந சாஸ்த்ரங்களின் வழியாகச் சொல்லிய அர்த்தத்துக்கு, இசைந்தார் - இணங்கினவர்கள், அற்புதம் - ஆச்சர்யகரமாகிய, தற்பரன் - தற்பரவஸ்துவானவன், அரனே - சிவனே, வேறு இல்லை என்பார் - வேறில்லை யென்பார்கள், அதன்றி - அது அல்லாமல், மெய் உணர்ந்தோர் - உண்மையை யறிந்தவர்கள், சதுமறையின் ஈறில் - நான்கு வேதங்களின் முடிவில், நடம்புரி - நடனஞ் செய்கின்ற, திருமால் -

திருமாலாகிய, எந்தை - எமது தந்தையே, பரம் என்பர்கள் - பரவஸ்து வென்று சொல்வார்கள், எ-று.

ஆதலினாற்சிவன்பரமன்றாழிவடத்தூழிதொறும்
போதவிழிவளர்மாயன்புகல்பரமென்றெழிற்கூர
நாதன்றளியபொருளைநவில்வோருமுணர்வோரும்
பூதலத்திலுயர்வானிற்பொருந்தியபேரின்படைவார். (௨௫)

(இ-ள்.) ஆதலினால் - ஆகையால், சிவன் பரம் அன்று - சிவன் பரவஸ்து அல்ல, ஆழி - திருப்பாற் கடலில், வடத்து - ஆலிலையின்மேல், ஊழிதொறும் - யுகாந்தங்கள்தோறும், போதவிழிவளர் - யோக நித்ரை செய்கிற, மாயன் - திருமாலே, புகல் - சொல்லப்பட்ட, பரம் என்று பரவஸ்து வென்று, எழில் - அழகுபொருந்திய, கூரநாதன் - கூரேசர், அருளிய - அருளிச் செய்த, பொருளை - அர்த்த விசேஷத்தை, நவில்வோரும் - சொல்வோர்களும், உணர்வோரும் - அறிவோர்களும், பூதலத்தில் - மண்ணுலகத்திலும், உயர் வானில் - உயர்ந்த விண்ணுலகத்திலும், பொருந்திய - உண்டாகிய, பேர் இன்பு அடைவார் - பேரானந்தத்தை யடைவார்கள், எ-று.

பத்தொன்பதாவது, வியாசர் புயத்தம்பக் கட்சி, முற்றிற்று.

ஆக திருவிருத்தம், ௫௬௭.

பத்தொன்பதாவது

# வியாசர் புயத்தம்பக் கட்சி.

முதலாவது—வியாசபதமென்று கற்பங்கள் தோறும் ([illegible]) என்கிற வித்பத்தியின் பிரகாரம் வேதத்தினுடைய யதார்த்தத்தை ஸ்தாபிக்கவும், அதற்கு மாறான அர்த்தங்களை நிராகரிக்கவும், ஒருவனை பகவான் நியமித்து; அவரிடத்திலே தம்முடைய அதிஷ்டான மென்கிற ஆவேசத்தையும் பண்ணியிருக்கிறது, அத்தாலே வேதத்தில்-உ-வது கட்சி-௩-வதுதொடரில்கற்பங்கள் தோறும் பிரம்மருத்திரர்கள் விஷ்ணுவினிடத்திலுண்டாகிறார்களென்றும் அவர்களுக் கந்தரியாமியானவன் ஸ்ரீமந் நாராயணனென்றும், கற்பாந்தத்தில் இவர்கள் விஷ்ணுவினாலே சம்ஹரிக்கப்படுகிறார்களென்றும் நாராயணன் ஒருவனே முடிவிலிருக்கிறானென்றும், இப்படி நாலு வேதங்களிலுஞ் சொல்லியிருக்கிற அர்த்தத்தை மஹோபநிஷத்தில் (నారాయణపరం బ్రహ్మ-తత్వం నారాయణః పరః) என்றதில் நாராயணனே பர ப்ரஹ்மமென்றும், அது சத்தியமென்றும், நாராயணனே பரனென்றும், சுருதிகளிலும், உபநிஷத்திலும் சொன்ன அர்த்தத்தை சிஷ்ய புத்ரர்களும் மற்றும் உலகத்திலுள்ள பண்டித பாமர ஜனங்களும் தெளிவை யடையும்படி காசியில் ஸ்நானஞ்செய்து ஊர்த்வ புண்ட்ரம் துளசிமாலை ஈரவஸ்திரந் தரித்து கங்கைக்கரையில் ஆகாசவாணி பூமிதேவி சாட்சியாய் நான் பிரமாணமாய்ச் சொல்லுகிறேனென்று வியாசர் பிரதிக்ஞைபண்ணி (సత్యం సత్యం పునస్సత్యం-ఉద్ధృత్య భుజముచ్యతే వేదశాస్త్రాత్పరం నాస్తి న దైవం కేశవాత్పరం) என்று உபநிஷத்தில் இரட்டித்து இரண்டுதரம் ஸத்தியம் பண்ணினதை, தான் மூன்றுதரமாகச் சத்தியம்பண்ணி, கையை யுயரவெடுத்துச் சொல்லியிருக்கிறார் அஃதென்னவெனில்.

இரண்டாவது—வேதங்களுக்கு மிஞ்சின சாஸ்திரமில்லை, ஆகையாலே கேசவனுக்கு மிஞ்சின தெய்வமில்லை யென்று பிரமாணம்பண்ணிச் சொன்னபோது, நந்தியானவன் யதார்த்தத்தைச் சொல்லுகிறானென்று, சாத்விகத்துடனே கூடியிராமல், தாமஸகுணத்தாலே வ்யாசரை ஹிம்சிக்கவந்தான். அப்போது சிவனுடைய அம்சபூதரான அனுமாரானவர் நந்தியைக் கோபித்து தம்முடைய இடது திருவடியாலே அவனுடைய முகத்தின்பேரில் உதைக்க அத்தாலே மேல்வாய்ப்பல்லுகளெல்லாம் உதிர்ந்து போய்விட்டது.

மூன்றாவது—இதுலோகத்தில் பிரசித்தியடையும் பொருட்டு விஷ்ணு பக்தர்களான தாசர்களைநோக்கி நீங்கள் நந்த எருது என்கிற ஒரு எருது சம்பாதித்து, அதினுடைய நெற்றியிலே தாம் நந்தியை உதைத்ததற்கு திருஷ்டாந்த

யாக தம்மை விக்ரஹரூபமாய் பிரதிஷ்டை பண்ணும்படியாய் நியமித்து அநுமார் எழுந்தருளி விட்டார். இதற்கு ப்ரமாணம், தேடவேண்டாமல் உலகத்தின் கண் பிரத்தியக்ஷமாய் காணலாயிருக்கும்.

நான்காவது—சங்கராசாரியர் (తత్వవిజ్ఞానేవిష్ణుపురాణాద్జగద్వందం) என்ற சுலோகத்தில், வேதத்தினுடைய உண்மையை அறிய வேண்டியவர்கள் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தாலே அறியக்கடவீர்களென்று சொன்னபடியே, ஷை புராணத்தில் ஸ்ரீபராசரபகவான் (యథాసర్వేషుదేవేషునాస్తినారాయణాత్పరః। తథాసర్వేషుమంత్రేషు నమంత్రోష్టాక్షరాత్పరః) என்றதில் எப்படி ஸமஸ்த தேவர்களுக்குள்ளே நாராயணனைவிட பரனில்லையோ, அப்படியே ஸமஸ்த மந்திரங்களில் அஷ்டாக்ஷரிக்குமிஞ்சின மந்திர மில்லையென்று, பிரமாணம்பண்ணிச் சொன்னார்.

ஐந்தாவது—விஷ்ணு மாயையைக் கடந்த சுகயோகீந்திரர் தப்தசிம்ஹாஸனத்தில் எழுந்தருளிருந்து, பரீக்ஷித் மஹாராஜனுக்கு தெளிந்தஞானம் உண்டாகும்படி தீர்க்க சத்திரயாகத்தில் பிருகுமகாரிஷி திரிமூர்த்திகளுடைய குணங்களை பரீக்ஷித்து, ஷை ருஷிகள் முன்பாக வேதத்தில் சொன்னபடியே பிரமாணம் பண்ணிச் சொன்னதாய் (ఆలోడ్యసర్వశాస్త్రాణి విచార్యచపునఃపునః। ఇదమేకంసునిష్పన్నం ధ్యేయోనారాయణస్సదా) என்றதில் ஸமஸ்த வேதங்களையும் மறுபடியும் விசாரணைபண்ணிப் பார்க்குமளவில், சுருதியில் (காரணவஸ்து எவனோ அவனே தியானத்துக்குரியவனென்று சொன்னது) நாராயணனேயென்று பிரமாணம் பண்ணதாய் சுகர் பரீக்ஷித்துவுக் கருளிச் செய்தார்.

ஆறுவது—சிவன் காசியில் உமைக்குப் பிரமாணம் பண்ணிச் சொன்னதாவது (శ్రీరామరామరామేతి ఏతత్తారకంసముచ్యతే। అతస్త్వంజానకీనాథం పరబ్రహ్మవినిశ్చితం) வேதத்தில் சொன்ன அர்த்தத்தை பார்வதியே இப்போது உனக்குச் சொல்லுகிறதாவது, ஜானகிநாதன் பரப்பிரம்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றதெதுவோ, அதைத்தான் உனக்குபதேசிக்கிறேன் என்று சிவன் பிரமாணம் பண்ணிச்சொன்னார்

ஏழாவது—போதாயனர் அறுபதினாயிரம் பெயர்களாகிய தம்முடைய சிஷ்யர்களுக்கும்மற்றும் உலகத்திலுள்ள பண்டிதபாமரர்களுக்கும் தெளிந்த ஞானமுண்டாகத்தக்கதாய் வேதங்களில், தாம்விசாரித்து நிச்சயித்திருக்கிற அர்த்தத்தை, பிரமாண பூர்வகமாய் தெரிவிக்கிறார். அதாவது.

எட்டாவது—(బోధాయనే) போதாயனவிர்த்தியில் (నారాయణసమోనాస్య స్సర్వలోకేషువిద్యతే। తస్మాదభ్యధికఃకశ్చిత్ క్వాపినాస్తిహికేశవాత్) என்றதில் ஸ்ரீமந்நாராயணனுக்கு அதிகமானவர்களும் ஸமானமானவர்களுமில்லையென்று, ஸமஸ்த வேதங்களிலும் சொல்லப்பட்டவற்றை ஸமஸ்த லோகத்தாரும் அறிந்திருக்கிறார்கள். ஆகையினாலே கேசவனைவிட வேறே அதிகமானவர்கள் ஒருவருமில்லையென்றும் (మనుష్యాణాంపరోవిప్రః విప్రాణాంపరమోయతిః। బ్రహ్మేశంద్రాదిదేవానాం దేవోనారాయణఃపరః) மனுஷியர்களில் சிறந்தவர்கள் பிராமணர்களைப்போலேயும், விப்ரர்களுக்குள்ளே சிறந்தவர்கள் எதிகளைப்போலேயும், பிரம்மருத்திர இந்திராதி தேவர்களில் ஸ்ரீமந்நாராயணன் பரனென்று அறியவேண்டியது, (విబుధేభ్యఃపరశ్శక్రః శక్రాత్పరతరశ్శివః। శివాత్పరతరోబ్రహ్మా బ్రహ్మణఃపరమోహరిః) தேவர்களுக்குள்ளே இந்திரன் சிறந்தவன், அவனைவிட சிவன் சிறந்தவன், அவனைவிட பிரமன் சிறந்தவன், பிரமனைவிட விஷ்ணுவேபரனென்றும், (విష్ణుఃపరమఇత్యాద్యా ఋచోబహువిధోజగుః। నారాయణఃపరమితి యజుర్వేదేచపఠ్యతే। వాసుదేవఃపరయితి సామవేదేచగీయతే। నారాయణఃపరఃసత్యా స్సహోపనిషది స్మృతః) விஷ்ணுவேபரனென்று ருக்வேதத்தில் பலவிடங்களிலும் சொல்லியிருக்கின்றது. நாராயணன் பரனென்று எசுர்வேதத்தில் படிக்கப்பட்டிருக்கின்றது. வாசுதேவன் பரனென்று சாமவேதத்தில் கானம்பண்ணப்பட்டிருக்கின்றது. நாராயணன் பரனென்றும் ஸத்தியமென்றும் மஹோபநிஷத்தில் இரட்டித்துச் சொல்லப்பட்டிருக்கின்றதென்றும் ஸத்தியம்பண்ணி யிருக்கிறார்.



ஒன்பதாவது—வியாசருக்கு-கை-ஸ்தம்பித்தது யதார்த்தமாகில் இப்போது விஷ்ணு பரனென்று சிவன் முதலானோர் சொன்னவர்களுக்கெல்லாம், கையும்-வாயும்-ஸ்தம்பித்துப் போகவேண்டுமல்லவோ, ஆகையால் சைவர்கள் பொறுமையினாலே வேதங்களுக்கு விருத்தமாகச்சொன்ன கக்ஷி நிரசிக்கப்பட்டது.

## இருபதாவது

# இடபமாய்த்தாங்கினகட்சி.

நாலுவேதப்பொருளினற்கடலைக்கடைந்தடியார்க்
கேலுமமுதுணவளித்தேயிறப்பொடுவெம்பிறப்பகற்றப்
பாலுவரிதனில்வளரும்பரந்தாமனாரணனைப்
போலுதவுஞ்சடகோபன்பொன்னடியின்னடிபணிவாம். (க)

(இ-ள்.) நாலு வேதப்பொருளின் - நான்கு வேதங்களின் அர்த்தமாகிய, நல் கடலைக் கடைந்து - நல்ல சமுத்ரத்தை மதித்து, அடியார்க்கு - தொண்டர்களுக்கு, ஏலும் - பொருந்திய, அமுது - ஸாராம்ஸமாகிய அம்ருதத்தை, உண்ண அளித்து - உண்ணக் கொடுத்து, இறப்பொடு - மரணத்துடன், வெம் பிறப்பு அகற்ற - வெவ்விய ஜன்மத்தையும் நீக்கியருள, பால் உவரிதனில் - க்ஷீராப்தியில், வளரும் - திருக்கண் வளர்கின்ற, பரந்தாமன் - பரந்தாமனாகிய, நாரணனைப்போல - ஸ்ரீமந் நாராயணனைப்போல, உதவும் - உதவிய, சடகோபன் - நம்மாழ்வாருடைய, பொன்னடி - பொன்னடியாகிய யதிராஜரது, இன் அடி பணிவாம் - இனிய திருவடி ஸ்த்தாநமாகிய கூரேசரை வணங்குவோம், (யாம்) எ-று.

எதிராஜன்றிருவடியேயாவருக்குங்கதியதனா
லெதிராசன்மமங்களினியெக்காலுமெனும்பெரிய
முதிராசன்பரகதியைமொழிந்தருள்கூரத்திறைய
முதிராசனிதிராசன்முன்னிருந்தின்னவையுரைப்பான். (உ)

(இ-ள்.) எதிராஜன் திருவடியே - ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவடியே, யாவருக்கும் கதி - எல்லாருக்கும் அடைக்கலம், அதனால் - அந்தத் திருவடியாஸ்ரயணத்தால், இனி எக்காலும் - இனி எந்தக்காலத்திலும், சன்மங்கள் எதிரா - பிறவிகள் உளவாகா, என்னும் - என்று சொல்லுகிற, பெரிய முதிர் இராசன் - பெரிய முதிய அரசன், பரகதியை - பரகதியின் நிலையை, மொழிந்தருள் - சொல்லி யருள்கின்ற, கூரத்து இறை - திருக்கூராதிபன், அ - அந்த, முதிர் ஆசன் - மிகுந்த குற்றத்தை யுடையவனாகிய, நிதி ராசன் - செல்வத்தையுடைய சோழனுக்கு, முன் இருந்து - எதிரிலிருந்து, இன்னவை உரைப்பான் - இவைகளைச் சொல்லுவான், எ-று.



வேதமொழியிருடியர்தம்மெய்மொழிநற்பலகலையின்
கீதமொழியமார்மொழிகேசவனேபரமெனலாற்
போதமொழிந்நீருரைக்கும்பொருட்பரமன்றெனமனமு
நாதமொழிகடந்தொளிருநாரணனேபரமென்றான். (ங)

(இ-ள்.) வேதமொழி - வேதவாச்யங்களும், இருடியர் தம் மெய் மொழி - ருஷிகளுடைய உண்மையாகிய வாக்யங்களும், நல் பல கலையின் - நன்மையைத் தருகின்ற பல கலைகளின், கீத மொழி - கீதா வாக்யங்களும், அமரர் மொழி - தேவ வாக்யங்களும், கேசவனே - திருமாலே, பரம் எனலால் - பரவஸ்துவென்று சொல்லுதலால், போதம் ஒழிந்நீர் உரைக்கும் - ஞானமில்லாதவர்களாகிய நீங்கள் சொல்லுகின்ற, பொருள் - சிவனாகிய பொருள், பரம் அன்று என - பரவஸ்து அல்லவென்று சொல்லி, மனமும் - மநஸ்ஸையும், நாதம் மொழி - ஓசையையுடைய சொல்லையும், கடந்து ஒளிரும் - கடந்து விளங்குகின்ற, நாரணனே - திருமாலே, பரம் என்றான் - பரவஸ்துவென்று சொன்னார், எ-று.

சொல்லியவிம்மொழிகேட்டுத்துண்ணெனப்புண்ணிடைக்கோலிட்
டல்லலுழற்றுதல்போலவகஞ்சினத்தச்சைவர்குழாம்
புல்லுமவைதனின்வல்லபுலவர்களுமமைச்சர்களுங்
கல்லெனவங்கார்த்திரைத்துக்கட்டுரைசொல்லுதலானார். (௪)

(இ-ள்.) சொல்லிய - கூரேசர் சொல்லிய, இம் மொழி கேட்டு - இந்த வார்த்தையைக் கேட்டு, துண்ணென - துணுக்கென்று (பயந்து), புண் இடை - இரணத்தில், கோல் இட்டு - கோலினாற் குத்தி, அல்லல் உழற்றுதல்போல - துன்பம் செய்தல்போல வருந்தி, அகம் சினத்து - மன வைரங்கொண்டு, சைவர்குழாம் புல்லும் அவைதன்னில் - சைவர்களுடைய சமூஹங்கள் நெருங்கிய சபையில், வல்ல புலவர்களும் - வல்லவர்களாகிய வித்வான்களும், அமைச்சர்களும் - மந்த்ரிமார்களும், கல்லென - கல்லென்று, அங்கு ஆர்த்து - அவ்விடத்து ஆரவாரித்து, அதிர்த்து - உரப்பி, கட்டுரை சொல்லுதல் ஆனார் - உறுதிவார்த்தைகளைச் சொல்லலுற்றார்கள், எ-று.

திரிபுரவிசயம்புரியச்சென்றிடுமுற்காலமதி
லரியிடபவுருவாகியாலமிடற்றனைச்சுமந்த
பரிசதனாலெஞ்சிவனேபரமெனவச்சைவர்சொலும்
துரிசறுத்துமறுத்துரைப்பான்றூயபுகழ்க்கூரேசன். (ரு)

(இ-ள்.) திரிபுரவிசயம் புரிய - த்ரிபுரவிஜயம் செய்யும்பொருட்டு, சென்றிடும் முற்காலமதில் - போன பூர்வகாலத்தில், அரி - திருமால், இடபவுரு ஆகி - ருஷப ரூபமாகி, ஆலமிடற்றனைச் சுமந்த பரிசதனால் - விஷகண்டனாகிய சிவபெருமானைத் தாங்கின தன்மையால், எம் சிவனே - எமது சிவபெருமானே, பரம் என - பரவஸ்துவென்று, அச் சைவர் சொலும் - அந்தச்

சைவர் சொல்லிய, துரிசு அறுத்து - குற்றத்தைக் கண்டித்து, மறுத்து உரைப்பான் - (அவர்கள் சொன்ன கட்சியைத்) தடுத்துச் சொல்வாராயினர், தூய புகழ் கூரேசன் - பரிசுத்தமான புகழுடைய கூராதிபர், எ-று.

திரிபுரவிசயத்திற்றேவர்களெல்லாமோர்
மருவியவிடமுற்றேவன்சமர்புரிபோதிற்
றரைமிகுபொறையுற்றேதாழ்தலினதலத்தே
விரவியவிரதத்தைவிரைமலர்துளவத்தோன். (௬)

(இ-ள்.) திரிபுரவிசயத்தில் - த்ரிபுரவிஜயகாலத்தில், தேவர்களெல்லாம் - தேவர்கள் யாவரும், மருவிய - பொருந்திய, ஓர் இடம் உற்று - ஒரு இடத்தைச் சேர்ந்து, வன் சமர் புரிபோதில் - வலிய யுத்தத்தைச் செய்யுங்காலத்தில், தரைமிகு பொறை உற்று - பூமிதேவியானவள் மிகுந்த பாரத்தைத் தாங்கி, தாழ்தலின் - அழுந்தினதனால், அதலத்தே - அதலலோகத்தில், விரவிய - பொருந்திய, அத்தை - அந்தப் பூமியை, விரைமலர் துளவத்தோன் - வாசனையோடு மலர்கின்ற துளசிமாலையை யணிந்தவனாகிய திருமாலின், எ-று.

எழில்பெறுகலையுற்றேயிலகியகபிலப்பேர்
மொழிமுனியவணுற்றேமுளரியைநிகர்பெற்ற
செழுமைகொள்கையினொற்றைத்திறல்விரலிடையேற்றி
வழுவியபுவிநிற்கும்வகையருளினனப்பால். [௭]

(இ-ள்.) எழில்பெறு - அழகைக்கொண்ட, கலை உற்று - அம்சத்தைப் பொருந்தி, இலகிய - விளங்கிய, கபிலப் பேர் மொழி - கபிலன் என்னும் பேரால் சொல்லப்படுகிற, முனி - முநிவன், அவண் உற்று - அவ்விடத்து வந்து, முளரியை நிகர்பெற்ற - தாமரைமலரைச் சமானமாகப்பெற்ற, செழுமை கொள் - செழுமையைக்கொண்ட, கையின் - கையிலுள்ள, ஒற்றை - ஒன்றாகிய, திறல் - வலிமையுடைய, விரலிடை ஏற்றி - விரலினால் அதைப் புடைத்து, வழுவிய புவி - நிலைதவறின பூமியானது, நிற்கும் வகை - நிலை நிற்கும் வண்ணம், அருளினன் - அருள் செய்தான், அப்பால் - அதின்பிறகு, எ-று.

நிகழ்புவிமிசையுற்றேதிரிபுராடலுற்ற
மிகவடலினரப்பால்வெருவினரகலுற்றார்
புகுபொழுதினிலப்பார்பொறைதனிலிடியச்சீர்
தருமுனியருள்வைத்தான்றரையதினிலைநிற்க. [௮]

(இ-ள்.) நிகழ் புவிமிசை உற்று - விளங்குகின்ற பூமியின்மேற் பொருந்தி, திரிபுரர் அடல் உற்ற மிக அடலினர் - த்ரிபுரவாசிகள் வலிய யுத்தஞ்செய்ய லுற்ற மிகுந்த வலியுடையவராய், அப்பால் - அப்புறம், வெருவினர் அகலுற்றார் - பயந்து ஓடலுற்றார்களாகி, புகு பொழுதினில் - வந்தபோதில், அப்பார் - அந்தப் பூமியானது, பொறைதனில் இடிய - பாரத்தால் இடிந்து



போக, சீர் தரு முனி - சிறப்புப்பொருந்திய முநிவன், தரை அதின் நிலை நிற்க - பூமியானது அதின் நிலையில் நிற்கும்படி, அருள் வைத்தான் - அருள் செய்தான் எ-று.

மற்றவர்பொருபோதின்மகியினுமிடிவுற்ற
தெற்றவுமகியப்பாலிடியவுமிதனிற்போர்
மற்றிரிபுரர்வெற்றிமறமறிகிலர்மற்றென்
றற்றிடுவகைமாயனருடிருவுளமுற்றான். (௯)

(இ-ள்.) மற்று அவர் பொரு போதில் - பின்னும் அவர் போர் செய்யுங் காலத்தில், மகி - பூமியானது, பின்னும் இடிவு உற்றது - மீட்டும் இடிந்து போயிற்று, எற்றவும் - முநிவன் எதியவும், மகி அப்பால் இடியவும் - பூமி பின்னும் இடியவும், இதனின் - இதனால், மல் திரிபுரர் - வளமாகிய த்ரிபுரவாசிகள், போர் வெற்றி மறம் அறிகிலர் என்று - போர்புரிதலும் வெற்றியடையுமெண்ணும் என்னும் கோவமும் கெடாதவர்களா யிருக்கிறார்களென்று, அற்றிடுவகை - அவர்கள் அற்றொழியும்வகை, மாயன் - திருமாலானவர், திருவுளம் - தம் திருவுளத்தில், அருள் உற்றான் - அருள்செய்தார், (சங்கல்பித்தார்) எ-று.

முக்கணவனுவப்பமுன்றருவரமத்தை
யக்கணநிலைநிற்றற்கருள்பொழிதிருமாலும்
புக்கதிலொடுதேரைப்புரையறமுதுகிற்கொண்
டக்கொடியரைவெற்றியரனுறுதல்பொருட்டாய் (௰)

(இ-ள்.) முக்கண்ணவன் உவப்ப - மூன்றுகண்களையுடைய சிவன் சந்தோஷிக்கும்படி, முன் தரு வரம் அத்தை - முன்னே கொடுத்த வரத்தை, அக்கணம் - அந்தக்ஷணத்தில், நிலைநிற்றற்கு - நிலைபெறுவித்தற்பொருட்டு, அருள் பொழி திருமாலும் - கருணையைச் சொரிகின்ற திருமாலும், புக்கதிலொடுதேரை - பாதாளலோகத்தில் விழுந்த பூமியாகிய தேரை, புரை அற - குற்றமற, முதுகில் கொண்டு - முதுகில் தாங்கிக்கொண்டு, அக்கொடியரை - அந்தத் துராத்மாக்களை, அரன் - சிவன், வெற்றி உறுதல் பொருட்டாய் - வெற்றிகொள்ளும் பொருட்டு, எ-று.

தேவர்கணிருமாணத்தேரினிரட்டித்தாய்
மேவியபெரிதுற்றவிறலிடபமதாகித்
தாவியவிரதத்தைத்தன்முதுகிடைவைத்தே
பூவதுநிலைநிற்கப்பொறையதுமுதுகுற்றான். (௰௧)

(இ-ள்.) தேவர்கள் நிருமாணத்தேரின் - தேவர்களால் நிர்மிக்கப்பட்ட தேரினும், இரட்டித்தாய் - இரட்டிப்பாய், மேவிய - பொருந்திய, பெரிது உற்ற - மிகப் பெரியதான, விறல் - வெற்றியையுடைய, இடபமது ஆகி - ருஷபமாகி, தாவிய இரதத்தை - பாய்ந்த தேரை, தன் முதுகிடை வைத்து -

தனது முதுகினிடத்து வைத்து, பூவது நிலைநிற்க - பூமியானது நிலைநிற்கும்படி, பொறையது முதுகு உற்றான் - பாரத்தை முதுகிற்கொண்டார், எ-று.

அத்தகையிடபப்பேரவதரமதுவுற்றே
சித்தமகிழ்வொடத்தேர்திண்முதுகுறவப்பால்
மத்தமுமதிசூடும்வார்சடையவனைப்போர்
தத்திலைபுரியென்றான்சங்கரனதுசெய்தான். (௯௨)

(இ-ள்.) அத்தகை - அத்தன்மையாகிய, இடபப் பேர் அவதரமது உற்று - பெரிய ருஷபரூபத்தை யடைந்து, சித்தமகிழ்வொடு - மனமகிழ்ச்சியுடன், அத்தேர் - அந்த ரதமானது, திண் முதுகு உற - வலிய முதுகிற் பொருந்த, அப்பால் - அதின்பிறகு, மத்தமும் - ஊமத்தமலரையும், மதி - சந்த்ரகண்டத்தையும், சூடும் - தரிக்கின்ற, வார்சடை யவனை - நீண்ட சடையை யுடையவனாகிய சிவனை நோக்கி, தத்து இல்லை - உனக்கு ஒருவிபத்தும் இல்லை, போர்புரி என்றான் - போர் செய்யென்றார், சங்கரன் - (அதைக் கேட்ட) சிவனும், அது செய்தான் - அந்தப்போரைச்செய்தான், எ-று.

அப்படிதிருமாலினருள்வழிசெயலாலே
மைப்படுகளன்முன்னாண்மருவுதிரிபுரத்தை
செப்பியவிசயத்தைச்செய்தனனிதுவல்லா
தெப்படிசிவன்வென்றானிசைமினிவைக்கென்றான். (௯௩)

(இ-ள்.) அப்படி - அந்தப்ரகாரம், திருமாலின் - லக்ஷ்மீநாதனது, அருள்வழி செயலாலே - கருணையின் வழியாய்ச் செய்ததினாலே, மைப்படுகளன் - கருநிறம்பொருந்திய கண்டத்தையுடைய சிவன், முன் நாள் - பூர்வகாலத்தில், மருவுதிரிபுரத்தை - பொருந்திய த்ரிபுரங்களை, செப்பிய விஜயத்தைச் செய்தனன் - நீங்கள் சொல்லியபடி வென்றான், இது அல்லாது - இந்தவழியினாலன்றி, எப்படி சிவன் வென்றான் - சிவன் எப்படி த்ரிபுரங்களை ஜயித்தான், இவைக்கு - இந்தப்ரஸ்நைகளுக்கு, இசைமின் - உத்தரஞ் சொல்லுங்கள், என்றான் - என்று சொன்னார் கூரேசர், எ-று.

எசுருவெனும்வேதத்தினுமுயர்பதுமத்தும்
வசையறுமுத்தரகூர்மத்தினுமத்திரிசொல்
லிசைசுமிருதிதனில்விட்டுணுதருமத்தினிலுந்
தசவுருவத்திருமாறகையிதெனத்தெளிவீர். (௯௪)

(இ-ள்.) எசுரு என்னும் வேதத்தினும் - யஜுர்வேதத்திலும், உயர் பதுமத்தும் - உயர்ந்த பாத்மத்திலும், வசை அறும் உத்தரகூர்மத்தினும் - பழிப்பற்ற உத்தரகூர்மத்திலும், அத்திரி சொல் - அத்திரி முனிவர் சொல்லிய, இசை - புகழையுடைய, சுமிருதி தன்னில் - ஸ்ம்ருதியில், விட்டுணு தருமத்தினிலும் - ஸ்ரீ விஷ்ணுதர்மத்திலும், தசவுருவத் திருமால் - தசாவதாரங்களை



யுடைய திருமாலின், தகை இது எனத் தெளிவீர் - பெருமையிதுவென்று தெளியக்கடவீர், எ-று.

இவையலதுளகேளீரெனவிவைபலநூலி
னவையறுபொருளென்றேநனுகவுனசுலோக
மவைபலபலவோதியரசொடுபுலவோர்சேர்
சவைதனிலுயர்கூரத்தகையவன்வகைசொல்வான். (௯௫)

(இ-ள்.) இவை அல்லது - இவையன்றி, உள - இன்னமும் உள்ளன, கேளீர் - கேளுங்கள், என - என்று, இவை - இவைகள், பல நூலின் - பல சாஸ்த்ரங்களின், நவை அறு - குற்றமற்ற, பொருள் என்று - அர்த்தமென்று, நனுக உனசுலோகம் அவை - பொருந்தச் சொல்லிய ஸ்லோகங்களாகிய அவைகள், பல பல ஓதி - மிகப்பலவாகச் சொல்லி, அரசொடு - சோழராஜனோடு, புலவோர்சேர் - வித்வான்கள் கூடிய, சவைதனில் - சபையில், உயர் கூரத்தகையவன் - உயர்ந்த திருக்கூரத்தையுடையவராகிய கூரேசர், வகைசொல்வான் - வகுத்துச் சொல்லுவார், எ-று.

தாழ்வுவருங்காலேதாங்கிடினதனாலே
தாழ்வுவருங்கொல்லோதகைபெறுமுலகெல்லாம்
நீழ்பிடரினில்வைத்தேநின்றிடுமொருகூர்மன்
வாழியிவ்வுலகுக்கோர்வாகனமெனலாமோ. (௯௬)

(இ-ள்.) தாழ்வுவருங்காலே - ஒருவனுக்குத்தாழ்வுவருங்காலத்தில், தாங்கிடின் - (அத்தாழ்வை நீக்கிக்காக்கும்பொருட்டு அவனைத்) தாங்கினால், அதனாலே - அப்படித் தாங்குவதனால், தாழ்வு வரும் கொல்லோ - (தாங்கினவனுக்குத்) தாழ்வுவருமோ, தகைபெறும் உலகு எல்லாம் - பெருமைபெற்ற வுலகையெல்லாம், நீழ் பிடரினில் வைத்து - தனது பெரிய பிடரின்மேல் வைத்து, நின்றிடும் ஒரு கூர்மன் - ஒப்பற்ற கூர்மாவதாரமெடுத்த திருமால், இவ்வுலகுக்கு - இந்த வுலகத்துக்கு, ஓர் வாகனம் எனல் ஆமோ - ஒரு வாஹநமென்று சொல்லுதல் கூடுமோ, எ-று.

அவ்வகையதுவாயினருட்டிருமால்கலையாந்
திவ்வியவிடபஞ்சொற்சிவனுறுவாகனமோ
மெவ்வகையுலகத்தோரெவருளுமுறைமாயன்
செவ்வியவுருவத்தேசெறிகிலரெவர்மாதோ. (௯௭)

(இ-ள்.) அவ்வகை - அந்தவகையானது, அது ஆயின் - அத்தன்மைத்தானால், அருள் திருமால் கலை ஆம் - கருணையையுடைய திருமாலின் அம்சமாகிய, திவ்விய இடபம் - திவ்ய ருஷபமானது, சொல் - உங்களால் புகழ்ந்து சொல்லப்பட்ட, சிவன் உறுவாகனமோ - சிவனுக்குப் பொருந்திய வாஹநமோ, எவ்வகை உலகத்தோர் - எவ்வகை உலகத்தோராகிய, எவர்

உள்ளும் - எல்லாருள்ளும், உறை - வியாபித்து வாழ்கின்ற, மாயன் - திருமாலின், செவ்விய உருவத்தே - செவ்விய ரூபத்தின்கண்ணே, தெரிகிலர் - அடங்காதவர், எவர் - யாவர், (ஒருவருமில்லை) எ-று.

நூலவடிவதாகச்சொன்னுமதொருவாதுக்
கேலிதுசூக்குமமோடிசைபெறுகாரணமுஞ்
சாலவுரைத்திடுமித்தன்மையையுய்த்துணரீர்
போலுமுரைத்திடுமிப்புரையறுமுரைகேளீர். (௰அ)

(இ-ள்.) நூல்வடிவதாக - ஸ்தூலரூபமாக, சொல் - பேசுகின்ற, நுமது ஒரு வாதுக்கு - உங்கள் ஒப்பற்ற வாதத்துக்கு, ஏல் இது - ஏன்ற இது, சூக்குமமோடு - சூக்ஷ்ம ரூபமாகிய சொல்லாதலோடு, இசைபெறு காரணமும் - புகழ்பெற்ற காரணரூபமாகவுமிருக்கும், சால உரைத்திடும் - மிகுதியாக நானெடுத்துச்சொல்லுகின்ற, இத்தன்மையை உய்த்துணரீர்போலும் - இந்த விஷயத்தை யூகித்தறியீர்கள்போலும், (நீங்கள் யூகித்தறியாவிடினும்) உரைத்திடும் - நான் சொல்லுகின்ற, இப்புரை அறும் உரை கேளீர் - இந்தக்குற்றமற்ற சொல்லைக் கேளுங்கள், எ-று.

எந்திருமால்கலையாமிராமாவதாரத்திற்
சந்திரமௌலியெனுஞ்சங்கரனதுகலையாய்
வந்திடுமநுமானைவாகனமாக்கொண்டார்
சிந்தையினதுதேரிற்சிவனரிவாகனமோ. (௰௯)

(இ-ள்.) எம் திருமால் கலை ஆம் - எமது திருமாலின் அம்சமாகிய, இராமவதாரத்தில் - ஸ்ரீ ராமாவதாரத்தில், சந்திரமௌலி என்னும் - சந்திரசேகரன் என்கிற, சங்கரனது கலை ஆய் வந்திடும் - சிவனது அம்சமாகி அவதரித்த, அநுமானை - ஆஞ்சநேயனை, வாகனமாக்கொண்டார் - வாகனமாகத் திருமால் கொண்டார், சிந்தையின் அது தேரின் - மனத்தினால் அதை யாராய்ந்தால், சிவன் அரி வாகனமோ - சிவன் அந்த அரிக்கு வாகனமோ, எ-று.

நண்ணரன்வரலாறுநாரணனாணையினும்
பண்ணியவுருவாகும்பங்கயநிகர்விழிமால்
வண்ணமதவ்விண்ணோர்வார்சடையனையெண்ணா
தெண்ணியவருள்செய்வானிடபவுருவெடுத்தான். (உ௰)

(இ-ள்.) நண் அரன் வரலாறு - பொருந்திய சிவனது வரலாற்றை யாராய்ந்தால், நாரணன் ஆணையினும் - திருமாலின் ஆஜ்ஞையால், பண்ணிய உரு ஆகும் - செய்த அவதாரமாகும், பங்கயம் நிகர் விழிமால் - தாமரைமலர் போன்ற கண்களையுடைய திருமாலின், வண்ணம் அது - தன்மை, அவ்விண்ணோர் - அந்தத் தேவர்கள், வார் சடையனை எண்ணாது - நீண்ட சடையையுடையவனாகிய சிவனை அவமதிக்காமல், எண்ணினன் - ஆலோசித்தவனாய், அருள் செய்வான் - கருணை செய்யும்பொருட்டு, இடப உரு எடுத்தான் - ருஷப ரூபத்தைக் கொண்டான், எ-று.



வேறு.

ஆதிதேவன்பரப்பிரமனழிவிலாதானாரணங்க
ளோதிமுடியும்பொருண்முடிவிலொளிர்வோன்றிருமாலாதலினாற்
போதிலயனிந்திரனரன்சீர்ப்புத்தேண்முனிவர்முதலானோர்க்
கியாதோரிடுக்கண்வருங்காலத்திடர்தீர்த்தருளும்பரிசதனால். (உக)

(இ-ள்.) ஆதி தேவன் - ஆதி தேவனும், பரப்பிரமன் - பரப்ரஹ்மமானவனும், அழிவு இல்லாதான் - அழிவற்றவனும், ஆரணங்கள் ஓதி முடியும் - வேதங்கள் சொல்லி முடிக்கின்ற, பொருள் முடிவில் - அர்த்தத்தின் முடிவில், ஒளிர்வோன் - விளங்குவோனும், திருமால் ஆதலினால் - திருமாலே யாகையால், போதில் அயன் - தாமரைப்பூவிலிருக்கிற ப்ரஹ்மாவும், இந்திரன் - இந்திரனும், அரன் - சிவனும், சீர்ப்புத்தேள் முனிவர் - சிறப்புள்ள தெய்விகமமைந்த முனிவரும், முதலானோர்க்கு - முதலானவர்களுக்கு, யாதோர் இடுக்கண் வரும் காலத்து - யாதொரு துன்பமுண்டாகுங்காலத்தில், இடர் தீர்த்தருளும் பரிசதனால் - (அவர்களுடைய) துன்பத்தை நீக்கியருளுந் தன்மையால், எ-று.

அன்னவனுக்கோரிழிவுரைக்குமாறுமுளதோவதுவன்றித்
தன்னுகதிரோனொன்றாகித்தோன்றுகினும்பற்பலகடத்தின்
மன்னுபுனலிற்பலவாகிவதிந்தென்னும்வகைசனிப்ப
தென்னலாகுந்திருமால்செய்யெண்ணிலனந்தமவதாரம். (உஉ)

(இ-ள்.) அன்னவனுக்கு - அத்தன்மையான திருமாலுக்கு, ஓர் இழிவு உரைக்கும் ஆறும் உளதோ - ஒரு தாழ்வு சொல்லுதற்குரியவழியுமுண்டோ, அது அன்றி - அதுவல்லாமல், தன்னு கதிரோன் - நெருங்கிய கிரணங்களையுடையோனாகிய சூரியன், ஒன்றாகித் தோன்றுகினும் - ஒருபொருளாகிக் காணப்பட்டாலும், பற்பல கடத்தின் மன்னு - அநேகமாகிய குடங்களில் உள்ள, புனலில் - நீரில், பலவாகி வதிந்தென்னும் வகை - அநேகமாகிக் காணப்பட்டாற்போல, சனிப்பது என்னலாகும் திருமால் செய் - பிறப்பதென்று சொல்லலாம்படியான திருமால்செய்த, எண் இல் அநந்தம் அவதாரம் - எண்ணற்ற அநேக அவதாரங்கள், எ-று.

இதனாலவனுக்கெந்நாளுமின்பத்துன்பமில்லையில்லை [வார்
சிதனாலவன்றன்செய்திதனைத்தெளிந்தோரொளியொன்றெனத்தெளி
மதனாலெவருமறிவரியமாயன்மாயையினிலடைந்திர்
அதனாலுங்களுரைவாதுக்குறையும்பொருள்வேறிலையுளவே. (உ௩)

(இ-ள்.) இதனால் - இந்த அவதாரவிஷயத்தால், அவனுக்கு - அந்தத் திருமாலுக்கு, எந்நாளும் - எக்காலத்தும், இன்பத்துன்பம் இல்லை இல்லை - சுகதுக்கங்களில்லையில்லை, சிதனால் - ஞானத்தினால், அவன் தன் செய்திதனை - அவனது செய்கையை, தெளிந்தோர் - தெளிந்தறிந்தோர்கள், ஒளி ஒன்று எனத்தெளிவார் - (அவனது) தேஜப்ரபாவம் ஒன்றேயென்று தெளி

வார்கள், மதனுல் எவரும் அறிவு அரிய - அஹங்காரத்தினுல் யாவரும் அறிதல் அருமையாகிய, மாயன் - மாயோனது, மாயையினில் அடைந்தீர் - மாயை யில் அகப்பட்டீர்கள், அதனுல் - அந்தஹேதுவால், உங்கள் உரை - உங்கள் சொல், வாதுக்கு அறையும்பொருள் - வாதத்தின்பொருட்டுச் சொல்லும் பொருளுள்ளதே, வேறு எவை உள - வேறு ஹேதுக்கள்யாவையுள்ளன, எ-று.

அகிலவுலகங்களுஞ்சுமக்குமனந்தனுலகர்க்கூர்தியதாய்ப்
புகலுமனந்தன்றனக்கூர்திபொருவிலாதிகூர்மமதாய்
மகிழுங்கூர்மத்தனக்கூர்திமாயன்விசுவரூபமதாய்த்
திகழ்மாற்கரனூர்தியதாகச்செப்பினிதுவுமுளதாமால். (உச)

(இ-ள்.) அகில உலகங்களும் சுமக்கும் - எல்லாவுலகங்களையுந் தாங்கு கின்ற, அநந்தன் - ஆதிசேஷன், உலகர்க்கு ஊர்தியதாய் - லோகத்தார்க்கு வாஹநமாய், புகலும் அநந்தன் தனக்கு - சொல்லப்பட்ட ஆதிசேஷனுக்கு, பொருவு இல் ஆதி கூர்மம் - சமானமில்லாத ஆதி கூர்மம், ஊர்தியதாய் - வாஹநமாய், மகிழும் கூர்மம் தனக்கு - களிக்கின்ற ஆதி கூர்மத்துக்கு, மாயன் விசுவரூபம் - திருமாலின் விஸ்வரூபம், ஊர்தியதாய் - வாஹநமாய், திகழ் மாற்கு - விளங்குகின்ற திருமாலுக்கு, அரன் ஊர்தியதாக - சிவன் வாஹநமாக, செப்பின் - சொன்னுல், இதுவும் உளது ஆம் - இந்த விஷய மும் உள்ளதேயாம், எ-று.

பள்ளப்பழனத்திருக்கூரப்பதியோனிவையமறுத்தமுது
வெள்ளத்தாலிலறிதுயின்மான்மெய்ம்மைப்பரமென்றருள்பொருளை
யுள்ளத்துணர்வோர்விரித்துரைப்போரோங்குபெருஞ்செல்வமுந்து
வள்ளற்றிருமாலடியர்குழாம்வைகும்பரமபதமடைவார். [ய்த்து

(இ-ள்.) பள்ளம் பழனம் - ஆழமாகிய வயல்கள் சூழ்ந்த, திருக்கூரப் பதியோன் - திருக்கூரமென்கிற ஸ்தலத்தை யுடையவராகிய கூரேசர், இவைய மறுத்து - இந்தப்ரகாரங்களாகச் சைவரைக் கண்டித்து, அமுது வெள்ளத்து - க்ஷீராப்தியில், ஆலில் - ஆலிலையின்மீது, அறி துயில் - யோக நித்ரைசெய்கின்ற, மால் - திருமாலே, மெய்ம்மை பரம் என்று - உண்மையாகிய பரவஸ்துவென்று, அருள் பொருளை - அருளிச்செய்த அர்த் தத்தை, உள்ளத்து உணர்வோர் - மனத்தினுல் அறிவோரும், விரித்து உரைப்போர் - விஸ்தரித்துச் சொல்வோரும், ஓங்கு பெருஞ்செல்வமும் துய்த்து - நாளுக்குநாள் அபி வ்ருத்தியடைகின்ற மஹா ஐஸ்வர்யத்தையும் அநுபவித்து, வள்ளல் திருமால் - பரமோதார சீலனுகிய திருமாலின், அடியர் குழாம் வைகும் - பக்த ஸமூஹங்கள் தங்குகின்ற, பரமபதம் - திருநாட்டை, அடைவார் - சேர்வார், எ-று.

இருபதாவது இடபமாய்த்தாங்கினகட்டி, முற்றிற்று.

ஆ. திருவிருத்தம், சஉஉ.

## இருபதாவது

# இடபமாய்த்தாங்கினகட்டி.

முதலாவது—க-வது கட்டி க-வது தொடரின், விஷ்ணு சிவனுக்கு அஸ்த்ரமாயிருந்து மேருவை வில்லாகச் சிவன் பிடிக்கும்படி செய்து, எப்படி திரிபுர விஜயம் செய்வித்தாரோ, அப்படியே ரு-வது கட்டி ரு-வது தொடரில், பூமியினுடைய ஸத்வத்தையெடுத்து தேருக்கு அச்சாக்கினபடியால், அச்சரத்தை பூமி பரிக்கமாட்டாமல் பாதாளத்தில் இடிந்து விழுந்ததை, இடபமாய்த்தாங்கி சிவனுக்கு திரிபுரவிஜயம் பண்ணும்படி, விஷ்ணு செய்வித்த கதையைக் கண்டுகொள்க.

# இருபத்தொன்றாவது

# சிரோமாலைக்கட்சி.

இராமராமேதியென்றேயிசைப்ப தொராயிரம்பேர்
பாராபரமாலைப்போற்றும்பயன்றருமெனவுமைக்கு
விராவியச்சிவன்சொல்ஞானமெய்ச்சடகோபன்றெய்வ
வராவுருவெதிவரன்சேவடியவர்க்கடிமைசெய்வாம். (க)

(இ-ள்.) இராமராமேதி என்று இசைப்பது - ராமராமேதியென்று உச்சரிப்பது, ஓர் ஆயிரம்பேர் - ஓராயிரத் திருநாமங்களையுடைய, பராபரம் - பராத்பரமாகிய, மாலை - திருமாலை, போற்றும் - துதிக்கின்ற, பயன் - ப்ரயோஜனத்தை, தரும் எனல் - கொடுக்குமென்பதை, விராவி - கலந்து, உமைக்கு - உமாதேவிக்கு, அச்சிவன் சொல் - அந்தச் சிவன் சொல்லிய, ஞானம் மெய் - உண்மை ஞானத்தையுடைய, சடகோபன் - நம்மாழ்வார், தெய்வ அரா உரு - தைவிகமுள்ள ஆதிசேஷாவதாரமாகிய, எதிவரன் - யதிராஜர் (இவர்களுடைய) சேவடியவர்க்கு - திருவடித் தொண்டு செய்வோருக்கு, அடிமை செய்வாம் - தொண்டு செய்வோம், (யாம்) எ-று.

ஆயிரம்பேர் என்பதற்கு ஸஹஸ்ர நாமங்களாலும் எனப் பொருள்கூறினும் பொருந்தும்.

மாத்தவர்சைவர்தாங்கள்வருந்திடும்பாடியத்தைச்
சேர்த்தபுத்தகமடிக்குட்செங்கையிற்றிகழ்தனீத்துப்
பூத்தவெண்கமலமாதுபோற்றித்தன்முடிமேற்கொண்ட
சீர்த்திகழ்பாடியஞ்செய்தேசிகனடியன்வாழி. (உ)

(இ-ள்.) பூத்த வெண்கமலமாது - விகசித்த வெண்டாமரைமலரில் வீற்றிருக்கிற ஸரஸ்வதிதேவியானவள், மாத்தவர் சைவர் தாங்கள் - மகாதவராகிய சைவர்கள், வருந்திடும் பாடியத்தை - செய்த பாஷ்யத்தை, சேர்த்த புத்தகம் - எழுதின புஸ்தகத்தை, அடிக்குள் - தன்பாதத்தில் இட்டு, செங்கையில் திகழ்தல் நீத்து - தன் கையில் விளங்கும் புத்தகத்தையும் நீக்கி, போற்றி - வணங்கி, தன் முடிமேல் கொண்ட - தன் தலைமேற்கொண்ட, சீர் திகழ் பாடியம் செய் - மேன்மை விளங்குகின்ற ஸ்ரீ பாஷ்யத்தைச் செய்தருளிய, தேசிகன் - ஸ்ரீ பாஷ்யகாரருக்கு, அடியன் - அடியவராகிய கூரேசர், வாழி - வாழக்கடவர், எ-று.



தாமரைத்தடத்துலாவுந்தண்கயலெழுந்துபாய்ந்து
மாமரக்கனிகள்வீழ்த்துவண்ணரம்பையினிற்றாக்கித்
தேமதுங்கனிகள்சிந்திச்சிதறுதேன்வயலிற்பாயுஞ்
சேமநற்றிருக்கூரம்வாழ்செல்வனீதுரைக்கலுற்றான். (ங)

(இ-ள்.) தாமரைத்தடத்து உலாவும் - தாமரைத்தடாகத்தில் சஞ்சரிக்கிற, தண் கயல் எழுந்து பாய்ந்து - குளிர்ந்த சேல்மீன்கள் எழுந்து துள்ளி, மாமரக் கனிகள் வீழ்த்து - மாமரத்திலுள்ள பழங்களை விழுத்தி, வண் அரம்பையினில் தாக்கி - வளமாகிய வாழை மரங்களில் மோதி, தேம்மது கனிகள் சிந்தி - மணமுள்ள தேனோடு கூடிய பழங்களை உதிர்த்து, சிதறு - சிதறுகின்றதனால் பெருகுகின்ற, தேன் - தேனானது, வயலில் பாயும் - வயல்களில் பாயாநின்ற, சேமம் - காவலையுடைய, நல் திருக்கூரம் வாழ் - விலக்ஷணமான திருக்கூரத்தில் வாழ்கின்ற, செல்வன் - கூரேசர், ஈது உரைக்கல் உற்றான் - இதனைச் சொல்லத் தொடங்கினார், எ-று.

பார்புனல்கனல்கால்வானம்பரந்துளவனைத்துமாகிச்
சீர்பொருளொன்றாய்நின்றசெங்கண்மாலெங்கண்மாயோ
னோர்பரமாகுமென்றேயுரைத்தனனுரைத்தமாற்றம்
நீர்பெறுஞ்சடிலன்வாதர்நெஞ்சுறவழன்றுசொல்வார். (ச)

(இ-ள்.) பார் - பூமியும், புனல் - நீரும், கனல் - நெருப்பும், கால் - காற்றும், வானம் - ஆகாயமும், பரந்துள்ள - வ்யாபித்துள்ள, அனைத்தும் ஆகி - எல்லாப்பொருள்களும் ஆகி, சீர் - சிறப்பையுடைய, பொருள் ஒன்றாய் நின்ற - ஒரு பொருளாய் நின்ற, செங்கண்மால் - செங்கண்மாலாகிய, எங்கண் மாயோன் - எங்கள் மாயவன், ஓர் பரம் ஆகும் என்று - ஒப்பற்ற பரவஸ்துவாமென்று, உரைத்தனன் - சொல்லினார், உரைத்த மாற்றம் - சொல்லிய வார்த்தையை, நீர்பெறும் சடிலன் வாதர் - கங்கையைத்தரித்த சடையையுடைய சிவன் பரமென்று வாதிக்கும் சைவர்கள், நெஞ்சு உற அழன்று சொல்வார் - மனம் மிகவுங் கோபித்துச் சொல்லுவார்கள், எ-று.

அனந்தகற்பங்கடோறுமனந்தமாம்பிரமர்மாய
வனைத்தவர்சிரங்களெல்லாமாலையாயணியுமெங்கள்
கனக்குழைபங்கன்றிங்கள்கங்கைவேணியனேதெய்வம்
நினைந்திடிற்பரம்வேறில்லையெனச்சைவர்நிகழ்த்தினாரே. (ரு)

(இ-ள்.) அனந்த கற்பங்கள்தோறும் - முடிவில்லாத கற்பங்கள்தோறும், அனந்தம் ஆம் பிரமர் மாய - முடிவில்லாத ப்ரஹ்மாக்கள் இறக்க, அவர் சிரங்கள் எல்லாம் மாலையாய் வனைந்து - அவர் தலைகளையெல்லாம் மாலையாகத் தொடுத்து, அணியும் - தரிக்கின்ற, எங்கள் - எமது, கனக்குழை பங்கன் - உமாதேவி பாகனும், திங்கள் கங்கை வேணியனே - சந்த்ரனையும் கங்கையையு மணிந்த சடையையுடையவனுமாகிய சிவபெருமானே, தெய்வம் -

கடவுள், நினைந்திடில் - ஆலோசித்துப் பார்த்தால், பரம் வேறு இல்லையென - பரவஸ்து வேறில்லையென்று, சைவர் நிகழ்த்தினர் - சைவர்கள் சொன்னார்கள், எ-று.

இங்கிவையெடுத்துரைத்தேயெறிகடல்போலச்சூழ்ந்து
தங்கியசைவர்மேவுஞ்சவைதனிற்கூரத்தெம்மான்
கங்குலிற்றிங்கள்போலக்கவின்முகமிலங்க
மங்குலினொலிக்குள்ளஞ்சும்வகையெனவுரைக்கலுற்றான். (சா)

(இ-ள்.) இங்கிவை - இவைகளை, எடுத்து உரைத்து - எடுத்துச் சொல்லி, எறி கடல்போலச் சூழ்ந்து தங்கிய - அலைகளை வீசுகின்ற சமுத்திரம்போல வளைந்திருந்த, சைவர் மேவும் - சைவர்கள் பொருந்தியிருக்கிற, சவைதனில் - சபையில், கூரத்து எம்மான் - கூரேசர், கங்குலில் திங்கள்போல - இரவில் சந்திரன்போல, கவின்முகம் இலங்க - அழகாகிய முகம் விளங்க, மங்குலின் ஒலிக்கு - மேக கர்ஜனத்துக்கு, நாகம் உள் அஞ்சும் வகையென - சர்ப்பமானது மன நடுங்கும் வகைபோல, உரைக்கலுற்றான் - சொல்லத் தொடங்கினார், எ-று.

ஆதியுமந்தமில்லானருவமுமுருவமில்லான்
சோதியுமிருளுமில்லான்சுவர்க்கமுநரகுமில்லான்
சாதியுங்குணமுமில்லான்றன்மலருந்திபூத்த
வேதியன்சிரத்தின்மாலைவேணியான்புனைதல்கேளீர். (எ)

(இ-ள்.) ஆதியும் அந்தம் இல்லான் - முதலும் முடிவு மில்லாதவன், அருவமும் உருவம் இல்லான் - அரூபமும் ரூபமுமில்லாதவன், சோதியும் இருளும் இல்லான் - ஒளியும் இருளு மில்லாதவன், சுவர்க்கமும் நரகும் இல்லான் - சொர்க்கமும் நரகமு மில்லாதவன், சாதியும் குணமும் இல்லான் - சாதியும் குணமும் இல்லாதவன், (ஆகிய திருமாலானவர்) தன் மலர் உந்தி பூத்த - தனது திருநாபி கமலத்தினின்று முண்டாக்கிய, வேதியன் சிரத்தின் மாலை - பிரமனது தலை மாலையை, வேணியான் புனைதல் கேளீர் - சடாபாரத்தையுடைய சிவன் தரிக்கும் விஷயத்தைக் கேட்பீராக, எ-று.

மோகநூலிற்சொல்லுமொழியலாற்பின்னைவேறுண்டோ
ஆகமவாதரேயென்றப்புறம்விரித்துச்சொல்வான்
வாகொடுகற்பந்தோறுமாயவனுந்திபூப்பத்
தோகைபாகனையளிப்பன்சுருதிநான்முகவன்மாதோ. (அ)

(இ-ள்.) மோகநூலில் சொல்லும் - மோஹசாஸ்த்ரத்திற் சொல்லுகிற, மொழி அல்லால் - சொல்லே யன்றி, பின்னை வேறு உண்டோ - பின்னும் வேறே யுண்டோ, ஆகமவாதரே - ஆகம வாதத்தையுடைய சைவர்களே, என்று அப்புறம் விரித்துச் சொல்வான் - என்று அதற்குமேல் விஸ்தரித்துச் சொல்லுகின்றார், வாகொடு - அழகுடன், கற்பந்தோறும் - ஒவ்வொரு கற்பத்திலும், மாயவன் - திருமாலின், உந்திபூப்ப - திருநாபி கமலமானது மலர, (அதினின்றும் தோன்றின) சுருதி நான்முகவன் - வேதங்களையுடைய சதுர்முகன், தோகைபாகனை அளிப்பன் - உமாதேவி பாகனாகிய ருத்ரமூர்த்தியை உண்டாக்குவான், எ-று.



ஆகம ஆதரே எனப்பிரித்து ஆகமாநுசாரிகளாகிய அறிவிலீரேயெனப் பொருளுரைத்தலுங் கூடும்.

இவ்வண்ணமயனரனெந்தைமால்கலையினாலே
யெவ்வண்ணவுலகுஞ்சிட்டியீரிருமுகவன்செய்வா
னவ்வண்ணமரனுஞ்சங்காரத்தனைப்புரிவன்கண்டா
யொவ்வுமித்தகைசிற்றுடலுகந்தபின்முகுந்தன்றானே. (கூ)

(இ-ள்.) இவ்வண்ணம் - இந்தப்ரகாரம், அயன் அரன் - பிரமனும் ருத்ரனும், எந்தைமால் கலையினாலே - எமது தந்தையாகிய திருமாலின் அமிசத்தினாலே, எவ்வண்ண உலகும் - எவ்வகையாகிய வுலகத்தையும், ஈர் இருமுகவன் சிட்டி செய்வான் - சதுர்முகனாகிய பிரமன் சிருஷ்டி பண்ணுவான், அவ்வண்ணம் - அந்தப்ரகாரமே, அரனும் - ருத்ரனும், சங்காரம் தன்னைப்புரிவன் - சம்ஹாரத்தைச் செய்வான், ஒவ்வும் இத்தகை சிற்றுடல் உகந்தபின் - ஒத்த இந்தத் தன்மையாகிய சிறிய லீலைகளைச் செய்தபின், முகுந்தன் - திருமாலானவர், எ-று.

சகம்பலவுளவொடுங்குந்தருப்பணநிகர்த்தலாலே
முகுந்தனென்றொருபேருற்றமுன்னவனருளாலன்னோன்
மிகுந்தபல்கலையினின்றுவிரவியப்புயனரற்குப்
புகுந்தசில்கலைகள்பின்னும்போக்கியங்கவனேகொள்வான். (ய)

(இ-ள்.) பலவுளசகம் - பலவாயுள்ள வுலகங்கள், ஒடுங்கும் - சென்றடங்குகின்ற, தருப்பணம் நிகர்த்தலாலே - கண்ணாடியை நிகர்த்திருந்ததலால், முகுந்தனென்று ஒரு பேர் உற்ற - முகுந்தனென்று ஒரு பெயரைப்பெற்ற, முன்னவன் அருளால் - முன்னோனாகிய திருமாலின் அருளினால், அன்னோன் - அவனது, மிகுந்த - அதிகரித்த, பல்கலையில் நின்று விரவி - பல அம்சங்களிலிருந்து கலந்து, அப்புயன் அரற்கு - பிரமனுக்கும் ருத்ரனுக்கும், சில் கலைகள் புகுந்த - பல அம்சங்கள் உண்டாயின, பின்னும் போக்கி - மறுபடியும் போகப்பண்ணி, அங்கு அவனே கொள்வான் - அவனே அங்கீகரிப்பான், எ-று.

கலையிலாமதியம்போலக்கமலனுஞ்சிவனுந்தேய்ந்து
நிலையிலாவசத்துவாகிநிகழ்த்தியசெயலொன்றின்றி
யலையிலாக்கடலினுற்றவனுவெனத்திருமாலென்னுந்
தலைவனாரணன்செய்திக்குட்டங்கியஞ்சைவராப்பால். (யக)

(இ-ள்.) கலை இல்லா மதியம்போல - கலைகளில்லாத சந்திரன்போல, கமலனும் - பிரமனும், சிவனும் - ருத்ரனும், தேய்ந்து - குறைந்து, நிலை இல்லா அசத்து ஆகி - நிலையில்லாத அஸத்பதார்த்தமாகி, நிகழ்த்திய செயல் ஒன்று இன்றி - சொல்லப்பட்ட செய்கைகள் சிறிதுமில்லாமல், அலை இல்லா கடலில் உற்ற - அலைகளில்லாத சமுத்ரத்தில் விழுந்த, அறு என - அறு வைப்போல, திருமால் என்னும் - திருமால் என்கிற, தலைவன் காரணன் செய்திக்குள் - முதல்வனாகிய நாராயணனது செயலுக்குள், தங்கி அங்கு இசைவர் - தங்கி அவ்விடத்திலேயே பொருந்தியிருப்பார், அப்பால் - அதன் பிறகு, எ-று.

நித்தியாநந்தரூபநெறியெனும்பரலோகத்திற்
சத்துவாஞ்சீவன்முத்திதனையடைந்திடுவராதி
வத்துமாலருளினாலேயென்றிதுவகுத்துக்கூறி
யித்தகையுளதெந்நூலினெனினதைக்கேண்மினென்றான். (௰௨)

(இ-ள்.) நித்திய ஆநந்தரூப நெறி என்னும் - நித்யாநந்த ரூபமார்க்கமென்கிற, பரலோகத்தில் - மேலாகிய வுலகில், சத்து ஆம் - சத்ரூபமாகிய, சீவன் முத்திதனை அடைந்திடுவர் - ஜீவந் முக்தியை யடைவார்கள், (இவைகளெல்லாம்) ஆதிவத்து - முதற்பொருளாகிய, மால் - திருமாலின், அருளினாலே - க்ருபையினால்தான் நிகழும், என்று - என்று, இது வகுத்துக் கூறி - இதை வகுத்துச்சொல்லி, எந் நூலில் - எந்த சாஸ்த்ரத்தில், இத்தகை உளது என்னின் - இந்தப் பெருமையாகிய விஷயம் உள்ளதென்றால், அதை - அதனை, கேண்மின் என்றான் - (நான் சொல்லக்) கேளுங்களென்றார், எ-று.

சங்கரன்றானேமுன்னாட்டகைபெறுமகத்தியற்கும்
பங்கில்வாழுமையவட்கும்பகர்ந்தனனிவற்றினுண்மை
துங்கமாமகத்தியச்சங்கிதையினுந்தூகடீரின்பந்
தங்குமுத்தரகூர்மத்துந்தனித்தனிபோற்றியேற்றி. (௰௩)

(இ-ள்.) இவற்றின் உண்மை - இவைகளின் யதார்த்தத்தை, சங்கரன் தானே - ருத்ரனே, முன் நாள் - முற்காலத்தில், துங்கம் ஆம் - பரிசுத்தமாகிய, அகத்திய சங்கிதையினும் - அகஸ்த்ய ஸம்ஹிதையிலும், தூகள்தீர் - குற்றமற்ற, இன்பம் தங்கும் - ஆநந்தம் தங்கிய, உத்தர கூர்மத்தும் - உத்தர கூர்மத்திலும், தனித்தனி போற்றி ஏற்றி - தனித்தனி வணங்கி உயர்த்தி, தகை பெறும் - பெருமை பெற்ற, அகத்தியற்கும் - அகஸ்த்யருக்கும், பங்கில் வாழ் உமையவட்கும் - தன் பாகத்தில் வாழ்கின்ற உமாதேவிக்கும், பகர்ந்தனன் - சொன்னான், எ-று.



ஆதலான்முளரிமேவுமயன்றனக்கரன்குமாரன்
பேதமில்சீடனாகும்பெற்றியதுளதுகண்டாய்
வேதசாத்திரங்களோதுமெய்ம்மையிப்படியேகூறு
மூதுலகேத்தும்வண்ணமுக்கணன்புகழுங்கேண்மின். (௰௪)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், முளரி மேவும் - தாமரைமலரிற் பொருந்தியிருக்கிற, அயன் தனக்கு - பிரமனுக்கு, அரன் - சிவன், குமாரன் - புதல்வன், (அன்றியும்) பேதம் இல் - வேற்றுமையில்லாத, சீடன் ஆகும் - சிஷ்யனாதற்குரிய, பெற்றியது உளது - தன்மையும் உண்டு, வேத சாத்திரங்கள் ஓதும் - வேத சாஸ்த்ரங்கள் சொல்லுகிற, மெய்ம்மை - உண்மைப் பொருளும், இப்படியே கூறும் - இப்படியே சொல்லும், மூது உலகு ஏத்தும் - பழைய வுலகம் துதிக்கின்ற, வண்ணம் - அழகையுடைய, முக்கண்ணன் புகழும் கேண்மின் - மூன்று கண்களை யுடையவனாகிய சிவனது புகழையுங் கேளுங்கள், எ-று.

வேறு.

மோகநூலினைமுகுந்தனாணையா
லாகமநான்கினேழ்சமயமாறதாய்
வாகுடன்செய்திடும்வகையினாலும்பன்
னாகணையவனருணளினப்பார்வையால். (௰௫)

(இ-ள்.) மோக நூலினை - மோஹந சாஸ்த்ரங்களை, முகுந்தன் ஆணையால் - திருமாலின் கட்டளையினால், ஆகமம் ஏழ் நான்கின் - இருபத்தெட்டுச் சிவாகமங்களோடு, சமயம் ஆறு ஆய் - ஆறு சமயங்களுமாக, வாகுடன் செய்திடும் வகையினாலும் - அழகு பெறவுண்டாக்கும் விதத்தாலும், பன்னாக அணையவன் - புகழ்தற்குரிய சர்ப்ப சயநத்தையுடையவனாகிய திருமாலின், அருள் - கருணையோடுகூடிய, நளினம் பார்வையால் - தாமரைமலர்போன்ற கண்களால், எ-று.

தங்கியவருள்சிலதழையநோக்கவே
சங்கரித்திடப்பெறுஞ்சவுரியத்தினா
லிங்குலகத்தமகுணத்தினேய்ந்துளோர்
சங்கரற்குயர்வெனச்சாற்றுவார்களே. (௰௬)

(இ-ள்.) தங்கிய - பொருந்திய, அருள் - கருணை, சில தழைய நோக்கவே - சிறிது செழிக்க நோக்குதலும், சங்கரித்திடப் பெறும் சவுரியத்தினால் - சம்ஹரிக்கப்பெற்ற சூரத்வத்தால், இங்கு உலகம் - இவ்வுலகத்தில், தம குணத்தின் ஏய்ந்து உள்ளோர் - தாமஸ குணத்துடன் பொருந்தியிருப்போர்கள், சங்கரற்கு - சிவனுக்கு, உயர்வு எனச் சாற்றுவார்கள் - (இது ஒரு) உயர்வு என்று சொல்லுவார்கள், எ-று.

ஆதலாற்சிவனயற்கதிகமென்பது
பேதைமையாற்சிலர்பிதற்றலாவதே
மாதிரிபுரம்வெலப்பிரமன்சங்கரற்
கோதினன்மால்கவசத்தையுண்மையால். (௰௭)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், சிவன் - ருத்ரன், அயற்கு அதிகம் என்பது - பிரமனுக்கு அதிகமென்பது, பேதைமையால் - அறிவில்லாமையால், சிலர் பிதற்றல் ஆவதே - சிலர் பிதற்றலாவதேயாம்; மா - பெரிய, திரிபுரம் வெல - த்ரிபுரத்தை ஸம்ஹரிக்கும்பொருட்டு, பிரமன் - பிரமனானவன், மால் கவசத்தை - விஷ்ணு கவசம் என்கிற மந்த்ரத்தை, சங்கரற்கு - சிவனுக்கு, ஓதினன் - உபதேசித்தான், எ-று.

அன்றியுங்கேண்மினோவயனுருத்திரன்
றன்றியவமரர்தொகைசராசர
மென்றிவையனைத்தையுமெந்தைநாரணன்
வென்றிசங்காரமேவிரவிச்செய்கையால். (௰௮)

(இ-ள்.) அன்றியும் - அல்லாமலும், கேண்மின் - கேளுங்கள், அயன் - பிரமன், உருத்திரன் - ருத்ரன், ஆன்றிய அமரர்கள் தொகை - நெருங்கிய தேவசமூஹங்கள் ஆகிய, சராசரம் என்ற இவை அனைத்தையும் - சரம் அசரம் என்று சொல்லப்பட்ட இவைகளெல்லாவற்றையும், எந்தை நாரணன் - எமது தந்தையாகிய நாராயணன், வென்றி - வெற்றியையுடைய, சங்காரமேவிரவிச்செய்கையால் - சம்ஹாரத்தையே பொருந்திச் செய்தலால், எ-று.

அரியெனும்பெயர்புனையவன்கலைக்குளாய்
விரைமலர்க்கொன்றையான்வீந்தொடுங்குவன்
மருமலர்வநசன்பின்மாய்ந்தொடுங்கலா
லரனயன்முடித்தொடையணிவதெங்ஙனே. (௰௯)

(இ-ள்.) அரியெனும் பெயர் புனை - ஹரியென்கிற திருநாமம் பூண்ட - அவன் கலைக்குள் ஆய் - அந்தத்திருமாலின் அமிசத்தினுட்பட்டு, விரைமலர்க் கொன்றையான் - வாசனையுள்ள கொன்றைமலர் மாலையை அணிந்த சிவன், வீந்து ஒடுங்குவன் - இறந்து அடங்குவான், மருமலர் வநசன் - வாசனை பொருந்திய தாமரை மலரை யிடமாகவுடையவனாகிய பிரமன், பின் - பிறகு, மாய்ந்து ஒடுங்கலால் - இறந்தடங்கலால், அரன் - சிவன், அயன் முடித் தொடை அணிவது - அந்தத் திருமாலின் சிரமாலையைத் தரிப்பது, எங்ஙன் - எப்படி, எ-று.

இன்னணம்பிரமமரணமென்றேமறை
சொன்னசுலோகமுஞ்சொல்லியிங்கிவை
மன்னியவேதவைதீகவான்பொருட்
குன்னிடின்விருத்தமென்றுருத்துச்சொல்லுவான். (௨௰)



(இ-ள்.) இன்னணம் - இந்தப்ரகாரம், பிரம மரணம் என்று - ப்ரஹ்மாவின் மரணமென்று, மறைசொன்ன - வேதத்திற் சொன்ன, சுலோகமும் சொல்லி - ச்லோகத்தையுஞ் சொல்லி, ஈங்கிவை - (நீங்கள் சொன்ன) இவைகள், மன்னிய - நிலைபெற்ற, வேத வைதீகவான்பொருட்கு - வேத வைதிக சாஸ்த்ரங்களின் மேலாகிய அர்த்தத்துக்கு, உன்னிடின் - நினைத்தால், விருத்தம் என்று - விரோதமாமென்று, உருத்துச் சொல்லுவான் - கோவித்துச் சொல்லுவார், எ-று.

தாமதகுணந்தனைச்சார்ந்துளோரெலாங்
காமமுற்றடையுமோகப்பொருட்டொகை
யாமிவையென்றவையினிலுறைந்திடுங்
கோமகனோடுபுலவர்க்குக்கூறினன். (௨௧)

(இ-ள்.) தாமதகுணந்தனைச்சார்ந்துளோர் எல்லாம் - தாமஸ குணத்தையடைந்திருப்பவர் எல்லாரும், காமம் உற்று அடையும் - விருப்பங்கொண்டடைகின்ற, மோகப்பொருள் தொகை ஆம் இவையென்று - மோஹந சாஸ்த்ரார்த்த சமூஹமாகும் இவையென்று, அவையினில் உறைந்திடும் - சபையில் தங்கியிருக்கிற, கோமகனோடு - அரசனோடு, புலவர்க்கு - வித்வான்களுக்கும், கூறினன் - சொன்னான், எ-று.

இத்தகையெழிற்றிருக்கூரத்தெந்தையா
முத்தமனோதிப்பின்னுரைக்கலுற்றன
னத்தியைதொட்டிடினியாருநற்பிராயச்
சித்தமுந்தானமுஞ்செய்யவேண்டுமால் (௨௨)

(இ-ள்.) இத்தகை - இந்தப்ரகாரமாக, எழில் - அழகாகிய, திருக்கூரத்து எந்தை ஆம் உத்தமன் ஓதி - திருக்கூரத்திலெழுந்தருளிய எமது தந்தையாகிய உத்தமன் சொல்லி, பின் - பின்னும், உரைக்கலுற்றனன் - சொல்லலுற்றான், அத்தியை தொட்டிடின் - கொலைப்பாவம் தொடர்ந்தால், யாரும் - எல்லாரும், நல்பிராயச்சித்தமும் - நல்ல ப்ராயச் சித்தத்தையும், தானமும் - தானத்தையும், செய்யவேண்டும் - செய்தல்வேண்டும், எ-று.

வைதிகசாத்திரம்வகுத்துரைத்திடு
மைதிகவுண்மையீதறிகிலீர்கொலோ
மைதிகழ்களன்பரமாகிலத்தியைக்
கைதனிற்கொடுமுடிக்கணிருடிலென். (௨௩)

(இ-ள்.) வைதிக சாத்திரம் வகுத்து உரைத்திடும் - வைதிக சாஸ்த்ரங்கள் வகுத்துச் சொல்லுகின்ற, ஐதிக உண்மை ஈது அறிகிலீர் கொல் - ஐதிஹ்யத்தின் யதார்த்தமாகிய இதனை அறிகிலீர்களோ, மைதிகழ்களன் - கருமை

யாய் விளங்குகின்ற கண்டத்தையுடைய சிவன், பரம் ஆகில் - பரவஸ்து வானல், அத்தியை - ஹத்யையை, கைதனில் கொடு - கையிற்கொண்டு, முடிக் கண்ணி சூடில் என் - சிரமாலையைத் தரித்தால் என்ன, எ-று.

தோட்டவம்புயன்சிரந்துணிப்பவன்னவ
னீட்டியசாபத்தானண்ணிசுடு
காட்டிடைத்திரிதலாற்கடுக்கைவேணியற்
கீட்டியதோடமுண்டிசையொன்றில்லையால். (உச)

(இ-ள்.) தோட்டு அ அம்புயன் சிரம் துணிப்ப - அந்தப்பிரமனது தலையைத்தோண்டியறுக்க, அன்னவன் - அந்தப் பிரமன், நாட்டிய சாபத்தால் - நிலைபெற இட்ட சாபத்தினால், சுடுகாட்டு இடை நண்ணி - சுடுகாட்டினிடையே பொருந்தி, திரிதலால் - திரிவதனால், கடுக்கை வேணியற்கு - கொன்றைமலர் மாலையையுடைய சிவனுக்கு, ஈட்டிய தோடம் உண்டு - பொருந்திய தோஷமுண்டு, இசை ஒன்று இல்லை - புகழ் சிறிதுமில்லை, எ-று.

தேவயோக்கியமுநுஞ்சிவனுக்கின்றென
மூவகைப்பகையறுமுனிவர்மாதவ
ரியாவரும்விதித்தனராதலாலிளைத்
தோவருந்தவத்தினையுருத்திரன்செய்தான். (உரு)

(இ-ள்.) தேவயோக்கியமும் - தேவத்வ யோக்யதையும், நும் சிவனுக்கு இன்று என - உங்கள் சிவனுக்கு இல்லையென்று, மூவகைப் பகை அறும் - மூன்றுவகையாகிய பகைகள் அறப்பெற்ற, முனிவர் - முனிவர்களும், மாதவர் - பெரிய தபசிகளும் ஆகிய, யாவரும் விதித்தனர் - எல்லாரும் விதித்தார்கள், ஆதலால் - ஆகையால், இளைத்து - மெலிந்து, ஓ அரு தவத்தினை - நீங்கலில்லாத தவத்தை, உருத்திரன் செய்தான் - சிவன் செய்தனன், எ-று.

மூவகைப்பகை என்றது காம வெகுளி மயக்கங்களை.

சங்கரன்புரிதவந்தனக்குவந்துமால்
செங்கலுழன்மிசைத்திருவுடன்றிகழ்ந்
தங்கவன்முன்னெழுந்தருளியன்னவன்
பங்குறுவினைபலபவத்தைநீக்குவான். (உசு)

(இ-ள்.) சங்கரன் புரிதவம் தனக்கு - சிவன் செய்த தவத்துக்கு, மால் உவந்து - திருமால் மனமகிழ்ந்து, செம் கலுழன் மிசை - செவந்த கருடன் மீது, திருவுடன் திகழ்ந்து - பெரிய பிராட்டியாரோடு கூடி விளங்கி, அங்கு அவன் முன் எழுந்தருளி - அவனுக்கெதிரில் எழுந்தருளி, அன்னவன் பங்கு உறு - அந்தச் சிவனிடத்துப் பொருந்திய, வினை பல - பல வினைகளையும் பவத்தை - பாவத்தையும், நீக்குவான் - நீக்கும்பொருட்டு, எ-று.



தம்முடைநாமமந்திரத்தைச்சாற்றிப்பின்
செம்மையிவ்வுலகெலாஞ்சிருட்டிகாலத்தி
லென்மலரடிப்பெருவிரலினெய்திய
அம்மிருகங்கையையயனுக்கீகுவன். (உஎ)

(இ-ள்.) தம்முடை நாமமந்திரத்தை - தம்முடைய திருநாமமாகிய மந்திரத்தை, சாற்றி - சொல்லி, பின் - பிறகு, செம்மை - செம்மையாகிய, இவ்வுலகு எல்லாம் - இந்த உலகங்களை யெல்லாம், சிருட்டி காலத்தில் - ஸ்ருஷ்டிபண்ணுங் காலத்தில், என் மலர் அடி - எனது தாமரைமலர்போன்ற பாதத்தின், பெரு விரலின் எய்திய - பெருவிரலிற் பொருந்திய, அம்மிரு - அழகுமிகுந்த, கங்கையை - கங்காநதியை, அயனுக்கு ஈகுவன் - பிரமனுக்குக் கொடுப்பேன், எ-று.

அயனதைக்கமண்டலத்தமைத்திருந்தபின்
சயமுறுமாவலிதனையடக்குவான்
வயதிரிவிக்கிரமத்துருக்கொளும்
புயலெனதடிகழீஇப்போற்றுவானரோ. (உஅ)

(இ-ள்.) அயன் - ப்ரஹ்மாவானவன், அதை - அந்தக் கங்கையை, கமண்டலத்து - தன் கமண்டலத்தில், அமைத்து இருந்தபின் - அடக்கியிருந்த பிறகு, சயம் உறு மாவலி தனை அடக்குவான் - வெற்றி பொருந்திய மாவலியை அடக்கும் பொருட்டு, வயம் - வெற்றியையுடைய, திரிவிக்கிரமத்து உரு கொளும் - த்ரிவிக்ரம ரூபத்தைக் கொண்ட, புயல் - மேகவண்ணனாகிய, எனது அடிகழீஇ - என் பாதத்தை விளக்கி, போற்றுவான் - ... பான், எ-று.

அப்புனிதப்புனலகிலலோகர்க்கு
மெப்பெரும்பாவமுமிழுக்கச்செய்திடும்
செப்பருந்தன்மையாற்சிறிதுநாள்கழித்
திப்புவிக்கதுவரற்கேதுவுண்டரோ. (உகூ)

(இ-ள்.) அ - அந்த, புனிதப்புனல் - பரிசுத்தமாகிய தீர்த்தமானது, அகிலலோகர்க்கும் - எல்லாவுலகத்தார்க்கும், எப்பெரும்பாவமும் இழுக்கச் செய்திடும் - எவ்வகையாகிய பெரிய பாபங்களையும் நீங்கப்பண்ணும், செப்பு அரு தன்மையால் - சொல்லுதற்கரிய தன்மையால், சிறிது நாள் கழித்து - சிலநாள் கழித்து, இப்புவிக்கு - இந்தப் பூமிக்கு, அது வரற்கு - அது வருவதற்கு, ஏது உண்டு - காரணமுண்டு, எ-று.

அன்னகாலையிற்பகீரதனுனைக்குறித்
துன்னியதவஞ்செயவுவந்துநீயவன்
சொன்னவப்படிபுவிதுவன்றகங்கையை
உன்னெடுமுடிமிசையுறையத்தாங்குவாய். (ஙய)

(இ-ள்.) அன்ன காலையில் - அந்தக்காலத்தில், பகீரதன் - பகீரதனானவன், உன்னைக்குறித்து - உன்னை நோக்கி, உன்னிய தவம் செய்ய - நினைத்தற்குரிய தவத்தைச்செய்ய, நீ உவந்து - நீ சந்தோஷித்து, அவன் சொன்ன அப்படி - அவன் சொல்லிய அந்தப்ரகாரம், புவி அவன்ற - பூமியில் பொருந்த, கங்கையை - கங்காநதியை, உன் நெடு முடி மிசை உறையதாங்குவாய் - உனது நீண்ட முடியின்மேல் தங்கும்படி சுமப்பாய், எ-று.

தாங்குமக்கணத்திலுன்றன்னைச்சுற்றியே
நீங்கிடாப்பவமெலாநீங்குநீயெழி
லோங்குமெப்புவியிலுள்ளோர்களுந்தொழும்
பாங்கொடுமகிமையும்பயிலுவாயென்றான். (௩௧)

(இ-ள்.) தாங்கும் அக்கணத்தில் - சுமக்கின்ற அந்த க்ஷணகத்தில், உன்றன்னைச்சுற்றி - உன்னைச் சூழ்ந்து, நீங்கிடாபவம் எல்லாம் நீங்கும் - நீங்காத பாவங்களெல்லாம் நீங்கிப்போம், நீ - நீ, எழில் ஓங்கும் - அழகு மிக்க, எப்புவியில் உள்ளோர்களும் - எந்த லோகத்திலுள்ளவர்களும், தொழும் - தொழுதற்குரிய, பாங்கொடு மகிமையும் பயிலுவாய் என்றான் - அழகோடு பெருமையையும் பெற்று விளங்குவாய் என்று சொல்லினர், எ-று.

இன்னணம்பெறக்கடவாயென்றெங்கணு
மன்னியமாயனிவ்வரமளித்தலால்
முன்னவன்முன்னிடின்முடிந்திடாதெது
என்னநுஞ்சிவனுயர்வெய்தினனரோ. (௩௨)

(இ-ள்.) இன்னணம் பெறக்கடவாய் என்று - இந்தப்ரகாரம் பெறக்கடவையென்று, எங்கணும் மன்னிய - எவ்விடத்தும் வ்யாபித்த, மாயன் - திருமால், இவ்வரம் அளித்தலால் - இந்த வரத்தைக் கொடுத்தலால், முன்னவன் முன்னிடின் - முதல்வனே நினைத்தால், எது முடிந்திடாது என்ன - எந்தக்காரியந்தான் முடியாதென்று சொல்ல, நும் சிவன் உயர்வு எய்தினன் - உம்சிவன் மேன்மையை யடைந்தான், எ-று.

வழுத்துமிப்பொருட்டொகைவகுத்தலெங்கெனிற்
சுழித்துமெய்யமுதாய்த்தோன்றவீர்ங்கிளி
தழைத்தநான்மறைச்சினைதாங்குகற்பகம்
பழுத்துதிர்கனிச்சுவைப்பண்பதாகவே. (௩௩)

(இ-ள்.) வழுத்தும் - சொன்ன, இப்பொருள் தொகை - இந்த அர்த்த சமூஹம், வகுத்தல் - வகுத்துச் சொல்லப்படுதல், எங்கு எனின் - எவ்விடத்திலென்றால், சுழித்து மெய் அமுது ஆய் - எழுந்து உண்மையென்கிற அம்ருதத்தைச் சிந்தி, தோன்ற - தோன்றும்படி, ஈர் கிளி - குளிர்ச்சியாகிய கிளியை, தழைத்த நான்மறைச் சினை - செழித்த நான்கு வேதங்களாகிய கிளைகளால், தாங்கு - தாங்குகின்ற, கற்பகம் - கற்பக வ்ருக்ஷத்தில் பழுத்து உதிர் - கனிந்து உதிர்ந்த, கனிச்சுவை பண்பது ஆக - பழச்சுவையின் குணத்தைப்போல, எ-று.



பரமருள்பாகவதந்தன்னிலே
வரன்முறையுரைத்திடும்வண்மைகாண்மின்
புரவலகவிஞரேயெனப்புகன்றுமெய்த்
திரந்திரம்பரன்பரன்செங்கண்மாலென்றான். (௩௪)

(இ-ள்.) பரம் அருள் - பரகதியைத் தருகின்ற, பாகவதம் தன்னிலே - ஸ்ரீ பாகவதத்தில், வரல் முறை - வரல் முறையாக, உரைத்திடும் - சொல்லுகின்ற, வண்மை - வளப்பத்தை, காண்மின் - காணுங்கள், புரவல கவிஞரே எனப்புகன்று - அரசனே வித்வான்களே என்றுசொல்லி, மெய் திரம் திரம் - உண்மை சத்தியம் சத்தியம், செங்கண்மால் - செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய திருமால், பரன் பரன் என்றான் - மேலானவன் மேலானவன் என்று சொன்னார், எ-று.

அனைத்துலகுயிரெலாமன்னுமோரொளி
நனைத்துழாயலங்கல்சேர்நாரணன்றனை
வினைத்திறங்கடந்தவன்காட்டிவேணியான்
றனைப்பரமறந்திதுசாற்றினனரோ. (௩௫)

(இ-ள்.) அனைத்து உலகு - எல்லாவுலகங்களும், உயிர் - (அவற்றில் வாழ்கின்ற) ஜீவராசிகளும் ஆகிய, எல்லாம் - எல்லாவற்றுள்ளும், மன்னும் - நிலைபெற்றிருக்கிற, ஓர் ஒளி - ஒப்பற்ற தேஜஸ்ஸாகிய, நனை துழாய் அலங்கல் சேர் - குளிர்ந்த துளசிமாலையையணிந்த, நாரணன் தன்னை - திருமாலை, வினைத்திறம் கடந்தவன் - வினையின் பகுதியைச் செயித்தவராகிய சுகோசர், காட்டி - காண்பித்து, வேணியான் தன்னை - சடாபாரத்தையுடைய சிவனது, பரம் - பரத்வத்தை, மறந்து - மறைந்து, இது சாற்றினன் - இதைச்சொன்னனர், எ-று.

மூவுலகங்களுமொழிந்தயாவையு
மாவதுநிற்பதுமழிவதுந்திரு
மாவுறைமார்பினன்மனத்தினாடன்மற்
றியாவையுமொருங்கலங்கவனுமொன்றனர். (௩௬)

(இ-ள்.) மூவுலகங்களும் - த்ரிலோகங்களும், மொழிந்த யாவையும் - சொல்லப்பட்ட எல்லாப்பொருள்களும், ஆவதும் - தோன்றுவதும், நிற்பதும் - நிலைத்திருப்பதும், அழிவதும் - நசிப்பதும், திருமா உறை மார்பினன் - பெரிய பிராட்டியார் வசிக்கின்ற மார்பினையுடையவனாகிய திருமாலின், மனத்தின் ஆடல் - மநோ சங்கல்பமாம், (ஆதலால்) யாவையும் - எல்லாப் பொருள்

களும், ஒடுங்கல் - லயிப்பது, அங்கு அவனுள் - அவனிடத்திலேதான், என்றனன் - என்று சொன்னார், எ-று.

கள்ளுறுதுளவணிகருணைக்கண்ணனை
யுள்ளவாறுணர்த்துமிவ்வொண்பொருட்சுவை
கொள்ளுவார்பேரின்பங்குலவுநாட்டிடை
விள்ளுதலின்றியெந்நாளுமேவுவார் (௩௭

(இ-ள்.) கள் உறு துளவு அணி - தேன்பொருந்திய துளசிமாலையை யணிந்த, கருணைக் கண்ணனை - கருணாகடாக்ஷமுடைய திருமாலை, உள்ளவாறு உணர்த்தும் - உள்ளபடியே தெரிவிக்கின்ற, இவ்வொண் பொருள் சுவை - இந்த நன்மையாகிய அர்த்த சாரத்தை, கொள்ளுவார் - உட்கொள்வோர், பேரின்பம் குலவும் நாட்டிடை - பேராநந்தம் விளங்குகின்ற நாடாகிய பரமபதத்தில், விள்ளுதல் இன்றி - நீங்காமல், எந்நாளும் மேவுவார் - எக்காலத்திலும் பொருந்தி வாழ்வார்கள், எ-று.

இருபத்தொன்றாவது சிரோமாலைக்கட்சி முற்றிற்று.

ஆக திருவிருத்தம், ௩௫௩......

# இருபத்தொன்றாவது
# சிரோமாலைக் கட்சி.

முதலாவது—கற்பங்கள்தோறும் ப்ரஹ்மாவினிடத்திலும் விஷ்ணுவினிடத்திலும் சிவன் பிறந்ததாய், உ-வது கக்ஷி உ, ௩-தொடரில் சொல்லியிருக்க, அப்படிப்பட்ட தன் பிதாவினுடைய சிரசைத் தான் கொய்து மாலையாகத் தரித்தானென்பது ஷை சுருதிகளுக்கெல்லாம் விரோதம்.

இரண்டாவது—விஷ்ணுவானவர் கற்பாந்தத்தில் ப்ரஹ்ம ருத்ரர்களை ஸம்ஹரித்த காரணத்தினாலே விஷ்ணுவுக்கு ஹரியென்கிற திருநாமம் வேத ஆதியிலும் அந்தத்திலும் ஹரிঃ ஓம் என்று சொல்லப்பட் டிருக்கின்றதை, விஷ்ணுவின் ஸஹஸ்ரநாம வியாக்கியானமாய் வியாசரால் சொல்லப்பட்டதில், (బ్రహ్మాణమింద్రంరుద్రంచ యమంవరుణమేవచ। నిగృహ్యహరతేయస్మాత్ తస్మాద్ధరిరిహోచ్యతే) என்றதில் ப்ரஹ்மா, இந்திரன், ருத்ரன், இயமன், வருணன் இவர்களை விஷ்ணுவானவர் நிக்ரஹித்து ஹரித்த காரணத்தினாலே, ஹரிঃ என்ற திருநாமம் உண்டாயிற்றென்று சொன்னதற்கு ஸஹஸ்ரநாம வியாக்கியான பாஷ்யத்தில், சங்கராசாரியர் இராமாநுஜாசாரியார், மத்வாசாரியார் இவர்கள் செய்த பாஷ்யங்களிலும், இப்படியே வியாக்யானஞ் செய்திருக்கிறதுமல்லாமல், சிவன் ப்ரஹ்மாவினுடைய சிரசை அறுத்து அவன் இறந்தது மெய்யேயானால், சுருதியில் கற்பாந்தத்தில் (నబ్రహ్మేశానః) என்று ப்ரஹ்மாவும் ஈசானனும், இரண்டுபேரும் ஏககாலத்திலே விஷ்ணுவினால் இறந்ததாகச் சொல்லியிருக்கிற சுருதிகளுக்கும் விரோதமாயிருக்கிறபடியால், சைவர்கள் சொல்வது அசத்தியம்.

மூன்றாவது—தன்பிதாவாகிய ப்ரஹ்மாவினுடைய ஒரு சிரசைக் கொய்ததற்கு வந்த ப்ரஹ்ம ஹத்தி தொலையும்படி காசியில் சிவனுக்கு ௩-வது கக்ஷி உ-வது தொடரில், இராமதாரக மந்த்ரத்தை உபதேசித்ததாய், சுருதியில் இராமோபநிஷத்திலும், பாத்மோத்தரத்திலும், பாகவதாதி புராணங்களிலும் சொல்லியிருக்கிறபடியே, கபாலியென்கிற பெயருடனே கூடிக் கபாலமோக்ஷமென்று அந்தக் கபாலத்தை விஷ்ணுவினாலே போக்கினதாயுஞ் சொல்லியிருக்கையால், சைவர்கள் சொல்வதெல்லாம் அபத்தமென் றறியலாம்.

# இருபத்திரண்டாவது

# ஞானமோக்ஷகட்சி.

ஐயனுயர்மெய்யன்மிகுஅய்யனடியார்கள்
உய்யுநெறியாகியவொருத்தனுளனிருத்தன்
செய்யமலர்க்கடைசடைநிகழ்ந்தவருண்மாரி
பெய்யுமமுதத்திடைபிறந்தசடகோபன். (க)

(இ-ள்.) ஐயன் - எல்லாருக்கும் கடவுள், உயர் மெய்யன் - உயர்ந்த மெய்ப்பொருளாயிருப்பவன், மிகு அய்யன் - மிகுந்த பரிசுத்தன், அடியார்கள் உய்யும் நெறி ஆகிய ஒருத்தன் - தன்னடியார்கள் உஜ்ஜீவித்தற் கேதுவாகிய அத்விதீயன், உள் நிருத்தன் - அவர்களுடைய ஹ்ருதயத்தில் நடிப்பவன், (அவனது) செய்யமலர் - செந்தாமரை மலர்போன்ற, கண்கடை நிகழ்ந்த - கடைக்கண்ணில் விளங்கிய, அருள்மாரி பெய்யும் - கருணை வர்ஷத்தைப் பொழிகின்ற, அமுதத்திடை - அம்ருதத்தில், பிறந்த - உண்டாகிய, சடகோபன் - நம்மாழ்வாராவர், எ-று.

பொன்னடியெனும்பொருவில்பூதபுரிநாதன்
தன்னிகரில்அத்திகிரிதற்பரனொடுள்ளத்
துன்னியதுரைக்கவவருற்றபடியோதப்
பன்னுதிருக்கச்சிநம்பியைப்பரவியேத்தி. (உ)

(இ-ள்.) பொன்னடியெனும் - பொன்னடியென்று சொல்லப்படுகிற, பொருவு இல் - ஒப்பற்ற, பூதபுரி நாதன் - ஸ்ரீ பூதபுரிக்கு நிர்வாஹகனாகிய ஸ்ரீ பாஷ்யகாரர், தன் நிகர் இல் - தனக்குச் சமானமில்லாத, அத்திகிரி தற்பரனொடு - ஹஸ்திகிரியில் எழுந்தருளியிருக்கிற தேப் பெருமாளுடன், உள்ளத்து உன்னியது உரைக்க - தம் திருவுளத்தில் நினைத்ததைச் சொல்ல, அவர் உற்றபடி ஓத - அவர் உள்ளவாறு சொல்ல, பன்னு - புகழ்தற்குரிய, திருக்கச்சி நம்பியை - திருக்கச்சி நம்பியை, பரவி ஏத்தி - வழிபட்டுத் துதித்து, எ-று.

காரணன்பரந்துவிதநண்ணல்பிரபத்தி
கூறுதலுபாயமெய்க்குருப்பெரியநம்பி
சேருமந்தமுத்தியன்பர்சேர்வர்சரமச்சொல்
சோரினுமதுண்டெனவேசொல்லுமறுவார்த்தை. (ங)

(இ-ள்.) காரணன் - தேப்பெருமாள், பரம் - பரதத்வம் நாமே, துவிதம் - பேதமே தர்சனம், நண்ணல் - அந்திமஸ்ம்ருதியும் வேண்டா, உபாயம் பிரபத்தி கூறுதல் - உபாயமும் ப்ரபத்தியே, மெய்க்குரு பெரிய நம்பி -



உண்மையாகிய ஆசாரியன் பெரியநம்பியே, சேரும் - அடைதற்குரிய, முத்தி - மோக்ஷத்தை, அந்தம் - சரீராவஸானத்தில், அன்பர் சேர்வர் - அடியார் அடைவர், சரமச்சொல் சோரினும் அது உண்டு - சரமச்லோகார்த்தத்தை மறந்தாலும் அது உண்டு, என சொல்லும் - என்று சொல்லிய, அறு வார்த்தை - ஆறு வார்த்தைகளையும், எ-று.

இந்த ஆறுவார்த்தைகளின் வரலாற்றைக் குருபரம்பராப்ரபாவத்தில் இளையாழ்வார் வைபவத்தில் பரக்கக் காணலாம்.

கேட்டருள்செயத்திகிரிகேசவனையென்றுள்
நாட்டமுறுவோனொடுநவிற்றியதுதேர்ந்தோன்
காட்டினுறுமோர்பிரமராக்கசவினுக்கு
வீட்டினியறந்தருளுமெய்யனெதிராசன். (ச)

(இ-ள்.) அத்திகிரி கேசவனை - ஹஸ்திகிரித் தேப்பெருமாளை, கேட்டு அருள் செய் - கேட்டு அருள் செய்வாய், என்று - என்று, உள்நாட்டம் உறுவோனொடு நவிற்றி - ஞானசக்ஷுஸ்ஸையுடையவராகிய திருக்கச்சி நம்பியோடு சொல்லி, அது தேர்ந்தோன் - அந்த அர்த்தத்தை நிஸ்ஸம்சயமாகத் தெளிந்தவன், காட்டின் உறும் - வனத்தில் வாழ்கின்ற, ஓர் - ஒப்பற்ற, பிரமராக்கசவினுக்கு - ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸுக்கு, வீட்டின் இயல் தந்தருளும் - மோக்ஷமார்க்கத்தைத் தந்தருளிய, மெய்யன் - உண்மையையுடையோனாகிய, எதிராசன் - யதிஸ்ரேஷ்டன், எ-று.

தன்அடியனென்றுரைதழைத்ததிருக்கூர
மன்னவனிருந்தகவிவாணரையமைச்சை
மின்னுமுடிவேந்தனையும்நோக்கியவைதன்னில்
சொன்னதவன்மெய்யடிதுதித்தினிதுசொல்வாம். (ரு)

(இ-ள்.) தன் அடியன் என்ற உரை தழைத்த - தனது அடியவனென்கிற சொல்லானது எங்கும் பரவிய, திருக்கூர மன்னவன் - திருக்கூராதிபன், இருந்த - அவ்விடத்தில் இருந்த, கவிவாணரை - வித்வான்களையும், அமைச்சை - மந்திரியையும், மின்னும் - பிரகாசிக்கிற, முடி - ரத்ந கிரீடத்தைத் தரித்த, வேந்தனையும் - சோழராஜாவையும், நோக்கி - பார்த்து, அவை தன்னில் - சபையில், சொன்னது - சொல்லிய விஷயத்தை, அவன் மெய்யடி துதித்து - அவனது உண்மையாகிய திருவடியை ஸ்தோத்ரம்பண்ணி, இனிது சொல்வாம் - இனிதாகச் சொல்லுவாம், எ-று.

வேறு.

அருவமாயதிதாரமாகியவனித்துமாகியொளித்துமே
கருதுவார்நினையுருவமாயருள்காரணன்பரிபூரண
னுருவமேயுலகுயிரெலாமதிலுற்றமுற்றிடலன்றியே
மருவியாருநகிகருநாரணன்வன்பரத்துவமென்றனன். (சு)

(இ-ள்.) அருவம் ஆய் - அரூபமாகி, அதி தூரம் ஆய் - மிகவுந் தூரமாகி, அணித்தும் ஆகி - சமீபமுமாகி, உள்ளே ஒளித்து - உள்ளே மறைந்து, கருதுவார் - நினைப்போர், நினை - நினைக்கின்ற, உருவம் ஆய் - ரூபமாகி, அருள் - அருள் செய்கிற, காரணன் - ஜகத்காரணனும், பரிபூரணன் - பரிபூர்ணஸ்வரூபனும் ஆகிய தனது, உருவமே - ரூபமே, உலகு உயிர் எல்லாம் - உலகங்களும் அவற்றிலுள்ள ஜீவராசிகளுமாயிருப்பது, அதில் உற்றும் - அவற்றில் பொருந்தியும், உற்றிடல் இன்றியே மருவி - பொருந்துதல் இல்லாமலே பொருந்தி, மாருதம் நிகரும் - காற்றை யொத்திருக்கிற, நாரணன் - ஸ்ரீமந் நாராயணன், வன் பரத்துவம் என்றனன் - வளமையாகிய பரவஸ்து வென்று சொன்னார், எ-று.

என்றுரைத்தருள்கூரமேவியவெந்தையின்றிருமுன்னுறும்
வென்றிநற்கவிவாணர்தஞ்செவிமீதுகைகள்புதைத்துமா
நன்றிதென்றுநகைத்துரைத்தனர்நண்ணுமெய்யுணர்வோரெலா
மன்றுமின்றுநகைத்திடுந்திறமானதன்னதுகூறுவாம். (எ)

(இ-ள்.) என்று உரைத்து அருள் - என்று சொல்லியருளிய, கூரம் மேவிய - திருக்கூரத்தி லெழுந்தருளிய, எந்தையின் - எமது தந்தையாகிய கூரேசரது, திருமுன் உறும் - சந்நிதிக் கெதிரிலிருந்த, வென்றி - வெற்றியையுடைய, நல் கவிவாணர் - நல்ல வித்வான்கள், தம் செவி மீது கைகள் புதைத்து - தம்முடைய செவிகளைக் கைகளால் மூடி, இது மா நன்று என்று - இது மிகவும் நன்று என்று, நண்ணும் மெய் உணர்வோர் எல்லாம் - பொருந்திய மெய்யறிவையுடையோ ரெல்லாரும், அன்று இன்றும் - அக்காலத்தும் இக்காலத்தும், நகைத்திடும் திறம் ஆனது - சிரித்தற்குரியதான விஷயத்தை, நகைத்து உரைத்தனர் - சிரித்துக்கொண்டு சொன்னார்கள், அன்னதை அறைகுவாம் - அதைச் சொல்லுவோம், எ-று.

கங்கைதங்கியசெஞ்சடாதரகாளகந்தரசுந்தரன்
மங்கைபங்கனெவர்க்குமெய்நெறிவண்மைஞானமுமுத்தியுந்
தங்கவிங்கருள்செய்திடுஞ்சிவசங்கரன்பரதெய்வமென்
றங்கனந்தமுரைத்திரைத்தனரந்தசைவர்கள்விந்தையாய். (அ)

(இ-ள்.) கங்கை தங்கிய - கங்காநதி நிலைபெற்ற, செம் சடாதர - செவந்த சடாபாரத்தைத் தாங்கிய, காளகந்தர - விஷகண்டத்தையுடைய, சுந்தரன் - அழகன், மங்கைபங்கன் - உமாதேவியைப் பாகத்திலுடையவன், எவர்க்கும் - எல்லாருக்கும், மெய் நெறி - உண்மை மார்க்கத்தையும், வண்மை ஞானமும் - வளமாகிய ஞானத்தையும், முத்தியும் - மோக்ஷத்தையும், தங்க - நிலைபெறும்படி, இங்கு அருள் செய்திடும் - இவ்விடத்தில் அருள் செய்கிற, சங்கரன் - சங்கரனே, பரதெய்வம் என்று - மேலான தெய்வமென்று, அங்கு - அந்தச் சபையில், அநந்தம் உரைத்து - அநேக வாக்யங்களைச் சொல்லி, அந்தச்



சைவர்கள் - அந்தச் சைவ வித்வான்கள், விந்தையாய் - ஆஶ்சர்யகரமாக, இரைத்தனர் - பேரொலி செய்தார்கள், எ-று.

சம் கரன் - சுகத்தைச் செய்கிறவன்.

இன்னவாறுரைசெய்தசைவர்களென்னுமானுயர்குழுவினில்
துன்னுமாணரியென்னவேமதிதோய்மாடமலர்ப்பொழிற்
பன்னுமம்புயநற்றடங்கள்பரந்துபால்வளைமேய்வயல்
மன்னுகூரநகர்ப்பிரானவர்வாதைவென்றுமறுப்பரால். (கூ)

(இ-ள்.) இன்ன ஆறு - இந்தப்ரகாரம், உரை செய்த - சொல்லிய, சைவர்கள் என்னும் - சைவர்கள் என்கிற, மான் உயர் குழுவினில் - மானினது பெரிய திரளில், துன்னும் - பொருந்திய, ஆண் அரி என்ன - ஆண் சிங்கம்போல, மதி தோய் மாடம் - சந்திரனை யணுகிய மாளிகைகளும், மலர் பொழில் - பூஞ்சோலைகளும், பன்னும் அம்புயம் நல் தடங்கள் - புகழ் தற்குரிய நல்ல தாமரைத் தடாகங்களும், பரந்து பால் வளை மேய் வயல் - பரவி வெண்மையாகிய சங்குகள் மேய்கின்ற வயல்களும், மன்னு - நிலைபெற்ற, கூர நகர் பிரான் - திருக்கூர நகரத்துக்குத் தலைவராகிய கூரேசர், அவர் வாதை வென்று - அந்தச் சைவர்களுடைய தர்க்க வாதங்களை ஜெயித்து, மறுப்பர் - தடைசெய்வாராயினர், எ-று.

வேறு.

ஆதிகாலத்திநாராயணன்றிருவருளினாலே
சாதநமாகுந்தூயதாரகப்பிரமந்தன்னைப்
போதநுஞ்சிவனுக்கோதிப்பூசனைபுனைப்புரிந்தோர்
பூதலந்தன்னில்ஞானம்பொருந்திடக்கடவதென்றும். (ம)

(இ-ள்.) ஆதி காலத்தில் - முற்காலத்தில், நாராயணன் - ஸ்ரீமந் நாராயணன், திரு அருளினாலே - தன் திருவருளினால், சாதநம் ஆகும் - மோக்ஷ சாதநமாகிய, தூய - பரிசுத்தமாகிய, தாரகப்பிரமம் தன்னை - தாரகப்ரஹ்மத்தை, போத - மிகவும், நும் சிவனுக்கு ஓதி - உங்கள் சிவனுக்குச் சொல்லி, உன்னை பூசனை புரிந்தோர் - உன்னைப் பூஜை செய்தவர், பூதலம் தன்னில் - பூமண்டலத்தில், ஞானம் பொருந்திடக்கடவர் என்றும் - ஞானத்தை யடையக்கடவ ரென்றும், எ-று.

மோகநசாத்திரத்தைமுகுந்தனதருளினாலே
யாகமமிருபத்தெட்டுமரன்புரிந்திடுமக்காலே
யேகமாயனைத்துமாகுமிராமதாரகமெய்ப்போத
மேகநேர்மாலாற்குவிளம்பியமேன்மையாலும். (மக)

(இ-ள்.) மோகந சாத்திரத்தை - மோஹந சாஸ்த்ரங்களை, முகுந்தனது அருளினாலே - திருமாலின் கருணையால், அரன் - சிவன், ஆகமம் இருபத்தெட்டும் புரியும் அக்காலே - சைவாகமங்கள் இருபத்தெட்டையும் செய்த

அந்தக் காலத்தில், ஏகம் ஆய் - ஒன்றாகி, அனைத்தும் ஆகும் - எல்லாம் ஆகிய, இராமதாரகம் - ராமதாரகமென்கிற, மெய் போதம் - உண்மை ஞானத்தை, மேகம் நேர்மால் - நீலமேகத்தையொத்த திருமாலானவர், அரற்கு விளம்பிய மேன்மையாலும் - சிவனுக்கு உபதேசித்த மேன்மையினாலும், எ-று.

அம்புவியொருதாள்விண்ணோரடியெனவளந்தோன்றாளிற்
செம்பதுமத்தோன்பூசைசெய்ததிவ்வியவான்கங்கைப்
பைம்புனற்பெருமையாலேபல்லுலகோரும்போற்று
மும்பர்நாடனையகாசியுயர்நகர்சிவனுக்கீந்தும். (௱௨)

(இ-ள்.) அம்புவி ஒரு தாள் - மண்ணுலகம் ஒரு திருவடி, விண் ஓர் அடி - விண்ணுலகம் ஒரு திருவடி, என - என்று சொல்லும்படி, அளந்தோன் தாளில் - அளந்தவனாகிய த்ரிவிக்ரமனது திருவடியில், செம்பதுமத்தோன் - செந்தாமரைமலரை யிடமாக வுடையவனாகிய ப்ரஹ்மதேவன், பூசைசெய்த - திருமஞ்சநம் செய்த, திவ்வியம் - மனோஹரமாகிய, வான் கங்கை - ஆகாச கங்கையின், பைம்புனல் பெருமையாலே - பசுமையாகிய நீரின் பெருமையினால், பல் உலகோரும் போற்றும் - பல உலகத்தாரும் வணங்குதற்குரிய, உம்பர் நாடு அனைய - தேவலோகத்தையொத்த, காசி - காசியென்கிற, உயர்நகர் - உயர்ந்த க்ஷேத்ரத்தை, சிவனுக்கு ஈந்தும் - சிவனுக்குக் கொடுத்தும், எ-று.

அப்பெரும்பதியில்வீயுமணிசராசரங்கட்கெல்லாஞ்
செப்புமிவ்வண்டத்துள்ளேதிகழ்ந்திடுமுத்திதந்து
மெய்ப்பொருளிதுவேயென்னும்வீறுடன்வாழ்தியென்று
மைப்புரைமாயனாணைவரம்புகன்றருளலாலும். (௱௩)

(இ-ள்.) அப் பெரும் பதியில் வீயும் - அந்த மஹா க்ஷேத்ரத்தில் இறக்கிற, அணி சராசரங்கட்கு எல்லாம் - அழகாகிய சராசர ஜீவராசிகளுக்கெல்லாம், செப்பும் இ அண்டத்துள்ளே - சொல்லப்படுகிற இந்த அண்டத்துக்குள்ளே, திகழ்ந்திடும் முத்தி தந்து - விளங்குகின்ற மோக்ஷத்தைக் கொடுத்து, மெய் பொருள் இதுவேயென்னும் வீறுடன் - யதார்த்தமாகிய அர்த்தம் இதுவேயென்கிற மேன்மையோடு, வாழ்தியென்று - வாழக்கடவை யென்று, மைபுரை - நீலமேகத்தையொத்த, மாயன் - திருமாலானவர், ஆணை வரம் புகன்றருளலாலும் - தன்மீது ஆணையாக வரப்ரதாநம் செய்தருளலாலும், எ-று.

அரன்புரிசருவமேதயாகமதுவந்தமாயன்
வரன்பிரத்தியக்கமாகிவகுத்தனமுனக்கியாதென்னிற்
திரந்தருஞானனெங்குஞ்செறிவியாப்பியன்மாதேவ
னரும்பெயரிவையோர்மூன்றுமடைந்துயர்ந்திருத்தியென்றும்.

(இ-ள்.) அரன் புரி - சிவன் செய்த, சருவமேதயாகமது - சர்வமேத யாகத்தை, உவந்த மாயன் - உவந்தருளின திருமாலாகிய, வரன் - மேலான வர், பிரத்தியக்கம் ஆகி - ப்ரத்யக்ஷமாகி, உனக்கு வகுத்தனம் - உனக்கு வகுத்திருக்கின்றோம், யாது என்னின் - யாதென்று வினவினால், திரம் தரும் ஞானன் - உறுதியைத்தருகின்ற ஞானன், எங்கும் செறிவியாப்பியன் - எவ்விடத்தும் பொருந்திய வ்யாப்யன், மா தேவன் - மஹா தேவன், அரும்பெயர் இவை ஓர் மூன்றும் - அருமையாகிய பெயர்களாகிய இவையொரு மூன்றையும், அடைந்து - பெற்று, உயர்ந்து இருத்தியென்றும் - உயர்வை யடைந்திருப்பாய் என்றும், எ-று.



நாரணனின்னதெல்லாநண்ணியங்கருளலாலே
வாரணத்துரிதரித்தமதிநதிச்சடையன்றானுந்
தாரணிக்குயர்வாயோதத்தகுவதாம்ஞானமோக்கக்
காரணன்போலுஞ்சொன்னகாரியமடைந்துயர்ந்தான். (௱௫)

(இ-ள்.) நாரணன் - திருமால், இன்னது எல்லாம் - இவைகளெல்லாம், நண்ணி அங்கு அருளாலே - பொருந்தி அவ்விடத்து அருள் செய்தலால், வாரணத்து உரி தரித்த - யானைத்தோலை யணிந்த, மதி நதிச்சடையன்தானும் - சந்த்ரனையும் கங்கையையுமணிந்த சடையையுடையவனாகிய சிவனும், தாரணிக்கு - பூமியில், உயர்வாய் ஓதத்தகுவது ஆம் - உயர்வா யெடுத்துச் சொல்லுதற்குரியதாகிய, ஞானம் - ஞானத்துக்கும், மோக்கம் - மோக்ஷத்துக்கும், காரணன்போலும் - காரணன் ஆனான்போலும், சொன்ன காரியம் அடைந்து உயர்ந்தான் - மேற்சொன்ன காரியத்தைப்பெற்று உயர்வை யடைந்தான், எ-று.

மருவிரிகமலக்கோயின்மருவிவீற்றிருக்கும்வேதன்
றருமுயர்சாபத்துக்குந்தக்கன்வெஞ்சாபத்துக்கும்
பிருகுதாருகவனத்துப்பெருந்தவர்சாபத்துக்கு
முருகிநெஞ்சயர்ந்துதுன்பமுற்றிடுஞ்சிவனுக்கந்நாள். (௱௬)

(இ-ள்.) மரு விரி கமலக்கோயில் மருவி - மணம் விரிந்த தாமரைமலராகிய கோயிலைப்பொருந்தி, வீற்றிருக்கும் - வீற்றிருக்கின்ற, வேதன் - ப்ரஹ்மதேவன், தரும் - தந்த, உயர் சாபத்துக்கும் - உயர்ந்த சாபத்துக்கும், தக்கன் வெம் சாபத்துக்கும் - தக்ஷப்ரஜாபதி கொடுத்த கொடிய சாபத்துக்கும், பிருகு - ப்ருகு முநிவன், தாருக வனத்து பெருந்தவர் - தாருகவனத்திலுள்ள, பெரிய தபஸ்விகள் (இவர்கள் கொடுத்த), சாபத்துக்கும் - சாபத்துக்கும், நெஞ்சு உருகி - மன முருகி, அயர்ந்து - சோர்ந்து, துன்பம் உற்றிடும் சிவனுக்கு - துக்கமடைந்த சிவனுக்கு, அந்நாள் - அக்காலத்தில், எ-று.

அருட்டிறைகொடுத்திடும்போதுநியிற்றுயிலுங்கொண்டல்
இருட்டியிற்சிறிதுநோக்காற்றிருவருள்புரிந்திடானேல்
மருட்டியமனவாக்காலேவாதுசெய்வதிங்கியார்
பொருட்டரனன்றேபோவான்புகழுமவ்வண்ணம்போமால். ()

(இ-ள்.) அருள் திரை கொழித்திடும் - அருளாகிய அலைகளை வீசுகின்ற, பேர் ஆழியில் - பெரிய க்ஷீராப்தியில், துயிலும் - யோக நித்ரைசெய்கின்ற, கொண்டல் - மேகவண்ணனாகிய திருமால், திருட்டியின் - கண்களின், சிறிது நோக்கால் - சிறு பார்வையால், திருவருள் புரிந்திடானேல் - திருவருள் செய்யானாயின், மருட்டிய மனவாக்காலே - மயக்குவித்த மனோவாக்குகளால், நீர் வாது செய்வது - நீங்கள் வாது செய்வது, இங்கு யார் பொருட்டு - இவ் விடத்து யார் பொருட்டாகும், அரன் அன்றே போவான் - சிவன் அன்றே நசிப்பன், புகழும் - அவனது கீர்த்தியும், அவ்வண்ணம் போம் - அந்தப்ரகாரமே நசித்தொழியும், எ-று.

இன்னணமநந்தமுண்டுண்டிசைப்பதற்களவுமுண்டோ
அன்னதன்மையினுங்களரன்பரமன்றன்றென்று
துன்னுபேரவையில்வைகித்துவன்றியசைவர்முன்னே
மன்னியகூரத்தெந்தைமறுத்தனனுரைத்தான்மன்னோ. (௰௮)

(இ-ள்.) இன்னணம் - இந்தப்ரகாரம், அநந்தம் உண்டு உண்டு - முடிவற்றன வுண்டு உண்டு, இசைப்பதற்கு அளவும் உண்டோ - சொல்வதற்கு எல்லையுமுண்டோ, அன்ன தன்மையினால் - அப்படிப்பட்ட தன்மையால், உங்கள் அரன் - உங்கள் சிவன், பரம் அன்று அன்று என்று - பரம்பொருள் அல்லன் அல்லன் என்று, துன்னு - பலரும் நெருங்கிய, பேர் அவையில் - பெரிய சபையில், வைகிது வன்றிய - தங்கி நெருங்கியிருந்த, சைவர் முன்னே - சைவருக்கெதிரில், மன்னிய - நிலைபெற்றிருந்த, கூரத்து எந்தை - திருக்கூரத்திலெழுந்தருளிய எமது தந்தையாகிய கூரேசர், மறுத்தனன் உரைத்தான் - (அவர்களுடைய கக்ஷியை) மறுத்துச் சொன்னார், எ-று.

அகிலமைந்தாகியப்புநான்கதாயனலோர்மூன்றாய்ப்
பகர்வளியிரண்டாய்வானமொன்றதாய்ப்பரந்துநின்ற
முகில்நிறக்கடவுளெந்தைமுன்னவன்பரமேயல்லாற்
புகலுமாறுண்டோவேறுபோதமெய்தெளிந்துளோர்க்கே. ()

(இ-ள்.) அகிலம் ஐந்து ஆகி - பூமியில் ஐந்தாகி, அப்பு நான்கதாய் - நீரில் நான்காகி, அனல் ஓர் மூன்று ஆய் - நெருப்பில் மூன்றாகி, பகர்வளி இரண்டு ஆய் - சொல்லப்பட்ட காற்றில் இரண்டாகி, வானம் ஒன்றதாய் - ஆகாசத்தில் ஒன்றாகி, பரந்து நின்ற - வ்யாபித்து நின்ற, முகில்நிறக் கடவுள் - மேகவண்ணக் கடவுள், எந்தை - எமது தந்தை, முன்னவன் - யாவருக்கு முன்னோன், (அவன்) பரமே அல்லால் - பரவஸ்துவேயன்றி, போத - மிகவும், மெய் தெளிந்துளோர்க்கு - உண்மையைத் தெளிந்திருப்பவர்க்கு, வேறு புகலும் ஆறு உண்டோ - வேறு சொல்லும் வழியுளதோ, எ-று.



முச்சுடர்க்கொளியுமாகிமூவரின்முதல்வனாகு
மச்சுதனறிவிலாதாரணமுடியின்மீதும்
நச்சராமுடியின்மீதுந்நண்ணியவன்பருள்ளும்
இச்சையினாடுஞ்செய்யவிருபதத்தொருவன்றானே. (௨௰)

(இ-ள்.) முச்சுடர்க்கு ஒளியும் ஆகி - மூன்று சுடர்களுக்கும் பிரகாசமாகி, மூவரில் முதல்வன் ஆகும் - மூவரில் முதல்வனாகிய, அச்சுதன் - நாசரஹிதன், அறிவு இல்லாதான் - ஒருவரும் அறிதல் அருமையானவன், ஆரண முடியின்மீதும், வேத சிரத்திலும், நச்சு அராமுடியின் மீதும் - விஷத்தையுடைய சர்ப்பத்தின் சிரத்திலும், நண்ணிய - அடைந்த, அன்பர் உள்ளும் - அன்பருடைய மனத்திலும், இச்சையின் ஆடும் - தனது ஸ்வேச்சையால் நடிக்கின்ற, இருபதத்து - இரண்டு திருவடிகளையுடைய, ஒருவன் - ஒப்பற்றவன், எ-று.

என்றருள்கூரத்தெந்தையிசைத்தவிப்பொருளினுண்மை
நன்றறிந்திருப்போர்கேட்போர்நவிலுவோரியாவரேனும்
பொன்றுதலின்றிஞானப்புணரியினமுதமாந்தி
வென்றிநாரணன்சீர்பாதமேவிவீற்றிருப்பர்மாதோ. (௨௧)

(இ-ள்.) என்று - என்று, அருள் - க்ருபையுள்ள, கூரத்து எந்தை - கூரேசராகிய எமது தந்தையார், இசைத்த - சொல்லிய, இப்பொருளின் உண்மை - இந்த அர்த்தத்தின் உண்மையை, நன்று அறிந்து இருப்போர் - நன்றாயறிந்திருப்பவரும், கேட்போர் - கேட்பவரும், நவிலுவோர் - சொல்வோரும் ஆகிய, யாவரேனும் - எவராயினும், பொன்றுதல் இன்றி - அழிதலில்லாமல், ஞானப் புணரியின் அமுதம் மாந்தி - ஜ்ஞாந சாகரத்தின் அம்ருதத்தைப் பாநம்பண்ணி, வென்றி - வெற்றியையுடைய, நாரணன் - ஸ்ரீமந் நாராயணனது, சீர்பாதம் மேவி - திருவடியைப் பொருந்தி, வீற்றிருப்பர் - வீற்றிருப்பார், எ-று.

இருபத்திரண்டாவது ஞானமோக்ஷகட்சி, முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் ௩௮௦.

# இருபத்திரண்டாவது

# ஞானமோக்ஷகட்சி.

முதலாவது—சிவன் தனக்கு ஞானம் உண்டாயிலன்றோ தன்னையடைந்தவர்களுக்குத் தான் ஞானப்ரதானம் பண்ணுவது (సత్యంజ్ఞానంతపోమానం) என்கிற ஶ்லோகத்தில் சொன்னபடியே ஸத்யமும் ஞானமும் தபசும் மௌனமுமான குணங்கள் சாத்விகத்தின் காரியமாகையால், உ-வது கக்ஷி முதலாவது தொடரில், சுருதி (విష్ణుస్సత్వగుణప్రణితోభవత్) என்று விஷ்ணுவை சாத்விக குணமுடையவனென்றும் (తస్యనాభేరజోత్పన్నస్వయంభూః) என்றதில் ப்ரஹ்மாவை இராஜஸ குணமுடையவனென்றும் (తథాతస్యభ్రూమధ్యాంతరాళాత్ తమోరుద్రప్రాదురభవత్) என்று சிவனைத் தாமசகுணவனும் (సగాణి) என்ற சுருதியில் சொல்லியிருக்க, ஸாத்விகத்தின் செய்கையான ஞானம் சிவனுக்கெங்கேயிருந்துண்டாயிற்று, தனக்கில்லாத ஞானத்தை தன்னை யடுத்தவர்களுக்கு எப்படி கொடுப்பார்.

இரண்டாவது—சிவனானவர் ஞானமுடையவராயில் தன் பிதாவாகிய ப்ரஹ்மாவினுடைய சிரசைக் கொய்து, அத்தால் ப்ரஹ்ம ஹத்தி உண்டாகிப் பாதகருய்த் திரிவாரா, அவரிடத்தில் குற்றங்கண்டு கொய்தாரெனில், விஷ்ணுவினுடைய மோஹினி வேஷத்தைத் தான் மறுபடியும் பார்க்கவேண்டுமென்று அபேட்சித்து, விஷ்ணுவானவர் தன் மாயையினாலே ஒரு ஸ்த்ரீயைக்கற்பிக்க, அவளைக்கண்டு ப்ரமித்துக் கானலை நீரென்றெண்ணி ஓடும் மான்களைப்போல ஓடுகிற அந்த ஸ்த்ரீயைப்பின்சென்று அத்தால் இந்திரியம் தொடைவழியே பெருகி அதில் சாஸ்தாவென்கிற க்ஷுத்ரதேவதை பிறந்ததாய், ஆக்னேயாதி புராணங்களில் சொல்லியிருக்கையால், புருஷ வேஷத்தைக்கண்டு ப்ரமிக்கை ஞானத்தின் காரியந்தானோ.

மூன்றாவது—இதுவுமன்றியில், பாத்மபுராணம் உத்தரபாகம், மாகமாஹாத்மியம் உ0-ம் அத்யாயத்தில் (ప్రకృతంశృణురాజేంద్ర కపాలంపాణినాధృత్। లోకేకపాలీభిక్షార్థీ భిక్షాటతిశంకరః) சிவன் தனது கையில் தலை ஓட்டைப் பிடித்துக்கொண்டு, பூமியில் பிச்சைக்காரனைப்போல் பிச்சைக்காகத் திரிந்தானென்றும் (అటన్భిక్షాంకదాచిత్సః ప్రాపదారువనంమహత్। సర్వలోకమనోహారి రూపలావణ్యశేవధిః) அப்படி திரிகிற அந்தச் சிவன் ஒருநாள் மிகுந்த அழகுள்ள ரூபமுடையவனாய்த் தாருகாவனத்திற் பிச்சையெடுக்கப்போய்ச்



சேர்ந்தானென்றும், (రూపేణమోహయామాస ఋషిపత్నీస్సహస్రశః। వీధీషుసంచరన్శంభు మహానధికరూపవాన్) அந்தச் சிவன் தாருகாவனத்தின் வீதிகளில் திரிந்து ருஷிகளுடைய பத்தினிகளைக் கும்பு கும்பாய் மோஹிக்கும்படி செய்தானென்றும், (తందృష్ట్వామునయస్సర్వే పత్నీస్స్వాస్సందనాతురాః। సమ్మోహయిత్వా నః పత్నీ రసౌగచ్ఛతిశంకరః) ருஷிகளெல்லாருஞ் சிவனைப் பார்த்து மோஹித்த தமது பத்தினிகளைப்பார்த்து, இந்தச் சிவன் நமது பத்தினிகளை மோஹிக்கும்படி செய்து திரிகிறானென்று சொல்லிக்கொண்டார்களென்றும், (ఇత్యుక్త్వా మునయస్సర్వే క్రోధవేగవశానుగాః। శేపుస్తేపరమేశానం సమేత్యసహసన్నృప) பிறகு அந்த ருஷிகளெல்லாம் மிகவுங்கோபித்துக்கொண்டு ஒன்றாய்ச் சேர்ந்து, சிவனுக்குச் சாபங்கொடுத்தார்களென்றும், (చిత్వాలింగంపతత్వస్య భూమౌసవృషణంమహత్। శప్తస్స్వేవంపశుపతే ర్వ్యాప్తిస్తూణౌరభవత్తథా) தனது லிங்கம் பூமியின் பேரிலறுந்து விழும்படி ருஷிகளினால் சாபமடைந்த அந்தச் சிவனுக்கு, அப்படியே சம்பவித்ததென்றும் சொல்லியிருக்கின்றது.

நான்காவது—ஞான குணியான இந்திராதி தேவர்கள் அகோராசாரியனை தேவிகளின் குய்யப்பிரதேசம் அழகாயிருக்குமென்பதைத் தான் கேட்டு அதிதியாய்வர, அமுது படைத்தவளின் யோனியைக் கண்டு பிரமித்து இந்திரியஸ்காலிதமாய், அசுவத்தாமா பிறந்தகதை பாரதத்தில் சொல்லியிருக்கையால் இது அஞ்ஞானத்தின் செய்கைதானோ, சுருதியில் தாமஸனென்று சொல்லியிருக்கையால், தாமஸகுணத்தில் ஸாத்விக முண்டாகவேமாட்டாது,

ஐந்தாவது—இரண்ய இரண்யகசிபு இராவண கும்பகர்ணாதிகளுக்குக் கொடுத்த வரங்களை விஷ்ணு அழித்துவிட்டபடியால், கண்டாகன்னனென்ற அசுரன் சிவனிடத்தில் காமியத்தை யபேட்கிப்பதில் ப்ரயோஜனமில்லையென்று தெளிந்து, அண்டத்துக்குப் புறம்பாய் அழியாத பதவியாகிய மோட்சவீட்டையே எனக்குப் பிரஸாதிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அதற்கதிகாரி நாமன்று - விஷ்ணுவே கடவனென்று சொல்லிவிட்ட பின்பு, கண்டாகர்ணன் கிருஷ்ணனைக்கண்டு பிணவிருந்திட்டு, கிருஷ்ணனை யுகப்பித்துத் தானுந் தன் தம்பியும் பரமபதத்துக்குப் போன கதை பாரதத்தைச் சார்ந்த ஹரிவம்சத்தில் சொல்லியிருக்கையால், சிவனுக்கு ஞானமுங் கிடையாது, மோட்ச வீட்டைக் கொடுப்பதற்கு அதிகாரமுங் கிடையாதென்பது, மிகவும் நிச்சிதமென்று கண்டித்துவிட்டார்.

# இருபத்துமூன்ருவது

# ஸிங்கயோகி கட்சி.

பணிபணித்துயிலுநாரணன்றனிரு
   பாதபங்கயமலர்ச்சுவை
யுண்டுவெனக்கொள்குருகைப்பிரானடியை
   யோதியாதவனுநிகரெனற்
கொண்ணுவொளிச்சுடரினுற்றுறைந்தவெதி
   யுத்தமன்பதமடைந்துளக்
கண்ணலனைத்துமுணர்கூரமேவுமொரு
   காரணன்பதம்வழுத்துவாம். (௧)

(இ-ள்.) பணிபணி துயிலும் - படங்களையுடைய பாம்பின்மீது நித்திரை செய்கிற, நாரணன் தன் - ஸ்ரீமந் நாராயணனுடைய, இருபாத பங்கய மலர்ச் சுவை - இரண்டு திருவடித் தாமரைமலர்களினுடைய சுவையை, உண்டு எனக்கொள் - தமக்கு ஆதாரமெனக் கொண்ட, குருகைப் பிரான் அடியை ஓதி - திருக்குருகூர்க்கு நிர்வாஹகராகிய நம்மாழ்வாருடைய திருவடியைப் புகழ்ந்துரைத்து, ஆதவனும் நிகர் எனற்கு ஒண்ணு - சூரியனும் சமானமென்று சொல்லுதற்குக் கூடாத, ஒளிச் சுடரின் - ஒளியையுடைய ஒரு சூரியனைப்போல, உற்று உறைந்த - பொருந்தி யிருந்த, எதி உத்தமன் பதம் அடைந்து - யதிராஜரது திருவடியை ஆஶ்ரயித்து, உள்ளக் கண்ணால் - மனக்கண்ணினால், அனைத்தும் உணர் - எல்லாவற்றையுமறிந்த, கூரம் மேவும் - திருக்கூரத்தி லெழுந்தருளிய, ஒரு - ஒப்பற்ற, காரணன் பதம் - முதல்வராகிய கூரேசரது திருவடியை, வழுத்துவாம் - துதிப்போம் (யாம்) எ-று.

நாட்டுநல்லறுயாவும்வீடுசர
   ணாந்தனம்புயமலர்ப்பதங்
காட்டுமாலுரைசுலோகமூன்றினாறு
   காளடைந்தபினெழிற்றிருக்
கோட்டியூர்க்குரவர்பாலுணர்ந்தவெதி
   கொண்டல்சொற்படியோர்மாதமிங்
கூட்டமின்றியுபவாசமுற்றதை
   யுணர்ந்தகூரநகரெம்பிரான். (௨)

(இ-ள்.) நாட்டும் நல் அறம் யாவும் - நிலைபெறுத்தப்பட்ட விலக்ஷணமான தர்மங்களெல்லாவற்றையும், வீடு - விடுகைக் கேதுவாகிய, சரணம் - சரணாகதிபண்ணுமிடம், தன் அம்புயம் மலர்பதம் காட்டும் - தனது தாமரை மலர்போன்ற திருவடியென்று காட்டுகின்ற, மால் உரை சுலோகம் - திரு



மாலைத் தனக்குப் பொருளாகக்கொண்ட ஶ்லோகத்தை, மூன்றின் அறுகால் நடந்தபின் - பதினெட்டுதரம் நடந்தபிறகு, எழில் திருக்கோட்டியூர் குரவர்பால் உணர்ந்த - அழகிய திருக்கோட்டியூர் நம்பிபக்கல் அறிந்த, எதி கொண்டல் - யதிகளுள் ஒருமேகம்போன்றவராகிய ஸ்ரீ பாஷ்யகாரருடைய, சொற்படி - சொல்லின்படி, ஓர் மாதம் - ஒரு மாசகாலம், இங்கு ஊட்டம் இன்றி - இவ்விடத்து உணவில்லாமல், உபவாசம் உற்று - உபவாசத்தை யடைந்திருந்து, அதை - அவ்வர்த்த விசேஷத்தை, உணர்ந்த - அறிந்துகொண்ட, கூர நகர் எம்பிரான் - திருக்கூரத் தெம்பெருமான், எ-று.

இந்த விஷயத்தை குருபரம்பராப்ரபாவத்தில் பார்க்கக் காணலாம்.

நீடுதண்டலையினுடமாமயில்க
   ணின்றிசைத்தலரில்வண்டுகள்
பாடகோகிலகுலங்கள்காகள
   பருங்குரற்றொனியிசைத்திட
மாடமீதுலவுதிங்களானன
   மடந்தைமார்கொழுநருடுறைந்
தாடல்கூருமெழில்வானநாடதனை
   யன்னகூரநகர்முன்னவன். (௩)

(இ-ள்.) நீடு தண்டலையில் - பெரிய சோலைகளில், மா மயில்கள் நின்று ஆட - அழகிய மயில்கள் நின்று ஆடாநிற்க, வண்டுகள் - வண்டுகளானவை, அலரில் - மலர்களில், இசைந்து பாட - பொருந்திப் பாடாநிற்க, கோகில குலங்கள் - குயிற் கூட்டங்கள், காகளம் - காகளம்போன்ற, பருகுரல் தொனி இசைத்திட - பெருங்குரலின் த்வநியைச் செய்ய, மாட மீது உலவு - மாளிகைகளின்மேல் உலாவுகின்ற, திங்கள் ஆநநம் - பூர்ண சந்த்ரனை நிகர்த்த முகத்தையுடைய, மடந்தைமார் - மாதர்கள், கொழுநரோடு உறைந்து - தம் கணவரோடு இருந்து, ஆடல் கூரும் - விளையாடுதல் செய்கிற, எழில் - அழகாகிய, வான நாடதனை அன்ன - ஸ்வர்க்கலோகத்தையொத்த, கூர நகர் - திருக்கூர நகரிலுள்ள, முன்னவன் - முதல்வராகிய கூரேசர், எ-று.

காகளம் - சிறு சின்னம்.

ஐந்துபூதமறைநான்குமுச்சுட
   ரருந்திரண்டுவினையொருவனுய்த்
தந்திரன்றிருவளித்தமூன்றினி
   றணைப்பவேறிபனெடரியா
னிந்தவண்ணமெய்விரித்தொடுக்குவ
   னிசைக்கின்குகாரணங்களோ
டிந்தெனும்புலனும்வென்றுளோர்கரு
   மறிந்திலாதபரன்மாயனே. (௪)

(இ-ள்.) ஐந்து பூதம் - பஞ்ச பூதங்களையும், மறை நான்கு - சதுர்வேதங்களையும், முச்சுடர் - மூன்று சுடர்களையும், அருந்து - (சேதநர்) அநுபவித்தற்

குரிய, இரண்டு வினை - இருவினைகளையும், ஒருவனாய் நின்று - முதல் மூர்த்தியாய் ஸ்ருஷ்டித்து, இரண்டு உரு அளித்து - இரண்டாம்மூர்த்தியாய் ரக்ஷித்து, மூவுருவில் - மூன்றாமூர்த்தியாய், சங்கரிக்க - ஸம்ஹாரம்பண்ண, அயன் - பிரமன், அரி - விஷ்ணு, அரன் - ருத்ரன், இந்த வண்ணம் - இந்தப்ரகாரமாக, மெய் விரித்து ஒடுக்குவன் - உண்மையாக (ப்ரபஞ்சங்களை) விரித்து (மறுபடியும் தன்னுள்ளே) அடக்கிக் கொள்வன், (அவன் யாரெனின்) இசைக்கும் - சொல்லப்பட்ட, நான்கு கரணங்களோடு - அந்தக் கரண சதுஷ்டயத்துடன், ஐந்து என்னும் புலனும் - ஐம்புலன்களையும், வென்றுளோர்களும் - வென்றிருப்பவர்களும், அறிந்திலாத பரன் - உணர்ந்திலாத மேலோனாகிய, மாயனே - திருமாலே, எ-று.

பஞ்ச பூதங்கள் - ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசங்கள். சதுர் வேதங்கள் - ருக் யஜுஸ் ஸாமாதர்வணங்கள். முச்சுடர்கள் - சோம சூர்யாக்நிகள். இருவினை - நல்வினை தீவினைகள். அந்தக்கரண சதுஷ்டயம் - மனம் புத்தி சித்தாஹங்காரங்கள். ஐம் புலன்கள் - சப்த ஸ்பர்ஸ ரூப ரஸ கந்தங்கள்.

என்றிசைத்தமொழிசோழனொடெதி
ரிசைந்தபாவலர்கள்செவியுற
நன்றுநன்றிவையுரைக்கிலாதவை
நவிற்றுவீரெனநவிற்றுவா
ரின்றுமாயவனிசைந்தரன்றிக
ழிலிங்கபீடமெனவிசைதலா
லொன்றிதேயமையுமெங்களாதிசிவ
னொருவனேபரமெனச்சொன்னார். (௫)

(இ-ள்.) என்று இசைத்த மொழி - என்று சொன்ன சொல்லை, சோழனொடு - சோழராஜனோடு, எதிர் இசைந்த பாவலர்கள் - (அவனுக்கு) எதிரிருந்த வித்வான்கள், செவி உற - காதினாற்கேட்டு, இது - இந்த வார்த்தை, நன்று நன்று - அழகிது அழகிது, உரைக்கில் - சொல்லுமிடத்து, எறு வாது நவிற்றுவீர் - (இதையன்றி) வேறெந்த வாதத்தைச் சொல்லமாட்டீர், என நவிற்றுவார் - என்று சொல்லுவார், இன்று - இப்பொழுது, மாயவன் - திருமால், இசைந்து - இணங்கி, அரன் - சிவனது, இலிங்கபீடம் என இசைதலால் - லிங்கத்துக்குப் பீடமாகப் பொருந்தியிருந்ததால், ஒன்று இதே அமையும் - இது ஒன்றே போதும், எங்கள் - எம்முடைய, ஆதி சிவன் ஒருவனே - முதல்வனாகிய சிவபெருமான் ஒருவனே, பரம் என சொன்னார் - பரவஸ்துவென்று சொன்னார்கள், எ-று.

இன்னவாறுபுகல்சைவர்பேரவை
யெனுங்கருங்கடலினிடையொரு
மன்னுசெங்கதிர்விரித்தெழும்பரிதி
மானஞானநெறிபெற்றுளோன்





பன்னகத்திறையுருக்கரந்தவெதி
பதிபதம்பதிமனத்தினன்
முன்னநான்மறையெடுத்துரைத்திடு
முகுந்தன்மெய்ப்பரமுணர்த்தினான். (௬)

(இ-ள்.) இன்ன ஆறு புகல் - இப்ப்ரகாரம் சொல்லிய, சைவர் - சைவர்களுடைய, பேர் அவை என்னும் - பெரிய சபையென்கிற, கருங்கடலின் இடை - கருங்கடலின் மத்தியில், ஒரு - ஒப்பற்ற, மன்னு - நிலைபெற்ற, செம் கதிர் விரித்து - சிவந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு, எழும் - உதயஞ்செய்கிற, பரிதி மான - ஸூரியனை நிகர்க்க, ஞானநெறி பெற்றுளோன் - ஞானமார்க்கத்தை யடைந்திருப்பவரும், பன்னகத்து இறை உரு கரந்த - ஆதிசேஷ ரூபத்தை மறைத்துவைத்த, யதிபதி பதம்பதி - யதிராஜரது திருவடியைப் பதித்து வைத்த, மனத்தினன் - மனதினை யுடையவரும் ஆகிய கூரேசர், முன்னம் - பழமையாகிய, நான்மறை - நான்கு வேதங்களும், எடுத்து உரைத்திடும் - எடுத்துச் சொல்லுகின்ற, முகுந்தன் - திருமாலின், மெய்ப்பரம் உணர்த்தினான் - உண்மையாகிய பரத்வத்தைத் தெரிவிப்பாராயினர். எ-று.

வேறு.

சொயம்புமநுவந்தரமாகச்சொல்லுமாதிமறைகாலி
லியம்புமவன்சத்திரயாகமினிதினியற்றுங்காலத்திற்
சயங்கொடேவர்முனிவர்களிற்சாத்துவிகமேதன்னுருவா
மயங்கொள்பரமாத்துமனெவனோமதிக்கவேண்டுமெனத்துணிந்தே.

(இ-ள்.) சொயம்பு மநுவந்தரமாகச் சொல்லும் - ஸ்வாயம்புவ மந்வந்தரமாகச் சொல்லப்படுகிற, ஆதி மறை காலில் - பழைய முறையின் காலத்தில், இயம்பும் அவன் - சொல்லப்பட்ட அவன், சத்திர யாகம் - சத்திர யாகத்தை, இனிதின் இயற்றும் காலத்தினில் - இனிதாகச் செய்யுங்காலத்தில், சயம் கொள் - வெற்றியைக்கொண்ட, தேவர் முனிவர்களில் - தேவர்களுள்ளும் முனிவர்களுள்ளும், சாத்துவிகமே - சத்வகுணமே, தன் உரு ஆம் மயம் கொள் - தன்னுருவமாகக்கொண்ட, பரமாத்துமன் எவனோ - பரமாத்மாவானவன் எவனோ, மதிக்கவேண்டும் - (அவனை) மதிக்கவேண்டுமென்கிற, எனத் துணிந்து - என்று நிச்சயித்து, எ-று.

பெருகுந்தேவவிருடிகண்மாப்பிரமவிருடிகளுமைந்த
மருவுமராசவிருடிகளுமற்றுமுனைவர்யாவரொக்கக்
கருதுமவர்களின்முதலாங்கடவுளிலக்கணத்தெரிப்பீர்
தருமம்மலத்தைநமக்கென்றோர்க்கத்தாவென்பவன்பணிந்தான்.

(இ-ள்.) பெருகும் - அதிகரித்த, தேவ இருடிகளும் - தேவவிருடிகளும், பிரம இருடிகளும் - ப்ரம்மரிஷிகளும், ஐந்தும் மருவும் - முத-

வில்லனவாகப் பொருந்திய, அரச இருடிகணம் - ராஜரிஷி கூட்டமும், மற்றும் உள்ளோர் - மற்றுமுள்ளோரை, மநுநோக்கி - மநுவானவன் பார்த்து, கருதும் மூவர்தமில் - நினைக்கத்தக்க த்ரிமூர்த்திகளில், முதல் ஆம் கடவுள் எவர் - முதற்கடவுளாயிருப்பவர் யாவர், இங்கு - இப்பொழுது, அவை தெரிப்பீர் - அந்த விஷயங்களை அடியேனுக்குத் தெரியப்படுத்துவீர், தரு மும்மலத்தை - மும்மலமாகிய விருக்ஷத்தை, வேரோடும் தடிந்தோரே என்று - வேருடன் தறித்துவிட்டவரே என்று புகழ்ந்து, உடன் பணிந்தான் - உடனே வணங்கினான், எ-று.

பணிந்துமநுவங்குரைகேட்கும்பரதத்துவநிண்ணயமதனைத்
துணிந்தங்கிருக்குமுனிவோர்கள்சொல்லாரறிந்துமறியார்போ
லிணைந்தொன்றியமாமகச்சாலையெனும்பேரவையிலனைவோர்க்கும்
பணந்தங்கரவிற்றுயின்மாயன்பரமென்றுணர்த்தும்பான்மையினால்.

(இ-ள்.) மநு - மநுவானவன், பணிந்து - வணங்கி, அங்கு - அவ்விடத்து, உரைகேட்கும் - அர்த்த விசேஷத்தைக் கேட்க விரும்புகிற, பரதத்துவம் - பரதத்துவத்தின், நிண்ணயம் அதனை - நிச்சயத்தை, அங்கு இருக்கும் முனிவோர்கள் - அவ்விடத்தில் இருக்கின்ற முனிவர்கள், துணிந்து - நிச்சயித்து, அறிந்தும் அறியார்போல் - அறிந்திருந்தும் அறியாதவர்கள்போல, சொல்லார் - சொல்லாதவர்களாயிருந்து, (பிறகு) இணைந்து - கூடி, ஒன்றிய - பொருந்திய, மா - பெரிய, மகச்சாலை என்னும் - யாக சாலையென்கிற, பேர் அவையில் - பெரிய சபையிலுள்ள, அனைவோர்க்கும் - எல்லோருக்கும், பணம் தங்கு - படம்பொருந்திய, அரவில் - (ஆதிசேஷன் என்னும்) சர்ப்பத்தின்மீது, துயில் - யோக நித்திரைசெய்கிற, மாயன் - மாயோனே, பரம் என்று - பரவஸ்துவென்று, உணர்த்தும் பான்மையினால் - அறிவிக்குந் தன்மையினால், எ-று.

அறைவார்மநுவிக்கிவைக்கிரமமாகவுணர்த்தவேண்டுமென
மறையோர்சேற்றினடுங்கம்பவகையாய்ச்சாய்ந்தவிடஞ்சாயு
முறையாலிவையிந்திரசாலமொழிவித்தையதாய்ப்பரமனிலை
நிறைகண்டுணர்தற்கரிதாகநெடியோனுகங்கடொறும்புரிந்தான். (௰)

(இ-ள்.) மநுவுக்கு - ஸ்வாயம்புவ மநுவுக்கு, இவை - இவைகளை, முறையால் - முறைமையாக, உணர்த்தவேண்டும் என - அறிவிக்கவேண்டுமென்று, அறைவார் - சொல்லுவார், மறையோ - வேதங்களோ, சேற்றில் நடும் கம்ப வகையால் - சேற்றில் நட்ட ஸ்தம்பம்போல, சாய்ந்த இடம் சாயும் முறையால் - சாய்ந்த பக்கமே சாயுங் க்ரமத்தினால், இவை - இவைகள், இந்திரசால மொழி வித்தையது ஆய் - இந்த்ரஜாலமென்று சொல்லப்பட்ட வித்தையாகி, பரமன் நிலை - பரம புருஷனது நிலைமையை, நிறைகண்டு உணர்தற்கு அரிது ஆக - பூர்த்தியாகக் கண்டறிதற்கரிதாயிருக்கும்படி, நெடியோன் - திருமாலானவர், உகங்கள் தொறும் புரிந்தான் - யுகங்கள்தோறும் (அவைகளை) உண்டாக்கினார், எ-று.



ஆதலாலங்கவன்செயலாமருமாமறையிற்பரமதனை
யேதமின்றியறைந்திடுவார்க்கிசைந்தங்குணர்வித்திடுவர்பின்னும்
போதமின்றிமயங்கினர்க்கப்பொருளாய்மயக்கம்புரிவிப்ப
ரோதினவன்றன்னிலையனந்தமுகங்களெனினுமுரைக்கரிதே. (௰௧)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், அங்கு - அவ்விடத்து, அவன் செயல் ஆம் - அவனாற் செய்யப்பட்டவைகளாகிய, அரு - அருமையாகிய, மா - பெரிய, மறையின் - வேதங்களைக்கொண்டு, பரம் அதனை - பரவஸ்துவை, ஏதம் இன்றி - குற்றமில்லாமல், அறைந்திடுவார்க்கு - சொல்வார்க்கு, இசைந்து - இணங்கி, அங்கு உணர்வித்திடுவர் - அவ்விடத்து அறிவித்திடுவன், பின்னும் - மேலும், போதம் இன்றி மயங்கினர்க்கு - அறிவில்லாமல் மயங்கினவர்களுக்கு, அப்பொருள் ஆய் - அந்தப்பொருளேயாகி, மயக்கம் புரிவிப்பர் - மயக்கத்தை யுண்டாக்குவன், (ஆதலால் அந்த வேதங்களைக்கொண்டு) அவன் தன்நிலை - அந்தத் திருமாலின் நிலைமையை, ஓதின் - சொல்லப்புகுந்தால், அநந்தம் முகங்கள் எனினும் - அளவற்ற முகங்களாயினும், உரைக்க அரிது - சொல்ல அரிதாகும், எ-று.

என்றென்றிருடிகணம்யாவுமிசைந்தோர்யூகமதுபுரிந்து
பின்னைகளிலேயுறைந்திடுமோர்பிரமமுனியாம்பிருகுவை
யொன்றுமுபசாரம்புரியாதுயருமபசாரங்கொளுவி
நின்றுமூவர்குணநிலையினெறிதேர்ந்தடையினெனவிடுத்தார். (௰௨)

(இ-ள்.) என்று என்று - என்றுசொல்லி, இருடிகணம் யாவும் இசைந்து - ருஷிசமூஹங்களெல்லாம் கூடி, ஓர் யூகமது புரிந்து - ஒரு யுக்தியைச் செய்து, பின்னைகளிலே - பின்னாள்களிலே, உறைந்திடும் - (அவ்விடத்துத்) தங்கியிருந்த, பிரமமுனி ஆம் பிருகுவை - ப்ரஹ்ம ருஷியாகிய ப்ருகு முனிவரை (நோக்கி,) நீர் - நீர், ஒன்றும் உபசாரம் புரியாது - சிறிதும் உபசாரம் செய்யாமல், உயரும் - மிகுதியாகிய, அபசாரம் கொளுவி நின்று - அபசாரம் செய்யும்படி செய்துநின்று, மூவர் - த்ரிமூர்த்திகளின், குண நிலையை - குணத்தினது நிலைமையை, நெறி - முறையாக, தேர்ந்து - தெளிந்துணர்ந்து, அடையின் என - வாருமென்று, விடுத்தார் - (அவரை) அனுப்பினார்கள், எ-று.

அன்னவண்ணம்பிருகுமுனியங்கணகன்றுபிரமனுல
கென்னப்புகல்சத்தியலோகத்தெய்தியயனிராசதனென்
றுன்னிச்சிவத்தாப்புவிமீதிலுயர்பூசனையுங்கோயிலுநீ
துன்னப்பெறுதல்லையெனவேசொல்லிச்சபித்தங்ககன்றனனால். ()

(இ-ள்.) அன்னவண்ணம் - அந்தப்ரகாரமே, பிருகு முனி - ப்ருகு முனிவர், அங்கண் அகன்று - அவ்விடம்விட்டு நீங்கி, பிரமன் உலகு என்னப் புகல் - ப்ரஹ்ம லோகமென்று சொல்லப்பட்ட, சத்திய லோகத்து எய்தி -

சத்ய லோகத்தை யடைந்து, அயன் - ப்ரஹ்மதேவன், இராசதன் என்று உன்னி சினந்து - ராஜஸகுணத்தையுடையவனென்று நினைத்துக் கோபித்து, புவிமீதில் - பூமியில், உயர் பூசனையும் - உயர்ந்த பூஜைகளையும், கோயிலும் - கோயிலையும், நீ துன்னப் பெறுதல் இல்லை என சொல்லி - நீ யடையப் பெறுத லில்லையென்று சொல்லி, சபித்து - சாபமிட்டு, அங்கு அகன்றனன் - அவ் விடத்தைவிட்டு நீங்கினர், எ-று.

அங்கணகன்றுகயிலாயத்தடைந்தேயுருத்திரனைச்சார்ந்தா
னுங்களரன்மன்மதலீலையுடனங்கிருப்பவதுநோக்கி
யிங்கணிவன்றாமதனென்றேயினியோர்காலத்திலிங்கமதாய்த்
தங்கக்கடவாயெனச்சினத்துச்சபித்தானகன்றான்றவமுனிவன். (௰௪)

(இ-ள்.) அங்கண் அகன்று - அவ்விடத்தைவிட்டு நீங்கி, கயிலாயத்து அடைந்து - கைலாசமலையை யடைந்து, உருத்திரனைச் சார்ந்தான் - ருத்ரனைச்சேர்ந்து, உங்கள் - உங்களுடைய, அரன் - ருத்ரன், மன்மத லீலையுடன் - மன்மத லீலையோடு, அங்கு இருப்ப - அவ்விடத்திருக்க, அது நோக்கி - அதைப் பார்த்து, இங்கண் - இவ்விடத்தில், இவன் - இந்த ருத்ரன், தாமதன் என்றே - தாமஸ குணத்தையுடையவனே யென்று துணிந்து, (அவனை நோக்கி) இனி ஓர் காலத்து - இனியொருகாலத்தில், இலிங்கமது ஆய் - லிங்க ரூபமாகி, தங் கக் கடவாய் என - நிலைபெறக் கடவாயென்று, சினத்துச் சபித்தான் - கோவித் துச் சாபமிட்டு, தவமுனிவன் - தபஸ்ஸையுடையவனாகிய ப்ருகு முனிவர், அகன்றான் - (அவ்விடம்விட்டு) நீங்கினவராய், எ-று.

மன்மத லீலை - ஸ்த்ரீஸம்யோகம்.

அகிலவுலகுங்காத்திடற்கோரண்டந்தனிலேவீற்றிருக்கு
முகில்நேர்திருமாலுலகடைந்தான்முறையாலுபசாரங்களங்கண்
தகவேசெய்தபடியானீசாத்துவிகன்பரப்பிரமன்
பகர்தற்கரியப்பிரசாதபரிசுத்தனுநீயெனறகன்றான். (௰௫)

(இ-ள்.) அகில உலகும் காத்திடற்கு - எல்லாவுலகங்களையும் காக்கும் பொருட்டு, ஓர் அண்டம்தனிலே வீற்றிருக்கும் - ஒரு அண்டத்தில் வீற்றிருக் கிற, முகில் நேர் - நீல மேகத்தையொத்த, திருமால் உலகு அடைந்தான் - திருமாலின் உலகமாகிய பரமபதத்தைச்சேர்ந்தார், (அப்பொழுது அந்தத் திருமாலானவர்) முறையால் - க்ரமத்தோடு, அங்கண் - அவ்விடத்தில், உப சாரங்கள் - உபசாரங்களை, தகவே செய்தபடியால் - தகுதியாகவே செய்த படியால், நீ சாத்துவிகன் - நீ ஸாத்விக குணத்தையுடையவன், பரப்பிரமன் - பரப்ரஹ்ம ரூபமாயிருப்பவன், பகர்தற்கு அரிய - சொல்லுதற் கரிதாகிய, பிர சாத பரிசுத்தனும் நீ - ப்ரஸாத பரிசுத்தனும் நீயே, என்று அகன்றான் - என்று புகழ்ந்து சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்கினவராய், எ-று.



அண்டர்முனிவர்நெருங்கியபேரவையாமகசாலையையடைந்து
கண்டபரிசங்குரைத்தருள்வான்கமலத்தயனிராசதனுஞ்
துண்டப்பிறைசேர்செஞ்சடையான்றுகளார்ந்திடுதாமதனுங்
கொண்டற்கிணைமால்சத்துவமெய்க்குணத்தோனெனப்பின்னுணர்த்
[துவனால். (௰௬)

(இ-ள்.) அண்டர் - தேவர்களும், முனிவர் - முனிவர்களும், நெருங்கிய - நெருங்கியிருக்கிற, பேர் அவை ஆம் - பெரிய சபையாகிய, மகசாலையை அடைந்து - யாகசாலையை யடைந்து, கண்ட பரிசு - தான்கண்ட வண்ணம் - அங்கு உரைத்திடுவான் - அவ்விடத்தில் சொல்வானாயினன், கமலத்து அயன் - தாமரைமலரை யிடமாகவுடைய பிரமன், இராசதன் ஆம் - ராஜஸ குணத் தையுடையவனுவான், துண்டப்பிறை சேர் - சந்த்ரகண்டம் பொருந்திய, செஞ் சடையான் - செவந்த சடாபாரத்தை யுடைய சிவன், துகள் ஆர்ந்திடு - குற் றம் நிறைந்த, தாமதன் ஆகும் - தாமஸகுணத்தை யுடையவனுவான், கொண் டற்கு இணை - நீலமேகத்துக்குச் சமானமாகிய, மால் - திருமால், மெய் - உண் மையாகிய, சத்துவ குணத்தோன் - ஸாத்விக குணத்தை யுடையவனுவான், என - என்று, பின் - மேலும், உணர்த்துவன் - தெரிவிக்கலாயினன், எ-று.

சத்தியஞ்சத்தியஞ்சுத்தத்துவபரந்தேவமவையேதா
ருத்தஞ்சககேசவமென்றேயொருசுலோகந்தனையுரைத்துச்
சித்தந்தெளியப்புகன்றதற்பின்தேவர்முனிவர்மனுமுதலோர்
இத்தித்தியென்றரவின்மிசைதிருத்தாணடித்தோன்பரந்தெளிந்தார்.

(இ-ள்.) சத்தியம் சத்யம் சுத்த தத்வ பரந்தேவமவையே தாருத்தம் சக கேசவம் - ஸத்யம் ஸத்யம் புனத்த தத்வ பரந்தேவமவையே தாருத்தம் ஸஹ கேசவம், என்று - என்று, ஒரு சுலோகம் தனை உரைத்து - ஒரு ஸ்லோகத் தைச் சொல்லி, சித்தம் தெளிய - (அங்குள்ள எல்லாருடைய) மனந்தெளி வையடையும்படி, புகன்றதற்பின் - சொன்னபிறகு, தேவர் - தேவர்களும், முனிவர் - முனிவர்களும், மநுமுதலோர் - மநுமுதலானவர்களும், தித்தித்தி யென்று - தித்தித்தியென்று, அரவின் மிசை - காளிங்கன் என்னும் பாம்பின் மீது, திருத்தாள் நடித்தோன் - திருவடிவைத்து நடனஞ் செய்தவனாகிய திரு மாலின், பரம் - பரத்வத்தை, தெளிந்தார் - தெளிந்தறிந்தார்கள், எ-று.

ஆதிமூர்த்திகேசவனேயாதலாலெவ்வேள்விகளுஞ்
சோதிமூலமவன்றனக்கேதுண்ணிந்துபிரீதிசெயக்கடவோ
நீதியிதுவேயெனவமரர்நெடுமாதவத்தோர்போதித்தார்
போதிலயன்சங்கரன்பிருகுபுகலுஞ்சாபந்தனையடைந்தார். (௰௮)

(இ-ள்.) ஆதி மூர்த்தி - ஆதிமூர்த்தியானவன், கேசவனே ஆதலால் - கேசவனேயாகையால், எவ்வேள்விகளும் - எந்த யாகங்களையும், சோதி

மூலம் - தேஜோரூபமாயும் ஜகத்காரணமாயுமிருக்கிற, அவன் தனக்கே - அந்தத் திருமாலுக்கே, துணிந்து - நிச்சயித்து - பிரீதி செயக்கடவோம் - சமர்ப்பணம் செய்யக்கடவோம், நீதி இதுவே என - ந்யாய மாவது இதுவேயென்று, அமரர் - தேவர்களும், நெடு மாதவத்தோர் - பெரிய தபஸ்விகளும், கேளித்தார் - நியமஞ் செய்துகொண்டார்கள், போதில் அயன் - தாமரை மலரில் வாழ்கின்ற ப்ரஹ்மாவும், சங்கரன் - சிவனும், பிருகு புகலும் சாபம் தனை அடைந்தார் - ப்ருகு முனிவர் சொன்ன சாபத்தை யடைந்தார்கள், எ-று,

மதனாற்பிருகுபெருஞ்சாபமருவுஞ்சிவனங்கதனால்
விதனாற்றாருகாவனத்துமெய்மாதவர்தங்கற்புடையார்
கதனாலுரைக்குஞ்சாபமதாற்கங்கைவேணியானிலிங்க
மதனுப்நீங்கிப்போதலுமேயங்கந்தனிலோர்பங்கமுற்றான். (௰௯)

(இ-ள்.) மதனால் - அஹங்காரத்தினால், பிருகு - ப்ருகு முநியின், பெருஞ்சாபம் - பெரிய சாபத்தை, மருவும் - அடைந்த, சிவன் - சிவனாவான், அங்கு அதனால் - அந்த ஹேதுவினாலும், விதனால் - வகையாக, தாருகா வனத்து - தாருகா வனத்திலுள்ள, மெய் - உண்மையாகிய, மாதவர் தம் - மஹா தபஸ்விகளுடைய, கற்புடையார் - கற்புடைய மனைவியர்கள், கதனால் உரைக்கும் - கோபத்தால் சொன்ன, சாபமதால் - சாபத்தாலும், கங்கை வேணி - கங்கையைச் சடையிற்றாங்கிய, அரன் - சிவனுடைய, இலிங்கம் - லிங்கமானது, அதன் ஆய் நீங்கிப்போதலும் - ஊதமாய் நீங்கிப்போனவுடனே, அங்கம் தனில் - தன் சரீரத்தில், ஓர் பங்கம் உற்றான் - ஒரு பிங்கத்தை யடைந்தான், எ-று.

இலிங்கமிழந்தேயங்கபங்கமெய்தித்சிவன்வெந்துயரடைந்து
கலங்கியமரர்சவைக்காகாக்காட்சியதனாற்கவுரியுட
னிலங்குதிரையின்மலர்வாரியிறைக்குஞ்செழுநீர்க்கங்கையினாற்
றுலங்குமிமையோர்நாடெனவேசொல்லுங்காசிநகரடைந்தான். (௨௰)

(இ-ள்.) சிவன் - சிவனானவன், இலிங்கம் இழந்து - லிங்கத்தை யிழந்து, அங்கபங்கம் எய்தி - சரீர பிங்கமடைந்து, வெம் துயர் அடைந்து - கொடிய துன்பத்தை யடைந்து, கலங்கி - மனங்கலங்கி, அமரர் சவைக்கு ஆகா - தேவர்சபைக்குப் போக யோக்யதையில்லாத, காட்சியதனால் - தோற்றத்தினால், இலங்கு திரையின் - விளங்குகின்ற அலைகளாகிய கைகளால், மலர்வாரி இறைக்கும் - புஷ்பங்களை வாரி யிறைக்கின்ற, செழு நீர் கங்கையினால் - செழுமையாகிய நீரையுடைய கங்காநதியினால், துலங்கும் இமையோர் நாடு எனவே சொல்லும் - ப்ரகாசியாநின்ற தேவர் நாடாகிய ஸ்வர்க்க லோகமேயென்று சொல்லுதற்குரிய, காசி நகர் - காசி க்ஷேத்ரத்தை, கவுரியுடன் அடைந்தான் - உமாதேவியோடுபோய்ச் சேர்ந்தான், எ-று.



அடைந்தங்கிருந்துதவம்புரிந்துமனேகபூசனைகள்புரிந்து
மிடைந்தபுலன்கடமையொருக்கியேன்மையாருஞ்செபம்புரிந்து
மிடைந்தமனுவந்தரமோராயிரமாம்பருவந்துதித்திடுநான்
றுடைந்துமதுவார்துளவமணியொருமாமுதலையெதிர்கண்டான்.

(இ-ள்.) அடைந்து - சேர்ந்து, அங்கு இருந்து - அந்த க்ஷேத்ரத்திலே தங்கியிருந்து, தவம் புரிந்தும் - தபஸ்ஸைச் செய்தும், அநேகம் பூசனைகள் புரிந்தும் - அநேகமாகிய பூஜைகளைச் செய்தும், மிடைந்த - நெருங்கிய, புலன்கள் தமை ஒருக்கி - பஞ்சேந்திரிய விஷயங்களை யடக்கி, மேன்மை ஆரும் செபம் புரிந்தும் - மேன்மைபொருந்திய ஜபத்தைச் செய்தும், இடைந்த - இடையிட்ட, மனுவந்தரம் ஓராயிரம் ஆம் பருவம் - மந்வந்தரத்தில் ஓராயிரம் ஸம்வத்ஸரங்கள், துதித்திடும் ஞான்று - துதிசெய்யுங்காலத்தில், உடைந்து - மலர்ந்து, மதுவார் - தேனொழுகுகின்ற, துளவம் அணி - துளசிமாலையைத் தரித்த, ஒருமா முதலை - ஒப்பற்ற பெரிய முதல்வனாகிய திருமாலை, எதிர் கண்டான் - தனக்கெதிரே கண்டான், எ-று.

கண்டுபணிந்தஞ்சலிகூப்பிக்காவாயெனநின்றரனேத்தக்
கொண்டலனையானருள்கூர்ந்துகூவிக்கமலன்றனையேவி
யண்டர்புகழிக்காசியிலேயரன்றன்னிலிங்கப்பிரதிட்டை
தொண்டரமரர்முனிவரெல்லாந்தொழுமாறியற்றிப்புரிதியென்றான்.

(இ-ள்.) கண்டு பணிந்து - கண்டு வணங்கி, அஞ்சலி கூப்பி - அஞ்சலியாகக் கைகளைக் குவித்து, காவாய் என நின்று - காத்தருளவேண்டுமென்று சொல்லி நின்று, அரன் ஏத்த - சிவன் துதிக்க, கொண்டல் அனையான் - நீலமேகத்தையொத்த திருமால், அருள் கூர்ந்து - கிருபை மிகுந்து, கமலன் தனை கூவி - ப்ரஹ்மாவை அழைத்து, ஏவி - நியமித்து, அண்டர் புகழ் - தேவர்கள் புகழ்கின்ற, இக்காசியிலே - இந்தக் காசி க்ஷேத்ரத்திலே, அரன் தன் - சிவனது, இலிங்கப் பிரதிட்டை - லிங்கப்ரதிஷ்டையை, தொண்டர் - அவனது அடியாரும், அமரர் - தேவரும், முனிவர் - முனிவரும் ஆகிய, எல்லாம் - யாவரும், தொழும் ஆறு - தொழும்படி, இயற்றி புரிதி என்றான் - செய்வாயென்று சொன்னார், எ-று.

அன்னவாறேசதுமுகனுமரனைப்புனிதமாக்குதற்குச்
சொன்னப்பிரதிட்டைமுடித்துத்துளவப்புயனைப்பணிந்ததற்பின்
மன்னுமுனிவரமரர்களான்மகிழ்பூசனையும்புரிவித்திவ்
வின்னலிங்கரூபமதாயிருந்தேபூசைகொளுமென்றார். (௨௧)

(இ-ள்.) அன்ன ஆறே - அந்தப்ரகாரமே, சதுமுகனும் - நான்கு முகங்களையுடையவனாகிய ப்ரஹ்மாவும், அரனை - சிவனை, புனிதன் ஆக்குதற்கு - பரிசுத்தனாகச் செய்தற்பொருட்டு, சொன்ன - (திருமால்) சொல்லிய,

பிரதிட்டையை முடித்து - ப்ரதிஷ்டையை நிறைவேற்றி, துளவப் புயலே - துளசிமாலையை யணிந்த நீலமேகத்தையொத்த திருமாலே, பணிந்த தற்பின் - வணங்கின பிறகு, மன்னு - நிலைபெற்ற, முனிவர் அமரர்களால் - முனிவராலும் தேவராலும், மகிழ் பூசனையும் புரிவித்து - மன மகிழ்தற்குரிய பூஜைகளையும் செய்வித்து, இங்கு - இந்த க்ஷேத்ரத்தில், இன்ன இலிங்கருபமதாய் இருந்து - இந்த லிங்கருபமாயிருந்து, பூசைகொள்ளும் என்றார் - பூஜையையேற்றுக்கொள்வீர் என்று சொன்னார், எ-று.

வெம்புபிருகுமுனிசாபவிதியாற்புவியிலிங்கருமா
யும்பருலகிலவயவங்களுடனேயியைந்துபூசனைக
ளின்பமுடனேகொளக்கடவாயென்றுதிருவாய்மலர்ந்தருளி
யன்பருளக்கோயில்மகிழுமருளுநாரணனங்ககன்றனனால். (உச)

(இ-ள்.) வெம்பு - கோபங்கொண்ட, பிருகு முனி - ப்ருகு முனிவரது, சாபவிதியால் - சாபவியமநத்தால், புவியில் - பூமியில், இலிங்கமும் ஆய் - லிங்கருபமாயிருந்தும், உம்பர் உலகில் - தேவலோகத்தில், அவயவங்களுடனே இயைந்து - அவயவங்களோடு பொருந்தி, பூசனைகள் - பூஜைகளை, இன்பமுடனே - இன்பமாக, கொள்ளக் கடவாய் என்று - கொள்ளக்கடவையென்று, திருவாய் மலர்ந்தருளி - திருவாய் மலர்ந்தருளிச் செய்து, அன்பர் - அன்பர்களுடைய, உளக்கோயிலில் - மனமாகிய கோயிலில், மகிழும் - மனமகிழ்ந்து எழுந்தருளியிருக்கிற, அருள் - க்ருபையுள்ள, நாரணன் - திருமாலானவர், அங்கு அகன்றனன் - அவ்விடத்தைவிட்டு நீங்கினார், எ-று.

ஆதலாலேசிவனிருமாலியங்களெனவேயம்புவியிற்
றீதிலாதநித்தியவபிடேகஞ்சாத்துமாலைநறும்
போதுநைவேத்தியமதனைப்புரிந்தேற்றியநற்பிரசாத
மோதுமிவைதீண்டிடிற்றோடமுண்டென்றிருடிகளும்விதித்தார். (உரு)

(இ-ள்.) ஆதலாலே - ஆகையாலே, சிவன் - சிவனுடைய, நிருமாலியங்கள் என - நிர்மால்யங்களென்று, அம்புவியில் - பூமியில், தீது இல்லாத - தீமையில்லாத, நித்திய அபிடேகம் - நித்ய அபிஷேக காலத்தில், சாத்தும் - சாத்துகின்ற, மாலை - மாலைகளும், நறும்போது - மணமுள்ள புஷ்பங்களும், நைவேத்திய மதனைப்புரிந்து - நைவேத்யம் பண்ணி, ஏற்றிய - சமர்ப்பித்த, நல்பிரசாதம் - நல்ல ப்ரஸாதமும் (என்று), ஓதும் - சொல்லப்பட்ட, இவை - இவைகளை, தீண்டிடில் - தொட்டால், தோடம் உண்டு என்று - தோஷமுண்டென்று, இருடிகளும் விதித்தார் - ருஷிகளும் விதித்தார்கள், எ-று.

மாயன்பதநீரெனுங்கங்கைமருவுங்காசியிலிங்கமதை
நேயமுடன்பூசனைபுரிந்துநெஞ்சிற்றுதித்தோர்வினையகன்று
மேயகயிலாயப்பதவிவிரவுநெறியால்வீற்றிருப்பத்
தூயவரமுமரியருளாற்றோன்றிற்றெனவுமுணர்வீரே. (உசு)



(இ-ள்.) மாயன் - திருமாலின், பத நீர் என்னும் - திருவடி தீர்த்தமென்கிற, கங்கை - கங்காநதியானது, மருவும் - பொருந்திய, காசி - காசிக்ஷேத்ரத்திலுள்ள, லிங்கமதை - சிவலிங்கத்தை, நேய முடன் - அன்போடு, பூசனை புரிந்து - பூஜைசெய்து, நெஞ்சின் - மனத்தில், துதித்தோர் - த்யானம் பண்ணினோர், வினை அகன்று - தமது பாபங்கள் நீங்கப்பெற்று, மேய - பொருந்திய, கயிலாயப்பதவி - கைலாஸபதவியை, விரவும் நெறியால் - அடையும் வண்ணமாய், வீற்றிருப்ப - வீற்றிருக்கும்படி, தூய வரமும் - பரிசுத்தமாகிய வரமும், அரி அருளால் - திருமாலின் க்ருபையால், தோன்றிற்று எனவும் - உண்டாயிற்றென்றும், உணர்வீர் - அறியக்கடவீர், எ-று.

காசியிலிங்கமிவ்வாறுகண்ணன்கருணையடைந்துளதென்
றோசையுடனெந்நூல்களிலேயுரைக்கும்பொருளென்றிடிற்கேண்மோ
பேசற்கரியபொருளுரைக்கும்பிரயாகையின்றன்மகத்துவத்தி
லேசிலிராமசங்கிதையிலினும்பன்னூலிலிசைத்திடுமால். (உஎ)

(இ-ள்.) காசி - காசிக்ஷேத்ரத்திலுள்ள, இலிங்கம் - சிவலிங்கமானது, இவ்வாறு - இந்தப்ரகாரம், கண்ணன் கருணை அடைந்துளது என்று - திருமாலின் அருள் பெற்றிருப்பதென்று, ஓசையுடன் - த்வனியோடு, எந்நூல்களிலே - எந்த சாஸ்த்ரங்களிலே, உரைக்கும் பொருள் - சொல்லப்பட்ட அர்த்தம், என்றிடின் - என்று கேட்பீராயின், கேண்மோ - (நான்சொல்லக்) கேளுங்கள், பேசற்கு அரிய - சொல்லுதற்கரிய, பொருள் உரைக்கும் - அர்த்தத்தைச் சொல்லுகின்ற, பிரயாகையின் தன் மகத்துவத்தில் - ப்ரயாகை மாஹாத்ம்யத்திலும், ஏசு இல் - பழிப்பற்ற, இராம சங்கிதையில் - ராம ஸம்ஹிதையிலும், இனும் - இன்னமும், பல் நூலில் - பல நூல்களிலும், இசைத்திடும் - சொல்லும், எ-று.

வேறு.

என்றுரைத்துப்பின்னெந்தைபுகலுவார்
கொன்றைவேணியிற்கொண்டநஞ்சங்கரன்
வென்றிசேர்ந்தசங்காரவினைத்தொழி
லொன்றினாற்செருக்குற்றனனெஞ்சுளே. (உஅ)

(இ-ள்.) என்று உரைத்து - என்று சொல்லி, பின் - மேலும், எந்தை - எமது தந்தையாகிய சூதர், புகலுவார் - சொல்லுவார், கொன்றை - கொன்றை மலர்மாலையை, வேணியில் கொண்ட - சடையில் தரித்த, நம் சங்கரன் - உமது சிவன், வென்றி சேர்ந்த - வெற்றி பொருந்திய, சங்கார வினைத்தொழில் ஒன்றினால் - ஸம்ஹார க்ருத்யமாகிய காரியமொன்றினால், நெஞ்சுள்ளே - மனத்தினுள்ளே, செருக்கு உற்றனன் - இறுமாப்பையடைந்தான், எ-று.

நான்முகன்பதினாலுபுவனமும்
தான்மலர்ந்தளித்தானெனத்தன்னுளே
மேன்மைமிக்கவனென்னவிரவிடும்
பான்மையாலுட்பருஞ்செருக்குற்றனன். (உகூ)

(இ-ள்.) நான் முகன் - சதுர்முகனாகிய ப்ரஹ்மா, பதினாலு புவனமும் - சதுர்தச புவனங்களையும், தான் மலர்ந்து அளித்தான் என - தான் விஸ்தாரமாய் ஸ்ருஷ்டி பண்ணினானென்று, தன் உள்ளே - தனக்குள்ளே, மேன்மை மிக்கவன் என்ன - மேன்மை மிகுந்தவனென்று, விரவிடும் பான்மையால் - (அஹங்கார குணம்) கலந்ததன்மையால், பருஞ் செருக்கு உற்றனன் - பெரிய இறுமாப்பையடைந்தான், எ-று.

இன்னவாறு சிவனயனென்னுதல்
மன்னுமாமுகில்வண்ணனறிந்தன
னென்னகாரணமீதென்றறுத்திடற்
கொன்றுபாயமுணர்த்திடுவாமரோ. (ஙய)

(இ-ள்.) இன்ன ஆறு - இந்தப்ரகாரம், சிவன் அயன் என்னுதல் - சிவனும் ப்ரஹ்மாவும் நினைப்பதை, மன்னு - நிலைபெற்ற, மா - அழகிய, முகில் வண்ணன் - நீலமேகவண்ணனாகிய திருமால், அறிந்தனன் - அறிந்துகொண்டவனாய், ஈது என்ன காரணம் என்று - இப்படி யிவர் செருக்கடைதற்கு என்ன காரணமென்று, அறுத்திடற்கு - அவ்வாறறுத்தற்கு, உன்னும் ஆறு ஒன்று - ஆலோசிக்கும் உபாயம் ஒன்று, (அதை) உணர்த்திடுவாம் - அறிவிப்போம், எ-று.

இருவருள்ளமுமெய்ந்திடுஞ்செங்கண்மா
லொருவருக்கொருவருயர்வென்னவே
மருவுசீற்றமனதுறச்செய்தனன்
றிருமகள்கண்டுசிந்தைமகிழவே. (ஙக)

(இ-ள்.) இருவர் உள்ளமும் எய்திடும் - இருவருடைய மனத்திலும் வ்யாபித்திருக்கிற, செம் கண் மால் - செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய திருமால், திருமகள் கண்டு - பெரிய பிராட்டியார் பார்த்து, சிந்தை மகிழ - மன மகிழும்படி, ஒருவருக்கு ஒருவர் உயர்வு என்ன - (பரஸ்பரம்) ஒருவரினும் ஒருவர் உயர்ந்தவர் என்று, மருவு சீற்றம் - பொருந்திய கோபமானது, மனத்து உற செய்தனன் - (அவ்விருவருடைய) மனத்தின்கண் மிகும்படிச் செய்தார், எ-று.

சீற்றமுற்றிருவோருஞ்சினத்தய
னாற்றுமைந்தலையொன்றறுத்தானரன்
சாற்றுமத்தலைசங்கரன்கையுறக்
கோத்தல்வேதன்குறித்தூர்சபித்தனன். (ஙஉ)



(இ-ள்.) சீற்றம் உற்று - கோபத்தை யடைந்து, இருவோரும் சினத்து - இருவரும் மனவயிரங்கொண்டு, அயன் - பிரமனது, ஆற்றும் - (ஸ்ருஷ்டித் தொழிலைச்) செய்கின்ற, ஐந்தலை - ஐந்து தலைகளுள், ஒன்று - ஒன்றை, அரன் - சிவன், அறுத்தான் - சேதித்தான், சாற்றும் - சொல்லப்பட்ட, அத்தலை - அந்தத் தலையானது, சங்கரன் கை உற கோத்தல் - சிவன் கையிற் பொருந்தப் பற்றிக்கொள்வதை, குறித்து - நினைத்து, வேதன் சபித்தனன் - ப்ரம்மா சபித்தான், எ-று.

அந்தவாறரனத்தியிற்பித்துற
விந்தவேதனெழிற்சிரமொன்றற
வந்தமாகுமதைத்திறமற்றனை
ரெந்தைமாலையிறைஞ்சித்துதித்தனர். (ஙங)

(இ-ள்.) அந்த ஆறு - அந்தப்ரகாரம், அரன் - சிவனானவன், அத்தியின் - ப்ரஹ்ம ஹத்தியையால், பித்து உற - பைத்யத்தை யடைய, இந்த வேதன் - இந்தப்ரஹ்மாவின், எழில் - அழகாகிய, சிரம் ஒன்று அற - ஒரு தலையறுபட, அந்தம் ஆகும் அதை - முடிவாகிய அந்தக் காரியத்தைப்பற்றி, திறம் அற்றனர் - செய்யுந்திற மற்றவராகிய மற்றையோர், எந்தை மாலை - எமது பிதாவாகிய திருமாலை, இறைஞ்சி துதித்தனர் - வணங்கித் துதித்தார்கள், எ-று.

மங்கியேங்கிமயங்கியுழன்றிடும்
பங்கயன்சிவன்பற்றியசாபத்தை
யிங்ககன்றவரின்புறும்வண்ணமெந்
செங்கண்மாலுந்திருவருள்செய்தனர். (ஙச)

(இ-ள்.) மங்கி ஏங்கி - மங்கி யேக்கமுற்று, மயங்கி - ப்ரமித்து, உழன்றிடும் - அலைகின்ற, பங்கயன் சிவன் - ப்ரம்மாவும் சிவனும், பற்றிய சாபத்தை - அவர்களைத் தொடர்ந்த சாபத்தை, இங்கு அகன்று - இவ்வுலகத்தில் நீங்கி, அவர் இன்பு உறும் வண்ணம் - அவர் சுகத்தை யடையும்படி, எம் செங்கண் மாலும் - எமது திருமாலும், திருவருள் செய்தனர் - திருவருள் செய்தார், எ-று.

அருட்கடைக்கணளித்திருவோரையுந்
தரைக்குட்டேவரெனுந்தகைவைத்தன
ருரைக்குமாற்றமுன்னோதியநூலுளே
யுரைக்குமாறும்வகையுமுணர்மினே. (ஙரு)

(இ-ள்.) அருள் - க்ருபையோடு கூடிய, கடைக்கண் - கடாக்ஷத்தினால், இருவோரையும் அளித்து - இருவரையும் ரக்ஷித்து, தரைக்குள் - உலகத்தில், தேவர் என்னும் தகை - தேவரென்னும்படி, வைத்தனர் - வைத்தார், உரைக்கும் மாற்றம் - சொல்லப்பட்ட சொல்லானது, முன் ஓதிய நூலுளே - முன்னே சொல்லிய நூலின்கண், உரைக்கும் ஆறும் - சொல்கின்ற ப்ரகாரத்தையும், வகையும் - அதன் வகையையும், உணர்மின் - (நீங்கள்) அறிந்து கொள்ளுங்கள், எ-று.

காதலாலிலிங்கந்திரிமூர்த்தியென்
றோதிமாலதிற்பீடமென்றோதுதன்
மாதகாதவழக்கமிங்கியாதெனிற்
போதமோகனநூலின்புணர்ப்பதே. (௩௬)

(இ-ள்.) காதலால் - அன்பினால், இலிங்கம் - லிங்கமே, திரி மூர்த்தி என்று ஓதி - த்ரிமூர்த்தி ஸ்வரூபமென்றுசொல்லி, மால் - திருமாலானவர், அதின்பீடம் என்று ஓதுதல் - அதின்பீடமென்று சொல்லுதல், மா - பெரிய, தகாத வழக்கம் - தகாத வழக்கமாகும், இங்கு யாதெனின் - இவ்விடத்து வழங்கும் வழக்கம் யாதென்பீராயின், போத - மிகவும், மோகந நூலின் புணர்ப்பதே - மோஹந சாஸ்த்ரத்தின் கட்டுப்பாடே, எ-று.

சுரோணிதாந்தத்திற்சுக்கிலமாதியாய்
விரோதமின்றிவிரவுதலுண்மையா
மிராதுசுக்கிலமென்னுமலிங்கமேற்
பராவுசோணிதப்பங்கெனும்பீடமே. (௩௭)

(இ-ள்.) சுரோணித அந்தத்தில் - ஸ்ரோணிதத்தின் முடிவில், சுக்கிலம் ஆதியாய் - சுக்லம் முதன்மையாகி, விரோதம் இன்றி - விரோதமில்லாமல், விரவுதல் உண்மை ஆம் - கலத்தல் யதார்த்தமாகும், இராது சுக்கிலம் என்னும் - சுக்லம் இராதென்கிற, இலிங்கமேல் - லிங்கத்தின்மீது, பராவு - பரவிய, சோணிதப்பங்கு என்னும் பீடம் - ஸ்ரோணிதத்தின் பாகமென்று சொல்லப்பட்ட பீடம், எ-று.

அடியில்யோனியதன்மிசைலிங்கமும்
படிதலாலிங்கம்பன்னுமதோமுக
முடையதென்னவுரைத்திடல்வேண்டுமிவ்
வடைவுமோகனநூலிலறைவதே. (௩௮)

(இ-ள்.) அடியில் யோனி - அடியில் யோநியும், அதன் மிசை லிங்கமும் - அதின்மேல் லிங்கமும், படிதலால் - பொருந்துதலால், லிங்கம் - லிங்கமானது, பன்னும் - சொல்லப்பட்ட, அதோமுகம் உடையது என்ன - அதோமுகத்தையுடையதென்று, உரைத்திடல் வேண்டும் - சொல்லவேண்டும், இவ்வடைவு - இந்தக்ரமம், மோகந நூலில் அறைவது - மோஹந சாஸ்த்ரங்களில் சொல்லப்படுவது, எ-று.

அதோமுகம் - கீழ்நோக்கின முகம்.

வேதவைதிகத்திற்சொலுமெய்ப்பொருட்
கோதியீதுரைத்தற்குத்தகாதெனப்
போதமிக்கபுநிதனுரைத்தன
னாதலாற்சிவனன்றுபரமெனு. (௩௯)



(இ-ள்.) வேத வைதிகத்தில் - வேதங்களிலும் வைதிக நூல்களிலும், சொலும் - சொல்லப்பட்ட, மெய்ப்பொருள் ஓதி - யதார்த்தமாகிய அர்த்தத்தைச் சொல்லி, ஈது உரைத்தற்குத் தகாது என - இந்த விஷயத்தை நீங்கள் இப்படி அபார்த்தமாகச் சொல்லத்தகாது என்று, போதம் மிக்க புநிதன் - ஞானம் மிகுந்த பரிசுத்தராகிய கூர்மேசர், ஆதலால் - ஆகையால், சிவன் பரம் அன்று என - சிவன் பரவஸ்து அல்லனென்று, உரைத்தனன் - சொன்னார், எ-று.

வைதிகம் - வேதசம்பந்தமானது.

சங்கரன்பரஞ்சாற்றியதுண்மையே
லிங்கிருவரிசைத்திடுஞ்சாபத்தா
லங்கத்திற்குறைவாகிலிங்கமாய்த்
தங்குமாறுளதேனெவைசாற்றுவீர். (௪௰)

(இ-ள்.) சங்கரன் பரம் - சிவனது பரத்வத்தை, சாற்றியது - நீங்கள் சொன்னது, உண்மையேல் - யதார்த்தமானால், இங்கு இருவர் இசைத்திடும் சாபத்தால் - இவ்விடத்தில் இருவர் இட்ட சாபத்தினால், அங்கத்தில் குறைவு ஆகி - சரீரத்தில் குறைவுபட்டு, இலிங்கம் ஆய் - லிங்கமாகி, தங்கும் ஆறு உளதே - நிலைபெற்றிருப்பதேன், இவை சாற்றுவீர் - இவ்விஷயங்களை விஸ்தரித்துச் சொல்லுங்கள், எ-று.

இருவர் - ப்ரஹ்மா, ப்ருகுமுநி என்பவர்.

முன்னைநாளிற்பிருகுமுனிவரன்
பன்னிமீதிற்பரிதியையேவிமா
லென்னுமாயனிமையவர்க்காய்க்கொன்ற
பின்னர்ச்சாபம்பிருகுமொழிந்தனன். (௪௧)

(இ-ள்.) முன்னை நாளில் - முற்காலத்தில், பிருகுமுனிவரன் - ப்ருகு என்கிற முநிஸ்ரேஷ்டரது, பன்னி மீது - தேவிமீது, மால் என்னும் மாயன் - திருமால் என்று சொல்லப்பட்ட மாயவன், இமையவர்க்காய் - தேவர்கள் பொருட்டு, பரிதியை ஏவி - சக்ராயுதத்தை யேவி, கொன்ற பின்னர் - கொன்றபிறகு, பிருகு - ப்ருகுமுநிவன், சாபம் மொழிந்தனன் - சாபமிட்டான், எ-று.

இங்குன்மாதையிழக்கக்கடவையுன்
றுங்கவாழியுஞ்சோதியிலாமலே
தங்கவென்றுசபித்தனனங்கதை
யெங்கண்மாயனியைந்திடலின்றியே. (௪௨)

(இ-ள்.) இங்கு - இவ்வுலகில், உன்மாதை - உன் மனைவியை, இழக்கக் கடவை - இழந்துபோகக் கடவாய், உன் - உனது, துங்கம் - பரிசுத்தமாகிய,

ஆழியும் - சக்ராயுதமும், சோதி இல்லாமல் தங்க - ஒளியில்லாமல் இருக்கக் கடவது, என்று சபித்தனன் - என்று சாபமிட்டான், அங்கு அதை - அந்தச் சாபத்தை, எங்கள் மாயன் - எங்கள் திருமாலானவர், இயைக்கிடல் இன்றி - பொருந்துதல் இல்லாமல், எ-று.

ஆற்றுமோர்பராமாத்துமனாகையாற்
சாற்றுசாபத்தைத்தானுமுங்காரத்தான்
மாற்றினானதுமாமுனியைத்தொடர்ந்
தேற்றுபங்கமியற்றியகாலையில். (௪௩)

(இ-ள்.) ஆற்றும் - எல்லாவற்றையுஞ் செய்யவல்ல, ஓர் - ஒப்பற்ற, பரமாத்துமன் ஆகையால் - பரமாத்மா ஆதலால், சாற்று சாபத்தை - ப்ருகு முனிவன் சொன்ன சாபத்தை, தானும் - திருமாலும், உங்காரத்தால் - ஹுங்காரத்தினால், மாற்றினான் - நிரஸனம்பண்ணினார், அது - அந்தச்சாபம், மாமுனியைத் தொடர்ந்து - பெரிய ப்ருகு முனிவனைத் தொடர்ந்து, ஏற்றுபங்கம் இயற்றியகாலையில் - மிகுந்த பங்கம் பண்ணினகாலத்தில், எ-று.

வந்துசத்தவிருடிகள்வாழ்த்தியே
யெந்தையேசினம்நீரென்றிரண்டுமே
யுந்துதாழ்விலுறைவதலாலுன்போற்
சந்தவானிடந்தன்னிற்பாயாதரோ. (௪௪)

(இ-ள்.) சத்தரிஷிகள் வந்து - ஸப்த ருஷிகளும் வந்து, வாழ்த்தி - வாழ்த்தி, எந்தையே - எமது தந்தையே, சினம் நீர் என்ற இரண்டும் - கோபம் நீர் என்ற இரண்டும், உந்து தாழ்வில் உறைவது அல்லால் - செலுத்துதற்குரிய தாழ்ந்த இடத்தில் தங்குவதன்றி, உன்போல் - உன்னைப்போன்ற, சந்தவான் இடம் தன்னில் - அழகிய மேலான இடத்தில், பாயாது - பாயமாட்டாது, எ-று.

தாழ்ந்த இடம் - பள்ளம், கீழ்மக்களிடம். வான் - ஆகாயம், மேலான இடம். (மேலான பரமாத்மா.)

என்றுபோற்றியிறைஞ்சினர்மாயனைப்
பின்றையந்தப்பிருகுவைநோக்கியே
யொன்றுமாயிரண்டாயொருமூன்றதாய்
நின்றமாலைநினைந்திலைபோலுமே. (௪௫)

(இ-ள்.) என்றுபோற்றி - என்று துதித்து, மாயனை - திருமாலை, இறைஞ்சினர் - வணங்கினார்கள் - பின்றை - பிறகு, அந்த பிருகுவைநோக்கி - அந்த ப்ருகுமுனியைப் பார்த்து, ஒன்றும் ஆய் - ஒரு பொருளுமாகி, இரண்டாய் - இரண்டு பொருள்களுமாகி, மூன்றதாய் - மூன்றுபொருள்களுமாகி, நின்ற -



நிலைபெற்றிருக்கிற, மாலை - திருமாலை, நினைந்திலைபோலும் - மதித்தாயில்லை போலும், எ-று.

ஒன்று - அத்விதீயமான பரவஸ்து. இரண்டு - ஜீவாத்மா, பரமாத்மா. மூன்று - ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள்.

நித்தியாநந்தரூபனிருமலன்
கத்தனண்டங்கடந்தபெரும்பதந்
தந்தனுக்கபசாரமுஞ்செய்வரோ
வித்திறத்தெனவேழ்முனிவோர்சொன்னார். (௪௬)

(இ-ள்.) நித்திய ஆநந்த ரூபன் - நித்யமாகிய ஆநந்த ரூபமாயிருப்பவனும், நிருமலன் - நிர்மலனும், கத்தன் - கர்த்தாவும், அண்டம் கடந்த - எல்லாவுலகங்களையுங் கடந்த, பெரும் பதத்து - பெரிய பதத்தையுடையவனுமாகிய, அத்தனுக்கு - கடவுளுக்கு, இத்திறத்து அபசாரமும் செய்வரோ - இப்படிப்பட்ட அபசாரத்தையுஞ் செய்வார்களோ, என - என்று, ஏழ் முனிவோர் சொன்னார் - ஸப்த ருஷிகளும் சொன்னார்கள், எ-று.

நித்யம் - அழியாதது. நிர்மலன் - மலரஹிதன். கத்தன் - எல்லாவற்றையுஞ் செய்யவல்ல ஸர்வ பரத்தன். பெரும்பதம் - பரம பதம். ஸப்தருஷிகள் - அத்ரி, ஆங்கிரஸ-, கௌதமன், ஜமதக்நி, பரத்வாஜன், வஸிஷ்டன், விஸ்வாமித்ரன் என்பவர். அன்றி: அகஸ்த்யன், ஆங்கிரஸ-, கௌதமன், காஸிபன், புலஸ்த்யன், மார்க்கண்டன், வஸிஷ்டன், என்பவரைச் சொல்வதாமுண்டு.

நாரணாவிந்தவைபொறுத்தாளென
வாரணங்கொடநேகந்துதிசெய்தார்
வாரணத்தின்மலர்க்கணறிதுயில்
காரணப்பொருளுள்ளங்களிக்கவே. (௪௭)

(இ-ள்.) வாரணத்தில் - க்ஷீராப்தியில், மலர்க்கண் அறி துயில் - தாமரைமலர்போன்ற திருக்கண்களால் யோக நித்ரை செய்கிற, காரணப் பொருள் - ஜகத்காரண வஸ்துவாகிய திருமால், உள்ளம் களிக்க - திருவுள மகிழும்படி, நாரணா - ஸ்ரீமந் நாராயணனே, இந்தவை - இந்த அபசாரத்தை, பொறுத்து ஆள் என - க்ஷமித்து ரக்ஷிக்கவேண்டுமென்று, ஆரணம் கொடு - வேதவாக்யங்களைக் கொண்டு, அநேகம் துதி செய்தார் - அநேகமான ஸ்தோத்ரங்களைச் செய்தார்கள், எ-று.

எழுமாதவரோத்துந்துதிதனக்
காழிமாயனுமகிழ்ந்தெய்தலும்
வாழிவாழிமறைமுதல்வாழியென்
வேழையேற்கருளென்றங்கிறைஞ்சியே. (௪௮)

(இ-ள்.) எழுமாதவர் - ஸப்த ருஷிகளும், ஏத்தும் துதி தனக்கு - துதிக்கின்ற ஸ்தோத்ரத்துக்கு, ஆழி மாயன் - திருவாழியையுடைய மாயவன்,

அகமகிழ்ந்து எய்தலும் - திருவுள மகிழ்ந்திருந்தளவில், வாழி வாழி - வாழ்க வாழ்க, மறைமுதல் வாழி - வேத முதல்வனே வாழ்க, ஏழையேற்கு - இந்த எளியவனாகிய எனக்கு, அருள் என்று - க்ருபை செய்ய வேண்டுமென்று, அங்கு இறைஞ்சி - அவ்விடத்து வணங்கி, எ-று.

வேதத்தில் பல தேவதாவிஷயங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டாலும், அவர்கள் அவயவங்களாகவும் தான் அவயவியாகவும் இருந்திருப்பவன் திருமாலாதலால்; இவர் மறைமுதல்வன் என்று சொல்லப்பட்டார்.

தேமலர்க்கொடுசேவடிமீதிலிட்
டாமிரண்டுகரஞ்சிரத்தஞ்சலித்
தேமவாடையனேயென்னெழுத்தனே
நேமியாய்நெடியாயெனப்போற்றினர். (சகூ)

(இ-ள்.) தேம் மலர் கொடு - பரிமளமுள்ள புஷ்பங்கள் எடுத்து, சேவடி மீதில் இட்டு - திருவடி மேலிட்டு அர்ச்சித்து, ஆம் இரண்டு கரம் - இரண்டாகிய கைகளை, சிரத்து அஞ்சலித்து - சிரசின்மேல் வைத்து அஞ்சலி பண்ணி, ஏம ஆடையனே - பீதாம்பரத்தையுடையவனே, என் எழுத்தனே - எட்டெழுத்தை யுடையவனே, நேமியாய் - திருவாழியை யுடையவனே, நெடியாய் - த்ரிவிக்ரமனே, எனப் போற்றினர் - என்று ஸ்தோத்ரம் பண்ணினார்கள், எ-று.

ஏமம் - பொன். பீதம் - பொன். அம்பரம் - வஸ்த்ரம். என்னெழுத்து - திருவஷ்டாக்ஷரம்.

போற்றிவிண்ணப்பமொன்றுபுகலுவா
ரேற்றமாமறையெண்ணெண்கலைகளுந்
தோற்றுமூவுருத்தொல்லுலகியாவையு
மாற்றிக்காத்தடக்குமவ்வாடலோய். (ருய)

(இ-ள்.) போற்றி - வணங்கித் துதித்து, விண்ணப்பம் ஒன்று புகலுவார் - ஒரு விண்ணப்பம் பண்ணுவார்கள், (என்னெனின்) ஏற்றம் ஆம் மறை - உயர்வாகிய வேதங்களையும், எண்ணெண் கலைகளும் - அறுபத்துநான்கு கலைகளையும், தோற்றும் மூவுரு - உண்டாகிய மூன்றுருவங்களையும், தொல் உலகு யாவையும் - பழமையாகிய வுலகங்கள் எல்லாவற்றையும், ஆற்றி - உண்டாக்கி, காத்து - ரக்ஷித்து, அங்கு - அவ்வாறே, அடக்கும் - ஸம்ஹரிப்பண்ணுகிற, அ ஆடலோய் - அந்த லீலையையுடையவனே, எ-று.

மூவுரு - த்ரிமூர்த்தி ஸ்வரூபம்.

நின்மனத்தினினைந்தவிலீலையாற்
கன்மமூன்றுங்கருதிப்புரிவதின்
நன்மறைப்பொருளோடிங்குநாங்களுஞ்
சொன்முறைப்பொருட்குதென்றிடாமலே. (ருக)



(இ-ள்.) நின் மனத்தின் - உன் திருவுளத்தில், நினைந்த - எண்ணிய, இ லீலையால் - இந்த லீலையால், கன்மம் மூன்றும் - த்ரிவித கர்மங்களையும், கருதி புரிவதின் - நினைத்துச் செய்வதினால், நல் மறைப்பொருளோடு - நன்மையாகிய வேதார்த்தத்தோடு, இங்கு - இவ்விடத்து, நாங்களும் - அடியேங்களும், சொல் முறைப் பொருள் - சொல்லிய க்ரமமாகிய அர்த்தத்தை, குது என்றிடாமல் - குதென்று நினையாமல், எ-று.

கன்மம் மூன்று - ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள்.

நின்றிருக்கலைநின்றுமனேகமாய்
வென்றிசேரவதாரங்கண்மேவியே
நன்றுநல்லறநாட்டியுமெங்ஙனே
யன்றங்கேத்தியாராதநமுஞ்செய்வீர். (ருஉ)

(இ-ள்) நின் - உனது, திருகலை நின்றும் - அழகிய அம்சத்தினின்றும், அநேகம் ஆய் - பலவாகி, வென்றி சேர் - வெற்றி பொருந்திய, அவதாரங்கள் மேவி - அவதாரங்களைப்பொருந்தி, நன்று - நன்மையாகிய, நல் அறம் நாட்டியும் - விலக்ஷண தர்மத்தை நிலைபெறச்செய்தும், எங்ஙனே - [illegible], அன்று - அப்பொழுது, அங்கு - அவ்வவ்விடங்களில், ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, ஆராதநமும் செய்வீர் - திருவாராதநமும் பண்ணுவீர், எ-று.

இன்னசற்குணமேப்பரிபூரணா
பன்னுபத்தபாராயணநாரணா
நின்னிற்சாபத்தைநீயேபொறுத்தரு
ளென்னவேதியிறைஞ்சிப்பணிந்தனர். (ருங)

(இ-ள்.) இன்ன - இப்படிப்பட்ட, சற்குணம் ஏய் - நல்ல குணத்தைப் பொருந்திய, பரிபூரணா - பரிபூர்ணனே, பன்னு - சொல்லப்பட்ட, பத்த பாராயண - பக்தர்களால் பாராயணம் பண்ணப்படுகிறவனே, நாரணா - ஸ்ரீமந் நாராயணனே, நின்னின் சாபத்தை - உன்னால் நேர்ந்த சாபத்தை, நீயே பொறுத்தருள் என்ன ஓதி - நீயே தாங்கியருளவேண்டுமென்று சொல்லி, இறைஞ்சி பணிந்தனர் - தாழ்ந்து வணங்கினார்கள், எ-று.

பணியுமாதவர்க்காகப்பகர்முனி
யணியுஞ்சாபமறுத்தருள்செய்குவா
ரிணையிலாச்சருவாந்தரியாமிமா
முனிவர்க்குச்சொலத்தொடாங்கானரோ. (ருச)

(இ-ள்.) பணியும் - வணங்குகின்ற, மாதவர்க்காக - முனிவர்கள் பொருட்டு, பகர் - சொல்லப்பட்ட, முனி அணியும் சாபம் - முனிவன் தரித்த சாபத்தை, அறுத்து அருள் செய்குவான் - சேதித்தருளும்பொருட்டு, இணை

இல்லா - சமானமொருவருமில்லாத, சருவாந்தரியாமி மால் - சர்வாந்தர்யாமியாகிய திருமாலானவர், அவர்க்கு - அந்த முனிவர்களுக்கு, துணிவு - தனது நிச்சயத்தை, சொல்லத் தொடர்ந்தான் - சொல்லத் தொடங்கினார், எ-று.

காலமொன்றிலோர்காரணமாகவே
யேல்ராமாவதாரமியற்றுமவ்
வேலையாண்டொருபன்னூன்கெம்மெல்லியைச்
சாலவிட்டுத்தனித்திருப்பாமரோ. (௫௫)

(இ-ள்.) காலம் ஒன்றில் - ஒருகாலத்தில், ஓர் காரணம் ஆகவே - ஒரு ஹேதுவைக்கொண்டே, ஏல் - பொருந்திய, இராம அவதாரம் இயற்றும் அவ்வேலை - ராமாவதாரஞ்செய்யும் அந்த நாளில், யாண்டு ஒரு பன்னான்கு - ஒரு பதினான்கு வருடம், எம் மெல்லியை - எம் தேவியை, சாலவிட்டு - முழுதும் நீங்கி, தனித்து இருப்பாம் - தனித்திருப்போம், எ-று.

மற்றோர்காலமிம்மண்ணினிற்கண்ணனா
யுற்றிடும்பொழுதோர்பதினைந்தினள்
[illegible]
முற்றவெல்லுமுறைமைபுரிகுவான். (௫௬)

(இ-ள்.) மற்று ஓர் காலம் - வேறொருகாலத்தில், இ மண்ணினில் - இந்த மண்ணுலகத்தில், கண்ணன் ஆய் உற்றிடும்பொழுது - கண்ணனாய் அவதரிக்கும்போது, ஓர் பதினைந்தினள் - ஒரு பதினைந்தாவது தினத்தில், வில் - காண்டீவத்தை யேந்திய, தனஞ்செயன் மேவி - அருச்சுனன் வந்து, சயிந்தனை - சயிந்தன் என்பவனை, முற்ற வெல்லும் - முழுதும் வெல்லும் படியான, முறைமை புரிகுவான் - முறைமையைச் செய்வான், எ-று.

அந்தரத்திலருக்கன்மறைந்திடச்
சுந்தரத்திகிரித்தொடுவேனதா
லந்தவாழிக்கவிரொளியின்றியோ
ரைந்துமுக்காற்கடிகையமையுமால். (௫௭)

(இ-ள்.) அந்தரத்தில் - ஆகாய வீதியில், அருக்கன் மறைந்திட - சூரியன் மறையும்படி, சுந்தரத் திகிரி தொடுவேன் - அழகாகிய சக்ராயுதத்தை ப்ரயோகிப்பேன், அதால் - அதனால், அந்த ஆழிக்கு - அந்தச் சக்ராயுதத்துக்கு, அவிர் ஒளி இன்றி - பிரகாசிக்கின்ற தேஜஸ்ஸில்லாமல், ஓர் ஐந்து முக்கால் கடிகை அமையும் - ஒரு மூன்றேமுக்கால் நாழிகை அமைந்திருக்கும், எ-று.

ஓர் ஐந்து முக்காற்கடிகையென்றது ஒரு முஹூர்த்த காலத்தை.

என்றுமாதவர்க்கோதினரக்கணந்
துன்றுசாபத்தொடர்பைவருகென
வொன்றுமண்டங்களோடுயிரியாவுமாய்
நின்றமாயனிறத்தினனோர்புறம். (௫௮)



(இ-ள்.) என்று மாதவர்க்கு ஓதினர் - என்று முனிவர்களுக்குச்சொல்லி, அக்கணம் - அந்தக்ஷணமே, துன்று சாபத்தொடர்பை வருக என - நெருங்கிய சாபத்தொடர்ச்சியை வருகவென்று, ஒன்றும் - பொருந்திய, அண்டங்களோடு - உலகங்களுடன், உயிர் யாவும் ஆய் நின்ற - எல்லா வுயிர்களுமாகி நின்ற, மாயன் - திருமாலானவர், ஓர் புறம் இறுத்தினன் - தனது ஒரு பக்கத்தில் இறுத்திக்கொண்டார், எ-று.

இப்பொருட்சொலிராமாயணத்திலுஞ்
செப்புபாகவதத்திலுந்தேர்மினென்
றெப்பொருட்சுவையின்பமுந்தேர்ந்துண
ரொப்பில்கூரத்திறையவனோதினன். (௫௯)

(இ-ள்.) இப்பொருள் சொல் - இந்த அர்த்த விசேஷம் அமைந்த வாக்யங்களை, இராமாயணத்திலும் - ஸ்ரீராமாயணத்திலும், செப்பு பாகவதத்திலும் - சொல்லப்பட்ட ஸ்ரீ பாகவதத்திலும், தேர்மின் என்று - ஆராய்ந்து கண்டு கொள்ளுங்களென்று, எப்பொருள் சுவை இன்பமும் தேர்ந்து உணர் - எவ்வகையாகிய பொருட்சுவையின் ரஸத்தையும் அறிந்து தெளிந்த, ஒப்பு இல் - சமானமில்லாத, கூரத்து இறையவன் - திருக்கூராதிபர், ஓதினன் - சொல்லியருளினார், எ-று.

வேறு

ஓதியகூரம்வாழுமுத்தமன்றன்னைநோக்கி
மாதவப்பிருகுசாபம்வதிந்ததாலன்றோமாலப்
போதுதசாவதாரம்புரிந்தனனென்றுசைவர்
வேதனைசெயு[illegible]ரோ. (௬௰)

(இ-ள்.) ஓதிய - சொன்ன, கூரம் வாழும் உத்தமன் தன்னை நோக்கி - திருக்கூர நகரில் வாழ்கின்ற உத்தமராகிய கூரேசரைப்பார்த்து, மாதவம் - பெரிய தபஸ்ஸையுடைய, பிருகு சாபம் - ப்ருகு முநியிட்ட சாபத்தில், வதிந்ததால் அன்றோ - கட்டுப்பட்டிருந்ததனாலல்லவோ, மால் - திருமால், அப்போது - அந்நாளில், தசாவதாரம் புரிந்தனன் - தசாவதாரத்தைச் செய்தான், என்று - என்றுசொல்லி, சைவர் - சைவரானவர்கள், வேதனை செய்யும் உள்ளத்தர் - உபத்ரவம் செய்யவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்களாய், மீட்டு - மறுபடியும், இவை உரை செய்தார் - இவைகளைச் சொன்னார்கள், எ-று.

உரைத்திடுஞ்சைவர்தம்மைபொன்றுசத்துவமேயார்ந்த
விரைத்தடஞ்சோலைசூழும்வியர்கூரம்வாழு
மொருத்தலங்குருத்துநோக்கியுண்மையிற்றிண்மைதன்னைத்
திருத்தினன்பின்னுமத்தைச்செவ்விதாயுரைக்கலுற்றான். (௬௧)

(இ-ள்.) உரைத்திடும் - சொல்லாநின்ற, சைவர் தம்மை - சைவர்களை, ஒன்று சத்துவமே ஆர்ந்த - சாத்வகுண மொன்றையே பொருந்தியிருக்கிற,

விரை - மணம்பொருந்திய, தடம் - பெரிய, சோலை சூழும் - சோலைகள் சூழ்ந்த, வீறு உயர் - மேன்மையால் உயர்ந்த, கூரம் வாழும் ஒருத்தன் - திருக்கூரத்தில் வாழ்கின்றவராகிய ஒப்பற்ற கூராதிபர், அங்கு உருத்து நோக்கி - அவ்விடத்தில் கோபித்துப்பார்த்து, உண்மையின் - யதார்த்தத்தில், தின்மை தன்னை - உறுதியானதை, திருத்தினன் - திருத்திக்கொண்டு, பின்னும் - மேலும், அத்தை - அதனை, செவ்விதாய் உரைக்கல் உற்றான் - நன்றாகச் சொல்லத்தொடங்கினர், எ-று.

குற்றமொன்றில்லைநீங்கள்கூறியதுண்மையுண்மை
முற்றுமிங்கிதுசிவன்முன்மொழிந்தமோகநூலாகு
மற்றைமாலவதாரத்தின்வகையதுவென்னிற்கேண்மின்
அற்றிடத்துட்டர்சிட்டரந்தணர்தருமமோங்க. (௬௨)

(இ-ள்.) குற்றம் ஒன்று இல்லை - குற்றம் சிறிதுமில்லை, நீங்கள் கூறியது உண்மை உண்மை - நீங்கள் சொன்னது சத்தியம் சத்தியம், முற்றும் - முழுதும், இங்கு இது - இந்த விஷயம், சிவன்முன் மொழிந்த - சிவன் முற்காலத்தில் சொன்ன, மோகநூல் ஆகும் - மோஹந சாஸ்த்ரார்த்த மாகும், மற்ற - அதனின் வேறாகிய, மால் - திருமால் செய்த, அவதாரத்தின் வகை - அவதாரத்தின் வகையானது, எது என்னின் - எதுவென்றால், கேண்மின் - கேளுங்கள், துட்டர் அற்றிட - துஷ்டர்கள் நசித்தொழியவும், சிட்டர் அந்தணர் தருமம் ஓங்க - சாதுக்களுடையவும் வேதியர்களுடையவும் ஆகிய தர்மங்கள் வ்ருத்தியடையவும், எ-று.

நாரணன்கலையினின்றுநண்ணுபல்லவதாரங்கள்
சீருடன்புரிவரென்றுதின்னமாய்வேதஞ்சொல்லுஞ்
சேருமவ்வவதாரத்திற்சீதரனெந்தம்பற்றென்
றோருமாதவர்கணாட்டியுரைத்தலாற்றிரமிதென்றான். (௬௩)

(இ-ள்.) நாரணன் கலையில் நின்று - ஸ்ரீமந் நாராயணனது அம்சத்தி லிருந்து, நண்ணு - பொருந்திய, பல் அவதாரங்கள் - பல அவதாரங்களை, சீருடன் புரிவர் என்று - சிறப்பாகச் செய்வாரென்று, தின்னம் - நிச்சயமாக, வேதம் சொல்லும் - வேதமானது சொல்லாநிற்கும், சேரும் - பொருந்தாநின்ற, அ அவதாரத்தில் - அந்த அவதார காலத்தில், சீதரன் - திருமாலானவர், நந்தம் பற்று என்று - நமக்கு ஆதாரமென்று, ஓரும் - வேதார்த்தத்தை யாராய்ந்தறிந்த, மாதவர்கள் - பெரிய முனிவர்கள், நாட்டி உரைத்தலால் - நிலைபெறுத்திச் சொன்னதினால், இது திரம் என்றான் - இது உறுதியென்று சொன்னார், எ-று.

இங்குநீருரைத்தல்வேதவைதிகத்தியற்கையன்று
கங்குனேருளத்தீர்காண்மோகனப்பொருளிசைத்தலாமால்
செங்கண்மால்செய்தியின்னந்தெரிகிலீர்தெளியக்கேண்மின்
சங்கரனயன்சுரேசனுந்தமுண்மமதைகொண்டார். (௬௪)



(இ-ள்.) இங்கு நீர் உரைத்தல் - இவ்விடத்தில் நீங்கள் சொல்லுதல், வேத வைதிகத்து இயற்கை அன்று - வேத வைதிகங்களின் இயற்கையை யுடையதன்று, கங்குல் நேர் உளத்தீர் காண் - இருளையொத்த மனத்தையுடையவர்களே, மோகனப்பொருள் இசைத்தல் ஆம் - மோஹநநூல்களிற் சொல்லப்படுகிற அர்த்தமேயாம், ஆல் - ஆதலால், செங்கண்மால் செய்தி - திருமாலின் செய்கையை, இன்னம் தெரிகிலீர் - இன்னமும் தெரிந்திலீர் போலும், தெளியக் கேண்மின் - (உங்கள் மனம்) தெளிவையடையும் வண்ணம் கேளுங்கள், சங்கரன் - சிவனும், அயன் - பிரமனும், சுரேசனும் - இந்திரனும், தம் உள் - தம் மனத்திலுள்ளே, மமதை கொண்டார் - அஹங்காரத்தைக் கொண்டார்கள், எ-று.

சிட்டியாற்பிரமன்றேய்க்குந்திறத்தினாற்சிவனற்போக
மிட்டமாய்ப்பொருந்தலாலேயிந்திரனிவர்கண்மூவர்
மட்டிலாமமதைகொண்டவண்ணநாரணனறிந்து
நிட்டையாய்த்தன்றாணாடிநினைந்திடுமாறுசெய்வான். (௬௫)

(இ-ள்.) பிரமன் - ப்ரம்மாவானவன், சிட்டியால் - ஸ்ருஷ்டி கர்த்தாவாதலாலும், சிவன் - சிவனானவன், தேய்க்கும் திறத்தினால் - சம்ஹரிக்கும் வகையினாலும், இந்திரன் - இந்திரனானவன், நல் போகம் - நல்ல போகங்களை, இட்டமாய்ப் பொருந்தலாலே - யதேச்சையாய்ப் பொருந்தி அநுபவித்தலாலும், இவர்கள் மூவர் - இந்த மூவரும், மட்டு இலா - அளவில்லாத, மமதை கொண்ட வண்ணம் - அஹங்காரம் கொண்ட ப்ரகாரத்தை, நாரணன் அறிந்து - ஸ்ரீமந் நாராயணன் அறிந்துகொண்டு, நிட்டையாய் - நிஷ்டையுடன், தன் தாள் - தன் ஸ்ரீ பாதத்தை, நாடி நினைந்திடும் ஆறு - ஆராய்ந்து நினைக்கும்படி, செய்வான் - செய்யும்பொருட்டு, எ-று.

சிவன்றனாற்பதுமபீடன்சென்னியொன்றுகளையச்செய்தவ்
கவன்மனச்செருக்கைநீக்கவன்னவனுயிர்களியாவும்
புவனங்களியாவுஞ்சிட்டிபுரியினுந்தனதுசென்னி
நவமதாய்ச்செய்தற்கின்றிநாரணன்பரமென்றோர்ந்தான். (௬௬)

(இ-ள்.) சிவன் தன்னால் - சிவனைக்கொண்டு, பதுமபீடன் - ப்ரஹ்மாவின், சிரம் ஒன்று - ஒரு தலையை, களையச்செய்து - அறுக்கச்செய்து, அங்கு அவன் - அவனுடைய, மனச் செருக்கை நீக்க - மனத்திலுள்ள அஹங்காரத்தை யழிக்க, அன்னவன் - அவன், உயிர்கள் யாவும் - ஜீவராசிகளெல்லாவற்றையும், சிட்டி புரியினும் - ஸ்ருஷ்டி செய்தாலும், தனது சென்னி - தனது தலையை, நவமதாய் செய்தற்கு இன்றி - நூதனமாகப் படைத்துக்கொள்ளச் சக்தியில்லாமையால், நாரணன் - ஸ்ரீமந் நாராயணனே, பரம் என்று ஓர்ந்தான் - பரவஸ்துவென்று ஆராய்ந்து நிச்சயித்தான், எ-று.

வேதியன்சாபத்தாலும்வினைகொடாருகவனத்து
மாதவர்சாபத்தாலும்வரும்பிரமகத்தியோடு
தீதுறுமங்கபங்கஞ்சிவனடைந்துழலுங்காலை
சீதரன்காத்தலாலச்சிவனுமப்பரத்தைத்தேர்ந்தான். (௬௭)

(இ-ள்.) வேதியன் சாபத்தாலும் - ப்ரஹ்மாவின் சாபத்தினாலும், வினை கொள் - மனத்தைக்கொண்ட, தாருகவனத்து - தாருகாவனத்திலுள்ள, மாதவர் சாபத்தாலும் - ருஷிகளின் சாபத்தினாலும், வரும் - வந்துதொடர்ந்த, பிரமகத்தியோடு - ப்ரஹ்மஹத்தையுடன், சிவன் - சிவனானவன், தீது உறும் - தீமைபொருந்திய, அங்க பங்கம் அடைந்து - அங்கத்தில் பின்னமடைந்து, உழலும் காலை - திரியுங் காலத்தில், சீதரன் - ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர், காத்தலால் - ரக்ஷித்ததினால், அச்சிவனும் - அந்தச் சிவனும், அப்பரத்தைத் தேர்ந்தான் - அந்தத் திருமாலின் பரத்வத்தை யுணர்ந்து தெளிந்தான், எ-று.

குறைவறுதவத்தின்மிக்ககோதமன்மனைவியென்னுங்
கறையிலாமதிமுகத்து கற்புடையவளைச்சேர்ந்தங்
குறையவம்முனிசாபத்தாலுடம்பெலாம்யோகியாகி
முறையிடிந்திரனைக்காக்கமுதல்வன்மாலென்றுதேர்ந்தான். (௬௮)

(இ-ள்.) குறைவு அறு - குறைவில்லாத, தவத்தின் மிக்க - தவத்தினால் மேன்மையடைந்த, கோதமன் மனைவி என்னும் - கௌதம ரிஷியின் பத்நியாகிய, கறை இல்லா மதிமுகத்து - களங்கமில்லாத பூர்ண சந்த்ரனையொத்த முகத்தையுடைய, கற்பு உடையவளை - கற்புடையவளாகிய அஹல்யையை, சேர்ந்து - புணர்ந்து, அங்கு உறைய - அவ்விடத்தில் தங்கியிருக்க, அம்முனி சாபத்தால் - அந்த ரிஷியின் சாபத்தினால், உடம்பு எல்லாம் யோனி ஆகி - உடம்பு முழுதும் யோனிகளாகப் பெற்று, முறையிடு - முறையிட்ட, இந்திரனைக்காக்க - இந்த்ரனை ரக்ஷிக்க, (அவனும்) மால் - திருமாலே முதல்வன் என்று தேர்ந்தான் - தலைவனென்றுணர்ந்து தெளிந்தான், எ-று.

இன்னணமூவருள்ளத்தியைந்திடுமமதைநீக்கி
மன்னுபேருட்கடைக்கண்வைக்கப்பினருள்செய்மாயன்
றன்னடியவர்களானார்சாற்றியவமரரெல்லா
முன்னரனடியர்யாரேலுளமருளரக்கராவர். (௬௯)

(இ-ள்.) இன்னணம் - இந்தப்ரகாரம், மூவர் உள்ளத்து இயைந்திடும் - (மேற்சொல்லிய) மூவருடைய மனத்திற் பொருந்திய, மமதை - அஹங்காரத்தை, நீக்கி - போக்கி, மன்னு - நிலைபெற்ற, பேர் அருள் - பெருங்கருணையோடு கூடிய, கடைக்கண் வைக்க - கடாக்ஷம்வைக்க, பின் - பிறகு, சாற்றிய அமரர் எல்லாம் - சொல்லப்பட்ட தேவர்கள் யாவரும், அருள் செய் மாயன் தன் - க்ருபை செய்த திருமாலின், அடியவர்கள் ஆனார் - அடியார்களாயினார்; உன் அரன் அடியர் யாரேல் - உன் சிவனுடைய அடியார்கள் யாரென்றால், உள்ளம் மருள் அரக்கர் ஆவர் - மனமயக்கத்தையுடைய அரக்கரே யாவர், எ-று.



கேசவனாணையாலேகிளர்மதிச்சடையன்முன்னாள்
பேசியமோகநூலைப்பெரிதுகொண்டொழுகியெண்ணில்
பூசையாலிலிங்கந்தன்னைப்போற்றரனடியராகி
யாசிலாச்செல்வம்பெற்றுங்கதிற்செருக்குறுமரக்கர். (௭௰)

(இ-ள்.) கேசவன் ஆணையாலே - திருமாலின் ஆஜ்ஞையால், கிளர்மதி சடையன் - ப்ரகாசிக்கிற சந்த்ர ஜடாதாரனாகிய சிவன், முன்னாள் - முற்காலத்தில், பேசிய - சொன்ன, மோகநூலை - மோஹந சாஸ்த்ரத்தை, பெரிது கொண்டு - பெரிதாகக்கொண்டு, ஒழுகி - (அதின் பிரகாரமே) ஆசரித்து, எண் இல் - அளவற்ற, பூசையால் - பூஜைகளால், இலிங்கம் தன்னைப்போற்று - லிங்கத்தைத் தொழுகின்ற, அரன் அடியர் ஆகி - சிவனடியார்களாகி, ஆசு இல்லா - குற்றமில்லாத, செல்வம்பெற்று - ஐஸ்வர்யத்தையடைந்து, அதின் - அதினால், செருக்கு உறும் - செருக்கை யடைந்திருக்கிற, அரக்கர் - அரக்கர்கள், எ-று.

அறத்தினதியல்பொன்றோரார்அந்தணர்தமைமதிக்கார்
புறத்துளோர்தாரத்திச்சைபொருந்தியேமதுவிடக்கு
மறத்தினாலருந்திமற்றைமன்னுயிர்க்கிடர்செய்கின்றோர்
திறத்தருமறைவிரோதர்சீதரன்திருப்பேருன்னார். (௭௧)

(இ-ள்.) அறத்தினது இயல்பு - தர்ம ஸ்வபாவத்தை, ஒன்று ஓரார் - சிறிதும் ஆராயார், அந்தணர் தம்மை மதிக்கார் - வேதியரை மதியார், புறத்துள்ளோர் - அந்யருடைய, தாரத்து - ஸ்த்ரீகளிடத்தில், இச்சை பொருந்தி - ஆசையை யடைந்து, மதுவிடக்கு - மது மாம்ஸங்களை, மறத்தினால் அருந்தி - வேரூன்றிய நிலைபெற்ற வுயிர்களைப் பாவமுடையோராயுண்டு, மற்றை மன் உயிர்க்கு - மற்றைய ப்ராணிகளுக்கு, இடர் செய்கின்றோர் - துன்பத்தைச் செய்வோர், திறத்து அருமறை விரோதர் - பல சாகைகளையுடைய அருமையாகிய வேதங்களுக்கு விரோதிகள், சீதரன் திருப்பேர் உன்னார் - திருமாலின் திருநாமத்தை நினையார், எ-று.

நஞ்செனக்கடுங்குணத்தோர்நாரணன்றனைத்தூடித்து
நெஞ்சினாலிழுக்குக்கூறிநீள்சடையவனைப்போற்றி
விஞ்சியவரக்கரெல்லாமேவினர்நரகத்தென்று
னுந்சிவன்பரமென்றோதிநவலுவதெங்ஙனம்மா. (௭௨)

(இ-ள்.) நஞ்சு என கடுங்குணத்தோர் - நஞ்சுபோலக் கொடுமையாகிய குணமுடையோர், நாரணன் தன்னைத் தூடித்து - ஸ்ரீமந் நாராயணனைத் தூஷித்து, நெஞ்சினால் இழுக்குக் கூறி - மனத்தோடு கூடிக்குற்றஞ்சொல்லி,

நீள் சடையவனைப்போற்றி - நீண்ட சடையையுடைய சிவனை வணங்கி, விஞ்சிய அரக்கர் எல்லாம் - மீறிய அரக்கர்கள் எல்லாரும், நரகத்து மேவினார் என்றால் - நரகத்தில் பொருந்தினார்கள் என்றால், நம் சிவன் பரம் என்று ஓதி - உமது சிவன் பரவஸ்துவென்று சொல்லி, அவ்வுவந்து - (நீங்கள்) புகழ்வது, எங்ஙன் - எப்படி, எ-று.

சிவன்பரதெய்வமென்னிற்சேர்ந்தவன்றனைப்பூசித்தோர்
நவின்றசத்துவகுணத்தைநண்ணுதலின்றிநாளும்
பவந்தருதமோகுணத்தைப்பற்றிவேற்றில்லாளாசை
யவம்பலவியற்றித்தெய்வவந்தணர்ப்போற்றிடாதென். (எக)

(இ-ள்.) சிவன் பரதெய்வம் என்னின் - சிவன் மேலான தெய்வமென்றால், சேர்ந்து அவன் தன்னை பூசித்தோர் - அடுத்து அவனை ஆராதித்தவர்கள், நவின்ற - சொல்லப்பட்ட, சத்துவகுணத்தை - சாத்விக குணத்தை, நண்ணுதல் இன்றி - பொருந்துதலின்றி, நாளும் - தினந்தோறும், பவம் தரு - பாவத்தையுண்டாக்குகிற, தமோ குணத்தைப்பற்றி - தாமஸ குணத்தைப் பற்றி, வேற்று இல்லாள் ஆசை - பரஸ்திரீகமனத்தையும், பல அவம் - அநேகம் பாவத்தொழில்களையும், இயற்றி - செய்து, தெய்வ அந்தணர் - தெய்விகமுள்ள வேதியரை, போற்றிடாது என் - தொழாதிருப்பதற்குக் காரணம் யாது, எ-று.

கண்ணனைப்பத்திசெய்தகாதலன்பிரகலாதன்
வண்ணமார்விடணன்சீர்மாவலிச்சக்கிரவர்த்தி
யெண்ணிலாவறத்தையோம்பியிடருயிர்க்கியற்றாகிப்
புண்ணியமடைந்துமுத்திபொருந்துதற்கேதுவானோர். (எஉ)

(இ-ள்.) கண்ணனை - திருமாலை, பத்திசெய்த - பக்தி பண்ணின, காதலன் - பாலகனாகிய, பிரகலாதன் - ப்ரஹ்லாதாழ்வானும், வண்ணம் ஆர் விடணன் - அழகாகிய விபீஷணாழ்வானும், சீர் மாவலிச் சக்கிரவர்த்தி - சிறப்பையுடைய மஹாபலிச் சக்ரவர்த்தியும், எண் இல்லா அறத்தை ஓம்பி - அளவற்ற தர்மங்களைக்காத்து, உயிர்க்கு - பிறவுயிர்களுக்கு, இடர் இயற்றார் ஆகி - துன்பஞ்செய்யாதவராகி, புண்ணியம் அடைந்து - புண்ணியத்தை யடைந்து, முத்தி பொருந்துதற்கு - மோக்ஷத்தை யடைவதற்கு, ஏது ஆனோர் - காரணம் ஆனார், எ-று.

ஆகையாற்றிருமாலாகுமருட்பரத்துவனென்றோதி
யோகையாலவையினுட்பனுற்றிருந்தரசனோடு
வாகுபரமைச்சர்நற்பாவாணரைநோக்கிப்பின்னு
நாகனையுருவநீத்தநாதனல்லடியன்சொல்வான். (எங)

(இ-ள்.) ஆகையால் - ஆதலால், அருள் பரத்துவன் - அருளோடு கூடின பரத்வத்தையுடையவன், திருமால் ஆகும் - திருமாலே ஆவான், என்று ஓதி -



என்றுசொல்லி, ஓகையால் - மனமகிழ்ச்சியுடன், அவையின் நாப்பண் - சபையினிடையில், உற்றிருந்து - பொருந்தியிருந்து, அரசனோடு - அரசனுடன், வாகு உயர் அமைச்சர் - அழகிற் சிறந்த மந்திரிமார், நற்பாவாணரை நோக்கி - நல்ல வித்வான்கள் என்னு மிவர்களைப்பார்த்து, பின்னும் - மேலும், நாகன் உருவம் நீத்த - விலக்ஷணமாகிய ஆதி சேஷரூபத்தை விட்டுவந்த, நாதன் - யதிராஜராகிய, நல் அடியன் சொல்வான் - நன்மையாகிய அடியர் என்கிற சூடோசர் சொல்லுவார், எ-று.

அனேகமாயிலிங்கபூசையாற்றியவிரணியாக்கன்
விறலியவிரணியன்சீர்மேவியகும்பகர்ணன்
சனிராவணன்சுமாலிசாற்றியமாலிவாணன்
னெனுவினம்பலபேருண்டிங்கியற்றியும்பவமடைந்தோர். (எச)

(இ-ள்.) இலிங்கபூசை அனேகமாய் ஆற்றிய - இலிங்க பூசை அநேகமாய்ச்செய்த, இரணியாக்கன் - ஹிரண்யாக்ஷன், விறலிய இரணியன் - கேட்ட [illegible], சீர் மேவிய கும்பகர்ணன் - சிறப்புப் பொருந்திய கும்பகர்ணன், சனி ராவணன் - [illegible] ராவணன், சுமாலி - சுமாலி, சாற்றியமாலி - சொல்லப்பட்ட மாலி, வாணன் - பாணாசுரன், என - என்று, இனம் பலபேர் - இன்னம் அநேகம்பேர், இங்கு இயற்றியும் பவம் அடைந்தோர் - இவ்விடத்தில் லிங்க பூஜை செய்தும் பாவத்தை யடைந்தோர், உண்டு - உளர், எ-று.

செந்திருமாலாலிங்குசெப்பியவரக்கர்பல்லோர்
வந்துயிர்மாய்தலாலெம்மாயவன்கருணையாலே
யிந்தணிசடிலன்பூசையாவும்போயவர்கள்செய்த
நந்தலில்பாவமும்போய்நவிற்றபசாரந்தீர்ந்தே. (எரு)

(இ-ள்.) செந்திருமால் - லக்ஷ்மீபதியாகிய திருமாலினால், இங்கு செப்பிய அரக்கர் பல்லோர் - இவ்விடத்தில் சொல்லிய அரக்கர் பலபேர், வந்து உயிர்மாய்தலால் - வந்து உயிர் மடிதலால், எம்மாயவன் கருணையாலே - எமது திருமாலின் க்ருபையால், இந்து அணிசடிலன் பூசையாவும் போய் - சந்த்ரனை யணிந்த சடையையுடையவனாகிய சிவன் பூசையெல்லாம் நீங்கி, அவர்கள்செய்த - அவர்கள் பண்ணின, நந்தல் இல் - கெடுதியில்லாத, பாவமும்போய் - பாபமும் நீங்கி, நவிற்று அபசாரம் தீர்ந்து - செய்த குற்றங்களும் நீங்கி, எ-று.

கருணைமாக்கடலின்வைகக்கடாக்கமேபுரியவன்றோர்
திருமறுமார்பனாட்டிற்சேர்ந்தனராதலாலே
வருசிவன்பரமேயாயின்மாய்ந்திடுமோக்கமெல்லா
மருவியச்சிவலோகத்தில்வாழ்ந்திடாவனையதென்னே. (எசு)

(இ-ள்.) கருணைமாக்கடலின் வைக - தன் அருட்பெருங் கடலில் தங்கும்படி, கடாக்கமே புரிய - கடாக்ஷம்பண்ணவே, அன்னோர் - அவர்கள், திருமறுமார்பன் - பெரியபிராட்டியாரையும் உத்தம லக்ஷண சிந்ஹமாகிய ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவையுமுடைய மார்பையுடையவனாகிய திருமாலின், நாட்டில் - திருநாடாகிய பரமபதத்தில், சேர்ந்தனர் ஆதலாலே - அடைந்தார்களாதலாலே, வருசிவன் பரமே ஆயின் - வ்ருத்தி யடைகின்ற சிவன் பரவஸ்துவேயானால், மாய்ந்திடும் அரக்கர் எல்லாம் - இறந்த அரக்கர் யாவரும், மருவிய - பொருந்திய, சிவலோகத்தில் - சிவபுரத்தில், வாழ்ந்திடாவகை இது என் - போய் வாழாதவித மாகிய இதற்குக் காரணம் யாது, எ-று.

அண்டமுண்டுமிழ்ந்தோன்கையாலழிந்திடுமரக்கரெல்லாம்
விண்டுவினுலகுற்றாரெனவிரித்துரைக்குமாற்றங்
கண்டறிந்துணர்மினுண்மைகழறுகாயத்திரிப்பேர்
கொண்டமெய்ப்பொருளிராமாயணத்தெனக்கூறிச்சொல்வான். ()

(இ-ள்.) அண்டம் உண்டு உமிழ்ந்தோன் - உலகங்களை உண்டு மீட்டும் வெளிநாடு காண உமிழ்ந்தவராகிய திருமாலின், கையால் - கையினால், அழிந்திடும் அரக்கர் எல்லாம் - மடிந்த அரக்கர்களெல்லாம், விண்டு வின் உலகம் உற்றார் - ஸ்ரீவிஷ்ணு லோகத்தை யடைந்தார்கள், என விரித்து உரைக்கும் மாற்றம் - என்று விரித்துச் சொன்ன சொல்லை, கண்டு அறிந்து - நீங்கள் கண்டுணர்ந்து, உண்மை உணர்மின் - யதார்த்தத்தை யறிந்துகொள்ளுங்கள், கழறு - சொல்லப்பட்ட, காயத்திரிப்பேர் கொண்ட - காயத்ரியென்னும் பெயரைக் கொண்டிருக்கிற, மெய்ப் பொருள் - மெய்ப்பொருளாகிய, இராமாயணத்து - ஸ்ரீராமாயணத்தில், எனக்கூறி - என்று சொல்லி, சொல்வான் - மேலுஞ்சொல்வான், எ-று.

அன்றியும்பரிதிவானோனணிமரபரசரெல்லாம்
வென்றிமாலடியராயும்வியன்குருவசிட்டராயு
மென்றிவைமரபுபாரம்பரியமாயியற்றுங்காலை
யொன்றுமம்மரபில்வீரசேநனென்றுரைப்போனாளில். (அ௰)

(இ-ள்.) அன்றியும் - அல்லாமலும், பரிதிவானோன் - சூரியதேவனது, அணிமரபு - அழகிய வமிசத்திற் பிறந்த, அரசர் எல்லாம் - ராஜாக்களெல்லாரும், வென்றி மால் அடியர் ஆயும் - வெற்றியையுடைய திருமாலின் அடியார்களாயும், வியன் குருவசிட்டர் ஆயும் - பெரிய ஆசாரியர் வசிஷ்டராயும், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவைகள், மரபு பாரம்பரியம் ஆய் இயற்றுங்காலை - வமிசபரம்பரையாகச் செய்யுங்காலத்தில், ஒன்றும் - பொருந்திய, அம்மரபில் - அந்த வமிசத்தில், வீரசேநன் என்று உரைப்போன் நாளில் - வீரசேநனென்று சொல்லப்படுவோனது காலத்தில், எ-று.



ஆரணியத்தில்வேட்டமாடுவானடைந்தகாலைச்
சாருமவ்வனத்தில்வேதந்தணந்தபாடண்டசங்க
மோரிடத்திருந்தவ்வேந்தற்குரைத்தனர்மோகநூலை
யாருணர்வில்லானந்நூற்கமைந்தனன்மயங்கினன்னே. (அக)

(இ-ள்.) ஆரணியத்தில் - காட்டில், வேட்டம் ஆடுவான் - வேட்டையாடும் பொருட்டு, அடைந்த காலை - சேர்ந்தபோது, சாரும் அவ்வனத்தில் - சேர்ந்த அந்தக்காட்டில், வேதம் தணந்த - வேதமார்க்கத்தை நீங்கிய, பாடண்ட சங்கம் - பாஷண்ட சங்கமானது, ஓர் இடத்து இருந்து - ஓரிடத்திலிருந்து, அவ்வேந்தற்கு - அந்த அரசனுக்கு, மோக நூலை - மோஹந சாஸ்த்ரங்களை, உரைத்தனர் - சொன்னார்கள், ஆர் உணர்வு இல்லான் - நிறைந்த அறிவில்லாதவனாகிய அந்த அரசன், அந்நூற்கு - அந்த மோஹந சாஸ்த்ரத்துக்கு, அமைந்து - கட்டுப்பட்டு, மயங்கி - மயக்கமடைந்து, எ-று.

மயங்கினன்மாலைப்போற்றும்வைதிகமுறைமையென்னும்
வியன்பெறுசந்திவந்தநாதிகன்மங்கள்விட்டுத்
தயங்கியங்கிருந்துபன்னாட்டன்னகர்க்கதன்பின்சென்று
நயன்றருவசிட்டனாணைநண்ணிலன்றூடணித்தே. (அஉ)

(இ-ள்.) மயங்கினன் - மயங்கினவனாய், மாலைப்போற்றும் - திருமாலை வணங்குகின்ற, வைதிக முறைமையென்னும் - வைதிகக்ரமம் என்கிற, வியன் பெறு - பெருமை பெற்ற, சந்தி வந்த நாதிகன்மங்கள் விட்டு - சந்த்யாவந்தநாதிசத் கர்மங்களை விட்டு, தயங்கி - மயங்கி, பல் நாள் அங்கு இருந்து - அநேக நாள் அங்கேயிருந்து, அதற்பின் - அதின்பிறகு, தன் நகர்க்கு சென்று - தனது நகருக்குப் போய், நயன் தரு - நன்மையைத் தருகின்ற, வசிட்டன் ஆணை நண்ணிலன் - வசிஷ்டரது ஆஜ்ஞையை யேற்று நடவாதவனாகி, தூடணித்து - அவரையுந் தூஷித்து, எ-று.

அனந்தமாயிரம்பேருக்கந்தமோகநூலோதி
மனங்கலைத்திடுதல்கண்டுவசிட்டன்றன்மனந்தளர்ந்து
சினங்கொடுநரகநீங்கள்சேர்ந்தனுபவிப்பீரென்று
புனைந்திடச்சபித்தபின்னெப்புனிதனங்கன்றுபோனான். (அங)

(இ-ள்.) அநந்தம் ஆயிரம்பேருக்கு - அநேகமாயிரம் பேர்களுக்கு, அங்கு - அவ்விடத்தில், அந்த மோகந நூல் ஓதி - அந்த மோஹந சாஸ்த்ரத்தை உபதேசித்து, மனம் கலைத்திடுதல் கண்டு - மனங் கலங்கப்பண்ணுவதைப் பார்த்து, வசிட்டன் தன் மனம் தளர்ந்து - வசிஷ்ட முனிவன் தன் மனந் தளர்ச்சியடைந்து, சினம் கொடு - கோபங்கொண்டு, நீங்கள் நரகம் சேர்ந்து அநுபவிப்பீர் என்று - நீங்கள் நரகலோகத்தை யடைந்து அங்குள்ள துன்பங்களை அநுபவிக்கக் கடவீர்களென்று, புனைந்திடச் சபித்தபின் -

அமையச் சபித்தபிறகு, அப்புநிதன் - அந்தப் பரிசுத்தராகிய வசிஷ்டபகவான், அங்கு அகன்றுபோனன் - அங்கு நின்றும் நீங்கிப்போனர், எ-று.

மொழிந்தவவ்வேந்தன்காலமுடிவிலத்தோடத்தாலே
யிழிந்தமாநிரயத்துற்றங்கீரிரண்டிலக்கமாண்டு
கழிந்தபின்பண்டுமாலைக்கருதியபயன்வந்துற்றங்
கொழிந்தனனிரயம்பார்மேலுதித்தனன்பிரமரக்காய். (௮௪)

(இ-ள்.) மொழிந்த அவ் வேந்தன் - சொல்லப்பட்ட அந்த அரசன், கால முடிவில் - தன் ஆயுள் முடிவில், அத் தோடத்தாலே - அந்த தோஷத்தினல், இழிந்த மாநிரயத்து உற்று - தாழ்ந்த பெரிய நரகத்திற் சேர்ந்து, அங்கு - அவ்விடத்தில், ஈர் இரண்டு இலக்கம் ஆண்டு - இரண்டிலக்ஷம் வருடங்கள், கழிந்தபின் - சென்றபிறகு, பண்டு - முற்காலத்தில், மாலைக் கருதிய - திருமாலை நினைத்த, பயன் - ப்ரயோஜனமாகிய புண்யம், அங்கு வந்து உற்று - அவ்விடத்து வந்து அவனைச் சேர்தலால், நிரயம் ஒழிந்தனன் - நரகத்தை நீங்கினவனுய், பார்மேல் - பூமியின்மீது, பிரமரக்காய் உதித்தனன் - ப்ரஹ்ம ரக்ஷஸாய்ப் பிறந்தான், எ-று.

பிரமரக்கசுவாய்வேந்தன்பெருநிலத்துதித்திருந்தான்
வரமிகுமாகமாதமருவுஞான்றதனிலுண்மைத்
திறனுறுமொருமுனித்தண்டுறைசெறிகங்கையாடி
வரவவர்கருணையாலேவண்புனல்புரோக்கணித்தார். (௮௫)

(இ-ள்.) வேந்தன் - அந்த அரசன், பெரு நிலத்து - பெரிய பூமியின் மேல், பிரமரக்கசு ஆய் - ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸாய், உதித்து இருந்தான் - பிறந்திருந்தான், வரம் மிகும் - மேன்மை மிகுந்த, மாக மாதம் மருவும் ஞான்றதனில் - மாகமாதம்பொருந்திய காலத்தில், உண்மைத்திறம் உறும் ஒரு முனி - மெய்ப்பொருளாகிய தத்துவத்தைப் பொருந்திய ஒரு முனிவர், தண்துறை செறி கங்கை ஆடி - குளிர்ச்சியாகிய அலைகள் பொருந்திய கங்காநதியில் ஸ்நாநம்பண்ணி, வர - வரவே, அவர் கருணையாலே - அந்த முனிவர் தமது க்ருபையால், வள் புனல் - வளமாகிய நீரை, புரோக்கணித்தார் - அந்த அரசன்மீது ப்ரோக்ஷித்தார், எ-று,

அப்பெருமாகத்தானபலத்தினலரசனங்கே
செப்பருஞ்சுவர்க்கலோகஞ்சென்றடைந்தனன்கேளின்னம்
புட்பத்தாலிலிங்கங்கோடிபூசிக்கும்பலங்களெல்லா
மொப்பிலோர்சாலக்கிராமமுவந்துபூசிக்கினுண்டாம். (௮௬)

(இ-ள்.) அ - அந்த, பெரு - பெரிதான, மாகத்தான பலத்தினல் - மாகஸ்நாநபலத்தால், அரசன் - அரசனனவன், அங்கே - அப்பொழுதே, செப்பு அரு - சொல்லுதற்கரிய, சுவர்க்கலோகம் சென்று அடைந்தனன் - ஸ்வர்க்கலோகத்தில் போய்ச் சேர்ந்தான், இன்னம் கேள் - இன்னமும் கேளுங்கள், புட்பத்தால் - புஷ்பங்களைக்கொண்டு, இலிங்கம் கோடி - கோடி லிங்கங்களை, பூசிக்கும் பலங்கள் எல்லாம் - பூஜிக்கின்றதனுலுண்டாகிய பலங்கள் யாவும், ஒப்பு இல் - சமானமில்லாத, ஓர் சாலக்கிராமம் - ஒரு சாலக்ராமத்தை, உவந்து பூசிக்கின் - விரும்பிப் பூசித்தால், உண்டாம் - உண்டாகும், எ-று.



என்றுரைத்திடுமிவ்வுண்மையெவற்றுரைத்திடுதலென்னி
னன்றறிபதுமமென்னநாட்டியபுராணந்தன்னின்
மன்றலந்தாரோய்மாகமகத்துவந்தன்னிற்காண்மி
னென்றியவுணர்வினலென்றுணர்த்தினன்மீட்டுஞ்சொல்வான்.

(இ-ள்.) என்று உரைத்திடும் - என்று சொல்லுகிற, இவ்வுண்மை - இந்த யதார்த்தம், எவற்று - எந்த நூல்களில், உரைத்திடுவது என்னின் - சொல்வதென்றால், நன்று - நன்மைகளை, அறி - அறிதற்குக் கருவியாகிய, பதுமம் என்ன நாட்டிய புராணந்தன்னில் - பதுமமென்று பெயர் நிலைநிறுத்தப்பட்ட புராணத்திலும், மன்றல் அம் தாரோய் - பரிமளமுள்ள அழகிய மாலையையுடைய அரசனே, ஒன்றிய உணர்வினல் - பொருந்திய அறிவினல், மாக மகத்துவம் தன்னில் - மாக மாஹாத்மியத்திலும், காண்மின் - காணுங்கள், என்று உணர்த்தினன் - என்று சொல்லி, மீட்டும் சொல்வான் - மறுபடியுஞ் சொல்லுவாராயினர், எ-று.

வேறு.

சிவசங்கரன்றனடியார்களென்றுதிரிவோர்களந்தியத்திற்
பவபஞ்சனஞ்செய்தருண்மாயனெங்கள்பரமன்றனுமமொன்று
நவல்கின்றநன்மையுளோரன்னேர்களுயரின்பமாலினுலகந்
துவன்விஇன்றியார்வரெனவோதிடுந்துலாக்காவிரிப்புனிதநூல். (௮௮)

(இ-ள்.) சிவசங்கரன் தன் அடியார்கள் என்று - சிவபக்தர்களென்று சொல்லப்பட்டு, திரிவோர்கள் - திரிபவர்கள், அந்தியத்தில் - அந்திய காலத்தில், பவபஞ்சனம் செய்தருள் - பவநாசம் செய்தருளுகின்ற, மாயன் - மாயோனில், பவபஞ்சனம் செய்தருள் - பவநாசம் செய்தருளுகின்ற, மாயன் - மாயோனாகிய, எங்கள் பரமன் தன் - எமது பரமனுமாகிய திருமாலின், நாமம் ஒன்றும் - திருநாமங்களுள் ஒன்றை, நவல்கின்ற - சொல்லுகின்ற, நன்மை உளோர் - நன்மையை யுடையராயின், அன்னேர்கள் - அவர்கள், இன்பம் உயர் - இன்பத்தை யதுபவித்தற்குரிய, மாலின் உலகம் - ஸ்ரீ விஷ்ணுலோகத்தில், துவன்வு இன்றி - அயர்வில்லாமல், ஆர்வர் - சேர்வார்கள், என - என்று, துலாக்காவிரி - துலாக்காவேரி மாஹாத்மியம் என்கிற, புனித நூல் - பரிசுத்தமாகிய நூலானது, ஓதிடும் - சொல்லும், எ-று.

அதுகண்டுணர்ந்திடுமினுதலாலுமரனன்பரோலுமெழின்மா
நதிநின்றிலங்குபதபங்கயத்தினவிரோதமாகநிரத
முதிர்வேதவைதிகமனுட்டித்ததின்முறைசெய்யினங்கவர்பெற
விதனஞ்செய்வெய்யநரகங்கிடைத்தல்விதியன்றெனப்புகலுவான்.

(இ-ள்.) அதுகண்டு உணர்ந்திடுமின் - அதைக் கண்டறியுங்கள், ஆதலாலும் - ஆகையாலும், அரன் அன்பரோலும் - சிவனடியார்களாயினும், எழில் - அழகாகிய, மா நதி - பெரிய நதியாகிய கங்கை, நின்று இலங்கு - நிலைபெற்று விளங்குகின்ற, பதபங்கயத்தின் - திருவடித்தாமரைகளில், அவிரோதமாக - விரோதமில்லாமல், நிரதம் - நிரந்தரகாலமும், முதிர் - பழையதாகிய, வேத வைதிகம் அநுட்டித்து - வேத வைதிகங்களை அநுஷ்டித்து, அதின் முறை செய்யின் - அதின் க்ரமமாகச் செய்தால், அங்கு அவர் பெற - அவ்விடத்து அவர் பெறும்படி, விதனம் செய் - வ்யஸநத்தை யுண்டாக்குகின்ற, வெய்ய நரகம் கிடைத்தல் - கொடிய நரகம் சித்திப்பது, விதி அன்று என புகலுவான் - விதியல்லவென்று சொல்லுவார், எ-று.

அடியந்தமில்வைகுந்தத்திருக்குமருளனித்தசூரியரின்மண
முடியின்கண்வைத்திடுமனந்தருபமுதல்வன்முகுந்தனருளின்
படியிங்குநற்றரிசனங்கொடுத்தல்பகர்கின்றதற்குமருவும்
வடிவொன்றிராமாநுசனெனப்பாதமலரன்பனென்னுமிறையோன்.

(இ-ள்.) அடி அந்தம் இல் - ஆதியும் அந்தமும் இல்லாத, வைகுந்தத்து இருக்கும் - பரமபதத்திலிருக்கிற, அருள் - அருளையுடைய, நித்திய சூரியரில் - நித்ய சூரிகளுள், மண் முடியின் கண் வைத்திடும் - பூமியை முடிமீது வைத்துத் தாங்குகின்ற, அநந்த ரூபமுதல்வன் - ஆதிசேஷ ரூபமாகிய முதல்வனும், முகுந்தன் - முகுந்தனும் ஆகிய திருமாலின், அருளின்படி - அருளின்படியாகவே, இங்கு - இவ்வுலகத்தில், நல் தரிசனம் கொடுத்தல் - நல்ல சேவை சாதித்தருளுதல், பகர்கின்றதற்கு - சொல்லப்படுகின்ற அதற்கு, மருவு வடிவு ஒன்று - பொருந்திய வடிவத்தைப்பெற்ற, இராமா [illegible] ராமாநுஜனாகிய, [illegible] பாதமலர் அன்பன் என்னும் - ஸ்ரீ பாதகமலங்களுக்கு அன்பு செய்பவனென்கிற, இறையோன் - திருக்கூராதிபன், எ-று.

உலகத்தின்மாயைநிலையைத்தவிர்ந்தவ்வொருவத்துநின்னயமறிந்
திலகச்சிவன்சொலியமோகநூலினிடரைத்தவிர்ந்துமறைநூற்
பலமெய்ப்பொருட்களிசைநாவிலுற்றபரிசுத்தசித்தமுத்த
னலகைக்கணங்களுடனிமமாடுமரனன்பர்மேவுமவையில். (கூக)

(இ-ள்.) உலகத்தின் மாயை நிலையைத் தவிர்ந்து - ப்ரபஞ்ச மாயையின் நிலையை நீங்கி, அவ்வொருவத்து நின்னயம் அறிந்து - அந்த ஒப்பற்ற வஸ்துவின் நிஸ்சயத்தை யுணர்ந்து, இலக - விளங்கும்படி, சிவன் சொலிய - சிவன் சொன்ன, மோகநூலின் - மோஹந சாஸ்த்ரத்தின், இடரைத் தவிர்ந்து - துன்பத்தை நீக்கி, பல மறைநூல் - அநேகமாகிய வேத சாஸ்த்ரங்களின், மெய்ப்பொருட்கள் - உண்மையாகிய அர்த்தங்கள், இசை நாவில் உற்ற - சொல்லுகின்ற தன் நாவிற் பொருந்தப்பெற்ற, பரிசுத்த சித்த முத்தன் - பரிசுத்தமாகிய சித்தத்தையுடைய முக்தாத்மாவான ஸ்ரீகூரேசர், அலகைக்கணங்களுடன் - பசாசகணங்களோடு, நமம் ஆடும் - ஸ்மசாநத்தில் ஆடுகின்ற, அரன் அன்பர் மேவும் - சிவபக்தர்கள் பொருந்தியிருக்கிற, அவையில் - சபையின்கண், எ-று.



மதவாரணங்கள்பலகோடிமேவிவளைகின்றதன்மையெனவே
கதமார்ந்திடுங்கிருமிகண்டனோடுகவிவாணர்மேவுமவையுற்
புதமார்ந்தசிங்கமதுகர்ச்சனங்கள்புரிகின்றதன்மையெனவே
சிதமார்ந்திடுஞ்சொன்மறைகூறிவென்றிகழ்கூரமாதவர்சொல்வார்.

(இ-ள்.) பலகோடி மதவாரணங்கள் - அநேககோடி மதயானைகள், மேவி வளைகின்ற தன்மையெனவே - பொருந்தி வளைத்துக்கொள்ளுந் தன்மைபோலவே, கதம் ஆர்ந்திடும் - கோபம் பொருந்திய, கிருமிகண்டனோடு - க்ருமிகண்ட சோழனுடன், கவிவாணர் மேவும் அவை - வித்வான்கள் பொருந்தியிருக்கிற சபையில், அற்புதம் ஆர்ந்த - அத்புதம் பொருந்திய, சிங்கமது - சிங்கமானது, கர்ச்சனங்கள் புரிகின்ற தன்மையெனவே - கர்ஜநங்களைச் செய்கின்ற தன்மை போலவே, சிதம் ஆர்ந்திடும் சொல் - ஞானம் பொருந்திய சொற்களையுடைய, மறை கூறி - வேத வாக்யங்களைச் சொல்லி, வென்று இகழ் - வெற்றியை யடைந்து ப்ரகாசிக்கிற, கூரமாதவர் சொல்வார் - ஸ்ரீகூரேசர் சொல்லுவார், எ-று.

வருமூன்றுமூர்த்திவடிவென்றிலிங்கமதனைப்புகழ்ந்துவாது
தருமாறுவேதமொடுவைதிகங்கட்குமெய்ப்பொருட்கணிசையா
தொருமோகநூலினியைவாமிதென்னுமுரையாலரன்றனைமறுத்
தருண்மேவுமாயனவனேபரத்துவனுமென்றிசைத்தனனரோ. (சுஉ)

(இ-ள்.) வரும் - உண்டாகிய, மூன்று மூர்த்தி வடிவு என்று - த்ரிமூர்த்தி ஸ்வரூபமென்று, இலிங்கமதனைப் புகழ்ந்து - லிங்கத்தைப் புகழ்ந்து, வாது தரும் ஆறு - வாதுசெய்யும் வண்ணம், வேதமொடு வைதிகங்கட்கு - வேதத்துடன் வைதிகங்களுக்கும், மெய்ப்பொருட்கண் - உண்மையாகிய அர்த்த விசாரத்தில், இசையாது - ஒவ்வாது, இது - இது, ஒரு மோகநூலின் - ஒரு மோஹந சாஸ்த்ரத்தின், இயைவு ஆம் - சம்மதமாகும், என்னும் உரையால் - என்கிற வாக்யத்தால், அரன் தன்னை மறுத்து - சிவனது பரத்வத்தை மறுத்து, அருள் மேவும் மாயன் அவனே - அருள்பொருந்திய மாயோனாகிய அவனே, பரத்துவன் ஆம் என்று - பரத்வத்தை யுடையவனுமென்று, இசைத்தனன் - சொன்னார், எ-று.

இசைகின்றவேதமொருநான்கினுச்சியினிலேவிளங்கு திருமா
லசைகின்றதற்குமசையாததற்குமகிலங்களுக்குமுதல்வ
னிசமென்றுரைத்தவிந்நூறெளிந்துநிகழ்வோர்களியாவரெனினும்
வசையின்றியிங்களுயர்செல்வமெய்திவைகுந்தநாடுமுறுவார். (கூச)

(இ-ள்.) இசைகின்ற - பொருந்துகின்ற, வேதம் ஒரு நான்கின் உச்சியினிலே விளங்கு - நான்கு வேதங்களின் முடிமீது விளங்குகின்ற, திருமால் - திருமாலும், அசைகின்ற தற்கும் - அசையும் பொருள்களாகிய சரங்களுக்கும், அசையாததற்கும் - அசையாப் பொருள்களாகிய அசரங்களுக்கும், அகிலங்களுக்கும் - (இவைகளுக்கு இருப்பிடமாகிய) உலகங்களுக்கும், முதல்வன் - தலைவனும் ஆகிய எம்பெருமானே, நிசம் என்று - உண்மையானவனென்று, உரைத்த - சொன்ன, இந்நூல் - இந்த நூலை, தெளிந்து நிகழ்வோர் - தெளிந்திருப்பவர், இயாவர் எனினும் - யாவராயினும், இங்கண் - இவ்வுலகில், வசையின்றி - நிந்தையில்லாமல், உயர் - உயர்ந்த, செல்வம் எய்தி - செல்வத்தையடைந்து, வைகுந்த நாடும் உறுவார் - பரமபதநாட்டையும் அடைவார், எ-று.

இருபத்துமூன்றாவது லிங்கயோநிகட்சி முற்றிற்று.

ஆ திருவிருத்தம், எஎச.

# இருபத்துமூன்றாவது
# லிங்கயோநிகட்சி.

முதலாவது—ப்ருகு மஹாரிஷி சாபத்தினாலே சிவனுக்கும் உமைக்கும் லிங்கங்களறுந்து விழுந்து, காட்டிலே சஞ்சரித்துக்கொண்டிருந்த பின்பு விஷ்ணுவைக்குறித்து ஆயிரஞ் செண்பகப் புஷ்பங்களினாலே அர்ச்சிக்கையில், அப்படிப்பட்ட ஒன்று குறைந்ததென்று தன் மூக்கை யரிந்து அர்ச்சிக்க, இருவருக்கும் லிங்கம் உண்டாக, பக்தியை விஷ்ணுவானவர் கண்டு ப்ரீதியடைந்து, இருவருக்கும் லிங்கம் உண்டாகத்தக்கதாயும், அநுக்ரஹிக்கதாயும், பரஸ்பரம் போகிந்து ப்ரீதியடையத்தக்கதாயும் சொல்லியிருக்கின்றதை, ருத்ரகீதை அகஸ்திய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கையால் விஷ்ணு க-வது கட்சி க-வது தொடரில் ப்ரமாணஞ் சொல்லியிருக்கையால் விஷ்ணு யோகியாய்த் தாங்கினுரென்பது சர்வாபத்தம்.

## இருபத்துநான்காவது

# சங்கரநாராயணமூர்த்தி கட்சி.

பரமபதங்குருகூராய்ப்பாம்பணையேதிருப்புளியாய்ப்
பரமபதநாரணனேபராங்குசனாயவதரித்த
பரமன்மறைநான்கயற்குப்பகர்ந்ததெனமதுரகவி
பரமறியுநான்குபிரபந்தனம்பொன்னடிபணிவாம். (௧)

(இ-ள்.) பரமபதம் குருகூர் ஆய் - பரமபதமே குருகூராகவும், பாம்பணையே திருப்புளி ஆய் - சர்ப்பசயநமே திருப்புளியாகவும், (கொண்டு) பரமபத நாரணனே பராங்குசனாய் - பரமபதத்திலுள்ள ஸ்ரீமந் நாராயணனே பராங்குசராக, அவதரித்த - அவதரித்தருளின, பரமன் - மேலானவன், மறை நான்கு - சதுர்வேதங்களையும், அயற்கு - ப்ரஹ்மாவுக்கு, பகர்ந்ததனை - திருவாய் மலர்ந்தருளினதுபோல, மதுரகவி - ஸ்ரீமதுரகவிகள், பரம் அறியும் - பரவஸ்துவை அறிதற்குக் கருவியாகிய, நான்கு பிரபந்தன் - நான்கு பிரபந்தங்களையும் அருளிச் செய்தவராகிய ஆழ்வாருடைய, அம் - அழகாகிய, பொன் அடிபணிவாம் - பொன்போலும் திருவடிகளை வணங்குவோம் எ-று.

நான்குபிரபந்தங்களாவன. திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்பன.

குறுங்குடிமாயவற்கரங்கக்கொண்டலுக்குத்துவயமுடன்
பிறங்குதமிழீடளிப்பான்பெருநாட்டுக்கெழுந்தருள்கா
லறங்குலவுநியமமிரண்டாறுநிருபணம்பனிரண்
டுறுங்கதிபாகவதருக்கென்றுரைத்தவிராமாநுசனே. (௨)

(இ-ள்.) குறுங்குடி மாயவற்கு - திருக்குறுங்குடி மாயவனுக்கும், அரங்கக் கொண்டலுக்கு - திருவரங்கத்தி லெழுந்தருளியிருக்கும் நீலமேகவண்ணனாகிய பெரிய பெருமாளுக்கும், துவயமுடன் - த்வயத்தோடு, பிறங்கு - விளங்குகின்ற, தமிழ் ஈடு அளிப்பான் - தமிழ் ஈட்டைக் கேட்பித்தற்பொருட்டு, பெருநாட்டுக்கு எழுந்தருள்கால் - பெருநாடாகிய பரமபதத்துக்கு எழுந்தருள்கையில், அறம் குலவும் - தர்மம் விளங்குகின்ற, நியமம் இரண்டு ஆறு நிருபணம் பனிரண்டு - * பாகவதருக்கு கதி உறும் என்று - பாகவதர்களுக்கு மேலான கதியுண்டாகுமென்று, உரைத்த - திருவாய் மலர்ந்தருளின, இராமாநுசன் - ஸ்ரீபாஷ்யகாரர், எ-று.

* இந்த இடம் அர்த்தமாகவில்லை.

இருட்சமயபாதவனெக்கியனுள்ளங்கைக்குளிர்நாயன்
றெருட்பெறுசமாசிரயணஞ்செய்தெழிற்பேர்கோவிந்த
ரருளாளப்பெருமாளெம்பெருமானாரெம்பாரென்
றிருஞாலந்தெளியவருளெதிபதிக்கன்பனைப்பணிவாம். (௩)



(இ-ள்.) இருள் சமயம் - அஜ்ஞாநாந்தகாரத்தை யுண்டாக்குகிற சமயத்தையுடைய, யாதவன் - யாதவப்ரகாசன், எக்கியன் - யஜ்ஞமூர்த்தி, உள்ளங் கைக்குளிர் நாயன் - உள்ளங் கைக்கொணர்ந்த நாயன், (இவர்கள்) தெருள் பெறு - தெளிவடைதற் கேதுவாகிய, சமாசிரயணம் செய்து - சமாச்ரயணஞ் செய்து, எழில் பேர் - அழகாகியபேர்கள், கோவிந்தர் - கோவிந்தர், அருளாளப்பெருமான் - அருளாளப் பெருமாள், எம்பெருமானார் - எம்பெருமானார், எம்பார் - எம்பார், என்று - என்று, இருஞாலம் தெளிய - பெரிய நிலவுலகத்தோர் அறியும்படி, அருள் - அருளிச்செய்த, எதிபதிக்கு - யதிராஜருக்கு, அன்பனை - அன்புடையவராகிய கூரேசனை, பணிவாம் - வணங்குவோம் (யாம்), எ-று.

### வேறு.

முருகார்பொழின்மாமுகிலார்செழிலேய்
திருவார்கூரந்திகழ்மாமறைதேர்
ஒருமாதவனங்குருவாயருவாய்
வருநாரணனார்மகிமைபுகல்வான். (௪)

(இ-ள்.) முருகு ஆர் - மணம்பொருந்திய, பொழில் - சோலைகளின் மீது, மாமுகில் ஆர் - பெரியமேகங்கள் வந்து படிகின்ற, எழில் எய் - அழகு பொருந்திய, திரு ஆர் - செல்வம் நிறைந்த, கூரம் திகழ் - திருக்கூரத்தில் விளங்கிய, மாமறை தேர் - பெரிய வேதங்களை ஆராய்ந்தறிந்த, ஒரு மாதவன் - ஒப்பற்ற பெருந்தவத்தையுடையோராகிய கூரேசர், அங்கு - அவ்வவ்விடங்களில், உரு ஆய் - ரூபமாகி, அரு ஆய் - அரூபமாகி, வரு - தோன்றுகின்ற, நாரணனார் - ஸ்ரீமந் நாராயணனது, மகிமை - பெருமையை, புகல்வான் - சொல்லுவார், எ-று.

புவிநீரனல்கால்புணர்வானுமாய்த்
தவிராதெவையுந்தனுவாயுறைபா
லவிரோதிவிரோதியுமாயகிலங்
குவிவார்விரிவார்குலவிச்சையினால் (௫)

(இ-ள்.) புவி - ப்ருதிவியும், நீர் - அப்பும், அனல் - அக்நியும், கால் - வாயுவும், புணர் - (இவைகள்யாவும் இயங்குதற்கிடமாகிய) வானமும் - ஆகாசமும், ஆய் - ஆகி, தவிராது - நீங்காமல், எவையும் - எல்லாப்பொருள்களையும், தனு ஆய் உறை - தனக்குச் சரீரமாகக்கொண்டு அவற்றுள்ளே வியாபித்திருந்த, பால் - , அவிரோதி விரோதியும் ஆய் - அவிரோதியும் விரோதியுமாகி, மால் - திருமால், அகிலம் - உலகங்களை, குல இச்சையினால் - மேன்மையாகிய தமது சங்கல்பத்தினால், குவிவார் விரிவார் - ஒடுங்கும்படியும் விரிந்து தோன்றும்படியும் செய்வார், எ-று.

இதனாலரியேயிவைதாபரமென்
றதனாலவையாரசன்புலவோர்
கதனாலெதிகத்தனெழிற்கமலப்
பதமாருளன்முன்புபகர்ந்திடுவார். (௬)

(இ-ள்.) இதனால் - இதனாலே, அரியே - திருமாலே, இவை தாபரம் என்றதனால் - பொருந்திய நிலைபேறுடைய பொருள் என்று சொன்னதனால், அவை ஆர் - சபையிலிருந்த, அரசன் - அரசனும், புலவோர் - வித்வான்களும், கதனால் - கோபத்தால், எதி கத்தன் - யதிராஜரது, எழில் - அழகாகிய, கமலப்பதம் ஆர் - தாமரைமலர்போன்ற திருவடிகள் பொருந்தப்பெற்ற, உளன் முன்பு - மனத்தையுடையோராகிய கூரேசருக்கெதிரில், பகர்ந்திடுவார் - சொல்லுவார்கள், எ-று.

அரனாருருவந்தனிலேயரிசங்
கரநாரணனென்றுகலந்திடலால்
திருமால்பரமன்றுதெளிந்திடிலோர்
பரமெந்சிவனென்றுபகர்ந்தனரால். (௭)

(இ-ள்.) அரனார் உருவந்தனிலே - சிவனது திருமேனியில், அரி - திருமால், சங்கர நாரணன் என்று கலந்திடலால் - சங்கர நாராயணன் என்று சொல்லப்பட்டுக் கலந்திருத்தலால், தெளிந்திடின் - ஆராய்ந்து பார்த்தால், திருமால் பரம் அன்று - திருமால் பரவஸ்து அல்லன், ஓர் பரம் - ஒப்பற்ற பரவஸ்து, எம் சிவன் என்று - எங்கள் சிவனேயென்று, பகர்ந்தனர் - சொன்னார்கள், எ-று.

என்றிப்படியேத்தியசைவர்தமை
வென்றுற்றிடுவீரன்வெண்மாடநிதிக்
குன்றொத்தொளிர்கூரவளம்பதியி
னின்றுற்றொளிர்நின்மலனோதிடுவான். (௮)

(இ-ள்.) என்று இப்படி எத்திய சைவர் தம்மை - என்று இவ்வாறு சிவனைப் புகழ்ந்த சைவர்களை, வென்று உற்றிடு வீரன் - வெற்றிகொண்டு இருந்த விரர், வெண்மாடம் - வெண்மையாகிய மாளிகைகள், நிதிக்குன்று ஒத்து ஒளிர் - (பலவகையாகிய) செல்வங்கள் நிறைந்த மலைபோல ப்ரகாசிக்கிற, கூரவளம் பதியில் - திருக்கூரம் என்கிற வளமாகிய திருப்பதியில், நின்று உற்று ஒளிர் நின்மலன் - நிலைபெற்று மிக்கு விளங்குகின்ற நிர்மலர், (அவர்) ஓதிடுவான் - சொல்லுவாராயினர், எ-று.

வானோரொடுதானவர்கந்திருவ
ரேனோர்களுமெய்துவரெவ்வுருவு
மேனாளரனவ்வகைவேறுசில
தானாமவதாரமுமெய்தினனால். (௯)



(இ-ள்.) வானோரொடு - தேவர்களுடன், தானவர் - அரக்கரும், கந்திருவர் - கந்தர்வருமாகிய, ஏனோர்களும் - மற்றவர்களும், எவ்வுருவும் எய்துவர் - எந்த ரூபத்தையும் அடைவார்கள், மேல் நாள் - முன்னாள், அரன் - சிவன், அவ்வகை - அந்தப்ரகாரமே, வேறு சில - வேறு சிலவாகிய, தான் ஆம் அவதாரமும் எய்தினன் - தானாகிய அவதாரத்தையும் அடைந்தான், எ-று.

இங்கிவ்வகையாலாவெவ்வகையோ
தங்கும்பரமென்பதுதன்னைமறுத்
தெங்குந்திகழ்மாயனெழிற்புகழைச்
சிங்கந்தொனிசெய்தலெனப்புகல்வான். (௰)

(இ-ள்.) இங்கு - இவ்விடத்தில் சொல்லிய, இவ்வகையால் - இந்தப்ரகாரத்தால், அரன் - சிவன், தங்கும்பரம் என்பது - நிலைபெற்ற பரவஸ்துவென்று நீங்கள் சொல்வது, எவ்வகையோ (என்று) - எப்படியோவென்று, தன்னை மறுத்து - அந்தக்கட்சியை மறுத்து, எங்கும் புகழ் - எவ்விடத்தும் புகழ்தற்குரிய, [illegible] - திருமாலின், எழில் புகழை - அழகிய கீர்த்தியை, சிங்கம் தொனி செய்தல் என - சிங்கம் கர்ஜித்தல்போல, புகல்வான் - சொல்வாராயினர், (கூரேசர்) எ-று.

பண்டைத்திருமால்பரநாரணனா
ரண்டத்தொழில்செய்யுமரக்கருளம்
விண்டுற்றிருண்மோகம்விளைந்ததுயர்
மண்டச்சிவரூபம்வனைந்ததுபோல். (௰௧)

(இ-ள்.) பண்டை - பழமையாகிய, திருமால் - லட்சுமிகாந்தனும், பரன் - மேலானவனும் ஆகிய, நாரணனார் - ஸ்ரீமந் நாராயணன், அண்டம் தொழில் செய்யும் - [illegible] அரக்கர் உள்ளம் - அரக்கரது மனத்தில், விண்டு உற்று - வெளிப்பட்டுப் பொருந்தி, இருள் மோகம் விளைந்து - அந்தகார ரூபமாகிய மோகம் உண்டாகி, துயர் மண்ட - துன்பம் அதிகரித்தலால், சிவரூபம் வனைந்ததுபோல் - சிவவடிவம் சமைக்கப்பட்டது போலும், எ-று.

மற்றிங்கொருகாலமனத்திடைமெய்ப்
பற்றின்பயில்பத்திசெயன்பன்மகிழ்ந்
துற்றின்புறவுஞ்சிவமெங்கநுடு
விற்றாங்கரிரூபமிசைந்திடல்போல். (௰௨)

(இ-ள்.) மற்று இங்கு ஒருகாலம் - மற்றும் இவ்விடத்தில் ஒருகாலத்தில், மனத்திடை - மனத்தின்கண், மெய் பற்றின்பயில் - உண்மையாகிய அன்போடு பழகுகின்ற, பத்தி செய் - பக்தியைப் பண்ணுகிற, அன்பன் - அடியவன், மகிழ்ந்துற்று - மகிழ்வடைந்து, இன்பு உறவும் - சுகத்தை யடையவும்,

சிவலிங்க நடுவில் தங்கு - சிவலிங்கத்தினிடையில் நிலைபெற்ற, அரி ரூபம் இலையங்கிடல்போல் - விஷ்ணுரூபம் பொருந்திடல்போலும், எ-று.

ஈதன்றியுமிங்கனுமக்கறிய
மாதங்கியமார்பனவிக்கதனில்
யோதும்பொருதிப்புகன்மூவுருவென்
னாதன்திகழ்வானதுநன்னுறுவீர். (௰௩)

(இ-ள்.) ஈது அன்றியும் - இதையல்லாமலும், இங்கண் - இவ்விடத்து, உமக்கு அறிய - உமக்கு தோன்றும்படி, மாதங்கிய மார்பன் - பெரிய பிராட்டி தங்கியிருக்கின்ற திருமார்பையுடையவன், * புகல் - சொல்லப்பட்ட, மூவுரு - திரிமூர்த்தி ஸ்வரூபங்களாகவும், என் நாதன் - எம்மிறைவன், திகழ்வான் - விளங்குவான், அது நன்னுவீர் - அதனைப் பொருந்தி உணர்வீர், எ-று.

* இந்த இடம் அர்த்தமாகவில்லை.

இவ்வாறறியாமலியம்பிடுவீ
ருய்வாறுணரீரினமோதுவதுகே
ளைவாயரவத்தமளிப்பெருமான்
செய்வாறுதெளிந்திடுவோருறுமே. (௰௪)

(இ-ள்.) இவ்வாறு - இப்பிரகாரம், அறியாமல் இயம்பிடுவீர் - அறியாமல் பேசுவீர், உய்வு ஆறு உணரீர் - உஜ்ஜீவிக்கும் விதியை உணராதிருப்பீர், இன்னம் ஓதுவது கேள் - இன்னமும் நான் சொல்வதைக் கேளுங்கள், ஐவாய் அரவத்து அமளி - அழகிய வாயையுடைய சர்ப்பசயனத்தில் எழுந்தருளியிருக்கிற, பெருமான் - எம்பெருமான், செய்வு ஆறு - செய்யும் விதத்தை, தெளிந்திடுவோர் - தெளிந்திருப்பவர், உறுமே - உறுதியாகவே, எ-று.

வேறு.

முன்னைநாளின்முகுந்தனடிமலர்
பன்னுசத்துவபத்தரனேகர்கள்
மன்னுமூன்றுபுவனமுமோர்குடை
தன்னிலாளுந்தகைமையராகியும். (௰௫)

(இ-ள்.) முன்னைநாளில் - முற்காலத்தில், முகுந்தன் - திருமாலுடைய, அடிமலர் - திருவடித்தாமரையை, பன்னு - புகழ்கின்ற, சத்துவம் - சாத்விக குணத்தையுடைய, பத்தர் அனேகர்கள் - அநேக பக்த ஜனங்கள், மன்னும் - நிலைபெற்ற, மூன்று புவனமும் - த்ரிலோகங்களையும், ஓர் குடை தன்னில் - ஒரு குடை நிழலில் வைத்து, ஆளும் - காக்கும்படியான, தகைமையர் ஆகியும் - பெருமையுடையவர் ஆகியும், எ-று.

இந்திராதியரென்னப்பெருஞ்செல்வம்
வந்திருந்துமனஞ்செருக்காமலே
யுய்ந்திடுஞ்செந்நெறியுபதேசந்தனைத்
தந்தருட்குரவோர்பதஞ்சார்ந்துமே. (௰௬)



(இ-ள்.) இந்திராதியர் என்ன - இந்திரன் முதலானவர்கள் போல, பெருஞ்செல்வம் வந்திருந்தும் - மஹா ஐஸ்வர்யம் வந்திருந்தாலும், மனம் செருக்காமல் - மனச் செருக்கடையாமல், உய்ந்திடும் - உஜ்ஜீவித்தற்குரிய, செந்நெறி - செவ்விய மார்க்கமாகிய, உபதேசத்தை தந்தருள் - உபதேசத்தைச் செய்தருள்கின்ற, குரவோர் பதம் சார்ந்தும் - ஆசாரியர் திருவடியையடைந்தும், எ-று.

ஞானநூல்பலநண்ணிப்பணிந்துணர்ந்
தூனமின்றியொருபரவத்துவே
யானநாரணர்க்கன்புசெய்தாரெலா
மேனையோருக்கிடர்செய்வதில்லையால். (௰௭)

(இ-ள்.) நண்ணி பணிந்து - சேர்ந்து வணங்கி, பல ஞானநூல் உணர்ந்து - அநேகமாகிய ஞான நூல்களை யறிந்து, ஊனம் இன்றி - குறைவில்லாமல், ஒரு பரவத்துவே ஆன - ஒப்பற்ற பரவஸ்துவேயாகிய, நாரணர்க்கு - ஸ்ரீமந் நாராயணனுக்கு, அன்பு செய்தார் எல்லாம் - பக்தி பண்ணினவர்களெல்லாம், ஏனையோருக்கு - மற்றையோர்க்கு, இடர் செய்வது இல்லை - துன்பஞ் செய்தலில்லை, எ-று.

சங்கரன்குணந்தாமதமாகையா
லிங்கவற்கன்பிணைந்திடுவீரெலாந்
தங்குமோகசாத்திரவண்ணமாய்
மங்கரக்கர்குணத்தைமருவியே. (௰௮)

(இ-ள்.) சங்கரன் குணம் தாமதம் ஆகையால் - சிவன் குணம் தாமஸமாதலால், இங்கு - இவ்வுலகில், அவற்கு அன்பு இணைந்திடுவீர் எல்லாம் - அவனிடத்துப் பக்திபண்ணுவோரெல்லீரும், தங்கு மோகசாத்திர வண்ணமாய் - நிலைபெற்ற மோஹசாஸ்த்ரத்தின் பிரகாரமாக, மங்கு - அழிதற்குரிய, அரக்கர் குணத்தைமருவி - ராக்ஷஸ குணத்தை யடைந்து, எ-று.

கேசவன்புகழ்கேட்கிலீராதலான்
மாசுறுஞ்செல்வமென்னுமமதையா
லோசைவான்கடல்சூழுமுலகினிற்
பேசுமாயன்பிறங்குந்தலமெலாம். (௰௯)

(இ-ள்.) கேசவன் புகழ் - திருமாலின் கீர்த்தியை, கேட்கிலீர் ஆதலால் - நீங்கள் கேட்கமாட்டீர்களாகையால், மாசு உறும் செல்வம் என்னும் மமதையால் - குற்றம்பொருந்திய பாக்யமென்கிற மமதையினால், ஓசை - ஒலியையுடைய, வான் - பெரிய, கடல் - சமுத்ரமானது, சூழும் - வளைந்திருக்கிற, உலகினில் - உலகத்தில், பேசும் - புகழ்தற்குரிய, மாயன் - திருமால், தலம்

எல்லாம் - திவ்ய தேசங்களிலெல்லாம், பிறங்கும் - எழுந்தருளி விளங்கா நிற்பர், எ-று.

பேதித்தேவரும்பேதைமைமாற்றுவான்
வேதத்தேயன்பர்மெய்யுளத்தேநிகழ்
நாதத்தேவநன்னாயகன்சத்துவப்
போதத்தோன்செய்புணர்ப்பெவரோதுவார். (உ0)

(இ-ள்.) பேதித்தே வரும் - மனத்தை பேதப்படுத்திக்கொண்டே வருகிற, பேதைமை - அறியாமையை, மாற்றுவான் - நீக்கும்பொருட்டு, வேதத்து - வேதத்திலும், அன்பர் - பக்தருடைய, மெய் உள்ளத்து - உண்மையாகிய மனத்திலும், நிகழ் - விளங்குகிற, நாதத்தேவ நல் நாயகன் - தலைமையுள்ள தேவர்களுக்கெல்லாம் பெரிய தலைவன், சத்துவப் போதத்தோன் - சாத்விக குண ஸம்பந்தமான ஞானத்தை யுடையவன், (அவன்) செய் - செய்கிற, புணர்ப்பு - மாயத்தை, எவர் ஓதுவார் - யாவர் சொல்ல வல்லார், எ-று.

தரையுளோர்நடுநாடெனச்சாற்றிய
திருவயிந்திரையென்னுந்திருப்பதி
மருவியுங்கண்மதிகெடலெண்ணுங்காற்
கரியமாணிக்கங்காட்டினர்மூவுரு. (உக)

(இ-ள்.) தரையுள்ளே - உலகத்திலே, நடுநாடு எனச் சாற்றிய - நடுநாடென்று சொல்லப்பட்ட, திருவயிந்திரை என்னும் திருப்பதி மருவி - திருவஹீந்த்ரபுரம் என்கிற திவ்ய தேசத்தை யடைந்து, உங்கள் மதிகெடல் - உங்களுடைய அறிவிழப்பதை, எண்ணுங்கால் - ஆலோசிக்குமிடத்தில், கரிய மாணிக்கம் - கரு மாணிக்கமாகிய திருமால், மூவுரு காட்டினர் - மூன்று ரூபங்களைக் காட்டினார், எ-று.

மூவராகியமூலப்பொருளெனுந்
தேவநாயகன்செய்தியைக்கண்டுமிங்
காவதேதென்றகத்துணராமையாற்
றாவுதாமதத்தன்மையிதுண்மையே. (உஉ)

(இ-ள்.) மூவர் ஆகிய - த்ரிமூர்த்திகளாகிய, மூலப்பொருள் என்னும் - மூலவஸ்துவென்கிற, தேவநாயகன் - தேவநாயகனது, செய்தியைக்கண்டும் - செய்தியை ப்ரத்யக்ஷமாய்க் கண்டிருந்தும், இங்கு - இவ்விடத்தில், ஆவது ஏது என்று - ஆகக்கடவது யாதென்று, அகத்து உணராமையால் - மனத்தினால் அறியாமையால், தாவு தாமதத் தன்மை - பொருந்திய தாமஸ குணத்தின் தன்மை யுண்டாவது, இது உண்மையே - இது யதார்த்தமே, எ-று.

ஆதலான்மறையந்தத்தருமபொருண்
மாதவன்பரந்தாமனைவாழ்த்துவோர்
சோதிவானின்பந்துய்க்குநெறிதனைச்
சாதகஞ்செயுஞ்சத்துவராவரால். (உங.)



(இ-ள்.) ஆதலால் - ஆகையால், மறை அந்தத்து - வேதாந்தத்திலுள்ள, அரும்பொருள் - அரும்பொருளாகிய, மாதவன் - லக்ஷ்மீநாதன் என்கிற, பரந்தாமனை - பரந்தாமனை, வாழ்த்துவோர் - ஸ்தோத்ரம் பண்ணுவோர், சோதி - தேஜஸ்ஸையுடைய, வான் - பரமபதத்தின், இன்பம் - இன்பத்தைத் துய்க்கும் நெறிதனை - அநுபவித்தற்குரிய சன்மார்க்கத்தை, சாதகம் செய்யும் - சாதகஞ்செய்கிற, சத்துவர் ஆவர் - ஸாத்விககுணத்தையுடையவராவார், எ-று.

சாற்றுஞ்சத்துவப்பாலிற்றமப்புன
லேற்றிற்பால்புனற்கேயுயர்விந்திடு
மாற்றம்போற்றிருமாலுருவிற்சிவ
னாற்றலாலரியாலுயர்ந்தானரன். (உச)

(இ-ள்.) சாற்றும் - சொல்லப்பட்ட, சத்துவப்பாலில் - ஸாத்விககுணமாகிய பாலில், தமப்புனல் ஏற்றின் - தாமஸ குணமென்கிற நீரைச் சேர்த்தால், பால் - பாலானது, புனற்கே உயர்வு ஈந்திடும் ஆற்றம்போல் - நீருக்கே பெருமையை யுண்டாக்கும் தன்மைபோல, திருமால் உருவில் - திருமாலின் உருவத்தில், சிவன் ஆற்றலால் - சிவன் கலந்ததனால், அரியால் - அந்தத் திருமாலால், அரன் உயர்ந்தான் - சிவன் உயர்ந்தவனானான், எ-று.

இப்பொருட்சுவைசிறுமறிகிலீர்
செப்புமாறுசிவன்பரமன்றெனா
எப்பெரும்பொருளியாவையுந்தேர்ந்துள
வொப்பில்கூரத்தொருத்தன்மறுத்தனன். (உரு)

(இ-ள்.) இப்பொருள் சுவை - இந்த அர்த்தத்தின் ரஸத்தை, சிறுதும் அறிகிலீர் - சிறிதும் உணர்கிலீர், (நீங்கள்) செப்பும் ஆறு - சொல்லுகிறப்ரகாரம், சிவன் பரம் அன்று எனா - சிவன் பரவஸ்து அல்லனென்று, எப்பெரும் பொருள் யாவையும் - எவ்வகையாகிய பெரிய அர்த்தங்களையெல்லாம், தேர்ந்துள - ஆராய்ந்தறிந்துள்ள, ஒப்பு இல் - சமானமில்லாத, கூரத்து ஒருத்தன் மறுத்தனன் - கூரநகரையுடையவரும் அத்விதீயருமாகிய கூரேசர் மறுத்தார், எ-று.

முன்மலைக்கரிமூலமென்றோதிய
நன்மறைக்குலமோதிநாரணன்
றன்மைமெய்ப்பரதத்துவமெற்றியாருந்
சொன்மதிக்குந்தசந்தனைகாட்டினான். (உசா)

(இ-ள்.) முன் - முற்காலத்தில், மலை - மலைபோன்ற, கரி - கஜேந்த்ராழ்வான், மூலம் என்று ஓதிய - ஆதிமூலமே யென்றழைத்த, நல் - விலக்ஷணமாகிய, மறைக்குலம் - வேத சமூஹம், ஓதிடும் - புகழ்ந்து சொல்லுகிற, நாரணன்மெய் தன்மை - ஸ்ரீமந்நாராயணனது உண்மைத் தன்மையாகிய, பர

தத்துவவெற்றி ஆம் - பரத்வத்தைச் சாதித்த ஜயமாகிய, சொல்மதிக்கும் - யாவரும் மதித்துப் புகழ்கின்ற, துசத்தனை நாட்டினன் - த்வஜத்தை நாட்டினார், எ-று.

கூரமேவுங்குரவனிங்கோதிய
சீரியற்பொருடேர்ந்துளசிந்தையோர்
பாரிலின்பம்படைத்துயர்வானின்மே
னாரணன்பதநண்ணுவர்திண்ணமே. (௨௭)

(இ-ள்.) கூரம் மேவும் - திருக்கூரத்தி லெழுந்தருளிய, குரவன் - கூரேசர், இங்கு ஓதிய - இவ்விடத்திற் சொல்லிய, சீர் இயல் - சிறப்பமைந்த, பொருள் - அர்த்தத்தை, தேர்ந்துள சிந்தையோர் - ஆராய்ந்துணர்ந்த மனத்தை யுடையோர், பாரில் இன்பம் படைத்து - உலகத்திலுள்ள இன்பங்களைப் பெற்று, உயர் வானின்மேல் - உயர்ந்த ஸ்வர்க்கலோகத்திற்கு மேற்பட்டதாகிய, நாரணன் பதம் - ஸ்ரீமந் நாராயணனது பதமாகிய வைகுந்தத்தையும், நண்ணுவர் - அடைவார்கள், திண்ணமே - இது சத்தியமே, எ-று.

இருபத்துநான்காவது, சங்கர நாராயண மூர்த்தி கட்சி, முற்றிற்று.

ஆக விருத்தம், ௮௱௧.

# இருபத்துநான்காவது

## சங்கரநாராயணமூர்த்தி கட்சி.

முதலாவது — ஒரு விஷ்ணு பக்தரானவர் மேற்கேயிருந்து ஸ்ரீரங்க யாத்திரையாய் எழுந்தருளுகையில், காலந்தப்பிப் பசியுடனே மூர்ச்சைகொண்டு ஒரு ஆலயத்தைக்கண்டு அதில் தளிகை பண்ணிப் பெருமாளுக்கு அமுது செய்பலாமென்ற கருத்தாலே, அது சிவாலயமென்று தெரியாமற் கிட்டி வருகையில், அது ருத்ரபூமியென்றறிந்து, அப்பாலே போவதற்குச் சக்தி யில்லாமல் விசனத்துடனே கடந்துபோகையில்,

இரண்டாவது — ௧-வது கட்சி, ௪-வது தொடரில், அதர்வசிரசில் ([illegible]) என்றதில், அந்த ஸ்ரீமந் நாராயணன் என்னுடைய அந்தராத்மாவாயிருக்கிறானென்றும், அத்தாலேதான் லோகாதிபதியா யிருக்கிறேனென்றும் சிவன் சொன்னதற்குத் தகுதியாய், மற்றொரு சுருதியில் ([illegible]) என்றதில் ப்ரஹ்ம ருத்ராதிகள், விஷ்ணுவுக்குச் சரீராவயவ பூதராயிருப்பாரென்று சொல்லியிருக்கையாலும், அவ்வர்த்தத்தைப் பாரதம் கர்ணபர்வத்திலும், பாத்மோத்தரத்திலும், விஷ்ணு சிவனுக்கந்தர் யாமியென்று சொல்லியிருக்கையாலும், புருஷ சூக்தத்தில் ([illegible]) ஸ்ரீமந் நாராயணன் ஸமஸ்த ஆத்மாக்களிலும் அந்தர்யாமியா யெழுந்தருளியிருக்கிறானென்றுஞ் சொல்லியிருக்கையாலும், அந்தச் சிவனுடைய ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாகிய ஈஸ்வரன் தன்னுடைய பக்தன் பட்டினியாய்ப் போகிறானென்று அவரிடத்தில் இரக்கமுற்று, ஒரு ஸ்ரீ வைஷ்ணவனைப்போல் உருவங்கொண்டு பட்டினியுடனே செல்கிற பாகவதனைக்கிட்டி, நீரென்ன பட்டினியுடனேபோகிறீரென்றுகேட்க, தளிகை பண்ணிக்கொள்ள இடமில்லையென்று சொல்ல, அவ்வல் முன் கடந்த ஆலயத்தில் பண்ணிக்கொள்ளக் கூடாதோவென்ன, அது சிவாலயமாயிற்றே என்ன, அன்று, அது விஷ்ணுவாலயங்காணென்ன, ஆகில் வருகிறேனென்று உள்ளே ப்ரவேசிக்கையில், அங்கங்களாய்ச்சொன்ன சுருதியின் ப்ரகாரம் சிவனுக்கு அந்தர்யாமியாயிருந்த தான் சதுர்ப்புஜ சங்க சக்ர கிரீட மகரகுண்டல லக்ஷ்மி சிஹ்னத்துடன் சேவைஸாதிக்க பின்பவர் அவ்வாலயத்தில் தளிகைபண்ணித் தமது திருவாராதனத்துக்குக் கண்டருளப்பண்ணி அமுது செய்தாரென்பது லோகப்ரசித்தியாகையால், அதனாலே சிவனுக்கொரு மஹாத்மியங் கற்பிக்கக் கூடாதென்று ஸ்தாபித்தார்.

# இருபத்தைந்தாவது

# சங்கரநாராயணன்

# பிரதானமென்றகட்சி.

காவிவண்ணனைக்கண்ணனைக்கருத்தினிலிருத்தி
ஆவியேயமுதேயெனநிரந்தரமன்பால்
கூவியேயிலாவின்புறுங்குருகையர்கோனை
நாவினோதியவெதிபதிக்கடியர்தாணவில்வாம். (௧)

(இ-ள்.) காவி வண்ணனை - நீலோத்பல மலர்போன்ற நிறத்தையுடையவனை, கண்ணனை - கண்ணபிரானை, கருத்தினில் இருத்தி - மனத்திலிருத்தி, ஆவியே - உயிரே, அமுதே - அம்ருதமே, என - என்று, நிரந்தரம் - சதாகாலமும், அன்பால் கூவி - பக்தியோடு அழைத்து, ஓவு இலா - இடையறாத, இன்பு உறும் - இன்பத்தை யடைகின்ற, குருகையர் கோனை - திருக்குருகூர்க்கு நிர்வாஹகராகிய ஆழ்வாரை, நாவின் ஓதிய - நாவினாற் புகழ்ந்து சொன்ன, எதிபதிக்கு - யதிராஜருக்கு, அடியர் - அடியவராகிய கூரேசரது, தாள் - திருவடியை, நவில்வாம் - யாம் புகழ்ந்துரைப்போம், எ-று.

அந்திமத்தினிலவணிலாதவர்சிலரதனைச்
சிந்தையிற்றெரிந்திடுமுனமுத்திசேர்திறத்தோன்
தந்தபாலுடனாவலங்கனியுணுந்தகைகேட்
டெந்தைமாற்கிவையென்படுமெனுமெதிபதிக்காள். (௨)

(இ-ள்.) அந்திமத்தினில் - அந்திமதசையில், அவண் இலாதவர் சிலர் - அவ்விடத்தில்லாதவர் சிலர், அதனை - அதை, சிந்தையின் - மனத்தினால், தெரிந்திடு முனம் - அறிவதற்கு முன்பே, முத்திசேர் திறத்தோன் - முத்தியை யடையுந்திறத்தையுடையோன், தந்த பாலுடன் - கொடுத்த பாலோடு, நாவலங்கனி உண்ணும் தகைகேட்டு - நாவற்கனியையுண்ணுந் தன்மையைக் கேள்விப்பட்டு, எந்தை மாற்கு - எமது தந்தையாகிய திருமாலுக்கு, இவை யென்படும் என்னும் - இவை யென்படுமோ வென்கிற, எதிபதிக்கு - யதிராஜருக்கு, ஆள் - ப்ருத்யர், எ-று.

ஆய்ந்தபாடியங்கத்தியத்திரயநித்தியம்வே
தாந்ததீபம்வேதாந்தசங்கிரகமோடுயர்வே
தாந்தசாரமெய்க்கீதைபாடியமெனவொன்பா
னார்ந்தியாவருமுய்ந்திடவருளெதிபதிக்காள். (௩)



(இ-ள்.) ஆய்ந்த - ஆராயப்பட்ட, பாடியம் - ஸ்ரீ பாஷ்யம், கத்தியத்திரயம் - கத்யத்ரயம், நித்தியம் - சாஸ்வதமாகிய, வேதாந்த தீபம் - வேதாந்த தீபம், வேதாந்த சங்கிரகமோடு - வேதாந்த சங்க்ரஹத்துடன், உயர் - உயர்ந்த, வேதாந்த சாரம் - வேதாந்தசாரம், மெய்க்கீதை - உண்மையாகிய கீதை, பாடியம் - பாஷ்யம், என்னும் - என்கிற, ஒன்பான் - ஒன்பதையும், யாவரும் ஆர்ந்து உய்ந்திட - எல்லாரும் அநுபவித்து உஜ்ஜீவிக்கும்பொருட்டு, அருள் - அருள்செய்த, எதிபதிக்கு ஆள் - யதிராஜருக்கு ப்ருத்யர், எ-று.

திருவின்றோத்திரம்வைகுந்தத்தோத்திரங்கச்சி
வரதன்றோத்திரந்திகழதிமாநுடமெனுந்தோத்
திரநற்சுந்தரபாகுத்தோத்திரமிவையைந்துந்
தரணியோருய்யத்தந்தவாழ்வான்பதஞ்சரணே. (௪)

(இ-ள்.) திருவின் தோத்திரம் - லக்ஷ்மீ ஸ்தோத்ரம், வைகுந்தத் தோத்திரம் - வைகுண்ட ஸ்தோத்ரம், கச்சி வரதன் தோத்திரம் - கச்சி வரதராஜ ஸ்தோத்ரம், திகழ் - ப்ரகாசிக்கிற, அதிமாநுடம் என்னும் தோத்திரம் - அதிமாநுஷம் என்னும் ஸ்தோத்ரம், நல் - விலக்ஷணமாகிய, சுந்தர பாகு தோத்திரம் - சுந்தரபாஹு ஸ்தோத்ரம், இவை ஐந்தும் - இந்த ஐந்தையும், தரணியோர் உய்ய - லோகத்தார் உஜ்ஜீவிக்கும் பொருட்டு, தந்த - அருள் செய்த, ஆழ்வான் பதம் சரண் - கூரத்தாழ்வார் திருவடியே எமக்குப் புகலிடம், எ-று.

மாரனைங்கணையேவனம்வாவிகளனைத்தும்
நீருலாங்கயமியாவுநன்னேமிமாப்புள்ளே
கூரமேவியகொற்றவன்சைவனைநோக்கி
வாரமாயெதிவரன்பதநினைந்திவைவகுப்பான். (௫)

(இ-ள்.) வனம் வாவிகள் அனைத்தும் - சோலைகளும் தடாகங்களும் ஆகிய எல்லாவிடங்களிலும், மாரன் ஐங்கணையே - மன்மதனது பஞ்சபாணமே, நீர் உலாம் கயம் யாவும் - நீர் அலையாநின்ற ஓடைகளெல்லாவற்றிலும், நல் - விலக்ஷணமான, நேமி மாப்புள்ளே - பெரிய சக்ரவாகப் பறவைகளே, (இவ்வாறுடைய) கூரம் மேவிய கொற்றவன் - திருக்கூரத்தில் தங்கிய வெற்றியையுடையோராகிய கூராதிபர், சைவனை நோக்கி - சைவனைப்பார்த்து, வாரமாய் - அன்போடு, எதிவரன் - யதித்தலைவராகிய ஸ்ரீ பாஷ்யகாருடைய, பதம் - திருவடியை, நினைந்து - ஸ்மரித்து, இவை வகுப்பான் - இவைகளை வகுத்துச் சொல்லுவாராயினர், எ-று.

ஈசனான்முகனிந்திரன்சந்திரனிரவி
தேசகாலமைம்பூதமோடியாவையுந்திரட்டு
வாசமாமலர்போலவேயுருவிழுமுருவாக்
கேசவன்பரத்துவமெனக்கிளந்தான். (௬)

(இ-ள்.) ஈசன் - சிவன், நான்முகன் ப்ரஹ்மா, இந்திரன் - இந்த்ரன், சந்திரன் - சந்த்ரன், இரவி - சூரியன், தேசகாலம் - தேசகாலங்கள், ஐம்பூதமோடு - பஞ்ச பூதங்களுடன், யாவையும் திகழ்ந்து-எல்லாவற்றிலும் விளங்கி, வாசம் ஆம் மலர்போல வேய்மருவியும் - மணமுள்ள மலர்போலவே பொருந்தியும், மருவா - பொருந்தாத, கேசவன் - கேசவனே, பரத்துவன் ஆம் - பரத்துவமாயிருப்பவன் ஆவான், எனக்கிளர்ந்தான் - என்று சொன்னான், எ-று.

புகலுமவ்வுரைகேட்டலுமனமிகப்புழுங்கி
இகல்கொள்வேந்தனுங்கவிஞருமமைச்சருமிசைப்பார்
நிகரில்சங்கரநாரணமூர்த்தத்தினேமிப்
பகவனுக்கிசையின்மையாற்சிவன்பரமென்றார். (எ)

(இ-ள்.) புகலும் - சொல்லிய, அவ்வுரை கேட்டலும் - அந்த வார்த்தையைக் கேட்ட அளவில், மனம் மிகப்புழுங்கி - மனமானது மிகவும் புழுக்கமடைந்து, இகல்கொள் வேந்தனும் - வலிமையைக்கொண்ட அரசனும், கவிஞரும் - வித்வான்களும், அமைச்சரும் - மந்திரிமாரும், இசைப்பார் - சொல்வார்கள், நிகர் இல் - ஒப்பில்லாத, சங்கர நாரணமூர்த்தத்தில் - சங்கர நாராயண ரூபத்தில், நேமிப்பகவனுக்கு - சக்ராயுதத்தையுடைய திருமாலுக்கு, இசை இன்மையால் - கீர்த்தியில்லாமையால், சிவன் - சிவனே, பரம் என்றார் - பரவஸ்துவென்று சொன்னார்கள், எ-று.

வாதிலிவ்வுரைகூறியசைவனைமறுத்துப்
பூதவூருறைபுனிதனைதிருபதம்போற்று
நாதன்செந்திருநாதனேபரமெனநாட்டி
யோதுமாறவனடிபணிந்திங்கவையுரைப்பாம். (அ)

(இ-ள்.) வாதில் - தர்க்கவாதத்தில், இவ்வுரை கூறிய - இந்த வார்த்தையைச் சொன்ன, சைவனை மறுத்து - சைவனைக்கடிந்து, பூதவூர் உறை - ஸ்ரீ பூதபுரியில் எழுந்தருளியிருக்கிற, புனிதனது - பரிசுத்தராகிய யதிராஜரது, இருபதம் போற்றும் - திருவடியிணையை வழிபடுகின்ற, நாதன் - கூரத்தாழ்வான், செந்திருநாதனே - லக்ஷ்மீநாதனே, பரம் என நாட்டி - பரவஸ்துவென்று ஸ்தாபித்து, ஓதுமாறு - சொல்லுகிறப்ரகாரம், அவன் அடிபணிந்து - அவன் திருவடியை வணங்கி, இங்கு - இப்பொழுது, அவை - அந்தச் செய்திகளை, உரைப்பாம் - சொல்வோம், எ-று.

விரிந்தபல்கலைநூல்களுநால்வேதத்தொடுங்குந்
தெரிந்தவம்மறையுபநிடதத்தினுட்செறியு
மிருந்தவக்கரமியாவையுமகரத்தினியையும்
பரிந்தவப்பொருள்பிரணவந்தன்னுளேபடியும். (கூ)

(இ-ள்.) விரிந்த - விரிவாகிய, பல்கலை - பலகலைகள், நூல்கள் - சாஸ்த்ரங்கள் ஆகிய இவைகள் யாவும், நால்வேதத்தில் ஒடுங்கும் - சதுர்வேதத்தில் அடங்கும், தெரிந்த அம்மறை - யாவருக்குந் தெரிந்த அந்த வேதம், உபநிடதத்தினுள் செறியும் - உபநிஷத்தி லடங்கும், இருந்த அக்கரம் யாவையும் - இருந்த அக்ஷரங்களெல்லாம், அகரத்தில் இயையும் - அகரத்தில் பொருந்தும், பரிந்த - எல்லாராலும் விரும்பப்பட்ட, அப்பொருள் - அப்பொருளும், பிரணவம் தன்னுளே படியும் - ப்ரணவத்தினுள்ளே அடங்கியிருக்கும், எ-று.



தோய்ந்தமாநதிநதங்களியாவையுங்கடல்சேருங்கும்
மாந்தர்யாவருமறையவர்தமக்குளாய்வதிவர்
காந்தமானவர்யாவருங்கண்ணனுளொடுக்கம்
வாய்ந்தவித்தகையொடுக்கமாமுனிவரர்வகுத்தார். (ய)

(இ-ள்.) தோய்ந்த - யாவரும் ஸ்நானம் செய்கிற, மா நதி - மஹா நதிகளும், நதங்கள் - நதங்களும் ஆகிய, யாவையும் - எல்லாம், கடல் சேருங்கும் - சமுத்ரத்திலடங்கும், மாந்தர் யாவரும் - மநுஷ்யரெல்லாரும், மறையவர் தமக்கு உள்ளாய் வதிவர் - வேதியர்களுக்குள்ளாகியிருப்பர், காந்தமானவர் யாவரும் - அழகுள்ள தேவர்களெல்லாரும், கண்ணனுள் ஒடுக்கம் - திருமாலுக்குள்ளே யடக்கம், வாய்ந்த - பொருந்திய, இத்தகை ஒடுக்கம் - இத்தன்மையாகிய ஒடுக்க முறைமையை, மாமுனிவரர் வகுத்தார் - பெரிய முநிஸ்ரேஷ்டர்கள் வகுத்துச் சொன்னார்கள், எ-று.

நதம் - சேர்ந்தகேயோடும் ஆறு.

இத்திறத்தினால்யாவும்விண்ணவர்களுமெந்தை
மைபடந்தடம்பணிமீதினிலறிதுயில்பரமன்
நித்தியானந்தஞானவாரிதியென்னுநிமலன்
சுத்தனாரணன்றன்னுளேயொடுங்கிடுங்கருதின். (யக)

(இ-ள்.) இத்திறத்தினால் - இந்தத் தன்மையால், யாவும் - எல்லாப் பொருள்களும், விண்ணவர்களும் - தேவர்களும், எந்தை - எமது தந்தையும், மைபடம் - படத்தையுடைய, தடம் பணி மீதினில் - பெரும்பாம்பாகிய ஆதிசேஷன் மீது, அறிதுயில் - யோக நித்ரை செய்கிற, பரமன் - மேலானவனும், நித்திய ஞானந்த ஞான வாரிதி என்னும் - நித்யானந்த ஞான ஸமுத்ரமென்று சொல்லப்பட்ட, நிமலன் சுத்தன் - நிர்மலனாகிய சர்வசுத்தனும் ஆகிய, நாரணன் தன்னுளே - ஸ்ரீமந் நாராயணனுக்குள்ளே, ஒடுங்கிடும் - லயித்துவிடும், கருதின் - ஆலோசித்தால், எ-று.

அப்பரம்பொருளாஞ்சருவாந்தரியாமி
யொப்பிலாதமாலேசிவன்றன்னுளுமுறைந்து
செப்புசங்கரநாரணமூர்த்தியாய்த்திகழ்ந்து
தப்பிலாதசங்காரமாந்தொழில்செய்வதனையால். (யஉ)

(இ-ள்.) அப்பரம்பொருள் ஆம் - அந்தப் பரம்பொருளாகிய, சருவாந்தரியாமி - சர்வாந்தர்யாமியென்று சொல்லப்படுகிற, ஒப்பு இல்லாத - சமானமில்லாத, மாலே - திருமாலே, சிவன் தன்னுள்ளும் உறைந்து - சிவனுக்குள்

ரும் வ்யாபித்து, செப்பு - சொல்லப்பட்ட, சங்கருடனைப் பெயர் மூர்த்தியாய் திகழ்ந்து - சங்கர்ஷணன் என்னும் பெயரையுடைய மூர்த்தியாகி ப்ரகாசித்து, தப்பு இல்லாத - பிழைத்த தில்லாத, சங்காரம் ஆம் தொழில் - சம்ஹாரமாகிய க்ருத்யத்தை, தகையால்செய்வர்-பெருமையோடு செய்வார், எ-று.

ஆதலாலரந்தரான்மாவெனலாகுஞ்
சிதரன்றனைப்பிரதானமாய்ச்செப்பல்
வேதசாத்திரவிருத்தமாமிங்கிவைவினவி
னோதுகேனின்னுங்கேண்மினென்றங்கவர்க்குரைப்பான். (௰௩)

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், அரந்தரு - சிவனுக்கு, அந்தரான்மா எனல் ஆகும் - அந்தராத்மா என்று சொல்லுதற்குரிய, சிதரன் தன்னை - ஸ்ரீதரனை, அப்பிரதானமாய்ச் செப்பல் - அப்ரதானமாகச் சொல்லுதல், வேத சாத்திர விருத்தம் ஆம் - வேதசாஸ்த்ர விரோதமாகும், இங்கு இவை வினவின் - இவைகளைப்பற்றி வினவுவீர்களாயின், இனம் ஓதுகேன் - இன்னமும் சொல்லுவேன், கேண்மின் என்று - கேளுங்கள் என்று, அங்கு அவர்க்கு - அவ்விடத்துள்ள அந்தச்சைவ சமயிகளுக்கு, உரைப்பான் - சொல்லுவார், எ-று.

அந்தமாதியொன்றின்றியமலமாநாரணன்பால்
வந்துதித்திடும்பலவுலகொடுமெழில்வனசன்
இந்துவேணியனிந்திரனிமையவராதி
எந்தவெந்தவெண்பொருள்களுமெனவெடுத்திசைப்பான். (௰௪)

(இ-ள்.) அந்தம் ஆதி ஒன்று இன்றிய - முடிவும் முதலும் ஆகிய ஒன்றுமில்லாத, அமலம் - பரிசுத்தமாகிய, நாரணன்பால் - திருமாலினிடத்து, பல் உலகொடும் - பல வுலகங்களோடு, எழில் வனசன் - அழகாகிய தாமரைமலரில் இருப்பவனாகிய ப்ரஹ்மா, இந்துவேணியன் - சந்த்ர ஜடாதரனாகிய சிவன், இந்திரன் - இந்த்ரன், இமையவர் - தேவர்கள், ஆதி - முதலாகிய, எந்த எந்த எண்பொருள்களும் - எந்த எந்த எண்ணப்பட்ட பொருள்களும், வந்து உதித்திடும் என [illegible] இசைப்பான் - எடுத்துச் சொல்லுவார், எ-று.

மற்றைமூவுலகொடுமகிழ்விண்ணவரியாருஞ்
செற்றகன்றிடுநாசமுண்டவ்வயிற்றிருமால்
வெற்றிநாரணனொருவனேபரமதாய்விளங்கி
யுற்றிருப்பனென்றருமறையோவிடலுரைத்தான். (௰௫)

(இ-ள்.) மற்றை மூவுலகொடு - மற்றை மூன்றுலகங்களுடன், மகிழ் விண்ணவர் யாரும் - களிக்கின்ற தேவர்களெல்லாரும், செற்று அகன்றிடும் - நசிக்கப்பெற்று நீங்குகின்ற, நாசம் உண்டு - சர்வசம்ஹாரகாலமும் ஒன்றுளது, அவ்வயின் - அப்பொழுது, திருமால் - திருமாலாகிய, வெற்றி நாரணன் ஒருவனே - வெற்றியையுடைய ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே, பரமதாய் விளங்கி-



பரவஸ்துவாய் ப்ரகாசித்து, உற்று இருப்பன் என்று - பொருந்தி யிருப்பானென்று, அருமறை - அருமையாகிய வேதங்கள், ஒவிடல் - முறையிடுவதை, உரைத்தான் - எடுத்துச்சொன்னார், எ-று.

இன்னவண்ணமாயருமறைப்பொருளிசைத்திடலா
லுன்னுநாரணனப்பிரதானனென்றுரைத்தல்
மன்னுபேரறிவினுக்கிசைமாற்றமுமன்று
துன்னுவேதவைதிகமுமன்றெனச்சொல்வான். (௰௬)

(இ-ள்.) இன்ன வண்ணமாய் - இந்தப்ரகாரமாக, அருமறைப்பொருள் இசைத்திடலால் - அருமையாகிய வேதார்த்தங்கள் சொல்லுதலால், உன்னும் - யாவரும் நினைத்தற்குரிய, நாரணன் - ஸ்ரீமந் நாராயணன், அப்பிரதானன் என்று உரைத்தல் - அப்ரதானன் என்று சொல்லுதல், மன்னு - நிலைபெற்ற, பேர் அறிவினுக்கு - பெரிய உணர்வுக்கு, இசை - இசைந்த, மாற்றமும் அன்று - சொல்லுமல்ல, துன்னு - பொருந்திய, வேதவைதிகமும் அன்று - வேதவைதிக வொழுக்கமும் அல்ல, எனச் சொல்வான் - என்று சொல்லுவார், எ-று.

அப்பெருஞ்சவைதனிலுறுகவிஞரையமைச்சைச்
செப்புமோர்திகிரியிற்புவியாவையுஞ்செலுத்து
மொப்பில்சோழனுங்கிருமிகண்டப்பெயரோனை
யெப்பொருட்களுந்தேர்ந்துளோனோக்கினனிசைப்பான். (௰௭)

(இ-ள்.) அப்பெருஞ் சவைதனில் உறும் - அந்தப்பெரிய சபையிற் பொருந்தியிருக்கிற, கவிஞரை - வித்வான்களையும், அமைச்சை - மந்த்ரிமாரையும், செப்பும் - சொல்லப்பட்ட, ஓர் திகிரியின் - தனது ஒரு சக்ராயுதத்தினாலே, புவியாவையும் - உலக முழுதும், செலுத்தும் - அரசாட்சியை நடத்துகின்ற, ஒப்பு இல் - நிகரற்ற, சோழன் ஆம் - சோழபரம்பரையையுடையவனாகிய, கிருமி கண்டப்பெயரோனை - க்ருமிகண்டன் என்னும் நாமத்தையுடையவனையும், எப்பொருட்களும் தேர்ந்து உள்ளோன் - எவ்வகைப்பட்ட விசேஷார்த்தங்களையும் தெளிந்திருப்பவராகிய கூரேசர், நோக்கினன் - பார்த்து, இசைப்பான் - சொல்வார், எ-று.

இங்கணோதியகவுணவந்தத்திறலிசைக்குந்
திங்களுஞ்செழுங்கொன்றையுந்தும்பையுந்திரையார்
கங்கையுந்திகழ்செஞ்சடைக்காடுகொண்டிலங்குஞ்
சங்கரன்பரமனென்றவாதினிற்றடுத்தே. (௰௮)

(இ-ள்.) இங்கண் ஓதிய - இவ்விடத்துச் சொல்லிய, கவுண அந்தத் திறல் - கௌணார்த்தத்தால், இசைக்கும் - சொல்லப்பட்ட, திங்களும் - சந்த்ரனும், செழுங் கொன்றையும் - செழுமையாகிய கொன்றை மலர்மாலை

யும், தும்பையும் - தும்பை மலரும், திரை ஆர் கங்கையும் - அலைகள் பொருந்திய கங்காநதியும், திகழ் - விளங்கப்பெற்ற, செஞ்சடைக் காடு கொண்டு இலங்கும் - செவந்த சடைக்காட்டைக்கொண்டு ப்ரகாசிக்கிற, சங்கரன் - சிவன், பரம் அன்று என - பரவஸ்து அல்லனென்று, வாதினில் தடுத்து - வாதத்தினால் மறுத்து, எ-று.

சூரியன்றன்முன்னிருளெழிற்சிங்கமுன்றும்பி
வீரன்முன்னுறுபேடிவெங்காற்றினுண்பஞ்சு
சீரிழந்திடல்போலுமச்சைவரைச்செயித்து
வாரணத்துரியான்பரமன்றெனமறுத்தான். (௰௯)

(இ-ள்.) சூரியன் தன்முன் இருள் - சூரியனுக்கெதிரில் இருளும், எழில் சிங்கம் முன் தும்பி - அழகாகிய சிங்கத்துக்கெதிரில் யானையும், வீரன்முன் உறுபேடி - சூரனுக்கெதிரில் வந்த அலியும், வெம் காற்றில் நுண் பஞ்சு - பெருங்காற்றிலகப்பட்ட நுட்பமாகிய பஞ்சும், சீர் இழந்திடல்போல - தமது மேன்மையை யிழந்துவிடுதல்போல ஆரும்படி, அச் சைவரைச் செயித்து - அந்தச் சைவர்களை வெற்றிகொண்டு, வாரணத்து உரியான் - யானைத்தோலையுடைய சிவன், பரம் அன்று என மறுத்தனன் - பரவஸ்து அல்லனென்று கண்டித்தார், எ-று.

நறையுலாவியவாயிரஞ்சேயிதழ்நளினத்
துறைபொகுட்டெனுந்தமனியக்கோயிலினுறையு
மிறைவியாகியவெம்பெருமாட்டியும்வருடு
மறையின்மாமுடியினில்விளங்கிருபதமாயோன். (௨௰)

(இ-ள்.) நறை உலாவிய - தேன்பொருந்திய, ஆயிரம் சேயிதழ் - ஆயிரம் [illegible] என்னும் - தங்கியிருக்கிற கர்ணிகையென்கிற, தமனியக்கோயிலில் உறையும் - ஸ்வர்ணாலயத்தில் வாழ்கின்ற, இறைவி ஆகிய - தலைவியாகிய, எம் பெருமாட்டியே - எம் பெருமாட்டியே, வருடும் - வருடுதற்குரிய, மறையின் - வேதங்களின், மா - பெரிய, முடியினில் விளங்கு - உச்சியில் ப்ரகாசிக்கிற, இருபதம் - இரண்டு திருவடிகளையுடைய, மாயோன் - திருமால், எ-று.

பகரும்பல்லுலகுயிர்பலபேதமும்படைத்து
நிகரிலாதவையளித்தழித்தாடல்செய்யமித்தம்
புகலுமம்புயனாரணனரனெனப்பொலிந்து
திகழுமுக்குணத்தாற்செறிசெங்கண்மாலெங்கோன். (௨௧)

(இ-ள்.) முக்குணத்தால் செறி - முக்குணத்தோடுகூடிய, செங்கண்மால் எம் கோன் - செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய எம் மிறைவன், பகரும் பல் உலகு உயிர் பலபேதமும் படைத்து - சொல்லப்பட்ட அநேக லகங்களையும் அவற்றிலுள்ள வுயிர்களையும் அநேக பேதங்களாகப்படைத்து, நிகர் இலாது அவை அளித்து - சமானமில்லாமல் அவற்றை ரக்ஷித்து, அழித்து - சம்ஹரித்து, ஆடல் செய்யமித்தம் - திருவிளையாடல் செய்யும் பொருட்டு, புகலும் - சொல்லப்பட்ட, அம்புயன் - ப்ரஹ்மா, நாரணன் - திருமால், அரன் - சிவன், என - என்று, பொலிந்து திகழும் - பொலிந்து விளங்குவான், எ-று.



ஒருவனேபலவுருவுமாயருவமாயொடுங்கி
மருவுநாளினிலவ்வண்ணந்தன்னுள்ளேவதியுந்
கருமுகிற்கொழுந்தாகியகருணைவாரிதியிங்
குருதுவார்மனத்தொண்சுடராய்நிறைந்தொளிர்மால். (௨௨)

(இ-ள்.) ஒருவனே - தானொருவனே, பலவுருவும் ஆய் - பல ரூபங்களுமாகி, அருவும் ஆய் - அரூபங்களுமாகி, ஒடுங்கி - அடங்கி, மருவுநாளினில் - இருக்கும் நாளில், அவ்வண்ணம் - அந்தப்ரகாரமே, தன்னுள்ளே வதியும் - தனக்குள்ளே தங்குவான், கருமுகில் கொழுந்து ஆகிய - நீலமேகக் கொழுந்து போன்ற, கருணைவாரிதி - கருணா சாகரமாகிய திருமால், இங்கு உருகுவார் மனத்து - இவ்விடத்து நினைந்துருகுவோருடைய மனத்தின்கண், ஒள் சுடர் ஆய் நிறைந்து ஒளிரும் - அழகாகிய தேஜோமயமாய் நிறைந்து விளங்குவான், எ-று.

ஆரணந்தனிற்பொருட்சுவையாகியவமலன்
காரியம்பலகாரணங்கடந்தொளிர்கடவுள்
வாரணந்தனிலனந்தன்மேற்றுயில்வளரும்
நாரணன்பரதத்துவநிலைபகாட்டினனும். (௨௩)

(இ-ள்.) ஆரணம் தன்னில் - வேதத்தில், பொருள் சுவை ஆகிய - பொருட்சுவையாயிருக்கிற, அமலன் - பரிசுத்தன், பல காரியம் காரணம் கடந்து ஒளிர் கடவுள் - பல காரிய காரணங்களைக் கடந்து விளங்குகின்ற தேவன், வாரணம் தன்னில் - கடலில், அநந்தன்மேல் - திருவநந்தாழ்வான் மீது, அறி துயில் வளரும் - யோக நித்ரா செய்கிற, நாரணன் - ஸ்ரீமந் நாராயணன், (அவனது) பரதத்துவ நிலையை - மேலான தத்துவ நிலையை, காட்டினன் - நிலை நிறுத்தினான், எ-று.

இன்னவாறுதண்புனல்பரந்தெறிதிரையொடுக்கும்
பொன்னிநற்செழும்பூந்தொடைபுனைந்திடுமரங்க
தன்னிலும்பருமாமறையோர்களுஞ்சாற்று
மின்னுசெங்கதிர்ப்பிரணவமெனும்விமானத்தில். (௨௪)

(இ-ள்.) இன்ன ஆறு - இந்தப்ரகாரமாக, தண் புனல் பரந்து - குளிர்ச்சியாகிய நீர் பரவி, எறி திரை ஒடுக்கும் - வீசுகின்ற அலைகளை யடக்குகிற,

பொன்னி - உபய காவேரியாகிய, நல் - விலக்ஷணமாகிய, செழு - செழுமை பொருந்திய, பூ தொடை புனைந்திடும் - அழகிய மாலையைத் தரித்த, அரங்கம் தன்னில் - திருவரங்கத்தில், உம்பரும் - தேவர்களும், மாமறையோர்களும் - பெரிய வேதியர்களும், சாற்றும் - புகழ்ந்து சொல்லும்படியான, மின்னு - விளங்காநின்ற, செங் கதிர் - செம்மையாகிய கிரணங்களை வீசுகின்ற, பிரணவம் என்னும் விமானத்தில் - ப்ரணவாகார விமானத்தில், எ-று.

ஆயிரந்தலைவிழிகளோராயிரமடிக
ளாயிரஞ்செழுங்கஞ்சமொத்தலர்ந்திடுந்திருமா
லாயிரஞ்சிரத்தனந்தன்மீதறிதுயிலமர்ந்த
வாயிரந்திருநாமனையரங்கனைப்போற்றி. (௨௫)

(இ-ள்.) ஆயிரம் தலை - ஆயிரஞ் சிரங்கள், விழிகள் ஓர் ஆயிரம் - ஆயிரங் கண்கள், அடிகள் ஆயிரம் - ஆயிரம் பாதங்கள், செழுங்கஞ்சம் ஒத்து - செழுமையாகிய தாமரைமலர்களை யொத்து, அலர்ந்திடும் - விகசிக்கிற, திருமால் - திருமாலும், ஆயிரஞ் சிரத்து அநந்தன்மீது - ஆயிரந் தலைகளையுடைய திருவநந்தாழ்வான்மீது, அறி துயில் அமர்ந்த - யோக நித்ராரதனாயிருக்கிற, ஆயிரம் திருநாமனை - ஆயிரம் திருநாமங்களை யுடையவனுமாகிய, அரங்கனை - திருவரங்கனை, போற்றி - வணங்கி, எ-று.

வேதநான்குமெய்ப்பொருட்கலையாவையும்விரித்து
நாதனாவதுநாரணனன்றிமற்றிலரென்
றோதுகட்சியையைந்திருநூற்றைம்பதோதிப்
போதுலாம்பொழிற்கூரம்வாழிறையவன்புகன்றான். (௨௬)

(இ-ள்.) வேதம் நான்கும் - நான்கு வேதங்களையும், மெய்ப்பொருள் கலை யாவையும் - உண்மைப்பொருளைக் கூறுகிற சாஸ்த்ரங்களெல்லாவற்றையும், விரித்து - விஸ்தரித்து, நாதன் ஆவது - தலைவனாவது, நாரணன் அன்றி - ஸ்ரீமந் நாராயணனேயன்றி, மற்று இலர் என்று - வேறொருவரில்லையென்று, ஓது - சொல்லப்பட்ட, கட்சி ஐயைந்திற்கும் - இருபத்தைந்து கட்சிக்கும், நூற்று ஐம்பது ஓதி - நூற்றைம்பது கட்சிகள் உபந்யஸித்து, போது உலாம் - புஷ்பங்கள் பொருந்திய, பொழில் - சோலைசூழ்ந்த, கூரம் வாழ் - திருக்கூரத்தில் வாழ்கின்ற, இறையவன் - கூரேசர், புகன்றான் - சொன்னார், எ-று.

என்றுமிப்பெரும்பொருட்சுவையாவரேயெனினும்
நன்றெனத்திகழறிவினானுகர்பவர்சுவைதீர்ந்
தொன்றுமாநிலந்தன்னில்யாவருந்தொழவிருந்து
பொன்றுநாட்கதிருடுபோய்ப்பரம்பதம்புகுவார். (௨௭)



(இ-ள்.) என்றும் - எப்பொழுதும், இப்பெரும் பொருள் சுவை - இந்த மேலான அர்த்தத்தின் ரஸத்தை, யாவரே எனினும் - யாவரேயாயினும், நன்று என - நன்றென்று, திகழ் - விளங்குகின்ற, அறிவினால் நுகர்பவர் - அறிவினால் அநுபவிப்பவர், சுவை தீர்ந்து - பிறவித்துன்பங்களொழிந்து, ஒன்றும் - பொருந்திய, மாநிலந்தன்னில் - பெரிய நிலவுலகத்தில், யாவரும் தொழ இருந்து - எல்லாரும் வணங்கும்படியிருந்து, பொன்றும் நாள் - இறக்குங்காலத்தில், கதிர் ஊடுபோய் - சூரியனுக்கிடையேபோய், பரம்பதம் புகுவார் - பரமபதத்திற் ப்ரவேசிப்பார், எ-று.

இருபத்தைந்தாவது,

**சங்கரநாராயணன் ப்ரதாநமென்றகட்சி முற்றிற்று.**

ஆக திருவிருத்தம், ௮௨௭.

# இருபத்தைந்தாவது
# சங்கரநாராயணன்
# பிரதானமென்றகட்சி.

முதலாவது—சுருதி மரியாதையறியாத சைவர்கள் சொல்வதெப்படியிருக்கிறதென்னில், பூமியின்பேரில் செடி கொடி முதலான ஓஷதிகள் ஜநிக்கிறதாய், உ-வது கட்சி, க-வது தொடரில் சுருதி சொல்லியிருக்க, செடி கொடி முதலான ஓஷதிகளின்பேரில் பூமிநிற்கிறதாய் சொல்வதுபோலிருக்கின்றது.

இரண்டாவது—இதற்குப்ரமாணம் ௯-தொடரில் சொல்லுகிற சுருதிகளில் கற்பங்கள்தோறும் விஷ்ணுவிடத்தில் ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதி தேவர்கள் ஜநித்ததாயும் மற்றொரு கற்பத்தில் விஷ்ணுவின் முகத்திலிருந்து பிறந்த வேர்வைத்துளியில் ஒரு நீர்க்குமிழியுண்டாகி, அக்குமிழியில் நின்றும் மூன்று கண்களையுடைய சூலபாணி பிறந்தானென்று சொல்லியிருக்க, இதற்கு முன் கட்சியில் சங்கரனுடைய ஹ்ருதயத்தில் அந்தராத்மாவா யெழுந்தருளியிருந்த நாராயணன் ஒருபாகவதன் பட்டினியாய்ப் போவதைக் குறித்து ப்ரகாசமானதாய்ச் சொல்லியிருக்க, அந்த நாராயணனுடைய ஹ்ருதயத்திலிருந்து சிவன் ப்ரகாசித்தானென்று சொல்வது சுருதிகளுக்கு விரோதம்.

மூன்றாவது—சிவனுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணு அந்தராத்மாவாயெழுந்தருளியிருக்கின்ற பிரகாரத்தை, அதர்வசிகையென்ற சுருதியில் சிவன் சொல்லியிருப்பதினாலும், அவ்வர்த்தத்தை பாரதம் கர்ணபர்வத்திலும், பாத்மோத்தரத்திலும், உரைத்திருப்பதினாலுங் கண்டுகொள்க.

ஆக இந்தப்ரகாரமாக முதல்கட்சிதொடங்கிக் கடைசிகட்சிவரையில் உதாஹரித்த சுருதிகளையும், அதற்கு வ்யாக்யானங்களாகிய இதிஹாஸபுராணங்களையும், கூரத்தாழ்வான் உபப்ருஹ்மித்து, சைவசித்தாந்திகள்சொல்லுங் கட்சிகளைக்கண்டித்து, எம்பெருமானார் தரிசனத்தை ஸ்தாபித்தார்.

கூரேசவிஜயம்

முற்றிற்று.